பிரஹ்ம வித்யா தீபிகை.

சாந்திவசனம் 3-ம் தொகுதி 5-ம் பகுதிமுதல்
4-ம் தொகுதி 4-ம் பகுதிமுடிய
வெளியான சஞ்சிகைகள் அடங்கியது.

1064

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
1-NOV 1923

இஃது
பிரஹ்மஶ்ரீ C. இராமய்யா B.A., L.T., அவர்களால்
தெலுங்கில் இயற்றப்பெற்ற நூலிலிருந்து
பிரஹ்மஶ்ரீ R. ரெங்காச்சாரியார் M.A., L.T., அவர்களால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

PUBLISHED BY
A. RATNASABHAPATHI MUDALIAR F. T. S.,
Tirumeyachur, Peralam Post.

ACL-TNAL
01260

PRINTED BY
SRI KOMALAMBA PRESS, KUMBAKONAM.

Rights Reserved.] 1923. [விலை ரூ. 1—8—0

நேரிசை வெண்பா.

அன்பழகு கற்பு அருள்சாந்தங் கல்வி பொறை
என்புருக்கும் பத்தி யெனவிவற்றே—டென்னினும்வே
றல்லாமல் வாழ்ந்த அகமுடையாள் கோசலைக்கு
நல்லுரிமை செய்தேன் நயந்து.

பொருளடக்கம்.

தியாயம்	விஷயம்.	பக்கம்
	முன்னுரை	i
1	பிரஹ்மவித்யா	1
	குருசிஷ்யதர்மம்	15
	ஈசுவரன்	25
	ஜீவஸ்வரூபம்	30
5	தேஜஸ்	35
6	ஜீவனுடைய சரீரங்கள்	43
7	மனஸ்	62
8	மரணமும் மரணாந்தரஸ்திதியும்	78
9	தேகபீஜங்கள்; பூதசூக்ஷ்மங்கள்	93
	கர்மம்	102
	தருமம்	128
	மோக்ஷமார்க்கங்கள்	156
	கருமயோகம்	159
	ஞானமார்க்கம்	208
	பக்தியோகம்	242
	அர்ச்சனம் அல்லது பூஜை	258
	இதுவே நல்ல சமயம்	283

ஸ்ரீ:

முன்னுரை.

இந்நூல் சிட்டமூர் ராமய்யா என்ற பெரியார் ஆந்திர பாஷையில் எழுதிய பிரும்ம வித்தியா தர்ப்பணம் என்ற முதனூலின் மொழிபெயர்ப்பாகும். அப்பெரியார் மதனபல்லிக் கலாசாலையில் தலைமை உபாத்தியாயராக இருந்து வந்தபோது கஸின்ஸ்துரை, கஸின்ஸ் சீமாட்டிமுதலிய தனக்கென வாழாப் பெருந்தகையாளர்களால் கல்வியறிவு வளர்ச்சியிலும், மதாபிமானத்திலும் ஒரு பெரிய கிளர்ச்சி அவ்வூரில் ஏற்பட்டது. அதன்பயனாக அவ்வூர் ஆடவர்களும் பெண்பாலர்களும் பல அரியவிஷயங்களை அறியவிரும்பி பிரசங்கங்கள் நடைபெறுந்தோறும் வந்திருந்து அவ்வறிவாளர்கள் புகன்றவைகளைச் "செவிவாயாக, நெஞ்சுகளனாக விடாதமைத்து" வந்தனர். அப்பெண்பாலாருள் எனது அருமை மனைவியும் ஒருத்தி.

அவளது நுண்ணிய அறிவினையும் தெள்ளிய மனோநிலையினையும் ஆந்தர தமிழ் பாஷைகளில் தேர்ச்சியினையும் நன்குணர்ந்த மகா-ள-ள-ஸ்ரீ. சி. ராமய்யர் அவர்கள் தாம் எழுதிய பிரும்ம வித்தியா தர்ப்பணம் என்ற நூலை என்னிடம் கொடுத்து அதையாங்கள் இருவரும் வாசிக்கும்படி வேண்டினர். அவ்வாறே யாங்கள் இருவரும் வாசித்துவருகையில்; அதிலுள்ள விஷயங்களும் பல ரகசியங்களும் ஆத்ம பரிபக்குவத்திற்கு உதவியாகுமெனக் கண்டு, அவற்றைத் தமிழ்மக்கள் யாவரும் உணருமாறு மொழிபெயர்த்து அச்சிட வேண்டுமென்று ஒரு பெரிய அவா அவளிடத்தில் உதித்தது. அவ்வாறே அப்பணியை மேற்கொண்டு இருவரும் தினந்தோறும் இரவில் 2-மணி நேரம் உட்கார்ந்து 6—8—17ல் முடித்துவிட்டோம். ஆந்திர பாஷையில் எனக்கு அவ்வளவு பரிச்சியம் கிடையாது. நூலோ வேதாந்தநூல். ஆதலின் மொழிபெயர்ப்பு அவளது என்றே சொல்லவேண்டும். இதைச் சரியானநடையில் அமைத்தும் உரியவிடங்களில் பகவத்கீதை சுலோகங்களுக்கு பகவத்கீதை வெண்பாக்களை எடுத்து ஆண்டதும் என் வேலையாகும்.

இந்நூலை எழுதிமுடித்தபிறகு, மகா-ள-ஸ்ரீ சி. ராமய்யா அவர்களிடம் நெடுகிலும் வாசித்துக்காண்பித்தேன். அவர்கள்

தமிழ், ஆங்கிலம், ஆந்திரம், ஸம்ஸ்கிருதம் என்ற நான்குபாஷைகளிலும் புலமை நிரம்பியவராதலின், இம்மொழிப் பெயர்ப்பு நன்றாகச் செய்யப்பட்டுள்ளதென அகமகிழ்ந்து கூறினர்.

இதை அச்சேற்றுவதற்குக் கைப்பொருளில்லாமையில் சிறிது பரிதபித்து அங்குமிங்கும் இரண்டொருவருக்கு எழுதி வேண்டினேம். முடிவில் மகா-ா-ஸ்ரீ R சுவாமிநாதய்யர் அவர்கள் திருமீயச்சூரிலிருந்து வெளிவரும் சாந்திவசனம் என்ற சஞ்சிகை நூலில் பிரசுரிப்பதாக அன்புடன் வாக்களித்தார்கள். யாங்களும் எவ்வாறாயினும் நூல் வெளியாகிப் பிறர்க்குப்பயன் பட்டால் போதுமெனக் கருதிக் கையெழுத்துப் பிரதியை அனுப்பினேம். சாந்திவசனத்தில் தொகுதி III பகுதி 5 [illegible]ல் இந்நூல் தொடங்கப்பட்டு வந்தது. ஆயினும் சிலகாரணங்களால் சென்ற இரண்டு வருஷங்களாக இந்நூல் முற்றுப்பெறாமல் இடையில் நின்று போயிற்று. இந்நூல் முழுமையும் எப்போது வெளிவரும் என்று எதிர்நோக்கியிருந்த எனது மனைவியும் திடீரென்று சுரநோய்கண்டு சென்ற வருஷம் பிப்ரவரி மீ 12வயில் மதனப்பல்லியில் ஆசாரியன் திருவடியை யடைந்தாள்.

அதன்பிறகு இந்நூலை எப்படியாவது முடித்து வெளியேற்றினால் அன்னாளது ஆத்மாவுக்குப் பிரீதியாகவிருக்குமென்று மகா-ா-ஸ்ரீ R. சுவாமிநாதய்யர் அவர்கட்கு எழுதினேன். அதன் பயனாக இந்நூல் இப்போது வெளியாகின்றது. விட்டு விட்டு அச்சாகி வந்தமையால் ஏற்பட்ட குறைகளைப் பெரியோர் பொறுத்தருள்வாராக. இந்நூலில் காணப்படும் குற்றங்குறைகளெல்லாம் என்னைச்சேர்ந்தவை.

பிரும்மஞானசபையார் அரிதின் முயன்றுகண்டறிந்த பல ரகசியங்கள் இதில் எளிதில் பார்க்கக்காணலாகும். அவையுக்திக்கும் அனுபவத்திற்கும் ஒட்டியவையாதலின் படிப்போர் மனதைக் கவராமலிரா.

முன்னுரையைப்பார்க்காமல் வாசிப்போர் யாவரும் இதை மூலநூலாகக் கருதவேண்டுமென்றே தமிழ் நடையை ஒருவாறு எளிதாகவும் இனிதாகவும் அமைத்துள்ளேன். இதைப் பெண்பாலர் யாவரும் வாசிக்கவேண்டுமென்பது எங்களது கருத்து.

R. ரேங்காச்சாரியார்.

1 - NOV 1923
MADRAS

பிரஹ்ம வித்யா தீபிகை.

முதல் அத்தியாயம்.

பிரஹ்ம வித்யா.

"உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே." கம்பன்.

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகரும் வேதத்தினால் ஸ்துதிக்கப்படுபவரும், ஸர்வக்ஞருமாகிய பகவான் மானவகோடிகளைப் படைத்து, அவர்கள் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை யடையும்பொருட்டு தேசகால வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு அநேக வழிகளைக் காண்பித்திருக்கின்றார். மனிதர் தத்தம் மதங்களையே அனுஸரித்து, அவைகளே உண்மையான மதங்களெனவும், தத்தம் மதங்களிலேயே மேலான தத்துவங்கள் காணப்படுகின்றனவெனவும், தம்தம் மதங்களில் தவிர வேறு எம்மதங்களிலும் உண்மையைக் காண்பதரிதெனவும், பிறமதத்தினர் அக்ஞான ஆழியில் அழுந்திக்கிடப்பதால் அவர்களுக்கு மோக்ஷம் ஸித்தியாதெனவும் எண்ணங்கொண்டு, உண்மைத் தத்துவங்கள் தங்களுக்கே தெரியுமென்ற அகந்தையால் பிறமதத்தினரை தூஷிக்கின்றனர். இவ்வாறு ஒவ்

வொரு மதத்தினரும் பிறமதத்தினர்மேல் வெறுப்பைக் காண்பிப்பதினால், மதவிரோதமானது சாதாரணமாக ஏற்படுகின்றது. ஆயினும் தந்தம் மத கிரந்தங்களைத் தீர ஆராய்ந்த பண்டிதர்கள் அவ்வித விரோதத்திற்குக் காரணங்களைக் காணாதலின், எல்லா மதங்களையும் அவர் சமமாகப் பாவிப்பர். அவர் பிறமத நூல்களையும் பாரபக்ஷமில்லாமல் சோதித்துப் பார்த்தால், எல்லாமதங்களும் முக்கியமான அம்சங்களில் ஒற்றுமை யுள்ளனவெனவும், அவைகளுள் பேதங்கள் சிலவேயெனவும், அவ்வித வேறுபாடுகளும் முக்கியமல்லாதவைகளிலுள்ளனவேயன்றி, முக்கிய தத்துவங்களில் கிடையாவெனவும் தெளிவாய் அறிவர். இவ்விதமாக ஒற்றுமையுள்ள உண்மைத் தத்துவங்களுக்கெல்லாம் மூலம் ஒன்றே என்பதும், இதில் காணப்படும் பேதங்கள் காலதேச வித்தியாசங்களால் ஏற்பட்டிருத்தல் வேண்டுமென்பதும் ஊகிக்கத்தக்கனவாக வுள்ளன.

இவ்வண்ணம் பல மதங்களின் முக்யாம்சங்களென்று சொல்லப்படுவனவற்றை எல்லா மதத்திற்கும் மூலமாகிய பிரஹ்ம வித்தை என்பர். இதுவே குப்தவித்தை எனவும் அழைக்கப்படும். இந்த பிரஹ்மவித்தை எல்லாமதங்களுக்கும் மூலமானதென்று அறிந்தவுடன், மாந்தர் தம்தம் மதங்களை அனுஷ்டித்து பிறமதங்களின்மேல் விரோதம் பாராட்டாமல் அவற்றை சமமாகவே கருதத்தொடங்குவர். அவ்வாறாயின் மதமானது மனுஷகோடிகளுக்குள் ஒற்றுமையைப் பிறப்பிக்கத் தகுந்ததாகும். மனிதர்க்குள் உண்டாகும் எல்லா விரோதங்களுக்கும் மதமே காரணமென்று இக்காலத்தார் கூறுவது அப்போது பொய்யாகிவிடும்.

பகவான் ஒவ்வொரு கற்பத்திலும் முன் கற்பத்தின் முடிவில் இருந்ததுபோலவே உலகத்தைப் படைக்கிறார்.

தாதா யதாபூர்வமகல்பயத் ||

இந்த கற்பத் தொடக்கத்தில் சிருஷ்டிக்கப்பட்ட மானிடகோடிகள் கடைத்தேறுவதற்காக, பூர்வ கற்பத்தில்

சித்தியடைந்த, பிரஹ்மத்தை உணர்ந்தவரான மனு முதலிய மஹாத்மாக்களைக் கடவுள் உலகில் ஜனிக்கச்செய்தார். அம்மஹாத்மாக்கள் ஈடேறியவர்களாயினும், பாமரஜனங்களையும் ஈடேற்றுவதற்காக இப்புவியில் அவதரித்து, நடக்கும் கற்பத்தில் மானிடர்களால் அநுசரிக்கக்கூடிய நானாதர்மங்களையும் பரவச்செய்தனர்.

அந்த தர்மங்களெல்லாம் இந்த யுகத்தில் காலத்திற்குத் தகுந்தபடி அநுசரிக்கப்படும். அம்மஹாத்மாக்கள் மஹரிஷிகளாயும், அரசர்களாயும் அவதரித்து, தர்மமார்க்கங்களை உபதேசித்து, மனிதரை அநுஷ்டிக்கும்படி செய்து, அவரைப் படிப்படியாய் மேலான நிலைக்குக் கொண்டுவர வெகுகாலம் பாடுபட்டார்கள். தாய் கொஞ்சகாலம்வரை சிசுக்களைப்போஷித்து, கைக்கோல் கொடுத்து நடக்கச்செய்து, குழந்தைகள் சிறிது நடப்பதற்குக் கற்றபிறகு தாமாகவே நடக்கவேண்டுமென்ற எண்ணத்தால் நேரில் குழந்தைகளுக்கு உதவிசெய்வதை விட்டு, அவர்களுக்கு அபாயம் நேரிடாமல் தூரத்திலிருந்து பாதுகாப்பதைப்போல, அம்மஹாத்மாக்களும் பாலரது ஸ்வபாவத்தையுடைய மனிதர்களைக் கொஞ்சகாலம்வரை ரக்ஷித்து சிக்ஷித்தபிறகு, அவர்களுக்கு ஸ்வதந்திர ஞான முண்டாகும் பொருட்டு மறைவாக நின்று அவர்களைப் பாதுகாத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு இஷ்டப்படி விடப்பட்ட மனிதர்கள் நாளடைவில் தாங்கள் பெற்ற உபதேசங்களை மறந்தும், அறிய முடியாமலும், நன்றாய் அநுஷ்டிக்காமலும் தீயவழிகளில் செல்லுவாராயின், அவர்களை அவ்வழிகளினின்றும் விடுவித்து நல்வழிப் படுத்துவதற்காக, கருணைக்கடலாகிய மஹரிஷிக் கூட்டத்திலிருந்து ஜகத்குருவானவர் காலத்திற்கேற்ப பலதேசங்களிலும் அவதரித்து, பிரஹ்மவித்தையிற் சில பாகத்தை காலத்திற்குத் தக்கவாறு உபதேசித்து சன்மார்க்கத்தைப் போதித்து மறைந்துவிடுவார்.

இவ்விதமாக அநேக தேசங்களில் காலத்திற்கேற்ப அவதரித்துப் பற்பல நாமங்களைத்தரித்த அந்த ஜகத்குருவே வெவ்வேறு மதங்களை ஸ்தாபித்தவராவர். ஆதலின் மத ஸ்தாபகர் அனைவரும் அந்த ஜகத்குருவின் அவதாரங்கள்தாம். அவர்களால் ஏற்படுத்தப்பட்ட மதங்களனைத்தும் பிரஹ்மவித்தையாகிய மரத்தின் கிளைகளேயாகும். மதங்களெல்லாம் அதை மூலாதாரமாகக்கொண்டு தம் சாரத்தை கிரகித்துக் கொள்ளுகின்றன. வெவ்வேறு மதங்களுள் முக்யாம்சங்களெல்லாம் ஒன்றாக விருப்பதற்கு இதுவே காரணம். ஆயினும் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு தேசபாகங்களிலுள்ள மனிதருக்கு அவை உபதேசிக்கப் பட்டனவால், அக்காலத்திற்கும் தேசத்திற்கும் ஏற்றபடி எழுகின்ற ஆசாரங்களில் அநேக பேதங்களில்லாமல் தீராது; அதனால்தான் மதங்களில் ஒன்றற்கொன்று பேதங்கள் காணப்படுகின்றன. ஞானிகள் இவ்வேற்றுமைகளைக் கவனியாமல் அவைகளின் சாரமாகிய ஒற்றுமை பாகங்களைமட்டும் நோக்குவர். மலை யுச்சியில் பெய்தமழை நாற்புறமும் பெருகியோடி, பூமியின் குணத்தினால் ஒருபுறம் கறுப்பாகவும், ஒருபுறம் சிவப்பாகவும், மற்றோர்புறம் பீதவர்ணமாகவும் இன்னு மிவ்வாறு அநேக நிறமாக மாறுகின்றதல்லவா?

பர்வதத்தின் உச்சியிலிருந்து வீழும் தெண்ணீரே பிரஹ்மவித்தை. பற்பல தேசங்களிலும் பலநிறமுள்ளதாக வோடுகிற நீரோட்டங்களே கிளை நதிகளாகிய மதங்கள். அந்நீரோட்டங்களின் பல நிறங்களும் தேசங்களின் வாசியால் ஏற்பட்டனவாகும். அவை மூலத்தில் இல்லை. அதாவது பல வேறு மதங்களுள் காணப்படும் சமான தர்மங்கள் அந்த ஜலத்தின் மூலம் போன்றன. ஒன்றற்கொன்று காணப்படும் பேதங்கள் பல நிறங்களுக்கும் காரணமாகிய நிலராசிபோன்றன. இப்படி எல்லா மதங்களுக்கும் மூலம் பிரம்மவித்தையே. பகவான் இரண்டற்ற ஒருவனாய் எவ்வாறு விளங்குகின்றாரோ, அதுபோல பிரஹ்மவித்தையும் ஒன்றாய் சர்வமதங்களின் சாரமாய் விளங்குகின்றது.

இத்தகைய பிரஹ்ம வித்தையைப் பரிபூரணமாகக் காப்பாற்றி, உலகத்தின் நன்மைக்காக அப்பிரஹ்ம வித்தையின் வடிவமாக வுள்ளவர் மேற்கூறிய மஹாத்மாக்களின் சங்கத்தில் உள்ளவர்களே. அம்மஹாத்மாக்கள் இக்காலத்திலும் இருக்கிறார்களென்று அவரது அனுக்கிரகத்திற்குப் பாத்திரராயுள்ள பெரியோர்கள் கூறுகிறார்கள். பகவத் ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகளும் விவேக சூடாமணி என்ற கிரந்தத்தில் பின்வருமாறு வர்ணித்துள்ளார்.

𑌶𑌾𑌨𑍍𑌤𑌾 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑍋 𑌨𑌿𑌵𑌸𑌨𑍍𑌤𑌿 𑌸𑌨𑍍𑌤𑍋
𑌵𑌸𑌨𑍍𑌤𑌵𑌲𑍍𑌲𑍋𑌕𑌹𑌿𑌤𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑌃 ।
𑌤𑍀𑌰𑍍𑌣𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌭𑍀𑌮𑌭𑌵𑌾𑌰𑍍𑌣𑌵𑌂 𑌜𑌨𑌾
𑌨𑌹𑍇𑌤𑍁𑌨𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑌪𑌿 𑌤𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑌃 ॥
𑌅𑌯𑌂 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌃 𑌸𑍍𑌵𑌤 𑌏𑌵 𑌯𑌤𑍍𑌪𑌰
𑌶𑍍𑌰𑌮𑌾𑌪𑌨𑍋𑌦𑌪𑍍𑌰𑌵𑌣𑌂 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍 ।
𑌸𑍁𑌧𑌾𑌂𑌶𑍁𑌰𑍇𑌷 𑌸𑍍𑌵𑌯𑌮𑌰𑍍𑌕𑌕𑌰𑍍𑌕𑌶
𑌪𑍍𑌰𑌭𑌾𑌭𑌿𑌤𑌪𑍍𑌤𑌾𑌮𑌵𑌤𑌿 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌂 𑌕𑌿𑌲 ॥ விவேகசூடாமணி.

தாத்பர்யம்:—சாந்த ஸ்வரூபர்களும் மஹாத்மாக்களும் வஸந்த புருஷரைப்போல் லோகோபகாரத்தின் பொருட்டு ஸஞ்சரித்து, பயங்கரமான ஸம்ஸார சாகரத்தைத் தாம் எளிதில் கடந்து, அளவிறந்த கருணையுடையவராய், பவக்கடலில் மூழ்கிக்கிடக்கும் பிறமாந்தர்களையும் அதைத் தாண்டச்செய்வதற்கு இன்னும் வசிக்கிறார்கள். பிறரது கஷ்டங்களைப் போக்குவது அம்மகான்களது இயற்கைக்குணம்.

சந்திரன் சூரியனது கொடிய கிரணங்களால் தபிக்கப்பட்ட பூமியை தானே தனது சீதளத்தால் காப்பாற்றுகிறானல்லவா?

𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌦𑍇𑌵 𑌮𑍁𑌨𑌯𑌃 𑌸𑍍𑌵𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌮𑌾
𑌮𑍌𑌨𑌂 𑌚𑌰𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌜𑌨𑍇 𑌨 𑌪𑌰𑌾𑌰𑍍𑌥𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌃 ।
𑌨𑍈𑌤𑌾𑌨𑍍𑌵𑌿𑌹𑌾𑌯 𑌕𑍃𑌪𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷 𑌏𑌕𑍋
𑌨𑌾𑌨𑍍𑌯𑌂 𑌤𑍍𑌵𑌦𑌸𑍍𑌯 𑌶𑌰𑌣𑌂 𑌭𑍍𑌰𑌮𑌤𑍋𑌽𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑍇 ॥

பாகவதம், பிரகலாத சரித்திரம், 7-வது ஸ்கந்தம்.

தாத்பர்யம்:—அநேகமாய் தேவர்களும் முனிவர்களும் தங்களுடைய முக்தியைக் கோரினவர்களாய் தனிமையான இடங்களில் மௌன விரதஞ்செய்வார்கள். அவர் பிறரது நன்மைக்காக உழைத்தவராகார். உலகில் அக்ஞானிகளை விட்டுவிட்டு நான் ஒருவனே மோக்ஷத்தை அடையமாட்டேன். சம்சாரத்தில் உழன்றுதிரிகிற ஜனங்களுக்கு என்னைவிட வேறுகதி கிடையாது.

இப்போதும் அவ்வித மஹாத்மாக்கள் இமயமலையில் ஸித்தாஸ்ரமங்களில் ராஜயோகிகளாய் வஸிக்கிறார்களென்றும், இக்காலத்திலும் அநேக பிறவிகளில் தாம்செய்த புண்ணியங்களால் பரிபக்குவமடைந்தவர்கள் அம்மஹான்களைக்கண்டு அவரது அனுக்கிரகத்திற்குப் பாத்திரராகிறார்களென்றும், அதை அனுபோகத்தால் நேரிற் கண்டவர்கள் திடமாகச் சொல்லுகிறார்கள்.

இக்காலத்தில் எல்லா தேசத்தாரும் ஸநாதன தர்மங்களை மறந்து கேவலம் உலகப்பற்றில் ஈடுபட்டு நிரீசுவரவாதிகளாகி மயங்கும் சமயத்தில், உலகிற் பரவும் அக்ஞானத்தைப் போக்குவதற்காக அம்மஹான்களில் இருவர் கருணைகூர்ந்து, யோக்யதையுள்ள தம் சீடருக்குப் பிரஸன்னமாகி, அவர் மூலமாக பிரஹ்மக்ஞான ஸபையென்ற ஓர் சங்கத்தை ஸ்தாபித்தார்கள். அச்சங்கம் நாட்டப்பட்ட கொஞ்சகாலத்திற்குள்ளாக, உலகில் எல்லா விடங்களிலும் அது வியாபித்து, பிரஹ்ம வித்தையின் சாரத்தை இக்காலத்திற்கேற்ப போதித்து, உலகிலுள்ள பற்பல மதங்களையும் துலக்கி நிலைபெறச்செய்துள்ளது. மேற்கூறியவாறு முன்னுள்முதல் காலத்திற்கேற்ப எல்லா தேசங்களிலும் பலவிதமான மதங்களை ஸ்தாபித்த இந்த ஸித்தர் கூட்டமே இக்காலத்தில் புதியதோர் மதத்தை ஸ்தாபிக்காமல் பூர்வ மதங்களை சமரசப்படுத்தி மதவிரோதங்களைப் போக்கி, ஒற்றுமையை விருத்திசெய்து, பல சித்தாந்தங்களுள்ளும் தத்துவம் ஒன்றே என்பதை நிரூபித்துக்காட்ட இந்த சங்கத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். இச்சங்கம் தோன்றியதுமுதல் மதப்பற்று சிறிதுமில்லாத அநேகர் தம்தம் மதங்களில் பற்றுள்ளவராகி தம் மதாசாரங்களை மிகுந்த ஊக்கத்துடன் அனுஷ்டித்து வருகின்றனர். இச்சங்கம் எந்தெந்த தேசங்களில் பரவியுள்ளதோ அந்தந்த தேசங்களில் மதங்கள் திரும்பவும் உயிர்பெற்று அவ்வத் தேசத்தோரால் மிகவும் அபிமானிக்கப்பட்டு விருத்தியடைகின்றன. இன்னும் எல்லாரிடமும் பிறமதங்களில் அன்பைப்பெருக்கி, பிறமதத்தோரிடம் சகோதரபாவத்தைப் பிறப்பித்து ஒற்றுமையை வளர்க்

கின்றது. ஒருமதத்தைவிட்டு மற்றொரு மதத்தைத் தழுவுவது பிழையென்றும், ஒவ்வொரு ஜீவனும் மோக்ஷத்தை யடைவதற்குத் தகுந்த உபாயத்தை ஒவ்வொருமதமும் போதிக்கின்றதென்றும், தம்தம் மதாசாரத்தை நன்றாய் அனுஷ்டித்துவந்தால் ஒவ்வொரு ஜீவனுக்கும் கடைத்தேறுவது சாத்தியமாகுமென்றும் இந்த ஸமாஜம் உறுதி கூறுகின்றது.

எல்லா மதங்களிலுமுள்ள பொதுவான முக்யாம்ஸங்கள்.

ஸாக்ஷீசாத்³விதீயம் ப்³ரஹ்ம ॥

ஜந்மாத்³யஸ்ய யத: ॥

தாத்பர்யம்:—ஜகதீசுவரனும், ஜகம் உண்டாவதற்கும், காப்பதற்கும், அழிவதற்கும் காரணனும், எல்லாவற்றிற்கும் சாக்ஷியானவனும், சத்சித் ஆநந்த ஸ்வரூபனுயும் இருக்கும் பகவான் ஒருவரே. அவர் தமக்கு நிகராற்றவராய் விளங்குகிறார்.

பல தேசங்களிலும் பல மதங்களிலும் பல நாமங்களால் அறியப்படுகிற ஈசுவர தத்துவம் ஒன்றே. இந்துக்களுக்குள் பகவான் என்றும், ஸதாசிவனென்றும், மஹாவிஷ்ணுவென்றும் பிரஹ்மமென்றும் மற்றும் வேறு நாமங்களால் அழைக்கப்படுகிற தத்துவத்தையே 'அல்லா' என்று மகம்மதியரும், 'ஜ-ஹோவா' என்று ஹீப்ருஜாதியாரும், "ஆர் மஜ்ட்" என பாரசிகரும், "காட்" (God) என கிறிஸ்தவர்களும் அழைக்கிறார்கள். பேர் எவ்வாறிருப்பின் என்? பேரினால் நிரூபிக்கப்படுகிற தத்துவம் ஒன்றுதான். எல்லா மதங்களும் ஈசுவான் ஒருவனே என்று முறையிடுகின்றனவேயன்றி, ஈசுவரர் அநேகரெனக் கூறுவதைக் காணோம். இந்துக்கள் 33 கோடி தெய்வங்களைத் தொழுகிறார்களென்று பிறமதத்தினர் கூறுவர். இது இந்துமத சித்தாந்தத்தை உணராததால் ஏற்பட்ட ஒரு

பிழையான அபிப்பிராயம். அந்த சித்தாந்தமே இந்துமத சித்தாந்தத்திற்கு முற்றிலும் விரோதமானதென்று சொல்லவும் வேண்டுமோ? மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாதவரும், சுயம் பிரகாசரும், மனோவிகாரமற்றவரும் தமக்கு நிகரில்லாதவருமாகிய ஈசுவரன் திரிமூர்த்தி ஸ்வரூபமாக வுள்ளாரென ஒவ்வொரு மதமும் முறையிடுகின்றது. அம்மும்மூர்த்திகளின் கீழே அவரது ஆக்ஞையை நடத்துபவராகிய கணக்கற்ற தேவதைகள் அநேகர் படிப்படியாக இருக்கிறார்கள். 33 கோடி என்ற எண் ஈசுவரனைச் சேராது. அவரது ஆக்ஞைக்கு உட்பட்டவர்களாகிய தேவர்களையே அது குறிக்கும். இந்திராதி தேவர்களை ஈசுவரனென்று கருதுவோருமுண்டோ? இல்லையென்றே கூசாமற் கூறலாம். அவ்வாறே இதர மதத்தினரும் ஈசுவர ஆக்ஞையை நடத்துவோராகிய தேவகோடிகள் பல தாரதம்மியங்களுடன் வசித்துவருகிறார்களென நம்புகிறார்கள். மகம்மதியரும், கிறிஸ்தவரும் தேவதூதரென்றும் (Angel), பிரதான தேவதூதரெனவும் அவரை அழைப்பர். இவ்விஷயத்திலும் நாமபேதங்களால் நிரூபிக்கப்படும் வஸ்து ஒன்றுதான். வணங்குதற்குரிய தேவதூதர்கள் அநேகர் உள்ளாரென நம்பும் கிறிஸ்துவர்கள், தேவர் பலரை வணங்கும் இந்துக்களை மூடர்களெனத் தம் அறியாமையால் ஏளனஞ் செய்வர். ஆயினும் எல்லா மதஸ்தர்களும் பாமர ஜனங்கள் காணக்கூடாத சூக்ஷ்மலோக சஞ்சாரிகளாகிய தேவதைகள் அநேகர் இருக்கிறார்களென்றும், அவர்கள் நன்மை தீமைகளை விளைவிப்பதற்குத் தகுதியுடையவர்களென்றும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் ஸர்வேசுவரனும் எல்லாவற்றையும் நடத்திவைப்பவரும், எப்பலியையும் எளிதில் அளிக்க வல்லவருமாகிய ஈசுவரன் ஒருவனே என்பதும், அவரது ஆக்ஞைப்படி நடந்து ஒழுகும் தேவதைகள் அநேகர் உள்ளாரென்பதும், ஸர்வமதத்தினரும் ஸாதாரணமாக நம்புகிற விஷயங்களாக வுள்ளன.

ஜீவாத்மாக்கள்.

ஜீவாத்மாக்கள் எல்லாம் ஈசுவராம்சங்கள். இன்னும் எல்லா மதத்தினரும் ஆத்மாவின் உண்மை நிலையை நிரூபிக்கும்போது, ஜீவாத்மா கேவலம் சரீரமல்லவென்றும், சரீரத்தினும் அதுவேறான லக்ஷணமுள்ளதென்றும், சரீரத்திற்கு யஜமான ஸ்தானத்திலுள்ள அந்த ஜீவன் வேறாகவுள்ளதென்றும், அந்த ஜீவன் ஈசுவரனது அம்சமென்றும் சொல்லுகிறார்கள். சரீரமே ஜீவனென்று கூறும் மதம் ஒன்றுமில்லை. ஜீவன் ஈசுவரனது அம்சமாயுள்ளதால், ஈசுவரனைப்போலவே சச்சிதானந்த ஸ்வரூபனாய் இருக்கிறான். ஈசுவரன் மிகுந்த ஜோதி ஸ்வரூபனெனவும், ஜீவாத்மாக்கள் அந்த ஜோதியிலிருந்து வெளியேறிய தீப்பொறிகளெனவும் முண்டகோபநிஷத்திலும், ஈசுவராம்சங்களென்று பகவத்கீதையிலும் நிரூபிக்கப்பட்டுள்ளன.

𑌯𑌥𑌾 𑌸𑍁𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌤𑍍𑌪𑌾𑌵𑌕𑌾𑌦𑍍𑌵𑌿𑌸𑍍𑌫𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑌾
𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍂𑌪𑌾𑌃 ।
𑌤𑌥𑌾𑌕𑍍𑌷𑌰𑌾 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌃 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌭𑌾𑌵𑌾𑌃
𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌚𑍈𑌵𑌾𑌪𑌿𑌯𑌨𑍍𑌤𑌿 ॥

முண்டகோபநிஷத்.

என்னொரு மம்சமா யிவ்வுலகிற் சீவனாய்
முன்னா நின்று முயலுமுயிர்.

கீதை வெ. அத்தி 15. பாட்டு 7.

பரமபுருஷார்த்தம்.

ஜீவன் ஈசுவரன் அம்சமாகையால், எவ்விதம் தீப்பொறிகள் வெளியே வரும்போது, ஜ்வாலையின் சக்தியுடன் தோன்றி மறுபடியும் அஜ்வாலையில் அடங்கிவிடுகின்றனவோ, அவ்விதமே ஈசுவரனிடம் தோன்றும் ஜீவாத்மாக்களிடமும் ஈசுவரனது சர்வ சக்திகளும் பீஜரூபமாக அடங்கி யிருக்கின்றன. இந்த சக்திகளெல்லாம் விரிந்து வெளிப்படுவதே பரமபுருஷார்த்தமெனலாம். இதற்காகவே ஜீவர்களை பகவான் சம்சாரத்தில் நுழையும்படி செய்கிறார். ஜீவர்கள் சம்சாரத்தில் பிரவேசித்து பல ஜன்மங்கள் எடுத்துக்கொண்டு தமது கர்மானுசாரத்தால் இகபர சுகதுக்கங்களை அனுபவித்து, பரிபக்

குவமடையும் காலத்தில் மனோதிடம், பக்தி ஞான வைராக்கிய முதலியவைகளில் பரிபூரணமடைந்து பரம்பொருளைப் போல எல்லா கல்யாணகுணங்களையும் பூரணமாக அடைவார்கள். இதைத்தான் ஈசுவரன் ஸந்நிதானத்தை அடைகிறதென்றும், ஈசுவர ஸ்வரூபத்தை அடைகிறதென்றும், ஸ்வஸ்வரூபத்தை அடைகிறதென்றும் சொல்லுவர். பலமதத்தினரும் ருசிபேதத்தினால் புருஷார்த்த ஸ்வரூபத்தைப் பலவிதமாய் வர்ணித்தாலும், அந்தந்த மத மூலகிரந்தங்களை நன்றாய்ப் பரிசோதித்து அனைத்தையும் சமரசப்படுத்திப் பார்த்தால், அந்த ஸ்வரூபத்தின் வர்ணனையில் கொஞ்ச பேதமிருக்குமேயொழிய, தத்துவபேதம் எள்ளளவும் அவைகளிலிராது. மற்றும் எல்லாரும் இந்த புருஷார்த்தத்தை பிறர்க்கு உபதேசித்து, கூடியவரை விரைவாயும் எளிதாயும் அதை யடைகிற வழிகளைத்தேடி, பின்வருவோரும் உறுதியாய் அவற்றைக் கடைப்பிடிக்கும்படி தூண்டுகிறார்கள். இந்திரியங்களுக்குப் புலனாகும் இவ்வுலகத்தைத்தவிர, சூக்ஷமமானதும் இந்திரியங்களுக் கெட்டாததுமான பரலோகங்க ளிருக்கின்றனவென்றும், அவையெல்லாம் இப்பரம புருஷார்த்தத்தை அடைவதற்குப் படிப்படியாய் துணைக்கருவிகள் ஆகின்றன வென்றும், எல்லா மதத்தினரும் வெளிப்படையாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இவ்வித பரமபுருஷார்த்தத்தையே முக்கியமாக விளக்கிக்காட்டி அதை அனுசரிப்பதற்குத் தகுந்த வழிகளைப் போதிக்காத மதமே கிடையாது.

சாதனங்கள்—வழிகள்.

ஜீவன் பூலோகத்தில் பலதரம் பிறந்து கர்மானுசாரமாக இகபரலோகங்களின் சுகதுக்கங்களை அனுபவித்து, அந்த அனுபவத்தினாலேயே ஒவ்வொரு பிறப்பிலும் ஞானத்தை விருத்திசெய்துகொண்டு, நாளடைவில் அநேக ஜன்மங்களில் அடைந்த ஞானத்தினால் பரம புருஷார்த்தத்தை அதாவது மோக்ஷத்தை அடைவானென்று இந்துமதத்தில் நன்றாய்ச் சொல்லப்பட்டுள்ளது. இவ்வுலகம் அக்ஞானத்தைப் போக்கிக்

கொள்ளுவதற்கோர் பாடசாலைபோலிருக்கின்றது. பூலோகத்தில் அடையத்தகுந்த ஞானத்தை ஜீவன் பரிபூரணமாக அடையும்வரை திரும்பித் திரும்பிப் பிறந்து, இப்பூலோகமாகிய பள்ளிக்கூடத்திற்கு வராமல் தீராது. கருணைக்கடலாகிய பகவான் ஜீவாத்மா பரிபூரண மடையும்வரை உலகத்தில் அவனுக்குப் பிறப்பைக்கொடுத்து முடிவில் கடைத்தேறும்படி செய்வாரேயொழிய ஒரு பிறப்பிலேயே பரிபூரணராகாதவர்களை நிலையாக நரகத்தை யடையும்படி செய்யமாட்டார். இந்த புனர்ஜன்மவிதி இந்து பௌத்த மதங்களில்மட்டும் போதிக்கப்பட்டுள்ள தென்றும், தம்தம் மதங்களில் இல்லையென்றும் இக்கால பாரசீகரும், கிறிஸ்தவர்களும், மகம்மதியரும் எண்ணுவர். ஆயினும் மகம்மதியருக்குள் தத்துவ ஞானிகளாகிய ஸூபி (Sufi) என்ற வகுப்பாரின் நூல்களில் இந்த சித்தாந்தம் பரக்கக் காணப்படுகின்றது. கிறிஸ்தவரின் மதக்கிரந்தமாகிய பைபிளிலும் (Bible) அநேக இடங்களில் இந்த சித்தாந்தம் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. இக்கால கிறிஸ்தவருட் சிலரும் மகம்மதியர்களுமே இந்த சித்தாந்தத்தை நம்பமாட்டார்களே தவிர, தந்தம் மதக் கிரந்தங்களைத் தீர ஆராய்ந்த பண்டிதர்கள் யாவரும் இதை ஒப்புக்கொள்ளுவார்கள். இக்கால கிறிஸ்து மதப் போதகருட் சிலரும் இச்சித்தாந்தத்தைத் தம்மைச் சேர்ந்தோர்க்கு வெளிப்படையாக போதித்து வருகிறார்கள். பிரஹ்மஞான ஸபையின் கிளைகள் இப்பூவுலகில் வியாபித்துவரவர, இம்முக்கிய சித்தாந்தத்தை எல்லா விடங்களிலுமுள்ள சர்வமதத்தினரும் அங்கீகரிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

கர்மம்.

இவ்விதமாக ஜீவர்கள் உலகில் பலமுறை பிறந்து சம்சார வெள்ளத்திலிறங்கி பல வைதீக லௌகீக காரியங்களைச் செய்து அவற்றின் பலானுசாரமாகப் பரலோகத்தை யடைவார்கள். மனத்தாலும், இந்திரியங்களாலும், காலத்தாலும் அவர் செய்யுங் கருமங்களெல்லாம் அதனதன் பயனைக் கொடுத்துக்கொண்டே யிருக்கின்றன. ஒவ்வொருவரும் தாம் செய்

யும் கருமத்தின் பலனை இம்மை மறுமைகளில் தவறாமல் அனுபவிக்கிறார்கள். ஆகையால் இப்பிறப்பில் மிகுந்த ஊக்கத்துடன் புண்ணிய கருமங்களைச் செய்யும் ஒருவன் இகபர சுகங்களை அடைவதுமல்லாமல், மீதி ஜன்மங்களில் அவ்வித புண்ணிய கருமங்களில் பிரியம்வைத்து அவற்றிலேயே கருத்தை ஊன்றும்படி தூண்டும் நல்ல வாசனையுடனும், அவ்வித புண்ணிய காரியங்களை முன்னிலும் அதிக திடமாகவும் எளிதாகவும் செய்கிற சுபாவத்துடனும் சக்தியுடனும் பிறக்கிறான். மீதி ஜன்மங்களில் அவ்வித புண்ணிய கர்மங்களைச்செய்ய அவகாசங்கொடுக்கும் தேசகால நிமித்தங்கள் அந்த ஜீவனுக்குக் கைகூடும். அக்காரணங்களினால், ஜீவன் அப்புண்ணிய கருமங்களை மேன்மேலும் ஊக்கிச்செய்து, பிற்பிறப்புக்களில் சித்தசுத்தியடைந்து, மோக்ஷசாதனத்தை யடைவதற்கான ஞானம் நாளடைவில் நிரம்பப்பெற்று, சம்சார சக்கிரத்திலிருந்து விடுபட்டு மோக்ஷமடைகிறான். இவ்வாறன்றிக் காமக்ரோதங்களினால் பாவகருமங்களைச் செய்கிற ஜீவன் இகபர லோகங்களில் துக்கத்தை யடைவது மல்லாமல், பின் ஜன்மங்களிலும் பாவகருமங்களில் ருசியும், பற்றும் உண்டுபண்ணுகிற அசுபவாசனைகளுடன் ஜனித்து, அவ்வித பாவகருமங்களையே செய்யும் சுபாவமுடையவனாவான். மற்றும் புண்ணிய காரியங்களுக்கு அனுகூலமான சுபாவத்தை அடைவதற்கும் புண்ணிய கருமத்தைச் செய்வதற்கும் சந்தர்ப்பத்தைப் பெறாதவாறு பிறப்பான். ஆயினும் ஜீவன் ஈசுவரனது அம்சமாதலாலும் தன் ஸ்வரூபத்தைத் தெரிந்து புருஷப் பிரயத்தனஞ்செய்ய ஸ்வதந்திரம் பெற்றிருப்பதாலும், புண்ணிய கருமங்களைச் செய்வதிலும் பாவகாரியங்களை விடுவதிலும் தன் புருஷாகாரத்தை (Free Will)க் காட்டிப் படிப்படியாகக் கடைத்தேறுதல்கூடும். தான்செய்யும் புண்ணிய பாவகருமங்களின் பலானுபவத்தை ஜீவன் அடையாமல் தீராது. பாவகர்மங்களில் பிரவர்த்தித்து மீதி ஜன்மங்களில் பூர்வ துர்வாசனையால் தனக்கு ஏற்படும் சுபாவமும் சந்தர்ப்பமும் பிரதிகூலமுள்ளவையாக விருந்தாலும், சாஸ்திர வாராய்ச்சியினாலும், பெரியோ

ருடைய பழக்கத்தாலும் பாவபுண்ணியங்களைத் தெரிந்து கொண்டு, தான் பகவானது அம்சமானவனென்ற தைரியத்தினல் துன்மார்க்கத்தைக் கைவிட்டு நன்மார்க்கத்தில் நடக்க நிச்சயித்துப் பிறகு கடைத்தேறக்கூடும். இந்த சக்தியைப் பரமதயாநிதியான பரமேசுவரன் தன் அம்சமான ஜீவனுக்குக் கொடுத்திருக்கிறார். ஆதலால் எவ்வித பாவியானலும் ஜீவன் தன்தன் ஸ்வரூபத்தைத் தெரிந்துகொண்டு, கர்ம ப்ராப்தமான துர்வாசனைகளை வேருடன் களைய உறுதியாக நிச்சயித்து, முன்செய்த பாவங்களுக்காக பரிதாபப்படுவதாலும், சர்வ பூதங்களின்மேலும் கருணைவைப்பதாலும், பகவானைத் தியானித்து ஆராதிப்பதாலும் பரிசுத்தமடைந்து முக்தியடையக்கூடும். ஆதலின் மனிதர் பாவகருமத்தைச் செய்யும்போது அதற்குக் காரணம் பகவான் என்று சொல்லி, பகவான் தன்னிடம் அவ்வித புத்தியைப் பிறப்பித்தாரென்று கூறுவது மதியீனம். விதி என்பது ஜீவன்முன் சுவதந்திரமாகச்செய்த கருமங்களின் பயனேயன்றி வேறல்ல. அது பகவானைக் குறிக்காது. இதனல் விதிவசமென்பதை நாம் செய்யப்புகும் காரியங்களில் சம்பந்தப்படுத்துவது அத்துணைச் சிறந்ததன்று. இக்கர்ம சித்தாந்தம் இந்து பௌத்தமதங்களில் மட்டுமே போதிக்கப்பட்டிருக்கிறதென்றும், இதரமத சித்தாந்தங்களுக்கு அது விரோதமானதென்றும் இக்காலத்துச் சிலர் கொண்டாலும், இதரமத கிரந்தங்களிலும் இவ்விஷயம் காணப்படுகின்றது. கிறிஸ்துவமத கிரந்தங்களில் "நீ விதைத்ததற்கேற்பப் பயனை யனுபவிப்பாய்; நீ பிறர்க்கு எத்துணை கொடுக்கிறாயோ அத்துணை மறுபடியும் உனக்குக் கொடுக்கப்படும்." என்ற இவைபோன்ற வாக்கியங்களால் இச்சித்தாந்தம் நன்றாய் விளக்கப்பட்டுள்ளதல்லவா? இவ்வாறே பிறமதங்களிலும் இது காணப்படுகின்றது. ஆதலால் சகோதரர்களே! வாருங்கள்! நாமெல்லோரும் இவ்விஷயங்களை நன்றாய் ஆராய்வோம். நம்மத கிரந்தங்களை நன்றாக வாசித்து அதிலுள்ள தர்மங்களை அனுஷ்டிப்போம். நம்மதத்தின் அபிவிருத்திக்காகப் பாடுபட்டு மேன்மையடைவோம். மதங்களெல்லாம் பிரஹ்மவித்தை

என்ற மரத்தின் கிளைகளே என்றும் அக்கிளைகளெல்லாம் நாம் விரும்பும் பலனைக் கொடுக்கத்தக்கவைகளே என்றுந் தெரிந்து பிறமத தூஷணங்களைவிட்டு, எல்லா மதங்களையும் ஆதரிப்போம். ஸர்வக்ஞனும் பரம தயாநிதியுமான பரமேசுவரன் தனது அம்சரூபமான ஜீவர்களுக்கு, அவரவர்க்குத் தகுந்த மேன்மையான மார்க்கங்களை அவரவர் மதத்தின் மூலமாக கற்பித்துள்ளாரென நிச்சயித்து, அந்தந்த மதங்களில் அவரவர்கட்கு சிரத்தையும் பக்தியு முண்டாகும்படி தூண்டுவோம். விரோதங்களை அறவே யொழித்து எல்லோரும் சகோதர பாவமாக அத்யந்த விசுவாசத்துடன் நட்புக்கொண்டு பகவானை வழிபடுவோம். உலகில் பொறாமை, போட்டி, அவமதிப்பு, முதலிய த்வேஷங்களை நீக்கி, எல்லாரும் பக்தி விசுவாசம் நிறைந்தவர்களாய், உலகமுழுவதும் ஒற்றுமையைப் பரப்பி உலகின் நன்மைக்காகப் பாடுபடுவோம். உலக முழுமையும் சுகம் நிரம்பியதாகச் செய்வோம். பரமேசுவர ப்ரீதியைச்செய்வோம். நாமும் கடைத்தேறுவோம்.

"ஸர்வேஜனா: ஸுகினோபவந்து."

2-வது அத்தியாயம்.

குருசிஷ்யதர்மம்.

சிருஷ்டிகாலத்தில் பகவான் மனிதர்களைப்படைத்து, அவர்கள் கடைத்தேறும்பொருட்டு மனுவாதி மஹாத்மாக்களையும் மனிதகோடிகளுக்குள் அவதரிக்கச்செய்தார் என்று முன்னர்க் குறிக்கப்பட்டது. அம்மஹான்களின் ஸ்வரூபங்களை நன்ருய் அறிவது அவசியம்.

ஒவ்வொரு பிர்ம கற்பத்திலும் ஜனிக்கிற ஜீவர்களில் அநேக தாரதம்மியங்கள் உண்டு. அவர்களுள் சிலரேனும் நன்ருகத் தம் தர்மங்களைத் தெரிந்துகொண்டு, அவற்றை நன்ருய் அனுஸரித்து அவைகளின் பலன்களை பூரணமாய் அடையத் தகுதியுடையவர் ஆவர். இச்சிலர் ஸ்வதர்மங்களை நன்ருய் அனுஷ்டிப்பதால் (அநேக பிறப்புகளில்) படிப்படியாகப் பக்குவமடைந்து, ஸம்சாரக் கடலைத்தாண்டி பரிபூரணர்களான ஸித்தர்களும், தர்ம ஸ்வரூபர்களும், ஈசுவராம்சத்தை உணர்ந்த முக்தர்களுமாகி, ஈசுவர ஆக்ஞையை நடத்துவதிலேயே மனம்வைத்து லோகநன்மையின் பொருட்டு ஜீவித்து, கற்பாந்தத்தில் ஈசுவரனிடத்தில் ஐக்யமாகிருர்கள். பூர்வ கற்பத்தில் கடைத்தேறிய இவ்வித மஹாபுருஷர்கள், இக்கற்பத்தில் அதிகாரிகளாகி, சாதாரண ஜனங்களை ஈடேற்றுவதற்காக ஜனிக்கிருர்கள். ஆதலின், கேவலம் சாமானிய ஜனங்களைப் போல அவர் கர்மவசப்பட்டுப் பிறப்போர் அல்லர். இவர்களே ரிஷிகள் என்று அழைக்கப்படுவார்கள். அவர்கள் பரிபூரண பிர்ஹ்மானந்த அனுபவங்களை உடையவராகி, ஸம்ஸார சாகரத்தில் முழுகிக்கிடக்கும் அக்ஞானிகளிடம் இருக்கும் தமது அளவிலாக் கருணையால் உலகில் அடுத்தடுத்து சமான நாமரூபங்களிஞல் ஜனித்து சரீரத்துடன் வசித்துவருகிருர்கள். உலகில் கணக்கில்லாத ஜீவர்கள் பாமரர்களாய், சகல துக்கங்களையும் அனுபவித்து ஸம்ஸாரத்தில் உழன்றுவர, இம்மஹான்கள் நிர்வாணசுகத்தை அனுபவிக்கும் இச்சையின்றித் தம் அளவிலாக் கருணையால் உலகத்தில் ஜீவர்கள் அனைவரும் கடைத்தேறும்வரை பாடுபட நிச்சயித்துள்ளார்கள். இவர்கள் ப்ரஹ்ம

வித்தை வடிவெடுத்து வந்ததுபோல் விளங்கி உலகில் அக்ஞான மாகிய இருளைப்போக்கும் ப்ரம்மக் ஞானமாகிய ஒளியைப் பரவச்செய்து, உலகத்தை உய்விக்கக் கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களே பரமார்த்த தத்வங்களை யும், பரமாத்மாவுக்கும், ஜீவர்களுக்கும், உலகுக்கும் உள்ள சம் பந்தங்களையும், சகல பூதங்களின் உண்மைத் தத்துவங்களையும், சகல பூதங்களும் பரம புருஷார்த்தத்தை அடைவதற்குச் சாதனமாகிற வழிகளையும் நன்றாய்த் தெரியும்படி செய்து, உலகிலுள்ள சாமானியர்களும் அனுசரிக்கக்கூடிய தர்மங்களை நிரூபிக்கின்றனர். மஹரிஷிகளெனத்தகும் இவர்களே கற்ப ஆதியில் ராஜாக்களாகவும் ஜனித்து, சகல ஜனங்களையும் காப்பாற்றி, அவர்களனைவரையும் அவரவர்க்கு ஏற்பட்ட தர்மங்களை அனுஷ்டிக்கச் செய்கின்றனர். அப்போது அவர்கள் ஜனோப காரமாக வர்ணாச்ரம தர்மத்தை ஸ்தாபித்து, ஜீவகோடிகளின் யோக்யதைக்குத் தகுந்தவாறு வர்ணாச்ரமங்களை வகுத்துத் தகுந்த கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி, உலகைப் பரிபாலித்துக் கொண்டிருப்பர். மனுஸ்மிருதி முதலான தர்ம சாஸ்திரங்க ளெல்லாம் மஹரிஷிகளால் விதிக்கப்பட்டவை. அப்பூர்வ க்ரந் தங்களில் ராஜதருமங்களும், குடிகளின் தர்மங்களும், குடிகள் ஒருவரோடொருவர் உறவாடி வாழ்வதற்கான விதிகளும் ப்ர ம்மவித்தையின் சாரம் முதலியவையும் நன்றாகச் சொல்லப்பட் டிருக்கின்றன. ப்ரமவித்தையின் சாரம் எனப்படும் பரவித் தையை மனு, இக்ஷ்வாகு முதலிய ராஜரிஷிகள் மூலமாகவே ஈசுவரன் லோகத்தில் வ்யாபிக்கச்செய்தார் என்று பகவத் கீதையிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தயோ கத்தை இரவிக்கு யானுரைத்தேன்
வந்தவ வன்மனுவுக் காங்குரைத்தான்—மைந்தனு
மிக்குவா குக்கவனு மேன்றுரைத்தா னிப்படியாற்
றக்குவாய்க் துற்றது தான்.

இன்னே பரம்பரையா லேய்ந்ததனை யீங்கறிவர்
முன்னே யரச முனிவர்கள்—பின்னேபோய்க்
காலத்தி னுன்மறைந்து கைகழிந்து விட்டதே
ஞாலத்தில் யோக நலம். கீ. வெ. IV. 1, 2.

(இ-பொ.) சாசுவதமான பலனைக் கொடுத்தும் கேதுவான இந்த யோகத்தை (கருமயோகம்) நான் ஆதியில் சூரியனுக்குச் சொன்னேன். சூரியன் மனுவுக்குபதேசித்தார். மனு இக்ஷுவாகுக் குரைத்தார். இவ்விதம் பரம்பரையாக வரும் இந்த யோகத்தை ராஜரிஷிகள் அறிந்திருந்தார்கள். வெகுகாலமானமையால் அந்தயோகம் இந்த லோகத்தில் நஷ்டமாய்விட்டது.

மஹரிஷிகளால் பிரதிபாலிக்கப்பட்ட தர்மங்களெல்லாம் கல்ப முடிவுவரை அநுஷ்டிக்கப்படுகின்றன. நன்ருய் ஆராய்ந்து பார்த்தால், அத்தருமங்கள் ஒரு தேசத்திற்கு மாத்திரமாவது, ஒரு காலத்திற்கு மாத்திரமாவது ஏற்பட்டதுபோலக் காணப்படா. அவை சர்வ ஜனங்களும் தத்தம் யோக்யதைக்குத் தகுந்தபடி அநுஷ்டிக்கும்படியாகவும், யாவற்கும் உபயோகமாகவும் இருக்கும். அவை ஸர்வஜ்ஞர்களால் விதிக்கப்பட்டிருப்பனவால் ஜீவனை ஸர்வ உத்தமமாகிய பதவியை அடையச்செய்வதில் அவை அதிக உதவியாக உள்ளன. இக்காலத்தார் அவர்களைப்போல பரிபூர்ண ஞானிகளாக இராமையால், அவ்விதிகளின் தாத்பரியத்தை உணரக்கூடாமலும், அவற்றின் சாரத்தைத் தெரிந்துகொள்ளக் கூடாமலும் இருக்கிருர்கள். அத்தர்மங்களெல்லாம் நன்ருய் அநுஷ்டிக்கப்பட்டால், உலகில் மனிதகோடிகளுக்கே அன்றி சராசரங்களாகிய சகல பூதங்களுக்கும் மிகுந்த சுகம் கிடைக்கும். மற்றும், இத்தர்ம அநுஷ்டானம் நாம் காணக்கூடாத புவர்லோகம் முதலிய சூக்ஷ்ம லோகவாசிகளான தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் அநுகூலமாவதால், லோகத்தில் தேவர்களின் அநுக்கிரகத்தால் கிடைக்கக்கூடிய மழை சரியான காலங்களிற் பெய்யவும், பயிர்கள் செழித்து விளையவும், உலகத்திற்கு அவைமூலம் நன்மை விளையவும் கூடும். அக்ஞானத்தினுல் அத்தர்மங்களை மனிதர்கள் கைவிட்டால், உலகில் மனுஷ கோடிகளுக்குள் விரோதமும், அவர்களுக்குப் பல தீங்குகளும் உண்டாகும். நடக்கிற கல்பத்தின் முதலில் இம்மஹரிஷிகள் மானவகோடிகளுக்குள் ஜனித்து கொஞ்சகாலம் அவருக்கு வழிகாட்டிகளாக இருந்து, நாளடைவில் ஜீவகோடிகளின் மேன்மையை உத்தேசித்தே மறைவாக இருக்கிருர்கள். மறைந்திருந்தா

லும் அவர்கள் உலக அபிவிருத்தியை நாடி, உலகத்தின் நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு, ஜனங்கள் தாம் அநுஷ்டிக்க வேண்டிய தர்மத்தை எவ்வெப்போது கைவிடுகிறார்களோ அவ்வப்போது அவர்கள் மறுபடியும் அவதரித்து அவர்களைச் சீர்திருத்தி, கல்ப முடிவுவரை சநாதன தர்மத்தைக் காப்பாற்றி, உலகில் யோக்யதை உள்ள மனிதருக்கு உதவிபுரியக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். முன் கல்பத்திலிருந்து அவதரித்த அவ்வதிகாரிகளே யல்லாமல், நடக்கும் கல்பத்தில் ஜனித்த ஜீவர்களும் தமது தர்மாநுஷ்டான பலத்தினால் சித்தசுத்தி அடைந்து, உண்மை ஞானத்தைப்பெற்று, பகவானிடம் பக்தி வைத்து நற்குணமடைந்து, ஈசுவரத் தன்மையைபெற்ற ஜீவன் முக்தர்களாகி, அந்த மகான்கள் கூட்டத்திற்சேர்ந்து, அவர்களைப்போல் மஹரிஷிகளென பேர் அடைகின்றனர். அவ்வித ஜீவன் முக்தர் சம்ஸார சாகரத்தில் மூழ்கிக்கிடக்கும் பாமரர்களை உய்விக்கப் பலதடவை இப்புவியிற்பிறந்து பாடுபடுவதுமுண்டு. அவர்கள் எப்போதும் ப்ரம்மானந்தத்தை அடைந்தவராய், யோக்யராகிய சிஷ்யர்களைத் தேடியும், அவர்களது மனதிற் புகுந்தும் அவரிடமுள்ள அக்ஞானத்தைத் தொலைத்து, அவர்களைப் பரிசுத்தர்களாகச்செய்து, முடிவில் தம்மைப் போல அவர்களையும் பரிபூர்ணர்களாகச் செய்வதற்குப் பாடுபடுகிறார்கள். அன்னோரது அநுக்கிரகத்திற்குப் பாத்திரர்களானால், அவரது சகாயம் தவறாது கிடைக்கும். மனிதர்கள் சுயநன்மையைத் தேடுபவராய் இருக்கும்வரை அவரது சகாயத்தை அடையார். பரோபகாரபுத்தி அவரிடம் வளர வளர அம்மஹான்களின் கடாக்ஷ வீக்ஷண்யத்திற்கு மனிதர்கள் உரியவர்களாகிக், கூடிய விரைவில் அவருடைய தரிசனத்தையும் நேரில்பெற்று, அவரைப்போலவே தாமும் நாளடைவில் பரிபூர்ணர்களாகி ஜீவன் முக்தர்களாகக்கூடும். இவரே ஜகத்குரு என்று அழைக்கப்படக் கூடியராவர்.

குருநாதர்கள்.

குரு என்பவர் அக்ஞானத்தைப்போக்கி, ஞானத்தை உபதேசம்செய்ய வல்லவராவர், ஸம்ஸார ஸாகரத்தைத் தாமே

கடந்து பிறரையும் அதைத் தாண்டும்படி செய்ய உத்தே சித்து இருப்பவர்களே குருநாதர்கள்.

ஸ வித்யா ஹ்ருதயக்ரந்தி ஸம்சோக்ஷா ஹவேத்யத: |
தமேவ குருரித்யாஹு: குருத்வஸ்வபாய வேதிந: ||

தாத்பர்யம்:—அக்ஞானம் நிறைந்த மனதையுடையவருக்கு எவன் மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடுமோ அவனே குருவென்று அம்மொழி யின் பொருளை உணர்ந்த பெரியோர் கொள்வர்.

பிரம்மாண்டத்தில் குருக்கள் அநேக தாரதம்யங்களு டன் இருக்கிறார்கள். முக்யமாய் குருக்கள் பரிபூர்ணர் என வும், பரிபூர்ண ரல்லாதவரெனவும் இருவகைப்படுவர். ஆன ந்த ஸ்வரூபரும், ஸகல ஞானத்தையும் கொடுப்போரும், ஸம் ஸார ரூபமாகிய அக்ஞானத்தை தொலைக்கும் மஹா ஸ்ம சானவாசியாகிய ஸதாசிவனே “குரோர்குரு” என்ற நாமத்தி னால் அழைக்கப்படுவர். அவருக்குப் பிறகு நிற்பவர் அவர் க்கு பிரதிநிதிகளாகி, மனிதர்களை அவரது பாதாரவிந்தத்தில் சேர்க்கக்கூடியவராகிய மேற்சொல்லிய ஜீவன்முக்தரது சங் கமே; இவர்கள் “காரணகுருக்கள்” என்றும் அழைக்கப்படுவர். இவர்கள் லோக நன்மைக்காக ஸ்தூல சரீரத்தை தரித்தவர்க ளாய் இப்போதும், இமயகிரி பிராந்தியத்தில் இருக்கிறார்க ளென்று முன்னமே கூறப்பட்டது. ஆயினும் இவர்கள் சூக்ஷ்ம சரீரத்தினால் பூவுலகு முழுவதும் சஞ்சரித்துக்கொண் டிருக்கிறார்கள்.

சரந்தி ஹ்யவநௌ காமம் ப்ராஹ்மணா பகவத்ப்ரியா: |
மாத்ருசாம் க்ராம்யபுத்தீநாம் போதாயோந்மத்தலிங்கிந:
குமாரோ நாரத ருபுரங்கிரா தேவலோऽஸித: ||

பாகவதம் 6-வது ஸ்கந்தம்.

தாத்பர்யம்:—பகவத் பக்தர்களான பிராம்மணர்களும், ஸனத்கு மாரரும், நாரதரும், ருபுவும், ஆங்கிரசுவும், தேவலர், அசிதர், பராசரர், மைத்ரேயர், பாத்வாஜர், வசிஷ்டர், முதலியோரும், மற்றும் அநேக சித்தர்களும் எங்களைப்போல அற்பபுத்தி யுடையோர்க்கு மோக்ஷஞான த்தைக் கொடுக்கிறவர்களாய்த் தமது மஹிமையை வெளிப்படுத்தாமல் இஷ்டம்போல் பூலோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பூர்வகாலத்தில் ஜனங்கள் பரிசுத்தர்களாய் இருந்ததினால், அவருக்கு இம்மஹாத்மாக்கள் அவ்வப்போது தரிசனம் தந்தனர். இப்போதோ மனிதர் அற்ப விஷயங்களில் ஆசை வைத்து, தம் நயத்தையே நாடி பக்தியில் சிரத்தை குறைந்தவராய் இருப்பதால், அம்மஹாத்மாக்களைப் பார்க்க அவர் தகுதியற்றவராய் இருக்கிறார்கள். ஆயினும் பகவத் ஸ்வரூபர்களான அவர்களை நாம் பார்க்கக்கூடாமற் போயினும், நம்மை அம்மஹாத்மாக்கள் ஸர்வ காலங்களிலும் தமது ஞானதிருஷ்டியால் பார்த்து, நமது ஞானவிருத்தியின் பொருட்டும் பரிசுத்தத்தின்பொருட்டும் ப்ரயத்தினம்செய்கிறார்கள். ஸப்த ரிஷிகளாகிய நாரதர், வியாசர், சுகர் முதலியோரும், கோத்ர ரிஷிகளாகிய, உத்தவர், மைத்ரேயர், முதலியோரும் இக்காரண குருவர்க்கத்தில் சேர்ந்தோர்தாம். இவர்கள் பரிபூர்ணர்களாகி, பகவத் சொரூபராகி, ஜீவர்களை மேம்படச்செய்வதே தம் கார்யமாக நினைத்து, பிரதிபலனைச் சிறிதும் கோராமல் ஸூர்யன் உலகத்தில் பிரகாசிப்பதுபோலத் தாமும் பாடுபடுகிறார்கள். உலகில் ஜனங்களைப் பரிபாலிப்பதற்கு சக்ரவர்த்தி ஒருவர் இருக்க, அவருடைய ஆக்ஞைக் குட்பட்டு மந்திரிகள் ராஜப்பிரதிநிதிகளாய் இருப்பதுபோல, ஞான பரிபாலனத்தில் குரோர்குருவாகிய மஹாதேவர் சக்ரவர்த்தி ஸ்தானத்திலும், மேற்சொன்ன மஹாத்மாக்களின் கூட்டம் ராஜப்பிரதிநிதிஸ்தானத்திலும் இருக்கிறார்கள். ஆயினும் இவர்களனைவரும் கண்ணுக்கு மறைவாகவே இருந்து வேலைசெய்து வருவர். சாமான்ய ஜனங்களுக்கு ஞானோபதேசம் செய்யும்பொருட்டுத் தமது சிஷ்யர்களில் சிலரை ஜனிக்கச்செய்து, லோகத்தில் உத்தமர் சிலரை அவர்களது சிஷ்யர்களாக்கி, அவர்முலம் அக்ஞானிகளுக்கு ஞானத்தை உபதேசித்துப் பக்தியைப் பெருக்கி, உலகில் ப்ரம்மவித்தை மறைந்துபோகாமல், காப்பாற்றுகிறார்கள். இவர்களே முன் எடுத்துக்காட்டப்பட்ட பரிபூர்ணராகாத குருக்கள்; இவர்களே காரிய குருக்கள் எனப்படுவர்.

இவர்கள் இல்லையெனில் ஜனித்துத் தமது சித்தத்தை ஒரு நிலைப்படுத்திக்கொண்டு ஈசுவரத்யானம் செய்வர். பூததயையை நன்றாகப் பழகிக்கொள்வர். காரணகுருவினால் தூண்டப்பட்டுத் தாமும், தம் சிஷ்யரும், யோக்யர்களான சாமான்ய ஜனங்களுக்கு ராஜயோகமார்க்கத்தை உபதேசிப்பர். இவ்வாறு பலரை மேன்மைப்படுத்துவதற்காகவே அவர்கள் பாடுபட்டுச் சிலகாலம் பூலோகத்தில் உழன்று திரிந்து, ஞானத்தைப் பரப்பி, நாளடைவில் ஜீவன் முக்தர்களாகிக் காரணகுருவின் கூட்டத்தைச் சேர்வார்கள். அந்த சிஷ்ய சம்ப்ரதாயத்தில் சிலரே மஹாத்மாவாகிய காரணகுருவின் தரிசனத்திற்கு பாத்திரர்களாகி, அவரது சட்டளைப்படி பூலோகத்தில் வர்த்திப்பார்கள். மற்றும் சிலர் அவ்வித உத்தம பதவியை அடையாதபோதிலும், அவரது அநுக்ரஹத்திற்கு பாத்திரர்களாகி, உலகில் ஞானம் விருத்தியாகும் பொருட்டு பாடுபடுவார்கள். உலகில் ஸத்புருஷர்களாகி ஞானத்தை அடைய ஆசை உடையவற்குத் தற்செயலாய் யாரோ ஒரு புருஷன்வந்து அவரது மனச்சந்தேகங்களைப் போக்கி, நற்போதனையை அவருக்குச் செய்துபோவதை நாம் பார்த்திருக்கிறோம். இப்படி நன்மார்க்கத்தைக் காட்டிய புருஷர்கள் காரணகுருவின் உத்தரவினால் வந்தவர்களெனலாம். இப்படி காரணகுருக்கள் பலவிதமாக ஜீவர்களை சன்மார்க்கத்தில் நடக்கும்படி செய்வர். அவற்றுள் சிலவழிகள் முக்யமாக இதில் காட்டப்படும்.

(1) தேச காலானுகுணமாகத் தங்களுக்குள் ஒருவர் பூலோகத்தில் அவதரித்தாவது, இல்லாவிட்டால் தமது முக்ய சிஷ்யர்களை அவதரிக்கச்செய்தாவது, ஜீவகோடிகளுக்கு, பக்தி ஞானவைராக்ய மார்க்கங்களை உபதேசித்து, ஜீவர்களைப் பரிசுத்தர்களாகச் செய்வர்.

(2) ஜீவன் முக்தர்களாகிய காரணகுருக்கள் சூக்ஷ்ம சரீரத்தைத் தரித்து, மனிதரின் அக்ஞான இருளை பார்த்துக் கருணைகூர்ந்து அதைத் தொலைக்கும் எண்ணத்துடன் அவரது ஹ்ருதய கபாடத்தின் அருகில் காத்துக்கொண்டிருப்பர். அம்

மஹாத்மாக்களுக்கு எல்லா ஜீவரிடமும் கருணை சமமாக இருந்தாலும், ஜீவர்கள் பலர் தமது காமக்ரோதாதிகளாலும், அகங்கார மமகாரங்களாலும் அவருடைய அநுக்ரகத்தை அடையக்கூடாதவராவர். சூரியனுடைய ஒளி எல்லார் வீட்டினும் நுழைந்து பிரகாசிக்கத் தயாராயிருக்க, வீட்டுக்கு உரியோன் வீட்டை தாழ்ப்போட்டுக் கொண்டால், அவ்வெளிச்சம் அவ்வீட்டில் புகாதல்லவா? ஆயினும், சூரிய வெளிச்சம் கதவண்டை யிருந்துகொண்டு இருட்டைப் பொறுக்கக்கூடாது க்ரஹஸ்தன் எப்போதேனும் கதவைத் திறந்தால், அப்போதே வீட்டினுள் நுழைந்து, இருட்டைப்போக்கி, வீட்டை ப்ரகாசிக்கும். இதுபோலவே, மனிதரது ஹ்ருதயங்களுக்குக் காமக்குரோதாதிகளும், அகங்கார மமகாரங்களும் தாழ்ப்போல இருந்து, காரணகுருக்களை ஹ்ருதயத்தில் பிரவேசிக்க ஒட்டாமல் தடுக்கின்றன. எப்போதேனும் ஜீவர்கள் காமக்குரோதாதிகளைச் சிறிதுவிட்டு, ஹ்ருதயத் தாழ்க்கோலைத் திறந்தால், தயாநிதிகளாகிய அம்மஹான்கள் ஹ்ருதயத்தில் பிரவேசித்து, அக்ஞான இருளைப்போக்கி, பக்தி ஞானவைராக்யங்களை நன்றாய் அபிவிருத்தி அடையும்படி செய்து, காலக்ரமத்தில் அவர்களுக்கு ப்ரத்யக்ஷமும் ஆவர். ஆகையால், இந்த ஜீவன் முக்தர்கள் சர்வகாலங்களிலும் ஜீவர்களைத் தம் ஞானத்ருஷ்டியால் பார்த்துக்கொண்டே யிருக்கிறார்கள். எந்த ஜீவனுடைய ஹ்ருதயத்தில் பக்தி ச்ரத்தைகளும், பூததயையும் ஒளிர்கின்றனவோ, அந்த ஜீவனைத் தம் ஞானக்கண்ணால் பார்த்து அவன் அழையாமலே, பசித்த குழவியிடம் தாய் பரிந்துவந்து ஊட்டுவதுபோல, ஓடிவந்து ஞானோபதேசம் செய்து போவார்கள். திவ்யதரிசியாகிய நாரதமுனிவர், த்ருவர், ப்ரஹ்லாதாழ்வார் இவர்களுடைய ஹ்ருதய சுத்தத்தைத் தெரிந்துகொண்டவர் அவர்களிடம் வந்து, மிக்க கருணையுடன், த்ருவருக்குக் கானகத்திலும், ப்ரஹ்லாதாழ்வாருக்குக் கர்ப்பத்திலும் உபதேசித்தா ரல்லவா? மற்றும், பரீக்ஷித்து மஹாராஜனிடம் தயாநிதியாகிய சுகப்ரும்ம மஹரிஷி அழையாமலே வந்து, ஸ்ரீமத் பாகவத புராணத்தைப் போதித்தா ரல்லவா? அவ்விதமே, இவர்கள் பரிசுத்த ஆத்மாக்களுக்கு

ஞானோபதேசம் செய்ய இப்போதும் வருவதற்குத் தயாராய் இருக்கிறார்கள். அம்மஹாத்மாக்களின் அநுக்ரகத் திற்குப் பாத்திராயுள்ளவர்கள் இக்காலத்திலும் இவ்வுலகில் சிலர் இருக்கிறார்கள்.

சிஷ்ய தர்மங்கள்.

மஹாத்மாக்களின் அநுக்ரகத்திற்குப் பாத்திரர்களாக விரும்பும் சிஷ்யர்கள் பரிபூரணர்களாகிய காரணகுருவைப் போலாவதற்கு முயலவேண்டும். குரு பரிபூர்ண தயா ஸ்வரூபராகவும், பரிசுத்தராகவும் இருப்பர். ஆதலின், சிஷ்யனும் தயா ஸ்வரூபனாவதற்கும், பரிசுத்தனாவதற்கும் முயலவேண்டும்; காமக்குரோதங்களையும், அஹங்கார மமகாரங்களையும், விஷய ஆசைகளையும் போக்கிக்கொள்ளவேண்டும். இவ்வாறு செய்வதற்கு முக்ய சாதனமாக உள்ளது த்யானமே. த்யானமென்றால் காரண குருக்களையாவது, ஈசுவரனையாவது மனதில் நிறுத்தி, ஸர்வகாலங்களிலும் ஸர்வ அவஸ்தைகளிலும் பூஜித்து நேசிப்பதாகும். எந்த மூர்த்தியின் கல்யாண குணங்களை மனதில் தியானித்துத் தான்செய்யும் தொழில்களில் ஒருவன் அவற்றை தினம் வழக்கப்படுத்திக் கொள்ளுகிறானோ, 'யத்பாவம் தத்பவதி' என்றபடி, அவன் அந்த மூர்த்தியின் பாவத்தை அடைகிறான். அதனால் ஒருவன் சாந்தமும் இந்திரிய நிக்ரகமும் நிறைந்த குருவை த்யானித்தால், அவன் அவரைப்போலாவான். ஈசுவரனையாவது குருவையாவது தியானித்தால், அவருடைய தேஜஸானது தியானியின் மனதில் பிரவேசித்து, அவனது இல்லறப்பற்றைப்போக்கும். வேப்பிலையைத் தின்றதால் அடையும் கசப்பு சர்க்கரையைத் தின்பதால் எவ்வாறு தொலையுமோ, அவ்வாறே கோபசுபாவமுடையவன் ஈசுவரனை சாந்தமூர்த்தியாக தியானித்தால், அவனது கோபம் தணிந்துவிடும். காமியாகவுள்ளவன் காமனையெரித்த கடவுளாகிய ஸதாசிவனை தியானித்தால், அவன் காமப்பற்று நீங்குவான். இதுபோலவே, இதர துர்க்குணங்கள் நிறைந்தோரும் அவ்வக்குணங்களுக்கு விரோத குணங்களையுடைய ஈசுவரனை தியானித்தால், அவரிடம் அந்தந்த துர்க்குணங்கள்

நசித்து நற்குணங்கள் பெருகும். இதல்லாமலும், பக்தன் ஸர்வ பூதங்களிடமும் சமபுத்திகொண்டு, ஸர்வ ஜனங்களும் மேன்மை யடையும்பொருட்டு தியானம் செய்யவேண்டும். இவ்வாறு தியானிப்பவனிடமும் சுயநன்மையும், அகங்காரமும் பூர்த்தியாக நசித்துப்போகும். அவனும் பரிசுத்தனாவான். அப்போது அவனுக்குக் காரணகுருவின் தரிசனம் கிடைக்கும். ஆதலின், பக்ஷிகள் பறப்பதற்கு இறகுகள் கருவியாவதுபோல பூததயையும் ஈசுவர தியானமும் மேன்மைபெற விரும்பும் சிஷ்யனுக்கு முக்ய சாதனமாகின்றன. மனது தன்வசப்பட்டாலொழிய இவைகளை அநுசரிப்பது ஒருவனுக்கு சாத்யமன்று. மனதில் சலனத்தை விளைவிப்பவை இந்திரியங்களாதலின், முதலில் அவ்விந்திரியங்களை வசப்படுத்திக்கொள்ளவேண்டும். அதன்பிறகு சஞ்சல சுபாவமுள்ள மனதை விஷயங்களிற் புகாமல் அடக்கி ஒருநிலைப்படுத்துவது எவனுக்கும் கைகூடும். இவ்வாறு ஒருநிலைப்பட்ட மனதினால் தியானம்செய்து, ஈசுவரனது அநந்தகல்யாண குணங்களை எப்போதும் மனனம் செய்துகொண்டு, அக்குணங்களை நாம் பழகவேண்டும். அவ்வாறு பழகிவந்தால், படிப்படியாக சாதனசதுஷ்டயம், அதாவது நித்யாநித்யவஸ்து விவேகம், வைராக்யம், சமாதிஷட்கசம்பத்து, முமுக்ஷத்வம், என்ற நான்கு சாதனங்களும் நமக்குக் கிடைக்கும். இச்சாதனங்கள் நான்கையும் அடைவதற்கு சாத்விக ஆகாரங்களைப் புசிப்பதும், ராஜஸ தாமச ஆகாரங்களை நீக்குவதும், பிரம்மசரியமும் அவசியம்.

இவ்வாறு தர்மங்களை சிரத்தையுடன் ஒருவன் அநுஷ்டித்துவந்தால், அக்ஞானமாகிய இருளும் தாமசகுணங்களும் அவனிடம் நீங்கும்; அவனும் ஞானதிருஷ்டியை அடைவான். ஜோதிஸ்வரூபனாகிய காரணகுரு நேரில் அவனுக்குக் காட்சிதந்து, பரிபூர்ண ஞானோபதேசம் செய்து, குமாரர்குருவாகிய மஹாதேவனுடைய பாதபத்மங்களின் தரிசனத்தைக் காண்பித்து, பிரம்மாநந்தத்தை அடையச்செய்வர்.

---

1 - NOV 1923 MADRAS

3-வது அத்தியாயம்.

ஈசுவரன்.

ஆதியில் "ஏகமேவாத்விதீயம்" என்று சுருதிகளில் கூறப்படுகின்ற நிர்க்குண ப்ரஹ்மம் ஒன்றுதானுள்ளது. அது மனவாக்குகளுக்கு எட்டாதது. அத்தத்துவம் உள்ளதென்றாவது, இல்லையென்றாவது சொல்வது அஸாத்யம்.

"நாஸதா ஸீந்நோஸதாஸீத்" ரிக்வேதம்.
"நஸத்தம் நாஸதுச்யதே" கீதை.

அத்தத்துவம் இவ்விதமானதென்று வார்த்தைகளால் வர்ணிப்பது ஸாத்யமன்று. அதில் ஒளியும் இருட்டும், பகலுமிரவும், வித்தையு மவித்தையும், தர்மமும் அதர்மமும் மறைவாக விருக்கும். அத்தத்வத்தை வர்ணிக்கிற இலக்ஷணமொன்றையும் காணமுடியாது. அந்த பரப்ரஹ்மத்தை 'நேதி நேதி' அதாவது 'இதில்லை இதில்லை' என்று வர்ணித்திருக்கிறார்கள். புத்திக்கெட்டக்கூடிய இலக்ஷணங்களெல்லாம் அத்தத்வத்தை காண்பிக்கமுடியா. எவ்விதமாக வர்ணித்தாலும் அவ்வர்ணனைகளெல்லாம் அத்தத்வத்தை வெளிப்படுத்தா. ஆதலின், அது நேதி என்ற சப்தத்தினால்தான் உணரக்கூடியதாய் இருக்கிறது.

𑌯𑌦𑌾 𑌤𑌮𑌸𑍍𑌤𑌨𑍍𑌨 𑌦𑌿𑌵𑌾 𑌨 𑌰𑌾𑌤𑍍𑌰𑌿
𑌨 𑌸𑌨𑍍𑌨 𑌚𑌾𑌸𑌚𑍍𑌛𑌿𑌵 𑌏𑌵 𑌕𑍇𑌵𑌲𑌃 ।
𑌦𑍍𑌵𑍇 𑌅𑌕𑍍𑌷𑌰𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑌰𑍇 𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌤𑍇
𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑍇 𑌨𑌿𑌹𑌿𑌤𑍇 𑌯𑌤𑍍𑌰 𑌗𑍂𑌢𑍇 ॥

ஸ்வேதாஸ்வதரோபநிஷத்.

𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌧𑌰𑍍𑌮𑌾𑌦𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌕𑍃𑌤𑌾𑌕𑍃𑌤𑌾𑌤𑍍 । 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌭𑍂𑌤𑌾𑌚𑍍𑌚 𑌭𑌵𑍍𑌯𑌾𑌚𑍍𑌚 𑌯𑌤𑍍𑌤𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑌸𑌿 𑌤𑌦𑍍𑌵𑌦 ॥

கடோபநிஷத்.

என்ற மஹா வாக்யங்களால் நிரூபிக்கப்படுகிற வஸ்துவும் இதுவே.

இது "அறியப்படாதது; அறியக்கூடாதது" என்று வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலின் வெளிப்படையாக உணரப்படாத அத்தத்வத்திலிருந்தே வெளியாகத் தோன்றுகிற உலகங்களெல்லாம் வெளியாயின. உலகில் ஒன்றிற்கொன்று விரோதமாகக் காணப்படுகிற தத்வங்களெல்லாம், அதாவது த்வந்த்வம் எனப் படுபவையெல்லாம், அத் தத்வத்திலிருந்தே வெளியாயின. அத்தத்வம் 'த்வந்த்வாதீதம்' எனப்படும். அதிலிருந்து ஈசுவரனும் மூலப்ரக்ருதியும் வெளித்தோன்றின. அவைகளினின்றும் சராசர ஆத்மாக்களாகிய ப்ரபஞ்சமெல்லாம் உண்டாயின.

அவ்யக்தமென்றும் நிர்க்குணமென்றும் நிரூபிக்கப்பட்டிருக்கிற பரப்ரஹ்மத்திலிருந்து, அபரப்ரஹ்மம் என்றும், ஸகுணப்ரஹ்மமென்றும், ஈசுவரனென்றும் அழைக்கப்படுகின்ற தத்வம் வெளியாயிற்று. இத்தத்வம் பரப்ரஹ்மத்தினின்றும் வேறானதன்று.

𑌏𑌤𑌦𑍍𑌵𑍈 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮, 𑌪𑌰𑌞𑍍𑌚𑌾𑌪𑌰𑌞𑍍𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮
𑌯𑌦𑍋𑌙𑍍𑌕𑌾𑌰𑌃 ।

ப்ரஸ்நோபநிஷத்.

𑌦𑍍𑌵𑍇 𑌵𑌾𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌰𑍂𑌪𑍇 𑌮𑍂𑌰𑍍𑌤𑌂𑌚𑍈𑌵𑌾𑌮𑍂
𑌰𑍍𑌤𑌂𑌚 𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌂𑌚𑌾𑌮𑍃𑌤𑌂𑌚 𑌸𑍍𑌥𑌿𑌤𑌞𑍍𑌚 𑌯𑌚𑍍𑌚 𑌤𑍍𑌯𑌚𑍍𑌚 ॥

ப்ரஹதாரண்யகோபநிஷத்.

இந்த ஸகுணப்ரஹ்மம் வ்யக்தமானபோது, மூலப்ரக்ருதியுடன் சேர்ந்திருப்பதால் ஈசுவரனும் மூலப்ரக்ருதியும் ஏககாலத்தில் வெளிப்பட்டன என்று உணர்ந்துகொள்க. இந்த ப்ரக்ருதி புருஷருடைய சேர்க்கையினாலேயே சராசரங்களாகிய ஸகல பூதங்களும் உற்பத்தியாகின்றன. இப்புருஷ ப்ரக்ருதிகளுக்கு ஸம்பந்த முண்டாகச்செய்வது ஈசுவர சக்திதான். இந்த சக்தியே மாயாசக்தியென்றும் அழைக்கப்படு

கின்றது. சந்திரனுக்கும், நிலாவுக்கும், அக்னிக்கும் அதன் வெம்மைக்கும் இருப்பதுபோல ஈசுவரனுக்கும் மாயைக்கும் இருக்கிற ஸம்பந்தம் அவிநாபாவம் என்று கூறப்பட்டுள்ளது. ஈசுவரன் ஸச்சிதாநந்த ஸ்வரூபத்தை உடையவன்; அதாவது, ஸத்சித் ஆனந்தம் என்கிற மூன்று லக்ஷணங்களோடு கூடியவன். அவ்வாறே ப்ரக்ருதியும் ஸத்வராஜஸ்தமஸ் என்ற மூன்று குணங்களோடு கூடியது. ஈசுவரனிடமுள்ள மூன்று லக்ஷணங்களும் ப்ரக்ருதியில் ப்ரதிபலிக்க, ஒருவனாகிய ஈசுவரனிடமிருந்து ப்ரஹ்மா, விஷ்ணு, மஹேசுவரர் என்ற மூன்று மூர்த்திகளும் வெளித்தோன்றினார்கள். சிருஷ்டி ஸ்திதி லயத்தின் பொருட்டு மூன்றுரூபத்தைத் தரித்தாலும், மும்மூர்த்திகளால் அறியக்கூடிய தத்வம் ஏகமாகிய ஈசுவரனே. ஒவ்வொரு மூர்த்தியும் ஸச்சிதாநந்த ஸ்வரூபியாயினும், ஒவ்வொன்றினிடத்தும், ஒரு லக்ஷணம் முக்யமாக உள்ளது. ஈசுவரன் ரஜோ குணத்திற் பிரதிபலித்து, ஸத்ரூபனாகி சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மா ஆனான். ஸத்வகுணத்தில் பிரதிபலித்த ஈசுவரன் சித்ரூபனாகி ஸ்திதி கர்த்தாவாகிய விஷ்ணு ஆனான். தமோகுணத்திற் பிரதிபலித்த ஈசுவரன் ஆநந்தரூபனாகி லயகர்த்தாவாகிய மஹேசுவரன் ஆனான். ஈசுவரனுடைய ஸச்சிதானந்த லக்ஷணங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொருவரிடத்தில் முக்யமாக இருக்கின்றது.

> ஸத்வம் த்ரிலோகஸ்திதயே ஸ்வமாயயா
> பிபர்ஷி சுக்லம் கலு வர்ணமாத்மந: ।
> ஸர்காய ரக்தம் ரஜஸோபப்ரும்ஹிதம்
> க்ருஷ்ணம் ச வர்ணம் தமஸா ஜநாத்யயே ॥

பாகவதம், 10-வது ஸ்கந்தம். அ. 3. சு. 20.

தாத்பர்யம்:—பரப்ரஹ்ம ஸ்வரூபனாகிய நீ மூவுலகையும் காக்கும் பொருட்டு, ஸத்வகுணத்தை யுடையவனாய் வெள்ளைவர்ணமாயும், உலக சிருஷ்டியின்பொருட்டு ரஜோகுணத்தை யுடையவனாய் ரக்த வர்ணமாயும், உலக ப்ரளயத்தின் பொருட்டு தமோகுணத்தை யுடையவனாய் கிருஷ்ண வர்ணமாயும் உள்ள வடிவை உன் மாயா பலத்தினால் நீ ஒருவனே தரித்துக்கொண்டாய்" என்று ஸ்ரீ கிருஷ்ணபகவானை வஸுதேவர் துதித்துள்ளார்.

ஈசுவர சக்தியும் மும்மூர்த்திகளிடம் மூன்றுவிதமாகப் பிரிந்திருக்கிறது. அவை இச்சா சக்தி, ஞான சக்தி, க்ரியா சக்தி எனப்படும். அவைகளில் க்ரியா சக்தி பிரம்மாவிடம் சேர்ந்து சரஸ்வதியாகவும், ஞான சக்தி விஷ்ணுவுடன் கூடி லக்ஷ்மியாகவும், இச்சா சக்தி மஹேசுவரனுடன் கூடி உமையாகவும் விளங்கும். அந்த மாயாசக்தி ப்ரக்ருதியில் பிரவேசித்து, எப்போதும் சரித்துக்கொண்டிருப்பதால், அதை மூல ப்ரக்ருதியின் மாயை எனச் சொல்வதுமுண்டு. ஏகமாகிய ப்ரஹ்மம் பலவாக மாறுவதற்கு இச்சித்து ப்ரக்ருதியை வசப்படுத்திக்கொண்டு தன் தபோபலத்தில் உலகத்தை சிருஷ்டித்தது.

𑌸𑍋𑌽𑌕𑌾𑌮𑌯𑌤 𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯𑍇𑌤𑌿 ।
𑌸 𑌤𑌪𑍋𑌽𑌤𑌪𑍍𑌯𑌤 𑌸 𑌤𑌪𑌸𑍍𑌤𑌪𑍍𑌤𑍍𑌵𑌾 𑌇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌸𑍃𑌜𑌤 ॥

பகவான் பலவாக ஆவதை எண்ணி சிருஷ்டிக்கக் கருதியவுடன், பகவானுக்குள் அடங்கியுள்ள பூதங்களெல்லாம் வெளியாகி ப்ரக்ருதியில் பிரவேசித்து வெளிப்பட்டன. அவற்றிலிருந்து முதன்முதல் இந்திரன், வாயு, அக்னி, வருணன், பூமி, முதலிய தேவர்கள் தோன்றி, ஆகாசம், வாயு, தேஜஸ், அப்பு, பூமிகளின் ஸ்வரூபங்களைக்கொண்டு, அதனதன் அதிபதிகளாகிப் பிரகாசித்தார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஸப்த லோகங்களுக்கும் அதிபதியாய் இருக்கிறார்கள். இவர்களை பஞ்ச பூதங்கள் என்று பிரசித்தமாகி, ஸப்த லோகங்களிலும் வ்யாபித்துள்ளனர். ப்ரதிவி தத்வமே பூலோகம்; இதற்கு பூதேவதை அதிபதி. அப்பு தத்வம் புவர்லோகம்; இதற்கு வருணன் அதிபதி. 'தேஜஸ் தத்வம்' சுவர்லோக மகர் லோகங்கள்; இவைகளுக்கு அதிபதி அக்னி. வாயு தத்வம் ஜனலோக தபோலோகங்கள்; இவைகளுக்கு வாயு அதிபதி. ஆகாச தத்வம் ஸத்யலோகம்; இதற்கு அதிபதி, இந்திரன். இவ்வேழு லோகங்களுக்குமேல் இன்னும் இரண்டு லோகங்கள் உள்ளனவாக கிரந்தங்களில் குறிக்கப்பட்டுள்ளன. அவை வைகுண்டம், கோலோகம் எனப்படும். வைகுண்டம்

மகத்தத்வம் என்ற நாமாந்திரத்தை உடைய அநுபாதக தத்வத்தாலும், கோலோகம் யாவற்றிற்கும் மூலமாகிய ஆதி தத்வத்தாலும் (அதாவது மகத்தாலும்) ஆக்கப்பட்டுள்ளன. பிரளயகாலத்தில் ஈசுவரனிடத்தில் அடங்கியுள்ள ஜீவாத்மாக்கள் வெளிபாவார்கள். ஜீவாத்மாக்கள் பகவான் அம்சமாதலின், அவர்கள் அவ்யக்தம் என்று சொல்லப்படுகிற அநுபாதக தத்வத்தில் அடங்கியிருந்து வெளிப்பட்டுப், பஞ்சபூதங்களாகிய உலகில் பிரவேசிப்பார்கள். இந்த லோகங்கள் முதலில், பூ, புவர், ஸுவர் லோகங்கள் மூன்றிலும் ஜீவாத்மாக்கள் ஸம்ஸார சக்கரத்திற்கு உட்பட்டுத் திரிந்துகொண்டிருப்பார்கள். இந்த மூன்று லோகங்களே கிரந்தங்களில் திரிலோகங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவ்வுலகங்களே ப்ரஹதாரண்யகோபநிஷத்தில் மனுஷலோகம், பிதுர்லோகம், தேவலோகம் எனக் கூறப்பட்டுள்ளன.

𑌅𑌥 𑌤𑍍𑌰𑌯𑍋 𑌵𑌾𑌵 𑌲𑍋𑌕𑌾 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌲𑍋𑌕𑌃 𑌪𑌿𑌤𑍃
𑌲𑍋𑌕𑍋 𑌦𑍇𑌵𑌲𑍋𑌕 𑌇𑌤𑌿 |

சாதாரணமான ஜீவர்கள் இம்மூவுலகத்தையும் தாண்டிச் செல்ல சக்தியற்றவர்கள். ஆயினும், இந்திரிய நிக்ரகத்தாலும், யோகாப்யாசத்தினலும், பக்தி ஞானவைராக்யங்களாலும் பரிசுத்தர்களாகிப் பரிபக்குவம் அடைந்தவர்கள் மஹர் லோகத்தைத் தாண்டி, ஜனதப ஸத்யலோகங்களை அடைவர்.

இவ்வுலகங்கள் அனைத்தும் ஜீவர்களின் சுகானுபவங்களுக்காக ஏற்பட்டவை. இவ்வாறு ஸத்யலோகத்தை அடைந்த ஜீவன் சப்த பிரம்ம சொரூபனுகி, முக்தி ஸானித்யம் அடைந்தவனுவன். இவ்வுலகங்களெல்லாம் ஒன்றிற்கொன்று சூக்ஷ்மமாகி, ஒன்றிற்குள் ஒன்று வ்யாபித்திருப்பதால், ஓரிடத்திலேயே எல்லா உலகங்களும் இருக்கின்றன என அறிக. ஆயினும், ஒவ்வொரு லோகமும் அதற்குத் தாழ்ந்த லோகத்திலும் சூக்ஷ்மமாகி, எள்ளினுள் எண்ணெய்போல் அவ்வுலகத்திலும் நிறைந்து, அதற்கு வெளியிலும் வ்யாபித்திருக்கின்றது. ஊர்த்வலோகங்கள் என்று கூறப்படுபவை எல்லாம் ஒன்றின் மேல் ஒன்ருக உள்ளதெனக் கூறுதல் சரியன்று. ஊர்த்வமென்ருல் சிரேஷ்டமாயும் சூக்ஷ்மமாயும் உள்ளதென்று அறிக.

4-வது அத்தியாயம்.

ஜீ வ ஸ் வ ரூ ப ம்.

ஜீவன் ஈசுவரனது அம்சமென முன்னற் கூறினேம்.

"என்ஞரு மம்சமா யிவ்வுலகிற் சீவனய்
முன்ஞா னின்று முயலுமுயிர்—தன்ஞரு
மைம்புலனு நெஞ்சு மவை யாறையும் வலிக்கும்
வெம்புலத்துச் சேர விரைந்து."

"எந்தவுடல் விட்டெவ் வுடலடையு மீசனவன்
அந்தமுட னங்கிவற்றைத் தான்வாங்கிப்—பந்தமுடன்
தானேகும் வாயுத்தன் சார்மணங்கள் வாங்கியே
பூநேர்கின் றேகுமது போல்." கீ. வெ. XV. 7. 8.

ஜீவர்கள் பகவதாம்ச மாதலின், ஸத்சிதானந்த ஸ்வரூப முள்ளவர்; அவர்கள் ப்ரளயகாலத்தில் ஈசுவரனிட மொடுங்கி கல்பத்தின் தொடக்கத்தில் வெளிப்பட்டு, பஞ்சபூதங்களினு லாகிய சரீரத்தை அடைந்து, அவ்வுலகில் சுகதுக்கரூபமான அனுபவங்களை அனுபவித்து ஞானத்தைப் பெறுவார்கள். இதனுல் லோகமெல்லாம் ஞானத்தைக்கொடுக்கக்கூடிய ஸ்தா னமென் றேற்படுகின்றது.

சாதாரணமாக ஜீவன் சரீரங்களைப் பார்க்கிலும் விலக்ஷணமானது; சரீரங்களுக்கு அதிபதி போன்றது. சரீரம் நாச மடையும்போது, சரீரியாகிய ஜீவன் அழிவடையாது. பிறப்பு இறப்புக்கள் பஞ்ச பூதத்தாலாகிய சரீரத்திற்கேயன்றி ஜீவனுக்கில்லை.

"என்றும் பிறவா னிவனிறவான் முன்புளனய்ச்
சென்று பிறந்திலனுஞ் செய்திபிலன்—இன்றென்றுந்
தொல்லையவ, னைவிவன் றேன்றுமுடல் கொன்ருலுங்
கொல்லரிய னகுங் குறித்து." கீ. வெ. II. 20.

தாத்பர்யம்—இந்த ஆன்மா ஒருபோதும் பிறப்பதில்லை, இறப்ப தில்லை. இதற்குமுன் இல்லாத நிலைமையுமில்லை. இதற்குமேல் இல் லாமற்போகும் காலமுமில்லை. பிறப்பற்றவனும், நித்யனும், நிர்விகா ரனும் சநாதனனுமாவன். சரீரம் நசித்துப்போனலும், ஆன்மா அழிவ தில்லை,

பிறப்பிறப்புக்களும், விருத்தி விருத்திக் குறைவுகளு மில்லாத ஜீவன் பஞ்சபூதங்களாலாகிய சரீரத்தையடைந்து, மனதினாலும், இந்திரியங்களினாலும் நானு லோகத்திலும், சுக துக்க ரூபமாகிய அனுபவங்களை யனுபவித்து, அதன் ஸாரங் களை அடைகிறான். இந்த ஜீவனது ஸ்வரூபத்தைச் சிறிது ஆராய்வோம்.

ஜீவனது ஸ்வரூபத்தை பின்வருமாறு வேதாந்த பஞ்சதசி என்ற கிரந்தத்தில் வித்யாரண்ய ஸ்வாமிகள் வர்ணித்திருக் கிறார்கள்.

சைதந்யம் யததிஷ்டாநம் லிங்கதேஹஸ்ய யச்சவை
சிச்சாயா லிங்கதேஹஸ்தா தத்ஸங்கோ ஜீவ உச்யதே ||

கூடஸ்தசைதன்யமும், லிங்கதேகமும், லிங்க தேகத் தில் சித்சாயையாகிய மூன்றும் கூடியது ஜீவனெனப்படும். ஜீவன் ஈசுவராம்ச மாதலின், ஸச்சிதாநந்த ஸ்வரூபனாகிறான். ஆகாச தத்வத்திலிருந்து ஒரு பூத ஸூக்ஷ்மத்தைக் கிரகித்து கேவலம் அவித்யையின் உபாதியை யடைந்து, ஆநந்த பிரதி பிம்பமும் சைதன்ய ரூபமும் கூடியவனாகிறான். இதற்கு பிரஹ் மஞான ஸங்கத்தார் ஆத்மாவெனப் பெயரிடுகின்றனர். அத ன்பிறகு வாயு தத்வத்திலிருந்து ஒரு பூத ஸூக்ஷ்மத்தை கிர கித்து சித்ஸ்வரூபமாகிய சித்சாயையையடைகிறான். இதையே நமது ஸமாஜத்தார் ஆத்மோபாதிக புத்தி யென்பர். இதன்பிறகு தேஜஸ் தத்வத்திலிருந்து ஒரு பூத ஸூக்ஷ்மத்தை கிரகித்து, ஸத்ரூபமாகிய லிங்க சரீரத்தை, அதாவது மற்ற சரீரங்களுக்கு வித்தாகிய, பீஜம் போன்றவைகளை உண்டாக்கிக்கொள்ளுகி றான். அதை இந்த சமாஜத்தார் மனஸ் என்பர். ஆகையால் அவர்கள் ஜீவனை ஆத்மாபுத்தி மனஸென்று அழைப்பார்கள்.

இந்தவிதமாக ஜீவன் மீதிலோகங்களிலிருந்து ஒவ்வொரு ஸூக்ஷ்மத்தை கிரகித்து, அந்தந்த லோகத்தில் தனக்கு சரீரங் களை அமைத்துக்கொள்ளும். இவ்வாறு ஜீவன் பூலோகத்தில் பிரதிவி தத்துவத்தின் ஸ்தூலபாகத்தால் செய்யப்பட்ட ஸ்தூல சரீரத்தைத் தரித்துக்கொள்ளுகிறான். இந்த சரீரத்தை அன்

னமய கோச மென்பர். இதில் கர்மேந்திரியம் ஞானேந்திரியங் களுக்கு ஸ்தானமாகிய கோளங்கள் (Outer organs) இருக் கின்றன.

இவற்றினுல் ஜீவன் ஜாக்ரதாவஸ்தையில் ஸ்தூல பிரப ஞ்சத்தில் வியவகரித்துக் கொண்டிருக்கும். ஸ்தூல சரீரத்தின் போலியாகவுள்ள பிராணமய கோசமானது பிரதிவி தத்துவத் தின் சூக்ஷ்ம பாகத்தால் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இதில் பிராணங்கள் சஞ்சரித்துக்கொண்டிருக்கும். இந்த கோசம் ஸ்தூல சரீர முழுமையும் வியாபித்து அதன் வெளியிலும் கொஞ்சதூரம் வியாபித்துள்ளது. இது எல்லாருக்கும் கட்புல ணுகாதாயினும் யோகதிருஷ்டி யுள்ளவர்களுக்கு அது புலனு கும். இது சூக்ஷ்ம சரீரத்தின் ஒரு பாகமெனச்சொல்லலாம். ஜீவன் புவர்லோகத்தில் அப்பு தத்துவத்தாற் செய்யப்பட்ட சரீரத்தை யடையும். இதில் கர்மேந்திரிய ஞானேந்திரியங்கள் சூக்ஷ்ம ரூபமாயிருக்கும். இது ராகத்துவேஷங்களுக்கும் பலவித ஆசைகளுக்கும் இருப்பிடமாகும்.

இந்த சரீரத்தை யோகதிருஷ்டியால் பார்த்தால், அன் னமய பிராணமய கோசங்களெல்லாம் நிறைந்து அவ்விரண்டி ற்கும் வெளியே கொஞ்சதூரம் பரவியுள்ளதுபோல் காணப் படும். பலவித விஷய ஆசைகளும், காம குரோத லோப மோக முதலியவைகளும் மனதில் உற்பத்தியாவதால், இந்த சரீரம் பலவித வர்ணங்களாக மாறும். காமக்குரோதாதிகள் இல்லாத மஹாத்மாக்களிடத்திலும், குழந்தைகளிடத்திலும் இவ்வித மாறுபாடுடைய வர்ணங்கள் காணப்படா. இதை யும் சூக்ஷ்ம சரீரத்தின் ஒரு பாகமெனலாம். இதை காமமய சரீர மென்பர். இன்னும் ஸுவர்லோகத்தில் தேஜஸ் தத்துவ சம்பந்தமாகிய பிரகிருதியால் நிருமிக்கப்பட்டு அந்த லோகத் தில் ஜீவன் வசிப்பதற்குத் தகுதியான சரீரத்தை அடையும். இந்த சரீரத்தில் ஜீவனது மனோவிருத்தியெல்லாம் நிறைந்திரு க்கும். நானுவிதமான சங்கற்பங்கள் மனதில் உதிக்கும்போது இந்த சரீரத்திலும் அதற்கேற்றவாறு வர்ணங்கள் தோன்றும்.

மனதில் கெட்ட எண்ணங்கள் உதித்தால், இந்த சரீரம் கரி முதலிய பதார்த்தங்களைப்போல் ஆபாசமான வர்ணங்களுடன் கலந்திருக்கும். அவ்வாறில்லாமல் நிஷ்காம எண்ணங்கள் மனதில் எழுந்தால், இந்த சரீரத்தில் மனோகரமாகிய ரோஜா வர்ணங்கள் காணப்பெறும். இதுபோலவே, பக்தி மனதில் உதித்தால், அதி அற்புதமான நீலவர்ணம் தோன்றும். இவ்விதமாக எண்ணங்களெல்லாம் பலவித வர்ணங்களாக யோக திருஷ்டிக்கு வெளியாகும். இதுவும் மேற்கூறிய அப்புதத்துவத்தால் செய்யப்பட்ட காமமய சரீரமும் ஸாமான்யமாக ஒன்ருக வர்த்திப்பதால் மனோமய கோசமென்ற பெயரடையும். இந்த சரீரத்தின் செய்கைகள் மனோவிருத்திகள் எனப்படும். இந்த சரீரம் முன் எடுத்துக்கூறிய கோசமனைத்திலும் வியாபித்து, வெளியிலும் கொஞ்சதூரம் வியாபித்திருக்கின்றது. இந்த கோசங்களனைத்தும் பிறப்புதோறு மாறுகின்றன. இன்னும் அதே தேஜஸ் தத்துவ சூக்ஷ்ம பாகத்தினால் நிருமிக்கப்பட்டதாயும் ஜீவனை முக்தி பர்யந்தம் விடாது தொடர்ந்து வருவதுமான, முற்கூறிய சரீரமனைத்தைக்காட்டிலும், சூக்ஷ்மதராமாயிருக்கிற சரீரத்தை ஜீவன் மஹர்லோகத்தில் அடையும். இது வேதாந்த சாஸ்திரத்தில் விக்ஞானமய கோசமென்று சொல்லப்படும். இந்த கோசம் ஜீவனது சுபாசுப வாசனைகளுக்கெல்லாம் ஆதாரமானது. இதில் ஜீவனுடைய வாசனை யனைத்தும் பீஜரூபமாக இருப்பதால், இது அநேக ஜன்மங்களுக்கு மூலமாக விருக்கிறது. இன்னும் சூக்ஷ்மதரமாயுள்ள மனோவிர்த்தி யனைத்திற்கு மிது உற்பத்திஸ்தானம். இதில் உற்பத்தியாகும் மனோவிர்த்திகளெல்லாம் அநேகமாய் நிஷ்காம முள்ளதாக விருக்கும். இது சுத்த மனதிற்கு உபாதி எனத்தகும். இதுவும் முற்கூறிய சரீரங்களிலெல்லாம் வியாபித்து அவைகளின் வெளியில்கூட பிரகாசிக்கும். இது யோக திருஷ்டிக்கு அதி அற்புதமான ஜோதிமயமாகக் காணப்படும். மஹர்லோகத்திற்கும் மேலேயுள்ள மூன்று லோகத்திலும் ஆனந்தமய கோசம் உள்ளது. ஆதியில் இது கேவலம் அணுவாக இருந்து, ஜீவனுக்கு பக்தி ஞான வைராக்யங்கள் அதிகமாக வாக மிக்க தேஜோமயமான திவ்ய ஸ்வரூப

மாக பிரகாசிக்கும். இவ்விஷயம் வருமத்தியாயத்தில் விரித்தெழுதப்படும்.

ஜீவனுக்கு மேலே சொல்லப்பட்ட கோசங்களனைத்தும் உபாதிகளாயிருந்தாலும், ஸ்தூல சரீரமாகிய அன்னமய கோசமாத்திரம் சாமான்ய மனிதருக்குப் புலப்படும். மீதி சரீரங்களெல்லாம் யோக திருஷ்டிக்குமாத்திரமே காணப்படும். யோக திருஷ்டியால் துருவிப் பார்க்கப்பட்டபோது, ஸ்தூல சரீரம் அனைத்திற்கும் ஸ்தூலமாயும் சிறியதாயும் காணப்படும். மற்ற உபாதிகளெல்லாம் ஸ்தூல சரீரத்தில் வியாபித்து அதைச் சுற்றிக்கொண்டிருக்கும். இவை ஒன்றிற்கொன்று சூக்ஷ்மமாகவும், ஒன்றிற்கொன்று தேஜோவந்தமாகவுமிருக்கின்றன.

ஆதலின் ஸ்தூல சரீரத்திற்கு வெளிப்பக்கத்திலிருந்து யோக திருஷ்டிக்குமாத்திரம் காணப்படுகிறபாகம் தேஜஸ் என்று அழைக்கப்படுகிறது.

5-வது அத்தியாயம்.

தேஜஸ்.

தேஜஸ் என்றால் 'ஒளி' ஸ்தூல பதார்த்தங்களின் வேறாகி அவைகளைச் சேர்ந்து பிரகாசிக்கும் ஒளியே தேஜஸ் எனப்படும். மனிதரைச் சுற்றியிருப்பதைப்போல் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவைச்சுற்றிலும் அதனதன் அணுகுணமான தேஜஸ் அண்டவடிவாக உள்ளதென்று சாஸ்திரம் வல்லோர் சொல்லுகிறார்கள். தீபம் இருக்கிற லாந்தலைச்சுற்றிலும் கொஞ்ச தூரம்வரை காந்தி பிரகாசிக்கிறதல்லவா? அக்கண்ணாடி விளக்குப்போகிற இடமெல்லாம் வெளிச்சம் போகிறதல்லவா? அதுபோலவே, ஒவ்வொரு வஸ்துவைச்சுற்றிலும் (பாஷாணங்கள், மரங்கள், ஜந்துக்கள், மனிதர்கள், ரிஷிகள், தேவதைகள்) அவ்வவ் வஸ்துவுக்குத் தகுந்த தேஜஸ் பிரகாசித்துக்கொண்டிருக்கும். இந்தவிஷயம் திவ்ய திருஷ்டி உடையவருக்கே புலப்படும். ஸூர்யப்ரகாசத்தை அறிந்துகொள்ளக்கூடாத பிறவிக்குருடன் ஒருவன் ஸூர்ய வெளிச்சமேயில்லை என்று வாதித்தாலும், திருஷ்டி சரியாக உள்ளவருக்கு அது காணப்படுமாறுபோல, தேஜஸூம் ஊனக்கண்ணால் பார்க்க முடியாமல் இருத்தலின் நாம் அதை இல்லையென்று எண்ணினாலும், திவ்ய திருஷ்டி உள்ளவர்கள் அதை நேரில்கண்டு அது உண்மையே என நிரூபித்திருக்கிறார்கள். அந்த தேஜஸின் ஸ்வரூபத்தை நோக்கி வஸ்துக்களின் குணங்களை அறியலாம். தமது யோக மகிமையினால் மஹான்கள், சாதாரண ஜனங்களைப் பார்த்தவுடனே, அவருடைய குணங்களை அறிந்துகொள்வதை கிரந்தங்களில் குறிக்கப் பட்டிருக்கின்றதல்லவா? மனிதருக்குள் இருப்பதுபோல, இதர வஸ்துக்களிலும் நானாவிதமான தேஜஸ் காணப்படுகின்றன.

சிலவற்றின் துர்க்குணங்களைப்பார்த்து அதில் தாழ்ந்த தேஜஸூம், இன்னும் சிலவற்றைநோக்கி அவற்றில் சாதாரண தேஜஸூம், இன்னும் சிலவற்றில் உத்தமமும் பரிசுத்தமுமான

திவ்ய தேஜஸும் இருக்கிறதென்று யோகிகள் சொல்லுகிறார்கள். இக்காரணத்தைக்கொண்டு, தர்ம சாஸ்திரத்தில் சில சில பதார்த்தங்கள் பரிசுத்தமானவை என்றும், பூஜைக்கு உரியனவென்றும், புசித்தற்கு உரித்தானவையென்றும், தரிப்பதற்கு உரியவை என்றும் தீர்மானிக்கப் பட்டுள்ளன. துளசியும், துளசிமணியும் விஷ்ணுவுக்கு ப்ரீதியாக உள்ளவையாதலின், விஷ்ணுபக்தர்கள் அவைகளை உபயோகித்தால் பரிசுத்தர்கள் ஆவார் என்றும், அதுபோலவே வில்வமும் ருத்திராக்ஷமும் பரமசிவனுக்கு ப்ரீதிகரமாக உள்ளமையின், அவை சிவ பக்தர்கள் தரிப்பதற்கு உரியவை எனவும் தீர்மானிக்கப்பட்டு இருக்கின்றன வல்லவா? இன்னும் போஜன பதார்த்தத்திலும், சில பரிசுத்த தேஜஸை உடையவை ஆதலின், சாத்வீகப்பொருள்கள் பக்தி ஞான வைராக்கியங்களுக்கு மூலமானவை என்றும், இன்னும் சில மலின தேஜஸை உடைமையால் ராஜஸப் பொருள்கள் என்றும், தாமஸப் பொருள்கள் என்றும் அழைக்கப்பட்டு, காமக்குரோதாதிகளையும், நித்ராலஸ்யங்களையும் பராமுகத்தையும் விருத்தி செய்வனவென்றும் தீர்மானிக்கப் பெற்றுள்ளன. தர்ம சாஸ்த்ர கர்த்தாக்கள் யோகதிருஷ்டியோடு கூடிய மஹாத்மாக்களானதால், அந்தந்த பதார்த்தங்களிலுள்ள தேஜோ விசேஷங்களைப் பரீக்ஷித்து, சாத்வீக ராஜஸ தாமஸ ஆகாரங்கள் இவையெனப் பகுத்து நிர்ணயித்திருக்கிறார்கள். இக்காலத்தாருட் சிலர் பதார்த்தங்கள் சிலவற்றில் தமக்குள்ள ஆசையாலும், யோகதிருஷ்டி இன்மையாலும் இப்பேதங்களெல்லாம் பயனற்றவையெனக் கருதி, ரிஷிகளின் வார்த்தைகளை அவமதிக்கிறார்கள். இது அவரது பரிபூர்ணஞானத்தால் ஏற்பட்டதாகாது. தர்ம சாஸ்திரத்தை அநுசரித்து போஜனத்திற்குத் தகுந்த சாத்வீக பதார்த்தங்களை மாத்திரம் கிரஹித்து, தகாத பதார்த்தங்களை விட்டுவந்தால், மனிதர்கள் தமது தேஜஸை பரிசுத்தமாகச் செய்துகொண்டு விருத்தியடையக்கூடும். இவ்வாறன்றி ராஜஸ தாமஸ உணவுகளை உண்டால், சரீரம் பரிசுத்தமற்று மலின தேஜஸைப்பெற்று, நற்கர்மங்களைச் செய்வதற்கும் பக்தி ஞான வைராக்யங்களைப்

பழகுவதற்கும் இடையூறாகும். இத்துடன் இதை நிறுத்தி, மனிதரின் தேஜஸ் விஷயத்தைப்பற்றி கொஞ்சம் புகல்வோம்.

ஜீவனுடைய ஸூக்ஷ்ம சரீரங்களெல்லாம் ஸ்தூல சரீரம் முழுமையும் வியாபித்து, சரீரத்தின் வெளிப்புறங் கூடக் கொஞ்சதூரம் பரவியுள்ளதென்றும் அந்த பாகம் தேஜஸ் எனச் சொல்லப்படும் என்றும் முன்னர் கூறினோம். இன்னும் இந்த சரீரங்கள் மனோவிர்த்திகளை அநுசரித்து நானாவிதமான வர்ணங்களாக மாறிக்கொண்டிருக்கும் என்றும் கூறினோமல்லவா? லாந்தரில் மத்தாப்பு வர்த்தியை ஏற்றி வைத்தவுடனே, அவ்வெளிச்சம் அதைச்சுற்றி சிறிது தூரம்வரை வியாபித்து, அந்த லாந்தருடனே போய்க்கொண்டிருக்கும். அதுபோலவே, பல வர்ணங்களோடு கூடிய வெளிச்சத்தைக் கொடுக்கிற மத்தாப்பு வர்த்திகளை ஒன்றன்பின் ஒன்றாக அந்த லாந்தவில் கொளுத்தினால், அதன் வெளிச்சமும் இதை அனுசரித்து மாறிக்கொண்டிருக்குமல்லவா? மனிதரின் சரீரம் லாந்தராகவும், மனது எரியும் மத்தாப்பாகவும் பாவிப்போம். மனோபாவங்கள் மாறினபடியெல்லாம் மனோமய கோசத்தின் வர்ணம் மாறிக்கொண்டிருக்குமென்று முன்பு கூறப்பட்டது. மனது மாறுகிறபடி சரீரத்தைச் சுற்றியுள்ள தேஜஸும் மாறும். மனதில் கோபம் முதிர்ந்தால் சுற்றிலும் உள்ள தேஜஸ் ரக்த வர்ணமாகவும், காமம் முதிர்ந்தால் குங்கும வர்ணமாகவும், மாறும். கேவலம் தன்னயத்தைக் கருதினால், தேஜஸ் கமுகுப்பழம் போல் ஆகும். மிகுந்த புத்தி முதிர்ச்சியைக் கருதினால், அது பொன் நிறமாய் இருக்கும். பரோபகார புத்திபெருகி, பக்தி ஞான அபிவிருத்தி யடைந்து எப்போதும் த்யானத்திலிருக்கும் ராஜயோகியின் தேஜஸ் ஸ்படிகம்போல் நிர்மலமாகி, ஸூர்யகாந்தியைப்போல் விளங்கும். சாமான்ய ஜனங்களுக்குள் இந்த தேஜஸ் சரீரத்தைச் சுற்றிலும் ஏறக்குறைய இரண்டடி தூரம் வியாபித்திருக்கும். பரிபூர்ணரான ராஜயோகியின் தேஜஸ் சில க்ரோசம்வரை வியாபித்திருக்குமென்று அதைக்கண்டு அனுபவித்தோர் கூறியுள்ளார். சாதாரணமாக மனிதர் ஒருவருக்கொருவர் கலக்கும்போது, அவரது சரீரத்தில் அட

ங்கியுள்ள தேஜஸ் ஒன்றிற்கொன்று கலந்துகொள்ளும். அவ்வாறு கலப்பதால் அவரது குணமும் கலப்படையும். கோபியொருவன் சாந்தகுணவானை சமீபித்தபோது, அவ்விருவரது சூக்ஷ்ம சரீரங்களின் ஸ்பரிசத்தால் அவனது கோபகுணம் சிறிது சாந்தமாகும். இல்லாவிடில் சாந்தகுணம் கொஞ்சம் கோபகுணமாக மாறினும் மாறும். இந்த இருவரது குணங்களில் எவரது குணம் திடமாக உள்ளதோ அவரது குணங்கள் மற்றவரது குணங்களை மாற்றிவிடும். ரக்தவர்ணமான நீர் இயற்கையாயுள்ள நீருடன் கலப்பதால் இயற்கை நீர் சிறிது சிவப்பாகவும், ரக்தவர்ண ஜலம் தன் வர்ணத்தில் சிறிது குறைவாகவும் மாறுகின்றதல்லவா? அதில் ரக்தவர்ணமான ஜலம் அதிகமாக இருந்தால் பிறகு ரக்தவர்ணமே முக்யமாய்த் தோன்றும். இவ்வாறன்றி இயற்கையான ஜலம் அதிகமாக இருந்தால் அதன்குணமே பிரதானமாக இருக்கும். அதுபோலவே மனிதர் இருவர் கூடியபோது, திடமான குணம் எவர்க்கிருக்கிறதோ அவரது குணம் மற்றவரது குணத்தை மாற்றிவிடுகிறது. அதனால்தான் ஸத்புருஷரின் சேர்க்கையால் ஸத்குணம் விருத்தியாகின்றது.

துஷ்டரது சகவாசத்தால் அவரது குணம் பிறர்க்கும் வருகிறது. தபஸ்விகளும், பரோபகாரிகளும். தயாள்குணத்தினரும், சாந்தகுண சீலர்களுமான மஹாத்மாக்களது ஆச்ரமத்தில் இயற்கையில் விரோதமுள்ள ஜந்துக்களும் மிக்க நேசமாய் உறவாடிக்கொண்டிருப்பதாக கிரந்தங்களில் வாசித்துள்ளோமல்லவா? இதற்குக் காரணம் மஹாத்மாக்களின் சாந்தமான தேஜோமஹிமையே என்று வெளியாகின்றது. அம்மஹாத்மாக்களின் சாந்தகுணம் அவரைச் சுற்றிலும் குரோச தூரம் வரை வியாபித்து, அப்பிரதேசத்தில் சஞ்சரிக்கும். பூதகோடிக ளெல்லாவற்றையும் சாந்தகுண முள்ளவைகளாகச் செய்வதால், ஜந்துக்கள் கூட இயற்கையான தம் பகைமையை மறந்து, மிக்க நட்புடன் கலந்து வாழுகின்றன.

இவ்விஷயம் மனிதரெல்லோரும் நன்கறியத்தக்கது. எவரேனும் மனோவாக்குக் காயங்களால் கெட்டவழியிற்சென்

ருல், அவரது தேஜஸ் குறைவுபட்டு, அவரை நேசிப்பவர்களு க்கும், அவருதவும் அன்னபானுதிகளை க்ரஹிப்பவர்களுக்கும், அவர்செய்யும் தானங்களை எற்பவர்களுக்கும், மற்றும் அவரது சந்ததிகட்கும் அந்த துஷ்ட தேஜஸ் வியாபிப்பதால், அவர்கள் எல்லோரும் துஷ்டபுத்தி யுள்ளவர்களாகிக் கெட்டுப் போவார்கள். இப்படி ஒருவன் செயலால் அநேகர் கெடுவதும் தவிர, அது (துஷ்ட தேஜஸ்) கிரமமாக, கிராமமெல்லாம் பரவி மற்றும் அநேக கிராமங்களிலும் பரவும். இப்படி அநேகர் செய்யும் தீத்தொழிலினுல் எழும் தோஷம் முதலில் சொல்லப்பட்டவனுக்கும் கொஞ்சம் செல்லும். அதுபோலவே ஒரு வீட்டில், கற்புக்கரசியாகிய மங்கையொருத்தியும், எகபத்னி விருதனும், பரமதயாளுவுமாகிய புருஷனும், வசித்துவந்தால், அவரது பரிசுத்த தேஜஸ் சமீபத்திலுள்ள அனைவரிடமும், வியாபித்து, எல்லாருக்கும் நற்புத்தியைப் பிறப்பித்து, அநேக மேன்மைகளைச்செய்யும். அப்படி எல்லாரையும் நல்ல சுபாவமுள்ளவராகச் செய்த புண்ய பலன் அந்த ஸ்த்ரீ புருஷர்களை யடையும். அதனுல் எல்லாரும் சர்வகால சர்வாவஸ்தையிலும், பரிசுத்த மனத்தினராய், சர்வ பூதங்களிடத்திலும், ஹிதமுள்ளவர்களாய், சருணைக்கிருப்பிடமாய் பக்திஞான வைராக்கியங்களை அனுசரித்துக் கொண்டிருக்கவேண்டும். அவ்வாறுள்ளவர் பிறர்க்குத் தெரியாதுபோயினும், உலோகத்திற்கு பரோபகாரத்தை கொடுப்பவர்களே. அவர் ஸம்ஸார ஸாகரத்தை எளிதில் தாண்டி தம்மை சமீபித்த பிறரையும் விரைவில் நல்லோராக்குகின்றனர். யாதேனும் துர்விர்த்தியுள்ளவன் தானழிவதுமன்றி, தனது சகவாசத்தால் லோகத்திற்கு மகா அபகாரியாகிறுன். எல்லாரும் இவ்விஷயத்தை நன்ருய் உணர்ந்து எப்போதும் தீச்செயல்களை நீக்கி நற்கர்மங்களை யனுசரிக்கவேண்டும். எவராயினும் போஜனகாலத்தில் ஈசுவரத்யானம் செய்துகொண்டு புசித்தால், அந்த உணவு சரீரத்தை விருத்திசெய்வது மல்லாமல் தனது திவ்ய தேஜஸால் மனதையும், புத்தியையும், பரிசுத்தஞ்செய்து ஞான வைராக்யங்களையும் பெருகச்செய்யும்,

"நானமர்ந்து நின்றுலகி னூடு முயிருடலி
லூன மறவளரு மொள்ளெரியாத்—தான்சலவா
வேல்வகைசேர் வாயு விரண்டா லறப்புசிப்ப
னல்வகைசே ரன்னத்தை நன்கு." கீ. வெ. XV. 14.

தாத்பர்யம் —"அன்னம் பிரம்ம ஸ்வரூபம்; ரசம், விஷ்ணு ஸ்வரூபம்; உண்போன் (போக்தா) மகேசுவரன். இவ்விதம் நினைத்து புசிக்கும் இருபிறப்பாளர் அன்னதோஷத்தால் பீடிக்கப்படார். ஓ! அர்ஜுனா! நான் அக்னி ஸ்வரூபனாகி பிராணிகளின் தேகத்தையடைந்து, பிராணாபான வாயுக்களுடன் கலந்து, நாலுவிதமான அன்னத்தை ஜீர்ணிக்கிறேன்."

ஆதலின் பக்தர்கள் போஜனகாலத்தில் ஞானவைராக்ய சித்திக்காக இந்த ஈசுவர தியானத்தைச் செய்துகொண்டிருப்பர்.

"அன்னபூர்ணே சதாபூர்ணே சங்கரப் பிராணவல்லபே!
ஞானவைராக்ய வித்யர்த்தம் பிக்ஷாம் மேதேகி பார்வதீ"

என்று த்யானித்துப் பின்பு புசிப்பர். இதுபோலவே, சமையல் செய்கிறவர்களும், பரிமாறுகிறவர்களும், பரிசுத்தர்களாய் ஈசுவரனை நினைத்துக்கொண்டே வேலை செய்யவேண்டும். அவ்வாறு செய்யாமல் கெட்டெண்ண முள்ளவர்களாயின் அவரது பரிசுத்தமற்ற தேஜஸ் அன்னத்தில் வியாபித்து புசிப்பவர்களையும் மாசுள்ளவர்களாகச் செய்யும்.

மற்றும் பக்தர்கள் சர்வகாலத்திலும், பரோபகார மனதுடையவர்களாய் இருக்கவேண்டு மென்பது சர்வ சாஸ்திர சம்மதமான விஷயமல்லவா? இவ்வாறு பிறர்க்கு மேன்மை செய்வதற்காகவே, துஷ்டர்கள் சமீபத்திலாவது சாதாரண ஜனக்கூட்டத்திலாவது பக்தன் போகவேண்டியபோது, சிறிதுபோது ஈசுவரனை த்யானித்துப் பிறருடைய துஷ்ட தேஜஸ், தன்னைத்தொடாது ரக்ஷிக்கக்கூடிய ஒரு தேஜஸ் கவசத்தை நிர்மாணிக்கவேண்டும் என பிரார்த்திக்கவேண்டும். அப்படி திடமாக எண்ணி பகவானை வேண்டினால், அவனது தேஜ

ஸில் ஒருபாகம் ரக்ஷிக்கக்கூடிய கவசமாக மாறி அவனை ரக்ஷிக்கும். இப்படியே தூங்குவதற்கு முன்பும், பிறரது கெட்ட எண்ணங்கள் முதலானவை தூங்குபவனை அணுகாமலிருக்கும்படி ஈசுவரனை தியானித்துப் படுக்கவேண்டும்.

சாதாரணமாக மலின தேஜஸை உடைய மனிதர்கள் அதேமாதிரியுள்ள மலின தேஜஸை உடையவர்களை தம்மிடம் சேர்த்துக்கொள்வார்கள். ஒருவனுடைய எண்ணம் பிறரையும் தாக்கும். ஒருவன் கோபியாக இருந்தால் கோபிகளான பிறர் கோப எண்ணங்களை எடுத்துக்கொண்டு அதன்மூலம் தன் கோபத்தை அவன் விருத்திசெய்துகொள்வான். இதுவும் அல்லாமல் முன்னால் கோபிகளாய் இருந்து மரித்து பிசாசரூபமாய் சூக்ஷ்ம லோகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் ஜீவர்களையும் அவன் தன்னிடம் இழுத்துக்கொண்டு, அவர்களது தூண்டுதலினால் * மிக்க கோபத்திற்காளாகி அநேக பாவகாரியங்களை செய்வான். இப்படி பிறர் துர்க்குணங்களையும், பிறர் எண்ணங்களையும், அவ்வித ஸ்வபாவமுள்ள இறந்தோரின் பிசாச ரூபங்களையும் தன்னிடம் இழுத்துக்கொள்பவன் தனது துர்க்குணங்களை படிப்படியாக விருத்தி செய்துகொள்வான். லோகத்தில் எல்லோரும் பக்தர்களாயும், ஞானிகளாயும், இச்சைபற்றவராயும், தர்மாத்மாக்களாயும் இருக்கவேண்டுமென்று ஈசுவரனை எப்போதும் தியானித்து, நல்ல தர்மங்களையும் பக்தி ஞான வைராக்கியங்களையும் அனுசரித்து, சர்வ பூதங்களுக்கும் நன்மையைச் செய்துகொண்டுவரும் புருஷன் தனது தேஜஸை அதிக பரிசுத்தமாகச் செய்துக்கொள்வான். அந்த தேஜஸ் இதர யோகிகள், ரிஷிகள் முதலியோரின் திவ்ய தேஜஸை இழுத்துக்கொள்ளும். அவ்வித யோகியின் சமீபத்திற்கு சூக்ஷ்ம சரீரதாரிகளான ரிஷிகளும், தேவர்களும், வந்து, அவரது மனதிற் பிரவேசித்து அதிலுள்ள மாசுகளை

* ஆரண்ய பர்வத்தில் கோஷயாத்திரையில் துர்யோதனன் ப்ராயோபவேசம் செய்யப்புகும்போது அப்போது பூதங்கள் அவனுக்கு போதித்தன. என்ற கதை இங்கு நோக்கத்தக்கது.

களைந்துசெல்வர். இப்படி அப்யாசம் செய்துகொண்டுவரும் யோகிகளின் தேஜஸ் தினந்தோறும் அபிவிர்த்தியாகி, பிறகு, வெகு குரோசங்கள் தூரம் வியாபிக்கும். மஹாத்மாக்களின் தேஜஸ் எவ்வளவுதூரம் வியாபிக்கிறதோ அவ்விடமெல்லாம் அவரது தேஜோமகிமை நிறைந்திருப்பதால் அப்பிரதேசமெல்லாம், அம்மஹாத்மாக்களின் ஆசிரமமென்றே சொல்லலாம்.

"நிக்ரஹி தேன்ந்த்ரிய க்ராமோ யத்ர யத்ர வஸேன் நர:
தத்ர தத்ர குருக்ஷேத்ரம் நைமிசம் புஷ்கராணிச"

தாத்ப்ரியம்:—இந்திரியங்களை அடக்கிய மனிதர் எத்தலத்தில் வசித்தாலும் அதுவே குரு க்ஷேத்ரம், நைமிசாரண்யம், புஷ்கரம் மூன்றிற்கும் சமானமாகும்.

எவனுயினும் அந்த ஆச்ரமத்தில் பிரவேசித்தால் அந்த தேஜோராசி அவனைப் பரிசுத்தம் செய்து அவனை பக்திமானுக்கும். இப்போதும் கங்கைமுதலிய மஹாநதிக் கரைகளிலும் அநேக புண்ய க்ஷேத்திரங்களிலும் அநாதியான தேவாலயங்களிலும், ரிஷிகளின் திவ்ய தேஜஸ் வியாபித்துக்கொண்டிருக்கிறது. அந்தந்த ஸ்தலத்தில் மஹாத்மாக்களாகிய முனிவர்கள் வெகுகாலம் தபஸ்செய்து பாமரஜனங்களை வெகுகாலம்வரை உயர்த்தும்பொருட்டு தமது சக்தியையும் மகிமையையும் அந்தந்த தீர்த்தங்களிலும் க்ஷேத்ரங்களிலும், ஸ்தாபித்திருக்கிறுர்கள். இக்காரணம்பற்றியும், மற்றும் ஆகமவிதிகளை அனுசரித்து பிரதிஷ்டை செய்யப்பட்டு இருப்பதுபற்றியும் தேவாலயங்கள் திவ்ய தேஜஸ் நிறைந்துள்ளன. இன்னும் காசிமுதலிய திவ்ய க்ஷேத்ரங்களுக்கும் பெரிய தேவாலயங்களுக்கும், ரிஷிகள் பிறர் கண்ணுக்கு தோன்றுமல் மறைவாகவந்து இந்த க்ஷேத்ரங்களின் மகிமை குறைந்துபோகாவண்ணம் தமது தபோமகிமையால் காப்பாற்றுகிறுர்கள்.

ஆதலின் எல்லோரும் அம்மஹான்களின் வழிகளை அனுசரித்து பரிசுத்தர்களாகி, பிறரையும் பரிசுத்தம் செய்யும்பொருட்டு தியானித்து, லோகத்தில் பரிசுத்த தேஜஸை அபிவிருத்தி செய்வதற்கு எப்போதும் முயல்வார்களாக.

6-வது அத்தியாயம்.

ஜீவனுடைய சரீரங்கள்.

ப்ருமமாண்டத்தில் அநேக லோகங்கள் உள்ளனவென்றும், ஜீவன் அந்தந்த உலகில் சஞ்சரிப்பதற்குத் தகுந்த சரீரம் அந்தந்த லோகசம்பந்தமான பிரகிருதியால் செய்யப்படுமென்றும் முன்னர்க் குறித்தோம். அந்தந்த லோகசம்பந்தமான பிரகிருதியால் செய்யப்பட்ட சரீரம் ஒன்று இருந்தாலன்றி அந்த லோகாநுபவம் ஜீவனுக்குக் கிடைக்காது; அந்த லோக சமபந்தமான ஞானமுங் கிடைக்காது. ப்ருமமாண்டத்தில் லோகமெல்லாவற்றிலும் பெறக்கூடிய ஞானமெல்லாம் சம்பாதித்துக் கொள்வதற்கல்லவா ஜீவன் பஞ்சபூதங்களாலாகிய இப்பிரபஞ்சத்தில் புகுந்துள்ளான்? இதற்கு திருஷ்டாந்தமாக இப்பூலோகத்தைப் பார்ப்போம். ப்ருத்வி தத்துவத்தால் செய்யப்பட்ட ஸ்தூல சரீரம் ஜீவனுக்கில்லையாயின், இந்தப் பிரபஞ்சஞானம் எவ்வாறு கிடைக்கும்? சரீரத்தில் கண்ணொன்றில்லையாயின் ரூபக்ஞானமில்லையல்லவா? அதாவது, நானாவித வர்ணங்கள், நானாவித ஒளிகள், பலவித உருவங்கள் முதலியவை அந்த ஜீவனுக்குப் புலப்படாவல்லவா? அதுபோலவே காதில்லையாயின் சப்த ஞானமில்லையல்லவா? இவ்வாறு ஒவ்வொரு இந்திரியமும் இல்லாவிடில், ஒருவிதமான ஞானம் ஜீவனுக்கு அசாத்யமாகுமாதலால், ஸ்தூல சரீரமில்லாத ஜீவனுக்கு லோகக்ஞானமே இல்லாமற்போகும். ஜீவன் இவ்விதஞானம் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்ற இச்சையாலல்லவா அதற்கு சாதனமாகிய இந்த சரீரங்கள் தேவாது சகாயத்தால் நிருமிக்கப்படுகின்றன. ஆத்ம சக்திகள் படிப்படியாக வெளிப்படுவதற்காக ஆத்மா பார்க்கவெண்ணிய உடனே, சரீரத்தில் கண் உற்பத்தியாகிறது. முகர்ப்பதற்கு எண்ணம் உதித்தவுடனே நாசி உண்டாயிற்று. அதுபோலவே, ஆத்மாவின் கோரிக்கையால் அவனுக்கு உபயோகமான அவயவங்கள் சரீரத்தில் சிருஷ்டிக்கப்படுகின்றன. இந்திரியங்களின் வழியாக ஞானத்தை அடைவது ஆத்மாதான்.

𑌮𑌘𑌵𑌨𑍍𑌮𑌰𑍍𑌤𑍍𑌯𑌂𑌵𑌾 𑌇𑌦𑌂 𑌶𑌰𑍀𑌰𑌮𑌾𑌤𑍍𑌤𑌂 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌨𑌾 𑌤𑌦𑌸𑍍𑌯
𑌅𑌮𑍃𑌤𑌸𑍍𑌯 𑌅𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌯 𑌆𑌤𑍍𑌮𑌨𑍋 𑌽𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌤𑍋 𑌵𑍈
𑌸𑌶𑌰𑍀𑌰𑌃 । 𑌅𑌥𑌯𑍋 𑌵𑍇𑌦𑍇𑌦𑌂 𑌮𑌨𑍍𑌵𑌾𑌨𑍀𑌤𑌿 𑌸 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌮𑌨𑍋
𑌽𑌸𑍍𑌯 𑌦𑍈𑌵𑌂 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 𑌸 𑌵𑌾 𑌏𑌷 𑌏𑌤𑍇𑌨 𑌦𑍈𑌵𑍇𑌨
𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑌾 𑌮𑌨𑌸𑍈𑌤𑌾𑌨𑍍𑌕𑌾𑌮𑌾𑌨𑍍𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌰𑌮𑌤𑍇 ॥

சாந்தோக்ய உபநிஷத்.

தாத்பர்யம்:—இந்த சரீரம் அழிவுள்ளது. யமனால் நசிக்கக்கூடியது. அதாவது யமனுக்குட்பட்டது. ஆயினும் அது இறப்பு இல்லாததும் சரீரமற்றதுமான ஆத்மாவுக்கு இருப்பிடமாக உள்ளது. எவன் இதைத் தெரிந்துகொள்வேனென்று நினைக்கிறானோ அந்தத் தத்துவமே ஆத்மா. மனசு, இந்திரியங்களாகிய காரணங்களின் வழியாக இந்த இச்சைகளை அநுபவித்து ஆநந்திக்கிறவன் அவனே.

இப்படி சரீரங்களெல்லாம் ஞான சாதனங்களாக விருத்தலின், இந்த சரீரங்களின் விஷயங்கள் விவரமாக ஆராய்ச்சி செய்யத்தகுந்தவை.

ஸ்தூல சரீரம்—அன்னமயகோசம்.

ஜீவனுக்கு மூன்று சரீரங்களுள்ளன. அவை ஸ்தூலசரீரம், சூக்ஷ்ம சரீரம், காரண சரீரமெனப்படும். இவைகளுக்கு பஞ்சகோசமென்றும் பெயருண்டு. ஸ்தூல சரீரமென்றால் அன்னமயகோசம்; சூக்ஷ்ம சரீரத்தில் பிராணமய, மனோமய விக்ஞானமய கோசங்களுள்ளன. காரண சரீரமென்பது, ஆநந்தமயகோசம். அன்னமய, பிராணமய கோசங்கள் இரண்டும் பூலோக சம்பந்தமான பிரதிவீதத்வ பிருக்ருதி விகாரங்கள். எல்லாவித பிருக்ருதியிலும் ஸ்தூல சூக்ஷ்ம தாரதம்மியங்களுள்ள 7 பாகங்களுள்ளன. அதில் பிரதிவீ தத்வ அந்தர்ப்பாகமான பிரதிவீ, அப்பு, தேஜஸ் பாகங்களால் நிருமிக்கப்பட்டது அன்னமயகோசம். மற்ற நான்கு சூக்ஷ்ம பாகங்களால் நிருமிக்கப்பட்டது பிராணமயகோசம்.

சரீரங்களி லெல்லாவற்றிலும் சிறியதும் ஸ்தூலமுமாய் சிலகாலமேயுள்ளது ஸ்தூலசரீரம். இதில் ஞானேந்திரிய கர்மேந்திரிய கோளங்கள் (அவயவங்கள்) உள்ளன. இவை மூலமாக இந்திரிய மனதுகள்வேலைசெய்து ஜீவனுக்கு பூலோக ஞான முண்டாக்குகின்றன.

சரீரங்கள் எல்லாவற்றிலும் அற்பமானதானாலும், இந்த ஸ்தூலசரீரம் தருமசாதனத்தில் முதலாகவும், முக்யமாகவுமுள்ளது. வேலைசெய்வோனுக்கு ஆயுதம் எவ்வாறுள்ளதோ அதுபோலவே நமக்கு சரீரமுமுள்ளது. துருப்பிடித்துப் பதன் அழிந்த ஆயுதங்களால் தொழிலாளி எவ்வளவு சமர்த்தனானபோதிலும் ஒன்றும் செய்யமுடியாதல்லவா? அதுபோலவே நமது சரீரம் பரிசுத்தமாயும் நுட்பமானதை அறியவல்லதாயுமிருந்தாலொழிய நாம் அதனால் ஏற்படும் பலனை அடையமாட்டோம்.

முதலில் சரீரம் ஆரோக்கியமடைந்து திடமாக இருக்கவேண்டும். இதற்கு சரீர பரிசுத்தம், பரிசுத்தமான அன்னபானாதிகள், தேகப்பயிற்சி, நல்லகாற்று, இவை அவசியம். தினம் ஸ்நாநம் செய்யாதிருப்பின் மயிர்க்கால்களெல்லாம் மாசுபடிந்து, உள் அழுக்கு வெளிவர வழியில்லாமற் போவதால், தேகம் பலவித வியாதிகளுக்கு உள்ளாகும். அதனால் எல்லா மதங்களிலும், நித்தம் ஒருதடவையாயினும் ஸ்நாநம் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. நமது வீடுகளையும், வீட்டின் சமீப பாகங்களையும் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். இல்லாவிடில் காற்றுக் கெட்டுப்போய் வியாதிக்கிடமாகும். சுத்தநீர் குடிக்கவேண்டும். மதுபானம் நீக்கவேண்டும். கெட்டுப்போன பதார்த்தங்கள் பழைய பதார்த்தங்கள், மாமிசங்கள், அபினி முதலிய லாகிரி வஸ்துக்கள், உள்ளி வெங்காயம் முதலியவை, நீக்கப்படவேண்டும். இவ்வித வஸ்துக்களை உட்கொண்டால், சரீரம் திடமாகக் காணப்பட்டாலும், சூக்ஷுமமான விஷயங்களை உணருவதற்குத் தகுந்த சக்தி இல்லாமற் போய்விடும். ராஜஸ ஆகாரங்களும் விட

த்தக்கவை. சத்புருஷர் கூட்டுறவாலும், புண்ணிய ஸ்தல, புண்ணிய தீர்த்த சேவைகளினாலும் தேகம் பரிசுத்தமாகும். சரீரத்தை ஜாக்கிரதையாக வளர்த்தால் அது தர்மத்தை அனுசரிப்பதற்குத் தகுந்த சாதனமாகும்.

நமக்கு பிறப்போடுவந்த சரீரம் மாற்றக்கூடியதன்றென சந்தேகிக்கலாகாது. சரீரம் ஒவ்வொரு நிமிஷமும் மாறிக்கொண்டே யிருக்கிறது. அதிலுள்ள அணு எப்போதும், வெளியேறிக்கோண்டே யிருக்கிறது. அவ்வாறே ஒவ்வொரு நிமிஷமும் உள்மூச்சு, வெளிமூச்சுகளினாலும், அன்னபானாதிகளினாலும் புதிதாய் அணுக்கள் சரீரத்தில் பிரவேசித்துக்கொண்டே யிருக்கின்றன. இவ்விதமாய் ஏழுவருஷத்தில் சரீரம் அனைத்தும் பூரணமாக ஒருதரம் மாறிவிடுகிறதென்று சரீர தத்துவ ஞானிகள் நிரூபித்துள்ளார்கள். ஏழுவருஷத்திற்கு முன்பு சரீரத்திலுள்ள அணுக்களில் ஒன்றேனும் இப்போது சரீரத்தில் நமக்கிரா. வெள்ளத்தில் ஒரு நீர்த்துளி ஒரு நிமிஷமாவது ஓரிடத்தில் நில்லாதிருப்பினும், கரையிலிருந்து காண்போர்க்கு, நதியின் பிரவாகம் ஒரேமாதிரியாக அசைவற்றிருப்பதாகக் காணப்படுவதுபோல, சரீரத்தில் அணுக்கள் இடைவிடாமல் மாறிக்கொண்டே யிருப்பினும், சரீரம் மாறாதது போல நமக்குத்தோன்றும். இவ்வாறு மாறிக்கொண்டிருக்கிற சரீரத்தை நம்முயற்சியால் நன்றாய் சுத்தி செய்துகொள்வது சுலபமாகும். இனி, மற்றொரு விஷயத்தையும் நாம் மறக்கக்கூடாது.

ஆத்மாநம் ரதிநம்வித்தி சரீரம் ரதமேவது ।

கடோபநிஷதம்.

சரீரம் ஆத்மாவுக்கு உபாதியாக இருப்பதால், அது ஆத்மாவின் சுவாதீனத்தில் இருக்கத்தக்கதே யல்லாமல் ஆத்மா அதற்குட்பட்டிருப்பது கூடாது. நாம் சரீரமென்று எண்ணி, அதை இஷ்டப்படி விடுதல் கூடாது. சரீரம் நமதென்று தெரிந்துகொண்டு நாம் சொன்ன வேலைகளை அது செய்யும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். நாம் குதிரைகள் முதலியவை

களைப் போற்றி வருவதுபோல, அதையும் சுத்தமாக வைத்துப் போஷித்து நமது வேலைகளை அதன்மூலம் செய்துகொண்டு வரவேண்டும். இவ்வாறு குழந்தைமுதல் சரீரத்தை அடக்கிவந்தால், அதை லகுவாக ஸ்வாதீனப் படுத்திக்கொள்ளக்கூடும். பால்யத்தில், இளங்கொடியைத் திருப்புவதுபோல, நமது சரீரத்தைத் திருப்பிக்கொள்ளக்கூடும். வயதாகவாக, மரத்தை வளைப்பது கடினமாவதுபோல, அதை வளைப்பதும் கஷ்டமாகும். ஆதலால் வாலிபர்களுக்கு இவ்விஷயங்களைப் போதித்து அவற்றை அப்பியாசிக்கச்செய்வது நல்லது.

ஸூக்ஷ்ம சரீரம்.

ஸூக்ஷ்ம சரீரத்தில் மேற்கூறியபடி மூன்று கோசங்கள் உள்ளன. அவற்றுள் பிராணமயகோசம் அனைத்திலும் ஸ்தூலமானது. மனோமயகோசம் அதனிலும் ஸூக்ஷ்மமானது. விக்ஞானமயகோசம் எல்லாவற்றிலும் ஸூக்ஷ்மமானது.

பிராணமய கோசம்.

இது மேற்சொல்லியபடி பிரதிவீ தத்துவத்தின் ஸூக்ஷ்மபாகத்தால் நிருமிக்கப்பட்டது. பிராணங்கள் இதிலிருந்தே ஸ்தூல சரீரத்தில் வியாபிக்கும். இதின் மூலமாகவே ஸ்தூல சரீரத்திற்கும் மனோமய கோசத்துள்ள இந்திரியங்களுக்கும் சம்பந்தம் ஏற்படும். இந்த கோசம் ஸ்தூல சரீரமெல்லாம் வியாபித்து, நிறைந்து அந்த சரீரத்தின் வெளிப்பக்கத்திற் சிறிது பாகமும் வியாபித்துள்ளது. இது ஸ்தூல சரீரத்தின் பிரதி பிம்பம்போலுள்ளது. இது சாதாரணமாக கட்புலனாகாது. ஸூக்ஷ்ம திருஷ்டி உள்ளவருக்குச் சிறிது ஊதாவர்ணமாகத் தோன்றுமென்று அறிஞர் சொல்லுகிறார்கள். சாதாரணமாக இக்கோசம் ஸ்தூல சரீரத்துடன் கூடியே உள்ளது. பலமான நோயுற்றபோதும், வேறு சில சமயங்களிலும், ஸ்தூல

தேகத்தைவிட்டு நீங்குமென்று தெரிகிறது. அப்போது ஸ்தூல சரீரம் கேவலம் பலஹீனமாயிருக்கும். ஆதலால் எப்போதும் இதற்கு ஸ்தூல தேகத்தோடு தந்திரூபமாகிய சம்பந்தம் ஏற்பட்டு அது அறுபடாதேயிருக்கும். ஸ்தூல சரீரம் மாறின போதெல்லாம் இதுவும் மாறுபடும். சஸ்திர சிகிச்சை செய்வதற்கு மயக்க வஸ்துவைப் பிரயோகித்தபோது ஸ்தூல சரீரம் அசைவற்றிருக்க இந்த பிராணமயகோசம் வெளியேறும். அதனுல் ஸ்தூல சரீரத்திற்கும் மனோமய கோசத்திலுள்ள இந்திரியங்களுக்கும் சம்பந்தம் இல்லாததனுல், ஸ்தூல சரீரம் படும் அவஸ்தை நமக்குத் தெரியாது. மயக்கம் நீங்கி ஸ்தூல சரீரத்தில் பிராணமயகோசம் பிரவேசித்தவுடனே, அவ்வவஸ்தை தெரியவரும்.

மாரணகாலத்தில் மாத்திரம் ஸ்தூல சரீரத்திற்கும் இந்த கோசத்திற்கும் சம்பந்தத்தைச்செய்யும் இந்தத் தந்தி முறிந்து, இரண்டும் வேருகும்.

பிரும்மாண்டத்திற்கு எல்லாம் சூரியபகவான் பிராணதாதாவாக இருப்பது வெளிப்படையல்லவா? சூர்ய பிம்பத்திலிருந்து தேஜஸ் பிராண ரூபமாக வெளிப்பட்டு, உலகம் முழுவதும் வியாபித்து, எல்லா பூதங்களின் நாடிகளிலும் பிரவேசித்து, சரீரங்களைப் பலப்படுத்துகின்றது. இவ்வாறு சூரியனிடம் வெளிப்படும் தேஜஸிலிருந்து ஒவ்வொரு பூதமும் தனக்குவேண்டிய பிராணசக்தியை நாடிகளால் கிரகித்துக் கொள்ளுகிறது. சூரியப்ரகாசம் இல்லாமல் ஒருபூதமும் அபிவிருத்தி அடையமுடியாது. இந்த சக்தி பிராணமயகோச வழியாக ஸ்தூல சரீரத்திற்கு வியாபிக்கும். ஸ்தூலசரீரம் பரிசுத்தமற்று ஆரோக்கியமில்லாமல் இருக்கும்போது பிராணமய கோசமும் பரிசுத்தம் அற்று ஆரோக்பம் குன்றிவேண்டிய பிராணசக்தியை நாடிகளின் மூலம் கிரகித்துக்கொள்ளக்கூடாமல், துர்பலத்தை அடையும். இதனுல் ஸ்தூல சரீரமும் முன்னிலும் மிக துர்பலத்தை அடையும்.

ஸ்தூல சரீரம் சம்பூர்ண ஆரோக்ய மடைந்திருந்தால், இந்த பிராணமயகோசம் சூரியனிடம் வெளிப்படும் பிராண சக்தியை, ஸ்தூல சரீரத்திற்கு தேவையானதற்கு அதிகமாக வே கிரகித்துக்கொள்ளுமென்றும், அப்போது அதிகமாயுள்ள பிராணசக்தி அந்த ஸ்தூல சரீரத்தில் தேஜோமய ரூபமாக வெளியே புறப்படுவதுபோல் சூக்ஷ்ம திருஷ்டிக்குக் காணப் படும் என்றும் அனுபோகஸ்தர் சொல்லுகிறார்கள். ஆதலின், நல்ல ஆரோக்யமுள்ளவர்களின் பக்கத்தில் பலஹீனர்கள் கொஞ்சகாலம் படுத்துக்கொண்டால், அந்த பல சரீரத்திலிருந்து வெளிப்படும் பிராண சக்தியை பலஹீனர்கள் கிரகிப்பதால், அவர் பலமுடையவராவார்கள். இதுபோலவே, ஸாமான்யன் ரோகியிடம் படுத்துக்கொண்டால் கொஞ்சகாலத்தில் தானும் பலஹீனனுவான்.

மரணகாலத்தில் பிராணமயகோசம் ஸ்தூல சரீரத்தைப் பூர்ணமாகவிட்டு நீங்குமென்று சொன்னோமல்லவா? அந்த ஸ்தூல சரீரம் அழிந்துபோக ஆரம்பிக்கும்போது பிராணமய கோசமும் ஸ்தூல சரீரத்தை அனுசரித்து அழிவுபடும். ஸ்தூல சரீரம் எவ்வளவு விரைவாக அழிவுபடுமோ அவ்வளவு விரைவாக இதுவும் அழிந்துபோகும். ஸ்தூலசரீரம் அங்கியால் எரிக்கப் பட்டு சாம்பலாகப்போனல், பிராணமய கோசமும் அடியோடு நசித்துபோகும். சாஸ்திரங்களில் சவத்தை நெருப்பிலிட வேண்டுமென்று விதிக்கப்பட்டிருப்பதற்கு இதுவே முக்யகாரணம். பூமியிற் புதைத்தால் ஸ்தூல சரீரம் ஜீரணமாகச் சில காலமாகும். அதனல் பிராணமயகோசம் அழிவதற்குத் தாமதமாகும்.

மனோமயகோசம்.

மனோமய கோசம் ராகத்வேஷாதிகளான எல்லா மனோ வ்ருத்திகளுக்கும் இருப்பிடம். இதில் இரண்டு பேதங்கள் உண்டு. ராகத்வேஷத்திற்கு இருப்பிடமான காமவிகாரமாகிய

காமசரீர மொன்று; மற்ற மனோவ்ருத்திகளுக்குக் காரணமாகிய மனோமய சரீரம் இரண்டாவது. உலகத்தில் ஸாமான்ய ஜனங்களுக்குள் எல்லாவியாபாரங்களும் ராகத்வேஷங்களுடன் கூடியிருப்பதால், இவ்விரண்டு சரீரங்களும் ஜாக்கிரதாவஸ்தையில் கலந்தே நடைபெற்றுக்கொண்டிருக்கும். இது யோக திருஷ்டிக்கு மாத்திரம் காணப்படும். அது அநேக வர்ணங்களாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. மனோவ்ருத்திகள் மாறுவதுபோல இதன் வர்ணங்களும் மாறிக்கொண்டிருக்கும். அது அன்னமய பிராணமயகோசங்கள் இரண்டினுள்ளும் இருந்து வியாபித்து, அவைகளுக்கு வெளிப்புறமும் கொஞ்சதூரம் வரை பரவியிருக்கும். குழந்தைகளுக்குள் மனோவிகாரம் இல்லாமையால், அவரது காமமய சரீரம் ஸாதாரணமாக சுத்தமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும். ராகத்வேஷம் அதிகமாக அதிகமாக, இந்த சரீரத்தில் அதற்கு அனுகுணமான வர்ணங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். இந்தக்கோசம் எல்லாருக்கு மிருந்தாலும் அநாகரிகரிடம் விளக்கமாக ஏற்படாது; சிதருண்ட மேகம்போல ரூப மேற்படாதிருக்கும். ஞானம் அதிகமாக வாக விளக்கமாகிய ரூபம் ஏற்பட்டு, உருண்டை வடிவாகத் திரளும்.

முதலில் ஜீவன் விசேஷமாக காமக்ரோதாதிகளுக் குட்பட்டு இருப்பதால், அவைகளுக்கு அனுரூபமான வர்ணங்கள் இதில் பொருந்தியிருக்கும். காமம் எழுந்தவுடன் கலங்கலான இரத்த வர்ணம் ஏற்படும். இந்த வர்ணம் தன்னயத்தைக் குறிப்பிக்கும். மிக்க கோபம் ஏற்பட்டால், நல்ல ரக்த வர்ணமுள்ள ஈட்டிபோன்ற ரூபங்கள் இதிலிருந்து புவர்லோகத்தில் வெளிப்படுமென்றும், புவர்லோக ப்ரக்ருதி விகாரமான இந்த ரூபம் அந்த குரோதத்திற்குக் காரணமானவனது மனோமய கோசத்தைத் தாக்கி, அதற்குக் கெடுதலை விளைவிக்குமென்றும் யோகதிருஷ்டி யுள்ளவர்கள் சொல்லுகிறார்கள். காமம் பிறந்தவுடன் அந்த எண்ணங்களும் ரூபத்தைத் தரித்துப் பிறருடைய மனோமய கோசத்தைத் தாக்குமென்பர். பற்றற்ற அன்பு பிறந்தால், திவ்யமான ரோஜாப்பூ நிறமான ரூபங்

கள் தோன்றுமென்பர். பிரேமாதிசயங்களால் தாய் பிள்ளை களைக் கையிலெடுத்து முத்த மிட்டுக்கொள்ளும் சமயத்தில், இந்த கோசம் முழுவதும் ரோஜாவர்ணம் அடைந்து, வட்ட வடிவான தேஜோ ரூபங்கள் சரீரத்தில் நிறைந்திருப்பனபோ லக் காணப்படுமாம். பெரிய லோபியின் சரீரம் ஆபாசமான கலங்கிய வர்ணமடைந்து, இந்த சரீரத்தைச்சுற்றி இரும்புக் கட்டுகள் கட்டப்பட்டதுபோல் காணப்படுமாம். இப்படி ஒவ்வொரு மனோவ்ருத்தியும் எழுந்தவுடன், அதற்கு அனுரூப முள்ள வர்ணங்களும் எற்படும். இதுபோலவே காட்டு மனித ரது சூக்ஷ்ம சரீரமும் ஆபாசமான வர்ணங்கள் அடைந்திருந் தாலும், ஞானவிர்த்தி யடைந்து, இந்திரிய மனோ நிக்ரகங்கள் எற்படவே, இந்த சரீரம் மிக்க ரம்யமான வர்ணங்கள் அடை ந்து, பார்ப்பதற்கு இன்பமாய் இருக்கும். ரக்தவர்ணம், கல ங்கிய வர்ணம், முதலாகிய ஆபாச வர்ணங்கள் மாறிப்போய், பிரேமாதிசயத்தைக்காண்பிக்கின்ற ரோஜாப்பூவர்ணமும், புத்தி விசாலத்தைக்குறிக்கும் பொங்நிறமும், பக்தியை வெளிப்படுத் தும் நீலவர்ணமும், அருளைக்காட்டும் பச்சிலைநிறமும் முத லான மனோகரமான வர்ணங்களால் அது நிறைந்திருக்குமாம்.

அதனல் முதலில் நாகரிகருள் இக்கோபம் ரூபம் இன்றி வெறுக்கத்தகுந்த வர்ணங்கள் அடைந்திருக்கும். மனிதன் ஞான பரிபக்குவமடைய அடையவே இச்சரீரம் நன்ருய் உரு ண்டைபோல் திரளும். அதில் கட்கினிய வர்ணங்களும் ஏற்ப டும். அப்பு தத்வ ப்ரக்ருதியிலும் ப்ரதிவி தத்வ ப்ரக்ருதியிலும் இருப்பதுபோல இதிலும் அநேக ஸ்தூல சூக்ஷ்ம தாரதம்யங் களான ப்ரக்ருதி பாகங்களிருக்கின்றன. அந்த ஸ்தூல ப்ரக் ருதி சமுதாயங்கள் வெறுக்கத்தக்க வர்ணங்களை அடைந்திருக் கும். அவை சூக்ஷ்மங்கள் ஆக ஆக, மனோஹரமான வர்ணங் களைக் கொள்ளும். காமக்குரோதங்கள் நிறைந்த மனோவ்ருத் திகள் பிறக்கும்போது, அவை ஸ்தூல ப்ரகிருதியை கிரகித்து ரூபத்தைத் தரிப்பதால், சுற்றிலும் கலங்கிய வர்ணங்களுடன் கூடியிருக்கும். மனோவ்ருத்திகள் பரிசுத்தமடைய அடைய,

அவை சூக்ஷ்மமான ப்ரக்ருதி பாகங்களை அடைந்து, ரூபங்களைத் தரிப்பதினாலே, அவற்றின் வர்ணம் ரமணீயமா யிருக்கும். ஆகையால் காமக்ரோதங்களை ஜயித்து, இந்திரிய மனோ நிக்ரகங்களை அனுசரித்துவர வர, இந்த சரீரம் பரிசுத்த மடைந்து ரமணீய நிறங்களைக் கொள்ளும்.

இந்த சூக்ஷ்ம சரீரம் ஜீவனுக்கு மேல் லோகங்களின் (புவராதிலோக) அனுபவங்கள் கிட்டுவதற்கு ஏற்பட்டுள்ளதென்று சொல்லப்படுகிறது. முதல்முதல் ஜீவனுக்குக் கிடைக்கும் அனுபோகங்களெல்லாம் வெளியான இப்பூலோக விஷய அனுபவங்களாகவேயிருக்கும். இந்திரியகோளங்கள் ஸ்தூலசரீரத்தில் இருக்கின்றனவல்லவா? ஆயினும் இந்திரியங்கள் சூக்ஷ்ம ரூபமாக இந்த சரீரத்திலுள்ளன. வெளிவிஷயங்களால் ஸ்தூல சரீரத்திலுள்ள கோளங்களுக்கு ஸ்பர்சமுண்டாகவே, அவை மூலமாக ஸ்தூலசரீரத்திலுள்ள நாடிகள் சிலவற்றில் அதி சூக்ஷ்மமான அசைவு ஒன்று ஏற்பட்டு, மூளையில் சேர்ந்து சூக்ஷ்ம சரீரத்திலுள்ள இந்திரியங்களைத்தாக்கும். இந்திரியங்கள் அசைவுபெற்றவுடனே ஜீவனுக்கு விஷயஞானமுண்டாகும். இம்மாதிரியாக சூக்ஷ்ம சரீரம், ஸ்தூலசரீரத்திற்கும் ஜீவனுக்கும் தொடர்பு ஏற்படுத்தி, வெளிப்பிரபஞ்ச ஞானத்தை ஜீவன் அடையும்படி செய்யும். ஆனாலும் ஸ்தூல சரீரம் தூங்கும் தருணத்தில், சூக்ஷ்மசரீரம் ஸ்தூல சரீரத்தைவிட்டு நீங்கியிருக்கும். ஞானக்குறைவுள்ள மனிதரிடம், இந்த சூக்ஷ்மசரீரம் புவர் லோகத்தில் அனேகமாய் யாதொரு வியாபாரமுமில்லாமல் பக்கத்திலேயிருக்கும். அவன் ஸ்தூல தேக அவயவங்களை அடைந்திருந்தாலும், பூலோகத்தில் சஞ்சரிக்கமுடியாமல் படிந்து கிடப்பதுபோல, ஞானஹீனனுடைய சூக்ஷ்ம சரீரமும் புவர்லோகத்தில் திரியமுடியாமல் படிந்திருக்கும். ஞானம் வ்ருத்தியடைய அடைய அவனுக்கு அந்த லோகத்தில் சரிப்பதற்கு, சக்தி வந்துகொண்டிருக்கும். இப்போது நாகரிகராகி ஞான வ்ருத்தியடைந்துள்ள எல்லாருக்கும் தூங்கும் காலத்தில் சஞ்சரித்து அந்த லோகானுபவங்களை அடையும் சக்தி இந்த சரீரத்தினால்தான் உண்டாகிறது. முன்னாலடைந்த ஞானபி

வ்ருத்திக்குத் தகுந்தபடியே இந்த சுதந்தர சஞ்சார சக்தியானது வ்ருத்தியாகின்றது. விழித்துக்கொள்ளும்போது அவ்வனுபவங்கள் முதலில் ஞாபகத்திற்குவருவது அரிது. சிறிதுசிறிது ஞாபகத்திற்குவந்தால், அதுவே சொப்பன மெனப்படும். முதலீறு இல்லாத அசங்கதமான சொப்பனங்கள் மாத்திரம் அவ்வாறல்ல. அவை ஸ்தூல சரீரத்தில் எழும் அஜீர்ணாதி விகாரங்களால் ஏற்படுபவை. அவற்றின் ஸ்வரூபத்தைப் பார்த்தாலும் அது சரியான சொப்பன மில்லை என்று குறிப்பிடலாம். அவையில்லாத மற்ற சொப்பனங்களெல்லாம், ஸூக்ஷ்ம சரீரத்தில் ஜீவனுக்கு உண்டாகும் அனுபவங்களே யாகும். விழிக்கும் சமயத்தில் மாத்திரம் கொஞ்சம் ஞாபக மிருப்பதுபோல் தோன்றும். அதை ஞாபகத்திற்குக் கொண்டுவர முயன்றால் அச்சிறிதும் மறந்துபோகும். படிப்படியாக ஞாபகத்திற்கு வருவது, வ்ருத்தியாகிக் கொண்டுவந்தால் ஜீவனிடம் தப்பாமல் சாதன சதுஷ்டய சம்பத்துண்டாகும். அவன் பரம குருக்களது ஸான்னித்யத்தை அடைவான். அவரது அனுக்கிரகத்தால் அறிந்து செய்யும் யோகாப்பியாச பலத்தினால் குண்டலினி சக்தி அவனிடம் உத்பத்தியாகி ஸப்த சக்ரங்களும் பக்குவமடையும். பின்பு புவர்லோகானுபவங்களை ஸூக்ஷ்ம தேகத்தில் பெற்று, அவ்வனுபவங்களைப் பூரணமாக ஜாக்ரதாவஸ்தையில் நினைத்தமாத்திரத்தில் ஞாபகத்திற்குக் கொணரும் சக்தி அவனுக்குண்டாகும்.

ஜாக்ரதாவஸ்தையில் ஞாபகத்திற்கு வராமல் இருந்தாலும், புவர்லோகத்தில் சஞ்சரிக்கும் சக்தியை யுடையவரெல்லோரும் நித்திரையில் அந்தலோகத்தில் சஞ்சரித்து, அவரவர்கள் ஜாக்ரதாவஸ்தையில் நினைத்த வேலைகளைச் செய்கிறார்கள். அவர்கள் ஜாக்ரதாவஸ்தையில் லோகோபகாரத்தைக் கோரினால், நித்திரையில் புவர்லோகவாசிகளுக்கு அம்மாதிரி உபகாரத்தைச் செய்வர். அப் புவர்லோக வாசிகள் பூலோகத்தில் வசித்துக்கொண்டிருந்து, தூக்கத்தில் புவர்லோகத்திற்குப் போனவராயினுஞ்சரி, அல்லது மரணத்திற்குப்பின் புவர்லோகத்தில் வசிப்பவராயினுஞ்சரி, அவர்களெல்லோருக்கும் அன்

ணேர் சகாயம் செய்யக்கூடும். அவர்களுக்கு பரோபகார புத்தி வ்ருத்தியாகஆக, பரமகுருவாவது அவர்களுடைய சிஷ்யர்களாவது அவரைக் கைகொடுத்து, புவர்லோகத்தில் செய்யத்தகும் வேலைகளை அவருக்கு நியமித்து, லோகோபகாரஞ் செய்துவர அவகாசம் கொடுப்பார்கள். ஆதலால் பரோபகார புத்தியை ஜாக்ரதாவஸ்தையில் வ்ருத்திசெய்து வந்தால், நித்திராகாலங்களை வீணுகப் போக்காமல் லோகோபகாரத்தில் செலுத்துவதற்கு அவகாசம் கிடைக்கும். அவ்வித புத்தியை நாம் எல்லோரும் வ்ருத்தி செய்துகொள்ளுவதும் தவிர, பாலர்கட்கும் அதைப் பயிற்றிவர வேண்டும்.

ஜீவித காலத்தில் இந்த சூக்ஷ்ம சரீரம் ஸ்தூலசரீரத்தின் பிரதிபிம்ப ரூபமாகவிருக்கும். மரணத்திற்குபின் ஸ்தூல சரீரத்தை விட்டு நீங்கியபிறகு, இந்தக் காமமய சரீரம் வேறு ரூபத்தையடையும். பூலோக பிரகிருதியில் ஸ்தூல சூக்ஷ்ம தாரதம்யம் இருப்பதுபோல, புவர்லோகப் பிரகிருதியிலும் ஸ்தூல சூக்ஷ்ம தாரதம்யங்கள் ஏழு உள்ளன. பிரேதமானவன் புவர்லோகத்தைச் சேர்ந்தவுடன், அவனது காமமய சரீரத்தில் புவர்லோக ப்ரகிருதி, ஸ்தூல சூக்ஷ்ம தாரதம்யமாக, ஏழுவிதங்கள் ஏற்பட்டு, ஸ்தூல பாகம் வெளிப்புறமாகவும், அதைப்பார்க்கிலும் சூக்ஷ்ம பாகங்கள் உட்புறமாகவும் இவ்வாறு ஏழு அடுக்குகளாக அமைகின்றன. இப்படி மாறுபாடடைந்த சரீரத்தையே யாதனுசரீர மென்று ஹிந்து சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

ஜீவன் பூலோகத்தில் இருக்குங்காலத்தில் ஒன்றுமறியாதவனுய், காமக்ரோதாதிகளுக்கு முழுவதும் உட்பட்டு, கேவல விஷயங்களில் ஆசையுடையவனுய் இருப்பதால், அவனது இச்சைகளுக்கு அனுகுணமாக ஸ்தூல அணுக்கள் அவனுடைய காமமய சரீரத்தில் மிகுதியாகச் சேர்ந்து, முதலடுக்கு மிகுந்த கடினமுள்ளதாகும். அதற்கு மூலமான காமங்களின் பலனெல்லாம் ஜீவன் அனுபவிக்கும்வரை, அந்த மேலடுக்கு திடமாக

விருக்கும். அவனது அனுபவங்கள் பூர்த்தியானவுடன், அந்த அடுக்கு அழிந்துபோய் மீதியுள்ள அடுக்குகளே நிற்கும்.

சாமான்ய விஷய வாசைகளெல்லாம் தாரதம்ய கிரமத்தினால் மற்ற மூன்று அடுக்குகளோடு சம்பந்தித்து, அவைகளும் கிரமமாக அனுபவத்தினால் நசித்துபோகும். இந்த நான்கு அடுக்குகளும் நசிக்கும்வரை ஜீவனுக்குப்பிரேதம் என்ற நாமம் இருக்கும். அதன்பிறகு ஜீவன் பிதிர்லோகத்தைச்சேரும். இந்த அடுக்குகள் ஏற்பட்ட பிறகு, ஜீவன் அவற்றில் சிக்கி அவை அழியும்வரை அவற்றில் நிற்பந்தமாக இருந்து, அனுபவித்துக்கொண்டிருக்கும். ஒரு வருஷம்வரை செய்யும் உத்தரகிரியைகள் இந்த தசையிலிருக்கும் ஜீவனுக்கு சகாயமானவை. ஜீவனுக்கும் பந்தங்களாக விருக்கும் மேற்கூறிய முதல் நான்கு அடுக்குகளையும் அவை நசிக்கச்செய்து, பிரேதத்துவத்தை விடுத்து, ஜீவனை பிதுர்லோகத்தை அடையச்செய்யும். இதனால் அவை மிக்க உபயோகமுள்ளவை. இவ்விஷயத்தில் மற்றும் சிலபாகங்கள் அறியத்தக்கன.

இந்த சரீர விஷயத்தில் ஒரு ரகசியமுள்ளது என்று ஞானிகள் கூறுவர். காமமய சரீரம் நமது காமங்களுக்கு உதவியாக ஏற்படுகின்றது. திட மனதினால் அதை வசப்படுத்திக் கொள்வதற்கு மனிதனிடம் சக்தியுண்டு. தனக்கு மரணாந்திரத்தில் இவ்வாறு நிற்பந்தமான அடுக்குகள் ஏற்படாமலிருக்க வேண்டுமென்ற எண்ணத்தை ஜீவன் மரணகாலத்தில் மறவாமல், திடமாக மனதில் நிச்சயித்துக்கொண்டால், புவர்லோகத்தில் இதற்கேற்ற அடுக்குகள் ஏற்படும். அப்போது அவனது சரீரம் பந்தங்களுக்கு உட்படாமல், பூர்வ ரீதியாகவேயிருக்கும். அவன் புவர்லோகானுபவங்களை எப்போதும்போல அனுபவித்துக்கொண்டிருந்தாலும், தன்னைத்தான் அறிந்துகொண்டு ஸ்வதந்திரமாக அனுபவிக்க இடம் அவனுக்கு ஏற்படும். இல்லாவிடில் அவ்வடுக்குகள் ஏற்பட்டு, அவற்றில் சிக்கி ஒன்றும் செய்யத்தோன்றாது ஜீவன் விழிக்கும். அவனுக்கு அனுபவமானது எப்போதும் தப்பாது. ஆயினும் ஸ்வதந்திரமாக

அனுபவிப்பதிலும், பாதந்திரமாக இருப்பதிலும், விசேஷ பேதங்கள் இருக்கின்றன. ஜீவன் இந்த லோகத்தில் துக்கத்தையடைந்தபோது, அதற்குட்பட்டு அக்ஞானத்தால் ஒன்றையு மறியாமல், பாதந்திரனுய் அதை அனுபவிக்கக்கூடும். அன்றி விவேகமுண்டாகி, மனோதைரியத்தால் ஸ்வதந்திரனுக அதை அனுபவித்துத் தன் விவேகத்தை வ்ருத்தி செய்து கொள்ளக்கூடும். இந்த இரண்டுவழிகளுக்கும் தாரதம்யங்கள் இருப்பதுபோல, புவர்லோகத்தின் அடுக்குகளில் சிக்கி அனுபவிப்பதற்கும், அவைகளினின்றும் தப்பித்துக்கொண்டு ஸ்வதந்திரமாக அனுபவிப்பதற்கும் தாரதம்யம் உளது. விவேகிகள் இந்த ரகசியத்தை மனதில் வைத்துக்கொண்டு, மாண காலத்தில் அதை உபயோகப்படுத்தவேண்டும்.

மனோமய சரீரம்.

மனது சுத்த மனதென்றும், அசுத்த மனதென்றும் இருவகைப்படும். அசுத்த மனதென்றால் காமச்சேர்க்கையுள்ளது. அது எப்போதும், காமத்துடன் கலந்து, காமத்திற் குட்பட்டு காமத்தை நிறைவேற்றும்படி வேலைசெய்கிறது. சுத்த மனது காமத்தைநீக்கி, ஞானத்திற்கு சாதனமாகவுள்ளது. மனதிற்குச் சமானமான சாதனம் ஜீவனிடம் வேறொன்றுமில்லை.

"கிமிதாச் சேதஸ் ஸமம் ஸாதனம்."

அசுத்தமனது காமச்சேர்க்கையுள்ளது; இதுவே மேற்கூறிய காமமய சரீரம். மனோமய சரீரமென்பது ராகத்வேஷங்களின் சேர்க்கையில்லாத சங்கற்பங்களுக்கு இருப்பிடமாயுள்ளது.

இந்த சரீரம் சுவர்க்கலோக சம்பந்தமான தேஜஸ்தத்துவத்தின் ஸ்தூல பாகத்தால் நிர்மிக்கப்பட்டுள்ளது. மேற்சொல்லியபடி சாமான்ய ஜனங்கள் ராகத்வேஷங்களுக்குள்ளாகி ப்ரவர்த்தித்துக் கொண்டிருப்பர். அச்சமயங்களில், காமமய,

மனோமய சரீரங்கள் இரண்டும் சேர்ந்தே பிரவர்த்தித்துக் கொண்டிருக்கும். மனதில் சங்கற்பங்கள் ஏற்பட்டவுடன் அவ்விரண்டிலும் விகாரங்கள் ஏற்படும். ராகத்வேஷங்கள் நீங்கிய வ்ருத்திகள் ஏற்பட்டால், அவை மனோமய சரீரத்தில் மாத்திரம், அசைவு உண்டாக்கி அதை மாறச்செய்யும்.

மனோமய சரீரம் ஜீவனுக்கு வெகு முக்யமான உபாதியாகும். மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் உள்ள தாரதம்யம் மனதினால்தான் உண்டாகின்றது. இந்திரியங்களும், இந்திரிய வியாபாரங்களும் விலங்குகளிலும் காணப்படுகின்றன. ஆகாரம், நித்திரை, பயம், விழைவு முதலியன மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் பொதுவானவை. நன்மை தீமைகளை ஆலோசித்தறிவது, முன்பின்னறிந்து செய்வது, தன் சுபாவத்தைச் சிறிது சிறிதாக மேன்மைப்படுத்திக்கொள்வது, பரிசுத்தமாகத் தன்னைச் செய்துகொள்வது, தனது ஸ்வரூபத்தையும், இகபரலோகாதி ஜகத் ஸ்வரூபத்தையும், ஈஸ்வர ஸ்வரூபத்தையும் அறிவது முதலிய இவையெல்லாம், மனிதரது வியாபாரங்கள். இவை மிருகங்களுக்கு அசாத்யமானவை. இவை எல்லாவற்றிற்கும் மனது சாதனம். அதனாலேயே, "கிமிதரச்சே தஸ்ஸமம் ஸாதனம்" என்று அனுபவிகளான பெரியோர்கள் கூறுவார்கள்.

ஜீவனுடைய பரிபக்குவ ஸ்திதியை அனுசரித்து அவர்களுடைய மனோமய கோசங்கள் முக்யமாக மூன்று விதங்களாக அமைந்திருக்கும். (1) ஸாமான்ய ஜனங்களின் மனோமய சரீரம். (2) புத்தி விசாலமடைந்து கொஞ்சம் நாகரிகரான ஜீவரது மனோமய சரீரம். (3) ஞானியினுடைய மனோமய சரீரம்.

ஸாமானியரது மனோமய சரீரம்.

கேவலம் ஒன்றும் தெரியாதவர்க்கு காமமய சரீரம் ஒரு ரூபமுமில்லாமல் இருக்குமல்லவா? அவரது மனோமய சரீரமும் அதோடு சேர்ந்தே, சிதறியடிக்கப்பட்ட மேகம்போல்

இருக்கும். ஆயினும் மிருகத்தைக் காட்டிலும் மனிதனுக்கு "வேதச்வஸ்தனம், வேத லோகாலோக:" (நாளை வருவது தெரியும், பார்த்ததும் பார்க்காததும் தெரியும்) என்று சொல்வது போல, மனிதனிடம் பூர்வ ஸ்மரணமும், முன்யோசனையும் கொஞ்சம் உண்டாகி, அவன் அவைகளைப் பல ஜன்மங்களிலும், மாறி மாறி அனுபவித்துவர படிப்படியாய் அவனது மனோமய கோசத்திற்கு ரூபம் ஏற்பட்டு வரும்.

இவ்வித அனுபவத்தால் ஞானம் அதிகமாக வ்ருத்தியாகும்வரை, இந்த மனோமய சரீரம் காமமய சரீரத்துடன் கூடியே வர்த்தித்துக்கொண்டுவரும். மரணாந்தரத்தில், மிகவும் சொற்பகாலத்தில் ஜீவனுக்கு சுவர்க்கலோகவாசம் ஏற்படும். அவனது மனோமய சரீரம் அநேகமாய் காமமய சரீரத்திற்குப் ப்ரதிபிம்பமாகி, அதைப்போல வர்ணங்களும், ரூபங்களும் கொண்டிருக்கும்.

புத்தியதிகமுள்ள நாகரிகரது மனோமய சரம்.

இவ்வித மனிதரும் அதிகமான ராகத்வேஷங்களோடு கூடியே பிரவர்த்திக் கொண்டிருப்பா ராதலின், அவருக்கும் காமமய மனோமய சரீரங்கள் இரண்டும் ஜாக்கிராதாவஸ்தையில் ஸாதாரணமாகக் கூடியே வர்த்தித்துக்கொண்டிருக்கும். ஆயினும் அவர் ராகத்வேஷங்களை நீக்கி, கிரந்த காலக்ஷேபமும், பகவத்யானமும், லோகோபகார எண்ணம் முதலிய வியாபாரங்களும் அதிகமாகச் செய்துகொண்டிருப்பா ராதலின், அவரது மனோமய சரீரம் படிப்படியாக ரூபத்தை அடையும். அதன் வர்ணம் அந்தந்த மனோ எண்ணங்களுக்கு அனுகுணமாக மாறிக்கொண்டு, கிரமமாக ரமணீயமானதாகும். மேற்கூறியபடி, நித்திராகாலத்தில் காமமய சரீரத்தில் அவருக்கு ஸ்வதந்திர பிரவர்த்தி யிருக்குமேயன்றி, மனோமய சரீரத்தில் அவ்வித பிரவிர்த்தி யிராது. ஸாமான்யமான காமமய சரீரத்தி லுள்ளதுபோல, அவருக்கு இந்த மனோமய சரீரத்தில் வியாபாரமிராது.

நிவர்த்தி மார்க்கத்தில் நடப்பவரது மனோமய சரீரம்.

இவரது மனோமய சரீரத்தில் மேலேகூறிய இரண்டு சரீரங்களில் உள்ளதைக்காட்டிலும், ரூபம் நன்றாய் ஏற்படும், வெகு மனோகரமான வர்ணங்கள் பொருந்தியுமிருக்கும். ராஜஸ தாமஸ குணங்களுள்ள சங்கற்ப ரூபத்தால் ஸ்தூல பிரகிருதி சேர்க்கப்படுமென்றும், ஸத்வகுண சங்கற்பத்தினால் சூக்ஷ்ம பிரகிருதி சேர்க்கப்படுமென்றும், காமமய சரீர விஷயத்தில் சொல்லப்பட்டன அல்லவா? மனோமய சரீரத்திலும் அவ்வாறே வர்ணங்கள் ஏற்படும். அதனால் மனிதரிடம் ஞானம் வ்ருத்தியாகி ஸாத்விகச் செய்கைகள் அதிகமாகிக் கொண்டுவர, இந்த சரீரம் வெகு ரமணீயமாகி, அந்தந்த வ்ருத்திகளுக்கு அனுகுணமான வர்ணங்களை அடையும்.

விக்ஞானமய கோசம்.

இது முற்கூறிய ஜீவனது சரீரங்களெல்லாவற்றிலும் சூக்ஷ்மமானது. மற்ற சரீரங்கள் பிறப்புத்தோறும் வேறு வேறாகப் புதிதாக நிர்மாணிக்கப்படும். இந்த சரீரங்களால் ஜீவன், பூ, புவர், சுவர்லோகங்களுடன், சம்பந்தமுடையவனாவான். இந்த மூன்று லோகங்களிலும் ஜீவன் சம்சார சக்கரத்தில் அகப்பட்டுத் திரிந்துகொண்டிருப்பான். பூலோகத்தைவிட்டு புவர்லோகமும், அதைவிட்டு சுவர்லோகமும், அதிலிருந்து மறுபடியும் புவர்லோக பூலோகங்களில் வந்துகொண்டிருப்பான். இம்மூன்று லோகங்களுக்கும் அப்பால், மஹர்லோகம் இருக்கிறது. அது தேஜஸ் தத்துவத்தின் சூக்ஷ்ம பாகங்களால் ஆக்கப்பட்டுள்ளது. விக்ஞானமயகோசமும் அவ்வித சூக்ஷ்ம பாகங்களினால் நிர்மிக்கப்பட்டுள்ளது. அது முட்டை போன்ற ரூபம் உடையதாய் இருக்கும். சுவர்லோகத்தில் அம்மய சரீரம் (இறந்தவனது மனோமயகோசம்) நசித்துப்போனவுடன், ஜீவன் மஹர்லோகத்தை அடையும். அப்போது ஜீவனுக்குள்ள சரீரந்தான்; விக்ஞானமயகோசம் எனப்படும். விக்ஞானமய கோசத்தில் வர்த்திக்கும் சைதன்யமே ஜீவனெனப்படும். இந்த கோசம் ஜன்ம ஜன்மத்திற்கும் மாறாது.

ஒவ்வொரு ஜன்மத்திலும் உண்டான அனுபவங்களிலிருந்து கிரகிக்கப்பட்ட ஞானஸார மனைத்தும் இதில் சேரும். ஸாமான்ய ஜனங்களுக்குள்ள ஞானம் சிறிதே ஆதலால், அவர்களிடம் இக்கோசம் வர்ணமில்லாதிருக்கும். காம க்ரோதாதி விகாரங்களும், காமம் நிறைந்த மனோ எண்ணங்களும் இக்கோசத்தை அணுகா. நிஷ்காமமாயும் ஸாத்விகமாயுமுள்ள மனோவ்ருத்திகளாலும், நல்ல நூல் ஆராய்ச்சிகளாலும் உண்டாகும் ஞானம் பெருகப்பெருக, இக்கோசம் திவ்ய வர்ணங்களோடு பிரகாசிக்கும். இந்தக்கோசம் மற்ற எல்லாக் கோசங்களிலும் வியாபித்து அவைகளின் வெளியிலுங் காணப்படும்.

தத்துவ ஞானமும், பாரமார்த்திக புத்தியும் மனிதரிடம் வளர வளர, இக்கோசம் மிகுந்த தேஜோவந்தமான வர்ணங்களை அடைவது மல்லாமல், பெரிதாகவும் வளர்ந்துகொண்டு வரும்.

முக்தி பதவி நெருங்கிய மஹான்களுடைய கோசம் வெகுதூரம்வரை வியாபிக்கும். அதில் காணப்படும் வர்ணங்களும் பூலோகத்தில் ஒருபோதும் காணக்கூடாத அவ்வளவு அபூர்வமானவையாக இருக்குமென்று அதை அனுபவித்த யோகிகள் எழுதியிருக்கின்றனர்.

இகலோகத்திலாவது பரலோகத்திலாவது தன் நன்மையையே குறித்துச்செய்யும் காரியம் ஒன்றும் இக்கோசத்தை விகசிக்கச்செய்யாது. நிஷ்காமமான வ்ருத்திகளும், நல்ல நூல் ஆராய்ச்சிகளுமே இதை வ்ருத்தியடையச்செய்யும். பரோபகார சிந்தை உடையவராய், பகவத்தியானம் செய்துகொண்டு, சமதமாதி சாதனங்களைச் சம்பாதித்துக்கொண்டு வருகிறவர்களுக்குத்தான் இந்த சுகம் கிடைக்கும். மற்ற வியாபாரங்களெல்லாம் அழிவுள்ள பலனைக்கொடுத்து சம்சார சக்கரத்திலேயே மனிதனை அழுந்தச்செய்யும்.

ஆதலின் இதைத் திடமாகத் தெரிந்துகொண்டு, அழிவற்ற பலனைக்கொடுக்கும் மார்க்கங்களைக் கைக்கொண்டு பரம புருஷார்த்தத்தை யடைந்து லோகோபகாரிகள் ஆவதற்கு எல்லாரும் முயல்வாராக.

காரண சரீரம்.

இதுவே ஆநந்தமய கோசமென்று வேதாந்த கிரந்தத்தில் சொல்லப்படுகிறது. இது வாயு தத்வ பிரகிருதியால் ஆக்கப் பட்டது. ஸாமான்ய ஜனங்களிடம் இது மிகவும் சிறிதாக இருக்கும். ஜீவன் பரிபச்குவ நிலைக்கு வரவர, அவரிடம் ஆத்மச்ஞானம் வ்ருத்தியடைய அடைய, இந்த சரீரம் மகா பிரகாசமுள்ளதாகும் ஆத்மச்ஞானமென்றால் 'எல்லா பூதங்களினுமுள்ள ஆத்மாவும், தன்னிடமுள்ள ஆத்மாவும் ஒன்று' என்ற ஞானமும், நானாவித தத்வங்களில் ஏகத்வத்தை பார்ப்பதும் தான். முதன்முதல் இந்த ஞானம் பரோக்ஷமாக இருக்கும். அது யுக்தி யுக்தமாகத் தோன்றினாலும், அனுபவத்திற்கு வராது. இந்த உபாதி பரிபச்குவமடையுங்காலத்தில், வேறு வேருகக் காணப்படும் எல்லாவற்றிலும் ஜீவனுக்கு ஏகத்வஞ் ஞானம் ஏற்படும். அவனிடமிருந்த பின்னபாவம் பூர்த்தியாக நசித்துப்போகும். சோக மோகங்களும் வேருடன் கெட்டுப் போய்விடும்.

எல்லா உயிரும் எனதுயிர்போல் என்னுயிர்தான்
எல்லா உயிர்போல் எனக்காணும்—சொல்லார்ந்த
யோகம்சேர் நன்றெஞ்சன் எவ்விடத்தும் ஒத்துயிர்கள்
ஏகம் சேர் வண்ணமறிந்து ஏய்ந்து.

என்தன்மை யாலுயிர்கள் எங்குமெனைக் கண்டவர்றைத்
தன்தன்மையால் என் பால்தான்காண்பான்—சிர்தையினில்
நான் தோன்ருவாறு இல்லை நன்குணர்ந்தான் தன்னிடையில்
தான் தோன்ருவாறில்லை தான்.

எங்கு நிகழ்ந்திருக்கும் என்தன்னை ஏகமாத்
தங்கும் சமனினைவான் தான்உணர்ந்தான்—அங்கங்கே
எவ்வாறு இயன்றிடினும் யோகிஅவன் என்னிடையில்
அவ்வாறு இயன்றவனே யாம்.

தன்னெத்த எவ்விடத்தும் மன்னு சமமாக
மன்னெத்த இன்பம் வளர்துன்பம்—உன்னலுறில்
ஆங்கவனே சால அதிநாம யோகியென
ஓங்கறிவார் தாமதிப்பர் உற்று. கீ. வெ. அத். VI 26 to 28.

7-வது அத்தியாயம்.

ம ன ஸ்.

𑌮𑌨𑍋 𑌹𑌿 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌚𑌾𑌶𑍁𑌦𑍍𑌧𑌮𑍇𑌵 𑌚
𑌅𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌕𑌾𑌮𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑌂 𑌶𑍁𑌦𑍍𑌧𑌂 𑌕𑌾𑌮𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ।
𑌮𑌨 𑌏𑌵 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌬𑌨𑍍𑌧𑌮𑍋𑌕𑍍𑌷𑌯𑍋𑌃
𑌬𑌨𑍍𑌧𑌾𑌯 𑌵𑌿𑌷𑌯𑌾𑌸𑌕𑍍𑌤𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑍈 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌷𑌯𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥

அமிர்தபிந்து உபநிஷத்

தாத்பர்யம்:—மனஸ் சுத்தமென்றும் அசுத்தமென்றும் இரண்டு விதமுண்டு. காமச்சேர்க்கையுள்ளது அசுத்தமென்றும், காமச்சேர்க்கை இல்லாதது சுத்தம் என்றும் செப்பலாம். ஜீவனது பந்தமோக்ஷங்களுக்கு மனதே காரணம். மனது விஷயவாசை கொண்டபோது, பந்த காரணமும், விஷய வாசையின்றி ஈச்வர வழிபாட்டிலுள்ள போது மோட்சகாரணமும், ஏற்படுகின்றனவென்று சுருதி முறையிடுகின்றது.

இப்படி ஜீவனுக்கு பந்தமோக்ஷங்கள் இரண்டிற்கும் காரணமாகின்ற மனஸைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். ஜீவன் தேஜஸ் தத்துவப் பிரகிருதியினுல் செய்யப்பட்ட சரீரத்தைத் தரித்து, அந்த சரீரத்தில் வர்த்திக்கும்போது, மனஸின் சக்தியை உபயோகிப்பான். அதனுல் மனோமய விக்ஞானமய கோசங்களில் வர்த்திக்கும் ஆத்ம சக்தியே, மனஸ் எனப் பெயர் பெறுகின்றது.

மனஸ் என்ற சப்தம் மன் என்ற தாதுவிலிருந்து உத்பவித்து, அறியும் சக்தியெனப் பொருள்படும். அதாவது ஜீவனது ஞான சாதனத்திற்கு முக்கியமான காரணம். இதனுல் அது அந்த:கரணம் எனவும் படும். ஜீவன் வெளிப்பிரபஞ்ச ஞானத்தையடைவதற்கு மனஸென்ற சாதனத்தை உபயோகிக்கிறுன். ஜீவன் விக்ஞானமய கோசத்தில் வர்த்திக்கும்போது, மனஸ் காமத்தை விடுத்து சுத்த ஞானசாதனமாக விருக்கும். சர்வ ஆசைகளுக்கும் இருப்பிடமாய் அப்பு தத்துவத்தினுல் உண்டாகிய புவர்லோகத்தில் வர்த்திக்கும் சரீரத்துடன் கலந்து வர்த்திக்கும்போது, மனஸ் காமச்சேர்க்கை உள்ளதாகி அதற்குட்பட்டு, அதற்குத் துணைபூண்டு பிரவர்த்தித்துக்கொ

ண்டிருக்கும். இதுதான் பரிசுத்தமல்லாத மனஸ். வெகுகாலம்வரை ஜீவன் காமமயனுகி, காமங்களில் அழுந்திப் பிரவர்த்திப்பான். காமத்தை விடுவிக்கக்கூடிய கர்மமொன்றும் அப்போது அவனுக்கு ருசிக்காது. இவ்வித ஜீவனிடம் சுத்த மனது பிரவர்த்திப்பதற்கு அவகாச மேற்படுவது அரிது. வெகுகாலமாக ஏற்பட்டுள்ள சுகதுக்கானுபவங்களினுல் ஞானமும், அதனுல் வைராக்யமும் உத்பத்தியானுல், கொஞ்சம் விஷய வெறுப்புண்டாவதற்கு இடமுண்டாகி, சுத்த மனதிற்கு வியாபாரம் ஏற்படும். அதுவரை அசுத்த மனதிற்கு மாத்திரம் அதிகமான வியாபாரம் ஏற்பட்டுள்ளதால், அதன் லக்ஷணங்களேயும் தர்மங்களேயும் நன்ருய் அறியும் பக்ஷத்தில், அதை வசப்படுத்திக்கொண்டு, படிப்படியாக சுத்தமனதாக மாற்றுவதற்கு அவகாசம் ஏற்படும். ஆகையால் இந்த மனேதர்மங்களேச் சிறிது, விசாரிப்பது அவசியமாகின்றது.

மனஸ் சஞ்சல சுபாவமுள்ளது. எப்போதும் ஒரு விஷயத்தில் இருந்து வேறு விஷயத்திற்கு ஓடிக்கொண்டேயிருக்கும். இக்காரணத்தால் மனஸ் குரங்குபோன்றது என்று சொல்வதுண்டு.

𑌸𑌦𑌾 𑌮𑍋𑌹𑌾𑌟𑌵𑍍𑌯𑌾𑌂 𑌚𑌰𑌤𑌿 𑌯𑍁𑌵𑌤𑍀𑌨𑌾𑌂 𑌕𑍁𑌚𑌗𑌿𑌰𑍌
𑌨𑌟𑌤𑍍𑌯𑌾𑌶𑌾𑌶𑌾𑌖𑌾𑌸𑍍𑌵𑌟𑌤𑌿 𑌝𑌟𑌿𑌤𑌿 𑌸𑍍𑌵𑍈𑌰𑌮𑌭𑌿𑌤𑌃 |
𑌕𑌪𑌾𑌲𑌿𑌨𑍇 𑌭𑌿𑌕𑍍𑌷𑍋 𑌮𑌮 𑌹𑍃𑌦𑌯𑌕𑌪𑌿𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌚𑌪𑌲𑌂
𑌦𑍃𑌢𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌶𑌿𑌵 𑌭𑌵𑌦𑌧𑍀𑌨𑌂 𑌕𑍁𑌰𑍁 𑌵𑌿𑌭𑍋 ||

சிவாநந்தலகரி.

ஸாமான்யமாக இந்திரியங்களோடுசேர்ந்து அது வர்த்திக்கும். அப்படி வர்த்திப்பதினுல், மனேசக்தி விசேஷமாக நசித்துப்போகும். இந்திரியங்களே அடக்கிக்கொண்டால், மனேசக்தி இந்திரிய வழிகளிற் சென்று நசித்துப்போகாமல், ஒரு நிலேப்பட்டுப் படிப்படியாக வ்ருத்தியடையும்.

நதி ஜலத்தைக் கால்களில் திருப்பி, ஒரு ஏரியில் சேர்க்கும்போது, அந்த ஏரிக்கரையில் உடைப்புகளிருந்தால் ஏரியிற் சேரும் ஜலமெல்லாம் அவ்வுடைப்புகளின் வழியாக வெளியேறி, உபயோகமற்றுப் போவதுமன்றி, அநேகருக்குத் தீங்

கையும் விளைவிக்கும். அவ்வுடைப்புகளை அடைத்துத் தகுந்த மடைகளை ஏற்படுத்தினால், பாயும் நீரெல்லாம், ஏரியிலேயே தங்கி, வேண்டும்போது அம்மடைகளின் வழியாகவெளியேறி நஞ்சைகளிற் பாய்ந்து, அவற்றிலுள்ள பயிர்களை நன்றாக விளைவித்து, அநேக பூதகோடிகளுக்கு மேன்மையை விளைவிக்கின்றதல்லவா? அதுபோல, ஆத்மசக்தியென்ற வெள்ளம், புத்தி வழியாக மனமென்ற ஏரிக்குள் பிரவேசித்து, இந்திரியங்களென்ற உடைப்பின் வழிபாக வெளிப்பட்டு, விஷயங்களில் புகுந்தால், அது நசித்துப்போவது மல்லாமல், முன் அத்தியாயத்தில் கூறியபடி அநேகருக்குப் பல தீங்குகளையும் இழைக்கும். அவ்வாறின்றி, இந்திரியங்களை வசப்படுத்தி, மனதை விஷயப்பற்றின்றிச் செய்தவுடன், மனோசக்தி வ்ருத்தியாகி, அநேகருக்குப் பேருபகாரம் செய்வதற்கு இடமுண்டாகும். இவ்விதமாக இந்திரிய வியாபாரங்களை நிறுத்தி மனோசக்தியை வ்ருத்திசெய்வதையே யோகமென்பர்.

"தாம்யோக மிதிமன்யந்தே ஸ்திராமிந்திரிய தாரணம்."

கடோபநிஷத்.

தேஹேந்திரங்களின் வியாபாரத்தால், அவைகளின் சக்தி குறைவதுபோல, மனோவ்ருத்தியால் மனோசக்தியும் குறைந்து போகின்றது. சங்கற்பங்களினால் மனோசக்தி குறைந்துபோவதால், அவைகளை வீணில் செய்துகொண்டிருத்தல் கூடாது. தருமத்தை அனுசரிப்பதிலும், பரோபகாரம் செய்யப்புகுவதிலுமே மனதைச் செலுத்தவேண்டுமே யல்லாமல், பயனற்ற காரியங்களிலாவது, பாவச் செயல்களிலாவது அதைப் புகவிடக்கூடாது. மனோசக்தியென்பது புருஷார்த்தங்களை சாதிப்பதற்கென்றே மானிடர்க்குக் கொடுக்கப்பட்ட ஒரு திவ்யசக்தி. ஒவ்வொரு நிமிஷமும் உபயோகமற்றவைகளாயும், பிறர்க்குப் பயன்கொடாதன வாயுமுள்ள காரியங்களைக் கைக்கொண்டு, அந்த சக்தியை வீணாக்குவது பாவமென்று சொல்லலாம். மனதும் இந்திரியங்களும் ஒன்றுகூடி விஷயங்களில் இஷ்டம் போல் புகுவதற்கு இடங்கொடுத்தால், அது சக்தியைக் குறை

க்கும். ஜீவிதகாலமெல்லாம் காமக்ரோத, அகங்கார, மமகார ங்களினாலும், விஷய வாசைகளினாலும் மனோசக்தியை நசித்துக் கொள்பவன், கடைசியில் துக்கத்திற்குள்ளாவான். அவ்வாறு செய்யாமல், மனதை நன்றாய் அடக்கி, மனோசக்தியை வ்ருத்தி செய்துகொள்ளவேண்டும். இவ்வாறு அடங்கிய மனது மிகுந்த திடமுள்ளதாகி, யோகாப்பியாசத்திற்குத் தகுதியுடையதாகி எத்தனையோ பெரிய காரியங்களைச் சாதிக்கவுங்கூடும். ஆதிமுதல் இந்திரியங்களோடு கூடி வர்த்தித்துக்கொண்டிருப்பதினால் மனது விஷயவாசைகொண்டு, எப்போதும் விஷய அனுபவத்தை விரும்பி, அதற்குத் தடையாக வுள்ள அனைத்திலும் வெறுப்புக்கொள்ளும். இப்படி, ஸாமான்யமாக, மனிதரிடம் மனது ராகத்துவேஷாதிகளுக் குட்பட்டிருக்கும். ராகத்வேஷங்கள் எல்லா அனர்த்தங்களுக்கும் மூலமென்று பகவத்கீதையில் ஸ்ரீபகவான் நன்றாய் போதித்துள்ளார்.

> "புன்பொருளை யுள்ளும் புமானுக் கதிற்சங்*கம் — * பற்று
> பின்பதனாற் காமமதிற் பின்வெகுளி—யன்பதனான் — † நினைவு
> மோகமதிற் பொன்று மிரு † தியதிற் புத்தியழி — (ஸ்மிருதி)
> வாகுமதிற் றானசிக்கு மாங்கு. — ப. கீ. வெ. 2-57.

தாத்பர்யம்:—விஷய சிந்தனையினால் அவற்றிற் பிரியமும், பிரியத்தால் ஆசையும், ஆசையால் கோபமும், கோபத்தால் அறிவின்மையும், அறிவின்மையினால் நினைவின்மையும், நினைவின்மையால் புத்திக்கேடும், புத்திக்கேட்டால் (யுக்தாயுக்த விவேக ஞானமில்லாதிருத்தல்) கடைசியில் சகல புருஷார்த்தங்களுக்குத் தீங்கும் விளையும்.

மற்றும் இந்த காமக்ரோதங்கள் ஞானபிவ்ருத்திக்குத் தடையானவை என்றும், அவைகளை அடக்காவிடில் புருஷார்த்த ப்ராப்தி யில்லையென்றும், காமக்ரோதங்களால் உண்டாகும் மனத்துடிப்பைப் பார்க்கிறவர்களே பிரஹ்ம நிர்வாணத்தை அடைவார்களென்றும் ஸ்ரீபகவான் உபதேசித்துள்ளார்.

> "காயங் கழிப்பதற்கு முன்னிலிக் காலத்தே
> மாயர் தருகாமம் வல்வெகுளி—யாயவிவை
> வேகத்தைத் தானடக்க வல்லா னவன்யோகி
> போகத்தைத் தானடையும் போய்." — ப. கீ. வெ. V 22.

ஆதலின் மனதில் குடிகொண்டுள்ள காமக்ரோதாதிகளாகிய கெட்ட குணங்களை நசிக்கச்செய்து, ஸமதமாதி நற்குணங்களை மனதில் அதிகமாக்குவது அவசியம். சுவற்றின்மேல் ஒரு மேன்மையான சித்திரத்தை வரைய எண்ணினால், சித்திரகாரி முதலில் சுவற்றின்மேலுள்ள அழுக்கைத்துடைத்து, அதைப் பரிசுத்தமாகச் செய்துகொண்டு, அதன்பின் அழகாகச் சித்திரத்தை வரைவதுபோல, மனிதர்களும் முதலில் தம் மனதிலுள்ள தீக்குணங்களை ஒவ்வொன்றாகப் போக்கியபின்னர், படிப்படியாக நற்குணங்களைத் திடமாக நாட்டி வ்ருத்திசெய்து, மனதைத் தூய்மைப்படுத்தவேண்டும். இவ்வாறு செய்வதற்கு முக்ய சாதனமாயுள்ளது தியானம். தியானம் என்றால் அதிசஞ்சலமான மனதை நிறுத்தி, ஒரு நிலைப்படுத்தி, பகவானிடத்திலாவது, பகவானுக்கு ஸமானமான பரிபக்குவமடைந்த குருவிடத்திலாவது, ஸ்திரமாக அதை நிறுத்துவதற்கு முயல்வது. இவ்வித த்யானத்தில், மனது பலவழிகளிலும் ஓடிக்கொண்டிருக்கும். அதை அடக்கி த்யேய மூர்த்தியிடம் நிறுத்துவதால், மனோசக்திகூட வ்ருத்தியாகும். இளைப்பாறுவது தேகத்திற்குத் திடங்கொடுப்பதுபோல, தியானமும் மனதிற்குத் திடத்தைக் கொடுக்கிறது. பகவானது திருக்கல்யாண குணங்களைப் பலவாறு சிந்திப்பதினால், அந்தந்த குணங்கள் மனதில் திடமாக ஊன்றி வ்ருத்தி அடையும். இதற்குமுன்பு, அநேக ஜன்மங்களில் நாம் அடைந்த துர்வாசனைகளையும் நசிக்கச்செய்யவேண்டும். அவ்வாறுசெய்ய ஸாதாரணமாக நெடுங்காலம் செல்லும். ஓரேகாலத்தில் மனோநிச்சயத்தால் அவைகளைத் தொலைப்பது முடியாதகாரியம். ஒவ்வொன்றாக இத்தீக்குணங்களை மனதிலிருந்து தொலைக்கவேண்டும். முன்பு குறித்தபடி அத்தீக்குணங்களுக்கு எதிரிடையான கல்யாண குணங்களை பகவானிடம் ஆரோபித்து, அக்குணங்களின் ஸ்வரூபனாயுள்ளவனை த்யானித்தால், அத்துர்க்குணங்கள் அடியோடு நசித்து, அதற்கு விரோதமான நற்குணங்கள் அழிவின்றி மனதில் ஊன்றிவிடும். இப்படிப் படிப்படியாக ஒவ்வொரு துர்க்குணத்தையும் தொலைத்து நற்குணங்களை திடமாக

நாட்டிக்கொள்ளவேண்டும். இவ்வாறு, ஆசை, கோபம், பொய், பொருமை முதலாகிய தீக்குணங்களை ஒவ்வொன்ருகத் தொலைத்து, கொடை, கொல்லாமை, இரக்கம், மெய், பொறுமை, முதலிய நற்குணங்களை வ்ருத்தி செய்துகொள்வதற்கு அதிக முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். தியானம் சிறிதுகாலம் செய்வதினலும், தினந்தோறும் செய்யாது அவ்வப்போது செய்வதாலும், சிரத்தை இல்லாமற் செய்வதாலும் ஒருபயனும் ஏற்படாது.

"தீர்க்ககாலாரநை ரந்தர்ய சத்காரா ஸேவிதோ த்ருடபூமி:"

யோகசூத்திரம்.

"நீண்டகாலம் தவருது ஆதாவுடன் செய்யும் தியானமே பலனைத்தரும்."

மனேசக்தி த்யானத்தால் வ்ருத்தியடையுமென்று சொல்லப்பட்டதல்லவா? மனேசக்தி வ்ருத்தியானல் சங்கற்ப சித்தி ஆகும். அதாவது மனதில் எண்ணியவை நிறைவேறும். ஆயினும், தியானதிகளினல் திடம்பெற்ற மனேசக்தியை மனிதர் பிறர்நன்மையைக்கருதி உபயோகிக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல் தமது நயத்தையேகருதி அந்த சக்தியை உபயோகித்தால், அவர்கள் இராக்ஷதர் எனப்படுவர். அரக்கர்கள் அதிக பக்தியினலும், கடுந்தபஸினலும் பெரிய சித்திகளை அடைந்திருந்தும் சுயநன்மையைக் கருதினவராய் பிறர்க்குத் தீங்கிழைப்பதின்பொருட்டு அவைகளை உபயோகித்தார்களல்லவா? அவ்வாறே, எவரேனும் மனதை அடக்குவதினலும், யோக சித்தியினலும் அடைந்த பெரிய மனேசக்தியை லோகத்திற்குத் தீங்கு விளைப்பதில் செலவழித்தால், அவர் இராக்ஷதர் என்ற சப்தத்திற்கு இலக்காக விருப்பர்.

"தேமீமானவ ராக்ஷஸா: பரஹிதம் ஸ்வார்த்தாய நிக்நந்தியே"

தன்நயம்கருதிப் பிறரது நன்மைகளை நாசம் செய்பவனே மனிதருள் இராக்ஷஸன் என்று பர்த்ருஹரி கூறியிருக்கிருர். ஹடயோகம் முதலியவற்ருல் சாதிக்கக்கூடிய சங்கற்ப சித்

தியை அடைந்து, அதிக மனோசக்தியை உண்டாக்கிக்கொண்டு அவைகளை பிறர்க்குத் தீங்கு விளைப்பதில் உபயோகித்தால், அவரைக்காட்டிலும் பயங்கரமான ராக்ஷதர்கள் இல்லையென்று கூறவும் வேண்டுமோ? தியான யோகாதிகளால் தம் மனோசக்தியை விருத்திசெய்துகொண்டு, சுயநன்மையைச் சிறிதும் நினையாமல் எப்போதும் பூததயை யுடையவராய்ப் பிறரது மேன்மையின்பொருட்டுப் பாடுபடுகிறவர்கள் புண்ணிய ஸ்வரூபர்களான ரிஷிகளெனப்படுவர்.

"பரோபகாரார்த்தமிதம் சரீரம்" என்ற நியாயப்படி பிறர் சுகமே தன்சுகமென்றும், பிறரது துக்கமே தனது துக்கம் என்றும் எண்ணுகிற மஹானுபாவனே உத்தமயோகி. அவ்வித புருஷன் தேஜஸை உடையவனாய், பரிபூர்ணனாய் பிரஹ்மாநந்தத்தை அடைவான்.

தன்னொத்த வெவ்விடத்து மன்னு சமமாக
மன்னொத்த வின்பம் வளர்துன்ப—முன்னலுறி
லாங்கவனே சால வதிநாம யோகியென
வோங்கறிவார் தாமதிப்பருற்று. பக. வெ. VI. 28.

மனோ தர்மங்கள்.

மனோமய கோசத்தில் வர்த்திக்கும் ஆத்மசக்தியே மனதென்றும், அந்த மனோமய கோசம் தேஜஸ் தத்துவப் பிரகிருதியால் செய்யப்பட்டிருக்கிறதென்றும், முன்னால் சொல்லப்பட்டன. பூலோகத்தில் சப்தம் உற்பத்தியாகும்போது மத்தியிலிருக்கும் காற்றின் அசைவால் அந்த சப்தம் காதில் படுவதுபோல, மனதில் எழும் எண்ணங்கள் தேஜோமய பிரகிருதியின் அசைவால்பிறருடைய மனோமய கோசத்தைத்தாக்கும். மனிதனிடத்தில் எவ்வித எண்ணங்கள் உதிக்கின்றனவோ, அவ்விதமான பிறர் எண்ணங்களை அவை இழுத்துக்கொள்ளுமென்று முன்னர் குறிக்கப்பட்டதல்லவா? மனதில் சங்கல்பம் ஏதாயினும் எழுந்தால், அது தேஜோமயமான பிரகிருதியில்

ஒரு ரூபத்தைத்தரிக்கும்; அதாவது அந்த சங்கற்பம் சூக்ஷ்ம லோகத்தில் இருக்கும் பிரகிருதியில் ஒருவித சலனத்தை உண்டாக்கி, அப்பிரகிருதியை ரூபந்தரிக்கச்செய்யும். குயவனது சக்கரம் வேகமாய் சுழலும்போது அதன்மேலுள்ள மண்ணை அவன் பானை முதலியவைகளாகச் செய்வதுபோல, நமது சங்கற்பங்களும் தேஜோமயமான ப்ரகிருதியில் பிரவேசித்து, அப்பிரகிருதியின் ஒருபாகத்தை ரூபம் தரிக்கும்படி செய்யும். நானாவிதமான சங்கற்பங்கள் நானாவிதமான ரூபங்களை அடைந்து, நானாவித வர்ணங்களுடன் விளங்கும். அதிக பக்தியோடு கூடிய மனம் ஒருநிலைப்பட்டு த்யானிக்கும்போது, சூக்ஷ்ம லோகத்தில் திவ்யமான நீலவர்ண ரூபங்கள் உத்பத்தியாகும். மற்றும் அந்த பக்தி பற்றற்றதாக இருந்தால், அந்த ரூபங்கள் தாமரை மலர்முதலிய புஷ்பங்களின் வடிவைத்தரிக்கும். ஒருநிலைப்பட்டு ஸ்திரமாக இருக்கும் பக்தருடைய மனோமய கோசத்தின் மேற்புறம் தேஜோவந்தமாகி, அதிலிருந்து நீலமான கோபுரரூபம் வெளியாகும். இதுபோலவே, வேறு சங்கற்பங்கள் மனதில் உதயமாகும்போது, இவற்றிற்கு அனுகுணமான வர்ணங்களோடு கூடிய நானாவித ரூபங்கள் காணப்பெறும். யோக திருஷ்டியோடு பார்த்தால், அவற்றுள் சில நக்ஷத்திரங்கள்போலவும், சில கோவில்கள்போலவும், சில கூரிய அம்புகள்போலவும் காணப்படும். சங்கற்பங்கள் மனதில் வெளிப்படையாக எழாதிருப்பின், உற்பத்தியாகும் ரூபங்கள் சிதருண்ட மேகம்போலப் பரவி, ரூபம் ஒன்றும் பெறாதிருக்கும். இவையும் சங்கற்ப சுபாவங்களை அனுசரித்தே வர்ணங்களைக் கொள்ளும்.

இந்த ரூபங்கள் ஒவ்வொன்றும் சூக்ஷ்மலோகத்தில் வர்த்திக்கின்ற தேவதைகளுள் சங்கற்பானுசாரமாக ஒவ்வொருவரை இழுத்துக்கொண்டு, அந்த லோகத்தில் ஸ்வதந்தரமாகச் சிறிதுகாலம் சஞ்சரித்துக்கொண்டிருக்கும். இந்த ரூபங்களுக்கும் அவைகளை உற்பத்திசெய்யும் மனிதர்களுக்கும் திடமான சம்பந்தம் ஏற்பட்டிருக்கும். இந்த ரூபங்கள் தம்மையொத்த மனோபாவங்களை யுடையவர்களினால் இழுத்துக்கொ

ள்ளப்படும். குரோத எண்ணம் ஒருவர் மனதில் உதித்தால், ரக்த வர்ணமான ரூபம் ஒன்று உண்டாகி, சூக்ஷ்ம லோகத்தில் ஒரு பிசாசைப்போல் சஞ்சரித்துவரும். அப்போது, குரோத மனதையுடைய பிறரால் அது இழுத்துக்கொள்ளப்படும். அந்த ரூபம் அவரது மனோமய கோசத்தைத்தாக்கி, அதில் குரோத எண்ணங்களை வ்ருத்திசெய்யும். இவ்வாறே, ஒருவரிடம் காம சங்கற்பங்கள் ஏற்பட்டால், அவை தமக்கு இசைந்த ரூபத்தைத் தரித்துக்கொண்டு, இயற்கையில் காமத்தையுடைய மனிதர்களின் சூக்ஷ்ம தேகங்களைத்தாக்கி, அவைகளை அதிகமாக சலிக்கும்படிசெய்து, அவரது காமகுணத்தை அதிகப்படுத்தும். இப்படி ஒவ்வொருவரின் மனோபாவங்கள் பிறரது மனதில் பிரவேசித்து, அவை நல்லவையாயின், அவர்களை நல்லவர்களாகவும், அவை தீயவையாயின் அவர்களைத் தீயவர்களாயும் செய்யும். வெளியிலிருந்து வரும் சங்கற்ப ரூபத்திற்கு அனுகுணமான மனவெண்ணங்கள் சிறிதேனும் ஒருவனிடம் இல்லாவிடில், அந்த ரூபங்கள் அவனை அணுகாது மறைந்து போகும். காமசங்கற்பத்தால் எழும் ரூபங்கள் கேவலம் நிஷ்காமியாக உள்ளவரிடம் சேரா. அதுபோலவே, நிஷ்காம எண்ணங்களும், எல்லா பூதங்களுக்கும் ஹிதமான சங்கற்பங்களும் கேவலம் தன்நயமே கருதும் காமுகனிடம் அணுகா. யாதேனும் ஒருகுணம் அற்பமாகிலும் மனதில் இருந்தால், அதற்கு அனுகுணமான ரூபம் அந்த குணத்தை திடப்படுத்தக்கூடியதாகும். அதனால் ஸாமான்ய ஜனங்களுக்குள் ஒருவரது மனோவ்ருத்திகள் மற்றவரது மனதிற் பிரவேசித்து, அவர்களை நல்லவராகவேனும், தீயவராகவேனும் செய்யக்கூடியவை ஆகும். இவ்வாறு ஒருவரது சங்கற்பம் பிறருடைய மனதில் பிரவேசித்து, வித்துப்போலிருக்கும் அவரது குணங்களை திடப்படுத்துவதால், பிறரது மனதிலும் அதேவித எண்ணங்கள் உதித்து, படிப்படியாக சூக்ஷ்ம லோகத்தில் இன்னும் சில சங்கற்ப ரூபங்கள் உற்பத்தியாகி, பிறரையடைந்து, எங்கும் வியாபித்துக்கொண்டிருக்கும். காமுகன் ஒருவன் விஷய சுகத்தைக்குறித்தும் பலவாறு சிந்திக்கும்போது, காமத்தைப் பெருக்கக்கூ

டிய எண்ண ரூபங்கள் அவனது மனதிலிருந்து வெளியேறி, சூக்ஷ்ம லோகத்தில் சுயேச்சையாகத்திரியும். அந்த ரூபங்கள் பிற காமுகரின் மனதில் எளிதிற்புகுந்து, அவரிடம் அதற்கு முன்பு அற்பமாகவிருந்த காமத்தை அதிகப்படுத்தி, அவரது மனதில் காம சங்கற்பத்தை உண்டாக்கும். அந்த சங்கற்பங்களினால் மற்றும் அவ்வித சங்கற்ப ரூபங்கள் அநேகம் உற்பத்தியாகி, பலரையும் காமுகராகச்செய்யும். ஆதலால், ஒருவனது தோஷங்கள் அவனைமட்டும் கெடுப்பதோடமையாமல் அநேகரையும் கெடுக்கும். இப்படி அநேகரைக் கெடுத்த தோஷமும் அவனை யடையும். பிறரிடத்தில் அற்பமாயினும் காமம் இல்லாவிட்டால், முற்கூறியவனது காமசங்கற்ப ரூபங்கள் இவனிடம் புகுவது அசாத்யம் அல்லவா? அற்பமாக உள்ள துர்க்குணங்களைப் பெருக்கிய தோஷம் முற்கூறப்பட்டவனிடம் இருந்தாலும், அவனுடைய தீய எண்ணங்களின் ரூபங்களை இழுத்துக்கொள்வது பிறரிடம் உள்ள சங்கற்பங்களல்லவா? இதனால் யாவரும் தாம் கெடுவதற்குத் தாமே முக்ய காரணபூதர்களாகவும், தம்மைப்போல கெட்ட எண்ணங்களையுடைய பிறரது தோழர்களாகவும் ஆகிறார்கள் என்பது வெளிப்படை.

> தன்னுடைய நெஞ்சு தனக்குறவு தன்னெஞ்சே
> தன்னுடைய வான்பகையாந் தான். கீ. வெ. VI. 5.

> ஆன்றநெஞ்சில் லாதவனுக் காங்கதுமா றேயியலு
> மேன்ற பகைவன்போ லிங்கு. கீ. வெ. VI. 6.

அக்ஞானி தனக்குத்தானே சத்துருப்போலாகிறான்; தனக்குத்தானே பந்துவுமாகிறான் என்பது இவற்றின் தாத்பர்யம். அதுபோலவே, பரோபகாரபுத்தி, பூததயை முதலாகிய அன்புக்குரிய நல்லெண்ணங்கள் ஒருவனிடம் உற்பத்தியானால், அதனதன் அனுகுணமான ரூபங்களும் சூக்ஷ்ம லோகத்தில் உற்பத்தியாகி, நல்லவராகிய பிறரின் மனதிற் பிரவேசித்து, அவரிடம் அற்பமாகவுள்ள பரோபகாரபுத்தி, பூததயை முதலியவைகளைப் பெருக்கி, அவரது மனதில் அவ்வித எண்

ண்ணங்களைப் பிறப்பிக்கும். அவ்வெண்ணங்களெல்லாம் சூக்ஷ்ம லோகத்தில் ரூபங்களைத்தரித்து, அநேகரது நல்லெண்ணங்களைப் பலப்படுத்தும். மனது சஞ்சல சுபாவமுள்ளதாக விருத்தலின், அது எப்போதும் வேலைசெய்துகொண்டிருக்கும். அதனால் ஜீவனது மனதிலிருந்து நல்லெண்ணமேனும் தீயவெண்ணமேனும் எப்போதும் வெளியேறிக்கொண்டே யிருக்கும். இவைகளினால் ஒவ்வொரு மனிதனும் உலகத்திற்குப் பெரிய நன்மையேனும், தீமையேனும் விளைவித்துக்கொண்டே யிருப்பான். ஆதலால் ஒவ்வொருவனும் தனது மனதை சுயேச்சையாக விடாமல் அடக்கிக்கொள்வது எவ்வளவு அவசியம் பாருங்கள்! அவ்விதம் செய்துகொண்டால், தன் மனதில் உத்தமமான எண்ணங்களை உற்பத்தி செய்துகொள்வதுமல்லாமல், பிறர் தீய எண்ண ரூபங்கள் உட்புகவொட்டாமலும் தடுக்கலாம். அவனது மனது சுத்தமுள்ளதாகும். அவன் என்றும் நல்லெண்ணங்களையே எண்ணுவதால், பிறர்க்குப் பலவிதமான நன்மைகளைச் செய்யக்கூடும். மனிதருடைய மனதில் உதிக்கும் எண்ணங்கள் திடமாகவிருந்தால், அவைகளால் உற்பத்தியாகும் எண்ண ரூபங்களும் ஸ்பஷ்டமாகவும் திடமாகவும் இருக்கும். மற்றும் அந்த எண்ணங்களை விடாமுயற்சியுடன் நீண்டகாலம் மனதில் நிறுத்தினால், அவற்றின் ரூபங்களுக்கு அதிககாலம் வாழ்வு ஏற்பட்டு, சக்தி அதிகமாக உண்டாகி, நன்மை தீமைகளை விளைவிப்பதற்குத் தகுதி யேற்படும். அவ்வாறில்லாமல், எண்ணங்கள் திடமற்றதாயும், சிறிதுகாலமட்டும் உள்ளவையாயும் இருப்பின், அவைகளிலிருந்து எழும் ரூபங்களும் மங்கலாயும், திடமற்றதாயும், சக்திக் குறைவுடையதாயு மிருக்கும். நமக்கு இஷ்டர்களான எவருக்கேனும் ஒரு நன்மையைச் செய்யக்கருதி, அவ்விஷபத்தை ஒருநிலைப்பட்ட மனதுடன் திடமாக எண்ணினால், அந்த நன்மை அவர்க்குத் தவறாது கிடைக்கும். இதிலும் மனதை ஒரு நிலைப்படுத்துவதினாலும், தபானுஷ்டிகளினாலும் வீர்ய வந்தமாகச் செய்தால்தான், எண்ணிய பலன்கள் தவறாது கிடைக்கும். ஆதலால் மனிதன் தன் மனதை நன்றாய் வசப்படுத்திக்கொண்டு, தன் மனோசக்தியை

தியான முதலியவற்றால் அதிகப்படுத்திக்கொண்டால், லோகத்திற்குச் செய்ய நினைத்த நன்மைகளை அவன் செய்யக்கூடும். மனதை ஒருநிலைப் படுத்திக்கொண்டு, தான் செய்யவெண்ணிய மேன்மையைக்குறித்து திடமாகவும், நன்றாகவும் எண்ணினால், அவ்வெண்ணங்கள் ரூபங்களைக்கொண்டு, உத்தேசித்த மனிதனிடம் போய் அம்மேன்மைகளைச் சிந்திக்கச்செய்யும். பொருளதிகமாக வேண்டியிருக்கும் அரிய பெரிய தர்ம காரியங்களைச் செய்ய நினைக்கும் லோகோபகாரிகள் அநேகர் மிக்க எளியவராயினும், தாம் செய்யப்புகுந்த காரியம் எவ்விதமேனும் நிறைவேற வேண்டுமென்று திடமாக எண்ணினால், அவ்வெண்ணங்கள் சூக்ஷ்ம ரூபங்களைத்தரித்து, தரும புத்தியுள்ள மனிதரின் மனதிற் புகுந்து, எவ்விதமாகவேனும் அக்கார்யங்களுக்குத் துணையாக வேண்டுமென்ற புத்தியை அவரிடம் பிறப்பித்து, அக்கார்யங்களுக்கு வேண்டிய பணவுதவியைச் செய்யும் படி தூண்டும்.

இன்னும் யோகிகளான புருஷர்கள் ஆயுர் ஆரோக்ய ஐசுவரியங்களும், புத்திரப்பேறும் உண்டாகும்படி ஆசீர்வதித்தால், அவை தப்பாது கிட்டுமென்று கிரந்தங்களில் காணப்படுவதையும், அனுபவத்தில் அவ்வாறு நடப்பதையும் காண்கிறோம் அல்லவா? இதுவும் சமாஹிதமான மனோசக்தி பலமேயில்லாது வேறல்ல. நம் தேசத்தார், எல்லாக் காரியங்களிலும் உத்தமர்களான மஹான்களின் ஆசீர்வாதத்தை விரும்புவதற்குக் காரணம் இதுவே.

ஆபிரச்சனைக்கான உத்தம ப்ராஹ்மணர்கள் ஏகவாக்யமாக மனப்பூர்வமாய் ஆசீர்வதித்தால், பூர்வகாலம், அது பலித்துவந்தது. இப்பொழுதோ, ஆசீர்வதிப்போர் தமது நன்மையை நாடுபவராயும், மனோதிடமும் மனோசக்தியுமில்லாதவராயுமிருப்பதால், அவரது ஆசீர்வாதங்கள் நன்றாய்ப் பலிக்காமலிருப்பது ஒரு ஆச்சரியமல்ல. மற்றும், பக்தர்கள் பகவத்யான முடிவிலும், கிரந்த காலக்ஷேபத்திற்குப் பின்பும், உலகத்தின் மேன்மையை உத்தேசித்து, ஸ்வஸ்தி வாக்யங்கள் கூறும் வழ

க்கம் இப்போது முள்ளதல்லவா? தியானத்தினலாவது, கிரந்த காலக்ஷேபத்தினலாவது மனது பரிசுத்தமாகி, திவ்ய தேஜஸை கிரகித்துக்கொண்டு, வீர்யவந்தமாக விருக்கும் சமயத்தில் எண்ணிய எண்ணங்களெல்லாம் சித்திக்கும். அதனல், புராண கதையின் முடிவிலும் "லோகாஸமஸ்தா: ஸுகினோபவந்து" (உலகில் எல்லாம் சுகமாக ஆகட்டும்) என்று ஆசீர்வதிப்பதால், உலகத்திற்கு மேன்மை தப்பாமற் கிடைக்கும்.

மற்றும் பூர்வாசாரப் பிரகாரம் நம் தேசத்திலுள்ள பக்தர்கள் எல்லோரும் பிரதிதினமும் வைகறையில் துயிலெழுந்து, ஆசார சீலர்களாய் ஒருமனதுடன் பகவானைத் தியானித்து, தம் பரிசுத்த மனதால் ஸர்வபூத ஹிதத்தைக்கோரி, ஒரே காலத்தில் கீழே சொல்லியபடி ஸ்வஸ்தி வாக்கியத்தைச் சொல்லுவார்கள்.

𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌜𑌾𑌭𑍍𑌯𑌃 𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌯𑌨𑍍𑌤𑌾𑌂 𑌨𑍍𑌯𑌾𑌯𑍇𑌨 𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣
𑌮𑌹𑍀𑌂 𑌮𑌹𑍀𑌶𑌾𑌃। 𑌗𑍋𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌭𑍍𑌯𑌃 𑌶𑍁𑌭𑌮𑌸𑍍𑌤𑍁 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂
𑌲𑍋𑌕𑌾𑌃 𑌸𑌮𑌸𑍍𑌤𑌾𑌃 𑌸𑍁𑌖𑌿𑌨𑍋 𑌭𑌵𑌨𑍍𑌤𑍁 ॥
𑌕𑌾𑌲𑍇 𑌵𑌰𑍍𑌷𑌤𑍁 𑌪𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌸𑌸𑍍𑌯𑌶𑌾𑌲𑌿𑌨𑍀। [𑌯𑌾𑌃॥
𑌦𑍇𑌶𑍋𑌯𑌂 𑌕𑍍𑌷𑍋𑌭𑌰𑌹𑌿𑌤𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌾𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑍁 𑌨𑌿𑌰𑍍𑌭-
𑌅𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌿𑌣𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑍁 𑌪𑍁𑌤𑍍𑌰𑌿𑌣𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑍁 𑌪𑍌-
𑌤𑍍𑌰𑌿𑌣𑌃।
𑌅𑌧𑌨𑌾𑌸𑍍𑌸𑌧𑌨𑌾𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑍁 𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑍁 𑌶𑌰𑌦𑌾𑌂𑌶𑌤𑌮𑍍 ॥

இவ்வாறு ஏககாலத்தில் ஆசையற்றவர்களாய், பரிசுத்த மனதுடன் பக்தர்கள் பஜனித்தால், அவரது மேலான சங்கற்ப சக்திகள் ஒன்ருய்த்திரண்டு, லோகத்திற்கு அளவற்ற மேன்மையை விளைவிக்கும். காலத்தில் மழைபெய்யும். பயிர்கள் நன்ருய்விளையும், ஜனங்களுக்குப் பீடைபைத்தரும் உபாதிகள் இரா. இவைபோன்ற பல நன்மைகள் உலகிற்கு உண்டாகும். இக்காலத்தாருக்கு இவ்வித வழக்கங்களில் ஊக்கம் குறைவதாலும், ஜனங்கள் கேவலம் சுயநன்மையைக் கருதினவராயிருப்பதாலும் தர்மத்திற்கு ஹானியும்,

அதர்மத்திற்கு வ்ருத்தியுமுண்டாகி, பாவத்தின் பலனுன மழைவளங் குறைதலும், ஜன நஷ்டத்திற்குக் காரணமான அநேக வியாதிகளும் அடிக்கடி ஏற்படுவதற்கு இடமுண்டாயிருக்கின்றது. இப்போதாகிலும் ஜனங்கள் தருமத்தில் ஆசைவைத்துத் தம் விரோதங்களை விடுத்து, பரோபகாரர்களாகி, ஆசையற்றவர்களாய், மேற்கூறியபடி சகல ஜனங்களின் மேன்மையைக்கருதி த்யானித்தால், அவர்களுடைய பக்திசமுதாய சங்கற்பத்தின் பலத்தால், உலகத்தில் எல்லாத்தீமைகளும் நீங்கி, மேன்மை யுண்டாகுமென்பதற்குச் சந்தேகம் அணுவுமில்லை.

பிறருடைய மேன்மையின் பொருட்டு மனேசக்தியை உபயோகிப்பதில் வேறொருபெரிய ரகசியம் இருக்கிறது. துன்மார்க்கத்தில் நடந்துகொண்டு சன்மார்க்தைப் போதிப்பதும், கேட்க இஷ்டமில்லாதவர்க்கு வாக்கினுல் உபதேசம் செய்வதும் பலனில்லாமற் போவதுடன், விபரீதத்தையும் விளைவிக்குமல்லவா? மற்றும் வாலிபருக்கும் மூர்க்கருக்கும் வாக்குமூலமாக உபதேசிப்பது அவ்வளவு உபயோகப்படாது. அவர்களுக்கு உண்மையாக மேன்மை செய்யவேண்டுமெனின், அதற்கு ஒரு உபாயமுளது. பிரதிதினமும் நித்திரை செய்யப் போகும்போது அவர்களுடைய உருவங்களை நன்றாகமனதில் நிறுத்தி, அவர்கள் தன் எதிரில் நிற்பது போல் எண்ணிக்கொண்டு, அவர்களுடைய தீக்குணங்களினுல் விளையும் தீமைகளையும், அவர்கள் துஷ்ட நடத்தைகளை விட்டு சன்மார்க்கத்தில் நடந்துகொண்டால் உண்டாகும் மேன்மைகளையும் திடமான மனதுடன் சிறிது காலம் அவர்களுக்குப் போதித்துக் கொண்டிருந்தால், அவர்களது தீக்குணங்கள் படிப்படியாய் மாறிவிடும். அவர்களது ஜாக்கிரதாவஸ்தையில் மனேவியாபாரங்களுண்டாகி, பல விஷயங்களிலும் மனம் ப்ரவர்த்தித்துக் கொண்டிருப்பதால், அவர்களது மனது பிறருடைய சங்கற்பங்களைப் புகவொட்டாது. அதனுல் அவர்கள் தூங்குங்காலமே இக்காரியத்திற்குச் சரியான காலமாகும். அக்காலத்தில் அவர்கள் தமது

ஜாக்ரதாவஸ்தையை விட்டிருப்பதால், பிறருடைய எண்ணத்திற்கு உட்படுவார்கள். இவ்வாறு கொஞ்சகாலம், தினந்தோறும் அவர்களை உத்தேசித்துசெய்யும் உபதேசம் அவர்களுடைய மனதிற் ப்ரவேசித்து, 'தாம் போகும்வழி கெடுதலுக்கிடந்தரும், அதனால் அது விடத்தக்கது' என்ற எண்ணங்கள் அவர்களது ஜாக்கிரதாவஸ்தையிலும் தானே படிப்படியாக உதயமாகும். பிறருடைய ஹிதவசனங்களைக் கேளாதவர்களுக்கும், அவ்வார்த்தைகளின் மேன்மையை அறியாதவர்களுக்கும், வாக்கினாலும் கிரந்தங்களினாலும் சன்மார்க்கம் போதிப்பது கஷ்டமாக விருப்பதால், இந்த உபாயத்தால் அவர்களை சுலபமாக நல்வழிக்குக் கொண்டுவரலாம். அவர்கள் அப்படி நல்வழிக்கு வரும்போது, தாமே நன்மார்க்கத்திற்குத் திரும்பிவிட்டதாக அவர்கள் எண்ணிக்கொள்வார்கள்.

இப்படி அநேகவிதமான பெரிய காரியங்களை நிறைவேற்றுவதற்கு மனது முக்ய கருவியாகவுள்ளது. மனதினால் எப்போதும் லோகத்திற்கு மேன்மையை விளைவிக்கக்கூடிய எண்ணங்களை உற்பத்திசெய்து, அவைமூலமாக அநேக மனிதர்க்கு மேன்மையைச் செய்யலாம். அவ்வாறே, தீய எண்ணங்களால் அதற்கு அனுகுணமான பிசாச ரூபங்களை உற்பத்திசெய்து, அவைமூலமாக அநேகர்க்குத் துன்பம் விளைவிக்கவுங் கூடும். நல்ல காரியங்களில் மனதைச் செலுத்துவதால், உலகத்திற்குப் பேருதவியும், தீயவழிகளில் அதை செலுத்துவதால் உலகத்திற்குப் பேரிழிவும் செய்யக்கூடும். மனது பிறர்க்கு நன்மை தீமைகளை விளைவிப்பதோடு, தனக்கும் பந்த மோக்ஷங்களுக்குச் சாதனமாகின்றதென்று முன்னர் கூறினேமல்லவா? அவ்வித மனதை நன்றாக வசப்படுத்தி, நல்வழியிற் புகுத்தியவர்கள், நாளடைவில் உயர்ந்த பதவிகளை அடைவார்கள். உண்மையாகவே இந்திரியங்களுக்கு அரசனாக விளங்கும் மனது ஸாமான்யமான மனிதரிடம் இந்திரியங்கட்குட்பட்டு நடக்கின்றதல்லவா? அவ்வாறு இந்திரியங்கட்குட்பட்டு, இந்திரியங்களின் வழியிற்சென்று, ஜீவனைச் சிற்றின்பங்களில்

ஆசைகொள்ளும்படி செய்வது, பிரபு சேவகனுக்குட்பட்டு நடப்பதுபோல் உள்ளதல்லவா? அவ்வாறில்லாமல், ஜீவன் மனோசக்தியைத் திடமாகக் காண்பித்து, இந்திரியங்களை வசப் படுத்திக்கொண்டால், நன்மை தீமைகளின் விவேகம் அவனி டம் கிரமமாக வளர்வதோடு அவனுடைய மனதும் விஷயங்க ளிற் புகாமல் ஈசுவரனையே நோக்கியிருக்கும். அப்போது ஜீவன் பந்தங்களினின்றும் தப்பி, பிறப்பிறப்பு ரூபமான சம்சார சாக ரத்தைக்கடந்து, முக்தி அடைவான். ஆதலால், யாவரும் இந்த மேலான சாதனமாகிய மனதை நன்றாக வசப்படுத்திக்கொ ண்டு, அதை வீர்யமுள்ளதாகவும் மாசற்றதாகவும் செய்து கொண்டு, தாம் கடைத்தேறுவதுடன், பிறருக்கும் எப்போ தும் பரம உபகாரிக ளாவார்களாக.

8-வது அத்தியாயம்.

மரணமும், மரணாந்தரஸ்திதியும்.

உலகத்தில் ஸாதாரணமாக மரணத்தைக் குறித்து விசேஷபயங்கொள்வது வழக்கம். மரணம் என்ற மொழியை உச்சரிப்பதே பீடைக்குக் காரணமென்றும், மரண சப்தமே அமங்கலமானதென்றும் ஜனங்கள் கருதுவர். ஆயினும், ஞானிகள் மரணத்தைக் குறித்துச் சிறிதும் பயப்படாமல் இருப்பதும் தவிர, மரணகாலத்தில் பூர்ண சாந்தத்தை அடைந்து, மனதில் யாதொரு விகாரமுமின்றிப் பகவானைத் தியானித்துக்கொண்டு, பிரஹ்மானந்தமுடையவர்களாய், சந்தோஷத்துடன் சரீரத்தைவிட்டுச் செல்வார்களென்று கிரந்தங்கள் முறையிடுகின்றன. இவ்விஷயம் அநேகருக்குக் காட்சி மூலம் அனுபவமாகவுமுள்ளது. ஆதலால், நல்லோரை மரணத்தால் அறியவேண்டும் என்ற பழமொழி எங்கும் பரவியுள்ளது.

மற்றும், ஜீவன் சரீரத்தைவிட்டு நீங்கியபோது, எவ்வித நோக்கமுள்ளவனாக இருப்பானோ அதற்கு அனுகுணமான ஜன்மம் பின்னால் அவனுக்குக் கிட்டுமென்று கீதையில் பகவான் உபதேசித்துள்ளார்.

> தானெந்த வெந்தப் பொருளுன்னித் தன்முடிவின்
> ஊன்வந்த வாக்கை யொழித்தேகுந்—தானந்த
> வந்தவது தன்னையே யாங்கணையும் எக்காலும்
> சிந்தையது செய்தலினால் சேர்ந்து. கீ. வெ. VIII. 6.

தாத்பர்யம்: எவன் அந்தியகாலத்தில் எந்தெந்த ரூபத்தை தியானிக்கின்றவனாய் தேகத்தை விடுகின்றானோ, அவன் எப்போதும் அந்தந்த ரூபத்தின் தியானத்தோடு கூடினவனாய் அந்தந்த ரூபத்தை அடைகிறான்.

மரணத்தின் உண்மையை நன்றாய் அறிந்த மனிதர்களுக்கு அவ்விஷயத்தில் பயமேனும், துக்கமேனும், மனக்கலக்கமேனும், நிகழா. மரணகாலத்தில் தம்மனத்தை விகார

மற்றதாக அவர்கள் செய்துகொள்வதால், நற்கதி அடைவது அவர்களுக்கு சுலபமாகின்றது.

மரணமென்பது ஜீவன் ஸ்தூலசரீரத்தை நீக்கிப்போவதுதான். ஸ்தூலசரீரத்தை விட்டமாத்திரத்தில் ஜீவன் இல்லாமற் போவதில்லை. ஸ்தூல சரீரத்தை விட்டபோது, அதைக் காட்டிலும் சூக்ஷ்மமாயும், சிறிதுகாலம் அதிகமாயும் இருக்கத்தக்க சூக்ஷ்ம சரீரத்தை ஜீவன் தரித்து மேலுலகில் வர்த்திப்பான். சரீரம் நாசமுறுவதென்றும், ஜீவன் நாசமற்றவனென்றும் கிரந்தங்களில் சொல்லப்படுகின்றன. இறப்பது சரீரமே, ஜீவனல்ல. ஜீவன் நித்யமானவன்; விகாரமற்றவன். ஆதியில் அற்பஞானமுள்ளவனுகி ஞானத்தை வ்ருத்தி செய்துக்கொள்வதற்காக அந்தந்த லோகத்திற்கு அனுகுணமான சரீரங்களைத் தரிப்பவன். ஒவ்வொரு சரீரத்தினுல் அடையக்கூடிய ஞானமெல்லாம் பெற்றவுடன், அந்த சரீரத்தால்வரும் பிரயோஜனம் முற்றுப்பெறுவதால், அதை நீக்கிவிட்டு, மற்ரெரு சரீரத்தை அந்த ஜீவன் காலக்கிரமத்தில் அடைந்து, தன் ஞானத்தை வ்ருத்திசெய்துகொண்டு இருப்பான். மனிதர்கள் தாம் தரிக்கும் ஆடை கிழிந்தவுடன் அதை விடுத்துப் புதியதான வேரேர் ஆடையை அணிவதுபோல, கெட்டுப்போய்ப் பயனற்றதாயுள்ள சரீரங்களை விட்டுப் புதியதாயும் ஞானசாதனமாயுமுள்ள வேறு சரீரங்களை, ஜீவன் தரித்துக்கொள்வான்.

பீறும் பழம்புடவை பேணுது விட்டொருவன்
வேறு புதுப்புடவை மேவுதல்போல்—ஈறில் அவன்
முத்துடம்பை விட்டு முதிராது வேறுவரும்
புத்துடம்பைச் சேரும் புகுந்து. கீ. வெ. 22.

கிழிந்த துணிகளை விடுப்பது மனிதர்க்கு துக்ககாரணமானதில்லையல்லவா? அதுபோலவே பிரயோஜனமற்ற சரீரத்தை நீக்கும்போது ஞானிகள் மனவேதனை அடையார். மனிதன் கார்யார்த்தமாக ஒரு தேசத்திலாவது ஒரு கிராமத்திலாவது சிலகாலம் வசித்து, அக்காரியம் நிறைவேறியவுடன் அந்த ஸ்தலத்தைவிட்டு வேறிடம் செல்வதுபோல, ஜீவன்

ஒரு தேசத்தில் ஒரு காலத்தில் ஒவ்வொரு ஜாதியிற் பிறந்து அந்தந்த ஜன்மத்தில் அடையவேண்டிய ஞானமெல்லாம் அடைந்தபிறகு, அச்சரீரத்தை நீக்கிப்போய்விடும். அவ்வாறு போவது அத்யாவசியம் என்று சொல்லவும் வேண்டுமோ? இறப்பென்பது இராதாயின், ஞானவிருத்திக்கு அவகாசக் குறைவு ஏற்படும். உலகில் ஒரு ஏழை தனது யோக்யதைக் குத்தக்கவாறு சிறிய குடிசை ஒன்றை அமைத்துக்கொள்வான். தனக்குச் செல்வமும் குடும்பமும் விருத்தியானவுடன், வசிப் பதற்குப் போதாதெனத் தன் குடிசையை இடித்து, விஸ்தார மாகவும் அழகாகவுமுள்ள புதியதோர் மாளிகையை அவனே கட்டிக்கொள்வான் அல்லவா? அதுபோலவே, ஜீவனும் தன் யோக்யதைக்குத் தகுதியாக ஒரு சரீரத்தை அடைந்து, அந்த சரீரத்தால் சாதிக்கக்கூடிய ஞானமெல்லாம் சாதித்துக் கொண்டு, பிறகு அதிகமான ஞானம் பெறுவதற்கு இடமில்லை யெனத் தெரிந்து, அத்தேகத்தை நீக்கி, அதைக்காட்டிலும் தூய்மையும், மேன்மையும், ஒளியும் பொருந்திய வேறொரு சரீரத்தைத் தரிக்காமற் போனால், அவன் வ்ருத்தி அடைவ தற்கு மார்க்கமேயில்லை.

ஆதலால், ஒரு சரீரத்தாற் பெறும் பயனை ஜீவன் அடைந்தவுடன், அந்த சரீரத்தைவிட்டு அதிகமான ஞானம் பெறுவதற்குக் கருவியாயுள்ள மற்றொரு சரீரத்தை அவன் அடையும்படி கருணைக்கடலாகிய ஈசன் செய்வான். அக்கார ணம்பற்றி ஞானசாகரமாகவுள்ள ஈசன் லயகர்த்தா என அழைக் கப்பட்டாலும், உண்மையில் அவனே நம்மை மேன்மைப்ப டுத்துபவனாவான். இப்படி, ஒவ்வொரு பிறப்பிலும் ஞானத் தை வ்ருத்திசெய்துகொண்டு, காலக்கிரமத்தில் ஜீவன் பரிபூ ரண ஞானியாகும்வரை கட்டாயமாக சரீரங்களை ஒன்றன்பின் ஒன்றாகத் தரித்துக்கொள்ளவேண்டும். ஆதலின் மரணம் ஒரு சரீரத்தைப் போக்கி, அதைப் பார்க்கிலும் மேலான மற்றொரு சரீரத்தை அடையும்படி செய்வதால், அது களிப்பிற்குக் காரணமானதேயொழிய, துக்கத்திற்குக் காரணமானதன்று.

மிக்கத் தாழ்வான திபபுத்தியுள்ள ஜீவனுக்கும் ஸ்தூல சரீரத்தைவிட்டு நீங்குவது மேன்மையையே விளைவிக்கும். அவன் தன் சரீரத்தைவிட்டபிறகு, புவர்லோகத்தில் கஷ்டானுபவத்தால் ஞானத்தைப் பெற்று, மறு ஜன்மத்தை எடுப்பானாதலின், மரணம் அவனுக்கும் நன்மையைப் பயக்கும். இதனால் ஜீவன் நீங்குங்காலையில், பக்கத்திலுள்ளவர்கள் அந்த ஜீவன் சுகமாக சரீரத்தைவிட்டு நீங்குவதைக் கருதி, மேல்லோகப்ராப்தி அவனுக்குக் கிடைக்கவேண்டுமென்று பகவானை பிரார்த்திக்க வேண்டுமேயல்லாது, இறப்போனது மனது கலங்கும்படி துக்கம் அடைவது கூடாது. ஒவ்வொரு ஜீவனுக்கும் அவன் இறக்கும் தருணத்தில் பிறந்தது முதல் அதுவரை நிகழ்ந்தவை எல்லாம் ஓரே காலத்தில் சித்திரிக்கப்பட்டதுபோல், மனத்தில் புலனாகும். முன் ஜன்மத்தில் அவன் செய்த எல்லாவித தர்மாதர்ம காரியங்களால் உண்டான சுபாசுப வாசனைகள் மரண காலத்தில் அவனுக்கு வெளிப்படையாகத் தோன்றி, வரும் ஜன்மத்தின் சுபாவமாகும். அதாவது இந்த ஜன்மத்தில் செய்த கருமங்களின் வாசனைகள் மரணகாலத்தில் யதார்த்த ரூபமாக ப்ரத்யக்ஷமாகி, வரப்போகும் ஜன்மத்திற்கு மூலமாகும். இவ்விஷயத்தை ஸ்ரீமத் சங்கராசாரியர் பின்வருமாறு தம் கீதாபாஷ்யத்தில் குறித்துள்ளார்.

> "ஜன்மாந்தர க்ருதோ தர்மாதி ஸம்ஸ்காரோ மரணகாலே
> அபிவ்யக்த ஸ்வபாவ உச்யதே."

இதுவே அந்த்யப்ரத்தியயம் என்று வேதாந்த சாஸ்திரத்தில் வழங்கப்படுகின்றது. ஜன்ம ஆதியிலிருந்து ஸ்மரணரூபமாக அப்பியசிக்கப்பட்ட எண்ணமே அந்தியகாலத்தில் மனதில் உதிக்குமே தவிர வேறு எண்ணம் அக்காலத்தில் ஜீவனிடம் உதியாதல்லவா? இதனால் கீதையிலும்,

"ஆதலால் எக்காலும் அவ்வண்ணமே நின்றுநினை" கீ. வெ. VIII. 7.

என்றும்,

> "அந்தக்காலத்திலும் ஆங்கு என்னையே நினைந்திங்கு
> இந்தவுடலினை விட்டு ஏகுமவன்—சிந்தைநிகழ்

எந்தன்மை தான்எய்தும் ஈங்குஇதனில் சங்கைசேர்
தந்தன்மை ஒன்றில்லை தான். கீ. வெ. VIII. 5.

என்றும் பகவான் சொல்லியிருக்கிறார்.

தாத்பரியம்.—அந்தியகாலத்தில் என்னை மாத்திரம் நினைத்துத் தேகத்தை விட்டு எவன் பிரயாணம் செய்வானோ, அவன் எனது ஸ்வரூபத்தை அடைகிறான். இந்த விஷயத்தில் சந்தேகம் இல்லை.

அதுபோலவே வேறு எந்தெந்த எண்ணத்துடன் ஜீவன் சரீரத்தைவிட்டு நீங்குகிறானோ, அவ்வெண்ணத்தையே மறுஜன்மத்தில் அவன் அடைகிறான். அவ்வித "அந்த்ய ப்ரத்யயம்" ஜன்மத்தின் ஆதியிலிருந்து அப்பியசிக்கப்பட்ட மனோவ்ருத்திகளை அனுசரித்திருக்கும். அதனால் எக்காலத்திலும் எந்த அவஸ்தையிலும் பகவானை நினைப்பவன் எப்போதும் அவ்வெண்ணத்தையே உடையவனாகி, மரணகாலத்திலும் அப்பகவானிடத்தில் மனத்தை ஊன்றி, அவனை அடைவான். இறக்குந்தருணத்தில், வரப்போகும் ஜன்மகதியை நிர்ணயிப்பதற்குத்தகுந்த முக்கியமான வியாபாரத்தில் ஜீவனுடைய மனது ஆழ்ந்திருக்கும். அக்காலத்தில் சுற்றிலுமுள்ளோர் தம் அழுகைத்தொனியாலும், துக்கமொழிகளாலும் அந்த ஜீவனுடைய மனத்தைச் சலிக்கச்செய்வது மிக்கதோஷமானது. அச்சமயத்தில்ஆத்மபந்துக்கள்தமது மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, அந்த ஜீவன் நற்கதியை அடையவேண்டுமெனத் தியானம் செய்து பகவன்நாமசங்கீர்த்தனம் செய்தால்தான், அவர்கள் ஆத்மபந்துக்களென அழைக்கத் தகுதியுடையவராவர்.

ஜீவாத்மா பூலோகத்தில் வர்த்திப்பதற்கு ஸ்தூல சரீரமும், அதைச் சுற்றிலும் வியாபித்துப் பிராணனுக்கு இருப்பிடமான ஸ்தூலசரீர பிரதிபிம்பமாகவிருக்கும் சாயா சரீரம் எனப்படும் பிராணமய கோசமும், இதற்குமேலாயுள்ள புவர்லோக சுவர்லோகங்களில் வர்த்திப்பதற்கு, அவைகளுக்கு அனுகுணமான சரீரங்களையும் தரித்துக்கொள்ளுமென்று முன்னே கூறினோம். இந்த லோகங்களெல்லாம் பகவானது ஸ்ருஷ்

டியில் சேர்ந்தவைகளே. பிரப்பாண்டத்தின் பாகங்களாக அவை இருப்பதால், ஜீவன் ஒரு லோகத்திலிருந்து மற்றொரு லோகத்தை அடைந்தபோது, அப்பிரம்மாண்டத்திலேயே வேறு வேறு பாகங்களில் அவன் வசிப்பவனே அல்லாது, அவன் நசிப்பவன் அல்லன். ஸாமான்யமாக உலகத்தில் மனிதன் இறந்துவிட்டான் என்றால், ஜீவன் ஸ்தூல சரீரத்தைவிட்டு சூக்ஷ்ம சரீரத்தில் வர்த்திக்கிறான் என்றே பொருள்கொள்ள வேண்டும். ஜீவனது சரீரங்கள் எல்லாவற்றிலும் சிறியதும், சிறிது காலவளவே இருக்கக்கூடியதுமானது இந்த ஸ்தூலசரீரம். இது பிரயோஜனமற்றபோது, ஜீவன் தன்னுடைய பிராணனையும், இந்திரியங்களையும், மனத்தையும் ஸ்தூல சரீரத்திலிருந்து விடுவித்துக்கொண்டு, பூலோக வியாபாரத்திலிருந்து தன்னை மீட்டுக்கொண்டு, அவைகளுடன் சூக்ஷ்ம லோகத்தில் வர்த்திப்பவனாகிறான். ஜீவன் வெகுகாலம் ஸ்தூல சரீரத்தில் அபிமானத்துடன் வர்த்திப்பதால், அதன்மேலுள்ள அபிமானம் முற்றி, அதற்கும் தனக்கும் உள்ள சம்பந்தம் நீங்கியபோதிலும் அதைவிட்டுப் போகமுடியாமல், அதற்கு சமீபத்திலேயே மேற்கூறிய சாயாரூபத்துடன் திரிந்துகொண்டிருக்கும். அக்காரணத்தால் ஜீவன் பிரேதரூபத்துடன் இறந்த இடத்தையும், சரீரத்தை எரித்த இடத்தையும் சுற்றித்திரிந்துகொண்டு சிறிது காலம் இருக்குமென்பதும், பல தடவை அந்த இடங்களில் சிலரது கண்ணுக்கு அது புலனாகுமென்பதும் உலகப்பிரசித்தியாக உள்ளன. மற்றும், ஸ்தூல சரீரத்தை விட்ட மாத்திரத்தில், ராகத்வேஷமாவது இதர மனோவிருத்திகளாவது ஜீவனை விடாவாதலின், ஜீவன் தான் பிரியம் வைத்தவர்களுக்கு காணப்படவேண்டுமென்ற இச்சையாலும், தன் மனத்திலுள்ள கோரிக்கைகள் சிலவற்றை அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்ற ஆசையாலும், அந்த இடங்களில் காணப்பெறுவதற்கும், அவ்வபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்கும் சில சமயங்களில் வீண்முயற்சி செய்யும். ஆயினும் பூலோகசம்பந்தமான ஸ்தூல அவயவங்கள் அதற்கு இல்லாமையால், ஸ்தூல சரீர வாசிகளுக்குத் தெரியும்படி வார்த்தையாடும் சக்தி அத

ற்கு இராது. தான் பூலோகத்தைவிட்டுப் போனாலும் அவர்களுக்கு எவ்விதத்திலேனும் தன் இச்சையைத் தெரிவிக்க எண்ணி, அது அசங்கிதமான சப்தங்களைச் செய்வதுமுண்டு. அவர்களுக்கு காணப்படவேண்டுமென்ற எண்ணம் சிலரிடம் அதிகமாக இருப்பதால், வெகுவித பிரயத்தனத்தால் அந்த ஜீவன் ரூபத்தை எடுத்துக்கொண்டு, கண்ணுக்குப் புலனாவது முண்டு. இப்படிக் காணப்படுவது ஜீவனது சாயாசரீரமே.

அப்போது ஜீவாத்மா ஸூக்ஷ்ம சரீரத்தையும், சாயாசரீரத்தையும் தரித்து வர்த்தித்துக்கொண்டிருக்கும். அப்போது ஜீவன் கண்ணுக்குக் காணப்பட்டால், அத்தரிசனம் பயத்திற்குக் காரணமானதென எண்ணுதல் தவறு. அநேகமாய் சரீரத்தை விட்டுப்போன ஜீவன் தேகதாரிகளாக இருக்கும் இஷ்டர்களிடத்திலுள்ள பிரியத்தால் அவர்களது சமீபத்தில் திரிந்து, அவர்களது கண்ணுக்குப் புலனாகித் தன் மனத்திலுள்ள எண்ணங்களைத் தெரிவிக்கப் பார்ப்பதால் அத்தரிசனம் ஏற்படுகிறதேதவிர வேறல்ல. அவ்வித ரூபங்களைப் பிசாசங்கள் என்றும், பயத்திற்குக் காரணமானவை என்றும், துன்பத்தைக் கொடுக்கக்கூடியவை என்றும் எண்ணுவது மதியீனம். அவ்வித ரூபத்தைக் கண்டவர்கள் தம் மனத்தைத் தைர்யப்படுத்திக்கொண்டு, அது மறையவேண்டுமெனத் திடமாக எண்ணினால் அது உடனே மறைந்துபோம். அவ்விதத் தோற்றத்தால் தீமை விளையுமென்று பலமுறை நினைத்துப் பயப்படுவதினாலேயே தீமை உண்டாகுமே ஒழிய, இறந்தோருக்கு அவ்விதத் தீமையை விளைப்பதற்கு இஷ்டமேனும் சக்தியேனும் கிடையாது. ஆயினும், சிலர் இறக்கும்போது பொறாமையும், கோபமும் நிரம்பி இறந்தால், தமது கோபத்தைக் காட்டவேண்டுமென்ற உத்தேசத்தால் பயங்கர ரூபத்தைத்தரித்து, தமக்குப் பகையாய் உள்ளவருக்குக் கட்புலனாவார்கள். அப்போது அன்னோர் ஸ்திரமான மனத்துடன் பயமற்றவர்களாயிருந்தால், எவ்விதத் தீமையும் அவர் அடையப்பெறார். மறைந்துபோகும்படி திடமாக அவர் எண்ணினால், அது மறைந்துபோம்.

ஸ்தூல சரீரம் எவ்வளவு விரைவாக நசித்துப்போமோ, அவ்வளவு விரைவாக அதை அனுசரித்து சாயா சரீரமும் நசித்துப்போகும். அதனால்தான் சவத்தைப் புதைப்பதைக் காட்டிலும் எரித்துவிடுவது மேலானதென்று, சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஸ்தூல சரீரமாகிய சவம் சாம்பலாகப்போனால், சாயாசரீரமும் நசித்துப்போய், இரண்டும் பஞ்சபூதங்களில் கலந்துபோம்.

இறக்குங்காலையிற் செய்யும் கிரியைகளும், தகனகாலத்திற் செய்யும் கிரியைகளும், அதன்பிறகு செய்யும் உத்தரகிரியைகளும் ஜீவன் ஸ்தூல சரீரத்திலிருந்து சுலபமாக வெளியேறுவதற்கும், அவனது சாயாரூபம் சுலபமாக நசிப்பதற்கும், ஜீவன் பூலோகவாசனைகளை நீக்கி மேலோக ப்ராப்தியை எளிதில் அடைவதற்கும் முறையே கருவிகளாக விதிக்கப்பட்டுள்ளன. உத்தரகிரியைகள் செய்கிறவர்கள், இக்கருமங்களின் பிரயோசனத்தைத் தெரிந்துகொண்டு, இவ்வுலகைத் தாண்டிப்போன ஜீவனுக்கு மேலோககதி எளிதிற் கிட்டக்கடவதென்று அதிக திடமான எண்ணத்துடன் அக்கருமங்களைச் செய்தால், அக்கிரியைகள் நற்பலனை விளைவிக்கும். அவ்வித நற்பலன்களைக் கொடுக்கக்கூடிய கிரியைகளைச் செய்த புத்திரனே புத்திரன் எனப்படுவான். "புத்ரபந்தே சகாமணி" என்றும் அந்த்யகர்மம் செய்பவனே புத்திரன்) என்றும், புத் என்ற நரகத்தினின்றும் விடுவிப்பவனே புத்திரனென்றுஞ் சொல்வது மரணாந்திரத்தில் மேலோக ப்ராப்திக்கு அனுகூலமான இக்கருமங்களை சிரத்தையுடன் செய்வதினால் அடையும் பிரயோஜனத்தைக் காண்பிப்பதற்கல்லவா? அவ்விதம் சாந்த மனதுடன் செய்யும் கிரியைகள் பலனைக் கொடுத்து இறந்தவர்களுக்கு மேலோகப் பிராப்தியை விளைவிக்கும். இறந்தவர்களுக்கு சுகப்ராப்தி யாகவேண்டும் என்ற உத்தேசத்துடன் கிரியைகளைச் செய்யாமல், துக்க வியாகூலமுள்ள மனத்தினால் அவற்றைச் செய்தால். அவை யாதொரு பலனையும் கொடா. இறந்தவருக்கு அவைகளால் யாதொரு பலனும் எற்படாது.

இந்த கிரியைகளால் முக்கிய பிரயோசனம் என்னவெனில், ஜீவனை பிரேத லோகத்திலிருந்து பிதிர்லோகத்திற்கு சுலபமாகப் போகும்படி செய்வதே. சாயா சரீரம் பூர்த்தியாக நசிக்கவே, ஜீவனது சூக்ஷ்ம சரீரத்தின் ஸ்தூலபாகம் ஒரு விதமாக மாறி யாதனா சரீர மாகின்றது. அந்த சரீரத்துடன் புவர்லோகத்தின் ஸ்தூல பாகத்தில் ஜீவன் கொஞ்சகாலம் வசிக்கும். பூலோகத்தில் ஜீவித்திருக்கும் காலத்தில் ராகத்வேஷங்களுக் குட்பட்டு, ஆசையுடன் செய்த கருமங்களின் பலன்களை இக்காலத்தில் இந்த லோகத்தில் ஜீவன் அனுபவிக்கும். ஜீவனது ஸ்தூல சரீரமாத்திரம் நசித்ததே ஒழிய, அவனது ஆசாபாசங்களும், காமக்குரோதங்களும், பந்து மித்திர களத்திர புத்திராதிகளிடமுள்ள பிரியமும் நசிக்கவில்லை. பூலோகத்தில் அவ்விதப் பற்றுதலுக்கு மிகுதியாக உட்பட்டிருந்தால், அவை இந்த யாதனா சரீரத்தில் முன்னிலும் அதிகமாக வ்ருத்தியாகி அவைகளை அனுபவிப்பதற்குச் சாதனமாயுள்ள ஸ்தூல சரீரமில்லாததால், அவற்றை அனுபவிக்க முடியாமல், ஜீவன் பரிதபித்துக் கொண்டிருப்பான். இதற்குச் சில திருஷ்டாந்தரங்களை இங்கு எடுத்துக் கூறுவோம். பூலோகத்தில் ஜீவித்திருக்கையில் ஒருவன் சிற்றின்பப் பற்றுடையவனாயிருந்தால், சரீரத்தைவிட்டு ஜீவன் நீங்கியபின், அவனுடைய ஆசை இருமடங்கு அதிகமாகும். சூக்ஷ்ம லோகத்தில் எண்ணங்களும் ஆசைகளும் ரூபத்தைத் தரித்துக்கொள்ளுமென்று முன்னமே கூறினோமல்லவா? மேற்கூறியபடி ஜீவனுக்குச் சிற்றின்பப்பற்றுள்ளதால், காமத்திற்கு ஏதுவான ரூபம் மனதில் எழும். அது இந்த லோகத்தில் ரூபம் எடுத்துக்கொண்டு அவனுக்கு கட்புலனாகும். அந்த ரூபத்தைப் பார்த்துத் தனது கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ளுவதற்கு முயலும். ஆனால் ஸ்தூல சரீரம் இல்லாமையால் அதை அனுபவிப்பதற்குச் சாத்தியமின்றி அதிகமாகப் பரிதபிக்கும். பரிதாபம் அதிகரிப்பதற்குத் தக்கபடி, அந்தரூபமும் திடமாகி, அதற்கனுகுணமாகத் தோற்றத்தால் ஏற்படும் பரிதாபமும் விருத்தியாகிக், கொஞ்சகாலத்திற்குள் அந்தக் கோரிக்கை துக்கத்திற்கு மூலமென்ற ஞானம் ஜீவனுக்கு ஏற்படும். இதுபோலவே அந்த ஜீவன்

தன் ஜீவிததசையில் ருசிபதார்த்தங்களைக் கோரினல், அந்த ஜீவன் யாதனுசரீரத்தி லிருக்கும்போது, அவைகளைப் பல தடவை நினைக்கும். அப்பதார்த்தங்கள் அப்போது ரூபங்களைத் தரித்து அவன் எதிரில் தோன்றி, அவனிடமுள்ள ஆசையை வ்ருத்திசெய்பவே, அவைகளை உண்ணுவதற்கு உபாயமின்றி, ரோகியானவன் அபத்தியமான தின்பண்டங்களைத் தின்னுவதற்கு எண்ணித் துக்கப்படுவதுபோல், பலவாறு ஜீவன் பரிதபிப்பான். இவ்வாறு ஜீவனிடமுள்ள ஒவ்வொரு கோரிக்கையும், அந்த சூக்ஷ்ம சரீரத்தில் வெளிப்பட்டு, ரூபங்களைக் கொண்டு அவனைப் பரிதபிக்கச்செய்யும். இவ்வண்ணம் தான் இச்சித்தவைகிட்டாமையால் வெகுகாலம் துக்கித்து துக்கித்து, கோரிக்கைகளுக்கு உட்படுவது முடிவில் துக்ககாரணமாகுமென்ற ஞானத்தை திடப்படுத்திக்கொண்டால், வரப்போகும் ஜன்மத்தில் இந்த ஞானம் வாசனரூபமாக ஜனிக்கும். ஆதலால் ஜீவனுடைய அஞ்ஞானத்தைப் போக்கடித்து, அவ்வஞ்ஞானத்தால் ஏற்படும் காரியங்களிலுள்ள தோஷங்களை வெளிப்படுத்தி ஞானத்தைப் போதிப்பதற்காக தயாநிதியாகிய பகவான் (மானுந்திரத்தில் வரும் நரகதுக்கமென்பதை) விதித்திருக்கிறரே யொழிய, பாவிகளை எவ்விதமேனும், பாதித்துத் தனது கோபத்தை வெளிப்படுத்துவதற்கு விதிக்கவில்லை. தப்புவழிகளிற் செல்லும் பாலர்களைத் தயவுடன் தகப்பன் சிக்ஷித்து அவர்களுக்கு ஞானத்தைப் போதித்து, அவர்களை அபிவ்ருத்திக்குக் கொண்டுவருவதுபோல், பரமதயாளுவும், உலகத்திற்கெல்லாம் பிதாவுமாகிய சர்வேசுவரன், தனது குழந்தைகளாகிய மனிதர்களுக்கு முதன்முதல் செய்யத்தகுந்த காரியங்களையும் செய்யத்தகாத காரியங்களையும், புண்ணியபாவங்களையும், நன்மை தீமைகளையும் நிரூபித்து, தருமங்களைத் தன் பிரதிநிதிகளான மனு முதலானவர்களால் போதித்து, அந்த மார்க்கத்தில் நடவாத ஜீவர்களுக்கு இந்த லோகத்திலுண்டாகும் துக்கத்தினலும், நரகத்திலுண்டாகும் பரிதாபத்தினலும், தான் போகுமார்க்கம் கெட்டதென்ற ஞானத்தைப் போதிப்பான். இந்த ஞானத்தை அடைவதே நரகதுக்கத்தினல் பெறும் பிரயோசனம். வரும் ஜன்மங்களில் பூர்வ கர்

மத்தை அனுசரித்து, விஷயவாசனைகள் பலமாகயிருந்தும், நரக பாதையிலிருந்து அடைந்த ஞானம் ஜீவனுக்கு சகாயமாகி, அவனை அசுபவாசனைகளிலிருந்து விடுவித்து, அவனிடம் யுக்தாயுக்த விவேகத்தை விருத்திசெய்யும். அப்படிப்பட்டவனை அவனது இந்திரியங்கள் விஷயாசக்தி யுடையவனாகச் செய்துகொண்டிருக்க, அவ்வாறிருப்பது கெடுதலென்று நரகதுக்கத்தால் அவன் அடைந்த ஞானம் அவனிட மிருந்துகொண்டே எச்சரித்துக்கொண்டிருக்கும்.

மேற்கூறியபடி புவர்லோகத்தில் கொஞ்சகாலமிருந்த ஜீவனிடம் ராகத்துவேஷமும், காமக்குரோதமும், ஆசாபாசமும் படிப்படியாக நசிக்கவே, அந்த லோகசம்பந்தமான காமமய சரீரமும் (யாதனா சரீரம்) நசித்துப்போகும். அதன்பிறகு ஜீவன் புவர்லோகத்தின் சூக்ஷ்ம பாகமான பிதிர்லோகத்திற் சேர்ந்து, கேவல விஷயா சக்திக்குச் சம்பந்தமான பரலோக சுகங்களை அனுபவித்து, அதன்பிறகு தேஜோமயமான அம்மய சரீரத்தை எடுத்துக்கொண்டு ஸ்வர்க்கலோகத்தை அடைவான். அந்த லோகத்தில் கேவல விஷயாசக்திக்குச் சம்பந்திக்காத சுகத்தை அனுபவித்து, பூலோகத்தில் பழகியுள்ள சிரத்தாபக்திகள், பிரதி ஒன்றை எதிர்பாராத பிரியங்கள், சாஸ்திர விசாரத்தால் உண்டான ஞானம் முதலிய பல்வேறு பாரமார்த்திக எண்ணங்கள் தன்னைப் பற்றிவர, சந்திர லோகத்தில் ஜீவனுக்கு அவையெல்லாம் ரூபங்களாகி, ப்ரத்யக்ஷமாக அவைகளை யனுபவித்து, அவைகளால் ஏற்படும் ஞானத்தைப்பெற்று, ஜீவன் சுகானுபவங்களை அடையும். பூலோகத்தில் செய்திருந்த நல்ல சங்கற்பங்கள் எல்லாவற்றையும் இவ்வாறு மானசிகானுபவங்களுக்குக் கொணர்ந்து, ஜீவன் அந்தந்த வாசனைகளைத் திடப்படுத்திக்கொள்ளும். எவனிடமேனும் ஜீவிதகாலத்தில் பரோபகாரபுத்தி உண்டாகி, அவன் பிறர்க்கு நானாவிதமாக சகாயம் செய்யப் புகுந்திருப்பின், அவன் ஸ்வர்க்கத்திலும் அவ்வித பரோபகாரச் சிந்தையை உடையவனாய், அநேக ஏழைகள் தன்னை அடுத்திருக்க, அவர்களுக்குப் பலவழிகளிலும் சகாயம் செய்து ஆனந்திக்கும்படியான மானசிகானந்தம் அடைவான்.

மற்றும், ஒருவன் ஜீவிதகாலத்தில் ஏதாவது ஒரு சாஸ்திர விசாரம்செய்து காலத்தைக் கடத்திவந்தால், அவன் ஸ்வர்க்கத்தில் அந்த சாஸ்திரத்தையே மிகுதியாக ஆராய்ச்சிசெய்து, தனக்கு உண்டாகும் சந்தேகம் முதலியவற்றை மநநத்தினுலும் ஸ்வர்க்கவாசிகளான சாஸ்திர பண்டிதர்களின் உபதேசத்தாலும் தீர்த்துக்கொண்டு, அந்த சாஸ்திர ஞானத்தை விசேஷமாக அபிவிருத்தி செய்துகொண்டு, சுகானுபவங்களை அடைந்துக்கொண்டிருப்பான். பூலோகத்தில் எவ்விதமான படிப்பை எவ்வளவு பரிபூரணமாகச் செய்திருந்தானே, அதற்குத் தகுந்தவாறு ஸ்வர்க்கலோகத்தில் அதன் சம்பந்தமான அறிவை வ்ருத்தி செய்துகொண்டு, பல ஜன்மங்களிலும் அந்த சாஸ்திர ஞானத்திற்கு அனுகூலமான திடவாசனைகளோடு பிறப்பான். உலகத்தில் ஜனங்களுக்குள் சிலர் ஒரு சாஸ்திரத்தில் பால்யமுதல் தேர்ச்சி உடையவர்களாய் இருப்பதையும், இதர சாஸ்திரங்களில் சிறிதும் அவர் தம்புத்தியைச் செலுத்த முடியாமலிருப்பதையும் அனுபவத்தில் காண்கின்றோம். ஒவ்வொருவர் அதி பால்யமுதல் சங்கீத சாஸ்திர வல்லவராக இருக்க, வேறு சிலர் அதிகமாக முயன்றாலும் அந்த சாஸ்திரத்தை கிரகிக்கக்கூடாமலிருக்கிறார்கள். இதுபோலவே சிலர் கணித சாஸ்திரத்திலும், மற்றும் சிலர் வியாகரணம் முதலிய சாஸ்திரங்கள் ஒன்றிலும் இளமைமுதல் தமது திறமையை வெளிப்படுத்துகிறார்கள். அவர்களது புத்திவிசாலம் மற்ற விஷயங்களில் காணப்படுகிறதில்லை. இதனால், அவர்கள் எல்லோரும் பூர்வஜன்மத்தில் அந்தந்த சாஸ்திரத்தில் அதிகமாகப்பழகி, ஸ்வர்க்கத்தில் அதன் சம்பந்தமான வாசனைகளைத் திடப்படுத்திக்கொண்டு, அவைகளுடன் ஜனித்தார்களென நாம் அறியவேண்டும்.

இவ்வாறு ஜீவன் இந்தலோகத்திற் பிறந்து, பூர்வகர்மானுசாரமாக சுகதுக்கங்களை அனுபவித்துப் புதிய கருமங்களைச் செய்து சரீரமுடிவில் நரகசம்பந்தமான துக்கங்களையும் அதன் பிறகு ஸ்வர்க்க சுகங்களையும் அனுபவித்துப் படிப்படியாய் தன் ஞானத்தை விருத்தி செய்துக்கொள்ளுகிறான்.

நரகத்தில் அனுபவிக்கும் துக்கமும், ஸ்வர்க்கத்தில் அனுபவிக்கும் சுகமும் புருஷார்த்த சாதனமாகிய ஞானத்தை வ்ருத்தி செய்துகொள்ளும்பொருட்டு ஏற்படுத்தப்பட்டவையே ஒழிய, கேவலம் சுகதுக்கங்களைக் கொடுப்பதற்காக ஏற்பட்டவை அல்ல என்பது அடிக்கடி வற்புறுத்திச் சொல்லவேண்டிய விஷயம். ஓர் வாலிபன் பாடசாலையில் படிக்கும்போது அவனது ஞானபிவிருத்தியின் பொருட்டு உபாத்தியாயர் ஒரு சமயம் அவனைத் தண்டிப்பர்; மற்றொரு சமயம் அவனுக்கு உத்சாகம் கொடுக்கும்பொருட்டு வெகுமதி கொடுப்பர். காலத்திற்கேற்ப அடையும் தண்டனையும், வெகுமதியும் ஞானத்தை அபிவிருத்திசெய்யும் சாதனங்களாகும். அவைகளால் வேறு பிரயோஜனம் இல்லை.

பாடசாலைக்குப்போகும் பாலன் வித்தியாபிவ்ருத்தியின் பொருட்டுப் போவானேயன்றி, வெகுமதி பெறுவதற்கும், தண்டனை அடைவதற்கும் போவதில்லை. அதுபோலவே, நரகத்தின் துக்கமும், ஸ்வர்க்கத்தின் சௌக்கியமும் புருஷார்த்த சாதனமாகிய ஞானத்தைச் சம்பாதிப்பதற்கு சாதனங்களே ஒழிய வேறில்லை. ஆதலால், ஜீவனுக்கு பூலோகம், நரகம், ஸ்வர்க்கம் ஆகிய மூன்று லோகங்களும் ஞானசாதனமாகும் பாடசாலை போன்றுள்ளன. பரமதயாநிதியான ஜகதீசுவரன் குழந்தைகளாகிய மனிதரின் அஞ்ஞானத்தை நீக்கி, அவரை பரிபூர்ண ஞானிகளாகச் செய்வதற்காக ஒருதடவை நரக துக்கத்தையும், மற்றொருதடவை ஸ்வர்க்க சுகத்தையும் கொடுத்து, ஜீவர்களை ஈடேறச்செய்கிறார். எப்போதேனும் சுகதுக்கங்கள் நேரிட்டால் அவற்றிலிருந்து அடையும் ஞானத்தை ஊகித்தறிந்து, அதை அனுசரியாதிருப்பின், அந்த சுகதுக்கானுபவங்கள் பிரயோஜனமற்றவை யாகின்றன. அவைகளிலிருந்து அடையத்தகும் ஞானம் பூர்த்தியாகக் கிடைக்கும்வரை, அந்த சுகதுக்கங்களை மறுபடியும் மறுபடியும் அனுபவித்தே தீரவேண்டும். அந்த ஞானத்தைப் பூர்ணமாக அடைந்தால், மேற்கூறிய அனுபவங்கள் வேண்டியதே இல்லை.

இம்மாதிரி பூலோகத்தில் செய்த பலவித கருமங்களி லிருந்தும், திரிலோகங்களில் நானுவித அனுபவங்களிலிருந் தும் சாரமான ஞானத்தை அடைந்து, அதற்குச் சம்பந்த மான சுபவாசனைகளை ஒவ்வொருவனும் திடம்செய்து கொள் ளவேண்டும். குடியானவன் ஒருவன் கொஞ்சகாலம் தன் பூமி யில் பாடுபட்டு விவசாயம்செய்து, அதன் விளைவை வீடுசேர் த்து, அதை சாவகாசமாக அனுபவித்து இன்பம் அடைவது போல, ஜீவன் சிறிதுகாலம் பூலோகத்தில் காரியங்களைச்செ ய்து, அதன்பிறகு மேல் லோகத்தில் அக்கருமங்களை நிதான மாக மநநஞ்செய்து, அக்கருமங்களின் பலன்களாகிய சுகதுக் கங்களை அனுபவித்து, அவற்றின் சாரமான ஞானத்தை அடை வான். இவ்வாறு, பூலோகத்தில் செய்த புண்ணிய கருமங்க ளால் வெகுகாலம் ஸ்வர்க்கலோகத்தில் இருந்து, அப்புண்ணியம் குறையவே, அந்த லோகத்தில் ஜீவனது அம்மய சரீரமும் நசி த்துப்போகும். அப்போது ஜீவன் விஞ்ஞானமய கோசத்தி லிருந்துகொண்டு, அநேக ஜன்மங்களின் கர்ம பலன்கள் பீஜ ரூபங்களாக அந்த விஞ்ஞானமய கோசத்தி லிருப்பதால் அவை மறுபடியும் வெளித்தோன்றும் காலம் கிட்டியவுடன் ஜீவன் மறு ஜன்மத்திற்குத் தயாராக இருப்பான். கர்மானு சாரமான சுபாசுப வாசனைகளை அவன் அப்போது அடைவான். புதிதான மனோமய கோசம் சுவர்லோகப் பிரகிருதியுடனும், பிறகு காமமயமான சூக்ஷ்ம சரீரம் புவர்லோகப் பிரகிருதியுட னும் அச்சமயத்தில் அவனுக்கு தேவதைகளின் சகாயத்தால் நிர்மிக்கப்படுகின்றன. இன்னும் ஜீவனது கர்மானுபவத்திற்கு அனுகூலமானதும், தேசகாலங்களின் அனுகுணமானதுமான குடும்பத்தில் ஸ்தூல சரீரத்துடன் ஜீவன் உதிப்பான். கர்மபல னைக் கொடுக்கும் கர்ம தேவதைகள் ஜீவனுடைய மறு ஜன்மத் தின் பிராரப்த அனுபவத்திற்குத் தகுந்தவாறு, தேசம், காலம், ஜாதி, குடும்பம் முதலியவைகளை விதித்து அவனை ஜன்மம் எடுக் கும்படி செய்கிறார்கள். இவ்விதம் விதிக்கப்பட்ட தேசகாலாதி களில்ஜனித்து, பூர்வ கர்மானுசாரமாகிய வாசனைகளை அடைந்து ஜீவன் வர்த்தித்துக் கொண்டிருப்பான். இவ்வாறு ஒவ்வொரு

ஜன்மத்திலும் கருமங்களைச் செய்துகொண்டு, கர்ம பலன்களை அனுபவித்து, அக்கர்மானுபவத்தால் ஞானம் வ்ருத்தியாக வாக, முன்னுள்ள அசுபவாசனைகளுக்கு உட்படாமல் அதிக முயற்சியுடன் அந்த அசுபவாசனைகளைத் தொலைத்து, சுபவாசனைகளைத் தன்னிடம் திடப்படுத்தி நாளடைவில் ஞானவிருத்தியடைந்து தேகேந்திரிய மனோமலங்களை அடியோடு களைந்து எப்போதும் தியான யோகங்களில் தன் மனத்தைச்செலுத்தி, முடிவில் ஜீவன் பரம புருஷார்த்தத்தை அடைகிறான்.

"அநேக ஜன்மஸம்ஸித்தஸ்த தோயாதி பராங்கதிம்" கீதை.

---

9 - வது அத்தியாயம்.

தேக பீஜங்கள்; பூத சூக்ஷ்மங்கள்.

ஜீவாத்மா ஈசுவராம்சமென்றும், ஈசுவரனிடம் ஒடுங்கி அகங்கார தத்துவத்தில் இருக்குமென்றும், பஞ்ச பூதங்களாகிய பிரபஞ்சத்தில் வெளியாகும்பொருட்டு ஒவ்வொரு தத்துவத்திலிருந்து ஒவ்வொரு அணுவை எடுத்துக்கொண்டு, அவைகளை அந்தந்த லோகத்தில் தன் சரீரத்திற்கு மூலமாக எடுத்துக்கொள்கிருனென்றும், அந்த அணுக்களே ஜீவனுக்கு ஏற்படும் சரீரத்திற்கு பீஜங்களாகின்றனவென்றும் பூர்வ அத்தியாயத்தில் (IV-ம் அத்.) கூறினேம். இவ்விஷயத்தை இங்குச் சற்று விவரித்துக் கூறுவோம்.

முதன்முதல் ஜகதீசுவரன் சிருஷ்டியை உத்தேசித்து "பகுஸ்யாப்ப்ரஜாயேய," (யான் பலவாக ஆகுக) என்று சங்கற்பிக்கவே, அவன் அம்சங்களான ஜீவாத்துமாக்கள்வெளிப்பட்டு, காலக்கிரமத்தில் பஞ்சபூதங்களாலாகிய பிரபஞ்சத்தில் தோன்றுவார்கள். ஜீவாத்துமாக்கள் ஆகாசதத்துவத்தில் ஒருஅணுவும், வாயுதத்துவத்தில் ஒரு அணுவும், தேஜஸ் தத்துவத்தில் ஒரு அணுவும் எடுத்துக்கொண்டு, தங்களை வெளிப்படுத்திக்கொள்ளுகிறுர்கள். இந்த அணுவின் கூட்டமே, ஒவ்வொரு ஜீவனுக்கும் சரீரமாகி, முக்திவரை அவனை யடுத்திருக்கும். இதுவே ஜீவனுக்கு அநாதியான அவித்தை என்று சொல்லப்படுகின்றது. மற்றும், இப்படி பிருதுவி தத்துவத்திலிருந்து ஒருபூத சூக்ஷ்மமும், அப்புவிலிருந்து ஒரு பூத சூக்ஷ்மமும், தேஜஸ் தத்துவஸ்தூல பாகத்திலிருந்து ஒரு பூத சூக்ஷ்மமும் எடுத்துக்கொண்டு, ஜீவன் அவைகளை அன்னமய,பிராணமய, மனோமய கோசங்களுக்குப் பீஜங்களாகச் செய்துகொள்ளுகிருன். இந்தசூக்ஷ்மங்களே எல்லா ஜன்மத்திலும் ஜீவனை அடுத்திருந்து, ஜீவனது சுபாசுப வாசனைகளுக்கு இருப்பிடமாகி, சமஸ்த சரீரங்களுக்கும் பீஜ ரூபங்களாக விருக்கும். அதனுல் அவை வேத வேதாந்த கிரந்தங்களில் தேக பூதங்களாகிய பூத சூக்ஷ்மங்களை

ன்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. சங்கராசாரியர் எழுதிய முண்டகோபநிஷத் பாஷ்யத்திற்கு ஸ்ரீமத் ஆநந்த ஞானியார் எழுதிய தமது டீகையில் இவ்விஷயத்தைப் பற்றித் தெளிவாய் எழுதியிருக்கிறார்.

''மாயாமய மகா பூதானும் அம்சா வஷ்டப்தே:

ஜீவாவித்யாமய பூதசூக்ஷ்மை: ப்ராதிஸ்விகை: அதிர்ஷ்ட
சஹ்ருதை: ப்ராதிஸ்விசா: ப்ராணாதய ஆரப்யந்தே''

இந்த சூக்ஷ்மங்கள் ஜீவன் முக்தி யடையும்வரையிலும் வாயுதத்துவப் பிரகிருதியினாலாகிய ஜோதிர்மயமான ஒரு சூத்திரத்தால் (நூல்) ஜீவாத்மாவுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன வென்று திவ்விய திருஷ்டியினால் பார்க்கும் மகாத்மாக்கள் சொல்லுகிறார்கள். ஜீவன் ஒவ்வொரு லோகத்திலும், அதன் சம்பந்தமான சரீரத்தைத் தரிக்கும்போது, அந்த சூக்ஷ்மத்திலிருந்து அவ்வித ஜோதிர்பயமான சிறிய சூத்திரங்கள் அநேகம் வெளிப்பட்டு, அந்தந்த சரீரங்களை ஜோதிர்மயமான வலையைப் போல் கெட்டியாகச் சுற்றிக்கொள்ளும். அதனால், ஜீவிதகாலத்தில் ஜீவனது அன்னமய பிராணமய கோசங்களைச் சுற்றி பிருதிவி சூக்ஷ்மத்திலிருந்து ஒரு ஜோதிர்மயமான வலையும், புவர்லோகத்தில் மனோமயகோச சம்பந்தமான சரீரத்தைச் சுற்றி மற்றொரு வலையும், சுவர்லோகத்தில் மனோமயகோச சம்பந்தமான சரீரத்தைச்சுற்றி மூன்றாவது வலையுமிருக்கும். ஸ்தூலதேக சம்பந்தமான வலை, ஹ்ருதயத்திலிருந்து வெளிப்பட்டு அடிமுதல் முடிவரை வியாபித்திருக்கும். இவ்விஷயம் உபநிஷத்திலும் கூறப்பட்டுள்ளது.

வஹ்நிகோடிப்ரதீகாஶம் ஹ்ருதயகுஹாவ்ருத்யோமுகம் |
தஸ்யமத்யே மஹாநாடீ விஶ்வார்சிர்விஶ்வதோமுக: ||

ஸோமஸூர்யாக்நிஸஞ்ஜ்ஞ திஷ்டதாஹார ஸஜாஸ்கவி: |
த்ரியம்பகம் யஜ்ஞயஸ்யாமீ ஸூர்யஸ்யஸம்ததா: ||

𑌸𑌂𑌤𑌾𑌪𑌯𑌤𑌿 𑌸𑍍𑌵𑌂 𑌦𑍇𑌹𑌮𑌾𑌪𑌾𑌦𑌤𑌲𑌮𑌸𑍍𑌤𑌕𑌃 ।
𑌨𑍀𑌲𑌤𑍋𑌯𑌦𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌥𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌲𑍍𑌲𑍇𑌖𑍇𑌵 𑌭𑌾𑌸𑍍𑌵𑌰𑌾 ॥

𑌨𑍀𑌵𑌾𑌰𑌶𑍂𑌕𑌵𑌤𑍍𑌤𑌨𑍍𑌵𑍀 𑌪𑍀𑌤𑌾 𑌭𑌾𑌸𑍍𑌵𑌤𑍍𑌯𑌣𑍂𑌪𑌮𑌾 ।
𑌤𑌸𑍍𑌯𑌾𑌃𑌶𑌿𑌖𑌾𑌯𑌾𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥

(தைத்திரீயம்.)

இந்த ஸ்தூலதேக சம்பந்தமான சூத்திரம் பொன்வர்ணத்துடன், கார்மேக மத்தியில் விளங்கும் மின்னற்கொடிபோல் பிரகாசித்து, நீவாரதானியத்தின் வால்போல் அதி சூக்ஷ்மமாய் சரீரத்தில் ஆங்காங்கு வியாபித்து, ஆகாரத்தை நன்றாய் ஜீரணித்து சரீரத்திற்குச் சூட்டைக் கொடுக்கிறது. சரீரத்தில் காணப்படும் உஷ்ணத்திற்கு இதுவே மூலம். இந்த சூத்ரம் ஜீவிதகாலத்தில் இருதயத்திலிருந்து மேற்பாகங்களுக்கும், கீழ்பாகங்களுக்கும், பக்கங்களுக்கும் பாவுகின்றது. மரணகாலத்தில் இது தேகத்தைவிட்டு, தேகபீஜமாகிய அணுவைமாத்திரம் கைக்கொண்டு, அதைக் கெட்டியாய்ச் சுற்றிக்கொள்ளும். அதன்மேல் சரீரத்தின் உஷ்ணமெல்லாம் தணிந்துவிடும். அப்போது தேகம் இறந்துபோகும். இதுபோலவே மேல் லோகத்தில் யாதனா சரீரத்தோடு, புவர்லோகானுபவம் பூர்ணமானவுடன், அத்தேக சம்பந்தமான வலை அந்த சரீரத்தைவிட்டு, அப்பு தத்துவ சம்பந்தமான அணுவைமாத்திரம் சுற்றிக்கொள்ள யாதனா சரீரமும் நசித்துப்போம். இதுபோலவே, ஸ்வர்க்க லோகானுபவ முடிந்தவுடன், அந்த லோக சரீரத்தைச் சுற்றியிருக்கும் வலை அந்த சரீரத்தையும் நீக்கி, அந்த தேகபீஜமான அணுவை மாத்திரம் சுற்றிக்கொண்டு, மேற்கூறிய அணுக்கள் மூன்றுடன் விஞ்ஞானமய கோசத்தில் சேரும். அதன்பிறகு, ஸ்வர்க்க லோகசம்பந்தமான அம்மய சரீரம் நசிக்கும். ஜீவன் இவ்விதம் விஞ்ஞானமய கோசத்தைச்சேர்ந்து மறு ஜன்மத்தை எதிர்பார்த்திருக்கும்போது, அந்த ஜன்மத்தில் அடையத்தகும் ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களுக்கு பீஜங்களான சூக்ஷ்மங்களையுடையவனாதலால், பூர்வ கர்மானுசார

மாக சரீரங்களை காலக்கிரமத்தில் மறுபடியும் அடையக்கூடும். மனிதன் ஒவ்வொரு ஜன்மத்திலும் நானுவிதமான கர்மங்களைச் செய்கிருனல்லவா? அவ்வித கர்மங்களுக்கு அனுகுணமாகிய வாசனைகளை அடைந்து, ஜீவன் ஜன்மாந்திரத்தை அடைகிருன். அந்தந்த ஜன்மத்தின் ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்கள் அந்தந்த ஜன்மாந்தரத்தில் நசித்துப்போகவே, மேலே கூறப்பட்ட வாசனைகள் சூக்ஷ்மங்கள் மூலமாக ஜீவனை அடுத்திருக்கும். ஸ்தூல சரீரத்தினுல் செய்யப்படும் சமஸ்த கர்மங்களும், அவற்றிலுண்டாகும் சகல அனுபவங்களும், பிருதிவி தத்துவ சம்பந்தமான சூக்ஷ்மத்தை ஒருவிதமாக மாற்ற, அதில் ஒருவித அசைவு உண்டாகும். அந்த அனுபவங்கள் மறுபடியும் உண்டாக உண்டாக, அதற்கு அனுருணமான சலனம் அதில் பிறப்பதால், அவ்வாறு சலிக்கும் சுபாவம் திடமாகின்றது. இவ்விதமாக, ஜீவிதகாலமெல்லாம் ஸ்தூல சரீரத்தால் செய்யப்படும் எல்லாக் காரியங்களும் அனுபவிக்கப்படும். சுகதுக்கங்களெல்லாம் அந்த பூத சூக்ஷ்மத்தில் சலனத்தை யுண்டாக்கி, அதனதன் அனுகுணமான சுபாவத்தை உண்டாக்குகின்றன. மரணகாலத்தில் ஸ்தூல சரீரம் நசிக்கவே, இந்த சூக்ஷ்மம் மாத்திரம் ஜீவனை அடுத்திருக்கும். பூலோகத்தில் பிரவிர்த்திப்பதற்குச் சக்தியற்று, ஜீவன் யாதனு சரீரத்தில் மேல் லோகத்தில் வர்த்திக்கும் காலத்தில், இந்த சூக்ஷ்மம் எவ்வித காரியமுமின்றி நித்திரை செய்வதுபோ லிருக்கும். புவர்லோக சுவர்லோகானுபவங்களாகிய பாவ புண்ணியங்கள் நசித்துப்போய் ஜீவன் மறுபடியும் பூலோகத்தில் ஜனிப்பதற்குத் தயாராகவிருக்கும்போது, இந்த சூக்ஷ்மங்களில் பூர்வ கர்மானுசாரமான சலனம் மறுபடியும் உண்டாகி, அக்கர்மம் வெளியாவதற்குத் தகுந்த பிரக்ருதி சமுதாயங்கள் பூலோகத்திலிருந்து இழுக்கப்படுவதால் ஜீவனுக்கு ஸ்தூல சரீரம் உற்பத்தியாகின்றது. ஜீவனது சுபாசுப வாசனைகளெல்லாம், அந்த சூக்ஷ்மங்களில் அடங்கியிருந்து, மறு ஜன்மங்களில் வெளிப்பட்டு அவனது சுபாவமாகின்றன. கீதா சாஸ்திரத்தில் 3-வது அத்தியாயத்திலுள்ள "சத்ருஸம் சேஷ்டதே ஸ்வஸ்யா: ப்ரக்ருதேர்ஞானவா

நபி" "ப்ரக்ருதிம்யாந்தி பூதானி" என்ற ஸ்லோகத்திலுள்ள பிரகிருதி சப்தமும்,

> "த்ரிவிதா பவ்திஸ் ரத்தா தேஹிநாம் சாஸ்வ பாவஜா"
> "பிரம்ம கர்ம ஸ்வபாவஜம்" XVII. 2.

என்ற வாக்கியங்களிலுள்ள ஸ்வபாவ சப்தமும் இந்த அர்த்தத்தையே போதிக்கின்றன.

ஒரு ஜன்மத்தில் எந்த வித்தையிலாவது ஆராய்ச்சி மிகுதியாகச் செய்தால், அக்காலத்தில் இந்த சூக்ஷ்மங்கள் அதற்கு அனுகுணமாகச் சலித்துக்கொண்டே யிருக்கும். மறுபடியும் எப்போதேனும் அந்த வித்தையை அப்பியசித்தால் பூர்வ அப்பியாச பலத்தால் அந்த வித்தை அவனுக்கு மிகவும் சுலபமாகவரும். ஜன்மம் மாறி வேறொரு சரீரம் வந்தாலும் பூத சூக்ஷ்மம் ஜன்மத்திற்கு ஜன்மம் மாறாதிருப்பதால், பூர்வ அப்பியாச வாசனையின் பலத்தினால் அவ்வித்தை அந்த ஜீவனுக்கு சுலப சாத்தியமாகும். இந்த மாதிரியாக நானாவித அனுபவங்களும், கர்மங்களும் இந்த பூத சூக்ஷ்மத்தில் ஸ்திரமாக நின்று, அநேக ஜன்மங்களுக்குக் காரணங்களாகின்றன. ஆயினும், ஜீவன் சுகதுக்கானுபவங்களால் ஞானத்தை அடைந்து இகலோக விஷயங்களில், வைராக்கியத்தை விருத்தி செய்து கொண்டால், படிப்படியாய் விஷயப் பற்றற்ற வாசனைகள் உற்பத்தியாகி விருத்தியடையும். முன்னிருந்த விஷய வாசனைகள் காலக்கிரமத்தில் நசித்துப்போம். இவ்வித வாசனைகள் நசிக்க நசிக்க, ஜன்மமில்லாமற் போவதற்கு ஏதுவுண்டாகும்.

மற்றும், இவ்விதபுருஷன் காமக்குரோதாதிகட்குட்படும் போதெல்லாம், சூக்ஷ்ம சரீரத்தில் சலன முண்டாகுமென்று முன்னரே கூறப்பட்டது. அதனால், மனிதனிடம் காமக்குரோதாதிகள் பொறாமை, அசூயை முதலானவை யுண்டாகும் போது, அவனது சூக்ஷ்ம சரீரபாகத்தில் அதன் அதன் அனுகுணமான மாறுபாடுகள் சலன விகாரங்களாக ஏற்படும். அச்சலனம் சூக்ஷ்மசரீர பீஜமான பூத சூக்ஷ்மத்தைத் தாக்கி,

ஸ்வபாவமாகி, அந்த குணத்தை மறுபடியும் மறுபடியும் கிளம்பச்செய்யும். அதனால் அவகாசம் ஏற்படும்போதெல்லாம் அவ்வித குணங்கள் முன்னிலும் அதிகமாகக் கிளம்பி, வ்ருத்தியாகும். இது இவ்வாருக, ஸ்தூல சரீரம் அழிந்தபிறகு நரகத்தில் ஏற்படும் துக்கானுபவங்கள்கூட அந்த சூக்ஷ்மத்துடன் சேர்ந்திருக்கும். காலக்கிரமத்தில் புவர்லோக சரீரம் நசிக்கவே, ஜீவன் பூ புவர்லோகங்களின் பூத சூக்ஷ்மங்களுடன், ஸ்வர்க்க லோக சம்பந்தமான அம்மய சரீரத்தோடு ஸ்வர்க்கலோகம் சேரும். அங்கே முன் அத்தியாயத்தில் குறித்தபடி, சுகானுபவங்களை அனுபவிப்பதின் மூலம் ஜீவன் அந்த லோகத்தின் ஞானத்தை அடையும். அந்த அனுபவங்களெல்லாம் அந்த சரீர பீஜமாகிய பூத சூக்ஷ்மத்தில் சலனம் உண்டாகச் செய்வதால், அந்தந்த மனோவ்ருத்திகளும் சங்கற்பங்களும் மறுபடியும் மறுபடியும் உதிக்கும் சுபாவத்தை உடையதாகும்.

ஸ்வர்க்கானுபவம் முடியவே, அந்த சரீரம் முற்றிலும் நசித்துப்போகும். அந்த ஸ்திதியில் ஜீவன் விஜ்ஞானமய கோசத்திலிருக்கும். அப்போது பிருதுவி, அப்பு, தேஜஸ் தத்துவ சம்பந்தமான தேக பீஜங்கள் அவனுடன் கூடவிருந்து, வரப்போகும் ஜன்மத்திற்கு ஆதாரமாக விருக்கும். அப்போது கிரமமாக சுவர்லோக தேக பீஜத்தில் கால பரிபக்குவத்தால் ஸ்வபாவத்தை அனுசரித்துச் சலன முண்டாகவே, சுவர்லோக பிரகிருதியைக் கொஞ்சம் இழுத்துக்கொண்டு, வரப்போகும் ஜன்மத்தின் மனோவ்ருத்திகளுக்கு இருப்பிடமான சுவர்லோக சரீரத்தைக் கற்பித்துக்கொள்ளும். அதன்பிறகு அப்பு தத்துவ தேக பீஜமும் இதுபோலவே சலித்து, புவர்லோக பிரகிருதியை இழுத்துக்கொள்ளவே, புவர்லோக சரீரம் உற்பத்தியாகும். அம்மாதிரியாக பிருதுவி தத்துவபூத சூக்ஷ்மமும் பிராரப்த கர்மானுசாரமாகக் கர்ம பலன்களை விதிக்கும் தேவதைகளால் நியமிக்கப்பட்ட தேகத்திலும், குடும்பத்திலும், தாய் தகப்பனிடத்திலும் பிரவேசித்து, வரப்போகும் ஸ்தூல சரீரத்திற்குப் பீஜமாகின்றது. ஜீவனுடைய ஸ்வர்க்கானுபவம் பரிபூர்ணமாகவே, ஜீவன் மேற்கூறியபடி மறுபிறப்புக்கு வரும்.

இவ்வழியைப் பஞ்சாக்கினி வித்தை என்று உபநிஷத்துக்கள் கூறுகின்றன. ஜீவன் த்யுலோகம் (சந்திரலோகம்,) பர்ஜன்ய லோகம் (மழை) பிருதுவி லோகங்களில் பச்சிலைகளிலும் அதன் பிறகு தகப்பனது தேகம் கடைசியில் விந்து (ரேதஸ்) ரூபமாக தாயார் கர்ப்பத்திலும் வரிசையாக பிரவேசித்து, சரீரத்தி லும் தரிக்குமென்று அவற்றுள் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தஸ்மாதக்நிஸ்ஸமிதோயஸ்ய ஸூர்யஸ்ஸோமாத்பர்ஜந்ய ஓஷதயஃ ப்ருதிவ்யாம்। புமாந்ரேதஸ்ஸிஞ்சதி யோஷிதாயாம் ஸ்வஹ்வீஃ॥

முண்டகோபநிஷத், II 1. 5.

அஸௌவாவ லோகோ கௌதமாக்நிஸ்தஸ்ய.........ஸ்ஃபுலிங்காஃ। தஸ்மிந்நேதஸ்மிந்நக்நௌ தேவாஶ்ஶ்ரத்தாம் ஜுஹ்வதி தஸ்யா ஆஹுதேஸ்ஸோமோ ராஜா ஸம்பவதி॥

ப்ருதிவீவாவ கௌதமாக்நி... ... ... விஸ்ஃபுலிங்காஃ। தஸ்மிந்நேதஸ்மிந்நக்நௌ தேவாவர்ஷம் ஜுஹ்வதி தஸ்யா ஆஹுதேரந்நம் ஸம்பவதி॥

புருஷோவாவ கௌதமாக்நிஸ்தஸ்ய.......விஸ்ஃபுலிங்காஃ। தஸ்மிந்நேதஸ்மிந்நக்நௌ தேவா அந்நம் ஜுஹ்வதி தஸ்யா ஆஹுதேரேதஸ்ஸம்பவதி॥

யோஷாவாவ கௌதமாக்நி... ... ... விஸ்ஃபுலிங்காஃ। தஸ்மிந்நேதஸ்மிந்நக்நௌ தேவாரேதோ ஜுஹ்வதி தஸ்யா ஆஹுதேர்கர்ப்பஸ்ஸம்பவதி॥

சாந்தோக்ய உபநிஷத்.

இவைகளில் ச்ரத்தா சப்தத்தால் பூர்வவாசனையோடு கூடிய சுவர்லோக தேக பீஜமான பூத சூக்ஷ்மமானது போதிக்கப்படுகிறது. கால கர்ம பரிபக்குவத்தால் ஜீவன் புனர் ஜன்மத்திற்குச் சித்தமாக விருக்கும்போது, இந்த சுவர்லோக பீஜத்தில் மேற்கூறியவாறு அசைவு உண்டாகி, சுவர்லோக பிரகிருதியிலிருந்து கொஞ்ச பாகத்தை இழுத்துக்கொண்டு, தேவ

தைகளின் சகாயத்தால் அந்த சுவர்லோக சரீரத்தைக் கற்பித்து கொள்ளும். இதுவே வரப்போகும் ஜன்மத்தின் மனோமய கோசத்தின் ஒரு பாகமாகும். இதுவே "தேவாச்ரத்தாம் ஜுஹ்வதி" என்ற வாக்யத்தின் அர்த்தமென்று தத்துவஞானிகள் கூறியுள்ளார். இந்தப் புதிய சுவர்லோக சரீரமே 'சோமோ ராஜா' என்றழைக்கப்படுகிறது. பிறகு, புவர்லோக தேக பீஜத்தில் சலன மேற்பட்டு, முன்போல அந்த லோக பிரகிருதி சமுதாயத்தில் ஒரு பாகத்தை ஜீவன் இழுத்துக்கொண்டு, தேவதைகளின் சகாயத்தால் புதிய சரீரமொன்றை அமைத்துக் கொள்ளும். இந்த பாகங்களும் அவைகளுடன் கலந்து மனோமய கோசமாகும். இம்மாதிரியே பிருதுவி தத்துவ சம்பந்தமான ஸ்தூலதேக பீஜமானது வருஷபிந்து மார்க்கமாக பூமியிற் படிந்து ஒஷதிகளிற் பிரவேசித்து, கர்ம தேவதைகளின் சகாயத்தால் வருகிற ஜன்மத்திற்கு ஏதுவான பிதாவின் தேகத்தில் ஆகாரமாக பிரவேசித்து, விந்து ரூபமாக தாய் கர்ப்பம் சேர்ந்து, பிண்டமாக உற்பத்தியாகின்றது. அங்கு அந்த பிருதுவி பூத சூக்ஷ்மமானது மேற்சொல்லியபடி (முன் ஏற்பட்ட மாறுதல்களை அனுசரித்துச் சலிக்கும்போது, அதற்கனுகுணமான பிரகிருதி சமுதாயம் இழுக்கப்பட்டு தேவதா சகாயத்தால் புதிய சரீரம் உற்பத்தியாகின்றது. பிறகு குழந்தை கிரமமாக ஜனிக்கும். சிறிது காலம்வரை ஜீவாத்மா சாக்ஷி மாதிரியாக விருந்து சரீர ஸ்திதிக்குவேண்டிய தனது சக்தியை மாத்திரம் கொடுத்துக் கொண்டிருக்கும். சாமான்யமாக 7 வயதுகடந்த பிற்பாடு ஜீவாத்மா சரீரத்தில் உண்மையிற் பிரவேசித்து, அதைத் தனது சரீரமாகக்கொள்ளும். அவ்வாறு கிரகிப்பதே ஜீவனுக்கு உண்மையான இரண்டாவது பிறப்பு. அக்காலம் ஜீவனது உபநயனத்திற்கு ஏற்றது. அதன் பிறகே அவன் வித்தியாப்பியாசத்திற்குக் கூட அருகனாகிறான்.

ஜீவன் தனது சரீரத்துடன் செய்யும் எல்லாக் கர்மங்களும் வரப்போகும் ஜன்மங்களில் தனது சுபாவங்களுக்குக் காரணமாகின்றன. அதனால் எல்லாரும் தத்தம் சுபாவங்களை

பக்ஷபாதமின்றி ஆராய்ந்து, அசுபவாசனை சிறிதிருந்தாலும் அதை முயன்று களைந்தெறிவதற்கும், சுபவாசனைகளை விருத்திசெய்து கொள்ளுவதற்கும் பாடுபடவேண்டும். அவ்வாறு முயன்று தமது கெட்ட சுபாவங்களை நீக்கி, நல்ல சுபாவங்களை விருத்திசெய்துகொண்டு, கிரமமாக எல்லோரும் உத்தமமான புருஷார்த்தத்தைச் சாதித்துகொள்வார்களாக.

59561

N23

10-வது அத்தியாயம்.

கர்மம்.

கர்மம் என்ருல் செய்யப்படுவது. மனிதன் மனத்தாலும், வாக்கு முதலிய இந்திரியங்களாலும், காயத்தாலும் செய்வதெல்லாம் கர்மந்தான். அக்கர்மங்களெல்லாம் அதனதன் அனுகுணமான பலன்களைக் கொடுத்துக்கொண்டுவரும். அதனுல், செய்யப்படும் கார்யமும் அதன் பலனும் கர்மமென்றே சொல்லப்படும். உண்மையாக நோக்கினுல், செய்யப்படும் கார்யமும் அதன் பலனும் ஒன்றென்றே பாவிக்கத்தகும். பூமியில் விதை விதைத்தால் அதிலிருந்து மரம் உற்பத்தியாகி, அதிலிருந்து தக்ககாலத்தில் பூவும் பழமும் உண்டாகி, அதன் பழங்களிலிருந்து மறுபடியும் வித்துகளுண்டாகும். அவை ஒவ்வொன்றும் மறுபடியும் மரத்திற்கும், பழத்திற்கும் மூலமாகின்றன. எவ்வித விதையை ஊன்றிஞேமோ, அவ்வித மரங்களும், பழங்களும் உற்பத்தியாகும். எட்டி விதையை ஊன்றி, மதுரமான மாம்பழம் வேண்டுமென்ருல் கிடைக்குமா? கர்மமென்பதும் இப்படியே. மனிதன் எவ்விதப் பலனை இச்சிக்கிருஞே, அவ்விதப் பலன்களை தரக்கூடிய கர்மங்களை அவன் செய்யவேண்டும். செய்யப்படும் கருமங்கள் பலன்களைக் கொடுக்கின்றன. அப்பலன்கள் புதிய கருமங்களுக்குக் காரணமாகின்றன. இவ்விதமாக கர்மங்களும் பலன்களும் ஒன்றிற்கொன்று சம்பந்தமுள்ளவையாயிருக்கும். இந்த சம்பந்தம் காரிய காரண ரூபமானது. காரணமில்லாமல் எந்தக் காரியமும் நிகழாது.

"அகாரணம் கதம் கார்யம் ஸம்ஸாரே அத்ரபவிஷ்யதி."

(இது தேவிபாகவதம்.)

"நஹி காரணம் விஞகார்ய ஸ்யோத்பதி:" (என்பது பழமொழி.)

மனிதர்கள் அனுபவிக்கும் சுகதுக்கங்களெல்லாவற்றிற்கும் காரணங்கள் இருந்தே தீரவேண்டுமல்லவா? காரணமா

யுள்ள பூர்வ கருமங்களை அறியாமல், தற்காலத்தில் நடக்கும் சுகதுக்கானுபவங்கள் விதிவசமாக ஏற்பட்டவையென்றும், அல்லது தெய்வீகமென்றும், தாம் ஸ்வதந்திரமற்றவர்களென்றும் நினைத்து, மனிதர்கள் தம் விதியைக் கடிந்துகொள்ளுவர். அப்படித் தம் விதியைத் தூற்றுவது அக்ஞானமே ஒழிய வேறில்லை. காரணமில்லாது காரியம் உண்டாகாதென்ற நியாயத்திற்கு உட்பட்டே பிரபஞ்சமெல்லாம் இருக்கிறது. காரணங்களைப் பிறப்பித்த பிறகு, அவைகளின் பலன்களை அனுபவிக்காமல் தீராது. காரணங்களைப் பிறப்பிப்பதில் மனிதர் ஸ்வதந்திரராய் இருக்கிறார்கள். இவ்விஷயத்தில் மனிதருக்குள்ள ஸ்வதந்திரத்திற்கும் பாதந்திரத்திற்கும் ஒரு உதாரணம் கூறுவோம். பிரபஞ்சமெல்லாம் பகவானது ஆஜ்ஞைக்கு உட்பட்டிருப்பதற்குச் சந்தேகமில்லை. அக்நியைத் தொடும் கை வெந்துபோகுமென்பது பகவானது ஆஜ்ஞையாயிருக்கிறது. யாரேனும் நெருப்பைத் தொடவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. நெருப்பைத் தொடவும் தொடாதிருக்கவும் மனிதன் ஸ்வதந்திரனாகவிருக்கிறான். அதைத் தொட்டபிறகு அதன் பலனை அவன் அனுபவிக்காமல் தீராது. அதுபோலவே சுருதிஸ்மிருதிகளில் சில காரியங்கள் விதிக்கப்பட்டும், மற்றும் சில விலக்கப்பட்டுமிருக்கின்றன. சுருதிஸ்மிருதிகள் பகவானது ஆஜ்ஞையைத் தெரிவிக்கின்றன.

ஶ்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே।
ஆஜ்ஞாச்சேதீ மமத்³வேஷீ ஸ்வேவ்ய தயோமத:॥

மகா பாரதம்.

இவற்றில் விலக்கப்பட்டவைகளைச் செய்யின், அவை துக்கத்திற்கு ஏதுவாவதால், அவை தள்ளத்தக்கவையாகும். சுகத்தைத் தரக்கூடிய காரியங்கள் செய்யத்தக்கவையாதலின், அவைகளைச் செய்யும்படி விதிக்கப்பட்டுள்ளன. அறிவீனமுள்ள தன் குழந்தை நெருப்பைத் தொடக்கூடாதென்று தகப்பன் சொல்லியிருக்க, அதை மீறிநடந்ததால், குழந்தை வருத்தப்படுகிறது. அதுதான் செய்த காரியத்திற்குத் தகுந்த

பலனை ஒழிய, தகப்பனுடைய கோபத்தாலுண்டான பாதை யாகாதல்லவா? அதுபோலவே சுருதி, ஸ்மிருதிகளிற் கூறப் படும் நிஷித்த காரியங்களை ஒருவன் அறிவீனத்தால் செய்தா லும், நெருப்பைத் தொட்ட குழந்தையைப்போல் அதனதன் அனுகுணமான பலனை அவன் அனுபவியாமல் தீராது. மனிதர் கள் இந்த நியாயத்தைத் தெரிந்துகொள்ளும்வரை, செய்யத் தகுந்ததையும் தகாததையும் அறியாமல், உலகப்பற்றால் ஈர்க் கப்பட்டு உழலுவர். இந்த நியாயத்தைத் தெரிந்துகொண்ட பிறகு, மனிதர் தாம் கோரிய பலன்களைக் கொடுக்கக்கூடிய கருமங்களை மாத்திரம் செய்துகொண்டு, தீய பலனைத்தரும் கருமங்களை நீக்குவர். உலகத்தில் மனிதரெல்லாரும், எப்போ தும், இன்பத்தையே நாடுபவராதலின், எவ்வித காரியங்கள் முடிவில் சுகத்தைத்தருமோ அவையே செய்யக்கூடியவை யெனவும், மற்ற எவ்விதக் காரியங்களும் விடத்தக்கவை என வும் தெரிந்துகொள்வது முக்யமானது. அதனுல், கருமத்தின் ஸ்வரூபத்தைக் குறித்து விசாரிப்பது ஏற்புடைத்தாகும்.

எந்தக் கார்யத்தை செய்வதிலும் மூன்று அவஸ்தை களுள்ளன. முதலில் விஷய இச்சை உண்டாதல், இரண் டாவது, அதை நிறைவேற்றும் விதத்தை மனதில் சங்கற் பித்தல், மூன்ருவது அந்தந்த கர்மத்தை வெளிப்படையா கச் செய்தல். ஆகையால் பிரஹதாரண்யக உபநிஷத்தில்

காமமய ஏவாயம் புருஷ இதி ஸ யதா காமோ பவதி।
தத்க்ரதுர்பவதி யத்க்ரதுர்பவதி தத்கர்ம குருதே
யத்கர்ம குருதே தத் அபிஸம்பத்யதே ॥

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(இ. பொ.) புருஷன் காமஸ்வரூபன். காமானுகுணமாக சங்கற் பிப்பவன் சங்கற்பத்திற்கு அனுகுணமாகக் கருமத்தைச் செய்பவன். அவன் கருமானுசாரமாகப் பலனை அனுபவிக்கிருன்.

இம்மாதிரி காமம், சங்கற்பம், காரியம் என்ற மூன்று அவஸ்தைகள் உள்ளன. அவற்றுள் முதலாவது காமம். அதா வது இச்சையாகிய மனோவ்ருத்தி-அதாவது மாநஸீக கர்மம்;

இரண்டாது—சங்கற்பம்-விஷயத்தின் இச்சை வெளியான வுடன் அதைக் கிரியைகளால் நிறைவேற்றும் விதத்தை எண் ணிக் கர்மத்தைச் செய்யப்புகுவது. இதுவே வாச்சிக கர்மம். வாக்கு என்பது எல்லா இந்திரியங்களையும் குறிக்கும். காம சங்கற்பங்கள் வெளிப்பட்டவுடன், வாக்கினுல் வசனிப்பது போல் சர்வ இந்திரியங்களுடனும் வேலைசெய்வது இந்திரிய கர்மமென்று சொல்லப்படும்.

மூன்ருவது—கிரியை-வெளிப்படும் கார்யம்; அதாவது-வெளியாகச்செய்யும் கார்யம்; காயத்தாற் செய்வது. இப்படி, மனத்தாலும், இந்திரியங்களாலும், ஸ்தூலமான காயத்தினு லும் செய்யப்படும் வியாபாரங்களெல்லாம் மனோவாக்காய கர்மங்கள் எனப் பெயர் பெறும். இவைகளில் ஒவ்வொ ன்றும் அதனதன் அனுகுணமான பலன்களைக் கொடுக் கத்தக்கதாகவுள்ளது. மனிதன் வாசிக காயிக கர்மங்களாற் செய்வதுபோல கேவல மனோவ்ருத்திகளாலும் நன்மை தீமை களைச் செய்யக்கூடுமென்று, பூர்வ அத்தியாயங்களில் விரிவாக எழுதப்பட்டது. அவ்வாறு பிறர்க்கு நன்மை தீமைகளை விளைப்ப தால், அவனிடம் கர்மானுபந்தம் ஏற்படுகின்றது. அதை அனு சரித்து எவனும் சுகதுக்கங்களை அனுபவிப்பான்.

ஜீவன் ஈசுவரனது அம்சமானதால், சச்சிதானந்த ஸ்வரூப ணுகிருன். ஈசுவரனுடைய இச்சா ஞானக்ரியா சக்திகள் ஜீவனிட த்திலும் ப்ரதிபலித்தே உள்ளன. இவை பூராதி லோகங்களில் காமங்கள், சங்கற்பங்கள், கிரியைகள் என மூன்று படித்தாக காணப்படுகின்றன. அதனுல், மனம் வாக்கு காயங்களின் கர்மங்கள் எந்தெந்த சமயங்களில் எந்தெந்த பலன்களைக் கொடுக்குமென்பதைத் தெரியவேண்டுமாயின், முக்கியமாகப் பின்வரும் மூன்று நியாயங்களையும் அறியவேண்டும்.

I புருஷன் எந்தெந்த ஆசைகளுக்கு உட்படுகின்ருனே அந்தந்த ஆசைவிஷயங்களுக்குக் கட்டுப்பட்டு, அவையிருக் கும் இடங்களுக்கு இழுக்கப்படுவான்.

𑌤𑌦𑍇𑌵 𑌸𑌕𑍍𑌤𑌃 𑌸𑌹𑌕𑌰𑍍𑌮𑌣𑍈𑌤𑌿 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌮𑌨𑍋 𑌯𑌤𑍍𑌰 𑌨𑌿𑌷𑌕𑍍𑌤𑌮𑌸𑍍𑌯 । 𑌅𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑌾𑌮𑌕𑌾𑌰𑍇𑌣 𑌫𑌲𑍇 𑌸𑌕𑍍𑌤𑍋 𑌨𑌿𑌬𑌧𑍍𑌯𑌤𑍇 ॥

பிரஹதாரணியகம்.

(இ. பொ.) மனது எவ்விஷயத்தில் பிரவேசிக்கின்றதோ அவ்விஷயத்தைக் குறித்து கர்மானுசாரமாக ஜீவன் போகிறான். காமத்தையுடைய ஜீவனுக்கும் அவ்விஷயங்களுக்கும் திடமான கட்டு ஏற்படுகின்றது. அவ்விஷயங்களை கர்மபல ரூபங்களாக அனுபவிக்கும்படி விதிக்கப்பட்ட இடங்களுக்கு விதிவசத்தால் அவன் இழுக்கப்படுகின்றான். இவ்வாறு காமம் ஜீவனை பந்தப்படுத்துகிறது.

ஊற்றமில்லாக் காமத்தா னந்தக் கருமம் பலனசையாந்
தாமத்தாற் கட்டுண்ணுந் தான் கீ. வெ. v. ii.

அப்பலன் சுகத்தைக் கொடுப்பினும், துக்கத்தைக் கொடுப்பினும் அவற்றை அனுபவிக்காமல் நீரா[illegible]. மனிதன் சதாகாலம் சுகத்தையே வேண்டினாலும், அக்ஞானத்தினால் முடிவில் அவனுக்குக் கிடைக்கும் துக்கத்தைக் கவனிக்காமல் தற்கால அற்ப சுகத்தையே நாடி காலக்கிரமத்தில் அந்த அற்ப சுகம் முடிவுபெற்றவுடன், அதனை அனுசரித்திருக்கும் துக்கத்தை அடைகிறான். கர்மபலன் சுகரூபமாக இருப்பின், அந்தக் கர்மம் புண்ணிய கர்மமென்றும், துக்க ரூபமாக இருப்பின் அக்கர்மம் பாவகர்மமென்றும் சாமான்யமாக வெளியாகலாம். இந்த நியாயத்தை நன்றாய்த் தெரிந்துகொண்டு, மனிதன் தன்னிடமுண்டாகும் ஆசைகளை நன்றாய்ப் பரிசோதித்து, சாசுவத சுகத்தைக் கொடுப்பவைகளையே கோரி, அநித்யமான ஆசைகளை நீக்கவேண்டும்; ஏனெனில், நாம் கோரும் விஷயங்கள் மறு ஜன்மத்தில் நம்மை இழுத்துக்கொள்ளுகின்றன.

II மனது கற்பனைசக்தியுள்ளது. மனிதன் எந்த சங்கற்பத்தை பாவிக்கிறானோ அவ்வாறே அவன் தன்னை மாற்றிக்கொள்வான்.

"யத்பாவம் தத்பவதி." எந்த சங்கற்பங்களை இந்த ஜன்மத்தில் ஒருவன் பாவிக்கிறானோ, மறு ஜன்மத்தில் அதே சங்கற்பங்களை அவன் அடைவான்.

𑌖𑌲𑍁𑌕𑍍𑌰𑌤𑍁𑌮𑌯𑌃। 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌯𑌥𑌾 𑌕𑍍𑌰𑌤𑍁𑌰𑌸𑍍𑌮𑌿𑌨𑍍
𑌲𑍋𑌕𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌭𑌵𑌤𑌿𑌤𑌥𑍇𑌤𑌃 𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯𑌭𑌵𑌤𑌿॥

சாந்தோக்கியம். 3. 18. 1.

(இ. பொ.) புருஷன் சங்கற்ப ரூபமாக உள்ளவன். இந்த ஜன்மத்தில் எந்த சங்கற்பத்தை உடையவனாக இருக்கிறானோ, மறு ஜன்மத்தில் அவ்வித சுபாவத்தை உடையவனாவான்.

ஜீவனது மனசு ஈசுவரனிடமுள்ள கிரியாசக்தியின் ப்ரதிபிம்பமாகும். பிரமன் தவம் செய்து உலகத்தைத் தோற்றுவித்ததுபோல, ஜீவனும் தனது சங்கற்பத்தால் தன்னைச் சுற்றிலும் சந்தர்ப்பங்களைக் கற்பித்துக்கொள்ளுகிறான். எவ்வித குணத்தை ஜீவன் தன் மனத்தில் தியானிக்கிறானோ, அவ்வித குணத்தை அவன் அடைகிறான். அதனால் மனிதனது சுபாவம் அவனது சங்கற்பத்தால் கற்பிக்கப்பட்டதாகும். சத்தியம், பூததயை, சாந்தம் முதலிய நற்குணங்களைப் பன்முறையும் ஒருவன் மனனம் செய்தால், காலக்கிரமத்தில் நல்ல சுபாவத்தை அவன் அடையலாம். அதுபோலவே, பொறாமை, அசூயை, பிறர்க்கின்னாசெய்தல் முதலிய துர்க்குணங்களை மநநம் செய்தால், அவன் படிப்படியாகக் கெட்ட சுபாவம் உடையவனாவான். இவைகளை நன்கு அறிந்துகொண்ட மனிதன், தன் சுபாவத்தை நினைத்தபடி மாற்றிக்கொள்ளும் சக்தியை அடைகிறான்.

ஜீவன் எக்குணங்களைத் தன் சுபாவத்தில் திடப்படுத்திக்கொள்ள ஆசை வைக்கிறானோ, அக்குணங்களை எப்போதும் அவன் மநநம் செய்தால் அவனிடம் அவை இயற்கையாகப் பதிந்துவிடும். அதுபோலவே, தன்னிடமுள்ள துர்க்குணங்களை விட்டுவிடவேண்டும்என்ற சங்கற்பத்தை அவன் திடமாகச் செய்துகொண்டால், அவையும் படிப்படியாக நீங்கிப்போம். ஜீவன் பரிசுத்தமும் யோக்கியதையும்உள்ள விஷயங்களையும், குணங்களையும், காரியங்களையும் பலமுறை சிந்தித்து

நல்ல சுபாவத்தைத்தன்னிடம் விருத்திசெய்துகொண்டால், மறுபடியும் மறுபடியும் அவ்வித சங்கற்பங்களைத்தனக்கு எளி தாக்கிக்கொண்டு, வரப்போகும் ஜன்மங்களிற் கூட அவ்வித சுபவாசனைகளைத் திடமாக உடையவனுவான். இதுபோலவே, தீயவையாயும் தள்ளத் தகுந்தவையாயும் உள்ள நீச குணங் களை அவன் மநநம் செய்தால், அவற்றின் அனுகுணமான அசுபவாசனைகளுடன் அவன் பின்னுல் பிறப்பான். இந்த சுபா சுப வாசனைகளே பூர்வகர்மம் எனப்படும்.

III இனி, ஜீவன் செய்யும் கிரியைகளை அனுசரித்து, வெளிப்படையான சந்தர்ப்பா சந்தர்ப்பங்கள் உண்டாகின்றன. ஜீவன் செய்யும் காரியங்கள் பிறரது சுகதுக்கங்களுக்கும் ஏதுவாவதால், அவன் பிறர்க்கு சுகம் உண்டாகச்செய்தால், மறுபிறப்பில் சுகத்தை அனுபவிக்கும் சந்தர்ப்பத்தை அடை ந்து, அவன் பிறப்பான். அவ்வாறின்றி, அவன் உலகுக்குக் கெடுதலை விளைத்தால், துக்கத்தை அனுபவிக்கும் சந்தர்ப் பத்தை அடைந்து அவன் பிறப்பான்.

யதாயதா கரோதி கர்மம் ஹஸ்தாஸ்தீகரோ தஸ்யம் கரோ- ஹெநிவிஷ்:| ததா ததாயம் கர்மஸம்ப்ரயுக்த ஸ்ஸுஸாஸுஸம் கரோஸம்ஸ்நுதே ||

சாந்திபருவம்.

தாத்பர்யம்:—பலனைக்கோரி ஜீவன் எக்காரியத்தைத் தொடங்குகி ருனே மறு ஜன்மத்தில் அவ்வித சுபாசுப ரூப கர்ம பலன்களை அவன் அனுபவிப்பான்.

நாஸீஜா ஜாயதேகிம்விநாகர்மணா ஸாவநேததே| ஸாகர்ணதேவிந்ததேஸளவ்யம் ப்ராவ்நோதஹ க்ஷயம்- நர: ||

சாந்திபருவம்.

தாத்பர்யம்:—விதை விதைக்காமல் செடிகள் முளையா; தானென் றுஞ் செய்யாமல் சௌக்கியத்தை ஒருவனும் அடையான். இம்மையில் நற்காரியம் செய்தால் மறுமையில் சுகத்தை அடைவான்.

இந்த நியாயங்களை அறிந்துகொண்ட ஜீவனுக்கு நன்மை தீமைகளை நன்றாய் ஆராய்ந்து நடந்துகொள்ளவும், மறுமையில் வேண்டியபடி அனுகூலப் பிரதிகூலங்களைக் கற்பித்துக் கொள்ளவும் சாத்தியமாகும். அதாவது நல்ல சங்கற்பத்தால் நல்ல சுபாவமும், தீய சங்கற்பத்தால் தீய சுபாவமும் ஜீவன் கற்பித்துக்கொள்வதுபோல, நற்காரியங்களால் அனுகூல சந்தர்ப்பங்களும், தீய காரியங்களால் பிரதிகூல சந்தர்ப்பங்களும் அவன் கற்பித்துக்கொள்வான்.

உலகத்தில் அநேகர் இளமை முதல் இயற்கையில் நற்குணங்களை அடைந்து இருப்பதையும், வேறு சிலர் இயற்கையில் துர்க்குணங்களை அடைந்திருப்பதையும் நாம் காண்கிறோமன்றோ? அவ்வித நற்குண தீக்குணங்கள் முன் ஜன்மத்தில் அவர்கள் செய்த மானசிக கர்மக்களின் பலன் என்று எண்ணவேண்டும். மற்றும், சிலரிடம் யோக்கியதை இருப்பினும் இல்லாமற்போயினும், எப்போதும் அவர் சுகத்தை அனுபவிப்பதையும், வேறு சிலர் எவ்வித சாமர்த்தியமுள்ளவராக விருப்பினும், அவரது எண்ணங்கள் நிறைவேறாமலிருப்பதையும் கண்ணாரக் காண்கிறோம். இவையும் பூர்வ ஜன்மத்தில் காயத்தால் செய்த அவரது கர்ம பலனென்று அறிந்து கொள்க.

இவ்வாறு இந்த மூன்று நியாயங்களையும் ஜீவனுடைய இச்சா ஞான கிரியா சக்திகள் அனுசரிக்கின்றன. இம்மூன்று சக்திகளும் ஜீவனுக்கு ஒவ்வொரு ஜன்மத்திலும் கோரிக்கைகளாகவும், சங்கற்பங்களாகவும், வெளிப்படையான காரியங்களாகவும் காணப்படும். மேற்காட்டிய முதல் நியாயத்தை அனுசரித்து, கோரிக்கைகளினால் கோரும் அந்த ஜீவனுக்கும் கோரப்படும் பதார்த்தங்களுக்கும் திடமான சம்பந்தம் ஏற்படுகின்றது. அதுபோலவே, சங்கற்பத்தால் ஜீவனது ஸ்வபாவம் நிரூபிக்கப்படுகின்றது. காயத்தால் செய்யும் காரியங்களை அனுசரித்து வெளிப்படையான அனுகூல பிரதிகூல நிமித்தங்களும் ஏற்படுகின்றன.

இவ்வாறு மூன்றுவிதமான கர்மங்களின் பலன்கள் ஜீவனை அனுசரித்தேயிருக்கும். ஜீவன் எப்பொழுதும் புதிய கர்மங்களைச் செய்துகொண்டு, பூர்வ கர்மங்களின் பலன்களை அனுபவித்துக்கொண்டே யிருக்கிறான். பூர்வ ராகத்துவேஷ வாசனைகளுடன் அவன் ஜனிக்காமல் தீராது. பூர்வ சங்கற்பங்களால் கற்பிக்கப்பட்ட சுபாவத்திற்கு சாமான்யமாக உட்பட்டு வர்த்திப்பான். முன்னர்ச் செய்த காரியங்களால் ருணானுபந்த ரூபங்களாகிய அனுகூல பிரதிகூல நிர்ப்பந்தங்களுக்கு உட்படாமல் தீராது. ஆயினும், ஜீவாத்மா ஈசுவராம்சமாகையால், ஸ்வதந்திரனாகவுள்ளவன். பூர்வத்தில் எவ்வண்ணம் கோரினானோ, எவ்வாறு சங்கற்பித்துக் கொண்டானோ வெளிப்படையாகக் காரியங்களை எவ்வாறு நடத்தினானோ, அவ்வண்ணமே வேறுவிதமாகக் கோருவதற்கும், சங்கற்பிப்பதற்கும், கர்மங்களைச் செய்வதற்கும் ஸ்வதந்திரனாக இருக்கிறான். பூர்வ கர்ம பந்தங்களுக்கு உட்பட்டு வர்த்தித்தாலும், தனது ஸ்வதந்திரத்தைச் சிறிது உபயோகிப்பதால், அப்பூர்வ பந்தங்களைப் படிப்படியாய் விடுவித்துக்கொள்வதற்கு அவன் சக்தனாயிருக்கிறான். பூர்வ கருமானுசாரமான துர்வாசனைகள், அவனிடம் திடமாகவிருப்பினும், இந்த ஜன்மத்தில் புருஷப் பிரயத்தனத்தால் அந்த சுபாவத்திற்கு உட்படாமல், சன்மார்க்கத்தில் அவன் பிரவர்த்திக்கக்கூடும். ஜீவன் பூர்வ ஜன்மத்தின் முடிவில் தனக்குக் கிடைத்த நரக அனுபவத்தால், விஷய ஆசைகளுக்கு விசேஷமாக உட்படுவது கெடுதி என்ற ஞானமடைந்து, அவைகளை நீக்கிவிடவேண்டுமென்ற நிச்சயத்தை ஒரு சிறிதேனும் உடையவனானான்.

அதனால் பின் ஜன்மத்தில் பூர்வ கர்மானுசாரங்களான துர்வாசனைகள் அவனிடம் திடமாக உண்டாயிருப்பினும், அவன் தனக்கிருக்கும் அற்ப ஞானத்தால் நல்ல வழிகளைக் கடைப்பிடிக்க முயன்று, படிப்படியாக அசுபவாசனைகளை நசிக்கச்செய்துகொள்ளக்கூடும். குடியானவன் தனதுபுலத்தில் முளைத்துள்ள நாற்றுகளில் நல்லவைகளை விருத்திசெய்ய முயன்று, மற்றவைகளை கிரமமாக நசிக்கச்செய்வதற்குத் தகுந்த பிர

யத்தனத்தைச் செய்து, அடியோடு அவைகளை நாசம் செய்வதுபோல, ஜீவனும் ஒவ்வொரு ஜன்மத்திலும் தனது சுப வாசனைகளை கிரமமாக அபிவிருத்தி செய்துகொண்டு அசுப வாசனைகளை நிர்மூலமாக்கவேண்டும். இதுவே கல்வியின் முக்கிய பிரயோசனம். உபாத்தியாயர், வித்திபார்த்திகளின் சுபாவத்தை நன்குப் ஆராய்ந்து அவர்களிடம் அன்பும் ஆர்வமும்காட்டி அவர்களிடமுள்ள சுபவாசனைகளை விருத்திசெய்தும் அசுப வாசனைகளை விருத்திபாகாமல் தொலைத்தும் வரவேண்டும். அப்படிச் செய்வதால் பூர்வ கர்மபந்தங்களைத் தாண்டுவதற்கு, ஜீவனுக்கு சக்தி உண்டாகும்.

"ஸாத்தானுசாரிணி வித்யா புத்தி: கர்மானுசாரிணி"

முபற்சிக்குத் தகுந்த வித்தை; கர்மத்திற்கேற்றபுத்தி என்ற முதுமொழிக்கு அர்த்தமிதுவே. இதில் பூர்வ பாகத்தைக் கவனிக்காமல், இரண்டாவது பாகத்தை மாத்திரம் பலர் பிரமாணமாகக் கைக்கொண்டு, தந்தம் கார்யங்களில் தமக்கு ஸ்வதந்தரமில்லை என்று பாவிக்கிறார்கள். இவ்வாறெண்ணுவது முற்றிலும் பிழையானது. ஒவ்வொரு ஜீவனும் பூர்வ கர்மானுசாரமாகவே நடந்துகொள்ளவேண்டுவது விதியாயின், சாஸ்திரங்களில் விலக்கப்பட்டனவும், விதிக்கப்பட்டனவுமான விஷயங்கள் பிரயோஜனமற்றவைபாகுமல்லவா? சாஸ்திரங்களில் சிலகாரியங்கள் செய்யத்தகுந்தவை என விதிக்கப்பட்டும், வேறு சில செய்யத்தகாதவை என விலக்கப்பட்டுமிருப்பதால், செய்யத்தகாத கார்யங்களில் பூர்வ கர்மானுசாரமாகப் புத்தி சென்றாலும், அவ்வித சுபாவத்திலேயே கட்டுப்பட்டு நடக்காமல், சாஸ்திரத்தை ஆராய்ந்து சாஸ்திரோக்தமான காரியங்களிலேயே பிரவர்த்திக்க வேண்டுமென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா? இல்லாவிடில் சாஸ்திரங்களால் பிரயோசனமில்லை. ஸ்வபாவம் சாஸ்திரத்திற்கு விரோதமாக விருக்கும்போதெல்லாம் அதைமாற்றி, சாஸ்திரானுசாரமாக ஜீவன் நடந்துகொள்ளவேண்டும்.

"விட்டமருஞ் சாத்திரத்தின் மேய விதியையெவன்
இட்டமிகத் தன்னலியல்கின்றான்—தட்டறுசீர்ச்
சித்தியது சேர்ந்தடையான் சேரான் சுகம்பரமா
முத்தியது சாரான் முதிர்ந்து."

"மன்னிச் செயுமதுவு மற்றதுவு முற்றறிவு
தன்னிற் பிரமாணஞ் சாத்திரமே—யென்னுமதால்
அந்தவிதான மறிந்தே கருமத்தை
முந்த வியனீ முயன்று." கீ. வெ. அத். xvi செ. 22 23.

(இ. போ.) எவனொருவன் சாஸ்திர நியமத்தை மீறித் தன் இஷ்டம்போல் நடக்கிறானோ அவன் பல சித்தியை அடையான்; சுகப்படான்; பரமகதியவனுக்குக் கிடையாது. இது செய்யத்தகுந்தது, செய்யத்தகாதது என்ற சந்தேகம் நிகழ்ந்தபோது, சாஸ்திரமே பிரமாணம். ஆதலின் அர்ச்சுனா! நீ சாஸ்திரத்தில் கூறியவைகளைத் தெரிந்துகொண்டு கர்மங்களைச் செய்யத்தக்கவனாவாய்.

இந்த அர்த்தமே மகாபாரதத்திலும் வெளிப்படையாக நிரூபிக்கப்பட்டுள்ளது. புருஷ பிரயத்தனமின்றி எக்காரியமும் சித்திபெறாது. அதனால் புருஷ பிரயத்தனம் மிகுதியாக இருத்தல் வேண்டும். காரியசித்தி அடைவதில் புருஷப்பிரயத்தனம் ஆறு பாகமும் தெய்வீகம் (அதிர்ஷ்டம்) ஒரு பாகமும் இருப்பதாகப் புராதன கிரந்தங்களில் கூறப்பட்டுள்ளது.

"ஷபிர் மனுஷ்ய யத்னஸ்ய சப்தமம் தைவ சிந்தனம்."

[பாரதம்]

குடியானவன் புலத்தை உழுது வித்துக்களை விதைத்து, மற்றும் அநேகவிதமான பிரயத்தனம் செய்தாலல்லவா தெய்வீகமான காலவருஷங்கள் பயிர்களை விளையச்செய்யும். புருஷப்பிரயத்தனம் இல்லாவிடில் தெய்வ சகாயத்தால் பலன் எவ்வாறு கிடைக்கும்?

இனி, ஹிதோபதேசத்திலும் இந்தக் கருத்தே மிகுதியாக எடுத்தாளப்பட்டிருக்கிறது.

யதாஹ்யேகேந சக்ரேண நரதஸ்ய கதிர்பவேத் ।
ததா புருஷகாரேண விநாதைவம் ந ஸித்யதி ॥

பூர்வஜன்மக்ருதம் கர்ம தத்தைவமிதி கத்யதே
தஸ்மாத்பௌருஷ காரேண யத்நம் குர்யாததந்த்ரித꞉ |
உத்யோகினம் புருஷஸிம்ஹமுபைதி லக்ஷ்மீ꞉ தைவே
ந தேயமிதி காபுருஷா வதந்தி | தைவம் நிஹத்ய
குரு பௌருஷமாத்மசக்த்யா யத்னே க்ருதே யதி ந
ஸித்யதி கோத்ர தோஷ꞉ ||

(இ. பொ.) "ஒரே சக்கரத்தினால் வண்டி இழுபடாது. அதுபோலவே புருஷ பிரயத்தனமின்றித் தெய்வத்தால் பலன் கிட்டாது. முன் ஜன்மத்தில் செய்த கருமமே தெய்வமென்று சொல்லப்படும். அதனால் புருஷ பிரயத்தனத்தை நன்றாய் ஊக்கிச்செய்யவேண்டும். புருஷ பிரயத்தனம் செய்வோனுக்கே பலன் கிடைக்கும். தெய்வத்தால் பலன் கிடைக்கும் என்ற வார்த்தையை அக்ஞானிகளே சொல்வர். தெய்வத்தைக்கொன்று ஆத்ம சக்தியால் பௌருஷத்தைச் செலுத்துங்கள். முயற்சி நன்றாகச்செய்தும் பலன் கிடைக்காவிட்டால் குற்றமில்லை."

சாஸ்திரங்களும், சாஸ்திர அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்தும் இதர கிரந்தங்களும் இவ்வாறு முறையிட, விதியினால் நமக்கு யாவும் ஏற்படுகின்றனவென்றும், அவற்றை விலக்க மனிதருக்குச் சக்தி கிடையாதென்றும் கருதி, மனிதர் நீரோட்டத்தின் மேலுள்ள மிதவைபோலவும், காற்றில் அகப்பட்ட இலவம்பஞ்சுபோலவும் இருப்பதாக எண்ணுவது என்ன மதியீனம். ஜீவன் தீரனாய் ஆத்ம சக்தியை உபயோகித்து அதிக மேலான காரியங்களைச் சாதிக்கவேண்டும். அவ்வாறு செய்வது அசாத்தியமானதென்று எண்ணுவீராகில் அரிய பெரிய கார்யங்களைச் சாதித்த மஹா புருஷர்கள், மஹா பதிவிரதைகள், முதலியோரது கதைகள் நமது பூர்வ கிரந்தங்களில் நிறைந்து கிடப்பதைக் கவனியுங்கள். மார்க்கண்டேயரது ஆயுள் பதினாறுக்குமேல் போகாதென்று பிறந்தபோதே விதிக்கப்பட்டதாகத் தெரிந்திருந்தும், தம் பிரயத்தனத்தால் பூரண ஆயுளை அவர் அடைந்ததன்றிச், சிரஞ்சீவிப் பட்டத்தையும் சம்பாதித்துக்கொண்டார் அல்லவா? மற்றும் மஹா பதிவிரதா சிரோன்மணியான சாவித்திரி, தனது ஊக்கத்தாலும் தைரியத்தாலும் எமன் கையிற் சிக்கிக்கொண்ட தன் கணவனது உயிரைமீட்டிக் கொண்டு, கடுமையான விதியின் எழுத்தையும் மாற்றவில்லையா?

இதனால், உத்சாகத்துடனும் ஊக்கத்துடனும் காரியத்தை செய்பவனுக்கு எதுவும் அசாத்திய மாகாதென்பது வெளியாகலாம்.

कर्मणेन्द्रो भवेज्जीवो ब्रह्मपुत्रः स्वकर्मणा
स्वकर्मणा हरेर्दासो जन्मादिरहितो भवेत्
स्वकर्मणा सर्वसिद्धिममरत्वं लभेद्ध्रुवम् ।
लभेत्स्वकर्मणा विष्णोः सालोक्यादिचतुष्टयम्
सुरत्वं च मनुत्वं च राजेन्द्रत्वं लभेन्नरः
कर्मणा च शिवत्वं च गणेशत्वं तथैव च ॥

தேவி பாகவதம்.

மற்றும், யோகவாசிஷ்டத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

पौरुषेण प्रयत्नेन ससुरासुरमानुषम्
कश्चिदेव विरिञ्चो वा ब्रह्मतामधिगच्छति
सारेण पौरुषेणैव स्वेनैव गरुडध्वजः ।
कश्चिदेव पुमानेष पौरुषात्तु तां गतः
पौरुषेण प्रयत्नेन युक्त्या कलिताकृतिः
शरीरी कश्चिदेवेह चन्द्रार्धाङ्कितताङ्गतः ॥

(இ. பொ.) "ஜீவன் தனது கர்மவசத்தால் இந்திரனும் நாரதனும்போல் ஆவான். இன்னும் அரிதாசனும் ஜன்மமற்றவனும் ஆவான். சகல சித்திகளையும் அடைதல் கூடும். தேவபதவியும் அடையலாகும். சாலோக்கியம்முதலிய நான்குவித முக்திகளையும் அடையலாம். சாலோக்கியம் சாமீப்பியம் சாரூப்பியம், சாயுஜ்ஜியம்) தேவத்துவம், மனுத்துவம், ராஜேந்திரத்துவம் முதலியவைகளையும் அடையக்கூடும்."

தன் கர்ம பலத்தால் சிவத்துவமும், கணேசத்துவமும் அடையலாகும். புருஷப் பிரயத்தனத்தால் ஒரு ஜீவன் பிரம்மத்துவத்தையும் அடையலாம். அதுபோலவே சுத்தமான புருஷப் பிரயத்தனத்தால் விஷ்ணுத்துவத்தையும் அடையலாம் சிவத்துவத்தையும் அடையலாம்." கர்ம விஷயத்தில் மற்றொரு கெட்ட

அபிப்பிராயம் பலரிடம் பதிந்துள்ளது. எவனேனும் வறுமையாலும், நோயாலும் பீடிக்கப்பட்டால், அதைக்கண்டோர் அவனுக்கு அவை தெய்வத்தின் கோபத்தால் ஏற்பட்டனவாக எண்ணி, அவனுக்கு உதவிசெய்தால் அது தெய்வ உத்தேசத்திற்கு விரோதமாகுமென்று கருதுகிறார்கள். அவ்வாறு எண்ணுவது மிக்க மதியீனம். கர்ம பலானுபவம் எப்போது தொடங்கிற்றென்பதும், அது என்று முடிவுபெறு மென்பதும் அக்ஞானிகளான மனிதருக்குத் தெளிவாகத் தெரியாதல்லவா? அவதிப்படுவோர் கஷ்டங்களைத் தொலைக்கத் தொடங்குவது மனிதரது தருமமாக இருக்கும்போது, சமயம் நேர்ந்தபோது அவ்வாறு செய்யாதிருப்பது அதருமமாகும். அவதிப்படுவோர்களை பார்த்தபோதே அவர்களுக்கு உதவிசெய்ய ஒவ்வொருவனும் முயலவேண்டும். அவர்களது கருமம் பரிபக்குவமாகாவிட்டால், அந்த சகாயம் பலிக்காமல் போயினும் போகலாம். சகாயமடைவதற்கான கரும பரிபக்குவம் ஆனதும் ஆகாததும் சர்வக்ஞானிகளான மஹாத்துமாக்களுக்கும் தேவர்களுக்கும் தெரியுமே தவிர, மற்றவருக்குப் புலப்படாது.

அதனால், ஒவ்வொரு மனிதனும், துக்கத்திலுள்ளவர்களைக் கண்டபோதெல்லாம், தனது தருமத்தை விடாமல் உதவிபுரிய வேண்டும். அனுபவிப்பவனது கருமம், பரிபூரணம் ஆகாவிடில், சகாயம் அடையாமற் செய்வது கரும தேவதைகளின் தர்மம் தேவதைகளே அவ்வாறு செய்யவல்லவர்.

இது தவிர, இவ்விஷயத்தில் மற்றொரு சந்தேகம் உள்ளது. ஒவ்வொரு ஜன்மத்திலும் ஜீவன் செய்யும் காரியங்கள் கிரகத்தின் சாரத்தை அனுசரித்துள்ளனவெனவும், அவனுக்கு ஸ்வதந்திரம் எதுவும் இல்லையெனவும், கிரகங்கள் கார்யங்களைச் செய்விக்கின்றனவெனவும், நமது தேசத்தில் விசேஷமாக நம்பப்பட்டு வருகின்றன. கொஞ்சம் ஆலோசித்துப்பார்த்தால், இவ்வபிப்பிராயங்கள் தவறென வெளியாகும். ஜனனகாலத்திலுள்ள கிரகத்தின் நிலைகள் ஜீவனது பூர்வகர்ம பலன்களைக் காட்டுகின்றன. அக்கிரகங்கள், யாதொரு பலன்களையுங்

கொடா. சாதாரணமாக ஜாதகம் எழுதும்போது முதலில் எழுதும் ஸ்லோகம் இந்த அர்த்தத்தையே தெளிவாய்க் குறிக்கின்றது.

ஶ்ரூதாஸதி ஸாயஜநா நாரஞ்ஜகா வித்ரும் தரம்
ஹோத்ருவாரூ பத்ரிகா | பாவ்யர்த்தஸம்ஸூசந ஸத்
காஞ்சிகா விஷ்வூதெஸம் ப்ரதிஜந்மபத்ரிகா || ஜநநீ
ஜந்மஸௌக்யாநாம் வர்த்தநீ குலஸம்பதாம் | பதவீ
பூர்வபுண்யாநாம் லிக்யதே ஜந்மபத்ரிகா ||

"பாவ்யர்த்த சம்சூசன, பதவீபூர்வ புண்யாநாம்"

என்ற பதங்களால், பூருவ கரும பலன்களைக் கிரகங்கள் குறிக்கின்றனவேயன்றி, பலனை அவை கொடாவென்று வெளியாகின்றது. இதனால், சிலர் தீயவற்றைச்செய்து தமது ஜாதக ரீதியால் கிரகங்கள் அவ்வித காரியங்களை செய்வித்தனவென்று புகல்வது சாஸ்திர விரோதமானது. பூருவ கருமானுசாரமான சுபாசுப வாசனைகளையும், மனோ சக்திகளையும் ஜாதகத்தால் தெரிந்துகொள்ளக்கூடுமே யொழிய, ஜீவன் அப்பலன்களைத் தன் பிரயத்தனத்தால் மாற்றமுடியாதென்று சொல்வது தகுதியல்ல. ஜாதகத்தைப்பார்த்து ஜீவனுக்கு ஏதேனும் அசுபவாசனை இருப்பதாகத் தெரிந்தால், அதை நசிக்கச்செய்யும் வித்தைகளை ஊக்கத்துடன் கற்றுக்கொண்டு, அந்த அசுபவாசனையை நசிக்கச் செய்யவேண்டும். இதற்கு திருஷ்டாந்தமாக ஒரு புராணக்கதை உள்ளது. பண்டைக்காலத்தில் ஒரு அரசனிடம் ஒரு ஜோதிஷன் இருந்தான். அவனுக்குப் புத்திரன் பிறந்தவுடன், பிறந்த காலத்தைக்குறித்து ஜாதகத்தை எழுதும்போது, குழந்தை 20-வது வயதில் திருடனுவான் என்று தெரிந்தது. அதைக்குறித்துப் பிதா மனம்கவன்று, அத்திருட்டுப்புத்தி தனது புத்திரனுக்குப் பழகாதிருக்கும் வழியை நன்ருய் யோசித்தான். வித்தியாப்பியாசத்தாலன்றி வேறென்றாலும் அதைத்தொலைக்க முடியாதென்று கடைசியாக நிச்சயித்து அதுமுதல் அவனுக்கு வித்தயைக் கற்பித்து வந்தான். அநேக

நீதிகளைப் போதித்துவருகையில் திருட்டுத்தொழில் இழிவான தென்றும், பாவத்திற்குக் காரணமானதென்றும், அபகீர்த்தியைத் தரக்கூடியதென்றும் இவ்வாறு அநேகவிதமாக உதாரணமுகத்தால் போதித்து வந்தான். எந்தெந்த பதார்த்தத்தை அபகரித்தால் எந்தெந்த தோஷம் வரச்கூடுமென்றும், எந்தெந்த தண்டனையை அடையக்கூடுமென்றும், யாவற்றையும் நன்று வற்புறுத்திக் கூறிவந்தான்.

பாலன் அவ்விஷயங்களைத் திடமாகக்கற்று, நாளடைவில் பண்டிதனானான். ஆயினும் 20-வது வயதுவந்தவுடன், திருடவேணுமென்ற புத்தி பூருவ கருமத்தால் அவனுக்கு உண்டாயிற்று. அன்றிரவு எவர்க்குந் தெரியாமல், அரண்மனைக்குட்புகுந்து அங்கங்கே தேடி பொக்கிஷத்தை அடைந்து, அங்குள்ள நிதிகளைத் திருடத் தலைப்படுகையில், தனக்குத் தகப்பன் போதித்தவை யாவும் நினைவிற்கு வந்தன. ரத்னாதிகளை அபகரித்தாலுண்டாகும் பாவங்களும் தண்டனைகளும் நினைவுக்குவரவே, அது தோஷமென்று நினைத்து அவைகளை அபகரிக்காமல் விடுத்துத் திரும்பி வரும்போது, ஒரு மூலையில் குவியலாக வைத்திருந்த உமியைக்கண்டு, அதைத் திருடுவதால் தோஷம் ஏற்படுமென்று தகப்பன் சொல்லாததால், அதைத் திருடுவதால் தோஷமில்லையென்று நினைத்து அதை அபகரித்துக்கொண்டு வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்தான். அரண்மனையை விட்டு வெளியே வரும்போது, காவற்காரர்கள் அவனைப்பிடித்துக் கட்டி வைத்து, காலையில் அரசன்முன் நிறுத்தினார்கள். அரசன் தனது ஆஸ்தான பண்டிதனுடைய மகன் இவ்வித இழிந்ததொழிலைச் செய்ததற்கு அதிசயித்து, ஏன் இவ்வாறு செய்தாய் என்று வினவ, அவன் நடந்ததை உரைத்தான். இதன் உண்மையை அறிய எண்ணி அவனை ஒருபுறம்போக்கித் தகப்பனைத் தருவித்து இரவில் நடந்ததைத் தெரிவித்தான். ஜோதிஷன் ஜாதக தோஷத்தைக் கூறித் திருடுவதால் வரும் தோஷத்தையே வித்தியாப்பியாச காலங்களில் பலமுறை இடித்துக் கூறியதாகவும், அவன் அவ்விஷயங்களை நன்றாய் அறிந்தவனாதலின் அத்தொழிலுக்குப் போகானென்று நிச்சயித்திருப்பதாகவும்

சொன்னான். அரசன் உண்மையை அறிந்து, பிராமணச்சிறுவனை விடுதலைசெய்தான். இதிலிருந்து பூருவகருமானுகுணங்களான அசுபவாசனைகளைக் கல்வியால் அநேகமாய் மாற்றி, காலக்கிரமத்தில் அவைகளைப் பூரணமாக நசிக்கச்செய்வது சாத்தியமென்பது வெளியாகின்றதல்லவா? உபாத்தியாயர்களும்பிள்ளைகளது ஜாதக லக்ஷணங்களை அறிந்திருப்பது எவ்வளவு உபயோகமுள்ளது என்பதும், எவ்வளவு அவசியம் என்பதும் இக்கதையால் தெளிவாகின்றன. பாடசாலையில் உபாத்தியாயர் மேற்கூறிபடி மாணுக்கர் ஒவ்வொருவரையும் தனித்தனியாக ஆராய்ந்து, அவரிடமுள்ள அசுபவாசனைகளை அறிந்து, அந்த அசுபவாசனைகளை அடியோடு நசிக்கச் செய்வதற்கும், சுபவாசனைகளை வித்துவதற்கும், வித்துப்போலுள்ள சுபவாசனைகளை மேன்மேல் வளரச்செய்வதற்கும், எப்போதும் முயலவேண்டும். படிப்பதின் பயன் விஷய ஞானத்தை விருத்திசெய்துகொள்வது மாத்திரமல்ல. மாணவரை ஒழுக்கமுள்ளவராகச் செய்வது தான் கல்வியின் முக்கியகருத்து முன்னுளில் குருகுல வாசத்தால் இது நன்று நடைபெற்றது. இப்போது பாடசாலைகளில் அநேக பிள்ளைகள் ஒரு உபாத்தியாயரிடம் கொஞ்சகாலமட்டும் வித்தையைக் கற்பதால், முன்குறித்த முக்கிய உத்தேசம் அவ்வளவு நிறைவேறுவதில்லை.

கருமங்கள் பலனைக் கொடுக்கும் சக்தியை நோக்கி அவை மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அவை பிராரப்தம், சஞ்சிதம், கிரியாமாணம் என மூன்று வகைப்படும். பிராரப்தம் என்றால் நன்ருகத் தொடங்கினது:— அதாவது அனுபவத்திற்குவந்த பூருவகருமம். சஞ்சிதம் என்றால் அனுபவத்திற்குவராமல்சேர்ந்துள்ள பூருவகருமம். இது சாதாரணமாக ஜீவனிடம் ஸ்வபாவமாகவும், சுபாசுப வாசனைகளாகவும், மனேசக்தியாகவும் காணப்படுகின்றது. கிரியாமாணம் என்பது வர்த்தமான கருமம். அதாவது நடக்கும் ஜன்மத்தில் செய்யப்படும் கருமம்.

𑌅𑌨𑍇𑌕𑌜𑌨𑍍𑌮 𑌸𑌞𑍍𑌜𑌾𑌤𑌂 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌤𑌨𑌂 𑌸𑌞𑍍𑌚𑌿𑌤𑌂𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 𑌕𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌣𑌞𑍍𑌚 𑌯𑌤𑍍𑌕𑌰𑍍𑌮 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌨𑍍𑌤𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇। 𑌸𑌞𑍍𑌚𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌮𑌾𑌹𑍃𑌤𑍍𑌯 𑌕𑌿𑌯𑌨𑍍𑌤𑌿𑌵𑍈 𑌦𑍇𑌹𑌾𑌰𑌮𑍍𑌭𑍇𑌚 𑌸𑌮𑌯𑍇 𑌕𑌾𑌲𑌃𑌪𑍍𑌰𑍇𑌰𑌯 𑌤𑍀𑌵𑌤𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌰𑌬𑍍𑌧𑌂 𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑍍 ॥

தேவி பாகவதம்.

சஞ்சித கர்மம் என்றால் அநேக கோடி ஜன்மங்களிற் செய்த கரும பலன்களில் அனுபவித்தவை போக மிகுந்துள்ள கருமம், பிராரப்தம் என்பது அவ்வாறு மிகுந்துள்ள கருமத்தி லிருந்து ஒரு ஜன்மத்தில் அனுபவத்திற்கு வரும் பாகம். இல்லறம் நடத்துபவன் நீண்டகால அனுபவத்திற்குச் சேகரித்த பதார்த்தங்கள் போல்வது சஞ்சிதம். அவற்றிலிருந்து அவ்வப்போது உபயோகத்தின் பொருட்டு அவன் எடுத்துக்கொள்ளும் பதார்த்தத்தைப் போன்றது பிராரப்தம். அநேக ஜன்மங்களில் அநேகருடன் உறவாடி அவருடன் கர்மானுபந்தம் ஏற்பட்டிருக்கும். அவ்வித ஜீவர்களெல்லாரும் ஒரே காலத்தில் ஜனிப்பதும், அவ்வாறு ஜனித்தாலும் வெவ்வேறு தேசங்களிலிருப்பதால் ஒருவரோடொருவர் கலப்பதற்கு அவகாசம் இருப்பதும் சாத்யமாகா. அதனால், ஒவ்வொரு பிறப்பிலும் எந்தெந்த ஜீவனுடன் ருணானுபந்தத்தைத் தீர்த்துக்கொள்வதற்கு முடியுமோ அந்தந்த ஜீவர்களை ஓரிடத்தில் பிறக்கும்படி செய்வதினாலும், மற்றும் வேறு எவ்விதமாகவாவது அவரைக் கலக்கும்படி செய்வதினாலும், கரும சேஷத்தில் சிறிதுபாகம் அனுபவத்திற்கு வந்து தீரும்படி கரும தேவதைகள் விதிப்பார்கள். அவ்விதம் ஒவ்வொரு பிறப்பிலும் பலானுபவத்திற்கு வந்த கருமபாகம் பிராரப்தம் எனப்படும். அதாவது நன்றாய்ப் பலனைக் கொடுப்பதற்குத் தொடங்கிய கருமம், ஜீவனுக்குக் கிடைக்கும் சரீர சௌக்கியம், தாய்தந்தையர், தேசகாலங்கள் எல்லாம் அந்த பிராரப்த கருமத்தை ஒட்டியே உண்டாகும். வில்லினின்றும் விடப்பட்ட அம்புபோல் பிராரப்தமானது அனுபவத்திற்கு வாாமல்தீராது. பிராரப்தத்தை மாற்றுவது எவர்க்கும்

சாத்தியமின்று. தன்பலனை அது கொடுத்தே தீரும் "ப்ராரப்த கர்மணாம் போகாதேவக்ஷய:" ஆயினும், இதையும் விசேஷ முயற்சியால் மாற்றுவது சாத்தியமாகும். எவ்வாறெனில், பிராரப்த கருமபலனும் புருஷ பிரயத்தன பலனும் கலந்தால், வேறு விதமான பலனைத்தரும். ஒரு கல்லை எறிந்து அதை தடை செய்யாதுவிட்டால் அது போகத்தகும் இடத்திற்கு போகாமலிராது. அவ்வாறு செய்யவிடாது, அதற்குக்குறுக்கே மற்றொரு கல்லை எறிந்தால், அவையிரண்டும் ஒன்றோடொன்று தாக்கி முதலில் எறிந்தகல் போகத்தகுந்த இடத்திற்கு போகாமலும், இரண்டாவது எறிந்த கல்லும் அவ்வாறே போகாமலும் இரண்டும் தம்வழியை விடுத்து மற்றொரு வழியிற் செல்லும் இவ்வாறே, பிராரப்தம் தனது பலனை கொடுக்காமல் தீராது, ஆயினும் புருஷப் பிரயத்தனத்தால் அதை மாற்றுவது அசாத்தியமென்று எண்ணக்கூடாது. புருஷப்பிரயத்தனம் செய்தால், பயன் இல்லாமற்போகாது; பலன் தானே வரும். சில பிராரப்தங்கள் நமக்குத் தெரியாமலே நிகழ்தலும் கூடும். அவைகளைத்தடுக்கப் பிரயத்தனம் செய்ய நமக்கு அவகாசமே ஏற்படாது. சஞ்சித கருமம் இவ்வாறு இல்லை. சஞ்சித கருமம் பலனுக்கு வராதது. அதைப் பிரயத்தனத்தால் அதாவது, வர்த்தமான கருமத்தால் மாற்றக்கூடும். சஞ்சித கருமத்தில் ஸ்வபாவரூபமாக வெளிப்படுபவையெல்லாம் மனிதரிடம் ஸ்வபாவரூபமாகவே காணப்படுகின்றனவென்றும், வர்த்தமான ஜன்மத்தில் செய்யும் பிரயத்தனத்தால் அந்த சுபாவத்தை மாற்றக்கூடுமென்றும், நிரூபிக்கப்பட்டிருக்கிறதல்லவா? இதல்லாமலும், சஞ்சித கருமம் உத்தமமான ஆத்ம ஞானத்தாலும் நசித்துப்போகும்.

"அங்கி விறகெல்லா மெரிப்பதுபோ லவ்வறிவு
பொங்கிவரு கன்மம் பொடியாக்கும். கீ. வெ. அ. IV 37.

(இ. பொ.)—ஜ்வாலாக்கினி கட்டைகளை எவ்வாறு எரிக்கிறதோ அவ்வாறே, அர்ச்சுனா? ஞானக்கினி சருவ கருமத்தையும் எரித்துவிடும்.

செய்யும் கருமங்களெல்லாம் பலனைக் கொடாமற் போகாதென்ற சித்தாந்தம் ஒன்றிருக்க, ஞானத்தால் கருமம் எவ்

வாறு நசித்துப்போகுமென்று ஒரு கேள்வி பிறக்கலாம். சஞ்சித கருமம் பலத்திற்கு வாராதிருப்பதால், இன்னும் அது பீஜரூபமாக இருக்கிறதென்னலாம். இந்திரியத்தாலும் மனத்தாலும் செய்யப்படும் கருமங்களனைத்தும் ஜீவனுக்குஸ்வ பாவரூபமாக இருப்பதால், எப்போதும் அவை மாற்றக்கூடியவைதாம்.

காயிக கருமமாத்திரம் இதர ஜீவர்களின் சுகதுக்கங்களுக்குக் காரணமாகவிருப்பதால், அந்தந்த ஜீவர்கள் பூலோகத்தில் ஜனிக்குங்கால், அந்தந்த ருணானுபந்தங்களைத் தீர்த்துக்கொள்வதற்கு அவகாசம் ஏற்படும். தன்னோடு ஜனித்திருக்கும் ஜீவர்களின் கடன்கள் மாத்திரம் பிராரப்தத்தில் சேர்ந்திருப்பதால், அந்த ஜன்மத்தில் அவை தீர்க்கப்படும். இதர ஜீவர்கள் பூலோகத்தில் ஜனிக்காமையால் அவரது கடன்களை மாத்திரம் சாமானியர்களான ஜீவர்களுக்குத் தீர்ப்பதற்கு அவகாசமேற்படாது. ஆயினும் சத்கருமானுஷ்டானத்தாலும், தியான யோகாதிகளாலும், பக்தி ஞானங்களாலும் பக்குவமடைந்த ஒவ்வொரு மகாபுருஷர் தமது பூருவஜன்ம ஞானத்தால், அந்தந்த சஞ்சிதத்தை நசிக்கச்செய்வர். பூருவஜன்மத்தில் எந்தெந்த ஜீவர்களுடன் எந்தெந்த அனுபந்தம் எவ்வெவ்விதமாக ஏற்பட்டதென்றும் அவர் தமது திவ்விய திருஷ்டியால் அறிந்துகொள்வர். அதனால், எந்தெந்த கருமத்தால் எந்தெந்த அனுபந்தமேற்பட்டதென்றும், எந்தெந்தப் பற்றுக்கள் இந்த கருமத்திற்குப் பீஜங்களாகவுள்ளனவென்றும் அறிந்து, அந்தந்த பீஜங்களை அவர் பிரயத்தனத்தால் நாசம் செய்யக்கூடும். வெறுப்பு ரூபமான அனுபந்தம் எவரிடமேனுமுண்டானால், விருப்பு ரூபமான சங்கற்பங்களால் அந்த வெறுப்புக்கு வித்தாயுள்ளவைகளை நசிக்கச் செய்வர். அஞ்ஞானத்தினாலுண்டாகிய அனுபந்தங்களைக் கற்பித்துக் கொண்டால், தத்துவஞானத்தால் அந்தக் கருமபீஜங்களை நசிக்கச்செய்வர். இவ்விதம் கருமபீஜங்களனைத்தையும் நசிக்கச்செய்துவிட்டால், வேகவைத்த வித்துப்போல அவை பலனைக் கொடாமல் நசித்துப்போகும். பலத்திற்கு வாராதிருக்கும் கரு

மத்தைமாத்திரம் இவ்வித ஞானசகாயத்தால் நசிக்கச்செய்வது சாத்தியமே யொழிய, பலனுக்குவந்த பிராரப்தத்தைப் பலனைக்கொடாதிருக்கச்செய்வது சாத்தியமாகாது. ஒரு திருஷ்டாந்தத்தால் இவ்விஷயம் நன்று விளங்கலாகும். எவனாயினும் புத்திபூர்வகமாக விஷத்தை உண்ண நிச்சயித்து, விஷத்தைத் தேடிவைத்தானென்று வைத்துக்கொள்வோம். அவ்விஷத்தை உண்ணுவதற்கு முன்பு அதை நசிக்கச்செய்து பலனைக்கொடாமற் செய்யலாமே தவிர, அதையுண்டபிறகு அதன் பலனைத் தடுக்கமுடியாது. அந்த சமயத்தில் மாற்று மருந்துகொடுத்து, அதன் பலனைச் சிறிதுமாற்றலாம்; விஷம் உடலெங்கும் பாவி மீறிப்போய்விட்டால், அதை மாற்ற முயல்வது பயனற்றதாகும். எடுத்துவைத்த விஷம்போன்றது சஞ்சிதம்; உண்ட விஷம்போன்றது பிராரப்தம்; தன் பலன் எதுவோ அதைக் கொடாமல் அதுவிடாது. அதை ஒருவேளை பிரயத்தனத்தால் மாற்றக்கூடும். ஒருசமயம் மாற்றுவது கஷ்டமாகவிருக்கும். சஞ்சிதத்தை மாத்திரம் புருஷப் பிரயத்தனத்தால் அடியோடு பலனைக்கொடாது செய்யினுஞ் செய்யலாம்

ज्ञानोदयात् पुरारब्धं कर्म ज्ञानान्न नश्यति
अदत्वा स्वफलं लक्ष्यं उद्दिश्योत्सृष्ट बाणवत् ।
व्याघ्रबुद्ध्या विनिर्मुक्तो बाणः पश्चात्तु गोमतौ
न तिष्ठति छिनत्त्येव लक्ष्यं वेगेन निर्भरम् ॥

ஸ்ரீமஹாபாரதம்.

(இ. பொ.) "ஞானமுண்டாவதற்கு முன்பு பலன்கொடுக்க ஆரம்பித்த கருமமானது குறிவைத்துவிட்ட பாணம்போல் பலனைக் கொடாமற்போகாது. அது ஞானத்தால் நசிக்காது. முதலில் புலியென்றெண்ணி அம்பை எய்தபிறகு, அது பசுவென்றறிந்து அம்பை நிறுத்த முயன்றாலும், அது எய்தவேகத்தால் அடங்காதுசென்று கோவைக் கொன்றுவிடும்."

மேற்கூறியவையெல்லாம் அந்தந்த ஜீவனுடைய பிரத்தியேக கருமத்தைக் குறித்தது. இதல்லாமல் ஜனசமுதாயத்தால் அனுபவிக்கப்படும் கருமம், சங்காத (கூட்டுக்) கருமமெனப்படும். ஒவ்வொரு சமயத்தில் பெரிய வெள்ளத்தாலும், பூகம்

பத்தாலும், ரயில்சேதம் முதலியவற்றாலும் அநேகர் ஒரேகாலத்தில் மடிவதையும், தப்புவதையும் கண்டுங்கேட்டு முள்ளோம். அதுபோலவே, ஒவ்வொரு சமயத்தில் பிரபுவைதரிசிக்கும்போது, அநேகர் நானாவித பக்ஷோத்ஸவங்களை பார்ப்பது முதலாகிய சுகங்களைச் சேர்ந்தனுபவிப்பதுண்டு. இந்த சுகதுக்கங்கள் அனைத்தும் சங்காத கருமமெனப்படும். எப்போதேனும் அநேக ஜீவர்கள் ஒரேவிதமான கருமானுபவத்திற்குப் பாத்திரர்களாக இருந்தால், கருமபலனைக் கொடுக்கும் தேவதைகள், அந்த ஜீவர்கள் அனைவரையும் ஓரிடத்தில் சேரும்படி கூட்டி, அவ்வித சுகதுக்கங்களை அனுபவிக்கும்படி செய்வார்கள். அவ்வித அனுபவத்திற்குப் பாத்திரனேயாகாத ஜீவன் ஒருவன் அக்கூட்டத்தில் இருந்தாலும், ஏதோ ஒரு காரணத்தால் அந்த இடத்திலிருந்து அவன் தெய்விகமாக நீக்கப்படுவான். மரக்கலத்தில் பிரயாணம்செய்யும் ஜனங்களில் ஒருவன் நடுவழியில் ஒரு துறைமுகத்தில் இறங்கிச்சென்றவுடனே, அக்கப்பல் முழுகிப்போவதுமுண்டு. அப்போது இறங்கிச்சென்றவன் இந்த சங்காத கருமத்திற்குப் பாத்திரனாகவில்லையென்று எண்ணவேண்டும். அதுபோலவே புகைவண்டிப் பிரயாணத்தை உத்தேசித்துப் பயணமாகி, தெய்விகமாக ஏதோ ஒரு விஷயத்தைக் குறித்து ஒருவன் நின்றுவிட்டபோது, அன்றைத்தினம் அப்புகைவண்டிக்கு அபாயம் நேரிட்டு அதில் உள்ளவர்கள் இறந்துபோனால், அன்று பயணம்செய்யாமல் நின்றுவிட்டவன் இந்த சங்காத கருமத்திற்குப் பாத்திரனாகாததால் தருமதேவதைகளினால் அவன் காப்பாற்றப் பட்டானென்று அறியலாகும். அதுபோலவே, வழியில் ஓர் இடத்தில் சில ஜனங்கள் அவ்வண்டியில் ஏறி, சங்காத கருமபலனான மரணத்தை அடையவும் கூடும். இன்னும் பூகம்பத்தால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் இறக்க, அதற்கு முன்னாளில் அவ்விடத்தைவிட்டு எவ்வளவோ ஜனங்கள் போயிருப்பதையும், மற்றும் பலர் அவ்விடத்திற்குவந்திருப்பதையும் பார்த்தால், கரும பலனைக்கொடுக்கும் தேவர்கள் கருமானுசாரமாகச் சிலரை நீக்கிச் சிலரை அவ்விடத்தில் சேர்த்துள்ளாரென்று தெளிவாகின்றது.

ஜீவன் கருமங்களை எப்போதும் செய்துகொண்டிருப்பதால், கருமபந்தங்களிலிருந்து அவன் எவ்வாறு தப்புவது என்பது விசாரிக்கத்தகுந்தது. சாமானியமாக, ஒரு பிரம்மாண்டத்தில் இருக்குமவரை ஈசுவரனது கட்டளையைமீறி நடப்பது பிரம்மாதிகளுக்கும் சாத்தியமன்று. கடவுளின் கட்டளைக்கு உட்பட்டே யாவரும் நடக்கவேண்டும். ஜீவர்களுக்கு இவ்விஷயத்தில்மட்டும் ஸ்வதந்திரம் கிடையாது. அவர் ஆக்ஞைக்கு உட்பட்டு பிரம்மாண்டத்தில் வர்த்திப்பதில் ஜீவனுக்குள்ள ஸ்வதந்திர விஷயம் இதுவரை விஸ்தரிக்கப்பட்டது. சஞ்சித பிராப்த கருமங்கள் ஜீவனால் முன்செய்யப்பட்ட மனோ வாக்காய கருமங்களின் பலனே தவிர, நிர்ப்பந்தமாக ஜீவனைக் கட்டுப்படுத்தும் வேறான விதியின் செயல்கள் அல்ல. விதியென்றால் ஒழுங்கு அல்லது சட்டம் என்று பொருள்படும். கருமத்திற்குத் தகுந்த பலன் தப்பாமல் உண்டாகும் என்பது இக்கருமத்தின் சித்தாந்தம். விதியென்ற சப்தம் ஜீவனது முன்செய்த கருமங்களையே தெரிவிக்கின்றதன்றி, வேறொன்றையும் தெரிவிக்காது. இதனால் யோகவாசிஷ்டம் என்ற வேதாந்த நூலில் சஞ்சிதபிராரப்த கருமங்கள் பிராக்தன பௌருஷேயம் (புருஷனால் பூர்வம் செய்யப்பட்டவை) என்று நிரூபிக்கப்பட்டுள்ளன.

"கர்மணாபத்யதே ஜந்து" என்ற வாக்கியம் உலகில் சாதாரணமாக வழங்குகிறதல்லவா? கருமத்தைச் செய்பவன் பந்தத்திலிருந்து தப்பமுடியுமா என்ற சந்தேகத்தைப் போக்குவதற்குப் பின்வரும் பகவத்கீதைப் பாட்டை நோக்குங்கள்.

"ஐவகைய வேள்வியினுக் காகாக் கருமங்கண்
மெய்வகையே கட்டு மிகவுலகை—யிவ்வகையா
யாங்கதனுக்காக வமைந்துன் னசையைவிடுத்
தீங்கிதனை நின்றே யியற்று." (கீதை. வெ. III. 6.)

ஈசுவரார்ப்பண புத்தியால் தன்னயங்கருதாது கருமத்தில் பற்றின்றிச் செய்யும் காரியத்தைத் தவிர மற்றவையெல்லாம் ஜீவனை பந்தப்படுத்தும். அதனால் ஈசுவரார்ப்பண புத்தியுடன் பற்றுக்களைவிட்டுக் கருமத்தைச் செய்யவேண்டும்.

எந்தப் பிரயோஜனத்தை உத்தேசித்து ஜீவன் கருமத்தைச் செய்கிறானோ அந்தப் பிரயோஜனத்தைப் பகவான் அவனுக்கு அனுக்கிரகிக்கிறான்.

“என்னையெவரெவ்வா றடைந்தியல்வர் யானவரை
யன்னவகை யான்மிசவு மன்புற்றே—பின்னடைந்து
காட்டுவன்.” கீதை. வெ. iv. 11

என்றவாறு போகத்தைத் தேடுபவர்க்குப் போகத்தையும், ஞானத்தை நாடுபவருக்கு ஞானத்தையும், முமுக்ஷுக்களுக்கு மோக்ஷத்தையும் கொடுப்பான். அதனால் பலனைக்கோராமல் செய்யும் கருமங்கள் ஜீவனுக்கு பந்தத்தைத்தரா. அவ்விதம் செய்யப்படும் கருமங்கள் யதார்த்தமாகக் கருமங்கள் எனப்படா. அன்னோரே கருமத்தில் அகருமத்தைப் பார்ப்போராவர். அவரே உண்மை சந்யாசியாயும், யோகியாயும் ஆவர் என்று பகவான் போதித்துள்ளார்.

“கன்மத்தின் ஞானத்தைக் காணு மவனெவன்றான்
கன்மத்தின் ஞானத்தைக் கண்டியல்வான்—நன்மைக்கே
தக்கபெரும் புத்தி சமைந்தா னவனவனே
யெக்கருமஞ் செய்தானு மிங்கு.” கீதை. அத். iv. 18.

“கன்மபல னண்ணாது காரியமென் றுன்னியவத்
தன்மையுமத் தூய்வன திற் சார்ந்தியல்வா—னன்மையமர்
ஞானியவன் யோகியவ னல்லங்கி யிற்கிரிசை
தானிகழா னென்றுஞ் சமைந்து.” கீதை. வெ. அத். vi. 1.

இவ்விதமான கருமங்கள் ஜீவனைப் பந்தப்படுத்தா. அவை உலகத்தின் நன்மையைக் கருதிச் செய்யப்பட்டனவாகும். இவ்வித கருமங்கள் பூரணமாகப் பற்றின்றி இருப்பதால், அவை பந்தத்துக்குக் காரணமாகா. அவை மூலம் பிரம்மத்தை அடைவதும் சாத்தியமாகும்,

யதா³ ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேऽஸ்ய ஹ்ருதி³ ஶ்ரிதா꞉ ।
அத² மர்த்யோऽம்ருதோ ப⁴வத்யத்ர ப்³ரஹ்ம ஸமஶ்நுதே ॥

கடோபநிஷத்.

இவ்விஷயமே வேதத்திலும் ஆங்காங்கு வற்புறுத்திச் சொல்லப்பட்டுள்ளது. கீதையிலும் பின்வருமாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

"எல்லா முயற்சியுமொன் றிச்சியா தோர்ந்தியல
வல்லானைப் பண்டிதனு யாய்ந்துரைப்பர்—நல்லா
ரறிவா லவன்வினைக ளெல்லா மழிந்தே
பொறிவாயிற் பஞ்செனவே போம்". கீ. வெ. iv 19.

"கருமப் பயனசையைக் கைவிட்டேயென்று
மொருமித் துகந்துபுறத்தொட்டாப்—பெருமையோன்
மெய்யார் கருமத்து மேவியன்று னேலுமவன்
செய்யா னதொன்றுஞ் செறிந்து." 20

"ஆசை துறந்துள்ள மமைந்த வுணர்வினனுய்ப்
பாசமுட னெப்பொருளின் பற்றற்றுப்—பேசியதன்
சாரீர கன்மமே சார்ந்தியல்வான் போர்தனையான்
சேரீரு பாவமுஞ் சென்று." 21

பேறிழவிலொத்திருந்து பெற்றத்தா லுள்ளமைந்து
கூறுமிருதுயரிற்கூடாதே—வேறொருவன்
தன்பாற் பொறுமையிலான் றன்கருமஞ் செய்திடினும்
அன்பாற் பிணிப்புண்ணு னங்கு." 22

"போன நசையினனுய்ப் புன்புலனின் முத்தனுய்
ஞானநிலைகொண்ட நன்னெஞ்சா—யானதொழில்
வேள்வியினுக் காக விரும்பி முயல்வானுக்
கூழ்வினையெல் லாம்போ முடைந்து." 23

"செய்யுந் தொழில்கண்மணஞ் சேரும் விதியதனிற்
பெய்யுமவியாற் பெருந்தொழின்—மெய்யணைந்து
தான்பிரம மென்னுன்னித் தன்பிரம கன்மத்தான்
வான்பிரமத் தன்மையுறும் வாய்ந்து." 24

காத லதுவிட்டுக் கருமம் பிரமமெனு
மூதுயிரிற் றுனமைத்து முற்றியல்வான்—தீதான
பாவத்தின் மன்னுன் பதுமத் திலைநீரின்
மேவப் படாததுபோன் மிக்கு." கீ. வெ. v. 9.

புலனிலிச்சையில்லாமல் செய்யப்படும் கருமங்கள் முதலில் மனத்தூய்மைக்குச் சாதனங்களாகி, பிறகு ஆத்மக் ஞானத்திற்குக் காரணமும், மோக்ஷத்திற்குச் சாதனமு மாகின்றன. மனத்தூய்மை ஏற்படுவதன்முன் கருமங்களை விடுவது, அதாவது சந்நியாசங்கொள்வது, பந்தத்திற்கு காரணமாகும். சித்தசுத்தி அடைந்து, ஆசையை அடக்கி, பகவான் உலகத்தை ஈடேற்

றும் பொருட்டு நிர்ஹேது கருணையுடன் உலகத்தில் வர்த்திப்பதுபோல, பரமேசுவரப் பிரீதியின் பொருட்டு ஸ்வாமிசேவக நியாயத்தால் (உலகத்தில்) கருமங்களைச் செய்துகொண்டு வரும் மகானுபாவர் பந்தத்திலிருந்து நீங்கி, பரமபுருஷார்த்தத்தை அடைவர். அவ்வித மகாத்துமாக்களைக் குறித்தே "அத்ர பிரம்ம சமஸ்னுதே" என்று சொல்லப்படுகிறது. அதாவது இங்கேயே (இந்த சரீரமிருக்கும்போதே) அவர் பிரம்மானந்தம் அனுபவிப்பர். இவரே ஜீவன் முக்தரெனப்படுவர். அவ்வித பதவியை அடைந்த பிறகு, அவர் அந்த ஆனந்தத்தை அனுபவித்துக்கொண்டிருந்தாலு மிருப்பர். அன்றி, பிரம்மாண்டத்தில் ஈசுவரன் வர்த்திப்பதுபோல், நிர்வியாஜக கருணையுடன் உலகத்தின் நன்மையின்பொருட்டுக் கருமத்தைச் செய்துகொண்டு மிருப்பர்.

மூவுலகுந் தன்னுள்ளு முன்பெய்த தாய்ப்பின்பு
மேவுமியல பாலெய்த வேண்டுவதொன் — றுவதெனக்
கில்லையா யேயிருக்க வெல்லலாக் கருமத்து
மொல்லையா னினறியல்வ னோர்ந்து." கீ. வெ. iii. 19.

என்று பகவான் திருஷ்டாந்தத்தால் அர்ச்சுனனைக் கருமத்தில் உற்சாகமுள்ளவனாகச் செய்தாரல்லவா.

இக்காலத்தில் தன்னயம் நாடாது உலகத்திற்குப் பாடுபடுவதற்கு அநேக ஸத்புருஷர்கள் வேண்டியிருக்கிறது. அதனால் ஞானத்தை நாடுபவரெல்லோரும் லோகோபகாரமான கருமங்களைச் செய்துகொண்டு பரிசுத்தர்களாகி, பரம புருஷார்த்தங்களை அடைந்து, எல்லாருக்கும் அவ்வித பதவி உண்டாகும் வரை உழைத்துப் பகவானது எண்ணங்களை நிறைவேற்றுவார்களாக:—.

11-வது அத்தியாயம்.

தருமம்.

தருமமென்றால் ஜீவன் தனது தற்கால ஸ்திதியிலிருந்து அதைக்காட்டிலும் மேலான ஸ்திதிக்குத் தன்னை உயர்த்திக் கொள்ளும் உபாயம். உலகத்தில் பூதங்களனைத்தும் அநேக தாரதம்மியங்களாக வுள்ளன. தருமம் உலகத்தை நிலைபெறச் செய்கின்றது. அதாவது உலகம் தருமத்தை அனுசரிப்பதால் விருத்தி அடைகின்றது.

**𑌧𑌾𑌰𑌣𑌾 𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌃 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌧𑌾𑌰𑌯𑌤𑌿 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃।
𑌪𑍍𑌰𑌭𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂 𑌧𑌰𑍍𑌮 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑌂 𑌕𑍃𑌤𑌮𑍍॥
𑌯𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌧𑌾𑌰𑌣 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌸𑌧𑌰𑍍𑌮 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃। 𑌧𑌾𑌰𑌣𑌾
𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌹𑍁𑌃 𑌧𑌰𑍍𑌮𑍇𑌣 𑌵𑌿𑌧𑍃𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃। 𑌯𑌤𑍍𑌸𑍍𑌯𑌾
𑌦𑍍𑌧𑌾𑌰𑌣 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸 𑌧𑌰𑍍𑌮 𑌇𑌤𑌿 𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌃॥**

[சாந்தி பர்வம்.]

என்ற வசனம் இதை வெளிப்படுத்துகின்றது. எல்லா பூதங்களும் தம் தம் தருமங்களை நன்றாக அனுஷ்டிப்பதால், உலகநடை நன்றாய் நிறைவேறி அனைவரும் புருஷார்த்தத்தை அடையக்கூடும். உலகத்தில் ஜீவர்களின் தாரதம்பத்திற்கு அனுகுணமாக நிரூபிக்கப்பட்ட தருமங்களை வருணாசிரம தருமம் என்று அறிக. இதைச் சோதித்துப்பார்த்தால தருமம் எப்போதும சுகத்தைய கொடுக்கும். அதருமம் துக்கத்திற்கு காரணமாகும். பரதகண்டத்தில் வருணாசிரம தருமங்கள் வேறு வேறாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. இதர தேசங்கள் அவ்வாறு இல்லாததால் அந்த தேச நிலைமையில் இவ்வித தாரதம்யங்கள் இல்லையென்றெண்ணக்கூடாது. தரும சாஸ்திர கர்த்தாக்கள் கண்ணுக்குப் புலனாவதும், புலனாகாததுமான பிரபஞ்ச தத்துவங்களை நன்றாகத் தெரிந்தவராகையால் ஜீவனை மேலானநிலைக்கு உய்த்தும் உபாயங்களை நிச்சயமாகத்தெரிந்து தலைக்கட்டியுள்ளார்கள். பிறதேசங்களில் இப்படி தருமத்தின் ஸ்வரூபத்தைப் பரிசோதிக்காததால் ஜீவர்கள் தம் யோக்கிய

தைக்குத்தகுந்த தருமத்தை நன்றாய் அறிந்துகொள்ளக்கூடாமல் பலவிதமான கஷ்டங்களுக்குள்ளாகிறார்கள். ஆயினும் இந்து சாஸ்திரங்களில் நிரூபிக்கப்படும் தருமங்களெல்லாம் மானவகோடிகளால் அனுஷ்டிக்கத் தகுந்தவையே.

சாதாரணமாக ஜீவர்களுக்குள் சிலர் அக்ஞானத்தில் மூழ்கி ஜடத்துவத்தை அடைந்து, நித்ராலஸ்யத்தை இயற்கையாக அடைந்துள்ளார். மற்றுஞ்சிலர் ஒவ்வொரு காரியத்திலும் அதிக ஊக்கங்கொண்டு யுக்தாயுக்த விவேக ஞானமின்றித் தன்னயமே கருதி, காமக்ரோதாதிகளுக் குட்பட்டு வாழுகிறார்கள். வேறு சிலர் ஞானஸ்வரூபிகளாகி, சமதமாதிஷட் குணங்கள் நிறம்பப்பெற்று காமக்ரோதாதி குணங்களை ஜெயித்து சாந்த ஸ்வரூபிகளாய் இருக்கிறார்கள். இந்த தாரதம்யங்களை அனுசரித்தே மனிதர் நாலு ஜாதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளார். இந்தப் பிரிவுகள் சிருஷ்டிமுதல் ஏற்பட்டவையே தவிர மத்தியில் சாமான்ய மனிதரால் ஏற்படுத்தப்பட்டவையல்ல. இன்னும் இவை மோக்ஷசாதனமாக ஏற்பட்டவையேயொழிய இகலோக பிரயோஜனத்தைமட்டும் கருதிச் செய்யப்பட்டவை அல்ல.

> "வண்ணங்கள் நாலும் மருவும் குணங்களுடன்
> பண்ணும் கருமம் பலவகையால்—எண்ணி
> வகுத்தேயான் செய்திடினும்". கீ. வெ. iv. 13

என்று, பகவான் கீதையில் வற்புறுத்திக் கூறியுள்ளாரல்லவா? இந்த ஜீவர்கள் தமோ குணத்தை பிரதானமாக உடையவரென்றும், ரஜோ குணத்தை பிரதானமாகஉடையவரென்றும், சத்வ குணத்தை பிரதானமாக உடையவரென்றும் கருதப்படுவர். இந்த குணப்பிரிவு எல்லா தேசத்திலுமுள்ள எல்லா ஜீவர்களுக்கும் பொதுதான். தருமங்களெல்லாம் முதல் முதல் தமோகுண ஜீவரிடமுள்ள தமஸ் அல்லது ஜடத்வத்தையும், நித்ராலஸ்யத்தையும் தொலைத்து, அவரை ரஜோ குணமுள்ளவராகச்செய்து, முடிவில் சத்வ குணமுள்ளவராகச் செய்வதற்கும் சாதனங்களாக இருக்கும். முதலில் ஜீவர்கள் கேவலம் அநாகரிகராய், அறிவிற் குறைந்தவராய் சரீரத்தைப் போற்று

வதற்கு வேண்டிய நித்திரை ஆகாரங்களையும், வம்ச விர்த்திக்கு வேண்டும் விஷயத்தையும் தவிர வேறொன்றையும் கருதாமல், ஜடஸ்வரூபமாயிருப்பார்கள். பூர்வ அனுபவ ஞாபகமாவது, பிற்காலத்தைப்பற்றிய சிந்தையாவது அவரிடம் அதிகம் இராது. அவ்வித ஜடஸ்வரூபரான மனிதர்களை ஞானவான்களாகச் செய்ய வேண்டின், அவர்களது தமோ குணத்தை முதல் முதல் போக்கடிக்க உபாயம் தேடவேண்டியது அவசியம். ஆதலால் சுகத்தைக் கொடுப்பதும், வாய்க்கு ருசியானதும், மனத்திற்கு ரம்யமானதும் பார்வைக்கு அழகியதுமான பதார்த்தங்களை பகவான் உலகமெங்கும் நிறைத்துள்ளார். இனிய பதார்த்தங்களை அனுபவித்து அனுபவித்து, அந்த சுகத்தின் நினைவினால் அவ்வஸ்துக்களிடம் மிகுந்த பற்றுவைத்து, அவைகளை அடைவதிலேயே ஜனங்கள் முதலில் பாடுபடுகிறார்கள். அவர்களுக்குத் தற்கால விஷயானுபவத்தைத் தவிர வேறு சிந்தை கிடையாது. அவர்களுக்குத் தம் விஷயானுபவத்தால், பிரபஞ்ச ஞானம் வ்ருத்தி அடைதல்கூடும். உணவிலும், செய்கையிலும் அவரிடம ஒரு நிபந்தனை இராது. இஷ்டப்படி நடப்பதே அவரது முக்கியகுணம். அவ்வித மனிதர்க்கு தருமாதருமங்களில் கட்டுப்பாடுகளை விதிப்பது சாத்யமல்ல. நன்மை தீமைகளின் ஞானம் அவர்களுக்கு இவ்வித அநேக அனுபவங்களால் உண்டாகுமே தவிர, வேறுவிதமாக ஏற்படாது. தம் இஷ்டப்படி நடந்துவந்தால் சில காரியங்கள் அவர்களுக்கு துக்கத்தை விளைவிக்கும். வேறு சில சுகத்திற்கு மூலமாகும். சுககரமான காரியங்களை செய்யத் தகுந்தவையெனவும், துக்ககரமான காரியங்கள் செய்யத் தகாதவையெனவும் அவர்கள் தெரிந்துகொள்வர். அவ்வித ஞானம் பெருகிவரவே சில காரியங்கள் தரும விரோதமாக உள்ளமையால் செய்யத்தகாதவையெனவும், மற்றும் சில தருமத்தை ஒட்டி உள்ளமையால் செய்யத் தகுந்தவையென்றும் பெரியோர் போதிக்கும்போது, தம் அனுபவத்திற்கும் பெரியோர் உபதேசத்திற்கும் உள்ள ஒற்றுமையை நோக்கி, அப்பெரியோரது வார்த்தையில் பக்தியும் விசுவாசமும் வைப்பார். ஜடமாய் உள்ளவர்க்கு யுக்தாயுக்த ஞானம் அதிகமாக

இராததால், ஆப்தர்களான பெரியோரது வார்த்தைகளில் பக்தி விசுவாசமும் அவரிடம் குருத்வ புத்தியுமடைந்து, அவரது ஆக்ஞைக்குக் கீழ்ப்படிந்து அவர்க்குப் பணிவிடை செய்வதே அன்னோரது முக்ய தருமம் ஆகும்.

இந்த தருமங்களை அனுசரிப்பதால், தமோகுணத்தாலுண்டான ஜடத்வமும், நித்ரை சோம்பல் அஜாக்ரதை முதலிய துர்குணங்களும் படிப்படியாக நசித்து, விசேஷ காரியங்களைச்செய்வதில் ஊக்கம் அதிகமாக அவரிடம் உண்டாகும். தமோ குணத்தை மிகுதியாக உடைய ஜீவர்களுக்கு விதிக்கப்பட்ட தருமங்களெல்லாம் தமோகுணத்தைப் போக்குவதற்கு சாதனங்களாக ஏற்படுத்தப்பட்டவை. தமோ குணம் நீங்குவதற்கு சேவகவிர்த்தி முக்கிய சாதனமாகும். அந்த விர்த்தியில் பிறர்க்கு அடங்கி இருத்தல், பிறரது இஷ்டம்போல் நடத்தல், குறிப்பிட்டகாலத்தில் ஏற்பட்ட காரியங்களை நிறைவேற்றுதல் முதலிய தருமங்களாலும், இந்தக்காரியங்களைச்செய்வதில் சிறிது தவறுதல் ஏற்பட்டால் அதற்கு விதிக்கப்படும் தண்டனை விதிகளாலும், மேற்குறித்த காரியங்களைச் சரியானகாலங்களில் நேர்மையுடன் செய்தபோது அடையும் புகழ்ச்சி வெகுமதி முதலியவைகளாலும், மனிதரிடம் முன்புள்ள தாமதம், சோம்பல் முதலியவை படிப்படியாய்த் தொலைந்துபோகும். இவ்வாறு வெகுமதியிலுள்ள பிரியத்தாலும், தண்டனையிலுள்ள பயத்தினாலும் தமோகுணம் குறையக்குறைய, ரஜோகுணம் விர்த்தி அடைந்து வரும். இவ்வித ஜீவர்களுக்கு ஆகாரவ்ய வகாரங்களிலும் உணவு முதலியவைகளிலும் விதிவிலக்குக்கள் விசேஷமாக சாஸ்திரங்களில் சொல்லப்படவில்லை. இவரே சூத்திர ஜாதியில் ஜனிப்பவரென்றுஸ்மிருதிகளில் வற்புறுத்திக்கூறப்பட்டுள்ளது. தரும சாஸ்திரத்தில் அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தருமங்கள் மேற்கூறிய பலனை கொடுக்கக்கூடியவை. இதுவே பகவத்கீதையிலும் சொல்லப்பட்டுள்ளது.

மூவர்க்கும் ஆளாய் முயலுமதே பேணியவர் சூத்திரர்க்கு
மேவப்படும் தொழிலாம் மிக்கு. கீ. வெ. Ch. xviii.

இனி, இரண்டாவது தரமான ஜீவர்கள் ரஜோகுணத்தை மிகுதியாக உடையவராவர்.

தமஸ் சப்பந்தமான குணங்களைப் படிப்படியாக ஜயித்த ஜீவன் முன்னைக்காட்டிலும் சிறிது மேலான ஜன்மத்திற்கு உரியவனாகிறான். அந்த ஸ்திதியில் ஜீவனுக்கும் பொருள்தேடுவதில் ஊக்கம் இயல்பாக எழும். பொருளில்லார்க் கிவ்வுலகில்லையன்றோ? உழவு, வாணிபம் நிரைகாத்தல் முதலான தொழில்கள் தனத்தைச்சேர்ப்பதற்கு முக்கியசாதனங்களாவதால், அவையே அவர்களுக்கு முக்கிய தர்மங்களாக விதிக்கப்பட்டுள்ளன. பொருள் இன்பத்திற்குச் சாதனமாகவுள்ளதால் அதன் பொருட்டு முயன்று தேடிய பொருளில் அதிக ஆசைவைத்து, எப்போதும் பணவாசைகொண்டுதிரிவான். தனத்தில் ஆசையும் தனத்தைத்தேடுவதில் பிரதிகூலங்களும் உண்டானால், கோபம் முதலிய தீக்குணங்கள் இந்த ஜீவனுக்கு இயற்கையாக உண்டாகும். இவன் தனத்தைத்தேடுவதே பரமார்த்தமென்று நினைத்துப், பிறரது சுகதுக்கங்களைச் சிறிதேனும் கருதாது பெருமுயற்சிசெய்வான். அவ்வித ப்ரயத்தனத்தால் தன்னயம், பிறரோடு விரோதம், பொறாமை முதலியனவெல்லாம் சில காலம் வ்ருத்தியடையும். இவ்விதம் தனத்தைத்தேடுவதால் இன்பமும், அநேக விதமாகப் பிறர்க்குத்துக்கத்தை விளைவிக்கும் காரியங்களைசெய்வதால் அவற்றின் பிரதிபலனான துன்பங்களும் நேராமல் தீராது. அவ்வித சுகதுக்க அநுபவங்களால் சில காரியங்கள் துக்கத்திற்குக்காரணங்களென்றும், மற்றும் சில சுகத்திற்குக் காரணங்களென்றும் படிப்படியாய் உணர்ந்து கொள்வான். காமக்ரோதாதிகளினால் உண்டாகும் தீமைகளை அறிந்து, அவைகளை விலக்குவதற்கு சாஸ்திரத்தில் குறிக்கப்பட்ட தருமத்தை அநுசரிக்க வேண்டுமென்று அநுபோகத்தால் தெரிந்து கொள்வான். இவ்வாறு, ஜீவர்களுக்கு இயற்கையில் பணவாசை முக்கிய புருஷார்த்தமாகத் தோன்றவே, அவர்கள் குடும்பத்தோடும் ஜனக்கூட்டத்தோடும் ஒத்து சுகம் அநுபவிக்கவேண்டுமாயின், சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே நடக்கவேண்டியது அவசியம். இதனால், தர்மம் முத

லாவது புருஷார்த்தமென ஏற்படுகின்றது. ஜீவன் தான் உன்னத நிலையை அடைந்து, பிறருக்கும் சுகத்தை விளைவிக்கும்படி நடந்துகொள்வதே தர்ம மார்க்கம். அதர்மத்தால் ஜீவன் முன்னிலும் தாழ்ந்த நிலையை அடைவதுமல்லாமல், பிறர்க்கும் தீங்கிழைப்பவனாவான்.

இவ்வித ஜீவர்களுக்கு தனத்தைச் சம்பாதிப்பதும் சுகங்களை யனுபவிப்பதுமே முக்கிய தருமமென்று சொல்லப்பட்டுள்ளது. ஆயினும், இந்த தனசம்பாத்தியத்திலும், சுகானுபவங்களிலும் கருமத்தை அனுசரித்துச் சில விதிவிலக்குகளுக்கு உட்படுவது அவசியமாகின்றது. பொருள் தேடுவதில் பிறர்க்கு நஷ்டம் விளைவிக்கக்கூடாது. சுகத்தை அனுபவிப்பதிலும், பிறரது சுகங்களுக்கு இடையூறில்லாமல் இருக்கும்படி நடந்துகொள்ளவேண்டும். இவ்வித நிபந்தனைகளை அனுசரிப்பதால், படிப்படியாக, ஜீவன் கேவலம் தன்னயத்தை விடுத்துப் பிறரது சௌக்கியத்தையும் கருதி, தருமத்தில் ஒழுக வேண்டுமென்ற எண்ணத்தை அடைவான். பிறகு காலக்ரமத்தில் பரோபகார புத்தி பெருகி "பரோபகாரார்த்தமிதம் சரீரம்" என்ற நியாயத்தை அனுசரிப்பான்.

இவ்வண்ணம் ஜீவன் கேவலம் பணவாசைக்குட்படாமலிருக்கும்படி, தருமத்தை அவனது முதல் புருஷார்த்தமாக வைத்திருக்கிறார்கள். தனம் தேடுவதில் தருமந்தவறாது தேட வேண்டும். சுகத்தை அனுபவிப்பதிலும் தரும மார்க்கத்தைக் கைவிடாதிருத்தல் வேண்டும்.

இந்த ஸ்திதியில் இருக்கும் ஜீவர்களுக்கு தரும விரோதமில்லாத காமம் அதிக அவசியமானதால் அது தன்ஸ்வரூபமென்று பகவான் கீதாசாஸ்திரத்தில் பின்வருமாறு வற்புறுத்தியுள்ளார்.

"திண்மையினோர் திண்மையுநான் தீதிலாத் தேசுபெறும்
ஒண்மையறு காமரா கம்மொழிந்த—வண்மை
யறஞ்செறியுங் காமநா னுடவர்களேதே
சிறந்ததெலா நானுத் தெளி." கீ. வெ. Ch. vii. 11.

ஆகையால் தனத்தைத் தேடுவதிலும், சுகம் அனுபவிப்பதிலும் ஜீவன் இஷ்டப்படி நடவாதிருப்பதற்காக அவன் தருமத்தை மீறிச் செல்லக் கூடாதென்ற நிபந்தனை முதலாவதாக ஏற்பட்டுள்ளது. மற்றும் தேடிய பொருளில் சிறந்த பாகமேனும் பரோபகாரங்களில் செலவுசெய்வது ஜீவர்களுக்கு முக்கிய தர்மம். பொருள் தேடுவதையே முக்கியநோக்கமாகக் கொண்டபோது, அப்பொருளைத் தனக்குமாத்திரமே உபயோகப்படுத்திக்கொள்வது அத்துணைச் சிறந்ததன்று. அதிகமாக முயன்று தனத்தைத் தேடுவதும், அதைச் செலவுசெய்வதில் இஷ்டப்படாதிருப்பதும் அவ்வித ஜீவர்களுக்கு இயற்கைக்குணமாக இருக்கிறது. ஆயினும், பரோபகாரத்தின் பொருட்டு அற்பமேனும் தனத்தைச் செலவுசெய்தால், பகவான் ப்ரீதிஅடைந்து பன்மடங்கு பொருளைப் பிரதிபலனாகக் கொடுப்பர். தேசகால பாத்திரமறிந்து பகவதர்ப்பணமாக தானம் முதலியன செய்தால், இம்மை மறுமை சுகங்கள் கிட்டுமென்று தருமத்தை யறிந்தவர்களும், தத்துவஞானிகளும் சாஸ்திரத்தில் கூறியுள்ளதால், பரோபகாரத்தில் அவனுக்கு அதிகமாக விருப்பமுண்டாகும்.

இவ்வாறு நாளடைவில் பரோபகார புத்திஅவனிடம் அதிமாக ஆக, தனத்திலுள்ள அபிமானமும், அகந்தையும்அவனைவிட்டு நீங்கும்.

இனி, சரீரசுகத்தைச்சிறிது விட்டாலொழிய தனத்தைச் சேர்ப்பதில் ஒருவன் வல்லவனாதல் முடியாது. அதனால், தேகசுகத்தை அவ்வளவு கோராமல் காரியம் முடிப்பதில் கவனமும் புத்தி கூர்மையும் கொண்டு, அதற்கு வேண்டிய ஆட்களைச் சேர்த்து, எந்தெந்த மனிதரால் எந்தெந்த வேலைகளை எவ்வெவ்வளவு எவ்வெப்போது செய்விக்கவேண்டுமோ அவ்விதமாகக் குறைவின்றிச் செய்வித்து, அவர்க்குத் தகுந்த பொருளைக்கொடுத்து, அதிக ஜாக்கிரதையுடன் நடந்துகொள்ளவேண்டும். பிறரோடு செய்யும் கொடுக்கல், வாங்கல் வியாபாரத்தில் நியாய நெறியை மீறக்கூடாது. தேடிய பொருளை நல்வழியிற் செலவு செய்யவேண்டும். இவை முத

லான குணங்களை இவர்கள் விருத்தி செய்துகொள்ளவேண்டும். இவ்வித ஜீவர்கள் வைசிய ஜாதியில் ஜனிப்பாரென இந்துமத கிரந்தங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எத்தேசத்தில் பிறந்தாலும் ஜீவர்கள் ரஜோகுணமுள்ளவர்களாய் திரவியத்தைச் சேகரிப்பதையே முக்கிய தொழிலாகக் கொண்டால் அவர்களை வைசிய ஜாதியாரென்று சொல்லலாம். தனத்தைத் தேடிக் குவித்து, பரோபகாரத்தின்பொருட்டும், தேச நன்மையின் பொருட்டும், படிப்பின் பொருட்டும் தேடிய பொருளைச் செலவழிப்பது நலமெனத் தெரிந்துகொண்டு, படிப்படியாகப் பொருளாசையைவிட்டுச் சிறிது வைராக்கியத்தை அடைவதே இவர்களுக்கு முக்கிய புருஷார்த்தம்.

இந்த ஞானம் சிறிது பெருகவே, ஜீவர்கள் இதைப் பார்க்கிலும் மேலான ஜன்மத்தை அடையத்தகுந்தவராவர். இவர்களிடம் பணத்திலுள்ள ஆசை சிறிது நீங்கும்போது தேகாபிமானம் நீங்காதாகையால், தேகத்தையும் பிறாது மேன்மையின்பொருட்டு உபயோகிக்கவேண்டியதென்ற அறிவு இவர்களிடம் விருத்தி அடைதல்வேண்டும். அந்த நிலையில் ஜீவன் க்ஷத்திரிய ஜாதியில் பிறக்கத் தகுதியுள்ளவனாவான். க்ஷத்திரியர் பணத்தில் குறைந்தவாசையும், கீர்த்தியில் அதிக விருப்பமும், பிறர் தமக்கு உட்பட்டு நடப்பதில் ப்ரீதியும் உடையவர்; மனிதரைப் பரிபாலித்து தருமத்தைக் காப்பாற்றுவதிலும், மனிதரின் மேன்மையை எப்போதும் கோருவதிலும், தமது புகழைப் பெருக்குவதிலும் ஆசையுள்ளவர்; வீரம், தீரம், கொடை முதலியவைகளில் மேன்மைபெற எண்ணுவர்; குடிகளைக் காப்பாற்றுவதில் அதிக ஆசை கொள்வர்; குடிகளுக்கு அபாயம் ஏற்படின், அதைத் தொலைக்கமுயல்வர்; ஒருவேளை அவர்க்காக உயிர் இழக்கநேரிடின் பின்வாங்காது முன்வருவர். முன் படிப்படியாகப் பணவாசை குறைந்தது போலவே, தம் சரீரத்திலுள்ள ஆசையையும் நீக்கிக் கொள்வதே இந்த தருமத்தின் முக்கியநோக்கம். இந்த நிலையிலுள்ள ஜீவர்கள், தமக்குள்ள அதிகார கர்வத்தினால் தம் குடிகளை வருத்தி, அவர்களது பொருளைக்கவர்ந்து, தம்பொருட்டே செலவு

செய்து, தமது மேலான தர்மத்தை மறந்து போனாலும், அநேகவிதமான அனுபவங்களால் அந்தவழி அதர்மமானதென்று அறிந்து, குடிகளின் நன்மையின்பொருட்டே பகவான் தம்மை சிருஷ்டித்தாரெனத் தெரிந்துகொண்டு, தம்மை தமக்குள்ள யாவறறையும் பிறர்க்குதவி, முடிவில் தேகாபிமானத்தையும் யுத்தத்தில் நீக்கி, அதைப் பார்க்கிலும்மேலான ஜன்மத்தை அடையத் தகுந்தவராவர்.

இவ்வாறு முதலில், ஜீவன் கேவலம் விஷயங்களில் பற்றுஉடையவனுகி, இது தகுதியுள்ளது, இது தகுதியற்றது என்பதை அறிய அறிவில்லாதிருப்பான். பலவித அனுபவங்களினுல், சிறிது ஞானம் ஏற்பட்ட பிறகு, ஊழியத்தொழிலில் இறஙகி தன்னிலும மேலானவர்க்குத் தொண்டுபூண்டு, அவரது கட்டளைக்கு உட்பட்டு நடந்து, தன் தமோகுணத்தில் பிறந்த நித்ராலஸ்யஙகளைப் போக்கிககொண்டு, தன் வேலையைச் செய்வதறகுத தகுந்தவனுவான். பின்னர், ரஜோ குணத்தையடைந்து, தனம் தேடுவதற்கு அனுகூலமான தொழில்களிற்புகுந்து பணமே புருஷார்த்தமெனப் பாவித்து, அதறகாகப் பாடுபட்டு பணத்தில விசேஷமான ஆசையைச் சிறிது காலம் வைப்பான். நாளடைவில், அநேகவித அனுபவங்களால, அப்பணத்தாலுண்டாகும இன்பங்கள் அழிவுள்ளவை என்ற ஞானம் திடமாக உண்டாகும. பிறகு தன் ஆசையை விட்டு, முன்னிலும் உத்தமமானபிறபபில பிறநது, குடியோம்பல்முதலான தரும ரக்ஷண காரியஙகளில் புகுந்து, வீரதீரஙகள் நிறைநது, தான் மேன்மை பெறுவதைக்காடடிலும் குடிகளைக் காப்பதே மேலான தருமமெனப் பாவிபபான். தன் வீரதீரஙகளையும் சரீர சக்திகளையும் சக்தியற்றவர்களைக் காப்பாற்றுவதிலேயே உபயோகிப்பான். தன் தனத்தைக் குடிகளின் மேன்மையின் பொருட்டே உபயோகிப்பான். தன் உடலையும் குடிகளைக் காப்பாற்றுவதில் துறக்கத் துணிவான். இவ்வாறு படிப்படியாய் முதலில் தனவாசையையும், பின்னர் தேகாபிமானத்தையும் முற்றிலும் விட்டு,முன்ஜன்மங்களுக்கெல்லாம் மேலானதும சத்துவ குணம் நிறைந்துள்ளதுமான ஜன்மத்தை அடைவதற்கு ஜீவன் தகுதியுள்ளவனுகிறுன்.

இவ்வித ஜீவன் உண்மையாகவே விஷய சுகங்களில் ஆசையையும், இகசுக சாதனமான பொருளில் பற்றையும், தேகத்தில் இச்சையையும் சிறிது தாண்டியே யிருப்பான். இவ்வித லக்ஷணங்களோடு கூடிய ஜீவனே உத்தம ஜாதி ஜீவ னென்று சொல்லலாம். இந்நிலையடைந்த ஜீவனே பிறர்க்கு ஞானத்தை ஊட்டுவதற்குத் தகுதியுள்ளவனாவான். இந்த ஜீவன் நித்ராலஸ்யங்களால் வரும் சுகமும், தனந்தேடுவதால் வரும் இன்பமும், தேகாபிமானத்தா லுண்டாகும் சந்தோஷமும் அழிவுள்ளவையெனத் தெரிந்து, அழிவற்ற சுகம் எதுவென நாடி, அது ஞானத்தாலேயே அடையத்தகுந்ததெனத்தெரிந்து, ஞானத்தைத் தேடுவதில் அதிக உத்சாகம் கொள்வான். முத லில் தான் படித்தவன் என கர்வம் சிறிது கொண்டாலும், படிப்படியாய் தனது ஞானத்தையெல்லாம் பிறாது மேன்மை யின்பொருட்டு உபயோகிக்கத் தெரிந்துகொள்வான். வெகு காலம் பல சாஸ்திரங்களைக் கற்றுப், பலகலைகளிலும் தேர்ந்து, அவையனைத்தும் அழிவற்ற சௌக்கியத்திற்கு ஆதாரமான பரமார்த்த தத்துவத்தைப் பூரணமாகப் போதிக்கத் தகுந்த வையல்ல வெனத்தெரிந்து, சகல வித்தைகளுக்கும் ஆதார மான பரவித்தை ஒன்றிருக்க வேண்டுமென அறிவான். அவ் வித்தையை குருமுகமாக அறிந்துகொள்ள முயல்வான். அப் போது இந்த ஜீவனுக்கு வேதசாஸ்திரங்களை படிப்பதும், பிற ர்க்கு அவைகளைப் போதிப்பதும், உலக நன்மையை நாடி தேவயக்ஞம் முதலியவைகளைச் செய்வதும், பிறரால் அவற் றைச் செய்விப்பதும் முக்கியமான கருமங்களாகும். மற்றும் இந்திரியங்களை விஷயங்களில் புகாது அடக்கிக்கொள்வதும், மனது இந்திரியங்களோடு ஒருப்பட்டு அவைகளுக்கு உட் பட்டு நடவாதிருக்கும்படி செய்துகொள்வதும், இந்திரியங்கள் மனத்திற்குட்பட்டு நடக்கும்படி செய்வதும், அவன் ஊக்கத் துடன் ஏற்சத்தகும் தருமங்களாகும்.

இவ்வித பதவி அடைந்த ஜீவன் ஞானத்தை விருத்தி செய்துகொண்டு, பகவானிடம் பக்தியையும் பிறரிடம் பொறு மையையும் காட்டி, எல்லாருக்கும் இதமாக நடந்துகொள்ள

வேண்டும். பூர்வ ஜன்மங்களில் தனம் முதலியவைகளில் அபிமானமும், தேக அபிமானமுங்கொண்டு, காமக்ரோதாதிகளைச்சிறிது ஜயித்திருப்பதால், இப்போது எல்லா பூதங்களிடமும் இதமாக விருப்பதற்குத்தகுதி உள்ளவனாக இருக்கிறான். இனி காமக்ரோதாதிகளை பூரணமாக ஜயிக்க முயலவேண்டும். எப்போதும் சரீரத்தையும், இந்திரியங்களையும், மனத்தையும் வசப்படுத்திக்கொண்டு, விஷய ஆசையற்றவனாயிருத்தல் வேண்டும். அவசரப்பட்டு எக்காரியத்தையும் செய்வது கூடாது. எப்போதும் சாந்தமுள்ளவனாயும் பரிசுத்தமுள்ளவனாயும் இருக்கவேண்டும். மேலான ஞானத்தை புருஷார்த்த சாதனமாக பாவித்து, அதைத்தவிர மேலான தனம் வேறில்லையென மனத்தில் நிச்சயம் செய்து கொள்ள வேண்டும்.

"சமந்தமஞ் சார்ந்த தவந்தன் னமர்ந்தசுத்தி
நமர்ந்த பொறை செவ்வைஞான—மமர்ந்த
விறையையறி வுண்மையுணர் விக்கரும மாகு
மறையவர்தந் தன்மை மதம்."
கீ. வெ. xviii 42.

ஐகாத்ம்யம் ப்ராஹ்மணஸ்யாத்மவித்வம் யதை-
கதாஸமதா ஸத்யதா ச। ஶீலம் ஸ்திதிரஹிம்ஸா ந-
ஶார்ஜவம் தத்ஸமஸ்தோ வர்ணக்ரியாஹ்வ:॥

தாத்பர்யம்—எல்லா பூதங்களும் ஒன்றே என்ற பாவமும், எல்லா பூதங்களையும் ஒரேவிதமாக பாவிப்பதும், சத்யம், நல்ல ஆசாரம், அசையாததன்மை, நல்வழியில் நடத்தல், முதலியவைகளுக்குநிகரான தனமும் பிராமணனுக்கு வேறுகிடையாது.

இந்த லக்ஷணங்களோடு கூடிய ஜீவன் உத்தமஜாதி எனப்படுவான். எந்த தேசத்தில் பிறந்தாலும், இந்த லக்ஷணங்களுடைய ஜீவனே உயர்ந்த ஜாதி அல்லது பிராமணஜீவன் என்று எண்ணத்தகுந்தவன். இந்த லக்ஷணங்கள் ஆரியர்கூட்டத்தில் பிராமணரிடம் இயற்கையாக இருத்தல் வேண்டும். இவையில்லாவிடில், அவற்றை அபிவிருத்தி செய்துகொள்ள அன்னோர் முயலவேண்டும். அவ்வாறு செய்யாதிருப்பின், பிராமண ஜாதியில் பிறந்தாலும், பிராமணரென்று அவர் அழை

க்கத்தகுந்தவர் ஆகாரென ஸ்மிருதிகளிலும், புராணங்களிலும் உறுதியாகச் சொல்லப்பட்டுள்ளது.

தருமங்களென்று கூறப்படும் இவை ஜீவனை மேல் நிலைக்கு க்கொண்டுவர தத்துவஞானிகளான மகரிஷிகளால் விதிக்கப் பட்டவழிகள். ஜீவனது பூர்வ ஜன்மத்தின் கருமபலன்களைத் தெரிந்து, அவனது குணகருமங்களை நோக்கி விபாகம்செய்து, ஆரியர்கூட்டத்தில் முதலில் நான்கு வருணங்கள் ஏற்படுத்தப் பட்டனவென்று பகவத்கீதையில் சொல்லப்பட்டுள்ளது. முற் காலத்தில் மனிதர்கள் சாஸ்திரங்களில் மதிப்புவைத்துத், தம க்கு விதிக்கப்பட்ட தருமங்களை அசட்டைசெய்யாது அனுஷ் டித்துவந்ததால், சாதாரணமாக ஜீவனது இயற்கை சுபாவ த்தை ஒட்டியே அவனது ஜன்மமும் ஏற்பட்டுவந்தது. அதாவது தமோ குணத்தை முக்கியமாகவுடைய ஜீவன் சூத்திரஜாதியி லும், ரஜோகுணத்தை முதன்மையாகவுடைய ஜீவன் வைசிய க்ஷத்திரிய ஜாதிகளிலும், சத்துவகுணத்தை முதலாகவுடைய ஜீவன்மாத்திரம் பிராமண ஜாதியிலும் ஜனித்தனர். ஜீவர்களிடம் காமம் அதிகப்பட அதிகப்பட அவர்கள் தன்னயம் கருதி தருமத்தைத் தாண்டி நடந்ததால், வருணக்கலப்பு உண்டா யிற்று.

ஜீவன் தான் பிறந்த வருணத்திற்குவிதித்த தருமங்களை அனுஷ்டிக்காமல் போவதே வர்ணசங்கரமென்று சாதாரணமா கக்கூறினும், நன்றாய் ஆழ்ந்து பார்த்தால் ஜீவன் தன் சுபா வத்திற்குச்சரியாகாத வருணத்தில் பிறப்பதே வருணசங்கரம் என்பதுவெளியாகும். கருமங்களுக்குள்ளாகி, சாஸ்திர சம்மத மான தருமங்களை மீறி தமதிஷ்டம்போல் நடந்துகொள்வதால், அநேக வருணங்களிற் பிறந்தவர்கள் நானாவித ருணானுபந்தங் களைக் கற்பித்துக்கொள்ளுகிறார்கள். இதனால், இந்த சங்கரம் ஏற்படுகின்றது. ஆபினும் கருமதேவதைகள் முன்னற்கூறியபடி எவ்வெக்காலங்களில் எந்தெந்த தருமங்களை அனுஷ்டிப்பதால் எந்தெந்த ஜீவர்களுக்கு உத்தம புருஷார்த்தம் ஏற்படுமோ அவைகளை நன்றாய்ப்பார்த்து அவர்களுக்குத்தகுந்த வருணங்

களிற் பிறக்கும்படி செய்கிறார்கள். அதனால் ஸ்தூலமாகக்காண ப்படும் சங்காரத்தை மாத்திரம் நோக்கி சாஸ்திரசம்மதமாகவும், யுக்திக்குத் தக்கதாகவுமுள்ள வருணவிபாகத்தை முற்றிலும் ஆதரியாதிருப்பது முறையாகாது

இக்காலத்தில் இத்தேசத்தில் அந்தந்த வருணங்களிற் பிறந்துள்ள ஜீவர்கள் வருணதருமங்களை நன்றாக அனுஷ்டியா மலிருப்பதால் வருணவிபாகத்தில் ஆதரவு குறைந்துள்ள தென்றும், இந்த விபாகம் யுக்திக்குச்சரியாக உள்ளதென்றும் அறிந்து, அதன் பிரயோஜனங்களைப்பார்த்து, எல்லோரும் தத்தம் வருணதருமங்களைக் கூடியவரை ஊக்கத்துடன் அனு சரித்து, ஸ்மிருதி கர்த்தாக்களாகிய மகாத்துமாக்களின் எண்ண ங்களை நிறைவேற்றி, வருணவிபாக தோஷமின்றி இருக்கும்படி செய்வதற்கு பெருமுயற்சி செய்யவேண்டும்.

மேற்கூறப்பட்டுள்ள தருமங்களையெல்லாம் சோதித்துப் பார்த்தால், முக்கியமான விஷயமொன்று காணப்படும். ஒவ் வொரு வருணத்திற்கும் தருமங்கள் விதிக்கப்பட்டுள்ளன. அவ ற்றுள் ஒவ்வொரு வருணத்தார் செய்யவேண்டியகருமங்களும், அவரிடம் இருக்கவேண்டிய குண விசேஷங்களும் விதிக்கப்ப ட்டுள்ளனவேயன்றி, அவருக்குள்ள அதிகாரத்தைப்பற்றித் சிறிதேனும் சொல்லப்படவில்லை. முன்னாளில் ஒவ்வொரு ஜாதியாரும் அவரவர்க்கு விதிக்கப்பட்ட காரியங்களைச் சிறி தேனும் குறைவின்றிச் செய்து, விலக்கப்பட்ட விஷயங்களை முற்றிலும் நீக்கி,அவரவரிட மிருக்கவேண்டிய அந்தரங்க லக்ஷ ணங்களை அபிவிருத்தி செய்துகொள்வதற்கு முயன்றாராத லால், தேசத்திலுள்ள குடிகளெல்லோரும் ஒற்றுமை அடைந்து உடலின் உறுப்புக்களைப்போல ஜனசமூகத்திற்கு நன்மையை விளைவித்தார்கள். உடலின் உறுப்புக்களெல்லாம் ஒற்றுமை கொண்டு, உடலின் சுகத்தின்பொருட்டுப் பாடுபட்டால்தான் உடலுக்கும் ஒவ்வொரு உறுப்புக்கும் நன்மையுண்டாகும். அவ்வாறன்றி, ஒவ்வொரு உறுப்பும் பிற உறுப்புக்களின் பொ ருட்டுப் பாடுபட நினையாவிடில், உடலுக்குத் தீங்கு நேரிடுவ

துந் தவிர, ஒவ்வொரு உறுப்பும் இளைத்து அழிந்துபோகுமல்லவா? ஜனசமூகத்தை உடலுக்கும், ஜனங்களை அவ்வுடலின் உறுப்புக்களுக்கும் சமானமாகக் கூறலாம். ஜனங்களெல்லோரும், அவரவர் யோக்கியதைக்குத் தகுந்தவாறு, தத்தம் தருமங்களை அறிந்து நன்றாய் நடந்தால், ஜனசமுதாயத்திற்கு மேன்மை உண்டாவதுமன்றி, ஜனங்களுக்கும் சுகம் ஏற்படும். இவ்வாறு எல்லா வருணத்தாரும் தத்தம் தருமங்களை நன்றாகக் கடைபிடித்துப், பிறரிடம் குற்றம் காணாதவராக விருந்தவரை, இந்து தேசத்தில் ஜனங்கள் ஒப்பற்ற சுகத்தை அனுபவித்தனர். அவ்வாறின்றி ஒவ்வொருவரும், பிறரைமட்டும் தம் தருமங்களை அனுசரிக்கும்படி செய்து, அதனின்றும் தமக்குக் கிடைக்கும் லாபத்தை அடைய நினைப்பதால், இப்போது ஒரு ஜாதியார்க்கும் மற்றொரு ஜாதியார்க்குமுள்ள மனஸ்தாபங்கள் உண்டாயின. இவ்விதம் எல்லா ஜனங்களும், தத்தம் தருமங்களை கைவிட்டுப் பிறருடன் விரோதம் கொள்வதால், கெட்டுப் போனார்கள். ஜன சமுதாயத்திற்கும் அதன் அங்கங்களான ஜீவர்களுக்கும் க்ஷேமம் படிப்படியாய்க் குறைந்துபோயிற்று. சரீரத்திலுள்ள அவயவம் ஒவ்வொன்றும் சரீர போஷணத்திற்குப் பாடுபடுவதில், தன்தன் காரியங்களைச் சீர்பெறச் செய்ய வேண்டுமேயல்லாது, தன் தொழிலின் ஏற்றத்தாழ்வுகளைப் பற்றி எண்ணுதல் கூடாது. இதுபோலவே இந்த நான்குவித வருணப்பிரிவில், ஒவ்வொருஜாதியாரும் அவரவர் தருமங்களைக் காப்பாற்றுவதற்கு அரிதின் முயலவேண்டுமே ஒழிய, சிலர் மேலோர் எனவும், மற்றும் சிலர் கீழோரெனவும் எண்ணுவதும், சிலரே பூஜிக்கத் தகுந்தவரென்றும் எஞ்சியுள்ளோர் அவரை பூஜிக்கவேண்டியவரென்றும் எண்ணுவது சாஸ்திர சம்மதமாகாது. ஒருவர்க்குத் தமது தருமங்களுக்குத் தாழ்வு வாராது நடப்பதால் பூஜ்யதை ஏற்படுமே ஒழியப் பிறப்பால் மட்டும் பூஜ்யதை ஏற்படாது. சமதமாதி குணங்கள் நிறைந்து லோகோபகாரத்திற்காக உழைத்து, நற்கார்யங்களையே செய்துகொண்டுவரும் பிராமணனும், தன்னயம் சிறிதும் கருதாது குடியோம்புதலையே விருதமாகக்கொண்டுள்ள வேந்தனும், தருமநெறி தவறாமல் தனத்தைத்தேடி, ஜனக்கூட்டத்

தையெல்லாம் தன் குடும்பமாக பாவித்து, அக்குடும்பத்திற்குத் தான் கோசாதிபதி (பொக்ஷதார்) யென வெண்ணி, பக்ஷபாதமின்றி யோக்கியதையை அனுசரித்துப் பாத்திரமறிந்து தனத்தைச் செலவுசெய்யும் வைசியனும், அதிக ஜாக்கிரதையுடன் தனக்கிட்ட வேலைகளையெல்லாம் அசட்டையின்றித் தவறாது நிறைவேற்றிக்கொண்டுவரும் சூத்திரனும், பூஜிக்கத் தகுந்தவர்தாம். யோக்கியதை சிறிதுமில்லாமலிருக்கத், தாம் உத்தம ஜாதியிற் பிறந்தவரெனவும், பூஜிக்கத் தகுந்தவரெனவும் எண்ணுபவர் பூஜிக்கத்தகுந்தவர் ஆகார்.

𑌯𑌥𑌾 𑌕𑌾𑌷𑍍𑌠𑌮𑌯𑍋 𑌹𑌸𑍍𑌤𑍀 𑌯𑌥𑌾 𑌚𑌰𑍍𑌮𑌮𑌯𑍋 𑌮𑍃𑌗𑌃। 𑌯𑌶𑍍𑌚 𑌵𑌿𑌪𑍍𑌰𑍋𑌽𑌨𑌧𑍀𑌯𑌾𑌨𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌤𑍇 𑌨𑌾𑌮𑌧𑌾𑌰𑌕𑌾𑌃॥ 𑌯𑍋𑌽𑌨𑌧𑍀𑌤𑍍𑌯 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋 𑌵𑍇𑌦𑌮𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌶𑍍𑌰𑌮𑌮𑍍। 𑌸 𑌜𑍀𑌵𑌨𑍍𑌨𑍇𑌵 𑌶𑍂𑌦𑍍𑌰𑌤𑍍𑌵𑌮𑌾𑌶𑍁 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 𑌸𑌾𑌨𑍍𑌵𑌯𑌃॥

சாஸ்திரத்தில் கூறப்பட்ட நற்குணங்களைப் பெறாத பிராமணன் மரயானையையும், தோல்மானையும் போன்றவன். இவை பேர்மாத்திரத்தால் அவ்வா றழைக்கப்படுகின்றனவேயல்லாது, உண்மையில் அவை ஆகா. அதுபோலவே அத்தியயனஞ் செய்யாத பிராமணன் உண்மையில் பிராமணனென்றழைக்கத் தகுதியற்றவனாவன். இப்படியே ஸ்மிருதிகளிலும், புராணங்களிலும், இதிஹாசங்களிலும் விவரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ மகாபாரதத்தில் ஆரணிய பர்வத்தில் யுதிஷ்டிராஜகர ஸம்வாதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

𑌸𑌤𑍍𑌯𑌂 𑌦𑌾𑌨𑌂 𑌕𑍍𑌷𑌮𑌾 𑌶𑍀𑌲𑌮𑌾𑌨𑍃𑌶𑌂𑌸𑍍𑌯𑌂 𑌤𑌪𑍋 𑌘𑍃𑌣𑌾 𑌦𑍃𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌯𑌤𑍍𑌰 𑌨𑌾𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌸 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃। 𑌶𑍂𑌦𑍍𑌰𑍇 𑌤𑍁 𑌯𑌦𑍍𑌭𑌵𑍇𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌮 𑌦𑍍𑌵𑌿𑌜𑍇 𑌤𑌚𑍍𑌚 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌨𑍈𑌵 𑌶𑍂𑌦𑍍𑌰𑍋 𑌭𑌵𑍇𑌚𑍍𑌛𑍂𑌦𑍍𑌰𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨 𑌚 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃॥ 𑌯𑌤𑍍𑌰𑍈𑌤𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 𑌸𑌰𑍍𑌪 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌸 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌃 𑌯𑌤𑍍𑌰𑍈𑌤𑌨𑍍𑌨 𑌭𑌵𑍇𑌤𑍍𑌸𑌰𑍍𑌪 𑌤𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌮𑌿𑌤𑌿 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌶𑍇𑌤𑍍। 𑌨 𑌯𑍋𑌨𑌿𑌰𑍍𑌨𑌾𑌪𑌿 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍋 𑌨 𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 𑌨 𑌚 𑌸𑌨𑍍𑌤𑌤𑌿𑌃 𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑌿 𑌦𑍍𑌵𑌿𑌜𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑍇𑌵 𑌤𑍁 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍॥

தாத்பர்யம்.—சத்தியம், தானம், பொறுமை, சீலம், சாந்தம், தபசு, அருள் (பூததயை) இவையெல்லாம் எவனிடமுள்ளனவோ அவனே பிராமணன். இக்குணங்களெல்லாம் சூத்திரனிடம் காணப்பட்டால் அவன் சூத்திரனல்லன்; அவன் சூத்திரனிலும் உயர்ந்தவனாவன். இவையனைத்தும் பிராமணனிடம் காணப்பெறாவிட்டால், அவன் பிராமணனல்லன். அவனே சூத்திரன். பிறப்பு, உபாயனம் முதலிய சம்ஸ்காரங்கள், பாண்டித்யம், கோத்ரமென்ற இவையாவும் பிராமணத்துவத்திற்கு காரணங்களாகா."

இதனால் குணங்களே பிராம்மணத்வதிற்கு முக்கிய காரணமென்பது பாரதத்திலிருந்து ஏற்படுகின்றது.

மற்றும் விஷ்ணுபாகவதத்தில்

யஸ்யயல்லக்ஷணம்ப்ரோக்தம் பும்ஸோவர்ணாபிவ்யஞ்சகம்।
யதந்யத்ராபி த்ருஶ்யேத தத்தேநைவ விநிர்திஶேத்॥

என்று கூறப்பட்டுள்ளது. ஒருஜாதியைக்குறிப்பதற்கு எந்த லக்ஷணங்கள் சொல்லப்படுகின்றனவோ அவை பிறஜாதியாரிடம் காணப்படின், அவரும் அந்த ஜாதியை சேர்ந்தவரென்பது பாகவதத்தின் அபிப்பிராயம். பிராமணர் தாம்பூஜிக்கத்தகுந்தவரெனக்கூறிப், பிறரிடம் சன்மானத்தை வலிதாகக் கவர்ந்துகொள்வது தருமமாகாததுபோல, பிராமணர்மேல் வீண்தோஷங்களைக் கற்பிப்பதும், அவரிடத்தில் அசூயை ஈருஷை கொண்டிருப்பதும் பிறர்க்குத் தருமமல்ல. எல்லாஜாதியாரும் சகோதரபாவத்தையடைந்து, ஒருவர்க்கொருவர் சிநேகத்தை பலப்படுத்திக்கொண்டு, தத்தம் தருமங்களுக்குத் தாழ்வுவராது நடந்துகொண்டுவந்தால் ஜனசமூகம் க்ஷேமத்தை அடையக்கூடும்.

ஆசிரம தருமங்கள்.

ஜீவனுக்கு மனித ஜன்மமேற்பட்டதுமுதல், அவன் முக்தியடையும்வரை, அவனது பிரயாணம் 4 பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மற்றும், ஒவ்வொரு பிறப்பிலும் அவனது ஜீவித காலத்தில், அதாவது அவன் ஸ்தூல சரீரத்துடன் பூலோகத்தில் இருக்கும்போது, அவனது வாழ்க்கை 4 பாகங்களாகப் பிரிக்கப்படுகிறது.

முதலில் எவ்விதநியமத்திற்கும் உட்படாமல் இச்சைப்படி நடந்துகொண்டு, பெற்றோரது பாதுகாப்புக்குப் பாத்திரனாகி, இளமை நீங்கிச் சிறிது கல்விகற்றுக் குருகுலவாசஞ்செய்தும், குருவின்கட்டளைக்குட்பட்டு நடந்தும், குருவுக்கு தொண்டுபூண்டொழுகியும், பூர்வம் சூத்திரப்பிறப்பில் ஜீவன் அடைந்த ஞானத்தை மறுபடியும் ஒவ்வோர் புதுப்பிறப்பிலும் திடப்படுத்திக் கொள்வான். அது ஆரியதருமத்தில் பிரம்மசரிய ஆசிரம தருமமென்றும், பிறதேசங்களில் வித்தியார்த்திதருமம் என்றுஞ்சொல்லப்படும். ஆசிரியன் இல்லத்திலாவது அல்லது பிறநாட்டிலுள்ளதுபோல் பாடசாலை அதிகாரிகளுக்குட்பட்ட வாசஸ்தலத்திலாவது மாணவன்வசித்து, உபாத்தியாயரது கட்டளைக்கு அடங்கி, கால நியமம்தவறாது காலத்திற்குத் தகுந்த காரியங்களை நிறைவேற்றுகின்றான். அவன் எப்போதும் குருக்களின் சேர்க்கையினால் உண்டாகும் மேன்மையை அடைவதால், விளையாட்டு அசட்டை முதலிய பாலரின் இயற்கைக்குணங்களைக் கொண்ட இவன் தகுந்த வயதடைந்தவுடன் பாதந்திரத்தினின்றும் நீங்கி சுவதந்திரனாகக்காரியங்களை நடத்துவதற்கு வேண்டிய நற்குணங்களை அடையத்தகுதி உள்ளவனாகிறான். இவ்வித ஏற்பாடுகள் மேல்தேசங்களிலும் இப்போது நடைபெறுகின்றன. முற்காலத்தில் இந்து தேசத்திற்குக் குருகுலவாசத்தால் பல நன்மைகள் கிடைத்தன. இக்காலத்தில் குருகுலவாசத்தைக்காண்பதரிதாயிற்று. இப்போது பாலர்கள் தமது வீட்டிலேயே வசிக்கிறார்கள். பெற்றோர் பந்துக்கள் முதலியோரது பிரியத்திற்கே பாத்திரராகி அதிகப்பரிவுடன் வளர்க்கப்படுகிறார்கள்; இல்லாவிடில் பிறஊர்களிலுள்ள போஜனசாலைகளில் உண்டு பள்ளிக்கூடம்போகும் சிறிது வேளையில்தவிர பிறவேளைகளில் யாதொரு நிபந்தனையுமின்றித் தமது இஷ்டம்போல் நடந்துகொண்டு, காலத்திற்குத்தகுந்தவாறு காரியங்களைச் செய்விப்போரது மேற்பார்வையில்லாமல் இருக்கிறார்கள். ஆகையால், முற்காலத்துப் பிள்ளைகளிடமுள்ள நற்குணங்கள் இக்காலத்துப் பிள்ளைகளிடம் இல்லை. மாணாக்கனுக்கு மனவடக்கம், இந்திரிய நிக்கிரகம், வித்தியாசக்தி, சுகத்தில் இச்சைகொள்ளாதிருத்

தல், உழைப்பு, முதலியவை முக்கிய லக்ஷணங்களாகும். இந்த லக்ஷணங்களைப் பழகி உறுதிப்படுத்திக்கொண்டால், தானே காரியங்களை நடத்துவதற்கு அவன் பாத்திரனுவான். இவ்வாறு குருகுலவாசஞ் செய்தவன் சம்சாரபாரத்தை வகித்தற்கும் தகுதி உடையவனுவன். இவனே மணஞ்செய்துகொண்டு, கிரகஸ்தாசிரம தர்மங்களை அனுஷ்டிக்கத் தகுந்தவன்.

கிரகஸ்தனுக்குக் குடும்பத்தை வகிப்பது முக்கிய தருமமாகும். இதில் அனுஷ்டிக்கப்படும் எவ்வித தருமங்களும், செய்யப்படும் எல்லாக்காரியங்களும் ஜீவனுக்கு பரமார்த்த சாதனமான ஞானத்தை விருத்திசெய்யக்கூடியவை. விவாகத்தைக் கேவலம் இவ்வுலக வின்பசாதனமாக எண்ணுதல் தவறு.

தனத்தைத் தேடுவதும், தருமத்திற்கு விரோதமில்லாமல் இகசுகங்களை அனுபவிப்பதும், தேடிய பொருளை கேவலம் தன் சரீர போஷணத்திற்கு மாத்திரமேயன்றி, நாளடைவில் பரோபகாரத்தின் பொருட்டு உபயோகிப்பதும், கிரகஸ்தனுடைய அபிவிருத்திக்குக் காரணமாகும் தருமங்கள். முதன் முதல், தன் சுகத்திற்கு மூலமாகும் மனைவி, மக்கள் முதலியோரது சுகங்களைத் தன்னுடையவைபோல் கருதுவதும், படிப்படியாக பந்து மித்திராது சுகங்களைக் கோருவதும், தன்னயத்தை நாடும் அவனுடைய தாழ்வான குணத்தை நீக்கிப் பரோபகார புத்தியை அவனிடம் பலப்படுத்தும். நாள் செல்லச் செல்ல, அவனிடம் அன்பும் அருளும் விருத்தியாகும். கிரகஸ்த தருமத்தில் ஸ்வதந்தரமாகப் பொருள்தேடும் திறமை உண்டாவதால், கிரகஸ்தன் அநேக ஜீவர்களுக்கு ஆதாரமாகிறுன். தனத்தைத் தேடும் சிந்தனை இல்லாது கல்வி பயிலும் பிரமசாரிகளுக்கும், சம்சார விசாரத்தினின்றும் தம்மை விடுவித்துக்கொண்டு, உலக வியாபாரங்களைக் கவனியாது, வைதீக காரியங்களிலும், தன்னயம் சிறிதும் கருதாமல் லோகத்தின் நன்மைக்காக உழைக்கும் காரியங்களிலும் தமது காலத்தைக் கடத்திக்கொண்டுவரும்வானப்பிரஸ்தனுக்கும், முற்றத்துறந்து, இகபரலோக சுகங்களைச் சிறிதும் நாடாமல் எப்போதும் உல

கின் நன்மையையேநாடுகிற தியான யோகபரனுன ஸந்நியாசிக்கும் கிரகஸ்தன் முக்கிய ஆதாரமாகிறுன். இவ்வாறு எல்லோருக்கும் சகாயம் செய்வதால், பொருளாசை அவனிடம் குறைவுபடும். தன்னைவிட உத்தமர்களான பெரியோரின் சேர்க்கையை அவன் பலதடவை அடைவதால், அவனிடம் அகங்காரம் நசித்து, பக்தி ஞானங்கள் விருத்தியாகின்றன. சிறியவர்களான மாணவர் முதலியோருக்கு உதவிசெய்ய வழி ஏற்படுவதால், அவனிடம் கருணை அதிகமாகவளரும். இவ்வாறு எல்லா வழிகளிலும் அவனிடம் நிஷ்காமப்பிரியம் நாளுக்குநாள் பெருகும். இந்த கிரகஸ்த தருமத்தை நன்ருக அனுஷ்டிப்பதால் தனம் தேடும் சக்தி உள்ளவரிடம் சாமானியமாகக் காணப்படும் தன்னயகுணமும், அகங்காரமும், காமகுரோத லோபங்களும் படிப்படியாக மாறுபட்டு, மேற்கூறிய பக்தி, கருணை, ப்ரீதி முதலியநற்குணங்கள் அவர் மனத்தில் உதயமாகும். அதனுல், இந்த தருமம் ஜீவனுக்குக் காலக்கிரமத்தில் உத்தம புருஷார்த்த சாதகம் ஆகுமேதவிர, அதற்குத் தடையாக இராது. ஜீவன் பரம புருஷார்த்தத்தை அடைவதற்கு வேண்டிய பலவித அனுபவங்களை இல்லறத்திலேயே அடையத் தகுதியுடையவனுகிறுன். அந்த அனுபவங்களையும், அவற்றிலிருந்து விளையும் ஞானத்தையும் கிரகஸ்தனுகவிருந்து அடையாவிட்டால், அந்நிலைக்கும் மேலான யதிதர்மங்களை அனுஷ்டிப்பதற்கு அவன் தகுதியுள்ளவனுகான்.

கிரகஸ்தன் குடும்ப பாரத்தை வகித்திருப்பவனுதலால், தன் போஷணத்தி லிருப்பவரது நன்மையைத் தினம் தேடுவதே முதலில் அவனுக்கு முக்கிய காரியமாக இருக்கும். அதனுல், குடும்பத்தைக் காப்பாற்றுவதில் தனது சுய நயத்தை மனப்பூர்வமாக விடாமல் தீராது. தான் அன்புவைக்கும் மனைவி மக்களையும், தனது இல்லத்தை நோக்கிவரும் சுற்றத்தையும், நட்பினரையும், விருந்தினரையும் சந்தோஷப்படுத்தாவிடில், அவன் மிகுந்த சுகத்தை அடையான். குடும்பத்திலுள்ளவன் தன் சுகத்தைச் சிறிது அடக்கிப், பிறரது சுகத்தை கோரிக்கொண்டிருப்பதால், அவனிடம் நிஷ்காமப்பிரியம் அபிவிருத்தியாகும்.

மற்றும், அவன் குடும்பத்திற்குத் தலைவனாக விருப்பதால், தன்னை யடுத்தவரிடம் கருணை உண்டாவதற்கு இடமுண்டாகிப், படிப்படியாக ஏழைகளிடமும், சக்தியற்றவரிடமும், தன்னினுந் தாழ்ந்தவரிடமும், தயையும் இரக்கமும் விருத்தியாகும். இன்னும், பிறர் தனக்குத் தீங்கிழைத்தால் அதைப் பாராட்டாது, தன்னிடம் பொறுமையை விருத்தி செய்து கொள்வதற்கும் இடமுண்டாகும். இவ்வித நற்குணங்களை கிரகஸ்தாசிரமத்திலிருந்து அப்பியசிக்கலாமேதவிர, பிற ஆசிரமங்களிலிருந்து இவற்றை அப்பியசிப்பது முடியாது. இன்னும் இல்லறத்தி லிருப்பவன் வீட்டிலிருப்பவ ரெல்லோரையும் (வேலையாட்கள் உட்பட) காப்பாற்றி வருவதும் தவிர, அவர்களை நல்வழிப்படுத்துவதும், உத்தம நிலையை யடையச்செய்வதும் அவனது தருமமாகும். வீட்டில் பலருடன் வசித்துவருவதால், அநேகவிதமான துன்பங்களைப் பொறுக்கவேண்டிவரும்; தனித்திருப்பவனுக்கு அது கிடையாது. தினந்தோறும் அவ்விதத் துன்பத்தைச் சகித்துக்கொண்டு, மனசமாதானத்தை அப்பியசித்து வருவதால், திதிக்ஷை உபரதிகளை வழக்கப்படுத்திக்கொள்வதற்கு இடம் மிகுதியாக ஏற்படும். ஒவ்வோர் சமயம் அவசரப்பட்டுக் குடும்பத்தை வெறுத்து சந்நியாசங்கொண்டவன், தனக்கு பொருள்கள் வாகனாதிகள் ஒன்றுவது இராதது பற்றித்தான் அவ்வித வைராக்கியம் கொண்டதாக உணரக்கூடும். எப்பொழுதேனும் அவனுக்கு விஷய ஸ்பர்சம் உண்டானால், அவனது வைராக்கியத்திற்கு பங்கம் உண்டானாலுமாகலாம். அவ்வாறின்றி கிரகஸ்தனாகவிருந்து தனத்தைத் தேடி, சுகானுபவங்களை அனுபவித்து, அவைகளின்மேல் ஆசையைப் படிப்படியாக குறைத்துக்கொண்டு, பற்று நீங்குதலை அனுசரித்துவந்தால், அவனிடம் உண்மையான வைராக்கியம் விருத்தியாகும். அவ்வித மனிதன் வெளிக்கு சம்ஸாரியும், மனத்தில் பற்றற்றவனுமாக விருப்பான். அவன் செய்யும் தியாகமே மோக்ஷத்துக்குச் சாதனமாகும். பணவாசைகொண்டு வெளிக்கு சந்நியாசங்கொள்பவனுக்கு முக்தியே கிடையாது.

இக்காரணத்தால், பரிபக்குவமாகாத ஜீவனுக்கு சந்நியாசத்தைப்பார்க்கிலும் கிரகஸ்த தருமத்தில் நின்று நிஷ்காமமான கரும யோகத்தை அனுசரிப்பதே உண்மையான மோக்ஷசாதனமாகும். கிரகஸ்த தர்மானுஷ்டானத்தால், வேறொரு பிரயோசனம்கூட காணப்படுகின்றது. தினமும் தன் வீட்டை நோக்கிவரும் அதிதி முதலியோரை மனப்பூர்வமாக உபசரித்தால், நாளடைவில் அவனிடம் தியாகம் பூர்ணமாக விருத்தியாகும். அதிதி பகவானது ஸ்வரூபனென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ளதல்லவா? வீட்டுக்கு வரும் அதிதிகளுக்கு கிரகஸ்தன் உதகமும், ஆசனமும், ஆதரவுடன் கூடிய மிருது வசனங்களும் சமர்ப்பிக்க வேண்டுமென்று ஸ்மிருதிகள் முறையிடுகின்றன. ஆகையால் அதிதிகளை உபசரிப்பதற்கு தகுந்தவனாக விருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. ப்ரீதியுடன் கூடிய சம்பாஷணைகளால் அவர் திருப்தியடைவதுபோல், ஆதரவில்லாமற் படைத்த அன்னத்தினால் அவர் திருப்தி அடையார். "அன்னம் ஜீர்ணித்துப்போகும்; ஆதரவு என்றுமுள்ளதாகும்" என்பது உலக வழக்கு. இவ்விதம் ஒருவன் நிஷ்காமமாக உபசரிக்கப்பட்டபோது, அவன் மனிதகோடிகளுக்குப் பிரதிநிதியாவதால், மானவகோடிகளெல்லாம் உபசரிக்கப்பட்டவராவர். இது பகவானுக்கும் ப்ரீதிகரமானது. மற்றும், அதிதி, சந்நியாசிகள் அன்றி, கிரகஸ்தன் வீட்டைச்சுற்றித் திரிந்துகொண்டிருக்கும் காகம், நாய், பூனைகளுங்கூட அவனையடுத்து ஜீவிக்கின்றன. ஆரிய தருமப்படி த்விஜர்கள் நித்தியம் செய்யும் பலிதானம், காகம் நாய் முதலியவைகளைக் காப்பாற்றுவதன்பொருட்டுச் செய்யப்படுகின்றன வென்பது சாஸ்திரத்தால் வெளியாகின்றது.

இவ்விதமாக ஏழைகளிடத்திலும், பரதேசிகளிடத்திலும், அற்பப் பிராணிகளிடத்திலும், ப்ரீதியும், கருணையும், ஜீவனிடம் அபிவிருத்தியாவதும் தவிர, ஜீவன் இதன்மூலமாகப் பலவிதமான ருணங்களையும் தீர்த்துக்கொள்ளுகிறான். இந்த விஷயம் கர்மயோகம் என்ற அதிகாரத்தில் விவரிக்கப்படும். ஜீவன் முன் வைசிய தருமத்தை அனுஷ்டிக்கும்போதடைந்த

ஞானமெல்லாம், இந்த ஜன்மத்தில் கிரகஸ்தாசிரமத்தில் மறுப டியும் அடைகிறுன். ஜீவனுடைய நீண்ட யாத்திரையில் வைசிய தருமம் எவ்வித ஞானத்தை விருத்திசெய்யுமோ, எவ்வித நற்குணங்களை அடைவிக்குமோ, அந்த ஞானங்களையும், குணங்களையும் பலப்படுத்துவதில் இல்லற தருமம் சிறந்ததாக உள்ளது. இந்த தருமத்தில் அடையக்கூடிய ஞானத்தையெல்லாம் அடைந்து, இகசுகங்களிலும் லௌகிக கருமங்களிலும் சிறிது வைராக்கியம் அவனுக்கு ஏற்பட்டால், அந்த சுகங்களிலிருந்தும் கார்யங்களிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொள்ளத்தகுந்த சமயம் அவனுக்கு ஏற்படும். அப்போது, லௌகிக வியாபாரங்களை ஒழித்துக்கொண்டு, சம்சாரபாரத்தைத் தகுந்த வயதுள்ள தன் பிள்ளைகளிட மொப்புவித்து, அகங்கார மமகாரங்களைவிட்டு, ஞானத்திலும் வயதிலும் தன்னிலும் குறைந்தவருக்குப் போதித்து, அவர்களை தருமத்தை அனுஷ்டிக்கச்செய்து, அவர்களிடம் யுக்தாயுக்தி ஞானத்தை விருத்திசெய்து, தானும் பகவத்ஞானம் முதலிய நல்ல காரியங்களில் காலத்தைக்கழித்துப் படிப்படியாக, சம்சாரத்திலிருந்து முற்றிலும் தன்னை விடுவித்துக்கொள்ளுவதற்குத் தகுந்தவனுகிறுன். இது ஆரியதருமத்தில் 3-வது ஆசிரமமாகிய வானப்பிரஸ்த தருமம். இதில் ஜீவன் லௌகிக காரியங்களையெல்லாம் விட்டு, விவாஹ காலத்தில் கைக்கொண்ட அக்கினி ஹோத்திரங்களுடன் மணைவியும் தானுமாகப் பட்டணம் கிராமவாசங்களை விட்டுக் காட்டிலாவது, மலைக் குகைகளிலாவது வசிக்க வேண்டுமென்ற ஆசிரமத்தைக் கற்பித்துக்கொண்டு, அவ்வாறே வசித்து வைதிக கருமங்களை மாத்திரம் நடத்திக்கொண்டு, வனப்பொருள்களான இலை, கிழங்கு, கனிகளை ஆகாரமாக உண்டு, காலத்தைக் கழிக்கவேண்டும். இக்காலத்தில் இந்த தருமத்தை அனுசரிப்பவரைக் காணமுடியாது. காலானுசாரமாக, ஜனங்கள் அதிக விஷயப்பற்றுடையவராய், ஆயுள் முடியும்வரை விஷய வாசையிலேயே தமது காலத்தைப் போக்குவது சாதாரணமாகவுள்ளது. இந்த தருமத்தை நன்ருக அனுஷ்டிப்பதில் முக்கியமான உத்தேசம் யாதெனில், புருஷனும் ஸ்திரீயும், ஒரிடத்தில் வசித்து, விஷய சுகத்தை நாடாது, குரு சிஷ்ய நியாயமாகவும்

சகோதர சகோதரி நியாயமாகவும் நடந்துகொண்டு, இருவரும் நெருங்கியுள்ளபோது போகயிச்சை இல்லாதிருப்பதை அப்பியாசம் செய்வதே ஆகும். இந்த அப்பியாசம் உண்மையான சந்நியாசத்திற்கு முக்கியமானதென்று சொல்லவும்வேண்டுமோ? இந்த தருமத்தில் ஆரணியத்திற்குச் செல்வது முக்கியாம்சம் அல்ல; விஷயத்தின் சமீபத்தில் உள்ளபோது, விஷய இச்சை இல்லாதிருப்பதும், சம்சாரத்திலிருந்தும், மனவிசாரத்தைவிட்டு, பகவத்தியானம் செய்துகொண்டு, பாரதத்துவத்தைப் போதிக்கும் கிரந்தங்களைப் படித்தும், படித்ததை பற்றிச் சிந்தித்தும், சிந்தித்தவைகளின்மேல் தியானம் செய்தும் காலத்தைக் கடத்துவதே முக்கியாம்சம். ஆதலால், பரமார்த்த சிந்தனை உள்ளவரெல்லோரும் முதுமை அடைவதற்கு முன்பே விஷய வாசையை விடுத்து, பகவத்தியானுதிகளை அப்பியாசம் செய்வதற்கு விசேஷ பிரயத்தனம் செய்யவேண்டும். இது வருண தருமத்தில் க்ஷத்திரிய தருமம்போல் இருக்கின்றது. இதன்பிறகு, ஜீவன் முற்றத்துறந்து, சந்நியாசம் வாங்கிக்கொள்ளத் தகுந்தவனாகிறான்.

அவ்வித வைராக்கியம் விருத்தியானல், சம்சாரப்பற்றுச் சிறிதுமின்றி, எப்போதும் பகவத்தியானத்திலிருப்பதற்கு இடமுண்டாகும்; இகலோக விஷயங்கள் ஒன்றையும் அவன் கோரான். இகலோக சுகத்தில்போல, ஸ்வர்க்க சௌக்கியத்திலும் உறுதியான வைராக்கியம் அடைந்து, சுவர்க்கலோகத்தைப் பார்க்கிலும் மேலான முக்தி பதத்தையடைய முயல்வான், அப்போது அவன் பின்னபாவத்தை பூர்ணமாகவிட்டு, சர்வ பூதங்களிலும் ஆத்தும ஸ்வரூபத்தைப்பார்த்து, சர்வ பூதங்களிலுமுள்ள ஆத்துமாவும், தன்னிடமுள்ள ஆத்துமாவுமொன்றே என்று தெரிந்துகொண்டு, ஆத்ம தத்வத்தைப் போதிக்கும் கிரந்தங்களைப் படித்தும், கேட்டும் மனத்தாற் சிந்தித்தும், உலகிற் காணப்படும் பலவித தத்துவங்களிலுள்ள ஏகத்துவத்தைப் பார்த்து, கடைசியாக எல்லாம் பிரமமல்லவா? (சர்வம் கல்பிதம் ப்ரம்மா) ("நேஹ நா நாஸ்திகிஞ்சன") முதலிய மகா வாக்கியங்களின் சாரங்களை ஸ்வானுபவங்களால் தெரிந்துகொண்டு, ஆத்

தும சிந்தையில் ஆழ்ந்திருப்பான். அன்னேனிடம் "நான்" என்ற அகங்காரம் சிறிதுமிராது. எல்லாவற்றுள்ளும் அவன் ஏகத்தி வத்தைப் பார்ப்பதாலும், பின்னபாவம் அவனிடம் சிறிது மில் லாததாலும், அவனே கர்ம மார்க்கத்தைக் கடந்தவன். அவனி டம் சோக மோகங்கள் முற்றிலும் நசித்துப்போகும்.

யஸ்மிந் ஸர்வாணி பூதாந்யாத்மைவாபூத் விஜாநத: |
தத்ர கோ மோஹ: க: ஶோக ஏகத்வமநுபஶ்யத: ||

தாத்பர்யம்:—எந்தப் பதவியிலும் ஏகத்துவத்தையே பார்க்கும் ஞானிக்கு சகல பூதங்களும் ஆத்துமாவாகுமோ, அந்தப் பதவியில் அவ னுக்கு மோகசோகங்கள் எவ்வாறுண்டாகும்.?

இந்த ஸ்திதியை யடைந்த ஜீவன் எல்லாவற்றிலும் ஏகத் துவத்தைப் பார்ப்பவனுதலின், ஜாதிபேதத்தை அவன் கடந்த வனுவான். எவ்விதமான பலனையும் எதிர்பாராத இந்தப் புருஷ னுக்கு கருமமொன்றும் விதிக்கப்படவில்லை. லோக நன்மை யைக்கருதி பரோபகாரமான காரியங்களைச் செய்துவருவதால் அந்தக் கருமங்களுக்குக் கட்டுப்படமாட்டான். அழிவுள்ள பதார்த்தத்தின்மேல் அவனுக்கு ஆசை இராது. சரீரம் தரும சாதனங்களுள் முதலானதால், சரீர போஷணத்தை மாத்தி ரம் இரந்துபெற்ற வுணவால் செய்துகொள்வான். அதிலுங் கூட விரும்பாமல் கிடைத்தவற்றைக்கொண்டு திருப்தி யடையவேண்டும். இந்த தருமத்தை நன்ருய் அனுஷ்டிப் பவனே உண்மையான சந்நியாசி. இது ஆரிய தருமத்தில் துரியாசிரமம் எனப்படும். இதில் இந்திரியங்களையும் மனத்தை யும் அடக்குவதற்கு சர்வ பிரயத்தனமும் செய்வதே முக்கியல க்ஷணம். இந்த ஆசிரமத்திலும் யோகாப்பியாசத்தால் அடையும் ஆத்துமஞானத்திலுள்ள தாரதம்மியங்களை உத்தேசித்து, யதி களிடத்திலும் தாரதம்மியங்கள் இருப்பதாகக் கிரந்தங்களில் குறிக்கப்பட்டுள்ளது. இவர்கள் குடீசகர், ஹூதகர், ஹம்சர், பரம ஹம்சர், என 4 வகைப்படுவர். இவர்களுடைய பரிபக்குவ ஸ்தி திகளையொட்டி, தருமங்களும்வேறுவேறாக உபநிஷத்துக்களில் விதிக்கப்பட்டுள்ளன. ஆயினும், எல்லோரும் நிவிர்த்தி மார்க்

க்த்தையே அனுசரிப்பவராவர். அவர்கள் எப்போதும் பகவத் தியானத்தில் மூழ்கித் தவம் முற்றி, தபோத்தியான பலன்களை உலகின் நன்மையின்பொருட்டுச் செலவுசெய்வர். யோக்கியர்களான சிஷ்யர்களைத்தேடி, அவர்கள் கிடைப்பாராகில், அவர்களுக்கு ஆத்துமக்ஞானத்தைப் போதித்து, உலகத்திலிருக்கும் சர்வ பூதங்களின் அபிவிருத்தியின்பொருட்டு உலகத்தில் பகவானது பிரதிநிதிகள்போல் நடந்துகொள்வர். இவர்களே பகவானுடைய ஜன்மகருமஸ்வரூபங்களை நன்ரு யறிந்தவர்கள். தமது ஜீவிததசையிலேயே முக்தி சுகங்களை அனுபவிக்கும் ஜீவன் முக்தர்கள் இவர்களே. இவர்களை உத்தேசித்தே கீதையில்

என்பிறவி யென்கரும மிவ்வண்ணந் திவ்வியமென்று
அன்பிஞெடும் உண்மை யறிவுஉரூன்—முன்பிறவி
எய்ந்த வடல்விட்டே எதிர்ப்பிறவி யேலாதே
ஆய்ந்தெனையே யெய்து மவன். [கீ. வெ. IV Cha, 9]

என்று கிருஷ்ணபகவான் சொல்லியிருக்கிருர். இவ்வித மகான்களே பிறப்பறுத்தற்குத் தகுதியுள்ளவர்.

பிரவிர்த்தி நிவிர்த்தி மார்க்கங்கள்.

ஜீவன் அப்பியசிக்கும் தருமங்கள் பிரவிர்த்திதருமங்களென்றும், நிவிர்த்தி தருமங்களென்றும் இருவகைப்படும். முதலில் ஜீவன் ஆசைமிகுதியால் எல்லாவற்றிலும் தன்னயத்தையே நாடிப், பிறரது நன்மையைக்காட்டிலும் தனதையே அதிகமாகப் பாராட்டித் தன் நன்மைக்காகவே பாடுபடுகிருனல்லவா? இவையெல்லாம் பிரவிர்த்தி மார்க்கத்தின்பாற்படும். மனித ஜன்மம் கிடைத்ததுமுதல் அநேக ஜன்மங்களில் அநேகவித சுகதுக்கானுபவங்கள் உண்டாகி, அவைகளிலிருந்து அடையத்தகும் ஞானம் பெருகி, உண்மையான வைராக்கியம் உறுதிப்படும்வரை, பிரவிர்த்தி மார்க்கத்திலேயே ஜீவன் உழன்றுதிரிவான். இகசுகங்களை அதிகமாக விரும்பி; அவைகளை அடைவதற்கு அவன் பெருமுயற்சி செய்வான். அந்த சுகங்கள் கிட்டியபோது, மனங்களித்து அவைகளிலேயே மூழ்கிக்கிடப்பான்; அவற்றில் ஆழ்ந்த பற்றுண்டாகி, அவைகளைப் பிரிவதற்

குச் சிறிதும் ஆற்ருது உறுதியாக அவைகளுக்குக் கட்டுப்பட்டிருப்பான். ஆயினும், காலக்கிரமத்தில் அவைகளில் ஏதேனும் நசித்துப்போனல் அவன் கொடுந்துயரில் அகப்பட்டு வருந்திச் சிறுமையடைவான். இந்த அனுபவம் அடிக்கடி உண்டானல் மேலான சுகசாதனங்களெனப் பற்றுவைத்த விஷயங்களெல்லாம் அழிவுள்ளவையென்ற ஞானம் உண்டாகி, வைராக்கியம் அவனிடம் சிறிது தோன்றும். காலக்கிரமத்தில் அத்துக்கம் நீங்கவே, அவ்விஷயங்களில் மறுபடியும் மமகாரம் படிப்படியாக வளர்ந்து, வித்துப்போலுள்ள வைராக்கியம் மறைந்து போகும். இவ்வித வைராக்கியமே புராண வைராக்கியமென்றும், ஸ்மசான வைராக்கியமென்றும் உலகத்தில் வழங்கப்பெறும். அநேக ஜன்மங்களில் இவ்வித அனுபவங்கள் வளரவளர வைராக்கியம் மறுபடியும் மறுபடியும் தோன்றி, ஒவ்வொருதடவையும் திடப்பட்டு, இகலோக சுகங்களெல்லாம் துக்கத்திற்கு மூலங்கள் என்ற ஞானம் திடமாக உண்டாகும். அப்போது உண்டாகும் வைராக்கியம் நிலைபெற்று உறுதியடைந்து, அவன் மோக்ஷத்தை அடையும் வழிகளில் பாடுபடுவதற்கு உத்சாகத்தை தரக்கூடியதாகும்.

"புலன்சேர் பொறியில்வரும் போகங்கள் துன்பக்
குலஞ்சேருங் காரணமாங் கோளா—னலஞ்சேர்ந்து
நிற்பதுவு மில்லை நிறைஞான வானவற்றி
லற்பமுகப் பெய்தா னமர்ந்து" (ப. கீ. வெ. V. 21)

இந்த வைராக்கியம் உண்டாவதற்குமுன், தன்னயத்திற்காக அதிகமாகப் பாடுபடுவதும், போகவிஷயங்களை கிரகித்து அனுபவிப்பதும் ஜீவனுடைய முக்கியலக்ஷணம். அவ்வாறு அனுபவிப்பதால்தான் ஜீவன் விருத்தியடையத் தகுதியுடையவனுவான். அக்ஞானதசையில் கழியும் ஜன்மங்களினும் மேலான தசையை யடைந்தபிறகு, அவனது ஒவ்வொரு ஜன்மத்திலும் பாலிய யௌவனங்களில் மேல்கூறியபடி போக விஷயங்களை கிரகித்து அனுபவிப்பதே ஜீவனது அபிவிருத்திக்குக் காரணமாகிறது. இதன் முக்கிய பிரயோசனம் என்னவென்றல், உலகத்தில் சுகதுக்கங்கள் ஞானபிவிர்த்திக்குக் காரணங்களே

னவும், அதிலுள்ள மேலான சுகத்தைப்பார்க்கிலும் மிக்க சாரமானதும் நிலைத்துள்ளதுமான சுகங்கள் இருக்கின்றனவெனவும் அறிந்து, உண்மையான வைராக்கியத்தை உறுதிப்படுத்திக் கொள்வதுதான். இந்த ஞானம் உண்டாகும்வரை பிரவிர்த்திமார்க்கம் ஜீவனது அபிவிர்த்திக்குக் காரணமாயுள்ளது. விஷய சுகங்களை முற்றிலும் அனுபவித்து, அவைகளிலுள்ள தோஷங்களை நன்கு யறிந்துகொண்டு, கடுமையான வைராக்கியத்தைத் தன்னிடம் விருத்தியாக்கிக்கொள்ளும்வரை பிரவிர்த்தி தருமத்தை விடாது கடைப்பிடித்தல் வேண்டும். அதற்கு முன்பு அதைவிட்டால், நன்று முதிராத காய்களை பழுக்கவைத்தால் அவை கனியாது கெடுவதுபோல, அது ஜீவனது உத்தமகதிக்கு சாதனமாகாமல் அவனது அதோகதிக்குக் காரணமாகும். இக்காலத்தில் நம் தேசத்தில் பலபேர்கள் தகுந்த வயது ஆவதற்கு முன்பும், பரிபக்குவக்ஞானம் அடையாமலும் உண்மை வைராக்கிய மில்லாமலும் சந்நியாசிகளாவதால், உத்தமமான துரியாசிரமத்திற்கு ஓர் அவமதிப்பு ஏற்பட்டுள்ளது. உண்மை வைராக்கியம் உண்டாவதற்கு முன்பே சந்நியாசிகளானால் யதி தருமங்களை உண்மையாக அனுஷ்டிப்பது அசாத்தியம். உலக இன்பத்தை அனுபவியாதவன் மோக்ஷகாமியாகான். சந்நியாசியானபிறகு சரீரத்தைக் காப்பாற்றுவதன்பொருட்டுப் பிறரை அடுத்திருப்பது விதியாயினும், தன்னை உபசரிக்கும் கிரகஸ்தர்களுக்குப் பன்மடங்கு அதிகமான மேன்மையைப் பயக்க சாமர்த்தியம் இருந்தாலொழிய, அந்த ஆசிரமத்தைக் கைக்கொள்வது சிறந்ததாகாது; ஏனெனில், எப்போதும் பகவானைத் தியானித்துக்கொண்டு, எல்லா பூதங்களுக்கும் இனியனாய், எல்லாருடைய இதத்தின்பொருட்டே பகவானைத்துதித்து, எல்லோருக்கும் ஞானத்தை அளித்து, அவர்க்குச் சிறந்த வழிகாட்டியாகி, பிறர்க்கு மேன்மையை பயக்கும் சக்தி உண்டாகி, அந்த சக்தியை நன்றாகப் பயன்படுத்தாவிட்டால், பிறரிடம் தான் வாங்கிக்கொள்ளும் பிக்ஷை, கோமணம் முதலியவை புதிய ருணானுபந்தங்களுக்கு ஏதுவாகின்றன. அதனால், உண்மை வைராக்கியம் ஏற்பட்டபிறகே பிரவிர்த்தி மார்க்கத்தைவிட்டு நிவிர்த்தி மார்க்கத்தில் ஒருவன் நடக்கவேண்டும்.

தன்னயத்தைக் கருதாமல் பரோபகாரத்தையே எண்ணிப், பிறரிடம் தான் அடையும் பயனைக்காட்டிலும் அதிகமான நன்மைகளைச் செய்வது நிவர்த்தி மார்க்கத்தின் முக்கிய லக்ஷணம். முதலில் பிறரால் தான் அடையும் லாபத்தையும் மேன்மையையும் தெரிந்துகொண்டு, அதற்குச் சமானமான பிரதியுபகாரம் செய்வது அவசியமென நிவிர்த்தி மார்க்கத்தில் பிரவேசிப்பவன் அறிந்து, சிறிதும் தாழ்வின்றி நியாயத்தைப் பரிபாலிப்பான். ஞானம் விருத்தியாக ஆகத், தனது அக்ஞான தசையிலும், பாலிய யௌவன தசைகளிலும் தான் பிறரிடம் அதிகமாக அடைந்த மேன்மையை நினைத்து, அதனால் உண்டான பந்தங்களைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன், பரோபகாரபுத்தி உடையவனாவான். அப்போது, பிறரால் தனக்கு உண்டான மேன்மையைக் காட்டிலும் அதிகமான மேன்மையைப் பிறருக்குச் செய்து, படிப்படியாகத் தன்னயம் சிறிதும் எண்ணாது, பிறருக்கு உபகாரம் செய்வதே தனது முக்கிய தருமமாக எண்ணி, அவ்வாறு செய்துவருவான். இவ்வண்ணம், ஆதியில் தான் தேடிக்கொண்ட பந்தங்களை யெல்லாம் சிறிதும் குறைவின்றி வட்டியுடன் தீர்த்துப், பிறகு கடன் தீர்ந்தவனாவதற்கு முயல்வான். இவ்விதம் மனிதஜன்மம் உண்டானதுமுதல் முக்தி அடையும்வரை ஜீவனது காலமெல்லாம் முதலில் பிரவிர்த்தி மார்க்கத்திலும், பின்னர் நிவிர்த்தி மார்க்கத்திலும் கழியும் என்பதை அறிதல் வேண்டும். ஜீவனது காலத்தின் முற்பாகத்தில் ஈசுவரனது மாயாசக்தி ஜீவனை அவித்தை ரூபமாக மூடிக்கொண்டு, பிரகிருதிக்குக் கட்டுப்படச்செய்யும். பிற்பாகத்தில் அம்மாயா சக்தியே வித்தியா ஸ்வரூபியாகி, ஜீவனை சம்சாரத்திலிருந்து திருப்பி, ஆத்துமாவின் உண்மை நிலையை அவன் அறியும்படி செய்யும். இவ்விதமாக ஜீவனது யாத்திரையில் ஒவ்வொரு ஜன்மமும் ஒவ்வொரு ஆசிரமமும் பிரவிர்த்தி நிவிர்த்தி மார்க்கங்கள் இரண்டையும் காட்டும்.

எல்லோரும் இந்த தரும ஸ்வரூபத்தை நன்றாய்த் தெரிந்துகொண்டு, தத்தம் தருமங்களை நன்றாய் அனுசரித்து, தமது சக்திக்குத் தகுந்தவாறு பிறர்க்கும் போதித்து, தாம் கடைத்தேறுவதோடு பிறரையும் கடைத்தேறும்படி செய்வாராக. இவ்வாறு சநாதனமான தருமங்களை ரக்ஷிப்பதின் மூலம் ஆதியில் இந்த தருமங்களை நமக்கு அருளிய மகரிஷிகளின் கடனையும் தீர்ப்பாராக.

12-வது அத்தியாயம்.

மோக்ஷமார்க்கங்கள்.

ஜீவன் ஈசுவரனது அம்சமென்றும், ஈசுவர சக்திகளெல்லாம் ஜீவனிடம் வித்துப்போ லுள்ளனவென்றும், அவ்வித்து ரூபமாகவுள்ள சக்திகளெல்லாம் பூரணமாக வெளிப்படும்பொருட்டு ஜீவன் பஞ்சபூதங்களாலாகிய உலகத்திற் பிரவேசித்து, ஸம்சார சக்கரத்தில் அகப்பட்டு உழன்று திரிகிறனென்றும், அதன் பிரயோசனம் மோக்ஷத்தை அடைவதே என்றும் முன் அத்தியாயத்தில் உரைக்கப்பட்டன. ஆதியில் ஈசுவராம்சமான ஜீவாத்துமா படிப்படியாக ஸ்தூலம், ஸ்தூலதரம், ஸ்தூலதமமான பிரகிருதியிற் பிரவேசித்து, அநேக லோகங்களில் அந்தந்த லோகசம்பந்தமான பிரகிருதியில் ஒரு சிறிது பாகத்தைச் சேர்த்துக்கொண்டு அவைகளை சரீரங்களாக அமைத்துக் கொண்டு, எல்லாவற்றிலும் ஸ்தூலமான பூலோகத்திற் பிரவேசித்துக், கொஞ்சகாலம் அசேதனமான மிருதபாஷாணாதிகளிலும் (மண், கல், முதலியவை), இன்னும் சிலகாலம் ஓஷதிவனஸ்பதியிலும் (மூலிகை, மரம்), அதன்பிறகு ஜங்கமங்களான ஜந்துக்களிலும் வசித்து அநேகவித அனுபவங்களை அடைந்து, கடைசியில் மனிதசரீரத்தைப் பெறுகிறுன். ஜீவாத்துமா சச்சிதானந்த ஸ்வரூபனயிருந்தும் முதலில் மிருதபாஷாணங்களில் சத்தாகமாத்திரம் ஆவிர்ப்பவித்திருக்கிறுன். ஸ்தூலமான பிரகிருதியில் பிரவேசித்து ஜீவன் அதில் சிறிதும் வெளித்தோன்றுதிருப்பதால், இவைகளில் ஆத்துமாவுள்ளதாவெனும் சந்தேகம் எழக்கூடியதுதான். இந்த நிலையில் அவனுக்கு உண்மையாக ஜீவத்துவமுள்ளதென்றுசொல்லுவதற்குமார்க்கமில்லை. ஆயினும் காலக்கிரமத்தில் மிருதபாஷாணாதிகளை விட்டுநீங்கி ஓஷதிவனஸ்பதிகளில் அவன் பரிணமிக்குங் காலத்தில், அவைகளில் ஈரப்பசையிருப்பதால், அவை பிராணனுள்ள வஸ்துக்களென்று சொல்லத் தகுதியாகவுள்ளன. ஜந்துக்கள் மூச்சை இழுப்பதும் விடுவதுமான செய்கைகளால் உயிருள்ளவை என அறியப்

படும். ஜந்துக்களின் சித்தத்தை அறிவது முடியாது. அவைக ளின் சஞ்சாரத்தினலும், சந்தோஷ கோபதாபங்களாலும் சித் தம் சிறிது வெளிப்படும். ஆயினும், மனிதசரீரத்தை எடுத்த போதுதான் ஜீவனது மனேசக்தி வெளிப்படையாகத் தெரிய வரும். அப்பொழுது இந்திரியங்களால் உலகவிஷயங்களைத் தெரிந்துகொள்வதற்கும், தெரிந்துக்கொண்ட விஷயங்களை வா க்கினல் விரித்துரைப்பதற்கும், நடந்தேறிய விஷயங்களை நினை ப்பதற்கும், வரப்போகும் விஷயங்களை ஊகித்தறிவதற்கும் ஜீவன் சமர்த்தனுவான்,

இந்த மனேசக்தி வெளிப்பட்டபிறகே,ஜீவாத்துமாதான் மனிதலோகத்தில் இருக்கிறவனென்றும்,செய்யும் கருமங்களில் தனக்குஸ்வதந்திரமிருப்பதால் பலனை அனுபவிப்பதற்குக் கட் டுப்பட்டு நாளுவித சுகதுக்கானுபவங்களினுல் ஞானத்தை விரு த்திசெய்துகொண்டு, வித்துபோலுள்ள தன் ஆத்துமசக்திக ளைப் படிப்படியாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கிருனென் றும் அறிந்துகொள்ளலாம். சம்சார சக்கரத்தில் உழன்றுகொ ண்டிருக்கும்போது ஜீவாத்துமாவுக்கு உண்டாகும் பல சுகதுக் கங்களும், மற்றும் ஜீவனது யோக்கியதைக்குத் தகுந்தபடி விதிக்கப்பட்டிருக்கும் தருமங்களும் அவனிடம் வித்துரூபமாக விருக்கும் ஆத்மசக்திகளை வெளிப்படுத்துவதன் பொருட்டு ஏற்பட்டவையாகும்.

ஜீவன் தனக்கு மனிதஜன்மம் கிட்டியதுமுதல் முக்தி கிடைக்கும்வரை நடந்துகொள்வதற்கு முக்கியமாய் மூன்று மார்க்கங்கள் உள்ளன. இந்த மார்க்கங்களெல்லாம் முடிவில் ஜீவாத்துமாவுக்கு பரமாத்துமாவின் சேர்க்கையை அடைவிக் கும். இந்த சேர்க்கைக்கே யோகமென்று பெயர். இந்த யோகம் கிடைப்பதற்குச் சாதனமாவதால் இம்மூன்று மார்க்கங்களும் யோகசாதனங்கள் எனப்படும். அவை கருமமார்க்கம், பக்தி மார்க்கம், ஞானமார்க்கம் எனப்படும். ஒவ்வொரு மார்க்கமும் முடிவில் ஒவ்வொரு யோகத்தைச் சித்திக்கச்செய்கிறது. கரும மார்க்கத்தின்முடிவில் அடையத்தகுந்தது கர்மயோகம். பக்தி

மார்க்கத்தின் முடிவில் அடையத்தகுந்தது பக்தியோகம். ஞானமார்க்கத்தின் முடிவில் அடையத்தகுந்தது ஞானயோகம். இவ்விதமாக மார்க்கங்களும் யோகங்களும் மூன்றாகவிருந்தாலும், எல்லாவற்றிற்கும் முடிவு ஒன்றுதான். எந்த மார்க்கத்தில் நடந்தாலும் முடிவில் ஈசுவர சாநித்தியத்தை அடைவதே அதன் பயனாகும். ஒருவன் கருமமார்க்கத்தில் நடந்தால் கடைசியில் கருமயோகத்தினால் அவன் பரிபூரணனாவான். அப்போது பக்தி ஞானங்கள் அவனிடம் வெளிப்பட்டு ஒளிரும். அவன் பக்திமார்க்கத்தில் நடந்தால் அவனிடம் பக்தி அதிகமாகவாக இகலோக சுகங்களில் ஆசைகுறைந்து, சர்வ காரியங்களையும் பகவானுக்கு அர்ப்பணம்செய்து, எப்போதும் பகவானது சாநித்தியத்தையே கோரி, ஜனகாதிகளைப்போல கருமங்களில் பிரவிர்த்திப்பான். மற்றும் ஞானமார்க்கத்தில் ஜீவன் நடந்தொழுகினால் நித்தியாநித்திய விவேகஞான முண்டாகிப் படிப்படியாக அழிவுள்ளவையான விஷயங்களனைத்திலும் வைராக்கியத்தை அபிவிர்த்தி செய்துகொண்டு, அவ்விஷயங்களனைத்தும் ஆத்துமாவுடன் சம்பந்தப்படாவென்பதை அறிந்து, சரீரங்களும், இந்திரியங்களும், மனோபுத்தி அகங்காரங்களும், முறையே அநாத்துமாவாக தெரிந்துகொண்டு, முடிவில் ஏகமான ஆத்தும ஸ்வரூபத்தை உணர்ந்து, ஆத்துமாவைத் தவிர வேறு பதார்த்தங்களில்லையென நிச்சயித்தால், அந்த நிலையில் உத்தமோத்தம பரமபக்தி வெளியாகாமல் தீராது. அவ்வித ஜீவன் உலகத்திற்கு நன்மைசெய்யவேண்டுமென்ற ஆசையால் கருமங்களிலும் பிரவிர்த்திப்பான். இவ்வாறு ஒவ்வொரு மார்க்கமும் வெவ்வேறாகக் காணப்படினும், முடிவில் யாவும் ஒன்றே ஆகின்றன. ஆதலின் சம்பூரணயோகி கருமமார்க்கத்தில் நடப்பவனினும் ஞானியினும், பக்தனினும் மேலானவன்.

"தவம்புரிந்தார் தன்மை யுணர்ந்தார் கருமத்
துவந்தியன்றார் தங்களிலும் யோகி—யவன்சிறந்து
மிக்குணர்ந்தா னென்றுணரப் பட்டான் விசயாநீ
தக்குயர்ந்த யோகமே சார்"

கீ. வெ. VI. 42.

13-வது அத்தியாயம்.

கருமயோகம்.

ஜீவனிடம் பீஜரூபமாக விருக்கும் ஆத்ம சக்திகளை வெளிப்படுத்துவதே இந்த மார்க்கத்தின் நோக்கம். பிரபஞ்சத்திலுள்ள மதமனைத்திலும் விதிக்கப்பட்டுள்ள கருமங்களும், ஸாமானியமாக உலகிற் செய்யப்படும் லௌகிக காரியங்களும், அந்த சக்திகளை வெளிப்படுத்துவதற்குச் சாதனமாக உத்தேசிக்கப்பட்டவை. முதலில் தமோகுணத்திற் குட்பட்டிருக்கும் ஜீவனது தமோ குணத்தைப்போக்கி, அவனை ரஜோகுணமுடையவனாகச்செய்து, பிறகு சத்துவகுணம் பொருந்தியவனாகச் செய்வதற்கு இவ்வித கருமங்கள் சாஸ்திரங்களில் தத்துவ ஞானிகளான மகாத்துமாக்கள் விதித்துள்ளாரென்று பூர்வ அத்தியாயத்தில் விரித்தோமல்லவா? ஆதியில் அதிகமான அக்ஞானத்தில் மூழ்கி, தமோகுணத்தை பிரதானமாகக்கொண்ட ஜீவர்களுக்கு, தம்மைக்காட்டிலும், உத்தமமானவருக்கு உட்பட்டு நடப்பதும், அவர்களுக்குத் தொண்டுசெய்வதும் தவிர வேறு கருமங்கள் எதுவும் விதிக்கப்படவில்லை. அவரினும் சிரேஷ்டரான ஜீவர்களுக்கு நானுவித கருமங்கள் விதிக்கப்பட்டுள்ளன. ஜீவனது பரிபக்குவ நிலையை அனுசரித்து முன்னிலும் மேலான நிலைக்குப் போகத்தகும் தருமங்களைப்பற்றி முன்கூறினேம். இப்போது மதங்களில் விதிக்கப்பட்டிரும் தருமங்களைப்பற்றி விசாரிப்போம்.

விதிக்கப்பட்ட தருமங்களும், வருணாசிரம தருமங்களும், சரீரத்தை தரிப்பதற்குச்சாதனங்களான தொழில்களும், பூர்வ அத்தியாயத்தில் குறிக்கப்பட்டபடி, பீஜரூபங்களான ஆத்மசக்திகளை வெளிப்படுத்துவதற்கும், ஜீவனது ஸ்தூல, சூக்ஷ்ம சரீரங்களின் மாசுக்களைப் போக்கடித்து, அவைகளைப் பரிசுத்தமாகச்செய்வதற்கும் ஏற்றவை. நித்திய, நைமித்திக யக்ஞங்கள், தானங்கள் முதலியவை ஜீவனைப் பலஹிதமான கடன்

களிலிருந்து விடுவிக்கக்கூடியவை. வருணாசிரம தரும விஷயங்களைப்பற்றி முன் அத்தியாயத்தில் கூறினோம். மேற்கூறிய சம்ஸ்காரங்களைக்குறித்தும், யக்ஞத்தைக் குறித்தும் இவ்வத்தியாயத்தில் விசாரிப்போம்.

ஜீவனுடைய சரீரத்திலிருக்கும் மாசுக்களைப்போக்கி, அதைப் பரிசுத்தமாகச்செய்வதின்பொருட்டு எல்லாமதஸ்தர்களும், அநேக சம்ஸ்காரங்களை விதித்துள்ளாரல்லவா? ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு பேரால் அழைக்கப்பட்டாலும், மதசம்பந்தமான கிரியைகளெல்லாம் அந்த உத்தேசத்தைத் தான் நிறைவேற்றுகின்றன. இந்த சம்ஸ்காரங்கள் ஜீவனது ஒவ்வொரு ஜன்மத்திலும் ஆதிமுதல் அந்தம்வரை காலானுசாரமாகச் செய்யும்படி விதிக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து, கிரகிக்கத்தகுந்த முக்கியாம்சங்கள் சிலவுள:—

(1) ஜீவாத்துமா சரீரத்தைபடைந்து, அதன்மூலமாக பூராதிலோகங்களுடனும் அந்த லோகவாசிகளுடனும், சம்பந்தத்தை அடைந்திருக்கிறான். ஒவ்வொரு சரீரத்தின்மூலமாக ஒவ்வொரு லோகத்தோடு சம்பந்தமடைந்து இருப்பான். ஒவ்வொருசரீரமும் ஒவ்வொருலோகதத்துவத்தால் செய்யப்பட்டு அந்த லோகானுபவத்திற்கு சாதனமாகின்றது.

(2)லோகத்தில் எல்லாபிரகிருதி சமுதாயமும் எப்போதும் அசைந்துகொண்டேயிருக்கும். இதை பிரகிருதி சாஸ்திரவல்லவர்கள் பரிசோதித்து ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதுபோலவே ஜீவனது சரீரத்திலுள்ளபிரகிருதி சமுதாயமும், ஸ்வபாவமாக அசைவுடையதாகவேயிருக்கும். அதனால் அதைத்தரிக்கும் ஜீவாத்துமாவிடமும், மனம்வாக்குகாயங்களால்செய்யப்படும், கருமத்தினால் சலனமுண்டாகி, அந்த சரீரத்திலும் அதேமாதிரி சலனம் எற்படும். மற்றும் அந்தந்த லோகத்திலுள்ள இதர சரீரங்கள் முதலாகிய பிரகிருதி சமுதாயங்களில் ஏதேனும் அசைவுண்டாயின் அதுவும் அந்தந்த லோகத்தில் அந்தந்த ஜீவனுடைய சரீரத்தில் சலனத்தை உண்டாக்கும். இந்த சலனத்தால் அந்த ஜீவனது சரீரத்திலிருந்த பிரகிருதிசமுதா

யம் வெருண்டு, பிறபிரகிருதி சமுதாயத்துடன் சேர்ந்து சரீரம் எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கும். ஜீவனுடைய சரீரங்களில் ஒவ்வொரு லோகத்திலிருந்து வரும் பாஹ்யஸ்பர்சத்தால் ஏற்படும் சலனத்தால், அந்தந்த சரீரத்திலும் சலனமேற்பட்டு, அந்தந்த லோகஞானம் உண்டாவதற்கு வழி உண்டாகும். ஞானம் அபிவிருத்தியாகவாக ஜீவனது ஞானானுபவத்தால் உள்ளே விசாரமுண்டாகி, தான்செய்யும் கருமங்களின் மூலம் அந்தந்த சரீரத்தின் சலனத்தால் ஞானம் விருத்தியாகும். இவ்வாறு ஜீவன் எப்போதும், செய்யும் கருமங்களினாலும் பாஹ்யஸ்பர்சத்தாலும் ஜீவனது சரீரத்தில் எப்போதும் சலனமுண்டாகி எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கும். ஞானம் விருத்தியடைய அடைய இந்த மாறுபாடு அதிகமாகவிருக்கும்.

(3) ஒவ்வொரு லோகசம்பந்தமான சரீரத்தை ஜீவாத்மா கிரமமாக பரிசுத்தமாக்கிக்கொண்டு அதையே ஞானசாதனமாகவுஞ் செய்துகொள்ளும். எப்போதும் ஜீவாத்மா தனதுசரீரங்களை உட்படுத்திக்கொண்டு தன்னிஷ்டம்போல் சலிக்கும்படிச் செய்யமுயன்றாலும், சரீரம் முன்செய்த கர்மங்களின் வாசனையால் உட்படாமல் வேறுவிதமாகச்சலிக்கும். அதனால்ஜீவன் உத்தமகதியை அடைவதற்குச்செய்யும் பிரயத்தனங்கள் பலன்களை அடையாமற் போவதும் உண்டு. ஆயினும் ஏதேனுமுபாயத்தால் தேகங்களை நல்வழிகளிற்ச் சலிக்கும்படி செய்யக்கூடுமாயின், ஜீவன் உத்தமகதியைக்கோரிச்செய்யும் பிரயத்தனங்கள் கைகூடும்.

சரீரங்களின் துஷ்டசலனங்களைப் போக்கி நல்விருத்திகளுக்கு ஏற்றசலனங்களை உண்டாக்குவதில் மந்திரம் முதலியவை மிகவுமனுகூலமானவை. மந்திரங்களை உச்சரிப்பதால் ஜீவனது ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்கள் ஒன்றிற்கொன்று விரோதமில்லாமல்சலித்து, தம்மிடமுள்ள மாசுகளை படிப்படியாக போக்கிக்கொள்ளும். ஜீவன் நல்ல மார்க்கத்தில் நடப்பதற்கு முனைந்தபோது, அவனது ஸ்தூலசூக்ஷ்ம சரீரங்கள் அவ்வித நற்காரியங்களுக்கு தடையாகவிருந்தால் தத்துவ ஞானியான

குருஉபதேசித்த மந்திரத்தை உச்சரிக்கவேண்டும். அப்போது தேகங்களிலுள்ள இஷ்டம்போல் நடக்குமெண்ணம் நீங்கிவிடும். தேகங்களும் ஜீவனுக்கு வசப்பட்டு அனுகூலமுள்ளனவாகும். அதனால்தான் சம்ஸ்காரமெல்லாவற்றிலும் மந்திரங்கள் உபயோகப்படுகின்றன. மற்றும்சில யோகமுத்திரைகளில் சில பதார்த்தங்கள்(outerobjecr) உபயோகப்படுகின்றன. இவ்வாறு மந்திரங்களை உச்சரிப்பதனுலும், முத்திரைகளை உபயோகிப்பதாலும், பரிசுத்த பதார்த்தங்களைஉபயோகிப்பதாலும், ஜீவனுடைய ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களிலுள்ள மாசுக்கள் அடியோடுநசித்து, அத்தேகங்களும் பரிசுத்தமாகின்றன.

இனி மந்திரமென்றுல்என்ன? அதை உச்சரிப்பதால், சரீரத்திலுள்ள மாசுக்கள் எப்படி நசிக்கும் என்பதை விளக்குவோம். உலகத்தில் ஒன்றை உச்சரிப்பதாலுண்டாகும் தொனி, சாமானியமாககட்புலனுகாத பிரபஞ்சத்திலும், சிலவேளைகளில் கட்புலனுகும் ஸ்தூல பிரபஞ்சத்திலும் ஒருவித ரூபமடையும். நானுவித சப்தங்கள் நானுவித ரூபங்களை உற்பத்திசெய்வதால், அவற்றுள் சில நல்ல குணமுடையவையாயும், மற்றும் சில தீக்குணமுடையவையாயும் இருக்கும்; இதன்றி அந்தரூபங்கள் ஒவ்வொன்றும் ஒருவருணத்தைக்கொள்ளும்.

சூக்ஷ்மலோகங்களில், அந்தந்த லோகவாசிகளாகிய தேவகோடிகளிருக்கிறுர்களல்லவா? ஒவ்வொருலோகத்திலும் தேவதைகள் நானுவித வருணங்களை யுடையவராக இருக்கிறுர்கள். சிலதேவதைகள், ரத்தவருண முடையவரெனவும், சிலர் பொன்னிறமுடையவரெனவும், மற்றும்சிலர் நீலவருணமுடையவரெனவும், இவ்விதமாக தேவர்கள் அநேகவருணங்களை உடையவரென கிரந்தங்களால் தெரியவருகின்றது.

உச்சரிக்கப்படும்சப்தத்திற்குத் தகுந்தவாறு வருணமும் அதற்கேற்றரூபமும் சூக்ஷ்ம பிரபஞ்சத்தில் உண்டாகுமென்று முன்னமேகூறப்பட்டது. அந்தரூபம் தனக்கு அனுரூபமான வருணமுள்ள ஒருதேவதையை இழுத்துக் கொள்ளும். அந்த

தேவதையை அந்தரூபத்தில் ப்ரவேசித்து அந்தசப்தத்தை உச்சரிக்கும் புருஷனோடு சம்மந்தமடையும்.

ஸூக்ஷ்ம திருஷ்டியுள்ள தத்துவ ஞானிகள் பலவிதமான சப்தங்களை நன்ருய்ப்பரீக்ஷித்து, சப்தங்களின் சேர்க்கையாலுண்டாகும் ரூபங்களையும் அவைகளின் வருணங்களையும் ஆராய்ந்து உபாசகனுக்கு அனுகூலமான வருணத்தையும், ரூபத்தையும் உற்பத்தி செய்யத் தகுந்தவையும் அவைகளுக்கு அனுரூபமான தேவதைகளை இழுத்துக்கொள்ளத் தகுந்தவையுமான சப்தங்களைச் சேரும்படிசெய்து மந்திரங்களை அமைத்துள்ளார். அதனுல், ஸூக்ஷ்ம லோகவாசியாகும் ஒருதேவதைக்கு சரீரமாகத்தகுதியுடையதாய், அதற்கனு ரூபமான வருணரூபங்களை உற்பத்திசெய்ய எண்ணி, தத்துவஞானிகளாகிய மகரிஷிகளால்கோர்க்கப்பட்ட அக்ஷரசமுதாயமேமந்திரமெனப்படும். மந்திரம் மற்றசப்த ஜாலங்களைப்போல அர்த்தத்தை மாத்திரம் நோக்கி அமைக்கப் பட்டதல்ல. எழுத்துக்களைக்குறைக்காமலும், அவற்றின் வாசை தப்பாமலும், அவற்றிற்கு விதிக்கப்பட்ட ஸ்வரம்கெடாமலும், மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். இல்லாவிடில் மந்திரத்தின் தேவதையை இழுக்கும்சக்தி அதற்குஇராது, அதனுல் இச்சித்தபலனுங் கிடைக்காது.

ஜ௦ஶ்ராஹீ ந ஸ்வஸ்திதாவணூதொவா
இஷ்ராஹுயாக்ஷோ ந தஷ்யஷூஜாஹ।
ஸவாஜ்வஜெரா யஜஜா ந௦ஹி நஸ்தி
யமெ௦ஜூ௱த்ரூ ஸ்வஸ்திதா வஶாயாஸ॥

மந்திரம் உச்சரிக்கப்படும்போதெல்லாம், ஸூக்ஷ்ம லோகத்தில் ரூபம் உற்பத்தியாகும். அந்த ரூபத்திலிருந்து மேன்மையுண்டாகுமா? அல்லது தாழ்மை உண்டாகுமா? அது நன்மையைத்தரும் தேவதையை இழுத்துக்கொள்ளுமா? இல்லாவிடில் தீமையை விளைவிக்கும் பிசாசங்களை இழுத்துக்கொள்ளுமா என்பவையெல்லாம் மந்திரத்தின் அட்சர, பத, ஸ்வரகிரமங்களை யனுசரித்திருக்கும். மற்றும், மந்திரம் உச்சரிப்பவனது பரிசுத்தம், பக்தி, ஞானம், சித்தத்தின் ஒருநிலை முதலியவை

களை யனுசரித்து, இச்சித்த பலனைக்கொடுக்க வல்லதாகும். அதனால் மந்திர ஜபம் செய்யும்போது, பரிசுத்தமும், பக்தி ஞானங்களும், ஒருநிலையான மனமும் இல்லாவிடில், மந்திர சித்தி அடையமுடியாது.

மந்திரத்தை உச்சரித்தால் சூக்ஷ்ம சரீரத்தில் நல்ல சலனமுண்டாகும். அந்த மந்திரத்தை மறுபடியும் மறுபடியும் உச்சரிப்பதால் தேகத்தில் நல்ல சலனம் அதிகமாகி, சித்தத்தை ஒருநிலைப்படுத்துவது எளிதாகும். மந்திரத்தை உச்சரிப்பவர்க்கு ஏற்படுவதுபோல், சிரத்தையுடன் கேட்பவர்க்கும் மனவமைதி ஏற்படும்.

மந்திரத்தால் அழைக்கப்பட்ட தேவதையின் பெயரை உச்சரித்த மாத்திரத்தில், அந்த தேவதையின் சரீர சுபாவத்திற்கு அனுகுணமான சலனம் அந்த மந்திரத்தை உச்சரிப்பவன் கேட்பவன் இருவருடைய தேகத்திலும் உற்பத்தியாகும். மந்திரத்தைப் பலமுறை உச்சரிப்பதினால் அந்தச்சலனம் பலப்பட்டு ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களில் சமரச பாவத்தை அதிகப்படுத்தும். அந்த தேவதையின் தேஜஸ் சக்தியும் ஜெபம்செய்பவனது சரீரத்திற் பிரவேசித்து, அவனைப் பரிசுத்தப்படுத்தும். இவ்வாறு மந்திர ஜெபம்செய்யும் காலத்தில், அவனது சரீரங்கள் மந்திரத்தின் அதிதேவதையின் தேஜஸால் நிறைந்துள்ளதால், பூதங்களாலுண்டாகும் கஷ்டங்கள் அவனை அணுகா.

மந்திரத்தை உச்சரிக்கும்போது மந்திராதி தேவதையின் சரீரத்தில் எழும் சுபாவீக சலனத்திற்கு அனுரூபமான சலனம் அதை உச்சரிப்பவனது சரீரத்தை யடைவதால், அந்த தீக்ஷண்யமான சலனத்தைப் பொறுக்கமுடியாத பரிசுத்தமற்ற பிரகிருதி சமுதாயம் அவனது சரீரத்திலிருப்பின், சரீரம் அந்த சலனத்தைப் பொறுக்கமுடியாமல் துன்பப்படும். ஒவ்வோர் சமயம் தேகம் நசித்தாலும் நசிக்கும். அதனால் தீய சுபாவமுள்ளவர்கள் விசேஷ தேஜஸ் உள்ள பெரிய மந்திரத்தை உச்சரித்தாலும் கேட்டாலும் அதை ஜெபம் செய்பவர்

சமீபத்தில் இருந்தாலும் அவர்களுக்குப் பெரிய தீங்கு நேரிடும். அவ்வாறின்றி, நற்குணம் நிரம்பியவராய்த் தமது உடலில் பரிசுத்தமான பிரகிருதி சமுதாயம் அற்பமாகவு மிருந்தால், மந்திர உச்சாரணத்தால் பரிசுத்தமான பாகம் தீவிரமாக அசைவுற்று, பரிசுத்தமற்ற பாகத்தின் பிரகிருதி சமுதாயத்தைப் படிப்படியாய் நீக்கி, வெளியே தள்ளிவிடும். அதற்குப் பிரதியாக பரிசுத்த அணுக்கள் இழுக்கப்பட்டுச் சேர்க்கப்படும்.

இவ்வாறு பரிசுத்த மந்திரங்களைப் பலமுறை உச்சரிப்பதாலும், கேட்பதாலும், ஸ்தூல சூக்ஷ்ம தேகங்கள் படிப்படியாய் பரிசுத்தமாகும். மற்றும், தீயசுபாவ மில்லாதபோயினும், ஞானுபிவிருத்தி குறைவாயுள்ள சாமானிய ஜீவனது தேகங்களில் மாசுள்ள பிரகிருதி சமுதாயம் மிகுதியாக உள்ளதால் துர்சுபாவ முள்ளவர்களுக்கு விளைப்பதுபோல இவர்களுக்கும் மந்திரங்களை உச்சரிப்பதும் கேட்பதும் தீங்கையே விளைவிக்கும். இதன்றி பிரபஞ்சத்திலுள்ள பதார்த்தங்களெல்லாம் சுபாவமான தேஜஸ் ஒவ்வொன்றை உடையனவென்றும், அந்த தேஜோகுணத்தை அனுசரித்து சாத்விக ராஜஸ தாமஸங்களென்று அவை வகுக்கப்பட்டுள்ளனவென்றும் முன் அத்தியாயத்தில் கூறப்பட்டன. அந்த வஸ்துக்களை உபயோகிப்பதால், அவற்றுடன் சம்பந்தப்படும் பிறவஸ்துக்களின் தேஜஸும் மாறும். இதைநோக்கியே, எல்லா வைதிக கர்மங்களிலும் தேசங்களைப் பரிசுத்தப்படுத்தும் பதார்த்தங்களை உபயோகிக்க வேண்டுமென்று தத்துவ ஞானிகளாகிய மகாத்துமாக்கள் விதித்துள்ளார்கள். ஆதலின், ஜீவனது தேக மணத்தையும் பரிசுத்தம்செய்து, ஜீவனையும் நற்கதி அடையச்செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள எல்லாக் கருமங்களிலும் மந்திரங்களையும், யந்திரங்களையும், பரிசுத்தமான சில பதார்த்தங்களையும் உபயோகிக்கும்படி எல்லாமத கிரந்தங்களிலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலே குறிக்கப்பட்ட முக்கியாம்சங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டால், கர்மானுஷ்டானங்களிலுள்ள விதிவிலக்குகளின் உண்மைப்பொருள் நமக்கு வெளியாகும். அப்போது, எவர் மந்திரத்தை உச்சரிப்பதற்குத் தகுந்தவர், எவர் தகுதி

யற்றவர், எவரெதிரில் அதை உச்சரிக்கலாம், எவரெதிரில் அது கூடாது; எந்தெந்த பதார்த்தங்கள் ஹோமத்திற்கும் தானத்திற்கும் தகுந்தவை? இவைமுதலாகிய விதிவிலக்குகளெல்லாம், பிரயோஜனமுள்ளனவாகக் காணப்படும். இவ்விஷயங்களை அறியாவிடில், எல்லா மதங்களிலும் விதிக்கப்பட்ட நானாவித கருமங்களும் பயனற்றவையாகக் காணப்படும். எல்லா மதத்திலும் விதிக்கப்பட்ட விதிகளெல்லாம், ஜீவனது தேகத்திலுள்ள மாசுகளைத் தொலைத்து, அதைப் பரிசுத்தப்படுத்தி, ஜீவனிடம் பீஜரூபமாக விருக்கும் ஆத்மசக்தி யனைத்தையும் வெளிப்படுத்துவதற்கும், அதில் ஏற்படும் இடையூறுகளைத் தொலைப்பதற்கும் ஏற்பட்டவை.

மதசம்பந்தமான காரியங்களில் நீர், தான்யங்கள், புஷ்பங்கள் முதலாகிய பதார்த்தங்கள் உபயோகிக்கப் படுகின்றனவல்லவா? மந்திரங்கள் உச்சரிக்கப் படும்போதுண்டாகும் திவ்வியமும் தேஜோவந்தமுமான சலனம் உச்சரிப்பவனது சரீரத்தில் உண்டாகி, அவனது தேகங்களைப் பரிசுத்தம் செய்யும். மற்றும், மந்திரம் உச்சரிக்கும்போது, மந்திர சக்தியும், மந்திராதி தேவதையின் தேஜஸும், ஜலத்திலாவது பிற வஸ்துக்களிலாவது புகவேண்டுமென்று திடமாக சங்கற்பித்தால், அந்த சக்தி ஜலத்தில் பிரவேசித்து, அந்த ஜலத்தை பரிசுத்த தேஜஸ் உடையதாகச்செய்யும். இன்னும், கிரியைகளில் சில யந்திரங்களை உபயோகிப்பது முண்டு. அதாவது, சில சில சக்கிரங்களை அமைத்து, அவைகளில் சில பீஜாக்ஷரங்களையும், பஞ்சதள, அஷ்டதள பத்மங்கள் முதலாகிய யந்தரங்களை வரைவதும், கோலம்போடுவதும் சகஜமல்லவா? இவையனைத்தும் சக்தியுள்ள யந்திரங்கள். மந்திரங்களை யுச்சரித்து, அவ்வித யந்திரங்களை வரைந்தாலும், அந்த யந்திரங்களில் மந்திர அதிதேவதையை ஆவாகனம் செய்தாலும், (அதாவது அந்த தேவதையின் சக்தி அந்த யந்திரத்தில் நிறைந்து அதை தேஜோவந்தமாகச் செய்யவேண்டுமென்று ஒருநிலையான மனதுடன் சங்கற்பித்தாலும்) அந்த மந்திர அதிதேவதையின் திவ்விய தேஜஸ் அந்த யந்திரத்தில் பிரவேசித்து, அதை வீரியமுள்ளதாகச்

செய்து, அந்த யந்திரத்தைத் தரிப்பவனுடைய சரீரத்திலுள்ள பரிசுத்தமற்ற சலனத்தைப்போக்கிப் பரிசுத்த தேஜஸை அதில் நிறைத்து, அச்சரீரத்திலுள்ள மாசுகளை நீக்கிப் பரிசுத்தப்படுத்தும். சரீரத்தில் ரோகங்கள் இருந்தால், அவை நீங்கும். பிசாசங்களுடைய பாதையிருந்தால், அதுவும் விட்டுப்போகும். தேகம் பரிசுத்தமாகவாக அந்தக் காணமும் பரிசுத்தமாகி, சாந்தமடைந்து, ஒருநிலைப்பட்டு ஒளிரும். ஜலம், அரிசி, வடித்த அன்னம், பழங்கள், முதலியவைகளை அபிமந்திரித்தால், அம்மந்திரத்தினுடைய தேஜஸும் அம்மந்திராதி தேவதையின் திவ்விய தேஜஸும் அந்த பதார்த்தங்களில், பிரவேசித்து, அவைகளைப் பரிசுத்தப்படுத்தும். அப்போது அந்த ஜலத்தை பிற பதார்த்தங்களின்மேல் தெளித்தால், அவைகளிலுள்ள துஷ்ட சலனங்கள் குறைந்து, அவை பரிசுத்தமடையும். இவ்வாறு, அபிமந்திரிக்கப்பட்ட பதார்த்தங்களைப் புசித்தாலும், ஜலத்தைக் குடித்தாலும், மனிதர் பரிசுத்தமடைவார்கள்.

இதனால், கிரியைகளிலெல்லாம் ஜலத்தை அபிமந்திரிப்பதும், அந்த ஜலத்தினால் பரிசுத்தமான பதார்த்தங்களை ஹோமம் முதலிய காரியங்களுக்கு உபயோகிப்பதும், ஆகுதிசெய்து மீந்த சேஷத்தை தேவதாப்பிரசாதமாகப் பக்தர்கள் புசிப்பதும் நலமென விதிக்கப்பட்டுள்ளன. கிரகஸ்தர்கள் ஸ்நானம் செய்யும்போது ஜலத்தை அபிமந்திரித்து அந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யவேண்டும். பகவானை தியானஞ்செய்து, அபிமந்திரித்த ஜலத்தால் பரிசுத்தமடைந்து கடவுளுக்கு நிவேதனஞ்செய்து அன்னாதிகளைப் புசிக்கவேண்டும். இவ்வாறு, சமஸ்காரஞ் செய்யப்பட்ட அன்னம் மேத்தியமானது என்றும், அதாவது தேவதாராதனத்தினால் பரிசுத்தமானது என்றும், அமிர்தம் என்றும் கூறப்படுகிறது. அவ்வித அமிர்தத்தைப் புசிப்பவர்கள் எல்லாப் பாவங்களையும் போக்கிக்கொள்வார்களென்றும், பிரம்ம தத்துவத்தையும் அடைவார்களென்றும் சாஸ்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

"வேள்வியினின் மிக்கதனை யுண்பார் விடப்படுவ
ரூழ்வினைக ளின்றொடர்ச்சி யுண்ணின்றுங்—கேள்வியிலாத்

தன்னுடம்புக் காகச் சமைத்துண்பார் பாவத்தை
முன்னுடனே யுண்பார் முயன்று." iii Chap, 1.

"ஆங்கெச்சமிச்ச மமுதூண் விரும்பிமவ
ரோங்குபிர மத்தை யுற்றணைவர்—பாங்காக
விவ்வுலக மில்லெச்ச மில்லார்க்கு மேலாகு
மவ்வுலக மெத்தாலுண் டாம்." iv Chap 31.

இனி, சநாதன தர்மத்தில் எல்லாக் காரியங்களுக்கும் முதலிலாவது முடிவிலாவது புண்ணியாஹவாசனம் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றதல்லவா? மங்களகரமான மந்திரங்களைப் படித்து, அந்த மந்திரங்களால் சுத்தஞ்செய்யப்பட்ட ஜலத்தையும் அக்ஷதைகளையும், கிரகவஸ்து வாகனங்களின்மேல் தெளிப்பது எல்லோருக்கும் தெரிந்ததே; இந்த மந்திரங்களின் முக்கிய உத்தேசம் இடசுத்தியும், பதார்த்த சுத்தியும், கர்த்தாக்கள் போக்தாக்களின் சுத்தியும்தான். சிலர் மாத்திரம் மந்திரம் சொல்வதற்கு தகுதியுடையவரென்றும் சிலர் தகுதியற்றவரென்றும் சொல்லியிருப்பது பலருக்குப் பிரியமற்றதாகவுள்ளது. ஆயினும், அதன் காரணத்தை முன்னர்க்குறித்தோம். பரம்பரையாக அனுஷ்டிக்கப்பட்ட ஆகார நியமமும் ஆசார நியமமும் உடையவர்களாய் கொஞ்சம் பரிசுத்தமான சரீரங்களை அடைந்தவர்களே மந்திரங்களை ஓதினால் மேன்மையடைவார்களென்றும், ஆகார நடவடிக்கைகளில் கட்டுப்பாடில்லாமல், இஷ்டப்படி நடப்பவர்களுக்கு மந்திர படனம் தீதென்றும் தெரிந்து, அபார தயாசமுத்திரமான மகாத்துமாக்கள் அவர்களுக்கு அதை விலக்கினரேயன்றி வேறல்ல. அம்மகாத்துமாக்கள் தன்னயங்கருதி இவ்வாறு செய்தாரென்று எண்ணுதல் சரியல்ல. எப்போதும் பரோபகாரசிந்தை யுடையவராய் "ஆத்துமவத் ஸர்வபூதானி" (தன்னைப்போல் எல்லா பூதங்களும்) என்னும் நியமத்தை அனுசரிப்பவரிடம் தன்னயம் எவ்வாருண்டாகும்? தகுதியில்லாதவருக்கு மந்திர படனத்தினாலுண்டாகும் கேட்டைத் தெரிந்து, மந்திர படனம் அவருக்குக் கூடாதென்றாரே யொழிய எவரையேனும் நற்காரியத்தினின்றும் நீக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் அவர்கள் அவ்

விதஞ் செய்யவில்லை. மந்திரங்களுக்குப் பதிலாக பகவானது நாம மந்திரங்களையும், புராண வாக்கியங்களையும் உபயோகித்து எல்லாக் காரியங்களையும் அவர்கள் செய்யவேண்டுமென்று அம்மகான்களே விதித்துள்ளார்.

பிரபஞ்சத்திலுள்ள எல்லா மதங்களிலும், சில சம்ஸ்காரங்கள் விதிக்கப்பட்டே யுள்ளனவென்று முன்னமே கூறினோம். ஆனால் சில மதங்களில் விரிவாக அவை விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆரியர்களுக்கு முக்கியமாக சில சம்ஸ்காரங்கள் விதிக்கப்பட்டுள்ளன. முக்கியமாக கர்ப்ப சம்ஸ்காரங்கள் (அதாவது ஜீவன் பிரதி ஜன்மத்திலும் தாய்வயிற்றில் இருக்கும் போது செய்யப்படும் காரியங்கள்) அவ்வாரியரால் பெரும்பாலும் அனுசரிக்கப் படுகின்றனவேயொழிய, பிற மதஸ்தரால் அவை அத்துணை அனுசரிக்கப்படுவதில்லை.

இந்துமத கிரந்தங்களில் அநேக சம்ஸ்காரங்கள் விதிக்கப்பட்டிருப்பினும், அவைகளில் முக்கியமானவை இங்குக் கூறப்படுகின்றன.

(1) கர்ப்பாதானம்.
(2) பும் ஸவனம்.
(3) ஸ்ரீமந்தோந் நயனம்.
(4) ஜாத கர்மம்.
(5) நாம கரணம்.
(6) அன்னப் பிராசனம்.
(7) சூடா கரணம்.
(8) உப நயனம்.
(9) சமா வர்த்தனம்.
(10) விவாகம்.

இவைகளில் முதல் மூன்றும் கர்ப்பத்தை போஷிக்கும் சம்ஸ்காரங்கள். முதலாவதான கர்ப்பாதானம் ஜனிக்கப் போகும் சிசுவுக்கு முதலில் செய்யப்படும் சம்ஸ்காரம். ஸ்திரீ புருஷர்கள் காமத்திற்குள்ளாகித் தம் இஷ்டப்படி போகங்களை அனுபவிப்பது விவாகத்தின் முக்கிய உத்தேசமல்ல. கிரகஸ்தன் தன் வம்ச விருத்திக்காக ஒரு நற்புத்திரனை யடைய தேவதைகளைப் பிரார்த்தித்து, அதற்கு வேண்டிய மந்திரங்களை உச்சரித்து, காலநியமம் தவறாது, பர்வ முதலான நிஷித்த தினங்களை நீக்கிக் கர்ப்பாதானஞ் செய்கிறான். பகவானது பிரதிநிதியாகத் தன்னை எண்ணிக்கொண்டு பரிசுத்தமான மனதுடன்

பிரஜாவிருத்தியைமாத்திரம் நினைத்து இக்காரியத்தைச் செய்ய தொடங்கவேண்டுமேயல்லாது விஷயவாசைகொண்டு கிரீடிக்கக்கூடாது.

ஸவ்ருத்கொ வாஸுதெவ: ப்ராஷஸ்த்ர ப்ரா-
தந:। ஜயஂஹி ஶஶ்ரூஷுக்ருதிருக்ஷிஸ்வரு ஜகத்ஸ்:।
பஞ்சபஞ்சாத்ர த்ரிஷ்டிபம் மெஶயநம் க்ரியதெதராடி॥
ஜயஶ்சா ஜகத்ஸ்ரஷ்டா ப்ராஷெஷாஹம் ஸஹாஸிவ:। பஞ்ச
விம்ஶதி தத்வாநாம் ஸ்ருஷ்டயெ ஶயநெதயாநா। ஜதிஶஞா-
நாஹாவதாரா நநா க்ரியதெயதி। தாவாஹள பா-
ண்டகடாஹாணள நதொஷொ விஶ்ருதெதயொ:॥

பிரம்மாண்ட புராணம்.

ஜகத் சிருஷ்டிக்கு பிரகிருதி புருஷர்கள் சேருவதுபோல ஸ்திரீ புருஷர்களும் சத் பிரஜா விருத்திக்காகச் சேருகிறவர்கள். இவ்விதமான எண்ணத்துடன் மனோவிகாரமின்றி இருவரும் கூடினால், உத்தமமான ஜீவன் இழுக்கப்பட்டு, சத்புத்திரன் உற்பத்தியாவான். இதை ஒரு மேலான தர்மமாக பாவிக்கவேண்டும்.

இப்படி நடந்துகொள்ளும் ஸ்திரீ புருஷாது கர்ப்பத்திற்கு வரும் சிசுவுக்குத் தகுந்த அன்னமய பிராணமய கோசங்கள் நன்றாய் வளர்ந்துவரும். 3-ம் மாசத்தில் கர்ப்பத்திலிருக்கும் பிண்டத்தைப் பரிசுத்தப்படுத்தவும், பும்ஸத்வம் அதற்கு உண்டாகச்செய்யவும் பும்ஸவனம் என்ற சடங்கு மந்திர பூர்வமாக நடத்தப்படும். அதன்பிறகு, 6-வது மாசம் கடந்தவுடன், ஸ்ரீமந்தோந்நயனமென்ற சடங்கும் மந்திரத்துடன் நடத்தப்படும். கர்ப்பத்தைக் காக்கவும், அதற்கேற்படும் பீடையை நீக்கவும், கர்ப்பத்தில் வளரும் குழந்தைக்குப் பரிசுத்தமான தேஜஸ் உண்டாகவும், அதன் அன்னமய பிராணமய கோசங்கள் அந்யோந்ய சமரசமடைந்து பரிசுத்த சலனமடையவும் இந்தச் சடங்கு செய்யப்படும். இம்மூன்றும் கர்ப்பத்தை போஷிக்கும் சடங்குகள். குழந்தை கர்ப்பத்தில் வளர்ந்துவரும்போது, தாய் சாத்வீக ஆகாரங்களைப் புசித்து

நல்ல ஒழுக்கங்களை அனுசரித்து வரவேண்டும். பயம் கோபம் முதலியவைகளுக்கு உட்படாமலிருக்கும்படி தாயை நன்றாகப் பாதுகாக்கவேண்டும். சுற்றிலுமுள்ளவர்கள் கடினவாக்கியங்களை உச்சரியாமலும், குரூர சங்கற்பங்களை எண்ணாமலும், பயத்தை விளைவிக்கும் காரியங்களைச் செய்யாமலும் இருத்தல்வேண்டும். சுற்றிலுமுள்ளவர்களுள் முக்கியமாக அவளது கணவன் பரிசுத்தமான மனதைக் கொண்டிருத்தல்வேண்டும். இவ்வாறிருந்தால் கர்ப்பத்திலிருக்கும் குழந்தை நல்ல ஆரோக்கியமும், பரிசுத்த தேஜஸும் அடையும். இந்த முக்கிய சம்ஸ்காரங்களைவிட்ட காரணத்தால் இக்காலத்திற் பிறக்கும் குழந்தைகளிடம் ஆரோக்கியக் குறைவும் தேஜஸ் பலக்குறைவுகளும் காணப்படுகின்றன.

இதன்பிறகு செய்யப்படுவது ஜாதகர்மம். இது குழந்தை பிறந்தவுடன் செய்யப்படும். இதில் சிசுவுக்கு தீர்க்காயுசு, சுசுஷமபுத்தி, ஞானம் முதலியவை யுண்டாகும்படி பிரார்த்தித்து, மந்திரங்களைச்சொல்லி, சுவர்ண மோதிரத்தால், தயிர், தேன், நெய், இவைகளைக் கலந்து (மதுவர்க்கம்) தகப்பன் குழந்தைக்குக் கொடுப்பான். ஜாதகர்ம ஹோமம் குழந்தை பிறந்த வீட்டிற்குத் துஷ்ட கணங்களால் ஏற்படும் பீடைகளைத் தொலைத்துக் காப்பாற்றும்.

பதினோராந்தினம் செய்யப்படும் கர்மம் நாமகரணம் எனப்படும். இக்காலத்தில் ஜாதகர்மம் சரியான காலத்தில் செய்யப்படுவதில்லை. நாமகரணமும் விதிப்படி எல்லோரும் நடத்துவதில்லை. பந்துக்கள் வராமற்போவது முதலாகிய காரணங்களால் தற்காலத்தில் நாமகரணமும் செய்யாமல் காலத்தைக் கடத்துவதும் உண்டு. அப்படிக் காலம் கடத்திச்செய்யும் கிரியைகள் நற்பலனைக்கொடா. 5-வது மாதமாவது, அல்லது வருஷ முடிவுக்குள்ளாவது அன்னப்பிராசனமென்பதை நடத்தவேண்டும். இதையும் மந்திர பூர்வமாக நடத்தவேண்டும். முதலில், அன்னமும், ஔஷதிகளின் ரசமும் குழந்தை புசிக்கும்படி செய்து, 'இந்த ஔஷதி ரஸம் சிசுவுக்கு எப்போதும் பலத்தை உண்டாக்குக' என்று தேவதைகளை மந்திரத்தால்

பிரார்த்தித்துப், பின்பு மதுரமான ஆகாரத்தை (பாயசம் சர்க்கரைப்பொங்கல்) ஊட்டவேண்டும். பிராமணர்க்கு வருஷ முடிவில் அல்லது மூன்றாவது வருஷத்திலும், க்ஷத்திரியர்க்கு 5-வது வருஷத்திலும், வைசியர்க்கு 7-வது வருஷத்திலும் சூடாகரணம் (குடுமிவைத்தல்) செய்யவேண்டும். இத்தோடு காது குத்துவதும் வழக்கம். இந்த சம்ஸ்காரங்களால் குழந்தையின் தேகம் எப்போதும் ரக்ஷிக்கப்படுகிறது. மற்றும் தாய் தகப்பனிடத்திலிருந்து வரும் பாவங்கள் இந்த சம்ஸ்காரங்களால் தொலைகின்றன.

"ஏவமேனஸ்ஸமம் யாதி பீஜகர்ப ஸமுத்பவம்" (தாய் தகப்பன் மூலமாக வந்த பாவத்தை போக்கும்.)

யாஜ்ஞய வல்கிய ஸ்மிருதி.

ஜாதகருமம் முதல் காதுகுத்தும் வரையிலுள்ள கருமங்கள் இளமையில் (5 வயசுவரை) நடக்கவேண்டியவை. அதன் மேலுள்ள சம்ஸ்காரம் உபநயனம். உபநயன சம்ஸ்காரத்தால் சிசுவுக்கு(5-முதல் 16 வரை)கௌமார அவஸ்தை ஆரம்பமாகும். அப்போது அவன் விளையாட்டை ஒழித்து வித்தியாரம்பஞ் செய்வதற்கு முயல்வான். உபநயன மென்றால் பூணூல் தரித்தலும் காயத்திரி மந்திரத்தை உபதேசம் பெறுதலும் ஆகும். இவையே த்விஜத்துவத்திற்குக் காரணம். வேதத்தில் வல்ல ஆசாரியரால் காயத்திரீ மந்திரோபதேசத்தைப் பெறுவதே உண்மையான ஜன்மம். அதாவது, தாயின் கர்ப்பத்திலிருந்து அடையும் ஜன்மம் நரை மரணங்களுக் குட்பட்டது; வேதத்திற்கு வித்தாகிய ஆசாரியர் மூலம் காயத்திரீ மந்திரோபதேசத்தால் அடையப்பட்ட இந்த ஜன்மம் உண்மையானதும் மூப்பிறப்புக்கு எட்டாததுமாகும்.

காமாந்மாதா பிதாசைநம் யதுத்பாதயதோமித:।
ஸம்பூதிம் தஸ்யதாம்வித்யா த்யத்யோநாவபி ஜாயதே॥
ஆசார்யஸ்த்வஸ்யயாம்ஜாதிம்விதிவத்வேதபாரக:। உத்பாதயதிஸாவித்ர்யா ஸாஸத்யாஸா ஜராமரா॥

மனுஸ்மிருதி.

உபநயனமென்றால் மகா மேலான காயத்திரீ மந்திரோப தேசத்தின் மூலமாக, வாலிபனை ஆசாரியனது சமீபத்திற்குக் கொண்டுவருதலென்று அர்த்தம். உபநயனத்தில் வாலிபனுக்கு மந்திரத்தை உச்சரிப்பதற்கு அதிகார மேற்படுகிறது. உபநயனத்திற்கு முந்திச் செய்யப்படும் காரியங்களில் பிறர் மந்திரத்தை உச்சரித்து, பாலரது சரீரத்தைச் சுத்தஞ்செய்வார்கள். உபநயனமுதல் பாலர்கள் தாமே மந்திரத்தை உச்சரிப்பதற்கும், வேதங்களை ஓதுவதற்கும் அதிகாரத்தை அடைகிறார்கள். இதுமுதல் பாலர்கள் ஆசிரியனுக் குட்பட்டு, வித்தியாப்பியாசம் செய்து காலங் கழிக்கவேண்டும். இந்த நிலையில் பாலர்கள் பிரம்மசாரிகள் என்று அழைக்கப்படுவார்கள்; அதாவது, வேதங்களை ஓதுவதிலே கருத்துள்ளவர்கள் எனப்படுவார்கள். பிரமசாரி கோவணம், முஞ்சி, மாந்தோல், பூணூல், தண்டம் முதலியவைகளைத் தரிக்கவேண்டும். இவை ஒவ்வொன்றும் பிரமசாரியின் ஒவ்வொரு தருமத்தைப் போதிக்கின்றது. கோவணத்தைத் தரிப்பதால் இந்திரிய வியாபாரத்தில் மனது செல்லக்கூடாதென்றும்; முஞ்சியை இடுப்பில் மூன்று தரம் சுற்றுவதனால் வேதத்தின் சம்ஹிதை, பிராம்மணம், உபநிஷத்துக்கள் இவைகளை ஓதவேண்டுமென்றும்; மாந்தோலைத் தரிப்பதால் விஷயவாசைகளைவிட்டு வைராக்கியத்தைக் கொள்ளவேண்டுமென்றும் அவனுக்குப் போதிக்கப்படுகின்றன. பூணூல் மூன்று சரடாகவும் அம்மூன்றும் ஒன்றாகச்சுற்றியுமுள்ளதால், பிரம்மாண்டத்தில் மும்மூர்த்திகளும், இச்சை ஞானம் கிரியை என்ற சக்தி மூன்றும், சச்சிதானந்த லக்ஷணங்களும், சத்துவ, ரஜஸ் தமஸ் என்ற குணங்களும், மனோவாக் காயமென்ற முக்கருமங்களும் முதலாகிய மூவகையாயுள்ள அனைத்தையும் அது குறிக்கும். தண்டம், வாக்கு தண்டம், மனோதண்டம், கருமதண்டம், என்ற மூன்று தண்டங்களையும் குறிக்கும். அதாவது மனோவாக்குச் செய்கைகள் என்ற மூன்றையும் அடக்கிக்கொள்ளவேண்டும் என்று அது போதிக்கும். இவ்வாறு குரு வீட்டில் படித்து, சகல வித்தைகளிலும் தேர்ச்சிபெற்று, குரு சன்னிதானத்தில் நல்ல கோஷ்டியைச்சேர்ந்து பரிசுத்தனாகி, குருவின் கட்டளைப்படி இல்லறத்தை நடத்

தத் தகுதியுள்ளவனுகிறுன். அப்போது குருவுக்குத் தன் நன்றியறிதலுக்கு அடையாளமாக தக்ஷிணையைக் கொடுத்து, அவரிடம் விடைபெற்றுக்கொண்டு, கல்யாணம் செய்துகொள்வதற்குத் தகுதி யுடையவனுகிறுன். இதற்குமேலுள்ள சம்ஸ்காரம் விவாகம்.

விவாகமானது முதல் அவன் கிரகஸ்தனுகி வைதிக கருமங்களைச் செய்வதற்கு அதிகாரியாகிறுன். அந்தக் கருமங்கள் மூலம் அவன் தன் ருணத்திரயங்களைத் (பிதுர் தேவர் ரிஷிகளின் கடன்கள்) தீர்த்துக்கொள்கிறுன். விவாக சம்ஸ்காரமும், கிரகஸ்தன் செய்யும் எல்லாக்கருமங்களும் ஜீவனைப் பரிசுத்தம் செய்யத் தகுந்தவையாக வுள்ளன. விவாகம் ஜீவனுக்குக் கருமாதிகாரத்தைக் கொடுத்து, அவனை பரிசுத்தனுகச் செய்யும் வைதிக ஸம்ஸ்காரமேயொழிய, சிற்றின்பத்தின் பொருட்டும், விளையாட்டின் பொருட்டும் செய்யப்படும் கருமமல்ல. மணுளனும் மனைவியும் கிரகத்திற் கதிபதிகளாகி, இணைபிரியாது இல்லற தருமங்களை நடத்தவும், குரு சிஷ்யர்களைப்போல ஒரே மனதும் நட்பு முள்ளவர்களாய், பரிசுத்தர்களாகிப் பக்குவம் அடைவதற்கே விவாகம் விதிக்கப்பட்டுள்ளது. மற்றும், கிரகத்திலுள்ள தம்பதிகள் நல்ல மனதுடையவராகி, கிரகத்தை அடுத்திருக்கும் எல்லாப் பிராணிகளுக்கும் சுகத்தைக்கொடுத்துத் தன் தருமத்தைப் பரிபாலிக்கவும், புத்திரர், புத்திரிகளைப்பெற்று, அவர்களை நன்மார்க்கத்தில் புகுத்தி, மேம்பாடடையச்செய்து, வழக்கத்திற்கு விரோதமில்லாமல் தம் தருமத்தை அனுசரிக்கச்செய்யவும் வேண்டும். தம்பதிகள் இருவரும் ஞானத்தை அடைந்து, தருமவான்களாகித் தருமத்தினின்றும் சிறிதும் விலகாமல் ஒழுகிவந்தால், அவரது கர்ப்பத்தில் உத்தமமான ஜீவர்கள் பிறப்பார்கள். அவ்வாறின்றி, ஸ்திரீ புருஷர்கள் கேவலம் காமுகராகி, இந்திரிய சுகங்களையே கோரித் தருமத்தினின்றும் விலகிச்சென்றுல், அவரிடம் நல்ல பிள்ளைகள் பிறக்கமாட்டார்கள். படிப்படியாக அந்த வம்சத்தில் அஞ்ஞானிகளான ஜீவர்கள் பிறப்பதால், அதர்மம் விருத்தியாவதற்குக் காரண மேற்படுகின்றது. பிராம்மணர்

கள் கல்வியும் அறிவும் இல்லாமலிருப்பதும், க்ஷத்திரியர்கள் தேஜஸும், பலமும், துணிவும், இல்லாமலிருப்பதும், வைசிய சூத்திரர்கள் தம் தம் காரியங்களில் கருத்தில்லாதிருப்பதும் விவாக கிரியைகளின் மேலான பிரயோஜனத்தைக் கவனியாதிருத்தலினால் உண்டானவையென்று திடமாகக் கூறலாம். எல்லோரும் விவாகத்தை தரும சாதனமென்றறிந்து, கிரகஸ்ததருமங்களை சாஸ்திர விதிப்படி நடத்திவந்தால், அவர்கள் கடைத்தேறுவதுந்தவிர, ஞானவந்தர்களாயும், தேஜோவந்தர்களாயும், சக்தி வீரியமுடையவர்களாயும், சூக்ஷ்ம புத்தியுடையவர்களாயுமுள்ள ஜீவர்களுக்குத் தகுந்த சரீரங்களை உற்பத்திசெய்யத் தகுதியுடையவராகி, தேசத்திற்கும் லோகத்திற்கும் விசேஷமான மேன்மையைச்செய்ய வல்லவராவர்.

இதன் மேலுள்ள சம்ஸ்காரங்களில் முதன்மையானது மரணாந்திர கிரியை. அந்த கிரியை ஜீவனை சரீரத்திலிருந்து சுகமாக வெளியேற்றுவதற்கும், சுலபமாக அவனது பிரேதத்தன்மையைத் தொலைத்து அவனைப் பிதுர் லோகத்தவனாகச் செய்வதற்கும், காலக்கிரமத்தில் பிதுர் லோகத்தை நீக்கி சுவர்க்க லோகத்தை அவன் அடையச்செய்வதற்கும் வல்லது. இந்த விஷயம் முன்னேயே கூறப்பட்டுள்ளதால் இங்கே சுருக்கமாக எழுதப்பட்டது.

இவ்வாறு, சநாதனதர்ம சாஸ்திரத்தில் கூறப்பட்ட கர்ப்ப உற்பத்திமுதல் மரணம் வரையுள்ள நானாவித சம்ஸ்காரங்கள் ஜீவன் பிரதி ஜன்மத்திலும் பரிசுத்தமாகும்படி விதிக்கப்பட்டுள்ளன. இந்த சம்ஸ்காரங்களெல்லாம் ஜீவனது தேகங்களைப் பரிசுத்தம்செய்து, ஜீவனையும் கடைத்தேறச் செய்கின்றன.

யக்ஞங்கள்.

பிரபஞ்சத்திலுள்ள பிராணிகள் எல்லாம் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவையாவன:—

தேவர்கள், ரிஷிகள், பிதிர்க்கள், மனிதர்கள், இதரஜீவராசிகள். ஜீவன் பஞ்ச பூதங்களாலாகிய உலகத்திற் பிரவேசித்து,

அநேக ஜன்மங்களை எடுத்து, மனித ஜன்மத்தை அடைந்து சம்சாரசக்கரத்தில் உழன்று வரும் காலங்களில், இந்த 5 கணங்களுக்கும் நானாவிதமாகக் கடன்பட்டிருக்கின்றான். ஒவ்வொரு பிறப்பிலும் தனக்கு ஏற்படும் ஸ்தூல சரீரத்திற்குக் காரண பூதர்களான தந்தை, தாயார், முதலிய பெரியோர்க்கும், தான் மனித ஜன்மமடைவதற்கு முன்னிலும், அதையடைந்து பிறகும் வெகுகாலம் தனக்கு ஸ்தூல ஸூக்ஷ்ம தேகங்களை ஏற்படுத்தி, அவைகளை விருத்திசெய்துகொண்டுவரும், சோமசதர், அக்கினிஷ்வாத்தா, பர்ஹிஷது, ஹவிர்புக் முதலாகிய பிதுர் தேவதைகளுக்கும் கடன்பட்டுள்ளான். மற்றும், பிரபஞ்சஸ்திதியை வெகுவிதமாக விருத்திசெய்து, பிரஜாசௌக்கியத்தின் பொருட்டுப் பாடுபட்ட முன்னோர்களுக்கும் அவன் தன் நன்றியைச்செலுத்த வேண்டியவனாகிறான். அதாவது, உலகத்தைவசிப்பதற்குத் தகுதியுள்ளதாகச் செய்தவரும்; காடுகெடுத்து, நாடாக்கி, பட்டணங்களும் கிராமங்களும் ஏற்படுத்தி அவைகளை வாசத்திற்குத் தகுதியாகச் செய்தவரும்; வழிப்போக்கரின் உபயோகத்திற்காகப் பெருவழிகள் ஏற்படுத்தி, போக்குவரவுக்கு வேண்டிய சௌகரியங்களை உண்டுபண்ணினவரும்; கிராமங்களிலும், பெருவழிகளிலும், மனிதனுடைய சௌக்கியத்திற்காக; வாவிகளும், கிணறுகளும், சத்திரங்களு மேற்படுத்திய புண்ணியவான்களும்; வழிப்போக்கரின் களைப்பைதீர்த்து, அவர்களுக்குசுகத்தைக் கொடுப்பதற்குப் பெருவழிகளின் இருபுறமும் நிழலைத்தரும் மரங்களைவளர்த்த நல்லோரும்; புகைவண்டி, தந்தி முதலிய யந்திரங்களைநிருமித்து உபகரித்த மகான்களும். பாடசாலைகள், வைத்தியசாலைகள் தேவாலயங்கள் முதலியவைகளை ஏற்படுத்திமனிதர்க்கு நிலைத்த மேன்மைகளைச் செய்தோரும்;பலவிதமான சிற்பவித்தைகளைக்கற்பித்து, அவைகளை விருத்திசெய்து,பின்னோர் பரம்பரையாக அநேக விசித்திர காரியங்களைச்செய்வதற்குவேண்டிய சாமார்த்தியத்தை அவரிடம் உண்டாக்கிய உபகாரிகளும்; உழவு வியாபாரங்களின் அபிவிருத்தியின் பொருட்டுப் பாடுபட்டவரும்; இன்னும் இவர்களைப்போல பின்னுள்ளோர்க்கு எல்லா விதங்களிலும் இகலோக சுகங்களைத்

கொடுப்பதற்குப் பாடுப்பட்ட எல்லோருக்கும் ஒவ்வொரு மனிதனும் கடன்பட்டிருக்கிறான். இதுவே பிதிர்க்கடனெனப்படும்.

உலகங்களைப் பரிபாலித்துக் காலத்திற்குத்தகுந்தபடி, மழை, பனி, காற்று, உஷ்ணம் முதலியவைகளைக் கொடுத்துப் பயிர்களையும், பச்சிலைகளையும், மரங்களையும், இரக்ஷித்துவிருத்தி செய்து, உலகிலுள்ளோர்க்கு கர்மானுசாரமாகப் பலன்களைக் கொடுத்துப் பலவிதமாக ஜனங்களுக்கு நன்மைகளைச்செய்யும் கட்புலனாகாத தேவகணங்களுக்கும் மனிதர் தம்கடனைத்தீர்க்க வேண்டியுள்ளார்கள். இதுவே தேவ கடன்.

இன்னும், ஆதிமுதல் பாமரர்களை ஈடேற்றுவதற்கு ஸ்மிருதிகள், தர்மசாஸ்திரங்கள், புராணங்கள் முதலிய சாஸ்திர கிரந்தங்களை அளவற்ற கருணையுடன் எழுதியும் போதித்தும் மதசம்பிரதாய காரியங்கள் பரம்பரையாக நடைபெறும்படி செய்த மகரிஷிகளும், காலக்கிரமத்தில் அந்த உத்தம ஞானம் நசிக்காதிருக்கும்படி காப்பாற்றி உலகத்தோர்க்கு உபதேசித்தும், காலாந்திரத்தில் மறந்துபோன தருமங்களை மறுபடியும் நிலைநிறுத்தியும், காலானுசாரமாகக் குடிகளின் யோக்கியதைக்குத் தகுந்தபடி சநாதனதருமங்களை அவர்களுக்கு நற்போதமாகும்படி புதுவழியாக விரித்து, கிரந்தங்களை வரைந்து, உலகில் எல்லா மனிதர்க்கும் ஞானத்தைக் கொடுப்பவராகிய மகாபுருஷர்களுக்கும் நாம் கடன்பட்டிருக்கிறோம். இது ரிஷிக்கடன். இவைமூன்றும் முக்கடன்களென சுருதிகளில் கூறப்பட்டுள்ளன. முக்கடன்களைத் தீர்த்துக்கொள்வதற்கே ஜீவன் மனித ஜன்மத்தை அடைகிறானென்று சுருதிகூறும்.

எக்காலத்திலும் மனிதர்களுக்கு ஒற்றுமையில்லாமல் சுகம் சிறிதும் சித்தியாது. அதனால் ஒவ்வொருவனும் மானவ கோடிக்குத்தான் தீர்க்கவேண்டிய கடனை தீர்த்துக் கொள்பவனே ஆவன். இது மானிடர் கடன்.

இன்னும், பசு பக்ஷிகள் முதலியவைகளும் மனிதர்களுக்கு சுகத்தைக்கொடுக்கின்றன. பசுக்கள் தயிர், பால், நெய் முதலியவற்றைக் கொடுக்கின்றன. எருதுகள் முதலியவை பிரயாணங்களிலும், உழவிலும் உதவுகின்றன. இழிவான அனேக

ஜந்துக்களும் பூமியிலுள்ள அசுத்தங்களைப் போக்குகின்றன. மீன்கள் முதலிய நீர்வாழ்வன ஜலத்தைச் சுத்தப்படுத்துகின்றன. பக்ஷிகள் மரங்களிலுள்ள பழங்களைத் தின்று, அவற்றின் வித்துக்களைப் பலவிடங்களிலும் தெளித்து, மரங்களை உண்டு பண்ணுகின்றன; கேட்பதற் கினிதாய்ப் பாடுகின்றன. இவை அனைத்தும் மனிதனைக் கடன்காரனாகச் செய்கின்றன. இது பூதகடன்.

இவ்வாறு ஒவ்வொரு மனிதனையும் ஐந்துவிதக் கடன்கள் அவன் சம்சாரத்தில் புகுந்தது முதல் அவன் சந்நியாசியாகும்வரை பின்பற்றியே வரும். இந்தக் கடன்கள் தீரும்பொருட்டு ஐந்துவித யக்ஞங்கள் விதிக்கப்பட்டுள்ளன. இவையே பஞ்சமகாயக்ஞங்கள் எனப்படும். இவை நித்திய கருமங்கள். அதாவது தினந்தோறும் செய்பத்தக்கவை. அவையாவன:—

(1) பிரம்மயக்ஞம் அல்லது வேத யக்ஞம்.
(2) தேவ யக்ஞம்.
(3) பிதுர் யக்ஞம்.
(4) மனித யக்ஞம்.
(5) பூத யக்ஞம்.

𑌋𑌷𑌯𑌃 𑌪𑌿𑌤𑌰𑍋 𑌦𑍇𑌵𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌯𑌤𑌿𑌥𑌯𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌆𑌶𑌾𑌸𑌤𑍇 𑌕𑍁𑌟𑍁𑌮𑍍𑌬𑌿𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑌿𑌜𑌾𑌨𑌤𑌾 ॥
𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌨𑌾𑌰𑍍𑌚𑌯𑍇𑌤𑌰𑍍𑌷𑍀𑌨𑍍 𑌹𑍋𑌮𑍈𑌰𑍍𑌦𑍇𑌵𑌾𑌨𑍍𑌯𑌥𑌾
𑌵𑌿𑌧𑌿 । 𑌪𑌿𑌤𑍄𑌨𑍍𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑍈𑌶𑍍𑌚 𑌨𑍄𑌨𑌨𑍍𑌨𑍈𑌰𑍍𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌬𑌲𑌿-
𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 ॥

மனுஸ்மிருதி.

தாத்பரியம்:—முனிவர், பிதுர் தேவதைகள், தேவதைகள், பூதங்கள், அதிதிகள், எல்லாரும் கிரகஸ்தர்களின் க்ஷேமத்தைக் கோருபவர். ஞானிகள் தமது கடன்களைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். எவ்வாறெனில் வேதபாராயணத்தால் ரிஷிகளையும், ஹோமங்களால் தேவதைகளையும், சிரார்த்தங்களால் பிதுர்க்களையும், அன்னதானங்களால் மனிதரையும், பலிதானங்களால் பூதங்களையும் திருப்தி செய்யவேண்டும்.

பிரம்ம யக்ஞம்.

"ஸ்வாத்யாயே நார்ச்ச பேதர்ஷீன்" (வேதம் ஓதுவதால் ரிஷிகளைப் பூஜிக்கவேண்டும்.) "அத்யாபனம் பிரம்மயக்ஞ:"

(வேதம் சொல்லிவைப்பதே பிரம்மயக்ஞம்) என்ற ஸ்மிருதி வாக்கியங்களால், பிரம்ம யக்ஞம் என்றால் வேத_சாஸ்திரங்களை விதிப்படி ஓதுவதும், பிறருக்கு அவற்றை ஓதுவிப்பதுமே என்று வெளியாகின்றன. சநாதனங்களான வேதங்களால் ஏற்படும் பேருபகாரத்தை இங்கு விரிக்கவேண்டியதில்லை.

மகா புருஷர்களான ரிஷிகளும், பாமர ஜனங்கள் ஈடேறும்பொருட்டு ஸ்மிருதிகளையும், தரும சாஸ்திரங்களையும், பரதத்துவத்தைப் போதிக்கும் சூத்திரங்களையும், பாஷ்யங்களையும் ஏற்படுத்தி ஜனங்களுக்குப் பேருபகாரம் செய்துள்ளார்கள். அவர்களுக்கு நாம் பிரதி உபகாரம் செய்வது ஒன்றுமில்லை. இந்தக் கற்பம் முடியும்வரை ஜனங்களின் நன்மையைச் சோருவதைத்தவிர, அவர்களுக்கு வேறு எண்ணங்கிடையாது. அவர் போதித்த ஞானம் நசித்துப்போகாமல் நாம் அப்பியசிப்பதாலும், பிறர்க்கு அதை போதிப்பதாலும் நாம் அவர்களது கடனைத் தீர்த்துக்கொள்ளலாமே ஒழிய, வேறுவழி கிடையாது. ஆதலால், சிஷ்யனது வாசிப்பு முடிவில் விடைகொடுக்கும் சமயத்தில் "சம்பிரதாயத்தைப் பிறருக்கு உபதேசிக்கும் விஷயத்தில் அஜாக்கிரதை கூடாதெ"ன்று குரு கட்டளையிட்டு அனுப்புவது ஆதிமுதல் வழக்கமாக யிருக்கிறது

எல்லாரும் வேதங்களையும், வேத ரகஸ்யங்களைப் போதிக்கும் வேதாந்த கிரந்தங்களையும் படிப்பதும், அவைகளில் கூறப்பட்டுள்ள தருமங்களை அனுசரிப்பதும், அந்த தருமங்களைப் பிறருக்குப் போதித்து அவைகளை அவர்கள் அனுஷ்டிக்கும்படி செய்வதும், இவ்வழிகளால் சநாதன தருமங்களைக் காப்பாற்றி வருவதும் முதலான மார்க்கங்களே ஞானத்தை ஊட்டுபவராகிய மகரிஷிகளின் கடன்களைத் தீர்த்துக்கொள்ளும் மார்க்கங்கள் தினந்தோறும், மத்தியான காலத்தில் நாலு வேதங்களிலிருந்தும் ஒவ்வொரு மந்திரத்தைச் சொல்லித் தர்ப்பணம் செய்தமாத்திரத்தில் பிரம்ம யக்ஞம் பூர்த்தியாகிவிட்டதென்று எண்ணுதல் கூடாது. மற்றும், பிரம்ம யக்ஞம் என்பது அத்யயனம், (வேதம் ஓதுதல்) அத்யாபனம் (வேதம் ஓதுவித்தல்) என்பார்கள். ஆயினும், கேவலம் வேத சம்ஹிதையை மாத்திரம் படிப்பது போதாது. வேத ரகஸ்யங்களான

வேதாந்த அர்த்தங்களைப் போதிக்கும் உபநிஷத்துக்களையும், பாஷ்யங்களையும் சூத்திரங்களையும் படிக்கவேண்டு மென்பது பெரியோரது கொள்கை. இம்மாதிரி ஞானத்தைப் போதிக்கும் கிரந்தங்களைப் படிப்பதாலும், வாசித்த விஷயங்களை அப்பியசிப்பதாலும், பிறர்க்கும் அவைகளைப் போதிப்பதாலும், ஜனங்களின் ஞான விருத்தியின்பொருட்டுப் பாடுபட்ட மகரிஷிகளின் கடன்களை தீர்த்துக்கொள்ள முடியுமே ஒழிய, வேறு விதங்களால் அது ஆகாது. இதுவே பிரம்ம யக்ஞம். இதற்கு அங்கமாகச் செய்யப்படுபவை தேவரிஷி பிதுர் தர்ப்பணங்கள்.

பிதுர் யக்ஞம்.

"பிதுர் யஜ்ஞஸ்து தர்ப்பணம்" (பிதுர் யக்ஞமென்பது தர்ப்பணம் செய்கிறது.)

"பித்ரூன்ஸ்ரார்த்தேன சார்ச்சயேத்." (பிதுர்க்களை ஸ்ரார்த்தத்தால் பூஜிக்கவேண்டும்.)

"பிரஜாயாபித்ரீன்" (சத்புத்திரரை அடைவதால் பிதுர்க்களைத் திருப்திசெய்யவேண்டும்) என்ற வாக்கியங்களால் பிதுர்க்கடன்களைத் தீர்த்துக்கொள்ளும்வழிகள் விதிக்கப்பட்டுள்ளன. பிதுர் தேவதைகள், ஆதிமுதல் பிரஜாவிருத்தியின் பொருட்டும், பிரஜைகளின் க்ஷேமத்தின் பொருட்டும் பாடுபட்டு, தருமங்களை நடத்தி உலகத்தை அபிவிருத்தி செய்தார்கள். ஒவ்வொருவனும் ஜனக்கூட்டத்தின் சௌக்கியத்தின் பொருட்டுப் பாடுபட்டு தருமகாரியங்களைச் செய்யவேண்டும். தான்தொடங்கிய தருமகாரியங்களை நிறைவேற்றுவதற்கும், முற்றுப்பெறுத காரியங்களை முடிப்பதற்கும், மேன்மேல் தருமங்களை அபிவிருத்தி செய்வதற்கும் தகுந்த நன்மக்களைப் பெற்றெடுத்து, பிதுர்க்கடன்களை தீர்த்துக்கொள்ளவேண்டும். இதற்காகவே, தம்பதிகள் விவாகம்செய்துகொண்டு, தமக்கேற்பட்ட கிரகஸ்த தருமங்களை நடத்தி, பக்தி ஞானங்களை அப்பியசித்துத் தருமசொரூபிகளாகிய உத்தமமான ஜீவர்கள் தமது கர்ப்பத்தில் பிறப்பதற்குத்தகுந்த வழிகளில் தாம் நடந்துவரவேண்டும். பிள்ளைகளும் தமது முன்னோர் தொடங்கிய நற்காரியங்களை சிரத்தையோடு முடித்து, அவரது மனஎண்ணங்களைத் தீர்த்து,

அவர்களை இறந்தபிறகும் திருப்தி செய்துகொண்டு வரவேண்டும். அதற்காகப் பிள்ளைகள் அவர்களுக்கு மரணாந்திர கிரியைகளையும், மேல்லோக யாத்திரைக்குத் தகுந்த உத்தரகிரியைகளையும் செய்து, சுகமாக பிதுர்லோக பிராப்தியும், அதன் முடிவில் முறையாக ஸ்வர்க்கலோக பிராப்தியும் அவர்களுக்கு உண்டாகும்படி சிராத்தகிரியைகள் நடத்தவேண்டும். தினந்தோறும் பிதுர்க்களை உத்தேசித்து அவர்களுக்குப் பரலோக சுக பிராப்தி கிடைக்கும்படி தர்ப்பணங்களையும், நைமித்தியங்களையும் செய்யும் ஸத்புத்திரரை ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ளவேண்டும். இவ்வாறன்றி பிதுர்க்கடன் தீராது.

தேவயக்ஞம் "ஹோமைர் தேவான்யதாவிதி" (ஹோமங்களால் தேவதைகளை பூஜிக்கவேண்டும்). இல்லற தருமம் தொடங்கினதுமுதல் ஜீவன் வைதிக காரியங்களை நடத்துவதற்குத் தகுதியுள்ளவனாகிறான். விவாககாலத்தில் எடுத்த அக்கினியை வீட்டில் வளர்த்து, கிரகமேதி ஆகிறான். தினம் சர்வ தேவதைகளுக்கும் பிரதிநிதியான அக்கினி தேவனிடம் ஹோமங்களை நடத்தி தேவதைகளைத் திருப்திசெய்வான். அக்கினியில் போடப்படும் ஹோமத்திரவியம் தகிக்கப்பட்டு, சூக்ஷ்ம ரூபமாக மாறி, கட்புலனாகாத தேவதைகளுக்கு ஆகாரமாகின்றன. அதனால் அக்கினிக்கு தவமுகனென்றும் தேவர்களுக்கு 'அக்கினியை முகமாகவுடையவர்' என்றும் நாமங்கள் உள்ளன. ஹோமம் செய்யப்பட்ட திரவியத்தால் தேவதைகள் திருப்தியடைந்து, தகுந்தகாலத்தில் மழை, பனி, முதலானவைகளைக் கொடுத்துப் பயிர்களை விருத்திசெய்வர். தேவதைகளின் அநுக்கிரகம் இல்லாவிட்டால் வேளாவேளையில் போதுமான மழை முதலியன உண்டாகா. அவர்களது அநுக்கிரக மில்லாவிடில், சில காலங்களில் அதிக மழையும், வேறு சில காலங்களில் மழையின்மையும், சில வேளைகளில் அதிகக் கொடுமையான தாபமும், சில வேளைகளில் வேண்டியவளவு வெப்பமின்மையும், ஒரு சமயத்தில் புயல்காற்றும், வேறொருசமயத்தில் காற்றின்மையும் இவைமுதலான கெடுதிகள் உண்டாகின்றன. இக்காலங்களில் தேவதைகளுக்குப் பிரியமான ஹோமங்கள், யக்ஞங்கள், விதிப்படி செய்வது அரிதாதலால், உலகத்தில் பலவிதமான துன்பங்கள் காணப்படுகின்றன. தேவதைகளைத் திருப்தி செய்வ

தால் குடிகளின் க்ஷேமம் விருத்தியாகுமென்று பகவான் கீதா சாஸ்திரத்தில் சொல்லுகிறார்.

"வேள்வியுடன் மானிடரை வேதாப் படைத்துழனங்
கேள்வி யவர்க்குரைத்தான் கேண்மையுட—னூழ்வினையா
மித்தாலே துய்பய னுற்றிடுமி னுங்களுக்கிங்
கெத்தாலு மின்பளிக்கு மீது" கீ. வெ. iii 8.

"இவ்வேள்வி யானீ ரிறைஞ்சிடுமின் வானோரை
யவ்வேள்வி யாலவரு மாக்கத்தா—லெவ்வாறு
மும்மை யளிப்ப ரொருவர்க் கொருவர்நீ
ரிம்மை மறுமையுறு மிங்கு." கீ. வெ. iii 9.

"அன்னபெரு வேள்வியா லாங்கிறைஞ்சப் பட்டமரர்
மன்ன பெரியவள மற்றளிப்ப—பின்னே
யவர்தந்த போக மவர்க்களியா துண்பான்
கவர்கின்றான் கள்வனே காண்." கீ. வெ. 10.

இ. பொ. "பிரஜைகளைப் படைக்குங்காலத்தில் அவருடன் யக்ஞங்களையும் படைத்து அந்த யக்ஞங்களால் நீங்கள் விருத்தி அடைவீராக. என்று பிரம்மதேவர் ஆதியிலேயே சொல்லியிருக்கிறார். தேவதைகள் யக்ஞத்தினால் திருப்தி அடைந்து உங்களை திருப்தி செய்வார். பரஸ்பரம் திருப்தி அடைந்து மேலான க்ஷேமத்தை அடைவீராக. தேவதைகள் யக்ஞங்களினால் திருப்தி அடைந்து இஷ்டபோகங்களைக் கொடுப்பர். அவர்களினால் அடையப்பட்ட போகங்களில் ஒரு பாகமேனும் அந்த தேவதைகளுக்குக் கொடுக்காமல் எல்லாவற்றையும் புசிப்பவன் திருடனுக்கு சமானமாவான்."

இதனால் தேவதையின் அனுகூலமில்லாமல் உலகத்தில் பயிர் முதலியவை அபிவிருத்ியாகா என்பது ஏற்படுகின்றது. தேவதைகள் சகல போகங்களையும் கொடுப்பவராகையால், நித்திய நைமித்திகமான யக்ஞங்களைச் செய்து நாம் தேவதைகளின் கடனைத் தீர்க்கவேண்டும்.

கிரகஸ்தனுக்கு ஔபாசனம், வைச்வ தேவ முதலான ஹோமங்கள் நித்ய கருமங்களாக விதிக்கப்பட்டுள்ளன. இவை காம்ய கருமங்களல்ல; நமது மூன்று கடன்களையும் தீரப்பதற்கே ஏற்பட்டவை. இதல்லாமல் மற்றுஞ்சில யக்ஞங்கள் (ஜ்யோதிஷ்டோமம் முதலியவை) ஸ்ரௌத யக்ஞங்களென்று அழைக்கப்படுகின்றன. அவைகளைக்குறித்து இனி விவரிக்கப் படும்.

இவைகளைத்தவிர பகவத் கீதையில் நான்காவது அத்தியாயத்தில் கிருஷ்ணபகவான் அநேக யக்ஞங்களைக் குறித்துள்ளார். அதாவது பிராணுயாமம், பிரத்யாஹாரம், தாரணம், நேதாஹாரம், ஸ்வாத்யாயம், ஞானயக்ஞம், திரவிய யக்ஞம், தபஸ், முதலியவையெல்லாம் அவரால் சொல்லப்படுகின்றன.

"இன்னே பலவகையா லெச்சம் பிரமித்து
முன்னே பரந்த முகஞ்செய்தே—யன்னவை
தான்கருமத் தானவெனச் சார்ந்தறிந் யாகருணக்கு
வான்கருது முத்திவரு மற்று." (ப. கீ. iv. Chap. 32)

"உண்ணு வவர்சிபக மொல்லைப் பிராணனவை
திண்ணுர் யங்கவற்றிற் சேர்விப்ப—வெண்ணுர்ந்த
வெல்லாரு மெச்ச மவரறிவ ரெச்சதாற்
பொல்லா வினையொழிப்ப போரது', ப. கீ. வெ. iv. Cha 30.

"வேள்வியினின் மிக்கதனை யுண்பார் விடப்படுவ
ரூழ்வினைக ளின்னருட்சசி யுணவினிறுங்—கேள்வியிலாத்
தங்களுடம்புக் காகச் சமைத்துண்பார் பாவத்தை
முன்னுடனே யுண்பார் முபனறு." ப. கீ. வெ. iii. Chap. 11.

இவையெல்லாம் சுருதியில் கூறப்படும் யக்ஞங்கள் என்றும், அவற்றைச் செய்வதால் எல்லாப் பாவங்களினின்றும் ஜீவன் நீக்கப்படுவனென்றும் இடித்துரைக்கப்பட்டுள்ளன. இவை யெல்லாவற்றிலும் ஞானயக்ஞம் மேலானதென்று பகவான் போதித்துள்ளார். மற்ற யக்ஞங்கள் அற்பபலனைக் கொடுக்குமேயொழிய, நிலைத்துள்ளபரம புருஷார்த்தத்தைக் கொடா. இவ்விஷயம் முண்டகோபநிஷத்தில் செவ்வையாகக் கூறப்பட்டுள்ளது. அதில் அநேக யக்ஞங்களும் அவைகளின் பலன்களும் எடுத்துரைக்கப்பட்டபிறகு, அப்பலன்களெல்லாம் அற்பங்களென விவரிக்கப்பட்டுள்ளது.

𑌪𑍍𑌲𑌵𑌾 𑌹𑍍𑌯𑍇𑌤𑍇 𑌅𑌦𑍃𑌢𑌾 𑌯𑌜𑍍𑌞𑌰𑍂𑌪𑌾 𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑍋𑌕𑍍𑌤-
𑌮𑌵𑌰𑌂 𑌯𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮 ।

இந்த யக்ஞத்தினால் கிடைக்கும் பலன்கள் திடமில்லாத தெப்பக்கட்டைக்கு சமானம். அதாவது பலன் அற்பம்.

ஞானயக்ஞமென்பது சம்சார சமுத்திரத்தைத் தரிப்பதற்கு ஏற்ற திடமான நாவாய்க்குச் சமானம்: இவ்விதம் மூன்றுவித யக்ஞங்களைச் செய்வதால் தேவரிஷி பிதுரு கடன்கள் தீரும்.

மனுஷ்ய யக்ஞம்.

ஒவ்வொரு மனிதனும் மானவ கோடிக்குக் கடன்பட்டுள்ளானென முன்னர்க் கூறினோம். மனிதர்கள் பிறர் சகாயமின்றி லோகத்தில் வசிப்பதே அசாத்தியமாகவிருக்க, அவர்கள் சுகமாகவிருப்பது அசாத்தியமென்று சொல்லவும் வேண்டுமோ? இதுமட்டுமல்ல. மனிதரும் மற்ற பிராணிகளும், உலகிற்குபிதாவான ஈசுவரனிடத்திலிருந்தே வெளிப்பட்டார்களெனவும், அந்த ஈசுவரன் விராட்ரூபத்திலுள்ள அவயவங்களில் அந்யோன்ய பாவத்தையடைந்து வர்த்திப்பதுபோல மனிதரெல்லாரும் பிறர் சுகத்தின்பொருட்டுப் பாடுபட்டு, அவரவர் கடன்களைத் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்று யோக திருஷ்டியுள்ள மகான்கள் விதித்துள்ளார்கள்: "ந்ருயஞ்ஞோயதிதி பூஜனம்" (அதிதி பூஜையே மனித யஜ்ஞம்) "ந்ருகந்நைரர்ச்சயேத்" (அன்னமிடுவதால் மனிதரை பூஜை செய்க) என்ற வாக்கியங்கள் மானிட கோடிகளுக்குள்ள கடன்களைத் தீர்த்துக் கொள்ளவேண்டிய மார்க்கங்களை விதிக்கின்றன. மனுஷ்ய யஜ்ஞமென்றால் அதிதி பூஜனம். அதிதியென்றால் போஜன சமயத்தில் அன்னத்தை விரும்பிவரும் மனிதன்.

𑌇𑌷𑍍𑌟𑍋 𑌵𑌾 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌯𑍋 𑌮𑍂𑌰𑍍𑌖𑌃 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤 𑌏𑌵 𑌵𑌾 ।
𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋 𑌵𑍈𑌶𑍍𑌵𑌦𑍇𑌵𑌾𑌨𑍍𑌤𑍇 𑌸𑍋𑌤𑌿𑌥𑌿𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗-
[𑌸𑌂𑌕𑍍𑌰𑌮𑌃 ॥

(பராசரஸ்மிருதி)

தாத்பர்யம்: நண்பனுயினும், பகைவனுயினும், மூர்க்கனுயினும், பண்டிதனுயினும், வைச்வதேவத்திற்குப் பிறகுவந்தவன், ஸ்வர்க்கசுகத்தைக் கொடுக்கக்கூடியவனுவான். அன்னத்தை விரும்பிவரும் ஏழைகளெல்லோரையும் சகோதரர்களாகப் பாவித்து, அவர்களுக்கு அன்னதானம் செய்யவேண்டும்; தூரதேசத்திலிருந்து வழிநடந்து, நடைதளர்ந்து போஜன சமயத்தில்வந்து சேரும் மனிதனே முக்கியமாக பூஜிக்கத் தகுந்தவன். அவனே அதிதி. முன்னுல்வந்தவன் அதிதி ஆகான்.

ஓஞ்ராயோவ மதம்ஸ்ராஞம் வைஸ்வதேவ உபஸ்திதம்।
அதிதிஞம் விஜாநீயா ஞாதிதி: வூஷ்வாமத:॥

அவ்வித புருஷனையும், பெண்ணையும் பிரத்யக்ஷ பரமேசுவரஸ்வரூபமாக பாவிக்கவேண்டும்; அவ்வித மனிதனது குலம் கோத்தரங்களை விசாரிப்பது அவசியமன்று:—

நவ்ருவேஷ்தாத்ரவரணே நஸ்வாயஸ்ாயம் ஸ்ருதம் தயா।
ஹ்ருதயே கவுயே தேவம் ஸவதேவ மயோஹி ஸ:॥

“அஷஸ்ய க்ஷுயிதம் வாத்ரம்।” (பசித்துவருவோரெல்லாரும் அன்னதானத்திற்குப் பாத்திரராவர்) என்ற புராதனவசனம் எல்லோரும் அறிந்ததே! அறியத்தக்கதே. அவ்வாறு நமது வீடடைந்த அதிதியை முதலில் வரவேற்றுக் கால்கழுவ நீர்கொடுத்து, ஆசனத்தில் அமரச்செய்து, ஆதரவுடன் இன்மொழிகளால் அவனது க்ஷேமத்தை விசாரித்து, அன்னுபானுதிகள் கொடுத்து திருப்திசெய்து அனுப்பவேண்டும். இவ்வாறு ஒருவனைப் பூஜித்தால் மனித கோடியைப் பூஜித்துத் திருப்தி செய்வதுபோலாகும்:- அன்னபானுதிகள் கொடுக்கவேண்டுமென்று சொன்னதால், அவனுக்கு அவசியமான பொருள்களெல்லாம் கொடுக்கவேண்டுமென்பது தாத்பரியம். அன்னபானுதிகளைமட்டும் கொடுத்தாற் போதுமென்று எண்ணுதல் கூடாது. உடுக்க உடையின்றி ஒருவன் வருந்திஞல், அவனுக்கு இயன்றவளவு வஸ்திரதானம் செய்யவேண்டும். அவன் நோயால் பிடிக்கப்பட்டிருந்தால் மருந்து கொடுத்து அவனது நோயைத் தீர்த்து அனுப்பவேண்டும். இவ்விதமாக அவனது அவசியமான இஷ்டங்களைத் தீர்த்து அனுப்பவேண்டும்.

இவ்வாறு செய்யும் அதிதிபூஜை பஞ்சமகாயக்ஞங்களுள் ஒன்றாகச் சொல்லியிருப்பதுந்தவிர, அவ்வைந்திலும் இதுவே மேலானதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑍇𑌣 𑌯𑌜𑍍𑌞𑍇𑌨 𑌤𑌪𑌸𑌾 𑌤𑌥𑌾 ।
𑌨𑌾𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌗𑍃𑌹𑍀 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌯𑌥𑌾𑌚𑌾𑌤𑌿𑌥𑌿𑌪𑍂𑌜𑌨𑌾𑌤𑍍 ॥

அதிதிபூஜையில் ஜாதிபேதமும், ஆச்ரமமும் பார்ப்பது அநாவசியம். உண்மையாகப் பசியோடு வெகுதூரம் நடந்துவந்தவன் பஞ்சமனாயினும், பஞ்சமகா பாதகனாயினும் ஆதரிக்கத்தகுந்தவனென்று ஸ்மிருதிகளில் திடமாகக் கூறப்பட்டுள்ளது.

𑌪𑌾𑌪𑍋 𑌵𑌾 𑌯𑌦𑌿 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑌘𑍍𑌨𑌃 𑌪𑌿𑌤𑍃𑌘𑌾𑌤𑌕𑌃 ।
𑌵𑍈𑌶𑍍𑌵𑌦𑍇𑌵𑍇 𑌤𑍁 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌸𑍋𑌽𑌤𑌿𑌥𑌿𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗-
[𑌸𑌂𑌕𑍍𑌰𑌮𑌃 ॥

இவ்வாறு செய்யும் அதிதிபூஜை சோமயாகத்திற்கு சமானமானதென்றும், யோக்கியதை இல்லாத யாகம் செய்விப்போனைக்கொண்டு, விதிஹீனமாகவும் மந்திரஹீனமாகவும், வேண்டியவளவு அன்னதானமில்லாமலும் விதிப்படி தக்ஷிணை கொடுக்காமலும் இக்காலத்தில் செய்யப்படும் யக்ஞத்தைப் பார்க்கிலும் பஞ்சமகா யக்ஞங்களுள் முக்கியமான அதிதி பூஜையே மேலானதென்றும் ஸ்மிருதிகளில் தெளிவாக வரையப்பட்டுள்ளன.

𑌯𑌤𑍍𑌫𑌲𑌂 𑌸𑍋𑌮𑌯𑌾𑌗𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌧𑌨𑌵𑌾𑌨𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 ।
𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌪𑌞𑍍𑌚𑌮𑌹𑌾𑌯𑌜𑍍𑌞𑍈𑌰𑍍𑌦𑌰𑌿𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑌦𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ॥

இங்கு ஒரு விஷயம் முக்கியமாக ஆலோசிக்கத்தக்கது. தூரத்திலிருந்து அன்னத்தை விரும்பி வருபவன் பூஜிக்கத்தகுந்த அதிதியென ஸ்மிருதிகளில் நிரூபிக்கப்பட்டுள்ளது. இன்னும் முதலிலேயே அழைக்கப்பட்ட சத்புருஷனும் பூஜிக்கத்தகுந்தவனே.

𑌨𑍈𑌕𑌗𑍍𑌰𑌾𑌮𑍀𑌣𑌮𑌤𑌿𑌥𑌿𑌂 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌤 𑌕𑌦𑌾𑌚𑌨 ।
𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌾𑌗𑌤𑍋 𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌤𑌿𑌥𑌿𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

ஒரே கிராமத்தி லிருப்பவன் ஒருநாளும் அதிதி யாகான். தினம் வாராததால்தான் அதிதி என்று அவனுக்குப் பேர் வந்தது. முன்னால் அழைக்கப்படாமல், கிராமத்திலேயே இருந்துகொண்டு, தனக்கு தேகபலமிருந்தும் வயிற்றுப் பிழைப்புக்கு வேலைசெய்யாது வீணாக நிந்திக்கத்தக்க தொழில்களில் காலத்தைக்கடத்திச் சோம்பேறியாகி, சாப்பாட்டு வேளையில் தவறாது வந்து அதிதி பூஜையை விரும்புபவனை பூஜ்யனென்று கொண்டாடினால், ஜனங்கள் அநேகர் தர்மத்தைத் தவறவிட்டு, பூமிக்கு பாரமாவார்கள். மற்றும் யுக்தாயுக்த விசாரணையின்றித் தானஞ்செய்வதினால், இந்த தேசத்தில் பலர் தாம் கிரகஸ்தராக விருந்தும், தமது குடும்ப போஷணத்திற்கேனும் பாடுபடாம லிருக்கிறார்கள். காலக்கிரமத்தில் இவ்வாறு பலபிராம்மணர்கள் தமது அத்தியயன அத்திபர்பன கர்மங்களை விடுத்து, சமதமாதி நற்குணங்களும் பரோபகார புத்தியுமில்லாமல், இல்லற தருமங்களைவிட்டுப் பிச்சைக்குப் புகுகின்றனர். இதனால்தான் பிராம்மணர் தொழில் பிச்சை புகுதலென்று அநேகர் இப்போது எண்ணுகிறார்கள்.

பிராம்மணர் சாஸ்திரீயமான தமது தொழில்களை விட்டு யாசிப்பதும், மற்றும் சிலர் க்ஷத்திரியரெனத் தம்மைப் பாவித்துக்கொண்டு, வந்திக்கும் மாகதர்போல் பிறரைத் துதிப்பதைத்தவிர வேறு தொழிலின்றித் தம் குடும்ப போஷணத்தின் பொருட்டுப் பிறரை அடுத்திருப்பதும், சூத்திரர்க்குள் சிறந்தோர் அநேகர் பிச்சையெடுப்பதையே தம் தொழிலாக நினைப்பதும், இவை முதலான அதர்ம வியாபாரங்களின் மூலமாக இத்தேசம் கெட்ட நிலைக்கு வந்துள்ளது. இந்த விஷயத்தை தேசாபிமானிகளனைவரும் நன்றாய் ஆராய்ந்து அன்னதான முதலிய எல்லா தானங்களையும் யுக்தாயுக்த விவேகத்துடன் செய்யவேண்டும். அவ்வாறு ஆராயாது செய்த தானத்தினால் சோம்பேறித்தனம் விருத்தி ஆகும். அவரிடமுள்ள தமோகுணத்தைப்போக்கி, யாதேனும் ஒரு முயற்சியில் தலையிடும்படி செய்வதுதான் அவர்களுக்கு அநுகூலமாகும். அவர்களுக்கு வேறு உதவிபுரிவது நன்மையாகாது. அன்னோர்

க்குத் தகுந்த சகாயம் அதுதான். வயிற்றுப்பிழைப்புக்கு வேலைசெய்யத் தகுதியற்ற முடவர், பிணியோர், அநாதைகள், முதலானவர்களுக்கு ஒவ்வொருவரும் வேண்டிய சகாயஞ்செய்து, நல்ல தேசாபிமானியாகி, தயை கூர்ந்த மனத்துடன்பிறர்க்குதவிசெய்து மனிதயக்ஞங்களை நன்றாக நடத்தவேண்டும்.

பூத யக்ஞம்.

"பூதானி பலி கர்மணா." "பலிர் பூதேள" (பலியினால் பூதங்களைத் திருப்தி செய்க) என்ற வாக்கியங்கள் பூதங்களின் கடன்களைத் தீர்த்துக்கொள்ளும் வழிகளைக் காண்பிக்கின்றன. பட்சிகளும், மிருகங்களும் மனித கோடிகளுக்கு உபயோகமாக வுள்ளனவென்றும், எல்லா பூதங்களும் ஆத்ம ஸ்வரூபமேயென்றும், ஆத்மாவைத்தவிர வேறொரு பொருளை உலகில் காணமுடியாதென்றும் பலமுறை நிறுத்தப்பட்டன வல்லவா? அவ்வித பூதங்கள் அனைத்துடனும் ஐக்கிய பாவத்தை மனிதர்க்கு திடமாக உண்டாக்கி, பூதங்களை திருப்தி செய்வதின் பொருட்டு பலிகொடுத்தலை சர்வக்ஞான மகரிஷிகள் விதித்துள்ளார்கள். வடித்த அன்னத்தை வீட்டைச்சுற்றி நாற்புறமும் வைக்கவேண்டும். அது வீட்டைச்சுற்றித் திரிந்துகொண்டிருக்கும் இழி ஜனங்களுக்கும், நாய், காகம், பூச்சி, புழுக்கள் முதலிய எல்லாப் பிராணிகளுக்கும் உபயோகமாகும்:

𑌶𑍁𑌨𑌾𑌂𑌚 𑌪𑌤𑌿𑌤𑌾𑌨𑌾𑌂𑌚 𑌶𑍍𑌵𑌪𑌚𑌾𑌂 𑌪𑌾𑌪𑌰𑍋𑌗𑌿𑌣𑌾𑌮𑍍 ।
𑌵𑌾𑌯𑌸𑌾𑌨𑌾𑌂 𑌕𑍃𑌮𑍀𑌣𑌾𑌂𑌚 𑌶𑌨𑌕𑍈𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌪𑍇𑌦𑍍𑌭𑍁𑌵𑌿 ॥

மனுஸ் மிருதி.

தாத்பர்யம்:—நாய்கள், சண்டாளர், நாய் மாமிசம் புசிக்கும் இழிந்த ஜாதிகள் பூர்வ பாவத்தால், பெரு வியாதியால் தபிப்பவர், காக்கைகள், புழுக்கள் முதலியவைகளின்பொருட்டு அன்னத்தைப் பூமியின்மேல் மெதுவாக வைக்கவேண்டும். அதாவது பரிவுடனும், பக்தியுடனும், பரிசுத்தமான இடத்தில் வைக்கவேண்டும். பூமியின்மேல் வீசியெறிந்து அன்னம் மண்ணோடு கலந்து கெட்டுப்போகும்படி செய்யக்கூடாது. பக்தி சிரத்தையோடு பகவானுக்கு நிவேதனம் செய்வதுபோல இதைச் செய்யவேண்டும். எல்லா பூதங்களிடத்திலும் ஈசுவராம்சம் இருப்பதாக சாஸ்திரங்கள் போதிக்கின்றனவல்லவா?

மனுஷ்ய யக்ஞமான அதிதிபூஜை இதன் பிறகே செய்யத்தகுந்தது.

மனிதர் தமது கடன்களைத் தீர்த்துக்கொள்வதற்கு இவ்வாறு மகாயக்ஞங்கள் விதிக்கப்பட்டுள்ளன. இவை யனைத்தும்-நித்திய கருமங்கள். அதாவது ஒவ்வொருநாளும் கிரகஸ்தனை புருஷன் செய்யவேண்டிய கருமங்கள். இவற்றுள் எது குறைந்தாலும், அது பாவத்திற்குக் காரணமாகுமென்று மொழியப்பட்டுள்ளது. இந்த யக்ஞங்களை நடத்தினபிறகு மீந்த அன்னம் "யக்ஞசிஷ்டா அமிருதம்" (யக்ஞத்தில் மீந்த அமிருதம்) என்றும், "மேத்தியம்" (பரிசுத்த மாக்கப்பட்டது) என்றும் சொல்லப்படும். அன்ன மிவ்வாறு பரிசுத்த மாகாவிடில் அது அமேத்தியமென்று சொல்லத்தகும். இந்த ஆகாரம் தாமச ஆகாரமாகும்.

"காலங் கழிந்து கழிந்திரதங் துற்கெந்தித்
தேல மிகப்பழகி யெச்சிலாய்ச்—சாலப்
படைத்தமுதுக் காகாத பாவச்சோ ருகுங்
கடைக்குணத்தா னுண்ணுங் கணக்கு." கீ. வெ. xvii 10.

மறைவாக பிரபஞ்ச சக்கரத்தைத் திருப்பிக்கொண்டு எல்லா விதத்திலும் ஈசுவர ஆக்ஞையை நடத்திவரும் தேவகோடிகளுக்கும், மனித கோடிகளுக்கும், திரியக் ஜந்துக்களான பசு, பட்சிகளுக்கும், பூச்சி புழுக்கள் முதலிய எல்லா பூதங்களுக்குமுள்ள ஐக்கிய பாவத்தை, இவ்விதமாக தத்துவ ஞானிகளான மகரிஷிகள் சங்கையறப் போதித்திருக்கிறார்கள். இந்த பரஸ்பர சம்பந்தத்தை யுணர்ந்துகொண்டு, நம்மையொத்த ஜனங்களிடத்தில் அந்யோந்ய பாவமும், உத்தமான தேவதைகளிடத்தில் பக்தியும், தாழ்ந்தவரிடம் அருளும் காண்பித்து, நம் கடன்களைத் தீர்த்துக்கொண்டு, எல்லாரும் கடைத்தேறவெண்டும்.

எல்லா ஜனங்களும், அதாவது வர்ணாச்ரம விபாகத்திற்கு உட்பட்டவரும், உட்படாதவரும் இந்த தருமங்களை மனத்திற் கொள்ளவேண்டும். இந்த தருமங்கள் இந்து தேசத்திலு

ள்ள பிராம்மணருக்கு மாத்திரமே விதிக்கப்பட்டிருக்க, எல்லோரும் எவ்விதம் இவற்றை நிறைவேற்றுவதென்ற சந்தேகம் வேண்டியதில்லை. பிராம்மணர்கள் வெகுகாலமாகப் பலதலை முறையாக அனுஷ்டித்துவரும் ஆகார விஹார (நடை) நியமங்களுக்குட்பட்டுக் கூடியவரை பரிசுத்தமானதேகத்தை அடைந்திருப்பதால், அவர்களே மந்திரத்தை ஓதுவதற்கும் கேட்பதற்கும் தகுந்தவரென விதிக்கப்பட்டாலும், பிராம்மண ரல்லாதவரும், வேத மந்திரங்களின்றி "நம" என்ற மந்திரத்தால் இக்காரியங்க ளனைத்தையும் செய்வது அவசியமென்று விதிக்கப் பட்டே யுள்ளது.

ருணஸ்ய ஸங்கதிஸ்வீகாரம் ஸ்வாஸ்தாபிரூபயா |
ஸௌஹ்ருத்யம் ஜீவஹ்ருத்யம் ஸத்யம் ரோவிஹாரக்ஷணம் ||

பூதங்கள் ஒன்றற்கொன்று தீர்க்கவேண்டிய கடன்களை அங்கீகரித்து அவைகளைத் தீர்த்துக்கொள்வதும், சர்வ பூதங்களிடமும் சகோதரபாவம் உண்டாகி, அவைகளுக்கு நன்மையைக் கோருவதும், கூடியவரை நன்மையைச் செய்வதும், எவருடனும் பகையில்லாமலிருப்பதும் முக்கியமான குணங்களாகும். இவையில்லாதவர் மந்திரத்துடன் செய்யும் கருமங்களும் அற்ப பலனையேதரும். பிறப்பில் பிராம்மணனுயினும், ஆகார நியமங்களை அனுஷ்டியாதவன் மந்திரங்களை உச்சரிக்கத் தகுதியற்றவனுவன். நியமங்களைப் பூரணமாக அனுஷ்டிக்காமல், சில மந்திரங்களை ஓதி, சில கருமங்களைச் செய்ததினுல், அநேக பிராம்மணர் இந்த ஜன்மத்தில் நோயால் பிடிக்கப்பட்டும், தேஜஸ் குறைந்தும் இருக்கிறுர்கள்.

மகரிஷிகள் சூக்ஷ்மலோகத்தைப் பார்த்தவராகையாலும், அந்த லோகத்திலும் சூக்ஷ்ம சரீரங்களிலும் மந்திரத்தை உச்சரிப்பதால் ஏற்படும் பலன்களைத் தெரிந்தவராகையாலும், அளவற்ற தமது கருணையால் மந்திரங்களை உபயோகிக்கத் தகுதியுள்ளவர் இவர், தகுதியற்றவர் இவர், என்று விதித்தாரே அல்லது, வேறு காரணங்களால் அப்படி விதித்தார் என்று எண்ணி, அவரிடம் தோஷத்தைக் கற்பிக்கக்கூடாது.

மகாத்துமாக்கள் "மந்த்ர த்ரஷ்டார:" அதாவது 'மந்திரங்களைப் பார்ப்பவர்,' என்று அழைக்கப்படுவதற்கு இதுவே காரணம். மந்திர உச்சாரணத்தால் ஏற்படும் நன்மையும் தகுதியில்லாதவர் அதை உச்சரிப்பதால் ஏற்படும் தீமையும் முன்னர்க் கூறப்பட்டன. தயாசமுத்திரமான அம்மகான்களிடத்தில் தோஷத்தைக் கற்பியாமல், இந்த ஜன்மத்தில் மனத்தையும் வசப்படுத்திக்கொண்டு, அடுத்த ஜன்மத்தில் பரிசுத்தமான தேகத்தை அடைய யாவரும் முயலவேண்டும்.

பிரம்மாண்டத்திற் பிறந்த மாத்திரத்தில் மேற்காட்டியபடி ஒவ்வொரு மனிதனும் எல்லா பூதங்களுக்கும் கடனாளியாக இருக்க, தன் வயிற்றுப் பிழைப்புக்குச் செய்யும் கருமங்களில் மற்ற பூதங்களுக்குச் சிறிதேனும் மேலும் கேடு விளைக்காமல் தீராது. வீட்டைப் பெருக்கி மெழுகும்போதும், பாத்திரங்களை கழுவும்போதும், கத்தியால் இலை, காய், கரிகளை நறுக்கும்போதும், அடுப்பில் விறகை வைத்து பற்றவிடும்போதும் நெல் முதலிய தானியங்களை குற்றும்போதும், மற்றும், இவ்வித அநேக காரியங்களைச் செய்யும்போதும் பல பிராணிகளுக்குச் சேதம் விளைக்காமல் தீராது. இந்தப் பாவங்கள் எல்லாரிடமும் இருக்கும். இவை பஞ்ச சூனமென்று இந்துதரும சாஸ்திரத்திற் பெயர் பெறும்.

[illegible]।
[illegible]।

இந்த பஞ்ச சூனங்களின் பரிகாரத்தின்பொருட்டு வைச்வ தேவம் என்ற ஹோமம் கிரகஸ்தருக்கு விதிக்கப்பட்டுள்ளது. இந்த ஹோமத்தால் சர்வ பூதங்களையும் போஷித்து அபிவிருத்திசெய்யும்.தேவதைகள் திருப்தி அடைவார்கள். அவ்வாறு திருப்தி அடைவதால், அவரால் போஷிக்கப்படும் பூதங்களுக்கு அபிவிருத்தி உண்டாகும். இவ்விதமாக அற்ப ஹிம்சையால் வரும் தோஷங்கள் நீங்கும்.

இதுவும் கிரகஸ்தனுக்கு விதிக்கப்பட்ட நித்திய கருமங்களில் ஒன்று.

கிரகஸ்தனது நித்திய கருமங்கள்.

தினந்தோறும் கிரகஸ்தன் செய்யவேண்டிய கருமங்களைப்பற்றி இனி ஆராய்வோம்.

ஒவ்வொருவனும் வைகறையாமத்தில் துயிலெழுந்து, காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, ஸ்நாநம்செய்து, பகலவன் எழுவதற்குமுன்பே சந்தியாவந்தனம் செய்து முடித்து, பகவானைத் தியானஞ்செய்யவேண்டும். பிறகு காலையிற் செய்யவேண்டிய அக்கினி ஹோத்திரத்தைச் செய்து முடித்து, தேவதைகளையும், குருமார்களையும் பூஜித்துக் கொஞ்சகாலம் வேதங்களையும் வேதாங்கங்களையும் படிக்கவேண்டும். இதன்பிறகு குடும்ப போஷணத்திற்குவேண்டிய திரவியத்தைத் தேடச் செல்லவேண்டும். தாய், தந்தையர், உபாத்தியாயர், ஆசாரியர், முதலியவர்க்கும், மனைவி மக்களுக்கும், கிரகத்திற்கு வந்துகொண்டிருக்கும் பந்துமித்திரர்களுக்கும், அதிதிகள், ஆதாரமற்றவர்கள், நோயாற் பீடிக்கப்பட்டு தன்னைக் காப்பாற்ற சக்தியற்றிருக்கும் ஏழைகள் முதலியோருக்கும், மற்றும் வீட்டை அடுத்துத் திரிந்துகொண்டிருக்கும் ஜந்துக்களுக்கும், சரீர போஷணத்திற்கு வேண்டிய அளவு மாத்திரம் சம்பாதித்து, கிரகத்திற்குத் திரும்பிவந்து மாத்தியான்னிக கிரியைகளைச் செய்யவேண்டும். சந்தியாவந்தனமும் வைச்வதேவமும் செய்து, தேவரிஷி, பித்ருகணங்களைத் திருப்திசெய்து பூதபலிகொடுத்து அந்தசமயம் வந்த அதிதிகளைப் பூஜித்து அன்னமிட்டுத் திருப்திப்படுத்திப், பின்னர்த் தான் புசிக்கவேண்டும். இதன் பிறகு சிறிதுகாலம் புராண இதிகாசங்களையும், தரும சாஸ்திரங்களையும் படித்து, ஸ்வதந்திரமாகப் படிக்கக்கூடாதவருக்கு அவைகளின் பொருளைப் போதித்து, கோவிலையாவது பெரியோர் கோஷ்டியையாவது சேர்ந்து, நேசர்களுடன் கொஞ்சகாலம் கலந்து பொழுதுபோக்கி, சாயங்காலம் செய்யவேண்டிய சந்தியாவந்தன சமயம் தவறாமல் வீடடைந்து, சந்தியாவந்தனம், அக்கினி ஹோத்திரங்களைச் செய்து முடித்துப், பிறகு தான் களைப்பாறவேண்டும்.

இவ்வாறு நாளையெல்லாம் நற்காரியங்களை நடத்துவதி லும், சரீர போஷணத்திற்கு வேண்டும் கர்மங்களை உன்னிச் செய்வதிலும் கடத்தவேண்டுமேயொழிய, கெட்ட சம்பாஷ ணையிலாவது, கெட்ட செய்கைகளிலாவது, கெட்ட மனிதரின் சேர்க்கையிலாவது காலத்தைக் கழிக்கக்கூடாது.

இக்காலத்திற்குத் தகுந்தபடி மேற்கூறிய வழிகளைச் சிறிது மாற்றிக்கொண்டு, தினந்தோறும் தொழில்புரியவேண் டும். வைகறையில் துயிலெழுந்து சூர்யோதயத்திற்கு முன் சந்தியாவந்தனம், பகவத்தியானம், அவரவர் ஆசார நியமப் ப்படி செய்யவேண்டும். பின்னர்க் கொஞ்சநாழிகை நற்கிரந்தங் களைப் படித்து பிறர்க்கு அவைகளை போதிப்பதில் கழிக்க வேண்டும். பிறகு இல்லறத்தொழில்களில் சிறிது பொழுதைச் செலவிட்டு,மத்தியான கருமத்தைச் செய்துமுடித்து, புசித்து, ராஜகிய கார்யமுதலான உத்தியோகங்களுக்குப் போவதற்கு அவகாசமுள்ளது. உத்தியோக கார்யங்கள் முடிந்தபிறகு சாயு ங்கால கர்மங்களைத் தீர்த்துக்கொண்டு, சிறிதுபொழுது நல்ல நூல்களைப் படித்து, நல்ல கோஷ்டியில் காலத்தைக்கழித்து, வீட்டுவேலைகளை முடித்துப் புசித்து அற்பகாலமாயினும் பக வானை மனத்தில் நிறுத்தி தியானித்தபிறகே தூங்கவேண்டும்.

இம்மாதிரி, கிரகஸ்தன் தான் மறுதினம் செய்யவேண் டிய காரியங்களை எல்லாம் (அதாவது, சுவபகாரியங்கள், சுவாமி காரியங்கள், பாரமார்த்திக காரியங்கள், தேசமேன்மையின் பொருட்டுச் செய்யும் காரியங்கள் முதலியவை) முன்னாலேயே தீர்மானித்துக்கொண்டு அதற்குத் தகுந்த காலநியமத்தையும் ஏற்படுத்திக்கொண்டு, எந்தெந்த காரியத்திற்கு எவ்வெவ்வ ளவு காலம் வேண்டுமோ அதை நிச்சயித்து, ஒருநாளுக்கு முன் பாகவே வரையறைசெய்து, அதை அனுசரித்து, இட்டகாலத் திற்கு மேற்படாமலும் வீணில் காலத்தைக் கழிக்காமலும், கரு மங்களனைத்தையும் ஜாக்ரதையுடன் நிறைவேற்றி நாட்களைக் கழிக்கவேண்டுமேயொழிய, நீர்மேலுள்ள மிதவைபோலவும், சுழல்காற்றில் அகப்பட்ட இலவம்பஞ்சுபோலவும் பிராரப்த

பந்தனாகி வர்த்திக்கக்கூடாது. தீரனாய் புருஷப் பிரயத்தனத்தால் சந்தர்ப்பங்களை மாற்றிக்கொள்ளும்படி தனது ஆத்ம சக்தியை உபயோகித்துக்கொள்ள வேண்டும்.

மேற்கூறியவையெல்லாம் நித்திய கர்மங்களென முன்பே கூறப்பட்டன. இதல்லாமல் பாகயஜ்ஞங்கள் என்று சிலவும், சிரௌத யஜ்ஞங்களென்று சிலவும் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. பாகயஜ்ஞங்களில் முக்கியமானவை பிதிர் சிராத்தங்கள். இவை இறந்துபோன பிதுர்க்களைப் பூஜிக்கும் கர்மங்கள். இறந்தபிறகு பிரேதலோகத்திலுள்ள ஜீவனை உத்தேசித்து, அந்த ஜீவன் மேல்லோகபிராப்தி சுலபமாக அடைவதற்காகச் செய்யப்படும் கர்மங்களைக்குறித்து முன் அத்தியாயங்களில் எழுதப்பட்டது. இவை ஏகோதிஷ்ட சிராத்தமென்று கூறப்படும். இவைகளில் பிரேதமான ஒருவனே பூஜிக்கப்படுகிறான். இவற்றைச் செய்யும்போது ஆவாஹனமும், ஹோமமும் கிடையாது. விஸ்வே தேவதைகளைப் பூஜிப்பதுமில்லை. சபிண்டீகரணத்துடன் இவை முடிந்துவிடும். சபிண்டீகரண காலத்தில் பிரேத தேகத்தைத்தாண்டி ஜீவன் பிதுர்லோகத்திற்குப்போவான். சாதாரணமாக மூன்று தலைமுறைக்காலம் ஜீவன் பிதுர்லோகத்தில் இருப்பான். அதனால் ஜீவன் பிதுர்லோகத்தை அடையும் சமயம், அவனது நாலாவது தலைமுறைப் புருஷன் சுவர்க்கலோகமடையும் காலமாக இருக்கும். அப்போது நாலாவது தலைமுறைப் புருஷனுக்கு சுவர்க்கபாதேயம் (கட்டுச்சோறு) கொடுத்து, சுவர்க்கத்திற்கு அனுப்புவார்கள். அதுமுதல் அவன் பிதுர் சிராத்தங்களில் அழைக்கப்படான். சிராத்தங்களில் மூன்று தலைமுறைப் பிதுர்க்கள்மட்டும் அழைக்கப்படுவர். சிராத்தங்கள் அப்யுதய சிராத்தங்களென்றும் (க்ஷேமம் அல்லது நாந்தி சிராத்தங்கள் என்றும்) சாதாரண பிதுர் சிராத்தம் என்றும் பிரிக்கப்படும். அப்யுதய சிராத்தமென்றால், புத்திரர் புத்திரிகளுடைய விவாககாலத்திலும், உபநயனகாலத்திலும், ஜாதகர்ம நாமகரண கார்யங்களிலும் அழைக்கப்படும் நாந்தீமுகப்பிதுர்க்களை உத்தேசித்துச் செய்யப்படும் கார்யங்கள். நாந்தீமுக பிதுர்க்கள் என்றால், களிப்போடுகூடிய முகத்தை

யுடைய பிதுர்க்கள் என்பது பொருள். இவர்கள் பிதுர்லோகத்தைத்தாண்டி சுவர்க்கலோகத்தை அடைந்த பிதுர்க்கள். அதாவது, மூன்றுந் தலைமுறைக்கு முந்திய பிதுர்க்கள். சுவர்க்கலோகப்பிராப்தி அடைந்தவர்கள். அதனால் சிராத்த கிரியைகளினால் இவர்களுக்கு அவ்வளவு பலன் இல்லை. இவர்கள் சுபகாரியங்களில் அழைக்கப்படுபவர். தமது சந்ததியாரின் க்ஷேமத்தை (இகலோக விருத்தியை) அநுக்கிரகிப்பவர்.

பிதுர் சிராத்தத்தில் சமீபர்களான மூன்று தலைமுறைப் பிதுர்க்களே பூஜிக்கப்படுவர். சாமான்யமாக மூன்று தலைமுறையோர் பிதுர்லோகத்தி லிருந்துகொண்டு பூலோகத்திலிருக்கும் தம் சந்ததியாரிடம் சிராத்த ரூபமான சகாயத்தைக்கோரி திருப்தி அடைகிறார்கள். அவ்வித பிதுர்க்களை உத்தேசித்துச் செய்யப்படும் நித்ய நைமித்ய சிராத்தங்கள் அவர்களைத் திருப்திசெய்யும். இந்த சிராத்தங்களில் பிதுர்க்களை ஆவாஹனம் செய்வதும், பக்குவ அன்னத்தை அக்கினியில் ஹோமம் செய்வதும்,விஸ்வேதேவர்களை ஆவாஹனம்செய்து பூஜிப்பதும், பிராம்மணர்களுக்கு உணவளிப்பதும் முக்கிய பாகங்கள். இதில் உபசரிக்கப்படும் பிராம்மணர் பரிசுத்தம், கல்வி, ஒழுக்கமுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

பிராம்மணர்கள் வேதாத்தியயனத்தால் பரிசுத்தியடைந்து அக்கினிக்கு சமானமாக இருத்தல்வேண்டும். அக்கினியில் போடப்பட்ட ஹோமத்திரவியம், தகிக்கப்பட்டு சூக்ஷ்மரூபமாக மாறி, தேவதைகளை அடைவதுபோல, விஞ்ஞானிகளாகிய பிராம்மணரிடம் தத்தம் செய்யப்பட்ட ஹவ்ய கவ்யங்கள் பிதுர்தேவதைகளை அடைந்து, அவர்களை திருப்தி செய்யும். சாம்பலில் செய்யப்பட்ட ஹோமம் எவ்வாறு தேவதைகளை அடையாதோ, அவ்வாறே சாம்பல்போன்ற—பிராம்மணருக்கு (வேதம் ஓதாத பிராம்மணர்) தத்தம்செய்த ஹவ்யகவ்யங்கள் பிதுர்க்களை அடையா. செய்த கர்மமும் பலனைக்கொடாது; கெட்டுப்போகும்.

அத்தியயனம் செய்யாத பிராம்மணனது தேஜஸ் எரியும் புல்போல சீக்கிரமாக நசித்துப்போகும். எவரேனும் சாம்பலில்

ஹோமம் செய்வார்களா? அதுபோலவே, வேதம் ஓதாத பிராம் மணனுக்குத் தத்தம் செய்யக்கூடாது. சிராத்தத்தில் யோக் யர்களாயும் ஞானவான்களாயுமுள்ள பிராமமணர்கள் புசித்துத் திருப்தி அடைந்து, பிதுர்க்களுக்கு சாசுவதமாக பிரம்மலோக வாசம் கிடைக்கும்படி ஆசிர்வதித்தால், பிதுர்க்கள் மேன்மை அடைவார்கள். பிராம்மண போஜனத்தின் முக்கிய நோக்கம் இதுவே. இப்பலன் பூர்ணமாக வேண்டுமானால், பிராம்மணர் கள் பரிசுத்தர்களாயும், ஞானவான்களாயும், பண்டிதர்களாயும் இருத்தல்வேண்டும். அவ்வாறில்லாமல் அஞ்ஞானிகளை சிரா த்தத்தில் வரித்தால், அந்த சிராத்தங்கள் பலனைக்கொடா. சிராத்தங்களெல்லாம், பூலோகத்தை விட்டு பிரேதலோகத்தி லாவது பிதுர்லோகத்திலாவது இருக்கும் ஜீவர்களுடைய அந்த லோக சம்பந்தமான தேகங்களைப் பரிசுத்தம் செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டவை. மற்ற சம்ஸ்காரங்களில் உபயோகிக்கப் படுவதுபோல, இங்கும் மந்திரங்களும் ஹோமதிரவியங்களும் பிரயோகிக்கப்படுகின்றன.

இனி, ஸ்ரௌத யக்ஞங்கள், அவிர் யக்ஞமென்றும், சோம யக்ஞமென்றும் இரண்டுவகைப்படும். இவ்விரண்டிலும் பதினாலுவித யக்ஞங்கள் உள்ளன. இவை யனைத்திலும் மந்தி ரங்கள் விசேஷமாக உபயோகிக்கப் படுவதுடன் நெய், பால், அவிஸ், பிண்டங்கள் முதலியவைகளும் ஹோமம் செய்யப் படுகின்றன. இவையெல்லாம் அக்கினியில் எரிக்கப்பட்டு, தே வதைகளுக்கு ஆகாரமாகின்றன. தேவதைகள் திருப்தி அடை ந்து யக்ஞம் செய்வோனுக்கு இகபரசுகங்களைக் கொடுக்கின் றார்கள்.

இவ்விதம் விதிக்கப்பட்டுள்ள கர்மங்களெல்லாம் ஜீவனைப் பரிசுத்தம் செய்து, நானாவிதமான அவரது மாசுக்களைத் தொ லைத்து, அவரது கடன்களையும் தீர்க்கின்றன.

பிரமாண்டத்தில் பிரம்மாமுதல் புல் பூண்டு வரையுள்ள எல்லா பூதங்களும் ஒன்றோடொன்று திடமான சம்பந்தத் தால் கட்டப்பட்டுள்ளனவென்றும், அவர்கள் ஒருவருக்கொ

ருவர் ஒற்றுமை காட்டி சகாயம் செய்துகொள்ளாவிட்டால், ஒன்றும் ஜீவிக்க முடியாதென்றும் முதலில் போதித்து, மனிதர்கள் தமது ஜீவிதகாலமெல்லாம் பலவித யக்ஞங்களைச்செய்யவேண்டுமென்று மகரிஷிகள் விதித்திருக்கின்றார்கள். பகவான் யக்ஞ சொரூபனென்றும், நாம ரூபபேதங்களுக்கு எட்டாத பரப்பிரம்மம் பிரகிருதியுடன் சேர்ந்து நாம ரூபாத்மகமான பிரபஞ்ச ரூபமாக வெளிப்படும்போது, தன்னையே யக்ஞம்செய்து கொண்டாரென்றும் சுருதிகள் முழங்குகின்றன. புருஷசூக்தத்தில் வருணிக்கப்பட்டுள்ள யக்ஞமெல்லாம் இதுவே.

யக்ஞத்தால் பிரபஞ்சம் உற்பத்தியாகிறது. யக்ஞத்தால் அது காக்கப்படுகின்றது. ஒரு பிராணி மற்றொரு பிராணிக்கு இரையாவதை உலகில் பார்க்கிறோமல்லவா? "ஜீவோ ஜீவஸ்ய ஜீவனம்" இவ்வாறு பூதங்களெல்லாம் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டு, ஒவ்வொரு பூதமும் இதர பூதங்களின் விருத்திக்கு உபயோகப்படுகின்றது. பாஷாணாதிகள், மண் முதலிய பூமியிலுள்ள பல பதார்த்தங்கள், மரம், செடி, கொடி முதலியவைகளுக்கு உபயோகப்படும். மரம், செடி, கொடிகள் பலவித பசுபக்ஷிகளுக்கும், அவற்றில் சில மனிதர்களுக்கும் ஆகாரமாகின்றன. இவையெல்லாம் மனப்பூர்வமாகத்தம்மை த்தாமே பிறரது மேன்மையின் பொருட்டு அர்ப்பணம் செய்வதில்லை. அவைகளிலெல்லாம் மனம் என்பது இன்னும் ஏற்படவில்லை. சுபாவமாக ஒரு பிராணி மற்றொரு பிராணியைப்புசித்து ஜீவிக்கின்றது. அக்ஞான அவஸ்தையில் மனிதனும் பிரகிருதி சுபாவத்தை ஒட்டி பிற பிராணிகளைத் தம்பொருட்டு வதைக்கிறான், மனது ஏற்பட்டு, அது விகாசமடையத் தொடங்கியவுடன், ஞானம் விருத்தியாகி, மனிதனுடைய தர்மமும் மாறிக்கொண்டு வருகிறது. பிரகிருதி சம்பந்தமான சரீரங்களெல்லாம், இதர பூதங்களைப் புசிப்பதால் விருத்தியாகின்றன. ஆதலால் மனிதன் பிறபூதங்களின் விருத்தியின்பொருட்டுத் தன் சரீரத்தை உபயோகித்தாலல்லது அவன் அபிவிருத்தி அடையமாட்டான். "பரோபகாரார்த்த மிதம் சரீரம்" என்ற உலக வழக்கு இப்பொருளையே குறிக்கின்றது.

ஜீவ ஹிம்ஸை.

மேல்விவரிக்கப்பட்ட கருமங்களும் யக்ஞங்களும் ஜீவன் தனதுசுபாவங்களைப் படிப்படியாக மாற்றி, நாளடைவில் நிவிரு த்திமார்க்கத்தில் புகுவதற்குச் சாதனமாகும்படி விதிக்கப் பட்டுள்ளன.

உலகில் ஸ்திரீபுருஷர்களிடம் காணப்படும் அந்நியோந் நிய போகஇச்சைகளும், மாமிசம்முதலிய ஆகாரங்களிலுள்ள ஆசையும், மதுபானத்திலுள்ள பிரியமும் எல்லாஜந்துக்களி டமும் இயற்கையாக வுள்ளவை. இவ்விஷயத்தில் சாஸ்திரசோ தனை அவசியமில்லை. சாஸ்திரத்தில் காணப்படும் இவ்விஷய மான விதிகளெல்லாம் விவாகம், ஜ்யோதிஷ்டோமம் முதலிய கருமங்களின் மூலம் படிப்படியாய் இந்த இச்சைகளிலிருந்து ஜீவனைத் திருப்புவதின் பொருட்டே ஏற்படுத்தப்பட்டுள்ளன. எல்லாரும் விஷயவாசைகளுக்கு உட்பட்டு விஷயங்களில் அழு ந்தவேண்டுமென்பது சாஸ்திரத்தின் கருத்தன்று. விதிநிபந் தனைகளின்றி, ஸ்திரீபுருஷர்கள் தமதிஷ்டம்போலக் காமவசப் பட்டு அதில் அழுந்திக்கிடக்காம லிருக்கும்படி, விவாக நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனால், ஒருபுருஷ னுக்கும் ஸ்திரீக்கும் மாத்திரம் சம்பந்தம் ஏற்படும். இ வர்களிருவரும் தமதிஷ்டம்போல் சிற்றின்பத்தில் மூழ்கா திருப்பதற்கே காலநிபந்தனைகள் விதிக்கப்பட்டன. விஷய போகங்களிலிருந்து அவரது மனத்தைக் கூடியவரை திரு ப்புவதற்காக சாஸ்திரங்கள் ஏற்பட்டுள்ளன. ஒவ்வொருவ ரும் விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்பது இதனால் ஏற் படாது. அதுபோலவே மாமிசஆகாரத்தில் இச்சை எல்லாரு க்கும் இயற்கையாகவுண்டு. இச்சை ஏற்படும்போதெல்லாம் ஜீவஹிம்சை செய்யாதிருக்கும்படி தேவபிதுரு காரியங்களில் மாத்திரம் மாமிசஆகாரத்தை உபயோகப்படுத்தி, அவாது பிர சாதமாக யஜமான் அதைமிதமாகப் புசிக்கவேண்டுமென் பது சாஸ்திரவிதி. தேவதைகளுக்கும், பிதுர்க்களுக்கும் அந்த மாமிச ஆகாரத்தைத் தத்தஞ்செய்யாவிட்டால் அவர்கள் திரு

ப்தியடையாரென்றாவது, கருமங்கள் பயனற்றுப்போகுமெ ன்றாது சாஸ்திரம் கூறவில்லை. ஜனங்கள் மாமிசத்தில் இச்சை வைத்து ஆகாரத்தின்பொருட்டு ஜீவர்களை இஷ்டப்படி இம்சிக் கின்றனர். சிலகாரியங்களில் மாத்திரம் ஜீவனை இம்சிக்கத்தகு மென்று நியமித்து, அவ்விதஇம்சையுடன் கூடியகருமங்களைச் செய்வதில் கஷ்டமான சிலநியமங்களையும் நிந்தையற்றனவாக விதித்து, ஜீவஹிம்சைசெய்யும் மனிதர்களைப் படிப்படியாக நல்வழிப்படுத்துவதற்கே சாஸ்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இக்காலத்தில் பட்டணங்களில் ஆக்ஷேபணையின்றிப் பிராணி களை ஆயிரக்கணக்காகத் தினந்தோறும் வதைத்துப் புசிக்கின் னர். சாஸ்திர ஹிதமான கருமங்களில் விதிக்கப்பட்ட விதி விலக்குகளெல்லாம் ஜீவனது தாழ்வான இச்சைகளைப் படிப் படியாகப் போக்கும்; அவ்விச்சைகளில் வெறுப்பை விருத்தி செய்யும்; விஷயவாசைகளைப் பெருகவிடா. இவைபோலவே மதுபானத்திலுள்ள ஆசையையும் படிப்படியாக விடவேண்டு மென்ற நோக்கத்துடன், விதிப்படிசெய்யப்படும் சௌத்திரா மணி யென்னும் யாகத்தில்தவிர வேறுசமயங்களில் மயக்கத் தைக் கொடுக்கும் வஸ்துக்களை உட்கொள்ளக்கூடாதென்று கட்டுப்பாடுகள்செய்யப்பட்டன. அக்காரியங்களில் உபயோகி க்கும் மந்திரம் முதலியவைகளாலும், அவைகளால் ஆவாகனம் செய்யப்படும் தேவதைகளின் திவ்வியதேஜஸாலும், அவைக ளில் உபயோகிக்கப்படும் வஸ்துக்கள் பரிசுத்தமாகித் தமது இயற்கையான துர்க்குணங்களை இழந்துவிடுகின்றன. படிப் படியாக ஞானம் அபிவிருத்தியாகவே ஜீவனது சித்தமும் சுத் தியடைந்து, இம்சாரூபமான யக்ஞங்களும் நாளடைவில் அவ னால் தள்ளப்படும். சாஸ்திரகர்த்தாக்களின் உத்தேசம் இது தான். சாஸ்திரவிதிகளைப் பூரணமாக உணராமலும், அவற்றை அனுஷ்டிக்காமலும் தமதுபேதைமையால் சிலர் கருமமார்க்கத் திலிருப்பவர்க்கு விஷயபோகங்கள் சாஸ்திரங்களால் விதிக்கப் பட்டிருக்கின்றன என்று கூறுவது பெரும்பிழையானது. ஜீவ கோடிகளுக்குள்ள அந்நியோந்நிய சம்பந்தத்தை முதலில் காண் பித்து, அந்நியோந்நிய சிநேகபாவத்தை ஜீவர்களுக்கு விதித்து, ஒவ்வொருவரும் தத்தனக்குள்ள போகவிஷயங்களைப் பரோப

காரத்தின்பொருட்டு உபயோகித்துக்கொள்ளும்படி சாஸ்திரங்கள் போதிக்கின்றன.

யக்ஞகருமங்களில் ஜீவன் தனக்குள்ளவற்றில் ஒருசிறிதை பிறபூதங்களின் உபயோகத்தின்பொருட்டு தத்தம்செய்யத்தெரிந்துகொண்டு, அதன்மூலம் தான் இதரபூதங்களால் அடைந்த மேன்மைக்குப் பிரதி உபகாரம் செய்கிறான். இக்கருமங்களில் ஏதேனும் ஒன்றை அற்பமாகவேனும் ஜீவன் அர்ப்பணஞ்செய்தால், பன்மடங்கு பிரதிபலன் காலாந்தரத்தில் அவனுக்குக் கிட்டும். அப்போது அப்பலன்களைக் கருதாமல் பொறுமையுடன் வரப்போகும் பலன்களை எதிர்பார்ப்பதற்கு அவன் கற்றுக்கொள்ளுவான். அம்மாதிரிவரும் பலன்களெல்லாம் நசிப்பவையாதலால்,அவை அழிவுள்ளவை என்ற ஞானத்தை நாளடைவில் அவன் அடைவான். பிறகு தேவதானுக்கிரகத்தால் இகலோகத்தில் ஏற்படும் பிரதிபலன்களை எண்ணாது, நெடுங்காலம் அனுபவிக்கக்கூடிய பரலோக சுகங்களை நினைத்தே அவன் யக்ஞங்களைச் செய்வான்.

"ஜ்யோதிஷ்டோமேன ஸ்வர்க்க காமோ யஜேத"

"ஸ்வர்க்கம் வேண்டியவர்கள் ஜ்யோதிஷ்டோமம் செய்தல்வேண்டும்." என்று சுருதி கூறுகின்றதல்லவா? பரலோக சுகங்கள் கட்புலனாகாமலும், மரணாந்தரத்தில் அடையத் தகுந்தவையாயும் இருக்கின்றமையின், அவைகளைக்கோரி உபயோகமான வஸ்துக்களைத் தியாகம்செய்யப் புகுவது இகலோக சுகங்களைக்கோரிச் செய்வதைக்காட்டிலும் மேலானது. தன் குழந்தைகட்குச் சமானமான பூதகோடிகள் இவ்வித ஸ்வர்க்கத்தை விரும்பிப் பலவித யக்ஞங்களை நடத்தி, வெகுகாலம் இகலோகத்திலும் பரலோகத்திலும் சுகானுபவங்களைப் பெற்று அபிவிருத்தி யடைவதற்காகவே, பகவான் தமது சக்தியை உபயோகிக்கின்றனர். ஆதலின் ஒவ்வொருவனும் "தன்னைக்காட்டிலும் மேலான தேவகோடிகளின்பொருட்டு தன்னிடமுள்ள நல்ல பதார்த்தங்களைத் தானஞ்செய்வதே தருமம்" என்ற ஞானத்தைக் கிரமமாய் அடைவான். மற்றும் வெகுகால

அனுபவத்தால் ஸ்வர்க்க சுகத்தோடு எல்லாவற்றையு மடைந்து, "க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி" (புண்ணியம் நசித்தவுடன் மனிதர் பூலோகத்திற்கு வருகிறார்கள்) என்ற நியாயப்படி, ஸ்வர்க்கத்திலிருந்து மறுபடியும் பூலோகத்தை அடைவான். பலஜன்மங்களில் இவ்வாறு பூலோகசுகங்களையும் மேலோகசுகங்களையும் அனுபவித்துக் கடைசியில் பூலோக சுகங்களைப்போல ஸ்வர்க்கலோக சுகங்களும் சாசுவத மற்றவை என்ற ஞானம் ஜீவனிடம் உதித்துப்பெருகும். பிறகு அவன் ஸ்வர்க்கலோக சுகத்தைப்பார்க்கிலும் மேலானசுகத்தை நாடத் தொடங்குவான். "பலாபேட்சை இருக்கும்வரை இகபரலோக சுகங்களான பலானுபவங்கள்தப்பா; அவையாவும் அழிவுள்ளவை; தானத்தாற் பெற்ற போகங்களெல்லாம் துக்கத்திற்குக் காரணமானவை" என்ற ஞானம் அவனிடம் அபிவிருத்தியானவுடன், அவன் கருமத்தியாகத்தைச் செய்யப் பார்ப்பானேயன்றி எப்போதும் சாந்திரூபமான சுகத்தை நாடமாட்டான். கருமத்தைவிட்டுச் சும்மாவிருப்பதை அவன் அநுசரித்திருந்தாலும்,விஷயபோகங்களிலுள்ள தனதுஆசை அரண்யவாசத்திலும் பின்தொடர்ந்து வருவதைப் பார்த்து, தன் பரிபாகஅவஸ்தையில், "கேவலம் கர்மத்தியாகத்தால் அடைவதற்கு அசாத்தியமான சுகமும் ஆசைகளைவிடுவதால் அடையத்தகும்" என்ற ஞானத்தை அவன் அடைவான்.

இட்டத்தால் கன்மத்து இழியார் வினை ஒழியார்
விட்டத்தால் பேறதனை மேலடையார். கை. வெ. III. 3.

கருமத்தைவிடுவதால் சாந்திரூபமான சுகத்தை யடையமுடியாது. கேவலம் சந்நியாசத்தால் மனிதன் சித்தியடையமாட்டான். ஜீவனிடம் இச்சை அல்லது தேகஅபிமானமுள்ளவரை நாளுண்டாயினும் அவன் கருமங்களைச் செய்தேகழிக்கவேண்டும். கருமத்தினால் ஜீவன் கட்டுப்படாதிருக்க ஒருவழிதானுள்ளது. வேறு வழியில்லை. ஆசைகளை விடுவதே உத்தமமானதும் நாசமற்றதுமான சுகத்திற்குக் காரணமாகுமெனத் தெரிந்துகொண்டு, பலாபேட்சையின்றி சமுசார சக்

காரத்தை நடத்துவதின்பொருட்டு தன்தருமத்தை அனுசரிப்பது அவசியமென, ஜீவன் அறிந்துகொள்ளவேண்டும். இவ்வாறு முதலில் இகலோக பலனில் இச்சைவைத்து, பிறகு சிறிதுகாலம் ஸ்வர்க்கத்தை விரும்பி சகலபூதங்களுக்கும் இதமான காரியங்களைச் செய்து, கடைசியாக பலாபேட்சை சிறிதுமில்லாமல் லோகத்தின் நன்மையை நாடிப் பிரபஞ்ச சக்கரத்தைத் திருப்புவதே முக்கிய உத்தேசமாக வெண்ணித் தனது தருமத்தை ஜீவன் நடத்தவேண்டும்.

நசையுடையார் செய்கைபோன் ஞானி நசையின்றி
இசையுலகுக் காக இயல்வான். கீ. வெ. III. 21.

(இ-ள்). ஆத்துமஞான மில்லாதவர்கள் கருமத்தில் பலாபேட்சையுள்ளவர்களாய் அதை எவ்வாறு செய்கிறார்களோ, அவ்வாறே ஆத்துமஞான முள்ளவன் பலாபேட்சையின்றி உலகின் நன்மையின்பொருட்டுக் கருமங்களைச் செய்வான்.

இன்னோர் தத்தம் கருமங்களான காரியங்களைச் செய்து வருவர். அவற்றின் பலன்களில் அவரது விசாரம் செல்லாது.

கருமத்தே உன்தன் அதிகாரம் கண்டாய்
வரும் அப்பயனில் அணுமன்றது—ஒருமித்து
மற்றதனுக்கு ஏதுவா மன்னேல் கருமமலா
வெற்று அமைவில் வேண்டா விருப்பு. கீ. வெ. II. 43.

(இ-ள்). கருமஞ்செய்வதில் மாத்திரம் உனக்கு அதிகாரமுண்டு. கருமபலன்களில் அதிகாரமில்லை. கருமபலனுக்குப் பாத்திரனாகாமல் கருமஞ்செய்யாதிருப்பதில் உனக்கு விருப்பங் கூடாது.

இவ்வாறு பலன்களில் விருப்பின்றி உலகப்பற்றை விட்டு, எல்லா பூதங்களின் மேன்மையையும், பிரபஞ்ச விருத்தியையுங் கோரிக்கருமங்களை ஒவ்வொருவரும் செய்யவேண்டும்.

பூருவ கருமத்தின்படிக் கிடைத்த இந்தஜன்மத்தில் செய்யத்தகும் கருமங்களையெல்லாம் நன்றாய் நிறைவேற்றினால்தான் ஜீவனதுகடன்கள் தீரும். கருமங்களைக் கைவிட்டு ஓடுவதனால்

கருமமற்றிருப்பது (நைஷ்கருமியம்) ஒருவனுக்கும் சித்தியாது. கருமங்களைச்செய்து மனத்தை யடக்கவேண்டுமே யல்லாது கருமங்களை விடுதல் கூடாது. காலம் பரிபக்குவமானால் கருமங்கள் தாமே விலகிப்போகும். அப்போது பந்தங்கள் தாமே நீங்கும். நாம் அவற்றை நீக்கிக்கொள்ளுதல் கூடாத காரியம். கருமங்களைச்செய்து, தன்னயத்தை எள்ளளவுங் கருதாமல் உலகமேன்மையையே நாம் கருதவேண்டும்.

முடிவில் தன்கருமங்களை விடாமல் "இதமானகருமங்களை நான் உலகத்தின் பொருட்டுச் செய்கிறேன்" என்ற அகங்காரத்தையும் விட்டு, கருமங்களிலாவது, அவற்றின்பலனிலாவது அபிமானமின்றி, பகவானது சேவகனாகவும் அவரது பிரதிநிதியாகவும் தன்னைப் பாவித்து, உலகின் மேன்மையின்பொருட்டு ஜீவன் காரியங்களை நடத்தவேண்டும்.

ஒருவன் கல்வியாளனாயின், அவன் அவ்வித்தையைத் தனது மேம்பாட்டின்பொருட்டு உபயோகிக்காமல், அஞ்ஞானிகளைக் கடைத்தேற்றுவதில் அதை உபயோகிக்கவேண்டும். அவன் செல்வவானாயின் தன் அதிகாரத்தையும் செல்வத்தையும் குடிகளின் விருத்தியின்பொட்டு உபயோகிக்கவேண்டுமேயல்லாது, அஞ்ஞானிகளைப்போல தன்னயம் பாராட்டித் தனது போகத்தின் பொருட்டு உபயோகிக்கக்கூடாது. எப்போதும் அவன் குடிகளின் அபிவிருத்தியையும், சுகத்தையும் தேடவேண்டும். குடிகளின் உபயோகத்திற்காகப் புதியபுதிய காரியங்களைச் செய்யவேண்டும். தகப்பன் பிள்ளைகளின்பொருட்டுப் பாடுபடுவதுபோல் பொருள்குவிக்கும் பெரியோர்களும் தாம் தேடிய தனத்தை மனிதகோடிகளாகிய பெரிய குடும்பத்தின்பொருட்டுச் செலவுசெய்யவேண்டும். இன்னும் அவர்கள் மூவுலகிற்கும் இரக்ஷகனான பகவானால் நியமிக்கப்பட்ட கோசாதிபதியாகத் தம்மைப்பாவித்து உலகமாகிய குடும்பத்தின் நன்மைக்காக தம்பொருளைச் செலவிட்டு, புதிய தருமசாஸ்திரங்களை ஏற்படுத்தி, அவற்றைப் பரப்பித் தமது சரீர உழைப்பையும் மனசக்தியையும் பரோபகாரத்தின் பொருட்டு உப

யோசிக்கவேண்டும். தான் ஊழியனாயினும் ஒவ்வொரு வனும் தன்தருமத்தை பகவத்கைங்கரியமாகப் பாவித்து லோகோபகாரத்தில் எக்காரியத்தையும் இழிவாக எண்ணாமல், யாவற்றையும் பரிபூரணமாக நிறைவேற்றவேண்டும். எக்காரிய த்தையும் சகலபூத மேன்மையின்பொருட்டுச் செய்து ஒவ்வொ ருகாரியத்தையும் பகவானது பாதங்களில் அர்ப்பிக்கப்படும் ஓர்மலராக எண்ணிப் பகவானை அருச்சிக்கவேண்டும்.

எவன்பால் பூதங்க ளெல்லாம் பிறந்தியலும்
எவன்தா னிங்க னிடைப்பரம்பும் மேவியே
யாங்கவனைத் தன்கருமத் தாலே யருச்சித்தே
யோங்கவவன் சித்தி யுறும். கீ. வெ. XVIII. 46.

(இ-ள்.) எவன்பாற் பூதங்களெல்லாம் பிறந்து பிரவிருத் திக்கின்றனவோ, எவன் இவற்றினிடையெல்லாம் அந்தராத்மா வாய் வியாபித்திருக்கின்றானோ, அந்த என்னை மனிதன் தனக் குரிய கருமத்தாலே ஆராதித்துச் சித்தியடைகின்றான்.

தான் பிறரது மேன்மையின் பொருட்டு நற்காரியத்தைச் செய்வதாயும், அவர்கள் தனக்கு நன்றிபாராட்டவேண்டுமென் றும் எண்ணம் மனிதனிடம் முதலிலுண்டானாலும் அவன் படி ப்படியாக அவ்வெண்ணம் நீங்கி ஈசுவரப்பிரீதி யொன்றையே கோரித் தன் கருமங்களைச் செய்வான். இவ்வாறு செய்யவே சர்வகருமங்களும் யக்ஞ சொரூபமான ஜகதீசனையடையும். அப்படி யக்ஞார்த்தமாகச் செய்யப்படும் கருமங்கள் அவனுக் குப் பந்தரூபமாகாமல் மோட்சசாதனமாகும்.

ஐவகைய வேள்வியினுக் காகாக் கருமங்கண்
மெய்வகையே கட்டு மிகவுலகை—இவ்வகையாய்
ஆங்கதனுக் காக அமைந்துன் நசையைவிடுத்து
ஈங்கதனை நின்றே இயற்று. கீ. வெ. III. 7.

குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேச்சதம்ஸமா: ।
ஏவம் த்வயி நாந்யதேதோஸ்தி ந கர்ம லிப்யதே நரே ॥

பதஞ்சலி

அப்போது ஜீவன் எந்தக்காரியத்தைச் செய்தாலும் ஈசு வரனது தன்மையை அடைந்திருப்பான்.

உகப்புவெறுப் பற்றுத்தன் னுள்ளத்தாற் பொருள்கள்
அகத்துவச மாயபுலனு லார்ந்தோன்—மிகத்தெளிவு
சேரு மதிற்றுயருந் தீருந் தெளிநெஞ்சில்
அரு நிலைப்புத்தி யரசு. கீ. வெ. II. 58

இதுகாண் பிரமமெனு மிவ்வுயிரில் தன்மை
இதுகாண் பெறின்மயக்க மெய்தான்—இதுதன்னி
னந்தகா லத்தமர்ந் தப்பிரமா னந்தமெனுஞ்
சந்தமாந் தன்மை பெறும். கீ. வெ. II. 64.

என்னலஞ்செய் தென்மனனு மென்னையிறைஞ் சென்னைவணங்கி
என்னலஞ்சேர்ந் துன்னையெழில் யோகத்தின்—மன்னவமைத்து
என்பற்றே நீபயனு வேய்ந்தநீ யென்னையே
வன்பற்றாய் வந்தடைதி வாய்ந்து. கீ. வெ. IX. 34

என்னைமன னம்பண்ணு என்பத்த னாகியே
யென்னை யருச்சி யெனைவணங்கு—என்னையே
மேவுதிநீ மெய்யுனக்கு மிக்குறுதி சொன்னேன்நான்
ஓவுதலற் றென்னுகப்பா லுற்று. கீ. வெ. XVIII. 65.

"எப்போதும் என்னையே சிந்தித்து, எனக்கு பக்தனாகி, எனக்கு அர்ப்பணமாகக் கருமங்களைச்செய்து என்னை வணங்குங்கள். சந்தேகமின்றி என்னை படைவீர்கள் என்று திடமாய் நம்புங்கள். எல்லாக் கருமங்களையும் என்னிடம்விட்டு என்னைச் சரண் புகுங்கள். எல்லாப் புண்ணிய பாவங்களிலிருந்தும் விடுவித்து, மோட்சத்தைக் கொடுப்பவன் நானே. விசாரம் வேண்டாம்" என்று கிருஷ்ணபகவான் அபயதானங்கொடுத்து, எல்லாரும் கடைத்தேறும் மார்க்கத்தைப் போதித்திருக்கின்றாரல்லவா? அவ்வித ஸ்திதியை அடைந்து எக்காரியத்தைச் செய்யினும் பகவான் தன்னைக்கொண்டு அதை நடத்திக் கொள்ளுகிறாரென்றும், ஈசுவரனுக்குத் தான் சரீரமென்றும் திடமாகப் பாவித்துக் கருமங்களை நடத்தவேண்டும். இதுவே கரும யோகம்.

பேறிழவில் ஒத்தமைத்துப் பேணு நசைதுறந்து
தேறிவரும் யோகத்துச் சேர்ந்துநீ—ஆறியமைந்து
இத்தகைவி லூங்கரும மேந்தியநீ யோகந்தான்
ஒத்தலென வுரைப்பர் ஓர்ந்து. கீ. வெ. II. 44.

ஈசுவரனுக்குப் பிரியமுள்ள காரியத்தைச்செய்து, செய்யும் காரியம் நிறைவேறினும் நிறைவேருதாயினும் அதை லக்ஷியஞ்செய்யாமல் ஈசுவரனுக்கே அதை அர்ப்பணஞ் செய்யவேண்டும். இதுவே உண்மையான யோகம். இந்த ஸ்திதியையடைவதற்குச் சாதனமாகவிருக்கும் வழி கருமமார்க்கம். இவ்வாறு ஜீவன் முதன்முதல் இகலோக சுகங்களைக்கோரித் தன்னயங்கருதிக் கருமங்களைச் செய்கிறுன். பிறகு ஸ்வர்க்கத்தையடையும் பொருட்டுப் பாடுபடுகிறுன்; அதன்பிறகு தன்னை ருணுனுபந்தத்திலிருந்து நீக்கிக்கொள்ளும் உத்தேசத்துடன் கருமத்தைச் செய்கிறுன். பின்னர் உலகத்தின் மேன்மைக்காகவே தனது தருமத்தை அனுஷ்டித்து வருகிறுன். முடிவில் ஈசுவரார்ப்பண புத்தியுடன் கருமங்களைச்செய்து எக்காலத்திலும், எக்காரியத்திலும் ஈசுவரனது சானித்தியத்தைக் கற்பித்துக்கொண்டு, ஈசுவரத்தன்மையை யடைந்து, ஈசுவரனுக்குச் சமானமாக நடந்துகொண்டு, பரமயோகியாகிறுன். இத்தகைய மனிதன் எக்காலத்திலும் ஈசுவர சன்னிதானத்தி லிருப்பவனுதலின், உத்தமமான பக்தியும் ஞானமும் தாமே அவனிடம் பிரகாசிக்கும்.

அங்கி விறகெல்லாம் எரிப்பதுபோல் அவ்வறிவு
பொங்கிவரு கன்மம் பொடியாக்கும்—இங்கில்லை
மெய்யறிவில் தூயதுதான் மிக்கவதும் யோகிதான்
பைய வெய்தும் நெஞ்சிற் பயின்று. கீ. வெ. IV. 37.

இவ்வாறு யோகத்தால் சித்திபெற்றவரது இருதயத்தில் ஆத்மஞானம் தானேபெருகி ஒளிரும். கருமம், பக்தி, ஞானமாகிய மூன்றும் இந்த யோகியிடம் பிரகாசிக்கும். இந்த யோகி கருமியைக்காட்டிலும், பக்தனைக்காட்டிலும், ஞானியைக் காட்டிலும் மேலானவன் என்று பகவான் கூறியுள்ளார்.

தவம்புரிந்தார் தன்மை யுணர்ந்தார் கருமத்து
உவந்தியன்றூர் தங்களிலும் யோகி—யவன்சிறந்து
மிக்குணர்ந்தா னென்றுணரப் பட்டான் விசயா நீ
தக்குயர்ந்த யோகமே சார். கீ. வெ. VI. 42,

இந்தயோகம் கருமமார்க்கத்தின் முடிவில் அடையக்கூடியதாக விருப்பதால் இது கருமயோகமெனப்படும். இதுவே உண்மையான யோகம். இந்த யோகசித்தி பெற்றவனே உண்மையான யோகி. இவ்வித மகாபுருஷன் சரீரத்தைத் தரித்துக்கொண்டிருப்பினும் முக்திபெற்றவனே யாவான். இவனைப் போன்றவர்களே ஜீவன் முக்தரென அழைக்கப்படும் மகானுபாவர்கள் இவ்வித மகாத்துமாக்களின் அனுக்கிரசத்திற்குப் பாத்திரராக விரும்புவோர் எல்லோரும் அவரால் ஆதரிக்கப் படுவார்கள். ஆதலால் லோகோபகாரமாக சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள இம்மார்க்கத்தை ஒவ்வொருவரும் அனுசரித்து நிஷ்காமிகளாய் லோக இதத்தின்பொருட்டு நற்காரியங்களைச் செய்து, தமது ஜன்மங்களை ஈடேற்றிக் கொள்வார்களாக.

---

14 - வது அத்தியாயம்.

ஞானமார்க்கம்.

முன் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள கருமமார்க்கம் உலகத்தில் அநேகர் அனுஷ்டிப்பதற்குத் தகுந்ததாகவுள்ளது. அநேகராலும் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்த அத்தியாயத்தில் ஞானயோகமும், அதற்குச் சாதனமான ஞானமார்க்கமும் விசாரிக்கப்படும். இந்தமார்க்கம் சிலரால் அனுஷ்டிக்கக் கூடியதேதவிர, எல்லாரும் அனுஷ்டிக்கத் தகுந்ததன்று. இம்மார்க்கத்தை அனுசரிப்போரின் லக்ஷணம் தொடக்கத்திலேயே தெரியவரும். அன்னோர் இளமைதொட்டே நல்லஞானம் சம்பாதிப்பதில் பிரியம் வைப்பர். அதை விருத்திசெய்து கொள்வதிலேயே பாடுபடுவர். பற்றற்ற மனத்துடன் அந்த ஞானத்தை அப்பியசிப்பர். பொருளீட்டும் நோக்கத்துடன் அதை அப்பியசியார். பொருளாசை கொண்டவன் தனத்தைத் தேடுவதற்குவேண்டிய ஞானத்தை வெகு பிரயாசைப்பட்டுக் கற்றுக்கொள்ளுவான். விஷயசுகங்களை இச்சிப்பவன் தன் மனோசக்தியையும் ஞானத்தையும் அவ்விஷய சுகங்களை யடைவதற்குக் கருவிகளாக உபயோகிப்பான். தற்காலம் பிரகிருதி சாஸ்திரஞானம் பலவிதமாக விருத்தியாகின்றது. அதையெல்லாம் மனிதர் தம் இகசுகங்களைப் பெருக்குவதன் பொருட்டே உபயோகப்படுத்துகிறார்களன்றோ! அவ்வாறின்றி, ஞானத்தைத் தேடுவதிலேயே கருத்தையூன்றி, அந்த ஞானத்தைப் பெறுவதே மேலான இன்பமாகவெண்ணி, சரீர சௌக்கியத்தையேனும் பொருள் லாபத்தையேனும் சிறிதும் கருதாமல், எக்காலத்திலும் எத்தொழிலிலும் புதிய புதிய விஷயங்களை ஆராய்ச்சி செய்பவனே ஞானமார்க்கத்திற்கு தகுந்தவனென்று தெரிந்துகொள்ளவேண்டும். அவனிடம் யாதேனுமொரு உத்தேசம் உண்டானால், அவ்விஷயத்தைப்பற்றிய ஞானம் தனக்குப்பூரணமாகக் கிட்டும்வரை திருப்திகொள்ளாமல் தன் சக்தியெல்லாம் அவ்விஷயத்திலேயே அவன் உபயோகிப்பான். ஒரு புதிய சாஸ்திரத்தைக்கற்பித்து விருத்திசெய்யவேண்டுமென ஒருவன் கருதினால், அவன் அவ்விஷயமாகப் பலவிதப் பிரயத்தனங்கள் செய்வான்; பல புதிய ஏற்பாடுகளைத் திட்டஞ்செய்வான்; புதி

வழிகளைக் காட்டிப் பலவாறு முயன்று சந்தர்ப்பங்களை அறிந்துகொண்டு, தன் ஞானத்தை விருத்திசெய்துகொள்வான். நித்திரை ஆகாரங்களை அவன் ஒருபொருட்டாக நினைப்பானோ? விவசாயம், வைத்தியம், வானசாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களை ஏற்படுத்தி விருத்திசெய்தவரிடம் பொறுமையும், அறிவும், விடாமுயற்சியும் எவ்வளவு இருந்திருக்க வேண்டுமென்பதை நம்மால் ஊகித்து அளந்தறிய முடியுமா? உடுக்களை ஒவ்வோர் இரவிலும் உற்றுநோக்கி, அவைகளின்கதியையுணர்ந்து, வருஷக்கணக்காகப் பாடுபட்டாலொழிய, ஒரு கிரகத்தின் சஞ்சாரத்தையாவது தவறுதலின்றித் தெரிந்துகொள்வது சாத்தியமாகுமா? எவ்வளவாண்டுகள் நித்திரையின்றி, கிரகநட்சத்திரங்களின் கதிகளைப்பரீட்சித்து, சோதிடகணித சாஸ்திரத்தைப் பூர்வீகர் ஏற்படுத்தியுள்ளா ரென்பதை நம்மால் ஊகிக்கவும் கூடுமா? அவ்வாறு வருந்திப்பெற்ற ஞானத்தால் அவர்களுக்கு இலாபம் ஏதேனுமுண்டோ? பிரதிபலனைச் சிறிதும் விரும்பாமல் தம் ஆயுளெல்லாம் ஞானத்தைத் தேடுவதிலேயே கழித்த மகாத்துமாக்கள் ஞானத்திலேயே சகல புருஷார்த்தங்களையும் பார்த்துக்கொள்வர். பொருளின்பங்களைப் பெறுவதில் சிறிதேனும் அவர் இச்சைவையார். அவ்வித ஞானிகள் தமது பூர்வகரும பரிபாகத்தால் விஷயவாசைகளை முற்றிலும் நீக்கி, இயல்பாகவே விஷயப்பற்றில்லாமல், ஞானத்திலேயே அழுந்தியிருப்பர். அன்னோரது பெருமையும், பொறுமையும், ஊக்கமும் அளவிடற்பாலனவல்ல. எப்போதும் புதிய பொருள்களைச் சோதிப்பதும், புதிய தருமங்களைக் கண்டுபிடிப்பதுமே அவருக்கு உகப்பானவை. வேறொன்றிலும் அவரது மனம் செல்லாது. புதியபுதிய விஷயங்கள்மனத்திற்குப் புலனானவுடன், அவர் பரமானந்தத்தில் மூழ்கினவராவர். புதிய ஞானத்தை யடைவதில் அவரது மனம் எப்போதும் அவாவிச்செல்லும். அன்னோர் இந்திரியங்களையும் மனத்தையும் வென்றவரெனவும், புத்திநுட்பமுள்ளவரெனவும் புகல்வது மிகையாகாது. சாதாரண மனிதரிடம் இருப்பதுபோல அவரிடமும் விருப்பு வெறுப்புக்கள் இருக்குமென்று கருதுவது மதியீனம். அவர் ஞானத்தையே குறி

யாகவைத்துத் தேடி தம்மால் இயன்றவரை பிறர்க்கும் அதை ப்போதிப்பர். அவ்வித மஹாபுருஷரே இந்த ஞானமார்க்கத் திற்குத் தகுந்தவராவர். இந்திரிய நிக்கிரகமில்லாமல் பணவாசைகொண்டு தன்னயம் கருதி, எப்போதும் லாபாலாபத்தைப் பற்றிக் கணக்கு வைத்துக்கொண்டிருப்பவர் ஞானமார்க்கத் திற்குத் தகுந்தவரல்லர். ஞானிகள் முதன்முதல் வெளிப்பிரபஞ்சத்தில் அடையத்தகுந்த ஞானத்தைக்குறைவின்றி யடைவதற்குப் பாடுபடுவர். வியக்தமாகக் காணப்படும் ஒவ்வொரு பொருளையும் பரீக்ஷித்து, அதன் இயற்கையான குணங்களைச் சோதித்து, அதன் தன்மையை உணர்ந்துகொள்வர். இவ்வழியில் ஒருவித ஞானத்தை முதலில்பெற்று, விஷயங்களை மற்றும் பரிசோதித்து எவ்வளவு ஞானம்பெறினும் திருப்திகொள்ளாமல், சூக்ஷ்ம, சூக்ஷ்மதர, சூக்ஷ்மதமங்களும், மகத்து, மகத்தர மகத்தமங்களுமான வஸ்து சமுதாயங்களையும் நன்றாய்ச் சோதித்து, ஞானத்தை அபிவிருத்திசெய்துகொள்வர். இவ்விதம் பூலோகத்தில் அடையத்தகுந்த ஞானத்தை அவைகள் மூலமாக அடைந்து, ஸ்தூல இந்திரியங்களால் அடையத்தகுந்த விஷயஞானம் யாவற்றையும் அறிந்துகொள்வர். அதன்பிறகு சூக்ஷ்மமான உலகங்களின் தோற்றம் அவர்க்கு வெளியாகும். அப்போது அந்தந்த லோகவிஷயமான ஞானத்தை அவர்பெறுவர். இதிலும் அவருக்கு ஞானயிச்சை யொன்றைத் தவிர வேறொன்றுமிராது. இவ்வாறுஇவர் செய்யும் பரிசோதனைக்கு முடிவேகிடையாது. பிரம்மாண்டம் முழுவதும்சோதித்து, திருஸ்யாதிருஸ்ய லோகங்களை அறிந்தாலும், மற்றும் அநேககோடி பிரம்மாண்டங்கள் கணக்கில்லாம லிருக்கின்றன. அவற்றின்முடிவுநமக்கு எட்டாது. மகாதேவர் ஒருகாலத்தில் ஒளிவடிவான ஒரு தூணைப்போல நின்றனர். பிரமனும் விஷ்ணுவும் அந்த ஜோதிஸ்தம்பத்தின் அடிமுடிகளைக்காண எண்ணினர். நான்முகன் அன்னவுருக்கொண்டு முடிகாண மேலே ஆயிரவருஷஞ் சென்றும் அதுகாணமுடியாது திரும்பினர். வராகவுருக்கொண்டு அடிகாணச்சென்ற விஷ்ணுவும் ஆயிரவருஷம் முயன்றும் பயனில்லாமல் திரும்பினர். இப்புராணக்கதையைக் கேளாதவர் யாருளர்? இவ்வாறு வெளிப்படையாகத் தேடுவதால் சர்வேசு

வரனுடைய சிருஷ்டிக்கு முதலும் முடிவும் காண்பது சாத்திய மாகாது. அந்தர்முகமாகவே பகவான் காணப்படுகிறுராதலின் அவ்வாறு நோக்கிய மனத்துடன் ஒருவன் ஆராய்ச்சி செய்வா ஞயின், அவனது அக்ஞானத்தை பரமதயாநிதியும் சகலலோக குருவுமான ஜகதீசன் சிறிதுபோக்குவர்.

"என்னில்வே ருகிமிக் கிங்கோர் பொருளுளதென்று
உன்னிலாங் கில்லை யுயர்விசயா—மன்னிய நூன்
மாமணிபோற் கோப்புண்டு வுந்தேயென் பாலிதெல்லாஞ்
சேமமுற நிற்குஞ் செறிந்து." கீ. வெ. VII. 7.

"எல்லாப் பொருளுக்கும் யாதுமுதல் வித்தாகும்
மல்லாருந் தோள்விசையா மற்றதுநான்—அல்லாதும்
ஈங்கிதுகேள் என்னை யொழிந்திச் சராசரத்தில்
ஆங்குள தொன்றில்லை யது." கீ. வெ. X. 49

என்று கண்ணபிரான் கூறியவாறு, "ஈசுவரனைக் காட்டி லும் வேறுன தத்துவமொன்றில்லை; கணக்கற்ற பின்ன ரூபங்க ளாய் பிரகாசிக்கின்றவையெல்லாம் ஆத்துமாவே; ஒன்றுகிய அந்த ஆத்துமா பிரகிருதி சம்பந்தமான தேகங்களில் வேறு வேருகக் காணப்படுகின்றது" என்ற ஞானம் அப்போது அவ னிடம் தோன்றும். ஆத்துமா ஒன்றே என்பது தெரிந்தவுடன் மற்றவை எல்லாம் அவனுக்கு அங்கையிற் கனிபோல் விளங்கி விடும். இதனுல் ஆத்துமாவை யறியாது வெளியாகவுள்ள தேக ங்களை எவ்வளவுகாலம் சோதித்தாலும் மூலதத்துவத்தை யறி யமுடியாதென்பதை ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளவேண் டும். பெரியதோர்மரத்தண்டை சேர்ந்து அதன் மூலத்தை யறியாமல் அதன்கணுள்ள ஒவ்வொரு இலையையும் கொம்பை யும், மலரையும் தனித்தனி சோதித்துக்கொண்டிருந்தாலும் அவைகளுள் ஒன்றற்கொன்றுள்ள சம்பந்தத்தைக் காணமுடி யாது. எவ்வளவு சோதித்துப் பார்த்தாலும் மறுபடியும் சில விஷயங்கள் மிகுந்துபோகும்; அதுபோலவே யாவற்றிற்கும் மூலமும், அறியத்தக்கதுமான ஆத்துமாவையறியாமல், அந்த ஆத்துமஸ்வரூபங்களான தேகங்களை எவ்வளவு சோதித்தாலு

அதனால் எவ்வளவு ஞானத்தையடைந்தாலும், அவ்விதஞானம் பூரணஞானமாகாதென்பதை ஜீவன் அறிந்துகொள்வான். அப்போது எந்தவொன்றை அறிவதால் யாவும் வெளியாகுமோ அந்த ஆத்தும தத்துவத்தை அறிவதற்கு ஜீவன் வெகுவிதமாக முயல்வான். "இந்த உலகில் வெளியாகும் பொருள்களெல்லாம் தோன்றல், வளர்தல், குறைதல், பெருகுதல், மாறுபடுதல் மறைதல் முதலிய வேறுபாடுகளுக்கு உட்படுமாதலின் அவை யாவும் நிலையற்றவை; இந்த வேறுபாடுகளின்றி நிலையாகவுள்ளது ஆத்துமா ஒன்றே" என்ற ஞானம் ஜீவனிடம் அற்பமேனும் அப்போது எழுந்தால், நித்தியா நித்திய விவேகஞானமும் அவனிடம் உண்டாகாமல்தீராது. அத்தருணத்தில் ஒவ்வொரு ரூபத்திலும் அந்தர்ப்பூதமாகவுள்ள ஆத்ம ஸ்வரூபனைக் காண்பதற்கும் ஜீவன் முயன்று, அவ்வாத்தும தத்துவத்தை அறிவதற்குச் சாதனமாகாத ஞானங்களெல்லாம் அஞ்ஞானமாகுமெனத் தெரிந்துகொள்வான். பிறகு வெளிவஸ்துவிஷயமானஞானமும், பிரகிருதிசாஸ்திரங்களும், திருஸ்யா திருஸ்ய லோக ஞானங்களும் ஞானமாகாவென்றும், இந்தஞானமெல்லாம் அதாவது 64 கலைஞானங்களும், நான்கு வேதங்களும், 6 வேதாங்கங்களும் அபரவித்தை என்றும், விகாரமற்றவனும், அந்தர்யாமியும், சர்வபூதங்களுக்கும் ஆதார பூதனுமான ஆத்துமாவின் ஒருதத்துவமே. பரவித்தையென்றும் அவன் அறிந்துகொள்வான். இவ்வாறு பிரபஞ்சத்திலுள்ள வஸ்துக்களையெல்லாம் பார்த்து ஆத்துமாவொன்றே நித்தியமானதென்ற விவேகத்தை அவன் வளர்த்துவந்தால் நித்தியமான ஆத்துமாவிடம் விருப்பும், அநித்தியமான வஸ்துக்களில் வெறுப்பும், அந்த வெறுப்பால் நித்தியாநித்திய வஸ்துவிவேகமும் அவனிடம்பெருகும். இவ்வாறு நித்தியாநித்திய வஸ்து விவேகத்தால் வெறுப்பும், வெறுப்பால் நித்தியாநித்திய வஸ்துவிவேகமும் படிப்படியாக அவனிடம் வளர்ந்து இரண்டும் திடப்படும். அப்போது அவன் அழிவுள்ளவை விடத்தகுந்தவை யெனவும், அழிவற்றதான வொன்றே அடையத்தகுந்ததெனவும்தெரிந்துகொள்வான். "இகலோகசுகங்களெல்லாம் நிமிஷத்தில் மறைந்துபோகும்; அவற்றைப்போ

லவே பரலோக சுகங்களும் அழிவுள்ளவை; ஆதலின் அவையும் துக்கத்தைக் கொடுப்பனவாகும்'' அதனால் அவையும் வேண்டப்படுவனவல்ல; என்றும் அவன் அறிந்துகொண்டு, தன்னிடமுள்ள ராகத்துவேஷத்தை ஜயித்துக்கொள்வான். அதன்பிறகு பிரியமற்றதும் துக்கத்திற்குக் காரணமுமான விஷயங்களில் வெறுப்பும், சுககரமான விஷயங்களில் விருப்பும் ஜீவனிடம் இயற்கையாக எழுந்தாலும், விவேகம் அவனிடம் திடமாக ஏற்பட்டவுடன் அவன் சுகதுக்கங்களை ஒரேவிதமாகப் பாவித்து ஒன்றை வெறுப்பதும், மற்றொன்றை விரும்புவதும், தன் அஞ்ஞானத்தாலேற்படுகின்றனவென்று, உணர்ந்துவிருப்புவெறுப்பாகிய அவ்விரண்டையும் அடக்குவதற்கு முயல்வான். இதுவே வைராக்கியம். இவ்வைராக்கியம் இகலோக பரலோகபோகங்கள் இரண்டிலும் காணப்படும். 'இகலோக சுகங்களிலுள்ள ஆசை ஆத்மஞானத்திற்கு எவ்வாறு பிரதிபந்தமாகுமோ அதுபோலவே ஸ்வர்க்க சுகத்திலுள்ள இச்சையும் ஆத்தும ஞானத்திற்குப் பிரதிபந்தமாகும். அவை விலக்கத்தகுந்தவை' என்ற உண்மையான ஞானம் அவனிடம் ஏற்படும். இந்தவிவேக வைராக்கியங்கள் படிப்படியாக ஜீவனிடம் பெருகினால், அவன் ஆத்துமஞானத்தை யடையும் வழியைக்கண்டுகொண்டு, அந்த ஞானத்தை சம்பாதிப்பதற்கு ஷட்குண சம்பத்து அவசியமெனவும், அவையின்றி அந்தஞானத்தை அடைவது சாத்தியமாகாதெனவும் அறிந்துகொள்வான். இந்த சம்பத்து சமாதி ஷட்குண சம்பத்து என்றும் கூறப்படும். இதைப்பற்றிச் சற்று விரிவாகக் கூறுவோம்.

சமாதி ஷட்குண சம்பத்து.

அவையாவன:—

(1) சமம்:—அதாவது, இந்திரியநிக்கிரகம், மனவடக்கம், மனத்தை வசப்படுத்திக்கொள்வது. குணசம்பத்துகளுக்குள் இதுவே முதன்மையானது. ஜீவனிடமிருக்கும் கருவிகளுள் மனமே முக்கியமானது. "கிமிதரச் சேதஸ்ஸமம் ஸாதனம்" அதாவது மனமே பந்தமோட்சங்களிரண்டிற்கும் காரணமென்பர்.

மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ: ।
பந்தாய விஷயாஸக்தம் முக்த்யை நிர்விஷயம் மந: ॥

மனது இந்திரியங்களோடு கூடி விஷயங்களில் ஊன்று கொண்டிருந்தால், அது பந்தத்திற்குக் காரணமாகும். மனது விஷயங்களை நீக்கி இந்திரியங்களுக்கு உட்படாமல், இந்திரியங்களுக்கு இறைவனாகி, அவற்றை வசப்படுத்திக்கொண்டு, தான் ஆத்துமா வசமாக நடக்கும்போது, அது மோட்சத்திற்குக் காரணமாகின்றது.

முதன்முதல் மனத்தை வசப்படுத்திக்கொண்டால் மற்ற இந்திரியங்களெல்லாம் சுலபமாக வசப்பட்டுவிடும். நாம் இந்திரியங்களோடு ஒத்து நடவாவிடின், அவை ஸ்வதந்திரமாக வியாபாரங்களை நடத்துவது சாத்தியமாகாதென்பது எல்லாருக்கும் அனுபவமாகவுள்ளது. நாம் மனத்தை ஒருவிஷயத்தில் ஊன்றியபோது, மற்ற விஷயங்களில் அது செல்வதில்லை. நூதன வஸ்துவொன்றை ஒருவன் அதிக வியப்புடன் காணும்போது எவரேனும் அவனை அழைத்தால், அவன் அதைக்கேட்பதில்லை. தொட்டாலும் சில சமயத்தில் அவன் அதை உணருவதில்லை. ஏதேனுமொரு விஷயத்தில் மனது ஆழ்ந்திருக்கும்போது, மனிதர் மெய்மறந்திருப்பது யாவர்க்கும் தெரிந்ததே. இதனுல் மனம் ஒருவிஷயத்தில் மூழ்கியிருக்கும்போது, மற்ற இந்திரியங்கள் தத்தம் தொழிலை நடத்தாமலிருக்கின்றன வென்பது வெளியாகின்றது. மனதுமட்டும் நமக்கு சுவாதீனப்பட்டால், மற்ற இந்திரியங்களையெல்லாம் நாம் எளிதில் வென்றுவிடலாம். ஆதலால் சமம் முதலில் பயிலத்தக்கது.

(2) தமம்:—அதாவது பாஹ்ய இந்திரிய நிக்கிரகம். ஐம்புலன் அடக்குதல். மனம் அடங்கினுல் பஞ்சேந்திரியங்களும் சுலபமாக வயப்படுமாதலால், இரண்டாவதாக இத்தமத்தை அடைய முயலவேண்டும்.

(3) உபரதி:—அதாவது கருமத்திலிருந்து விடுதலைபெறுதல்; கருமத்தை வெறுத்துத்தள்ளுதல்; சந்நியாசம் கொள்ளுதல்; விதிப்படி செய்யவேண்டிய கருமங்களை விடுவது என வேதாந்திகள் கூறுவர்.

சந்நியாசத்திற்கு லிங்கங்கள் அதாவது வெளிப்படையான சின்னங்கள் அவ்வளவு முக்கியமல்ல. பேற்றைக்கொடுக்கும் சக்தி வெளிக்கருமங்களி லில்லையெனத் தெரிந்துகொண்டு, அவைகளில் ஆசையை விடுத்தவளவு சந்நியாசம் தவருது சித்திக்கும். அவ்வித வெறுப்புண்டாவதற்கு மனேதைரியமே முக்கியகாரணம். தேசகாலநிமித்தங்களின் வேறுபாட்டால் நமது கருமங்களில் எத்துணை பேதங்களிருந்தாலும் அவைகளைப் பாராட்டக் கூடாதென்ற நிச்சயம் முதலில் நம்மிடம் உண்டாக வேண்டும். சாரம் ஒன்றையே கவனித்து, வெளிதருமங்களில் எவ்வித வேறுபாடுக ளிருந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல், மனேபாவங்களைமாத்திரம் எடுத்துக்கொண்டு, யாவரிடமும் சமபுத்தி காட்டி, அவர்களை ஆதரிக்கவேண்டும். சாரத்தை அறியாதவர் அதை உணர்ந்துகொள்ளுமாறு வழிகள் தேடவேண்டும். வெளி வியாபாரங்களை மாற்றவேண்டுமென்ற எண்ணம் நம்மிடம் கூடாது. எவ்விடத்திலும் பரமாத்துமா அந்தர்யாத்துமாவாக விருக்கிறர்; லோக விவகாரம் அநேக விதமாக வேறுபடுகின்றது; அதனுல் அந்தந்த விதத்தை அனுசரித்து வேறுவேருக அவரவர்க்குக் காலத்திற்சேற்ப உபாயமுண்டாக வேண்டுமேயன்றி யாவர்க்கும் ஒரேவழி போதாது. இதை நாம் நன்ருயறியவேண்டும். அவ்வாறு அறிந்துகொண்டால் மதபேதங்கள் ஆசாரபேதங்கள் முதலியவை யெல்லாம் கருமானுசாரங்களான ருசிபேதங்களால் ஏற்பட்டனவேயன்றி, சாரபூத பேதங்களால் ஏற்பட்டவை யல்லவென்று நிச்சயித்து, அவரவர் மார்க்கங்களில் அவரவர்களைப் போகவிட்டு, சாரத்திலேயே கண்வைத்து, அனைவரிடமும் எல்லாவழிகளிலும் சமபுத்திகாட்டிப், பொறுமையுடன் அவரவர்களை அவரவர் வழிகளிலேயே திருப்பிக் கடைத்தேற்ற வேண்டுமென்ற மனேபாவம் நம்மிடம் உண்டாகும். இவ்விதமாகப் பொறுமைகொண்டவன் தான் கருமங்களைச்செய்தாலும் விட்டாலும், வெளிவேஷங்களைக் கவனிக்காமல் சாரபூதமான தத்துவத்திலேயே தன் மனத்தை யூன்றவைப்பான். அவனே உண்மையான சந்நியாசி

(4) ததீட்சை:—அதாவது ததேகநிஷ்டை, சர்வதுக்கத்தையும் பொறுத்தல், திடமான பொறுமை வைராக்கியமுண்டானல் சுகங்களில் ஆசை எவ்வாறு விட்டுப்போமோ, அதுபோல துக்கத்திலும் வெறுப்புநீங்கும். ஒருவனுக்கு ஏற்படும் சுகதுக்கங்களனைத்தும் அவனது பூர்வசுபாசுப கருமங்களை அனுசரித்தே யுண்டாகும். தானே அவைகளை ஒருவன் ஏற்படுத்திக்கொள்வதென்பது முடியாதகாரியம். அவைகளெல்லாம் அவனது விவேகவிருத்திக்கு முக்கிய காரணங்களாகும். இதைநாம் தெளிவாய் உணர்ந்துகொள்ளவேண்டும். அவ்விதம் உணர்வோமாயின் துக்கங்கள் மேன்மேலும் வந்து அவ்வக்காலங்களில் நமக்கு மனச்சோர்வை விளைத்தாலும், அவையாவும் பூர்வ கருமானுசாரமாகவே வந்தனவென்றும், தீக்கருமங்கள் நமது துக்கானுபவத்தால் முடிவுபெறும்போது நாம் கடைத்தேறுவது உண்மையென்றும், இவ்விதம் துக்கங்களால் தபிக்கப்பட்டு புடம்வைத்த பொன்போல நாமும் பரிசுத்தமடைந்து பிரகாசிக்கக் கூடுமென்றும் அறிந்துகொள்வோம். அப்போது துக்கங்கள் உண்டாகவுண்டாக கருமசேஷங்கள் நசித்துப்போகுமல்லவா என்ற மகிழ்ச்சியைப் பலமுறை விரும்பி இந்தத் தீட்சையை அப்பியசிப்போம். துக்கங்களும் கஷ்டங்களும் வாராமல் இந்தநற்குணத்தைப் பழகுவது சாத்தியமாகாது. இதனாலன்றோ பரமதயாநிதியாகிய பகவான் துக்கவலைகளைக் கருமானுசாரமாகத் தம்குழந்தைகளுக்குக் கொடுத்து அவற்றையே அவரது மோட்சசாதனங்களாகவும் செய்கிறார்.

5 சிரத்தை:—அதாவது சாஸ்திரங்களிலும் ஆசாரிய வசனங்களிலும் திடமான நம்பிக்கைவைத்து, அவைகளைப் புருஷார்த்த சாதனங்களெனக் கொண்டு அனுஷ்டித்தால்; பரமதத்துவத்தை நன்றாக இன்னு முணரக்கூடாதிருந்தாலும் அனுஷ்டிக்கும் மார்க்கங்களில் பூரணமான நம்பிக்கைவைத்தல், அவ்வித சிரத்தை யிருந்தாலொழிய இந்தயோகமார்க்கத்தை ஊக்கிப்பழகுவதற்கு உற்சாகம் ஏற்படாது. ஆதலால் ஒவ்வொருவரும் இந்தசிரத்தையை அப்பியாசம் செய்யவேண்டும்.

6 சமாதானம்:—சமமான சித்தம்; இஷ்டா நிஷ்டங்கள் ஒன்றுசேர்ந்தபோது மனது விகாரமின்றியிருத்தல் சாமானியமாக ஜனங்களுக்குப் பிரியமுண்டாகும்போது சந்தோஷமும் அப்பிரிய முண்டாகும்போது துக்கமும் எற்படுவது இயல்பு. அன்னோர் விருப்புவெறுப்புக்களுக்கு உட்பட்டேயிருப்பர். ராகத்துவேஷங்களை வென்றபிறகு, நமதிஷ்டப்படி காரியங்கள் நிறைவேறினும் நிறைவேறாது போயினும், மனது விகாரமற்றிருக்கவேண்டும்.

இவ்வறுகுணங்களையும் ஒவ்வொருவரும் சிறிதேனும் அப்பியசிக்கவேண்டும். இக்குணங்களை ஒன்றன்பின் ஒன்றாகப் பழகிக்கொள்ளலா மென்பது கூடாது. இவைகளை ஒருங்கே சிறிது சிறிதாக அப்பியாசஞ்செய்து திடப்படுத்திக்கொள்வதே நலம். இவையனைத்தையும் ஒருவன் பூரணமாகப் பழகிக்கொண்டால் அவன் மோட்சத்தை யடைந்ததாகவே கொள்ளலாம். கொஞ்சம் அப்பியாசஞ்செய்தவனும் ஞானோபதேசத்திற்குத் தகுதியுள்ளவனாவான். அதன் பிறகு காலக்கிரமத்தில் அனைத்தும் அவனிடம் நிரம்பும்.

நித்தியாநித்திய வஸ்துவிவேகம், இகபரலோகபலபோகங்களில் வைராக்கியம், சமதமாதி ஷட்சம்பத்துக்கள் என்ற இந்த சாதனத்திரயங்களைத்தவிர முமுக்ஷுத்துவமென்ற நான்காவதும் மனிதரிடம் இருக்கவேண்டும். முமுக்ஷுத்துவமென்றால் சமுசாரபந்தத்திலிருந்து விடுபடவேண்டு மென்ற தீவிரமான ஆசை; இதில்லாவிடில் மேற்கூறிய மூன்றையும் அப்பியசிப்பதற்கு உற்சாக மேற்படாதல்லவா?

இதற்கு உதாரணமாக ஒருகதையுள்ளது. முன்னாளில்ஒரு சிஷ்யன்தத்துவக்ஞானியானகுருஒருவரிடம்போய் தனக்குமுக்திமார்க்கத்தை உபதேசிக்கும்படி வேண்டினான். சிஷ்யனது மனோநிலையையும் ஊக்கத்தையும் பரீக்ஷிக்க வெண்ணி அவர் காலத்தைக் கடத்திக்கொண்டுவந்தார். பலமுறை அவன்

அவரைப் பிரார்த்தித்தும் அவர் வாளாவிருந்துவிட்டார். ஒரு முறை திடமான மனத்துடன் அவன் வேண்டியபோது குரு அடுத்துவரும் பருவகாலத்தில் உபதேசிப்பதாகக் கூறி, அன்றையதினம் சாகரசங்கமத்திற்கு வந்துசேரும்படி உத்தரவுசெய்தார். அவ்வாறே அவனும் வந்துசேர்ந்தனன். தேசிகர் அவனை இடுப்பளவு ஆழ ஜலத்தில் அழைத்துப்போய் அவனை முழுகச்சொல்லி, வெளியேவராமல் அவனை அமுக்கிப் பிடித்துக் கொண்டார். சிஷ்யன் மூச்சுமண்டிப்போய், திக்குமுக்காடித் தளர்ச்சியடைந்தனன். பிராணனுக்கு அபாயம் வரும்வரை அவனை நீருக்குள் வைத்திருந்து பிறகு குரு அவனை விட்டுவிட்டார்.

சிஷ்யன் வெளியேறி ஆயாசத்தைத் தீர்த்துக்கொண்டு உறுதியான மனதில்லாமலிருந்தான். குரு அவனை நோக்கி, நீரில் மூழ்கியிருந்தபோது உனக்கு என்ன கோரிக்கையிருந்தது சொல் என்று கேட்டனர். தனக்கு மூச்சுவிடுவதற்குக் கொஞ்சமிடமிருந்தால் அச்சமயம் பிழைக்கக்கூடு மென்று எண்ணத்தைவிட வேறொன்று மில்லையென அவன் விண்ணப்பித்தான். இதைச் செவியேற்ற குரு நீ நீரினுள் மூழ்கியிருந்தபோது பிழைக்கவேண்டுமென்ற எண்ணம் உன்னிடம் எவ்வளவு திடமாக உண்டானதோ, அவ்வளவு திடமாக மோட்சமார்க்கத்தையடைவதில் எண்ணமுண்டாகும்போது நான்உனக்கு உபதேசிப்பேன், நீ இப்போது செல்லலாம்" என்றுகூறி சிஷ்யனை அனுப்பிவிட்டார். இதனால் தீவிரமான மோட்சாசக்தி மனிதரிடம் உண்டாகவேண்டுமென்பது அறியத்தக்கது.

ஞானமார்க்கத்தில் நடக்கத் தொடங்குகிறவர்களுக்கு இந்நான்கும் முதலில் அவசியம் வேண்டுமென ஸ்ரீ சங்கராச்சாரியர் விதித்துள்ளார். இவையே சாதனசதுஷ்டயமெனப் பெயர்பெறும். இந்த சம்பத்தில்லாதவர்கள் பரவித்தியாஞானத்திற்கு அதிகாரிகளாகார். இவையனைத்தையும் சிறிதேனும் அப்பியாசஞ்செய்தோரே பிரமஞானத்தை யடைவதற்குத்

தகுதிபெறுவர். அவர்க்கல்லாது பிறர்க்கு இந்தஞானத்தை உப தேசிக்கக் கூடாதென்பது தத்துவக்ஞானிகளான மகாத்துமாக்களின் கருத்தாகும்.

"அதாதோ ப்ரம்மஜிக்ஞாசா" இனிமேல் பிரமவிசாரம் என்பது வேதாந்தசூத்திரத்தின் முதல்சூத்திரம். அதில் "அத" இனிமேல் என்பதற்கு "சாதனசதுஷ்டயம் கொஞ்சமாயினும சாதித்துக்கொண்டபிறகே" என்பது பொருள். இந்த சாதனைசதுஷ்டய சம்பத்தில்லாதவர்கள் தற்காலத்தில் பிரம்ம வித்தியா ரகசியங்களை சப்தமாத்திரத்தில் கற்றுக்கொண்டு, மகாவாக்கியங்களின் பொருளைத் தமது அனுபவத்தால் தெரிந்துகொள்ளாமல் அவ்வாக்கியங்களை வாயால் உச்சரித்துத் தாம் பிரம்மக்ஞானிகளென நடித்து பிறர்க்கு உபதேசிகளாகி யாவற்றையும் மயக்குகிறார்கள். குருடன் குருடனை அழைத்துச் செல்வதைப்போல, இப்போலிக்குருக்கள் பிறர்க்கு மார்க்கதரிசிகளாகின்றனர். முடிவில் இருவரும் வழிதெரியாமல் திகைக்கின்றனர். சுலபமானதும் அபாயமற்றதுமான கருமபக்திமார்க்கங்களை விட்டு விட்டு, கஷ்டமானதும், அபாயகரமானதுமான இந்த ஞானமார்க்கத்தை அனுஷ்டிக்க முயல்வதால் இருவரும் கேடுறுகின்றனர். இதனால் சித்தசுத்தியடைந்து மேற்கூறிய நான்கு சாதனங்களையும் திடமாகச் சிறிதேனும் அப்பியாசஞ் செய்வதற்குமுன்பு ஒருவன் ஞானமார்க்கத்தை அனுசரிப்பது தவறென உணர்ந்துகொள்க. இந்த சாதனங்களை நன்றாகப் பழகி அவற்றில் தேர்ந்து அதிகாரிகளாகும் மகான்களே ஞானமார்க்கத்தில் நடக்கத் தகுதியுள்ளவராவர்.

நாயஆத்மா பலஹீநேந லப்யோ ந ச
ப்ரமாதாத்தபஸோ வாப்யலிங்காத் ‖

முண்டகோபநிஷத்.

இந்த நான்கையும் அப்பியாசஞ்செய்தால் ஜீவனுடைய புத்தி பரிசுத்தமாகும். அவனது அகங்கார மமகாரங்கள் பூரணமாக நசிக்கும். அவனது புத்தி மிகவும் கூர்மையடையும். அவனது இந்திரியங்கள் மனோபுத்திகளுக்கு வயப்பட்டு நிற்

கும். ஆகாராதி நியமங்களால் அவனது சரீரங்கள் பரிசுத்த மடையும். இவைகளைப்பெற்ற ஜீவன் ஆத்துமஞானத்திற்கு அதிகாரியாவான்.

அந்த ஞானம் எப்படிப்பட்டதென்று பகவான் கீதையில் சுருக்கமாக விளக்கியுள்ளார்.

"எப்பொருட்கு முன்னே யிருக்கின்ற வின்னுயிர்கா
னப்பொருளுக் காதிடு வந்தமுநா—னிப்படியி
லெல்லாமு நானு யியன்ற பரிசதனைச்
சொல்லாரக் கேளாய் தொகுத்து." கீ. வெ. X. 21.

(இ-ள்.) எல்லா பூதங்களின் இருதயத்திலிருக்கும் ஆத்மஸ்வரூபன் நானே. எல்லா பூதங்களுக்கும் ஆதியும் (உத்பத்தி காரணனும்) ஸ்திதியும் (ரக்ஷிக்கின்றவனும்) முடிவும் (லயகாரணனும் நானே.

இனி, ஆத்துமக்ஞானத்தை விரிவாக வருணித்து அதன் லக்ஷணங்களையும் பகவான் விளக்கியுள்ளார்.

"மானமுட னேடம்பம் வன்கொலையின் மாறுநிலை
யானபொறை செவ்வை யமர்குருவின்—பானனுகல்
சுத்தியமர் வுற்ற துணிவுடைமை சூழ்மனத்தைச்
சித்தி யளவுஞ் செறுப்பு." கீ. வெ. XIII. 7.

இந்தியங்கள் சார்பொருளி லென்றுந் துறந்திருத்தல்
வந்தியலு மாங்கார மற்றொழிதல்—புந்தியினுற்
சென்ம மரணஞ் செரைநோய்சேர் துக்கமாம்
புன்மை யுணரும் புணர்ப்பு. (8)

நின்ற நசையறுத னேர்புதல்வர் தாரமனை
யொன்று மனமங் கொழிவித்த—லென்றுஞ்சம
னூர்ந்தே யிருத்த லுகப்புவெறுப் பாம்பொருள்கள்
சேர்ந்து வரலிற் றெளிந்து. (9)

என்பா லனன்னியமா யேய்ந்துபுறம் போகாத
வன்பாரும் பத்தி யமர்வுறுத—லின்பார்

தனியிடத்திற் சார்தல் சனக்குழுவு கண்டால்
நனியுகப்புச் சேரா நலம். (10)

ஆருயிரின் மேலறிவி லாய்ந்தென்று நின்றமர்வு
பேருணர்வாந் தத்துவத்தின் பீட்டறிவு—சீருடைய
மெய்ஞ்ஞான மாமதென மிக்குரைத்தேன் வேறனது
பொய்ஞ்ஞான மாகும் புறம்." (11)

(இ-ள்.) பணிவு, டம்பமின்மை, பரஹிம்சை செய்யாமை, பொறுமை, நல்லொழுக்கம், சத்குருசேவை, மனசுத்தி, சரீர சுத்தி, சாஸ்திரப்பொருள்களில் சலங்காத உறுதியுடைமை, தேகசுவாதீனம், இந்திரிய விஷயங்களில் வெறுப்படைதல், தானென்னும் அகங்காரமின்மை, பிறப்பு, இறப்பு மூப்பு நோய் என்பனவற்றில் துக்கத்தையும் தோஷத்தையும் அறிதல், புத்திர களத்திர கிருக முதலியவற்றில் பிரியமற்றிருத்தல் அவற்றில் அபிமானமற்றிருத்தல், இஷ்டாநிஷ்டங்கள் நேரிட்டபோது எப்போதும் ஒரேவிதமான மனத்தோடிருத்தல், என்னிடத்தில் அனன்னிய யோகத்தாலே ஸ்திரமான பக்திசெய்தல், தனியிடத்தில் வாசஞ்செய்தல், ஜனக்கூட்டத்தில் விருப்பமற்றிருத்தல், ஆத்மதத்துவ ஞானத்தில் எப்பொழுதும் நிஷ்டையுடைமை, தத்துவ ஞானத்தின் உத்தமபலனை தத்துவஞானார்த்த தரிசனத்தைச் சிந்தித்தல், இவைகளே மெய்ஞ்ஞானமாகும். இவற்றிற்கு அன்னியமானவை அஞ்ஞானமாகும்.

மேலே சொல்லப்பட்ட லக்ஷணங்களை யடைவதே ஞானமென்று போதித்து அந்த ஞானத்தின் பலனையும் பகவான் கூறியிருக்கிறார். எதையடைவதால் மனிதன் மோக்ஷத்தையடைவானோ அந்த ஞானஸ்வரூபத்தை நிரூபித்து, ஞானவிஷயமான வஸ்துவையும் பகவான் பின்வருமாறு நிரூபித்திருக்கிறார்.

இவ்வறிவா லெய்து முயிர்தன்னை யீங்குரைக்கே
னெவ்வறிவா னல்லமுத மெய்தலாஞ்—செவ்வையதி
லாதியில தெற்பரமா யான்ற பிரமமா
யீதிலதுண் டென்றுரைப்ப தில். கீ. வெ. XIII. 12.

எங்குங் கரம்பாத மெங்குங்கண் சென்னிமுகம்
எங்குஞ் செவியா மியல்புடைத்தாய்—இங்குலகில்
எப்பொருளும் தன்றகவா லேய்ந்து பரந்துநிற்கு
மப்பொருளின் தன்மை யது. (13

எல்லாப் புலனியல்வு மேய்ந்தே விளங்குமதாய்
எல்லாப் புலனியல்வு மில்லையாய்—எல்லாந்
தரிக்குமொரு தத்தற்றுச் சார்குணமுன் றின்றி
விரித்ததனைத் துய்க்கும் மிக. (14)

பூதங் களுக்குள் புறம்புமாய்த் தானின்று
மீதங் கியல்வதுமாய் மேவியே—போதத்து
நுண்ணிமையி னுன்மிகவு நோக்கரிதாய்த் தூரத்து
மண்ணிமை யிஞலருகு மாம். (15)

வேறுபா டற்றவது வேற்றுமைசேர் பூதத்து
வேறுபா டுற்றதுபோன் மிக்கிருக்குங்—கூறுபா
டுற்றபொருள் தான்பரிக்கு முண்ணுமுண் டாக்குமென
மற்றறியத் தக்கதது வாய்ந்து. (16)

சோதிகளின் மிக்கதுதான் சோதியாய்த் தொக்கதம
மீதுபா மென்னுமுறை மேவமதாய்ப்—போதமெனத்
தானறிய லாவறிவாற் சாருமதா யாவர்க்கும்
ஊனமற வுள்ளிருக்கு முற்று. (17)

இப்படியாற் கேத்திரமு ஞானத் தியல்வகையு
மெய்ப்படியா ஞேய வியப்பதுவுந்—தப்பறவே
யான்றிரளச் சொன்னேனென் பத்தனு யீதறிந்து
தான்றிகழ்ந்தென் மயனுஞ் சார்ந்து. (18)

(இ-ள்.) ஆதியற்ற பரம்பிரமமாகிய அது சத்தாகச்சொல்லப்படுதலுமில்லை. அசத்தாகச் சொல்லப்படுதலுமில்லை. அது எங்கும் கைகளையும் கால்களையுமுடையது; எங்கும் கண்களையும், தலைகளையும் முகங்களையுமுடையது; எங்கும் காதுகளையுடையது; உலகத்தில் யாவற்றையும் வியாபித்துக் கொண்டிராநின்றது; அறியத்தக்க வஸ்துவான அந்த பிரமம் சகல இந்திரியங்களையும் குணங்களையும் அவ்வவற்றின் விஷயங்களையும் பிரகாசிப்பிக்கின்றது; சகலவித இந்திரியங்

களுமற்றது; ஒன்றிலும் ஒட்டாதது; சகலத்திற்கும் ஆதாரமானது; சத்துவாதி குணங்களற்றது; சத்துவாதி குணங்களை ரக்ஷிப்பது; சராசரவஸ்துக்களின் வெளியிலும் உள்ளிலுமுள்ளது; சூக்ஷ்மமாயிருத்தலால் அறியக்கூடாதது; (அஞ்ஞானிகளுக்குத்) தூரத்திலிருப்பது; ஞானிகளுக்கு சமீபத்திலிருப்பது; தாவர ஜங்கமங்களாயுள்ள பூதங்களிலே (காரண சொரூபத்தாலே) பிரிவற்றதாயினும் (காரிய சொரூபத்தாலே) பிரிந்திருத்தல்போலத் தோற்றுவது; சம்ரக்ஷணை காலத்தில் பூதங்களை ரக்ஷிப்பது; பிரளயகாலத்தில் சகலத்தையும் விழுங்குவது; சிருஷ்டிகாலத்தில் சகலத்தையும் உண்டாக்குவது; சூரிய சந்திராதி பிரகாசங்களுக்கும் சோதியைக்கொடுக்கும் சோதி; அஞ்ஞானத்திற்குப் புறம்பானது; ஞானசொரூபமானது; ஞானத்திற்கு விஷயமானது யாதோ அந்த விஷயசொரூபமானது; ஞானத்தாலே அடையத்தக்க ஸ்தானமாயும், சகல பிராணிகளின் இருதயத்தில் விசேஷமாயிருக்கின்றதாயும் சொல்லப்படுவது; இவ்விதம் க்ஷேத்திரத்தின் உண்மையும், அதனினும் வேறான ஆத்மசொரூபத்தைப் பெறும் ஞானத்தின் உண்மைவகையும், க்ஷேத்திரஞ்ஞனுடைய உண்மையான தன்மையும் சங்கிரகமாகச் சொல்லப்பட்டன. என் பக்தன் இவற்றையறிந்து என்னைப்போல் அசம்சாரித்துவ தருமத்தையடைவதற்கு யோக்கியனாகிறான்.

பிரபஞ்சத்தில் மனோவாக்குகளுக்கு எட்டியயாவும் அந்த பிரமசொரூபமே அவைகளை பிரமத்தின் வெளித்தோற்றமாகப் பாவிக்கவேண்டும். கேவலம் பொருள்களாக மாத்திரம் கருதக்கூடாது. எல்லாவற்றிலும் அந்தர்யாமியாகவுள்ள சைதன்னியத்தை அறியவேண்டும். அந்தசைதன்னியம் பரவியிருக்கும் பிராகிருத ரூபங்களைமாத்திரம் அறிவது பிரயோசனமில்லை. அது அஞ்ஞானமாகும். ஆத்துமவிஷயத்தைப் போதிப்பதே வித்தை. ஆத்துமாவைத்தவிர வேறு பதார்த்தமொன்று மில்லையாதலின் இதரவிஷயங்களைப் போதிக்கும் வித்தைகளும், சாஸ்திரங்களும் அவித்தையே. முதலில் பிரகிருதிபோதகமாக விருந்து முடிவில் ஆத்மபோதத்திற்குத் துணையாக விருப்பதால் அபர

வித்தைகளெல்லாம் சநாதனமான பரவித்தைகளின் கிளைகளெனலாம். அதனால்தான் வெளித்தோற்றத்திற்கு வேறுவேறாகக் காணப்படும் ஷட்தர்சனம் ஒவ்வொன்றும் அந்த பாதத்துவ ஞானத்திற்கு சாதனமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எல்லாவித்தைகளும், எல்லாமார்க்கங்களும் பகவத்தத்துவத்தைத் தெரிவிக்கும் கருவிகளாகவும் பகவத்சந்நிதானத்தை அடைவிக்கும் வழிகளாகவும் உள்ளன. ஆதமதத்துவத்தைப் போதிக்கும் வித்தையே வித்தை. பிறவித்தைகள் உண்மையான வித்தையாகா.

வக்த்ர ஹஸ்தாநி பாதாங்ஜாநி ஸஹஸ்ராணி ஸஹஸ்ராணி
க்ஷாம்ஹிநீயவாஜெஜ்ஞீஷா ஶாராஷாஶாராஷா தநிஃயஸ்மி
ஜெராஊநாஜெஜ்ஞீ ஊநி ஊநி || பாகவதம்.

உலகத்திலுள்ள நாநாவித பிராகிருதவிஷயங்கள் எல்லாவற்றிலும் அப்ராகிருதமான ஆதமதத்துவம் அந்தர்யாமியாகப் பிரகாசிக்கின்றது. இவ்வாறு நானாத்துவத்திலும் வெளியாகும் ஏகதத்துவத்தைப் பார்ப்பதே விசேஷமானது.

ஆத்மா ஒன்றே, அது இரண்டற்றது; செய்கையற்றது; உலகில நடைபெறும் வியாபாரங்களெல்லாம் பிரகிருதிசம்பந்தமானது. ஆத்மா எங்கும் வியாபித்துள்ளதால் அது சலனமற்றது. சலனமென்றால் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போவதல்லவா? எங்கும் வியாபித்திருக்கும் தத்துவம் எங்கிருந்து எங்குப் போகக்கூடும்? ஆத்மா இல்லாதவிடம் உலகில் ஊசிமுனையளவுகூட இல்லை. சலனம் என்றபோதெல்லாம ஆத்மாவே பிரகிருதியுடன் கூடி பிரகிருதியைச் சலிக்கச்செய்கின்றதென்று அறியவேண்டும். சலிப்பது பிரகிருதியே. எவ்வளவு நுட்பமான சலனமானாலும், அது பிரகிருதியின் சேர்க்கையில்லாமல் நிகழாது. இதனால் ஆத்மா செய்கையற்றதென்பது வெளிப்படை.

எய்த பிரகிருதி யித்தாற் கருமமெல்லாம்
வாய்ந்தியலு மென்றறிந்து மன்னுயிரை யாய்ந்திவனைக்
கத்தா விவனென்று காண்பா னெவனவனே
சத்தா முணர்வுடையான் றான். கீ. வெ. XVIII· 29.

மற்றும், உலகில்காணப்படும் மாறுதல்களெல்லாம் முக்குணங்களையுடைய பிரகிருதியில் காணப்படுமே தவிர, ஆத்மாவிடம் காணப்படா. பிறப்பு, இறப்பு, பெருக்கு குறைவு முதலியவை பிரகிருதிசமுதாயத்திற்கு உண்டு; ஆத்மாவுக்கில்லை. இவ்வாறு நித்தியமாகவுள்ள ஆத்மாவுக்கும் அநித்தியமான ரூப சமுதாயங்களுக்கும் உள்ள பேதம் விவேகத்தால் விளங்கலாகும்.

எல்லாப் பொருளு மிறுதியினைக் கூடியே
நில்லாத காலத்து நிற்குமதாய், கீ. வெ. VIII. 19

இதுமுதலாகிய வாக்கியங்களிலுள்ள 'இறுதி' என்பதற்கு 'நசித்தல்' அல்லது 'மாறுபடுவது' என்பது பொருள். "பிரகிருதியின் மாறுபாட்டால் ஏற்படும் ரூபங்களெல்லாம் நாசமடையும், அவற்றிலுள்ள ஆத்மா நாசமடையாது" என கீதையில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஈச னவனொருவ னெல்லா ரிதயமார்
தேச மதி னிற்கும். கீ. வெ. XVIII. 61.

ஒத்துப் பொருளனைத்தி லுள்ளே யமர்விருந்
தத்துப் பரமேச னாகியே. கீ. வெ. XIII. 27.

எப்பொருட்கு முன்னே யிருக்கின்ற வின்றுயிர்நான்
கீ. வெ. X. 21.

இந்த ஆத்மா சர்வபூதங்களிலும் சமமாகப் பிரகாசிக்கின்றது. ரூபங்கள் சாத்விகமாயினும், ராஜஸமாயினும், தாமசமாயினும் அவைகளிலெல்லாம் ஆத்மா சமமாகப் பிரகாசித்துக் கொண்டே இருக்கிறது. அதனால், ஆத்மஞானி இவைகளனைத்தையும் சமபுத்தியோடு பார்க்கிறான். ஆத்மஞானியாக விரும்புவோன் அவ்வித சமபுத்தியைப் பழகிக்கொள்ளவேண்டும்.

ஆற்றுணர்ந்த வந்தணனு வத்தியாய் நீசனெனத்
தோற்றுடலுந் தோறுந் துவக்கமைந்தங் கேன்றவுயி
ரொக்க நிகழு முணர்வோ ரெனமறையிற்
றக்க வறிவுடை யோர் தாம். கீ. வெ. V. 17

மேலான வஸ்துக்களிலும், தாழ்வான தோற்றங்களிலும் அழகிய பூதங்களிடத்திலும், பார்ப்பதற்கு இழிவான ரூபங்களிலும், பிரமஞானிகளிடமும் கொடியவரிடமும், பாஷாணங்களிலும் பிரமனிடத்திலும் சமமாக ஆத்மா வியாபித்திருப்பதால், இவைகளனைத்தையும் சமபுத்தியுடன் பார்ப்பதே ஞானம். ஈசுவரன் சர்வ பூதங்களிடத்திலும் ஜீவகலையாகப் பிரகாசிப்பதால் சர்வ பூதங்களையும் வணங்கவேண்டுமென்று பகவான் தமது முக்கியசிஷ்யரான உத்தவருக்குப் போதித்திருக்கிறார். இதுவே மேலானஞானம். இதுவே மேலானமோக்ஷமார்க்கம்.

எங்கு நிகழ்ந்திருக்கு மென்றன்னை யேகமாத்
தங்குஞ் சமநினைவான் ஞானுணர்ந்தா—னங்கங்கே
யெவ்வா றியன்றிடினும் யோகியவ னென்னிடையி
லவ்வா றியன்றவனே யாம். கீ. வெ. VI. 27.

இனி, சர்வபூதங்களிலும் ஆத்மாவைப் பார்ப்பது எவ்வாறு கூடும்? அக்ஞானியிடத்திலும், சூதாடியிடத்திலும், மோசக்காரனிடத்திலும் பிரமஹத்தி செய்தவனிடத்திலும் பிரமஞானியிடத்திலும் சமத்வத்தை எவ்விதம் அனுஷ்டிப்பது? என்ற கேள்விகள் எழலாம். இவரிடமெல்லாம் ஆத்மாவின் கலை ஏற்கனவே இருக்கிறது. எல்லோரும் நானாவிதமான அனுபவங்களை யடைந்து, அவைகள்மூலம் கிடைக்கத்தக்க ஞானத்தைப்பெற்று, முடிவில் ஆத்மஞானிகளாவதற்குத் தகுதியடைகிறார்கள். ஆத்மா வித்துரூபமாகவுள்ள தனது சக்திகளை எல்லாரிடமும் பிரகாசிக்கச் செய்கிறது. மரத்தினது சக்தி ஒருபுறம் இளஅரும்பாகவும், ஒருபுறம் மலர்ந்த பூவாகவும், வேறொருபுறம் இளம்பிஞ்சாகவும், காயாகவும், பழமாகவும் இவ்வாறு பலவித ரூபங்களை யடைந்திருந்தாலும், இவையெல்லாம் ஒரு மரத்திலேயே பிறந்து, ஒரு சுபாவத்தையே அடைந்து, சமமாக இருப்பதுபோல, ஆத்மாவின் கலைகளும் பலவித ரூபங்களாகவுள்ள எல்லா பூதங்களிடத்திலும் சமமாக உள்ளது. முடிவில் அனைத்திலும் ஆத்மகுணங்கள் காலக்கிரமத்தில் பிரகாசிக்க வேண்டியவைகளே. இதனால், ஒருவன் கோரமாயிருந்தா

லும், அழகாகவிருந்தாலும், ஞானசொரூபனாக இருந்தாலும் அக்ஞானக்களஞ்சியமாக இருந்தாலும், தயாசமுத்திரனாயிருந்தாலும், கொடியவனாக இருந்தாலும், எல்லாரிடமும் ஆத்மா பிரகாசிக்கின்றது. இழிவாகக் காணப்படும் வஸ்துக்களிலுள்ள ஆத்மாவும் காலக்கிரமத்தில் பக்குவமடைந்து, ஆத்மகுணங்களையும் பிரகாசிக்கச்செய்யும் இந்தரூபங்களெல்லாவற்றிலும் பிறக்கக்கூடிய அநுபவத்தை ஜீவனடைந்து, அதனால் ஞானத்தையும் பெறவேண்டும். இதனாலல்லவா பகவான் தமதுவிபூதியைக் கூறுமிடத்து, "சலம்பயில்வார் சூதுநான்" (கி. வெ. X, 37.) என்று சொல்லுவர். பிரமஞானிகளிடத்திலும் மூர்க்கரிடத்திலும், பசுவிடத்திலும், நாயினிடத்திலும் சமத்துவத்தைப் பார்த்து ஆத்மபாவனையைச் செய்யவேண்டும். இவ்வாறு பார்ப்பதே உண்மையான ஞானம். அவ்வாறு ஏகத்துவத்தைத் பார்ப்பவனிடம் அக்ஞானம் இராது. அக்ஞானம் நசித்து அக்ஞானவலைகளான சோகமோகங்களும் நசித்தால் அவன் ஆநந்த ஸ்வரூபனாவான்.

யஸ்மிந் ஸர்வாணி பூதாந்யாத்மைவாபூத் விஜாநத:।
தத்ர கோ மோஹ: க: ஶோக ஏகத்வமநுபஶ்யத:॥

ஈசாவாஸ்யம்.

எப்பொருளைப் பார்த்தாலும் அதனிடம் ஆத்மா எவ்விதம் பரிபக்குவமடைகிறது? எவ்விதஞானம் இந்தரூபத்தையடையகூடும்? என்று ஆராய்ந்தால், ஒவ்வொருரூபமும் உலகிற்கு அநுகூலமாகவே காணப்படும். அவ்வாறின்றி பொருள்களிலுள்ள இழிகுணங்களைமாத்திரம் பார்த்து, அவற்றில் வெறுப்புக்கொள்பவனுக்கு பிரகிருதிசம்பந்தமான குணங்கள் மாத்திரம் காணப்படும். ஆத்மஞானம் அவனிடம் சிறிதேனும் பிறவாது. எல்லாபூதங்களிடமும் ஆத்துமசக்தி பிரகாசிப்பதைப் பார்க்கப் பார்க்க, பூதங்களெல்லாம் பகவானது மகிமையைத் தோற்றச்செய்வதாகத் தெரியவரும். அதனால் எவ்விடத்திலும் எச்சமயத்திலும் ஆத்துமாவைக் காண

வேண்டும். இதுவே மேலானஞானம். இவ்விதம் காண்பவனே ஆத்துமஞானி, இதுவே ஞானயோகம்.

ஆத்மஞானியாகவுள்ளவன் ஆத்மகலையை எல்லாவற்றுள்ளும் பார்ப்பான். அக்ஞானியும் ஆத்மபிரகாசத்தை எவ்விடத்திலும் பார்த்தாலும் அது ஆத்மபிரகாசமென்பதை அவன் அறியான். உலகில் ஒவ்வொருவனும் பலவிஷயங்களை விரும்புகிறுன். அவ்வவ்விஷயங்களில் பிரியத்திற்குக் காரணமான யாதேனுமொன்று இல்லாவிடில் அவன் அவைகளை விரும்புவானே? ஒவ்வொன்றிலும் மனத்தைக் கவரத்தக்கதும், இன்பத்தை ஊட்டக்கூடியதுமான யாதேனும் ஒன்றிருக்கவேண்டு மல்லவா? அதுவே ஆத்மதேஜஸ் என்று அறியவேண்டும். பாமரன் ஒருவன் ஒரு ரூபத்திலுள்ள அழகுமுதலியவற்றைக் கண்டு, அதில் ஆசைவைப்பது இயல்புதான். அதில் ஆத்துமா இல்லாவிடில் அக்குணங்கள் பிரகாசியா. அவனுக்கும் அவை புலனுகா. உலகில் காணப்படும் எல்லா வனப்புக்களும், ஒளிகளும், ஆத்மாவினல் ஏற்பட்டனவேயன்றி வேறல்ல. ரூபங்களில் ஆத்மாவிருப்பதால் அவைகளிடம் காணப்படும் வனப்புக்களெல்லாம் ஆத்மாவால் ஏற்பட்டவையாகும். அந்தரூபங்களுள் இயற்கையாக அவை காணப்பெறு. இது கீதையில் பின்வருமாறு குறிக்கப்பட்டுள்ளது.

எது விபூதியுடைத் தேது திருவுடைய
தேது மிகவுயர்த்தி யேதுபொரு— ளேத்துதான்
என்னுடைய தேசதனி லேகதே சத்துளதா
வுன்னுடைய நெஞ்சா லுணர். கீ. வெ. X. 42.

(இ. பொ.) உலகில் ஐசுவரியத்தையுடையதும் காந்தியையுடையதும் உயர்வாகக் கருதப்படுவதுமான வஸ்துக்கள் யாவையோ அவையெல்லாம் எனது தேஜஸின் கலைகளால் உண்டானவை என்பதை நீ அறி.

ஆதலால் உலகில் ஏதேனும் ஒன்று வனப்புள்ளதாகவிருந்தால், அதிலுள்ள வனப்பை உண்டாகச்செய்தது ஆத்மாவென்பது நிச்சயம். இவ்விஷயத்தையே மைத்திரேயிக்கு அவளது பர்த்தா யாக்ஞவல்கியமகரிஷி மிகவும் அழகாக உபதேசித்திருக்கிறுர்.

𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌜𑌾𑌯𑌾𑌯𑍈 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌜𑌾𑌯𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌜𑌾𑌯𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌭𑌵𑌤𑌿। 𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌪𑌤𑍍𑌯𑍁𑌃 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌪𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌪𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿। 𑌨 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌦𑍇𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌦𑍇𑌵𑌾𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿॥ பிரஹதாரணியகம்.

(இ. பொ.) மனைவியின்பொருட்டு மனைவியைப் புருஷன் இச்சியார். மனைவியிடமுள்ள ஆத்மாவின்பொருட்டே அவர் தம் மனைவியை இச்சிப்பர். பர்த்தாவின்பொருட்டு பர்த்தாவை ஸ்திரீகள் இச்சியார்; அவரிடமுள்ள ஆத்மாவின் பொருட்டே அவர் தம்பர்த்தாவிடம் பிரியம் வைப்பர். இவ்வாறு ஒவ்வொரு வஸ்துவும் தானே பிரியத்தைக்கொடுக்காது. அதனிடமுள்ள ஆத்மாவின்பொருட்டே அது பிரியமுள்ளதாகும். இவ்வாறே தேவதைகளும் தேவதைகளா யிருப்பதால் மட்டும் பிரியப்படத்தக்கவராகார். அவரிடமுள்ள ஆத்மாவின்பொருட்டே அவர் பிரியப்படத் தகுதியுடையவராவர்." இவ்வாறு ஆத்மா பரம பிரீதியுள்ளதாக இராவிடில் ஒவ்வொன்றும் உலகத்தில் பிரியமுள்ள ரூபமாகப் பிரகாசிக்காது. உலகில் அது நிலைத்திருப்பதே அசாத்தியம். எல்லா இந்திரியங்களுக்கும் பிரியமான விஷயங்களில் அந்தர்ப் பூதமாகவுள்ள ஆத்மாவை அறியவேண்டும். இவ்வாறு ஆத்மாவை எவ்விடத்திலும் பார்த்துக் கேட்டுச் சிந்தித்தால் ஆத்மாவின் சானித்தியத்தை ஜீவன் அடையக்கூடும்.

𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌾 𑌅𑌰𑍇𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑍋 𑌮𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑍋 𑌨𑌿𑌦𑌿𑌧𑍍𑌯𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌃 ॥ பிரஹதாரணியகம்.

இவ்விதமாக ஆத்மாவை எங்கும் பார்த்தால் தன்னிடமுள்ள ஆத்மாவும் சர்வபூதங்களிடமுமுள்ள ஆத்மாவும் ஒன்றென்னும் ஞானம் படிப்படியாக ஜீவனிடம் ஏற்படும் காலகருமங்கள் பரிபாகமடைந்தவுடன், பரம தயா நிதியான மகாகுரு அவனுக்குத் தத்துவோபதேசம் செய்வர். 'தத்துவமசி' என்ற மகாவாக்கியத்தை அவர் உபதேசித்தால், பிரம்மாத்துமைக

ஞானம் அவனிடம் தெளிவாய் ஏற்படும். உண்மையான ஆத்ம ஞானம் காலக்கிரமத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் தானே உண்டாகவேண்டுமேயொழிய, பிறர் எவ்விதமகாத்துமாக்களாக விருந்தபோதிலும் அதை அவனிடம் பிறப்பிக்கமுடியாது. 'தத்துவமசி' என்ற மகாவாக்கியத்தின் பொருளை ஆசாரியர்மூலமாக உபதேசம்பெற்று, சிஷ்யன் அதன் பொருளைச்சிந்தித்தால், வெகுகாலத்திற்குப்பிறகு 'அகம்பிரம்மாஸ்மி' என்ற ஞானம் அவனிடம் தானே பிறக்கும்.

இந்தஞானம் ஆத்மாவிடம் பிறக்கிறது அவ்விதஞானம் தெளிவாயினும், மகாகுருவினால் உபதேசிக்கப் படவேண்டும். அவ்விதவுபதேசம் அடைவதற்கு ஞானிகளும் தத்துவதரிசிகளுமான மகாத்துமாக்களை யோக்கியனான சிஷ்யன் விதிப்படி சமீபித்து அவர்களுக்குத் தொண்டுசெய்து, பாதத்துவத்தைக் குறித்துக் கேட்டால், அவர் உபதேசிப்பர் என்று பகவான் கீதையில் உரைத்துள்ளார்.

அந்த வறிவை யறிநீ யடிவணங்கிச்
சிந்தை யுடன்கேட்டுச்சேவித்தே—முந்தறிவை
யொத்'துபதே சிப்பர் உனக்குணர்ந்தோராய்த்'
தத்துவத்தைக் கண்டிருப்பார் தாம். கீ. வெ. IV. 24.

அவ்வித குருக்கள் சாஸ்திரஞான முள்ளவராகமட்டுமிருந்தால் போதாதென்று "உணர்ந்தோராய்த் தத்துவத்தைக் கண்டிருப்பர் தாம்" என்று அவர்க்கு இரண்டு விசேஷணங்கள் கூறப்பட்டுள்ளன. சாஸ்திரஞான முண்டாகி அவ்விதஞானத்தை குருமுகமாகத் தெள்ளிதாய் அடைவதற்காக சிஷ்யனது இலக்ஷணங்களைக்கூட பகவான் கூறியிருக்கிறார்.

ஆதரவு மிக்கான் அறிவுபெறு மாங்கதனின்
மீதமரும் தன்மையான் வென்றுபுலன்—போதமது
பெற்றெல்லை யாங்கே பெரிதான சாந்தியினை
உற்றெய்தும் யோகி யுணர்ந்து. கீ. வெ, IV. 38,

(இ. பொ.) குருவின் உபதேசத்தில் உண்மையான சிரத்தை யுள்ளவனையும் ஞானமடைதலில் முயற்சியுள்ளவனையும் இந்திரியங்களை

அடக்கினவனும் உள்ளவன் ஞானத்தையடைகிறான்: விரைவில் உத்தமமான மோட்சத்தையும் அடைகிறான்.

உண்மையான சிரத்தையென்றால் குருவாக்கியத்தில் கலங்காத விசுவாசம் வைத்தல். சிஷ்யன் ஜகதீஸ்வரனிடம் நிர்மலமான பக்திகொண்டு, ஈஸ்வரனே கதி என்ற திடமான நிச்சயம் அடையவேண்டும். இந்திரியங்களை நன்றாக வசப்படுத்திக்கொள்ளவேண்டும். இந்திரியமனசுகளை சுவாதீனஞ் செய்து கொண்டு ஈஸ்வரனிடம், மிகுந்த பக்தியும், குருவாக்கியத்தில் அதிகப்பற்றுமுடைய சிஷ்யனுக்கு ஞானிகளும், தத்துவஞானங்களை உபதேசிப்பர். அவ்வித உபதேசங்களைப்பெற்ற புண்ணிய ஆத்மாக்கள் அவைகளைச் சிலகாலம் மனனஞ்செய்து, மனத்தில் நிறுத்திக்கொண்டு வந்தால், அபரோக்ஷஞானம் தானே அவர்க்குப் பிறக்கும். குருவாக்கியத்தை சிரத்தையுடன் மனத்தில் சிந்தித்தால் சாந்தமான அவரதுமனத்தில் ஆத்மசொரூபம் பூரணமாகப் பிரகாசிக்கும். 'அகம் பிரம்மாஸ்மி' என்ற ஞானம் உண்டாகவே, அவர்கள் உண்மையான பிரம்மஞானிகளாகி, "பிரம்மஸத்பிரம்மைவபவதி" (பிரமத்தை அறிந்தவன் பிரமனாகிறான்) என்றபடி, பிரமசொரூபராகிறார்கள். அத்தகைய மகாபுருஷர்கள் சரீரதாரிகளாயினும் முக்தர்களேயாவார்கள். அவர்களே ஜீவன் முக்தர்கள். அந்தமகாத்மாக்களுக்கு பிரபஞ்சங்கள் பிரம்மாண்டங்களெல்லாம் நன்று புலனாகும். அவர்களுக்குப்புலனாகாத பொருள்களே இல்லை. அவர்கள் மாயையையும் ஜெயித்தவராவார்கள். முக்குணங்கள் பொருந்திய பிருகிருதியெல்லாம் அம்மகாத்மாக்களுக்கு உட்பட்டவையே. அவர்கள் முக்குணங்களையும் கடந்தவர்கள். இவ்வித மகாபுருஷர்கள் இவ்வுலகில் எவ்வாறு வர்த்திப்பார்களென்பதை பகவான் கீதை இரண்டாம் அத்தியாயத்தின் முடிவில் ஸ்திதப்பிரஞ்ஞனது இலக்ஷணங்களாகவும், 12-ம் அத்தியாயமுடிவில் பரமபக்தனது லக்ஷணங்களாகவும், 14-ம் அத்தியாய முடிவில் குணாதீதர்களின் லக்ஷணங்களாகவும் விவரித்திருக்கிறார்.

ஆங்கவனுக் கண்ணே லதுவுரைத்தா னாங்குயிரின்
பாங்கதனாற் றானே படிந்தமைந்து—தாங்கரிய
எண்ணரிய காமங்க ளெல்லாம் துறக்குமவன்
திண்ணிறவ னாதுமெனச் செப்பு. கீ. வெ. II. 51.

துன்பத்தில் என்றும் துளங்கா மனத்தனாய்
இன்பத் திடையாசை இல்லவனாய்ப்—புன்பற்றில்
அன்பு பயம்வெகுளி யற்றவனே யாங்குணர்வின்
வன்பு பெறுமுனியா மற்று. கீ. வெ. II. 52.

எங்கு மருவுநசை யேதும் அறத்துறந்து
தங்கு நலந்தீங்கு தானணைந்தே—அங்கங்கும்
உத்தும் உகப்பும் முதிர்வெறுப்பும் அற்றார்க்கு
வந்து நிலையா மதி. ,, 53.

அங்கங்கள் ஆமை அகத்தடக்கு மாறுபோல்
இங்கு ஐம்பொறிகள் இபல்பணைத்தும்—பொங்குஐம்
புலனின்று அகத்தடக்கும் போதத்தனுக்கு
வலனின்ற வேற்குமே வந்து. ,, 54.

துய்யாது தான்துறந்தான் துய்த்தபொருள் விட்டாலும்
மெய்யாருஞ் சங்கம் விடாதிருக்கும்—பெய்யவே
சென்று பரமாகுஞ் சீருயிரைக் கண்டக்கால்
நின்று அதுவும் நீங்கும் நெகிழ்ந்து. ,, 55.

முயன்றிடினுந் தன்புலன்கள் மொய்ம்பான் மனத்தை
இயன்று நிலைதொலைக்கு மென்பால்—நயந்தே
அவையென்றுங் காக்கில் அவன்கண் வசமா
நவையின்று நிற்குமதி நன்கு. ,, 56

புன்பொருளை யுள்ளும் புமானுக்கு அதிற்சங்கம்
பின்பதனாற் காமமதிற் பின்வெகுளி—அன்பதனான்
மோகமதிற் பொன்றும் மிருதி அதிற்புத்தியழிவு
ஆகுமதிற் றானசிக்கு மாங்கு. ,, 57.

உகப்புவெறுப் பற்றுத்தன் உன்னதத்தாற் பொருள்கள்
அகத்துவச மாம்புலனா வார்ந்தோன்—மிகத்தெளிவு
சேருமதிற் றுயருந் தீருந் தெளிநெஞ்சில்
ஆருநிலைப் புத்தி ஆசு. கீவெ. ,, 58.

மற்றோ ரிடத்து மறமற்று மித்திரனாய்
உற்றான் கருணை உறுமமதை—செற்றான்
அகங்கார மற்றான் அமர்பொறையன் துக்கஞ்
சுகங்காணில் ஒப்பான் துணிந்து கீ. வெ. XII. 13.

பெற்றதமைந் தென்றும் பிறங்குயிர்க்கண் யோகியாய்
உற்றமன முள்ளொடுக்கி யோர்ந்துதெளிந்து—அற்றமற
என்னமர்ந்த நெஞ்சு துணிவெய்தியான்தான் என்பத்தன்
தன்னமர்ந்து நானுகப்பன் தான். ,, 14.

யாவனால் அஞ்சாது உலகு உலகால் அஞ்சாதான்
எவன் உகப்பு ஆறாமை ஏய்ந்தபயம்—மேவுநடுக்கு
ஆங்கவைதாம் விட்டே அமர்வுற்று இயல்பவனும்
ஈங்குகப்புக் கேய்ந்தான் எனக்கு. ,, 15.

வேண்டுதலிலான் தூயான் தக்கன் விருப்புறான்
ஈண்டுபகைப் பற்றறுப்பான் எத்தொழிலும்—மூண்டுபுறத்
தேதியலா தேங்கமும் யோகத்தா னென்பத்தி
யாதியல்வான் என்னுகப்பினன். ,, 16.

உகப்புவெறுப் பொன்றிலுமற் றுட்சோக மற்று
மிகப்பயினு மாசை விடுத்துச்—சகத்தமரும்
நன்மையுடன் தீமை நசித்தியலும் பத்திமான்
என்மனத்தி லின்பத்தா னிங்கு. கீ. வெ. XII. 17.

என்னலர்க ளுற்றார் விருப்பிழவோ டுற்றகுளிர்
பன்னபு லின்பதுன்பம் பாவுழி—மன்னுபுகழக்
கொத்தமைந்து மௌனியா யூர்மனையற் றுற்றுணர்ந்த
பத்தனவ னென்னுகப்பின் பற்று. ,, 18.

ஏவரித் தனமியா மின்னமுத யோகத்தை
மேவி யுரைத்தவகை மேவுவார்—ஆவலுடன்
எற்பரம ராகு மெழிற்பத்தர் யானுகப்ப
நிறப ரவர்மேலாய் நிகழ்ந்து. ,, 19.

ஈண்டவனுக் கண்ண லியல்பின் தகவுரைத்தான்
பாண்டவனே முந்திப் பரந்தவொளி—மூண்டியற்றி
மோகமுள வற்றை முனியான்முன் மூண்டத்து
வேக நசையிலாண் மிக்கு. கீ.வெ. XIV. 22

முன்னாக் குதாசினன் போலிருக்கு முக்குணங்கள்
தன்னாற் றலைந்திடினும் தான்சலியான்—மன்னுகுணச்
செய்தியிது வென்றிருக்குஞ் செய்தொழிலிற் சேட்டியான்
மெய்திருந்து நெஞ்சுடையான் மேல். ,, 23.

தன்சுகத்துந் துக்கத்துந் தான்சமனாய்த் தன்னமர்ந்து
பொன்கலுட னோடிதனிற் புந்தியொத்தோன்— அன்பர்
வெறுப்ப ரிடையொப்போன் மிகுபழிநன் கீர்த்தி
நிறுத்த சமனிற்கு நிகழ்ந்து. ,, 24.

தன்னமரு மானமவ மானஞ்சா ராநண்பன்
வுன்னலர்தம் பக்கத்து மொத்தியல்வான்— மன்னவருஞ்
செய்ம்முயற்றி யெல்லாஞ் செய்யா னவன்குணங்கண்
மெய்ம்முயற்றி யாற்கடந்தான் மிக்கு. கீ. வெ. XIV. 25.

இன்னோர் தம்மனத்திலுள்ள இச்சைகளை பூரணமாக விட்டு எப்போதும் ஆத்மர்விடம் ஆநந்தித்துக் கொண்டிருப்பர். துக்கங்கள் நேர்ந்தபோது, அவரதுமனம் கலங்காது. சுகங்களில் அவரதுமனது பொங்காது. சுகதுக்கங்கள் நேரிடும்போது, விகாரமற்றிருப்பர். விருப்புவெறுப்புக்களைப் பூரணமாக விட்டுவிடுவர். சர்வபூதங்களிடத்திலும் நட்புக்காட்டும் நல்லமனமுடையவராவர். நான் எனது என்றபாவங்கள் தேடினாலும் அவரிடம் அகப்படா. எக்காரியத்தைச் செய்தாலும், மனத்தையும் புத்தியையும் ஈஸ்வரனிடம் அர்ப்பணஞ் செய்து, கடவுளுக்குத் தாம் ஊழியராதலின், உலகநன்மையின்பொருட்டே அவர்கள் கருமங்களைச்செய்வர். தம் அறியாமையால் உலகத்தார் அவர்களுக்குத் தீங்கிழைத்தாலும், அல்லது அவரைத் தாங்கினாலும், வைதாலும், புகழ்ந்தாலும், மதித்தாலும், வெறுத்தாலும், அவர்கள் எப்போதும் ஆநந்தமுடையவராய், ஒன்றிலும் ஆசைவைக்காமல் ஆத்மஸ்வரூபத்தை நாடியவராகவே யிருப்பார்கள். இவர்கள் குணங்களுக்கு அதீதராதவின் குணங்களின் சேஷ்டைகளைப்பற்றி வெறுத்துரையார். தகாதவிஷயங்களை இச்சியார். பிறரை நிந்தியார். சுகதுக்கங்களைச் சமமாகப்பாவித்து, மண், கல், பொன் மூன்றையும் ஒருபடித்தாக நோக்குவர். விருப்பு வெறுப்புக்களையும், புகழ்ச்சி இ

கழ்ச்சிகளையும், மான அவமானங்களையும் ஒன்றுபோல எண்ணு வர்; நட்புப்பகைகளை ஒரேவிதமாகப் பாவிப்பர். தன்னயங்க ருதி எக்காரியத்தினையும் செய்ய விரும்பார். உலகின்மேன்மை யின்பொருட்டே காரியங்களைக் குறைவறச் செய்துவருவர். ஈஸ்வரனது பிரதிநிதிபோலத் தம்மைப் பாவித்துக்கொண்டு வேறுஉத்தேசமின்றித் தமதுசரீரமிருக்கும்வரைக் காலங்கழி ப்பர். இத்தகைய பெரியோர்களே பிரமஞானிகள்.

பிரமஞானிகளை மேற்குறித்த ஒழுக்கங்களால் அறியவே ண்டும். இந்நாட்களில் சிலர் மகாவாக்கியங்களை வாயால் உச்ச ரித்துக்கொண்டு, தாம் பிரமஞானியென்று உலகில் பறையறை ந்துகொள்வர். விஷய சுகங்களை விரும்புவர்; இந்திரியங்களை வி ஷயங்களில் செலுத்துவர். தாம் பிரமசொரூபிகளென்று வாய் வார்த்தைகளால் மட்டும் சொன்னால் அவர்கள் பிரமஞானிகள் ஆகார். அவ்விதம் சொல்லுவது பிரமஞானிகளின் லக்ஷணமன் று. பிரமஞானிகள் உலகமேன்மைக்குப் பாடுபடுவர்; தம் சுகத் தைச் சிறிதும் நாடார். சாத்தியமானவரை அதற்கு விரோதிக ளாகவிருப்பர். முன்விவரித்தபடி சாதன சதுஷ்டயங்களைப் பூரணமாக ஐயந்திரிபு அறச் சாதித்துக்கொண்டு, உலகில் ஒன் றையும் விரும்பாமலிருப்பவன், முதலில் குடீசகனாகிறான். ஆத் மாவிடம் திடநிச்சயம் உண்டானவுடன், அவன் பகூதகனாகிறா ன். ஆத்மாவே தானென்னும் ஞான முதிர்ந்தவுடன், அவன் ஹம்ஸனாகிறான். யோகாப்பியாசத்தால் ஆத்மதத்துவம் அவ னுக்கு வெளிப்பட்டவுடன், அவன் பரமஹம்ஸனாகிறான். இவ் விதம் சாதனசதுஷ்டய சம்பத்துச் சிறிது ஏற்பட்டதுமுதல் அபரோக்ஷஞானம் கிடைக்கும்வரை நான்கு சோபானங்கள் (படிகள்) மனிதருக்கு ஏற்பட்டுள்ளன. சாதனசதுஷ்டய சம்ப த்துண்டான மனிதன் ஞானத்திற்கு அதிகாரியாகி, காரணகு ருவினது கடாக்ஷத்திற்குப் பாத்திரனாகிறான். அப்போது, உல கின் மேன்மையின்பொருட்டு மறைவாகவர்த்திக்கும் காரணகு ரு அவனுக்குப் பிரத்தியக்ஷமாகி, சூக்ஷ்மமான தத்துவங்க ளைப் படிப்படியாக உபதேசிப்பர். இந்த உபதேசம் ஸ்தூலதே

கத்தில் வர்த்திக்கும் ஜீவனுக்கு ஜாக்கிருதாவஸ்தையில் சாமானியமாகக் கிட்டாது. சொப்பனத்திலும், சமாதியிலுமே சூக்ஷ்மசரீரதாரியான ஜீவனுக்கு அது சித்திக்கும். இதுவே உண்மையான உபநயனம். பாலியத்தில் நடக்கும் உபநயனம் இதையே குறிக்கிறது. அவ்வித உபதேசத்தை அவன் பெற்றது முதல் அவன் அம்மகாத்மாக்களால் சிக்ஷிக்கப் பட்டு, ரக்ஷிக்கப்பட்டு வருவதால், அவன் படிப்படியாகப் பரிபூரணனுவான்.

இந்தஜீவனே உண்மையான சந்நியாசத்திற்குத் தகுந்தவன். இகபரசுகங்களில் அவனிடம் திடமான வைராக்கியம் இருப்பதால் அவைகளுக்குச் சாதனமான கருமங்களை முற்றிலும்நீக்கி, ஞானசாதனங்களையே அவன் கைப்பற்றுவான். பரமார்த்தஞானத்தை அடைவதற்கு யோகாப்பியாசம் முக்கிய சாதனமாதலின், ஒவ்வொரு ஜீவனும் அதை அப்பியாசம் செய்யவேண்டும். இந்தயோகவிஷயம் வேறொரு அத்தியாயத்தில் விவரிக்கப்படும்.

இகலோக பரலோக சுகமொன்றிலும் மனது செல்லாதிருந்தாலும் இந்தஜீவன் பிறருடன் ஓரேவீட்டில் வர்த்திப்பதால் அவன் குடீசகன் எனப்படுவான். பிறகு அந்தவீட்டைவிட்டு வெளியேறி, தனக்கென வாசஸ்தலமில்லாது இரவிற்கு ஊருராகத் திரிந்துகொண்டு ஆத்மாவிடம் தன் ஸ்திரபுத்தியை ஜீவன் செலுத்திவந்தால், அவன் பகூதகன் எனப்படுவான். பகூதகன் குடீசகனைக் காட்டிலும் ஒருபடி உயர்ந்தவன்.

இந்த இரண்டாவது நிலையில் இவன் ஆத்மாவிடம் திடமனதுகொள்வான். இந்நிலையிலிருந்து மறுபடியும் சம்சாரமோகத்தில் விழ அவனுக்கு அவகாசம் ஏற்படாது. ஆத்மசொரூபத்தை அவன் நன்றாக வுணராமற்போயினும், ஆத்மா ஒன்றே அறியத்தக்க தத்துவமென்ற உறுதியான எண்ணம் அவனிடம் ஏற்படும். அந்தத் தத்துவத்தைத் தெரிந்துகொள்வதற்காக அவன் தன்மனத்தை ஒருநிலைப்படுத்தி, சித்தத்தையடக்கி அதை ஆத்மாவிடம் சேர்ப்பான். அப்போது ஆத்மசொரூபம்

படிப்படியாக அவனுக்குப் புலப்படும். இந்திரியங்களை விஷயங்களிலிருந்து திருப்பி, மனத்தை இந்திரிய சுகங்களை வேண்டாதபடி ஒருநிலைப்படுத்தி, அசைவற்று ஆத்மநிஷ்டையி லிருக்கும்போது காற்றுவீசாத விடத்திலுள்ள சலனமற்ற குளஜலத்தில் சூரியபிம்பம் தெளிவாகவும், பூரணமாகவும் பிரதிபலிப்பது போல அவனது சாந்தமான சுத்தஇருதயத்தில் ஆத்மா பிரதிபலிக்கும். அவன் அப்போது ஆத்மசொரூபத்தைச் சிறிது அறிந்து அந்தஆத்மாவே தானென்னும் ஞானத்தை அடைவான். அத்தருணத்தில் 'ஹம்ஸ' என்றநாமம் அவனுக்குத்தகும். 'அகம் ஸ:' 'நானே அவ்வாத்மா' என்றஞானம் சிறிது அவனிடம் ஏற்படும். யோகம் அவனிடம் திடமாக ஏற்பட்டவுடன், அவனது சூக்ஷ்மதிருஷ்டி விருத்தியாகும். படிப்படியாக ஸ்தூலசரீரத்தை விட்டுவிட்டு சூக்ஷ்மசரீரத்தில் சுதந்தரமாக வர்த்திக்கும்சக்தி அவனிடமுண்டாகும். தனதுஸ்தூலசரீரம் அநாத்மா வென்பதை அவன் தனது அனுபவத்தாலேயே தெரிந்து கொள்வான். நாளடைவில் வரிசையாக எல்லாதேகங்களையும் ஒன்றன்பின்ஒன்றாக விடுத்து, அவையனைத்தையும் அநாத்மாவாக அறிந்துகொள்வான். மனோவிருத்திகள் யாவும் அநாத்மாவின் விகாரங்களாக அவனுக்குப்புலனாகும். முடிவில் தேகமெல்லாவற்றினும் லக்ஷணமுள்ளதும், எல்லாதேகங்களுக்கும் ஈஸ்வரனுமான ஆத்மாவைத் தெரிந்துகொள்ளுகிறான்.

ஹிரண்மயே பரே கோஶே விரஜம் ப்ரஹ்ம நிஷ்கலம் | தச்சுப்ரம் ஜ்யோதிஷாம் ஜ்யோதிஸ்தத்யதாத்மவிதோ விது: ||

முண்டகோபநிஷது.

ஆத்மாவே தானென்று தன் அனுபவத்தால் அறிந்தபோது அவன் 'அகம் பிரம்மாஸ்மி'' ''சர்வம் கல்பிதம்பிரம்ம'' என்றவாக்கியங்களின் உண்மையான அர்த்தங்களை அனுபவித்து அபரோக்ஷஞான முள்ளவனாவான். இந்நிலையில் அவன் "பரமஹம்ஸன்" எனப்படுவான். இவ்விதமாக அபரோக்ஷஞான முண்டானவர்களே "பரமஹம்ஸபரிவிராஜகர்" என்றழைக்கப்படுவதற்குத் தகுதிபெறுவர். இவ்வித ஞானமில்லாதவரிடம் இந்

தசப்தம் பேர்மட்டிலேதான் நிற்கும். இவ்விதஞானிகளைக் குறித்தன்றே "வேதாந்த விக்ஞானஸுநிச்சிதார்த்தா ஸந்யாஸயோகாத்யதயச்சுத்தசத்வா: ("வேதாந்தஞானத்தால் நிச்சயிக்கப்பட்ட சித்தாந்தமும், சந்நியாசயோகமும், இந்திரியநிக்கிரகமும் சத்துவகுணமுமுள்ள") என்று சுருதிகளில் பிரதிபாதிக்கப்பட்டுள்ளது. வேதாந்தவிக்ஞான மென்ருல் வேதாந்தத்தில் பிரதிபாதிக்கப்பட்ட ஞானம். இது ஸ்வானுபவத்தால் திடப்படும். அதனுல் வேதாந்தவிக்ஞானமென்று இங்கு உபயோகப்பட்டுள்ளது. இவ்வித திடஞானத்தால் ஆத்மதத்வத்தில் திடமேற்படும். இவ்விததிடத்தை யடைந்தவரே பரமஹம்ஸபரிவிராஜகர் ஆவர். அவரிடம் அகம்பாவம் எள்ளளவு மிராது. அவரைத்தொழுவோர் அவரை பிரும்மசொரூபரென்றெண்ணி " நமோ நாராயணாய " என நமஸ்கரிப்பர்.

இதுவே ஞானமார்க்கம். ஜீவனுக்கு ஞானம் நிலையாக ஏற்பட்டு, முடிவில் ஆத்மதரிசனமும் ஏற்பட்டவுடன், அவன் ஞானயோகியாவான். ஆத்மசொரூபத்தைத் தன் அனுபவத்தால் தெரிந்தவுடன், உத்தமமான பரபக்தி அவனிடம் பிறவாமல் தீராது. பக்திஞானங்கள் அவனிடம் பிரகாசிக்கவே உலகஇதத்தின்பொருட்டு அவன் கருமங்களைச்செய்து பரிபூரண கருமஞானியு மாவான்.

இப்படி மூன்றுலக்ஷணங்களும் பரிபூரணமானவுடன் அவனிடம் இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்றமூன்று பூரணமாகப் பிரகாசிக்கும். அவன் சச்சிதானந்தசொரூபனுகி உலகில் விளங்குவான். இன்னோர் பிரமவித்தியாநிதிகளாய், பிரமஞானிகளாய், பாமரஜனங்களுக்கு வழிகாட்டிகளாய், பாமரராய் உலகிலிருப்பவர்களுக்கும் விதேகரான மகாத்மாக்களுக்கும் இடையில்நின்று, பிரமவித்யாரகசியங்கள் உலகில் நசிக்காமல் காப்பாற்றி, மானவகோடிகளின் ரக்ஷகராய் வர்த்திப்பர்.

தன்னயம்கருதி, தனது முக்தியைமட்டுங் கோரிக்கொண்டு சிலர் இருப்பதுமுண்டு. இகலோகவிருப்பங்களைப் பூரண

மாகவிடுத்து சொர்க்கசுகத்தையும் கோராமல் உண்மையில் நிராசையுடன் நிலர்வர்த்தித்தாலும் அவர்கள் பகவானுக்கு அர்ப்பணமாகக் கருமங்களைச்செய்தாவது, சகுணோபாசனஞ் செய்தாவது சித்தசுத்தியைப் பூர்த்தியாகஅடையாமலும் சர்வபூதஇதரா யிராமலும் இருப்பதுண்டு. இன்னோர் பிறரை விரும்புவதைப் பந்தரூபமாகப் பாவித்து, எள்ளளவும் அதைஎண்ணாமல் பூதஇதத்தையும் மறந்து, ஏகாந்தமாக வர்த்தித்து எல்லாரையும் ஒரேவிதமாக தூரத்திலுள்ளவர்களாகச் செய்து, தன் முக்தியிலேயே ஆசைவைத்து, பிறர் இதத்தைச் சிறிதேனுஞ் சிந்திப்பதில்லை. இவர்களுக்கு இவ்வுலகில் மறுபடியும் பிறப்பதற்குவேண்டிய பந்தமொன்றும் தற்காலத்தில் இராததால் இகலோகஜன்மத்தை இவர்கள் இக்காலத்தில் அடையார். இவர்கள் தமக்கு சொர்க்கஆசைகளும் இல்லாமற் செய்துகொண்டதால், சொர்க்கத்திலும் அவர்களுக்கிடமில்லை. இவர்கள் சர்வபூதஇதர்களாக இராமையால், சர்வபூதாத்மகமான பிரமதாதாத்ம்யத்தை இவர்கள் அடையார். இவர்கள் பிரமலோகத்தில் சிறிதுதூரம் போனாலும் மறுபடியும் ஏதோ காலாந்திரத்தில் சம்சாரத்திற் பிரவேசித்து "சர்வபூதாத்ம பூதாத்ம" ஆகும்வரை சம்சாரத்தி லிருக்கவேண்டிவரும்.

வேதா வுலகளவு மீண்டு வருமுலகென்று
ஓதா நின்றார்கள் உணர்வுடையோர்—போதார்ந்த
தாராருங் கௌந்தேயா வென்னடைந்தார் தாமீண்டு
வாரார் மறுபிறப்பின் வாய். கீ. வெ. VIII. 15

(இ. பொ.) பிரமலோகம்வரைப் போன ஜீவர்களுக்குப் புனர்ஜன்மம் உண்டு. பரப்பிரமசொரூபனும், வாசுதேவாத்மகனுமான என்னை உபாசிப்பவர்களுக்கு புனர்ஜன்மமில்லை. என்று பகவான் கீதையில் வற்புறுத்திக் கூறுகிறார். ஆயினும், அவ்வாறு பிரமலோகம்வரைச் சென்றவரது புனர்ஜன்மமானது சாமானியஜீவர்களுக்கு ஏற்படும் புனர்ஜன்மத்தைப் போன்றதல்ல.

சம்சாரசக்கரத்திற்குக் கட்டுப்பட்டு திரிலோகங்களும் சஞ்சரிப்பவரது விஷயம் இங்கே கூறப்படவில்லை. பகவான்

'சர்வபூதாந்தராத்ம' என்றபாவமின்றி, நானுவித உபாசனைகளை ச்செய்து, உலகில்வாழும் இதரபூதங்கள் விஷயமான சிந்தனை சிறிதுமின்றித் தமதுமுக்தியில்மட்டும் ஆசையுள்ளவர்கள் பிரம லோகத்திற்குப் போனாலும், வேறொரு பிரமகல்பத்திலாவது அவர்கள் புனர்ஜன்மமடைந்து சர்வபூதஇதத்துவத்தை அப் பியசிப்பர்.

எல்லாவுயிரு மெனதுயிர்போ லென்னுயிர்தா
னெல்லா வுயிர்போ லெனக்காணுஞ்—சொல்லார்ந்த
யோகஞ்சேர் நன்னெஞ்ச னெவ்விடத்து மொத்துயிர்க
ளேகஞ்சேர் வண்ணமறிந் தேய்ந்து. கீ. வெ. VI. 25.

தன்னொத்த வெவ்விடத்து மன்னு சமமாக
மன்னொத்த வின்பம் வளர்துன்ப— முன்னலுறி
லாங்கவனே சால வதிராம யோகியென
போங்கறிவார் தாமதிப்ப ருற்று. ,, 28.

என்ற் பாக்களில் பகவான் அர்ச்சுனனுக்கு உபதேசி த்ததைப் போல் எல்லாபூதங்களிலும் அவர் ஆத்மாவைப் பார் த்து ஆத்மாவிடம் எல்லா பூதங்களையும் பார்த்து, திடசித்த த்துடன் யாவற்றையும் சமமாக பாவித்து, எல்லா பூதங்களை யும் தம்மைப்போலப் பார்த்து, அவற்றின் சுகதுக்கங்களைத் தம்முடையவை போல எண்ணி நடப்பவரை பரப்பிரம்மத்தி ல் வர்த்திப்பவரெனலாம். இவ்வாறு சர்வபூதங்களிடத்திலும் சமசித்தமுடையவராய், சர்வபூதங்களிடத்திலுமுள்ள ஆத்மா வுடன் தாதாத்மயத்தை அடைந்திருக்கும் மகாத்மாக்கள் பர ப்பிரமத்தோடுசேர்ந்த யோகிகளாய், பரப்பிரமசொரூபராகிரு ர்கள். அதனாலன்றே இப்பதவியையடைந்த சுகப்பிரம்மயோ கி பால்யதிடசரீரமுடையவராய் வழியிற்செல்ல குளத்தில் ஆ டையின்றிப் புனல்விளையாடிக் கொண்டிருக்கும் பெண்கள் அவ ரைப்பார்த்து மனவிகாரமடையாமல் வாளாவிருந்தனர், பிறகு விருத்தரான வியாசமகரிஷி அவ்வழிவர, ஸ்திரீகளெல்லாரும் வெட்கியோடி ஆடைகளைத் தரித்துக்கொண்டனர். சுகர் யௌ வனமுடையவராயினும் பிரமபாவத்தைத்தவிர வேறுபாவமின் றி சர்வாந்தர்யாமித்துவத்தை அடைந்திருந்தனர். ஆதலால்,

பரபுருஷன் வருகிருனென்ற பாவம் அந்த ஸ்திரீகளிடம் உண்டாகவேயில்லை. வியாசர் கொஞ்சம் அகங்காரமுடையவராதலால், பரபுருஷன் வந்தானென அவர்கள் வெட்கமடைந்தனர். இவ்வித உன்னத நிலையிலுள்ள சுகர் ஒருநாள் வனத்தில் ஒன்றியாகப் போகுந்தருணத்தில், அவர் தமதுபுத்திரர் என்ற மமதையால் வியாசர் பின்சென்று ஓ! குமரா! என்று கூப்பிட்டனராம். அப்போது, மரங்களும் கற்களும் 'ஏன்' என்று பதிலுரைத்தனவாம். இந்த சுகரைப்போன்ற புருஷரே உண்மையான முக்தர்கள்.

𑌯𑌂 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑌨𑍍𑌤𑌮𑌨𑍁𑌪𑍇𑌤𑌮𑌪𑍇𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌂
𑌦𑍍𑌵𑍈𑌪𑌾𑌯𑌨𑍋 𑌵𑌿𑌰𑌹𑌕𑌾𑌤𑌰 𑌆𑌜𑍁𑌹𑌾𑌵 ।
𑌪𑍁𑌤𑍍𑌰𑍇𑌤𑌿 𑌤𑌨𑍍𑌮𑌯𑌤𑌯𑌾 𑌤𑌰𑌵𑍋 𑌭𑌿𑌨𑍇𑌦𑍁𑌸𑍍𑌤𑌂
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌹𑍃𑌦𑌯𑌂 𑌮𑍁𑌨𑌿𑌮𑌾𑌨𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 ॥

இத்தகைய மேன்மைபெற்ற சுகர் தாம் முக்தராகவிருந்தும், விரைவில் மோட்சமடையவேண்டுமென்ற உண்மையான ஆசைகொண்டோர்க்கு பிரமஞானத்தை உபதேசிப்பதே விரதமாகக்கொண்டு பரீக்ஷித்துமகாராஜனுக்கு உபதேசிக்கும் மூலமாக உலகத்தார்க்கு பாகவதகதைகளைத் தெரிவித்து, உலகோரைக் கிருதார்த்தராகச் செய்துகொண்டேயிருக்கிறார்.

பக்தியோகம்.

மோட்சசாதனங்களுள் மூன்றாவதான பக்திமார்க்கம் கரும ஞான மார்க்கங்களைவிட அபாயமற்றது; சுககரமானது. கருமமார்க்கத்தில் அதிகார தாரதம்யங்கள் ஏற்படுகின்றன. அதனால், அதில் நானாவித மனஸ்தாபங்களுக்கும் போட்டிகளுக்கும் இடமிருக்கிறது. இன்னும் யாவர்க்கும் எல்லாக்கருமங்களும் எளிதில் முடிவதில்லை. கருமங்களில் ஏதேனும் குறைவு ஏற்பட்டால், அவை ஒருபயனையுந்தாரா; தோஷங்களுக்கே அவை ஏதுவாகும். பக்திமார்க்கத்தில் அவ்விதக் குற்றங்கள் கிடையா.

ஆயவவனுக்கறிய வரைசெய்தான்
மேயவுல கத்தினு மேலிடத்து—மாய்வவனுக்
கில்லாதா னன்றி யிவன்றான் விசயனே
பொல்லா நெறியிற் புகான். கீ. வெ. VI-36.

என்பத்தன் போங்தே நசியான் புறத்து. IX. 31.

என்ற கீதை வெண்பா வாக்கியங்களும் இதையே தெரிவிக்கின்றன.

ஞானமார்க்கமோ மிகவும் கடினமானது. அவ்வழியிற் புகும் ஜீவன் சகாயமற்று ஒன்றியாகப் பாடுபடவேண்டும். கொஞ்சஞானம் ஜீவனிடம் பிறந்தால், அகங்காரம் விருத்தியாவதற்கு இடமுண்டு. சகுணோபாசன மார்க்கத்தால் அபர வித்தையைச் சம்பாதிப்பது எல்லாவிதத்திலும் கஷ்டமானது. அவ்வியக்தனும், அக்ஷரனுமான பரபிரம தத்துவ ஞானத்தை சம்பாதிப்பது இன்னும் எவ்வளவு கஷ்டமென்பது அதை அநுபவிப்போர்க்கே தெரியும். பக்திமார்க்கமோ எல்லோருக்கும் சாத்தியமானது; அபாயமற்றது. பக்திமார்க்கத்திலிருப்பவர் நெருங்கிய நேசராகின்றனர். விரோதத்திற்கு இம்மார்க்கத்தில் காரணங்கள் மிகக் குறைவாகவே யிருக்கும்.

பக்திசொரூபம் பக்தரிடம் விளங்குமேதவிர பிறரிடம் விளங்காது. பக்தர்கள் அப்பக்தியின் சொரூபத்தை எவ்வாறு விளக்கியிருக்கிறார் என்பதைப் பார்ப்போம். பக்தர்கூட்டத்தைச் சேர்ந்த நாரதபகவான் "சாத்வஸ்மின் பரமப்ரேம" (பகவானிடம் பரமபிரேம சொரூபமாயிருத்தலே பக்தி) என்று கூறினர். ஞானமார்க்கத்திலுள்ளவர் அவ்விபக்தமான பரபிரமதத்துவத்தை யறிய முயல்வர். அதைத் தெரிந்துகொள்வது தேகத்தைத் தரித்தவர்க்கு வெகு கடினமானதென்று பகவான் சொல்லுகிறார்.

ஆங்கவர்க்கு நட்பஞ்சேர் அவ்வுயிரிற் சித்தத்தா
லோங்க வருள்வருத்த முற்றுமிகும்—பாங்கதனில்
தோன்ற வயிர்க்கதிதான் துக்க மிகுத்துடலில்
என்றருக் கெய்தவரி திங்கு. கீ. வெ. XII. 5.

பகவத் ஸ்ரீ சங்கராசாரியரும் அந்த அவ்வியக்தமான தத்துவத்தைத் தியானஞ்செய்வது சாத்தியமாகாதெனவும் அவ்வியக்தமும் அக்ஷரமுமான அந்த தத்துவம் அறியத்தக்கதே தவிர தியானிக்கத்தகுந்ததில்லை என்றும் தமது பகவத்கீதாபாஷ்யத்தில் வெளிப்படையாக வரைந்துள்ளார். சகுணப்பிரமமென்றும், ஈசுவரனென்றும் அறியப்படும் தத்துவத்தை உபாசிக்கலாம். பகவானது அவதாரங்களான இராமகிருஷ்ணுதிகளையும் பிறமதத்தினரால் பகவானது அவதாரங்களாக உபாசிக்கப்படும் கிறைஸ்ட், புத்தர் முதலிய மகாபுருஷர்களையும் தியானிக்கலாம். மனது திடமற்றதாகையால், இவ்விதரூபத்தையும், குணத்தையுமுடைய வஸ்துவை பாவனைசெய்யமுடியும். ரூபமற்றதும், நிற்குணமானதுமான அந்த பரப்பிரமத்தைத் தியானிப்பது கடினமானது. அந்தப் பரப்பிரமதத்துவம் அறியத்தக்க தன்றென்று சுருதிகள் கோஷிக்கின்றன. அந்தத் தத்துவம் இவ்வாறுள்ளதென எந்தமகாத்துமாவும் மொழிகளால் வரையறுத்துக் கூறமுடியாது; மனதாலும் உணரமுடியாது. அதனாலேயே எல்லாமதங்களிலும் பகவானது லீலாவதாரங்களே பக்தர்களின் உபாசனைக்கு ஏற்றவை என மொழியப்பட்டுள்ளது.

"பக்தாநுக்ரஹ லீலாவதார:"

பக்தர்களது அனுக்கிரகத்தின்பொருட்டு லீலாவதாரங்களைப் பகவான் எடுத்தார். அவ்வியக்தமும், அக்ஷரமும், நிர்க்குணமும், நிரவயவமும், நிரஞ்சனமுமான அந்தத்துவத்தை அற்பஞானமுள்ள பக்தன் தனது அற்பமனதால் அறியமாட்டான். அந்த பிரமதத்துவம் "ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா" என்றபடி தனது சக்தியால் தனக்கு அதீனமான பிரகிருதியோடுகூடி, சகுணப்பிரமமாகவும், நானாவித லீலாவதாரங்களாகவும் வெளியாயிற்று.

பக்திமார்க்கத்தில் சகுணமான ஈசுவரனை பக்தன் பிரியத்துடன் உபாசிப்பான். சகல கலியாணகுணநிதியான பகவானது திவ்விய சுந்திரவிக்கிரகத்தைத் தனதுபிரியத்திற்குப் பற்றுக்கோடாக பக்தன் கிரகிக்கவேண்டும். இவ்விதபிரியம் நிர்க்குணமும், நிர்உபாதிகமும், நிரவயவமுமான தத்துவத்தில் உண்டாகாது. அதில் பிரியத்திற்குக் காரணமொன்றுமில்லை. ஞானமார்க்கத்திற்கும் பக்திமார்க்கத்திற்குமுள்ள முக்கிய பேதம் இதுவே.

ஆதலால், பக்தசிரோன்மணியாகிய நாரதர் "அஸ்மின்" (இந்த) ஒருபுருஷனிடம் பிரியம்வைப்பதே பக்தி" என்று நிரூபித்திருக்கிறார். பகவானிடமுள்ள பிரியரூபமே பக்தி. அதுவே உத்தமமான பிரியம். ஸாமானியமாகப் பிரதிபலனைக் கோரும்பிரியம் பிரியமல்ல. இந்த பிரியத்தை நிரூபிப்பதில் அவர் பின்வருமாறு விவரித்துக் கூறுகின்றார்.

நாரதஸ்து ததர்பிதாகிலாசாரதா ததவிஸ்மர
ணே பரமவ்யாகுலதேதி ||

சர்வகருமங்களையும் பகவானிடம் அர்ப்பணஞ்செய்து, அந்தமூர்த்தியை ஒருசிறிது நினையாமல் மறந்துவிடின், அடங்காத்துயர்கொண்டு, அவ்வித பிரியவடிவாகவுள்ள மகாத்துமாக்கள் உலகில் எவ்வாறு நடந்துகொள்ளுகிறார்கள் என்பதைக்கவனித்தால், இந்தபக்தியின் ஸ்வரூபத்தை ஒருசிறிது

உணரலாகும். அவ்வித பிரேமாதிசயங்களால் கட்டுண்ட இருவர்களுக்குள் பேதம் சிறிதுமிராது. இருவரும் தம்மை ஒருரூபமுள்ளவராகவே பாவிப்பர். இருவரது மனோபாவங்களும் ஒன்றாகவே யிருக்கும். அவை வேறுபடா. ஒருவரையொருவர் பிரிந்தால், அப்பிரிவை அவர் பொறுக்கமாட்டார். பிரிவு ஒருவேளை ஏற்படினும் அந்நியோந்நிய எண்ணம் அவர்களிடம் குடிகொண்டிருக்கும். எக்காலத்திலும் ஒருவரையொருவர் மறவார். அவ்விதம் மறப்பதைக்காட்டிலும் அதிகமான துக்கத்தை அவர்க்கு வேறொன்றும் தராது. ஒருபொருளைவிட மனதிற்கிசைந்த மற்றொருபொருள் இருந்தாலல்லவா முற்கூறிய பொருளைப்பற்றிய எண்ணம் அவரிடம் மறந்துபோகும். அவ்விதமொன்றும் இல்லாதிருப்பின், இத்தகைய மறதி ஒருபோதும் ஏற்படாது. இங்குக்குறித்த பிரியம் இத்தன்மையதென ஒருசிறிது நாம் உணரக்கூடுமாயின், பகவானிடம் பக்தர்வைக்கும் பிரியத்தை நாம் ஒருவாறு ஊகிக்க இயலும். பற்றற்ற லௌகிகப்பிரியத்தையே உணர சக்தியற்றவர்க்கு, பக்தி சாத்தியமாகுமா? இகலோக சுகசாதனமான பிரியம் பகவானிடம் வைக்கும் திடமான பிரியம்போல் பவமாகவும் இரம்மியமாகவு மிராது. இந்த திடமான பிரியமே நிரதிசயசுகத்தைக் கொடுக்கும். ஆதலின், அபாரசக்தியுடையவனும், மங்களமான நற்காரியங்களில் எப்போதும் முயலும் குருசொரூபனும், இயற்கையிலேயே கருணைக்கடலாக வுள்ளவனும், திவ்வியமங்கள விக்கிரகனுமான பகவானிடம் மனத்தை அர்ப்பணஞ்செய்வதே பக்தியெனப்படும். இந்தபிரியமே மேலானபிரியம். பிரதிபலனைக்கோரிச் செய்யும் பக்தி வாணிபச்செயலென்று பக்த சிரோமணியான பிரகலாதாழ்வார் கூறியிருக்கிறார். மற்றும், நாரதர் பக்தியாலுண்டாகும் பலன்களைப் பின்வருமாறு வெளியிட்டிருக்கிறார்.

𑌯𑌲𑍍𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑍋 𑌭𑌵𑌤𑍍𑌯𑌮𑍃𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿

𑌤𑍃𑌪𑍍𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 । 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌨 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑍍𑌵𑌾𑌞𑍍𑌛𑌤𑌿

ந ஶோசதி, ந த்வேஷ்டி, ந ரமதே, நோத்ஸாஹீ ஭வதி । யஜ்ஜ்ஞாத்வா மத்தோ ஭வதி ஸ்தப்தோ ஭வத்யாத்மாராமோ ஭வதி ॥

(இ. பொ.) உண்மையான பக்தன் சித்தியடைவான்; இறவான்; எதிலும் திருப்திகொள்வான். இந்த பக்தியையடைந்தவர் ஒன்றையும் விரும்பார்; ஒன்றிலும் துக்கமடையார்; ஒருவரையும் வெறார்; விஷயங்களில் ஆசைவையார்; பலனைக் கருதி ஒன்றையுஞ் செய்யார். ஆத்துமாவிடத்திலேயே பற்றுவைத்துப் பரவசமாகி ஆனந்திப்பார்.

பக்தன் தனதுபக்தியால் தன்ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ளான். பக்தி தியாகரூபமாக வுள்ளது. பகவானிடம் யாவற்றையும் அர்ப்பணஞ்செய்து, அவரது பிரசாதத்தைத் தவிர வேறொரு விருப்பமில்லாதவனே பக்தன். "நிவேதயாமி சாத்மானம் த்வம்கதி: பரமேச்வர" (எனது ஆத்மாவை உனக்கு அர்ப்பிக்கின்றேன். பகவானே! நீயே எனக்கு சதி") என்றஎண்ணம் பக்தனிடம் தோன்றும். அவன் தனக்குச் சொந்தமான யாவற்றையும் பகவானுக்கு அர்ப்பிப்பதோடு தன்னையும் அதாவது தன்மனம் இந்திரியங்கள் சரீர முதலியவற்றையும் அர்ப்பித்து அவரது தியானகைங்கரியங்களைவிட மேலானசுக மொன்றுள்ளதென நினையான்.

இதுவே பரமபிரியரூபமான பக்தி. ஸம்சாரத்திலுழன்று பூர்வ கர்மானுசாரங்களான சுபாசுப வாசனைகளையடைந்துள்ள ஸாமானிய ஜீவன் எவ்வாறு இவ்வித உத்தமமான பக்தியை அடையக்கூடு மென்பதைப்பற்றி இனி ஆராய்வோம். ஸாமானிய ஜனங்கள் உலகத்தில் தமக்கு இன்பத்தைக்கொடுக்கும் பொருள்களையும், பிராணிகளையும், மனிதர்களையும் இச்சிப்பார்கள். முதலில் கேவலம் தமதுசுகத்தையே விரும்பி, நாளடைவில் தமக்கு ஸுகத்தைக்கொடுக்கும் பிறரது சுகங்களையும், தம்முடைய சுகங்களைவிட அதிகமாக பாவிப்பார்கள். திடமான ஆசையால் கட்டுண்டிருக்கும் ஸ்திரீபுருஷர்கள் ஒருவருக்கொருவர் வைத்துள்ள பிரியத்தால் ஒருவர் மற்றவரது சுகத்தை அதிகமாக பாவிப்பர். அந்யோந்யமாக ஸமீபத்திலிரு

ப்பதே மேலான சுகமென்று அவர் எண்ணுவர். அந்த சுகத்தின்முன்பு பணம், வித்தை முதலியவையெல்லாம் தகுதியற்றவையாக அவர்க்குத்தோன்றும். ஸ்திரீ தனது சக்தியுக்திகளையெல்லாம் தன்நாயகனது சந்தோஷத்தின் பொருட்டுச் செலவிடுவாள். தன்மனம் புத்தி, சரீரமெல்லாம் தன்நாதனிடம் ஸமர்ப்பிப்பாள். அவ்வாறே புருஷனும் தனது சக்தியுக்திகளையும் சரீரத்தையும், மனத்தையும் நாயகிக்கு அர்ப்பித்து, அவளதுசுகத்தைப் பெருக்குவதினும் வேறொருகாரிய மில்லையென நினைத்து, நடந்துகொள்வான். இவ்வாறு நடந்துவருவதில் இருவரும் தமது இந்திரியஸம்பந்தமான சுகங்களை மறந்து, வரவரத் தமது அந்யோந்ய இச்சையை பரிசுத்தப்படுத்தி, அதைக் குற்றமற்றதாகச் செய்துகொள்வர். பிறகு தம்மைத்தாம் மறந்து, ஒருவருக்கொருவர் தாதாத்மியத்தை யடைந்து, இருவரும்ஒருரூபமுடையவராக எண்ணிக்கொள்வர். அவர்க்கு உடல் இரண்டாயினும், மனம் ஒன்றேயாகும். இவ்விதக் குற்றமற்ற பிரியத்தைவிட ஆயிரமடங்கு அதிகதிடமான பிரியத்தை பரிபூரணனும், தயாசொரூபனும், சகலகலியாணகுணனும், சர்வமும் தானாகவுள்ளவனும், ஆநந்ததாயகனும், ஆநந்தசொரூபனுமான பரமேச்வரனிடம் பக்தன் சமர்ப்பிப்பான். அந்தஇச்சையை எவ்வளவுகாலம் அநுபவித்தாலும் மனம் தெவிட்டாது. அது மனத்திற்குகந்ததாகவேயிருக்கும். எவ்வளவு விருத்தியானாலும் அது ஒருபாரமாகத் தோன்றாது. அதிலிருந்தெழும் சுகம் இகலோகசுகத்தைப்போல குறைவுடையாது. இவையனைத்தையும் நன்றாய் ஆராய்ந்துபார்த்தாலொழிய பகவானிடம் பரமபக்தனுக்குள்ள பரமபிரியத்தின் உண்மையான சொரூபத்தை ஊகித்தறிய முடியாது. இவ்வாறு முதன்முதல் இகலோகசுகத்தைத்தரும் சதிபதி புத்திராதிகளில் பிரியம்வைத்து காலக்கிரமத்தில் அந்தபிரியத்தை பரிசுத்தப் படுத்திக்கொண்டு, அவ்வாசையை பகவானிடம் சமர்ப்பித்து, சதிபதி புத்திராதிகளின் சுகத்தைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமான சுகத்தை பகவானது தியானத்தால் பெற்று நாளடைவில் இகலோகவாஞ்சைகளை பாரமார்த்திக

மானவைகளாக மாற்றிக்கொண்டு, அவற்றை பரமபுருஷார்த்தத்திற்கு சாதனமானவையாகச் செய்துகொள்ளவேண்டும்.

இத்தகைய பக்தியையடைய விரும்புவோர் முதன்முதல் தமதுதேகத்தை பரிசுத்தப்படுத்திக்கொண்டு சாத்துவிகஆகாரங்களையே புசிக்கவேண்டும். எப்போதும் வாஞ்சைரூபமாக வுள்ளதால், பிரியத்திற்குக் காரணனான பகவானிடம் உள்ளதைப்போல பகவானது சிருஷ்டிக்குள்ளிருக்கும் எல்லா பூதங்களிடமும் அவ்வாஞ்சை செல்லவேண்டும். இதனால் நமது ஆகாரத்தின்பொருட்டு இதரபூதங்களுக்குச் சிறிதும் துன்பம் கொடுக்கக்கூடாது. அவைகளை இம்ஸிப்பது நமது பிரியபாவத்திற்கு விரோதமாகும். ஆதலால் பிரியபாவத்திற்கு விரோதமான காரியங்களெல்லாவற்றையும் அறவே யொழிக்க முயலவேண்டும். இம்ஸையால் கிடைக்குமாகாரம் நமக்கு பந்தத்தை விளைப்பதுந்தவிர, பூததுவேஷத்தையும் நம்மிடம் விருத்திசெய்யும். பக்தன் எல்லா பூத இதத்தையும் கோருபவன் ஆதலின், பக்தன் ஆகார நியமத்தாலல்லாமல் வேறுவிதங்களாலும் தன்சரீரத்தை சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். பரிசுத்தமற்றவரோடு உறவாடுவதை விட்டொழிக்கவேண்டும். சுத்தமற்ற சரீரம் பக்தனுக்கு உதவாது.

சரீரத்தைமாத்திரம் பரிசுத்தஞ் செய்துகொண்டால்மட்டும் போதாது. மனத்தையும் பரிசுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். மனத்திலுள்ள தீயவெண்ணங்களை கிரமமாக நீக்கவேண்டும். ஆசைகளுக்குட்பட்ட மனம் காமியார்த்தமான காரியங்களில் புகுந்திருக்கும்போது, சலனமற்ற பக்திக்கு இடமிராது. மனவாசைகளை நீக்கி, பகவானிடம் அதை ரமிக்கச்செய்வதே உண்மையான பக்தியெனப்படும். மனம் பலவித ஆசைகளில் ஈடுபட்டிருந்தால், அது பகவானை எவ்விதம் பற்றும்? மனவாசைகளெல்லாம் பகவானிடம் திரும்பவேண்டும். பூர்வவாசனைகளின் பலத்தால் மனம் இதரவிஷயங்களைப் பற்றினாலும், அதை அவ்வாறு ஓடவிடாமல் பகவானிடம் செலுத்தப் பலமுறை முயலவேண்டும். இதுவே அப்பியாச மெ

னப்படும். 'மனம் மிகவும் சஞ்சலமுள்ளது. புயற்காற்றை நிறுத்தினாலும் நிறுத்தலாம், மனத்தை நிறுத்துவது கடினமானது' என்று முறையிட்ட அர்ச்சுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவான் அப்பியாசத்தாலும் வைராக்கியத்தாலும் மனத்தை ஸ்திரமாக நிறுத்திக்கொள்ளலாம்' என்று உபதேசித்திருக்கிறாரல்லவா?

வன்னெஞ்சு சஞ்சலமாய் மாறாய் வலிந்தடரு
மந்நெஞ்சு காற்றைப்போலான்றடக்கித்—தன்னி
லரிதென் றிருப்பனென வாங்கவனுங் கேட்கச்
சுரிசங்கன் றானுரைத்தான் சொல். கீ. வெ. VI—30,

நேராக நின்றடக்க நில்லா தரிதுமனங்
காரார் கொடைத்தடந்தோட் கௌந்தேயா—சீராரும்
யோகத் திடைப்பயில்வா லேலுந் துறவதனா
லாகத் ததுவடக்க லாம். கீ. வெ. VI—31.

பூர்வ வாசனையின் பலத்தால் நம்மிடம் ஏற்படும் ஆசைகளை விடுப்பதே வைராக்கியம். அவ்விதம் விடுபட்ட மனத்தைப் பகவானிடம் திருப்புவது அப்பியாசம். விஷயசுகங்கள் அழிவுள்ளவையெனத் தெரிந்துகொண்டு விஷயவாசைகளை நீக்கிக்கொண்டால் பிரியத்திற்குக் காரணனான பகவானிடம் மனத்தைவைப்பது சுலபம். பகவானிடம் ஊன்றிய மனத்தில் விஷயவாசைகளைக் குறைப்பதும் சுலபம். இவ்விதமாக வைராக்கியமும் அப்பியாசமும் ஒன்றற்கொன்று சிறந்த துணையாகும். இவ்விரண்டு உபாயங்களால் மனத்தைச் சஞ்சலமின்றி பகவானிடம் நிறுத்தலாம். அவ்வாறு சலனமின்றி மனத்தை நிறுத்தியபோது, பகவானை மறப்பது பக்தனுக்கு அசாத்தியமல்லவா? எவ்வித கஷ்டங்கள் வரினும், எக்கேடுறினும், எத்தகைய மனவேதனை யடையினும், அவன் பகவானை மறவான்.

பகவானது சீர்பாதங்களை யடையவேண்டுமென்ற ஆசை பக்தனிடம் உண்டாகவேண்டும். நெருப்புப் பற்றிக்கொண்டெரியும் வீட்டினுள் அகப்பட்டுக்கொண்டு ஒவ்வொரு நிமிஷமும் தன் பிராணனுக்கு அபாயம்வருமோ வென்று பயந்தவொருவனிடம் தன் பிராணனைக் காப்பாற்றுபவன் எப்போது

வருவானோ என்ற தீவிரமான பரிதாபம் ஏற்படுவதுபோல, நம்மிடமும் பகவானை யடையவேண்டுமென்ற வாசை தீவிரமாக உதிக்கவேண்டும். அதுவரை தெய்வத்தின் சொரூபத்தைக் காணமுடியாது. உண்மையான பக்தனிடம் இதைத் தவிர வேறொரு எண்ணமிராது. தன் பிராணன் தத்தளிக்குங்காலத்தில், அவன் பகவானையே சிந்திப்பான். வேறு சிந்தனை யொன்றும் அவன் மனத்தில் எழாது. இதுவே பக்தனது மனோவிருத்திக்கும் ஸாமானியனது மனோவிருத்திக்கும் பேதம். பக்தனது மனம் எக்காலத்திலும் ஒரு நிலைப்பட்டிருக்கும், சுகதுக்கங்களில் சலிப்படையாது. அவன் யாவும் பகவானது அனுக்கிரகத்தின்படியே நேருகின்றனவென்று சஞ்சலமற்றிருப்பான். இவ்வாறு ஒருநிலைப்பட்ட ஆசையற்ற மனத்தை அடைவதற்கு பரிசுத்த ஆசாரத்தால் சுத்திபெற்ற சரீரமும் பக்தனுக்கு முக்கியமாகும். இதனால்தான் பகவத்பக்தனாக விரும்புவோர்க்கு பரிசுத்ததேகம், பரிசுத்தமனம், பகவத்தியானம் ஆக மூன்றும் முக்கிய சாதனங்களாகுமென ஸ்ரீ ராமாநுஜாசாரியர் விதித்திருக்கிறார்.

பக்தியை விருத்திசெய்து கொள்ளுவதற்குக் கருவிகளாக அப்பியசிக்கவேண்டியவை மற்றுஞ்சில வுள்ளன. தினந்தோறும் சிறிதுபோது பகவானை பூசிக்கவேண்டும். அதுவும் முதலில் குறிப்பிட்ட காலங்களில் செய்யவேண்டும். பூஜாகாலங்களில் மனத்தை பகவானிடம் நிறுத்தவேண்டும். படிப்படியாக மனது பகவானிடம் லயமாகும்படி அப்பியசித்து வரவேண்டும். மற்றும் பகவானது கலியாணகுணங்களையும், அவனது திருவிளையாடல்களையும் சிறிதுகாலம் மனத்தில் தியானஞ்செய்து மனத்தை பகவானிடம் நிறுத்தப் புகவேண்டும். இவ்வாறு செய்பவன் பூஜையாலும் தியானத்தாலும் பக்தியாநந்தங்களை யடைவான், எவ்வித வாசைகளையும் வேண்டான்.

இன்னும் பக்தன் எப்போதும் பூதஇதஞ்செய்வதற்கு முயலவேண்டும். பகவானிடம் பக்திவைப்பவன் பகவானைப் போல நடப்பதற்கு நினைப்பான். பகவானது கலியாணகுணங்

களைப் பன்முறை தியானிப்பதாலும் அவைகளில் ஒவ்வொன்றையும் அப்பியாசஞ் செய்வதாலும், பக்தன் அந்த குணங்களைத் தன்னிடந் திடமாக ஏற்படுத்திக்கொள்ளலாம். பகவான் சர்வபூதங்களுக்கும் எப்போதும் இதத்தையே செய்வதுபோல பக்தனும் எல்லாபூதங்களின் இதத்தைக்கோரி கருமங்களைச் செய்து தன் மனோவாக்காயங்களை பரோபகாரத்தின் பொருட்டே உபயோகித்துத் தன் வாழ்நாளைக் கழிக்கவேண்டும். பகவான் இயற்கையிலேயே அருள்வடிவாக வுள்ளவன். அதுபோலவே பக்தனும் தனக்குள்ள யாவற்றையும் பகவானது பிள்ளைகளான சகல பூதங்களுக்கும் கொடுப்பதையே முதல் கைங்கரியமாக அப்பியசிப்பான். இதுவே வாஞ்சையின் முதல் இலக்ஷணம். சுயநயம் சிறிதுமின்றித் தன்னிட மிருப்பனவற்றை இரப்போர்க்கு வரையாது ஈவதே வாஞ்சை. இதை எப்போதும் அனுசரித்து பிரியசொரூபனுவதற்கு ஒவ்வொருவரும் முயலவேண்டும்.

இவ்வுலகில் பிரதிபலனை எதிர்பாராமல் இவ்விதம் பிரியம் வைப்பது எவ்வளவு அருமையானது! சாதாரணமாக எல்லாரும் ஏதேனுமொரு பிரதிபலனை இச்சிப்பார்கள். நிராசையுடன் பிரியம் வைப்போர் அருமையாக விருப்பர். பிரியம் வைப்போர்பிரதிபலனைச் சிறிதேனும் கோருவது கேவலம் வாணிபத் தொழிலாகும். பரிசுத்தமான பிரியம் வைப்பவன் அற்ப பிரதிபலனையும் எதிர்பாரான்.

இவ்விதமாக மனமொழிமெய்களின் பரிசுத்தத்தையும் கொல்லாமையையும் பரோபகார புத்தியையும் அப்பியாசஞ் செய்தால் பக்தனிடம் நிஷ்காமபக்தி நன்ருகவளரும்.

இனி, நல்லோருடன் பழகுவதும் மற்றொரு சாதனமாகும். ஆத்மவிஷய சம்பாஷணைகளிலும் பரமனை தியானிப்பதிலும் தன்காலத்தைக் கழிக்கும் பெரியோரைச் சார்ந்து, ஒழுகும் பக்தன் பரிசுத்தனுவான். அப்பெரியாரோடு ஸம்பாஷிப்பதால் யாவரும் நல்ல நிலைமைக்கு வருவார்கள். கேவலம் ஸம்சார விஷயங்களைப்பற்றி அவர் ஸம்பாஷிக்கமாட்டார்கள். பரமார்த்த சாதனங்களான விஷயங்களைப்பற்றியே அவர் எப்போ

தும் ஸம்பாஷிப்பர். ஆதலால் அவரது கூட்டுறவு மிகவும் மேலானது. இதன்றி அன்னோரது சேர்க்கையால் அவரது மனோ சக்திகளும் மனத்தூய்மையும் பிறரது மனத்தைப் பரிசுத்தப் படுத்தும். அவரது சரீரங்களிலிருந்து எப்போதும் வெளிப் படும் பரிசுத்தமான அணுக்கூட்டங்கள் அவரை அணுகியுள்ளவரது சரீரங்களிற்புகுந்து, அவற்றைத் தூய்மைப்படுத்தும். இவையே அவரது பாததூளி எனப்படும். இதனால் நல்வினைஞ் சேர்தலின் பயன் இத்தகையதென அளவிடுதற்கு நம்மால் இயலாதென அறிக.

ஸத்ஸங்கத்வே நிஃஸங்கத்வம் நிஃஸங்கத்வே நிர்மோஹத்வம் ।
நிர்மோஹத்வே நிச்சலதத்வம் நிச்சலதத்வே ஜீவன்முக்திஃ ॥

என்று ஸ்ரீ சங்கராசாரியர் எழுதுகிறார். நம்மினும் மேலான பெரியாரது கூட்டுறவைத் தேடி ஸம்பாதித்து அனுபவிப்பது என்றும் மேன்மையையே பயக்கும். அற்பபுத்தியையும் விஷய வாசையையு முடையவரின் சேர்க்கை கெடுதலையே விளைக்கும்.

இனிப் பெரியாரின் சேர்க்கையைப் போலவே, பெரியோர்வரைந்த கிரந்தங்களை ஆராய்வதும் பக்திக்குச் சிறந்ததோர் சாதனமாகும். இக்கிரந்தங்கள் சத்விஷயங்களையே குறிக்கும். அதனால், அவற்றை ஆராய்வது மிகவும் நல்லது. அவ்விதம் செய்துவந்தால் மனம் நல்லவிஷயங்களிலேயே செல்லும். தீயவிஷயங்களில் அது ஒருபோதும் புகாது. மிக்க பரிசுத்தத்தை அது அடையும்.

இவை போலவே, பகவானது திவ்யசரித்திரங்களும் பரமபக்தர்களான பாகவதர்களின் சரிதங்களும் படிப்பதற்கு ஏற்றவை. பாரமார்த்த ஞானத்தையும் ஞானசாதனங்களையும் போதிக்கும் கிரந்தங்களும் பரிசுத்தமுள்ளவையாதலால், அவையும் ஊக்கத்துடன் படிக்கத் தகுந்தவையே.

இனி பக்தசிரோன்மணியான பிரகலாதாழ்வான் பக்தி அபிவிருத்தியாகும் வழிகளைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

ஶ்ரவணம் கீர்த்தநம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவநம் ।
அர்ச்சநம் வந்தநம் தாஸ்யம் ஸக்யமாத்மநிவேதநம் ।
இதி பும்ஸார்பிதா விஷ்ணௌ பக்திஶ்சேந்நவலக்ஷணா ॥

(இ. பொ.) "பகவானது சரித்திரங்களைக் கேட்பதும் அவரது நாமங்களை பஜிப்பதும், அவரது நாமரூபங்களை தியானிப்பதும், அவரது திருவடிகளைச் சேவிப்பதும், அவரை சோடசோபசாரங்களால் அர்ச்சிப்பதும், சாஷ்டாங்கமாக அவர்க்குத் தண்டன் சமர்ப்பிப்பதும், அடிமையைப்போல் ஆசையற்று அவருக்குத் தொண்டுசெய்வதும், அவரிடம் நட்புக்காட்டித் தினந்தோறும் அவரது சேர்க்கையை விரும்புவதும் உடல் பொருளாவியெல்லாம் பகவானிடம் ஸமர்ப்பிப்பதும் ஆக ஒன்பதும் பக்திக்கு இலக்ஷணங்களாகும்."

பலிச்சக்கரவர்த்தியின் பக்தியும், அர்ச்சுனனது பக்தியும் உத்தவரின்பக்தியும் இதற்குதாரணம். உத்தமமான நேசர்கள் அநியோந்யவாசையால் கட்டுண்டு ஐக்கியபாவத்தை யடைவதுபோல பக்தனும் பகவானை நேசனாகபாவித்து எப்போதும் அவரது சந்நிதானத்தைக் கற்பித்துக் கொண்டிருப்பான்.

அண்ண லுரை செய்தா னவனுக்கென் பானெஞ்சைத்
திண்ணமிகச் சேர்த்துச் சிரத்தைமிகுத்—தெண்ணத்தா
லுற்றென்று மென்னை யுபாசிப்பார் யோகியராய்
மற்றெற் கதிகரவர் வாய்ந்து. கீ. வே. XII. 2.

எவர் தொழிலனைத்து மென்னிடைவைத் தேற்பாராய்
மேவி யனன்னியமா மெய்யோகச்—சேவையினு
லென்றுந் தியானித் தியன்றே றெனைமருவி
நின்றிங் குபாசிப்பார் நேர்ந்து. கீ. வே. XII 6.

அன்புடனென் பாலே யமர்ந்தமனத் தாரவரைத்
துன்புயரு மிப்பவமாஞ் சூழ்கடலின்—றின்புடனே
வென்றியமர் பார்த்தனே மேலா வெடுப்பன்கா
ணன்றியன்று தாழாது நான். கீ. வே XII. 7.

(இ. பொ.) "எப்போதும் மனத்தை என்னி நிறுத்தி, சமாஹித சித்தராய் உத்தமமான சிரத்தையுடன் என்னை உபாஸிப்பவர்கள்" யோகிகள். எனக்கு அத்தியந்த சிரேஷ்டர்கள் எவ

ரேனும் எல்லாக்கருமங்களையும் என்னிடம் ஸமர்ப்பித்து, என்னையே கதியாகநினைத்து, வேறு புகலின்றி என்னை உபாஸித்து தியானஞ்செய்கின்றவரை பிறப்பிறப்புக்குக் காரணமான ஸம்சாரசாகரத்திலிருந்து விரைவில் ஈடேற்றுவேன்.''

என்று கீதையில் பகவானும் வற்புறுத்தியிருக்கின்றார்.

மனத்தை எப்போதும் பகவானிடம் வைப்பதும், அவரை எப்போதும் தியானிப்பதும், பூஜிப்பதும், அவரே கதியென்று பாவிப்பதும், அவரிடம் உறுதியான சிரத்தை வைப்பதும், பக்தனுடைய முக்கிய தருமங்களாகும். அவ்வித பக்தர்களை விரைவில் கடைத்தேற்றுவதாக பகவானே வாக்களித்திருக்கிறார். இவ்வித சாதனங்களால் பக்தியில் தேறியவன் காலக்கிரமத்தில் பகவானது கிருபைக்குப் பாத்திரனாவான். மேலும் இவ்வழிகளால் இயன்றவரை அப்பியசித்து, முன் அத்தியாயத்திற் கூறியபடி தன் சரீரங்களை சுத்தப்படுத்தக் கூடியவையும் தன்னை ருணானுபந்தத்திலிருந்து விடுவிக்கக் கூடியவையுமான கருமங்களை கவனத்தோடு செய்து, எல்லா பூதங்களையும் பக்தன் நேசித்துக்கொண்டிருந்தால், நாளடைவில் அவனது கருமங்கள் பரிபக்குவமடையும், அவனும் ஈசுவரனது அனுக்கிரகத்திற்கும் பாத்திரனாவான்.

அப்போது பக்தன் தனது ஏகாந்த தியானத்தில் பரவசமாகவிருப்பான். பக்த பராதீனனான பகவான் பக்தனது சுத்த இருதயத்தில் ஒரு நிமிஷமேனும் காணப்பட்டால், பக்தன் பரமானந்தத்தையடைவான். அதுமுதல் பக்தனது வழிகளெல்லாம் அந்த ஜோதியால் பிரகாசிக்கும். அடிக்கடி பூர்வ அஞ்ஞானம் அவனை மறைத்தாலும், ஜோதிமாத்திரம் மறைவுபடாது. அன்றுமுதல் விஷயங்கள் எவையும் பக்தனது மனத்தைக் கவரா. அவற்றிலுள்ள உருசியும் பக்தனைவிட்டு நீங்கும்.

பரமாகுஞ் சீருயிரைக் கண்டக்கால்
நின்றதுவு நீங்கு நெகிழ்ந்து. கீ. வே. II. 55.

(இ. பொ.) "பரத்தின் சொரூபதரிசனமானால் விஷயங்களிலுள்ள அற்பவாசையும் பக்தனைவிட்டு நீங்கும்.''

என்று கீதையிலும் சொல்லப்பட்டுள்ளது.

பகவானது தேஜஸ்ஸைப் பார்த்த கண்ணுக்கு மற்றப் பொருள்களெல்லாம் சாரமற்றவையாயும், தேஜஸில் குறைந்த வையாயும் காணப்படும். அதுமுதல் அவனது மனது ஆத்ம விஷயங்களினின்றும் மறுபடியுந் திரும்பாது அப்போது பக்தன் பகவானிடத்தில் மூழ்கி, பேரானந்தத்தை அனுபவிப்பான். உலகமெல்லாம் பகவானது தோற்றமாகவே அவனுக்குத்தோன்றும், அனைத்திலும் பகவானைத்தவிர வேறு தத்துவத்தைக் காணமாட்டான். உலகில் செய்யத்தகும் காரியங்களெல்லாம் பகவானது கைங்கரியங்களாகக் கருதுவான். அவை வேறுவிதமாக அவனுக்குத் தோன்றா. பகவானை எவ்விடத்திலும் எப்போதும் பார்த்து எவ்வெப்போது எங்கெந்தக் காரியங்களைச் செய்தாலும், அவைகளை பகவானது கைங்கரியங்களாக எண்ணிக்கொள்வான். ஆதலால் நமது தேசத்திலுள்ள பாகவதோத்தமர்கள் தாம் சரீர போஷணத்தின் பொருட்டுச் செய்யும் காரியங்களையும் தமது காரியங்களாக பாவியாது தன் சரீரத்திலுள்ள பகவானது ஆராதனங்களாக பாவிப்பர். தாம் கிரகத்திற்குக் கொண்டுவரும் அரிசி, காய்கறி முதலியவற்றை பகவானது நிவேதனத்திற்குக் கொணரப்பட்ட பொருள்களெனக் கருதுவர். தாம் புசிப்பதையும் பகவானது ஆராதனமென்று சொல்லுவார்கள். வேறுவிதங்களாக இவற்றைக் கூறார். இவ்வித ஈசுவரபாவம் நம்மிடம் எப்போதுமிருக்கவேண்டும். என்பது பெரியோரது கொள்கை. இக்காலத்தில் சிலர் இவ்வித பாவத்தை விட்டுவிட்டு, வார்த்தைகளை மட்டும் உபயோகிப்பார்கள். சிலர் அவ்வார்த்தைகளைச் சில வேளைகளில் வேடிக்கையாக உபயோகிப்பதுமுண்டு. பெரியோரது அபிப்பிராயங்களும் உத்தேசங்களும் இவ்விதமாக அறிவினர்களால் புரட்டப்படுவதைப் பார்க்க மிகுந்த துக்கத்திற்கு இடந்தரும்.

பக்தன் எக்காலத்திலும் எல்லா பூதங்களிடமும் பகவானையே பார்த்து, அவனுக்கு அடிமையாகி, எப்போதும் கைங்கரியஞ் செய்துகொண்டிருப்பான். தனக்குத் தனியாக வோர் சக்தி யில்லையெனவும், எல்லாசக்திகளும் பகவானுடையவையெனவும் நிச்சயித்து தனதகங்காரத்தை அடியோடுவிட்டு, அதன் மூலத்தையும் வேரறுத்துவிடுவான்.

ஆங்காரம் வன்மை அதிற்செருக்குக் காமமுடன்
தீங்கார் வெகுளிதான் சேர்சுற்றம்—தேங்காது
நீந்து மமதை நெகிழ்ந்தே நிகழ்சாந்தின்
வாய்ந்தபிர மத்தனும் வந்து. கீ. வே. XVIII. 53.

தொன்மைப் பிரமவுயிர் தோன்ற மன திற்றெளிந்து
புன்மைப் பலசோசம் பூணசையின்—தன்மையவித்
தெப்பொருட்டு மொத்தென்பா லேய்ந்தபா பத்தியினைத்
தப்பறவே சேருஞ் சமைந்து. கீ. வே. XVIII. 54.

எவனு னுவேன்மற் றெவ்வளவி னுண்மையினு
லாவனுங் கென்னை யறிவது தான்—மேவநிகழ்
பத்தியான் மெய்யுணர்ந்தே பண்பா லெனைப்பின்னை
முத்தியால் வந்தடையு முற்று. கீ. வே. XVIII. 55.

மற்றிக் கருமங்க ளெல்லா மருவியெனைப்
பற்றிப் பயின்றென்றும் பார்த்தியல்வா—னற்றமற
மேவு மெனதருளால் மிக்கடையு மற்கமற
வோவுதவி லாப்பதத்தை யுற்று. கீ. வே. XVIII. 56.

(இ. பொ.) "அகங்காரம், பிடிவாதம், கர்வம், காமம், கோபம், விஷயப்பற்று இவையனைத்தையும் விட்டு, மமதையற்று சாந்தமனதோடுள்ளவன் பிரமசொரூபனுவதற்குத் தகுதியுள்ளவன். பிரமபூதனுகி பிரசந்நமான மனமுடையவன் விசனப்படுதலுமில்லை. விரும்புதலுமில்லை. எல்லாப் பிராணிகளிடத்தும் பிரமசொரூபத்தை ஸமமாகப்பாவித்து, மேலான எனது பக்தியை அடைகிருன். இவ்வித பராபக்தியால் நான் எவனென்றும் எவ்வளவினனென்றும் உள்ளபடி யறிந்தபிறகு, என்னிடம் பிரவேசிக்கின்ருன். நித்தியநைமித்திய காம்மியங்களான கர்மங்களெல்லாவற்றையும் செய்து என்னையே அடுத்துள்ளவன் எனது அனுக்கிரகத்தால் சாசுவதமான பதத்தைக் குறைவற அடைவான்."

மேற்குறித்த பாக்களில் பக்தனது கடைசிப்படிகளை ஸ்ரீ கிருஷ்ணபகவான் நிரூபித்திருக்கிருர். முதலில் பக்தன் அகங்காராதிகளை விட்டு, பிரமபூதனுகி, பராபக்தியை யடைகிருன். இதையே சாத்தியபக்தி யென்பர். அவ்வித மேலானபக்தி பிரகாசித்தவுடன், பக்தனுக்கு பகவானது சொரூபம் பூரணமாக

வெளியாகும். அப்போது அவரது சொரூபத்தை பக்தன் உள்ளபடியறிவான். பராபக்தியால் அவனிடம் தத்துவஞ்ஞானம் பூரணமாக பிரகாசிக்குமாதலால், அவன் பரவசனுகி, பிரமாநந்தத்தை யனுபவிப்பான். இவ்வாறு பக்தியும் ஞானமும் அவனிடம் பூரணமாக பிரகாசிக்கவே அவன் எக்கருமங்களையும் குறைவற உலகின் மேன்மையின்பொருட்டுச் செய்வான். அத்தருணத்தில் பக்திஞானகருமங்கள் மூன்றும் பரிபூரணமாக அப்பக்தனிடம் பிரகாசிக்கும். அவன் தன் மூன்று சக்திகளையும் காட்டி சச்சிதாநந்த சொரூபியான யோகியாகிறுன். இம்மூன்று லக்ஷணங்களையுமுடைய யோகி கேவல பக்தனைக்காட்டிலும், கேவல ஞானியைக்காட்டிலும், கேவல கர்மியைக்காட்டிலும் மேலானவனென்று பகவான் கூறியிருக்கிறுர்.

இவ்வாறு முறைபாக மூன்று மார்க்கங்களும் சுருக்கமாக விவரிக்கப்பட்டன. இம்மூன்று மார்க்கங்களால் அடையக்கூடிய சம்மிபஸ்தானம் ஒன்றேயென்று நிரூபிக்கப்பட்டுள்ளது. இம்மார்க்கங்கள் முதலில் வேறுவேருகத் தோன்றினுலும் முடிவில் அவை ஒன்றேயாகும். கர்ம மார்க்கத்தில் ஒருவன் பரிபூர்ணனுனல் பக்தி ஞானங்கள் தாமே அவனது மனத்தில் பிரகாசிக்கும். அவனும் பரமயோகியாவான்.

ஞான பரிபாகத்தால் அடையும் அபரோக்ஷஞானமும் பக்திபரிபாகத்தால் கிடைக்கும் பராபக்தியும் என்னென்று பெரியோர் கூறுவர். பக்தன் எங்கும் பகவானைப் பார்த்துக் கடைசியில் தன்னிடத்திலும் அவரைப் பார்த்தால், அவனுக்கு ஞானம் முற்றும். அதுவே அபரோக்ஷஞானம். தன்னிடமே பரமாத்துமாவைப் பார்க்கும் ஞானி தனது பரிபாகதசையில் எங்கும் பரமாத்மாவைக் காண்பான். அப்போது அவனது பக்தி விரிந்து அவனிடம் பராபக்தி ஏற்படும். பக்திஞான மார்க்கங்களிரண்டும் முடிவில் ஒன்றேயாகும். ஞானிகளும் பக்தர்களும் பரிபாக தசைமுடிவில் ... ... பதங்களில் நின்று உலக அனுக்கிரகத்தின் பொருட்டுக் கர்மஞ்செய்வார்கள். அப்போது அவர்களைக் கர்மமார்க்கத்தில் நடப்பவரென்று சொல்லலாம். கர்மயோகியும் பக்திஞானங்களை அடைந்தாலொழிய பரிபூரணமான கர்மயோகியாகான். இவ்விதமாக மூன்று யோகங்களையும் பரிபாக தசையில் ஒன்றெனக் கூறலாம்.

16-ம் அத்தியாயம்.

அர்ச்சனம் அல்லது பூஜை.

யஞ்ஞங்களும் ஹோமங்களும் தேவதைகளையுத்தேசித்துச் செய்யப்படுகின்றன வென்றும், தேவதைகள் நமக்குச் செய்யும் மேன்மைகளுக்குக் கைம்மாறாக அவை செய்யப்படுகின்றனவென்றும் முன்னர்க் கூறினோம் ஆயினும், ஜீவன் ஈஸ்வரனது அம்ஸம். எல்லா தேவதைகளும் ஈஸ்வரது அம்ஸமே. அத்தேவதைகளுக்குள் கொடுக்கவேண்டிய கடன்களைத்தீர்ப்பதால், ஜீவன் தருப்தியடைய மாட்டான். ஈஸ்வரனது கலையாதலால் அவனை யடைவதற்கு ஜீவன் முக்கியமாக விரும்புவான். ஆதலால் உத்பத்திஸ்தானமான ஈஸ்வரனை அடையும் மார்க்கங்களில் சில முன் அத்தியாயத்தில் எழுதப்பட்டன.

தன்னிடம் வித்துப்போலவுள்ள ஆத்மசக்திகளை விரியச் செய்வதற்கு ஒவ்வொரு ஜீவனுக்கும் பூஜை அவசியம். ஜீவன் எப்போதும் பகவானையே பூஜிக்க எண்ணுவான். எந்த ரூபத்தில் பகவானை பூஜித்தாலும் அந்த ரூபத்தில் பகவான் ஆவாகனமாயிருப்பதாக நினைத்துக் கொள்வான். பகவானை நீக்கி வேறொரு வஸ்துவை அவன் பூஜியான். பூஜை செய்யும்போது பகவானை ரூபமுள்ளவராகப் பாவிப்பது எப்போதும் 'சுலபமான' வழியாகும். எல்லா சின்னங்களையுமணிந்துள்ள ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் ரூபத்தையாவது ஸ்ரீ சதாசிவரூபத்தையாவது, உலகமாதாவான சக்தி சொரூபத்தையாவது, பகவானது அவதாரங்களான ஸ்ரீராம கிருஷ்ணாதி ரூபங்களையாவது, உலகிற்கு ஒளியும், உஷ்ணமும், பிராணசக்தியும் கொடுத்து இரக்ஷித்துவரும் உலகத்திற்குக் கண்போன்றுள்ள சூரியனது ரூபத்தையாவது, கிருஸ்து, புத்தர் முதலியோரது ரூபங்களையாவது பூஜிக்கலாம். இவ்வித உதவியின்றி கேவலம் சச்சிதானந்த சொரூபனான சகுணபிரமத்தை பூஜிப்பது கஷ்டம். ஞானமார்க்கத்தில் நடப்பவருக்கு மாத்திரம் அது சாத்தியமாகும். ஸாமானியமாக எல்லோருக்கும் அது

கைகூடாது. இந்த மானசிக உபாசனை கடினமானதென்று பகவான் அர்ச்சுனனுக்கு உபதேசித்ததை முன் கூறினோம். பகவானை ரூபமுள்ளவராக பாவித்து பூஜைசெய்வது எளிதான வழியாகும். அது எல்லாருக்கும் சாத்தியமானது.

இனி, அர்ச்சனம் பாஹ்யபூஜை யென்றும், அந்தரங்க உபாசனையென்றும் இருவகைப்படும். பாஹ்யபூஜையில் ஊனக் கண்ணுக்குக் காணப்படும் மூர்த்தியொன்று பகவானுக்குப் பிரதியாக உபயோகப்படும். இந்த மூர்த்தி விக்கிரகமாகவும், சாளிக்கிராமமாகவும், இலிங்கமாகவும் இன்னும் பலவிதமாகவு மிருக்கும். ஒவ்வொரு ரூபமும் சில சின்னங்களோடு பிரகாசித்து பகவானது சக்திகள் சிலவற்றை நிரூபித்துக் கொண்டிருக்கும். பூஜிக்கும் விக்கிரகம் சங்குசக்கர கதாதாரியாயும், சதுர்ப் புஜனும், ஸ்ரீவத்ஸாங்கனும், ஸ்ரீலக்ஷ்மீஸமேதனும், அலங்கரிக்கப்பட்டால், அது ஸ்ரீமந்நாராயணமூர்த்தியைத் தெரிவிக்கும். அச்சின்னம் அத்தேவனது சக்திகளை வெளிப்படுத்தி உபாசகன் தன் மனத்தில் அச்சக்திகளை தியானிப்பதற்கு உதவியாகின்றது. அந்த விக்கிரகம் சூலம், வச்சிரம், கட்கம், பாசு, கபாலம், உடுக்கு, புலித்தோல் முதலிய சின்னங்களோடு கூடியிருந்தால், அது சதாசிவனைத் தெரியப்படுத்தி, அத்தேவனது இலக்ஷணங்களை தியானிப்பதற்கு உதவியாகின்றது. ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் பிம்பத்தில் நான்குபுஜங்களும், சங்கு சக்கரம் முதலிய சின்னங்களும் காணப்படும். அம்மூர்த்தியின் நான்கு புஜங்களும் நான்கு திசைகளுக்குட்பட்ட உலகமனைத்தையும் பரிபாலித்துக்காக்கும் பிரபு அவரேயென்று குறிக்கும். அதன்கணுள்ளது சங்கம் சிருஷ்டிகாரணமான சப்தபிரம சொரூபராக அவரிருப்பதற்கு அறிகுறியாகும். சக்கரம் சுவாதீனமாக நடந்துகொண்டிருக்கும். எங்கும் நிறைந்த தத்துவம் இவரேயென்று வெளியிடும். அல்லது அவரது ஆக்ஞைக்குட்பட்டுச் சுழன்றுவரும் பிரபஞ்சசக்கரத்தைக் குறிப்பதாகும். ஸ்ரீவத்ஸம் சுவாதீனமாக நடக்கும் பிரகிருதிசொரூபம் இவரே யெனத் தெரிவிக்கும். இவையனைத்தும் அந்தரூபத்தால் மூர்த்தியாக விளங்கும் பகவானை அறிவிக்கும். சூலம், கட்கம், வச்சி

ரம் முதலிய ஆயுதங்கள் லயகர்த்தாவாகிய மகாதேவனைக் குறிக்கும். வரதாபய ஹஸ்தங்களிரண்டும் அந்த லயகர்த்தா ஜீவர்களை ஈடேற்றி மேலோராகச் செய்யும் மகானுபாவனெனத் தெரிவிக்கும். கபாலமும், புலித்தோலும், வைராக்கிய சுகத்தைப் பார்க்கிலும் மேலான சுகமில்லையென்று போதிக்கும். அவரது பாதி தேகத்தைத் தரித்துக்கொண்டிருக்கும் பார்வதிதான் பிரமவித்தியா சொரூபிணியான லோகமாதாவெனவும். தன் குழந்தைகளை அபாரக்கருணையுடன் இரட்சித்துத் தகப்பனது பாதங்களிற் சேர்க்கும் தாயெனவும் போதிக்கின்றார். அவ்வம்பாள் முமுக்ஷுக்களுக்கு சிவனது பாதகமலங்களையும், அவ்வழியால் மோக்ஷத்தையும் காட்டுபவள். ஞானத்தைத் தேடுவோர்க்கு ஞானத்தையும், பொருள் வேண்டுவோர்க்குப் பொருளையும் அளிக்கும் தாய்போன்றவள். அரி அயன் காண்பதற்கரிய அடிமுடியற்ற சோதித்திருத்தூணாக விளங்கிய மகாதேவரது சின்னமாகிய லிங்கம் அவர் அவயவமற்றவரென பதைக் குறிக்கும். இதுபோலவே வைஷ்ணவர்களால் பூஜிக்கப்படும் சாலக்கிரமம் விஷ்ணுவின் ரூபமாகப் பாவிக்கப்படுகிறது.

இவ்விதமாக இந்திரியங்களுக்குப் புலப்படும் ஸ்தூலபிம்பங்கள் பாஹ்யபூஜையில் உபயோகிக்கப்படும். இனி பூஜாபுஷ்பங்கள் இருதயத்திலிருந்து வெளிப்படும் பக்திஞானங்களை தெரிவிக்கும் பக்திநிரம்பினவுள்ளத்துடன் பகவானை பூஜித்தால் சூக்ஷுமலோகத்தில் பக்திஞானங்களை புஷ்பரூபமாக யோக திருஷ்டிக்குக் காணப்படுமென்று யோகிகள் சொல்லுகிறார்கள். உபாசிக்கப்படும் தெய்வத்தின் பாதங்களைக் குறித்துச்செல்லும் இருதயபாவங்களே புஷ்பங்களாக ஸமர்ப்பிக்கப்படுமாதலின், புஷ்பங்கள் அந்த பக்தி சங்கற்பங்களைக் குறிக்கும். அதனாலேயே பகவானது பிம்பங்களை பக்தன் புஷ்பங்களால் பூஜிக்கும்போது, அவற்றைக் கையினாலெடுத்து இருதய ஸமீபத்திற்குக் கொண்டுபோய் அங்கிருந்து பகவானது பாதாரவிந்தத்தில் ஸமர்ப்பிக்கின்றார். மற்றும் நீரை அபிமந்திரித்து பரிசுத்தப்படுத்தி, உபாசிக்கும் தெய்வத்தினது தேஜஸோடுகூடிய அந்த ஜலத்தை பக்தன்மேல் தெளித்துக்கொண்டவுடன் அவ

னது ஸ்தூலசூக்ஷ்ம தேகங்கள் பரிசுத்தமடைந்து, பகவானது திவ்வியதேஜஸை யடைவதற்கு ஏற்றவை யாகின்றன.

உபாசகன் பகவானது ரூபத்தை ஒரு நிலைப்படுத்திய தன் முழுமனத்துடன் சிறிதுபோது முதலில் உற்றுப்பார்த்தால், பிறகு கண்ணைமூடிக்கொண்டு அந்த ரூபத்தைத் தன்மனத்தில் பூரணமாக நன்ருய் நிறுத்திக்கொள்ள இயலும். அவ்விதமானசீகரூபத்தைக் கற்பித்துக்கொண்டு தியானிப்பதற்கு பாஹ்யபிம்பங்கள் உதவியாகும். பாஹ்யபிம்பத்திலிருந்து அந்தரங்கமான மானசீகபிம்பத்தை தியானிப்பது சுலபசாத்தியமாகும். பின்னுளில் அந்தபிம்பமும் படிப்படியாக அசேதனமுள்ளதாகி, உபாசிக்கப்படுவோனது சொரூபமாகமாறும். பக்தன் தியானத்தாலும் தோத்திரத்தாலும் பகவானது இலக்ஷணங்களைக் குறித்துக்கொண்டு அவற்றைத் தன்னிடம் விருத்திசெய்துகொள்ள நினைத்து படிப்படியாக பகவானிடம் மனத்தை லயப்படுத்தி தியானத்தில் நின்று, உலகத்தையும் மறந்திருப்பான். அப்போது அவன் பகவானது சந்நிதானத்தில் தானிருப்பதாக பாவித்து சாந்திரூபமான ஆநந்தத்தையடைவான். இவ்விதமாக பக்தன் மந்திரஜலத்தால் தன்தேகத்தில் இயற்கையாக பேற்பட்ட மாசுக்களைப்போக்கி, தேகத்தை பரிசுத்தப்படுத்திக்கொண்டு, பாஹ்யபிம்பங்களின் சகாயத்தால் தன் மனத்தை ஒருநிலைப்படுத்தி மானசீகபிம்பத்தைக் கற்பித்துக்கொண்டு அதில் பகவானது சொரூபத்தைப்பார்த்து அவனது திவ்விய குணங்களையும் இலக்ஷணங்களையும் தியானித்து பகவானிடம் பாவசனுகி ஆநந்தத்தை அனுபவிப்பான். இதனுல் பாஹ்யபிம்பம் உபாசனைக்கு மிக்கத் துணையாகவிருப்பது வெளிப்படை.

இனி, மானசீகபிம்பங்களை ஏற்படுத்திக்கொண்டு தியானிப்பது யாவர்க்கும் சாத்தியமாகாது. அதனுல் பாஹ்யபிம்பங்களான விக்கிரகங்கள் மிகவும் உபயோகமுள்ளவை. எவரேனும் மானசீகபிம்பத்தை யமைத்துக்கொண்டு பூஜிக்கமுடியாமல் பாஹ்ய விக்கிரகங்களையே பூஜித்தால் அதற்காக அவரைக் குறைகூறுவது தவறு. பாஹ்யங்களான விக்கிரக முதலியவற்றை உபயோகிக்கக் கூடாதென்று அவர்களுக்குப் புத்திபுகட்டு

வோர்கள் அவர்களுக்குத் தீங்கிழைப்போரேயன்றி மேன்மை செய்பவராகார். இதுபோலவே பாஹ்யமான பற்றுக்கோ டொன்றை வேண்டுபவர், மானசிக தியானஞ் செய்பவர்களைக் குற்றங்கூறுவதுந் தவறு.

அவரவர் மனோவிருத்திகளுக்கும் யோக்கியதைக்குந் தக்கபடி இவ்விரண்டுவழிகளும் உபயோகிக்கப்படும். பிறர் உபாசிக்கும் வழிகளைத் தூஷிக்காமல் அந்யோந்ய ஸ்நேகபாவத்துடன் ஒவ்வொருவரும் நடந்துவந்தால், எல்லோரும் அவரவர்க்கேற்பட்ட காலங்களில் கடைத்தேறுவார்கள். எல்லாவழிகளும் பகவானையடையும் வழிகளே. எல்லாவழிகளிலும் முயல்பவர் பகவானைத்தான் அடையவிரும்புகிறார்கள். எந்தவழிகளில் உபாசித்தாலும், அந்தவழிகளில் பகவான் பக்தனுக்கு அனுக்கிரகஞ் செய்வார். எல்லாவழிகளும் பகவானிடமே முடிவுபெறும். இக்கருத்தே பகவத்கீதையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

என்னையெவ ரெவ்வா றடைந்தியல்வர் யானவரை
அன்னவகை யான்மிகவு மன்புற்றே—பின்னடைந்து
காட்டுவன்மற் றாதலினு லென்னெறியைக் காதலினு
னட்டெவரும் பின்செல்வர் நன்கு. கீ. வெ. IV—11.

இனி விக்கிரகங்களை உபயோகிப்பதால் ஏற்படும் பலன்கள் சிலவற்றை இங்குச் சுருக்கமாக வரைவோம்.

(1) தியானிப்போரது மனது சஞ்சலமாகவிருக்கும் சஞ்சலமனத்தை ஒருநிலைப்படுத்துவதற்கு பாஹ்யவிஷயங்கள் அவசியம். விக்கிரகத்திலுள்ள சின்னங்களும் பகவானது இலக்ஷணங்களையும் சக்திகளையுங் குறிக்கும். அதனால் அவையும் தியானத்திற்கு உதவுகின்றன.

(2) விக்கிரகம் சாஸ்திரவிதிப்படி அமைக்கப்படும். மந்திரங்களாலும், ஆகம பிரயோகங்களாலும் பிராணபிரதிஷ்டை செய்யப்படும். அப்போது அந்தபிம்பம் தேஜோமயமாகி அது குறிக்கும் தேவதையின் சக்திகளைப் பெறும். தினந்தோறும் அது உபாசகனால் பூஜிக்கப்பட்டும், தியானிக்கப்பட்டும் வருவதால், படிப்படியாக அதனிடம் தேவதாசக்தியும், மகிமையும்

விருத்தியாகும். பூஜிப்பவனது பக்தியும், ஞானமும் எத்துணை விருத்தியாகின்றனவோ, அத்துணை அந்தபிம்பத்தின் தேஜோ மகிமையும் வளரும். அவ்விதபிம்பத்தை பக்தன் நெருங்கின வுடன், அவன் மனத்தில் ரம்மியமான பக்தி நிறையும். பக்தி நிறைந்தால், தியானத்தில் அவனுச்கு அதிக நோக்கமுண்டா கும். அப்பிம்பத்தைப் பார்த்தபோதே பக்தனது மெய் சிலிர்க் கும். அவனதுமனது பக்திபரவசமாகும். கடவுள் தியானத் தைத் தவிர வேறெண்ணங்கள் அவன்மனத்தில் புகா. அவனது மனது ஒருநிலைப்படும். இத்தகையபலன்கள் அந்த பிம்பத்தின் மூலம் பக்தனுக்கு ஏற்படும். இன்னும் அந்தபிம்பத்தில் பரி சுத்தமான தேஜஸிருப்பதால் பக்தனது சூக்ஷ்மசரீரமும் பரி, சுத்தமடைந்து, சாந்தமடையும். ஸம்ஸார தாபத்திரயங்களும், (பத்தினி, புத்திரர், பொருள் இவைகளால் வரும் துக்கங்கள்) இழிவான மனோவிகாரங்களும் தொலைந்துபோகும்.

(3) இனி, இவ்வுலகில் நட்புக்குக் கட்டுப்பட்ட நேசரிரு வருள் ஒருவர் இறந்துபோனால், அவரது பிரதிரூபமான பிம் பத்தையாவது, படத்தையாவது ஸமீபத்தில் வைத்துக்கொ ண்டு, பார்க்குந்தோறும், அவருடைய நண்பருக்கு அளவிறந்த இன்பமும், களிப்பும், திருப்தியும் உண்டாவது இயற்கையல் லவா? விக்கிரகபூஜையும் இதுபோன்றிருப்பதோடு, பன்மடங் கதிகமான பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடியதாக விருக்கி றது. அந்த பிம்பத்தைப் பார்க்குந்தோறும் திவ்வியமங்கள விக்கிரகனும், தயாநிதியும், ஆநந்தசொரூபனும், சகல ஆநந் தத்தையும் கொடுப்பவனுமான பகவான் பக்தனது மனத்தில் பிரசன்னனாவான். தினந்தோறும் இச்சையுடன் பூஜித்து தியா னிக்கும் பிம்பமாதலின், தினந்தோறும் பக்தனுக்கு அதின் மேல் பிரியமதிகமாகும். வரவர அந்த விக்கிரகம் பிரத்தியக்ஷ மான தெய்வம்போலக் கருதப்படும். தன்னுயிரினும்மேலாகவே அதை பக்தன் எண்ணுவான். இவ்வாறு அந்த விக்கிரகம் முத லில் பக்தனுக்கு மிகுந்த பயனைத் தந்தாலும், சிறிது காலத்திற் குள் அது பயனற்றதாகப் போய்விடும்.

இக்காரணங்களால் விக்கிரகங்களை உபயோகிப்பதும் பல வழிகளில் உபயோகமுள்ளதாகும். உண்மையான பக்தர்கள்

விக்கிரகங்களை உபயோகிப்பவரிடம் வெறுப்புக்கொள்ளாமலும் புத்திபேதத்தைக் காண்பிக்காமலுமிருப்பது நலம். தம் அனுபவத்தால் தத்துவங்களை அறிந்தவர்கள் ஏற்படுத்திய நிபந்தனைகளை தத்துவந்தெரியாதவர் ஆக்ஷேபிப்பதைப் பார்க்கிலும், அந்நிபந்தனைகளை ஆராய்ந்து அவற்றின் சூக்ஷ்மங்களைக் கண்டறிந்துகொள்வது உத்தமமானது.

இதுபற்றியே தேவாலயங்களில் விக்கிரகங்கள் பூஜிக்கப்படுகின்றன. மேற்குறித்த பலன்களைத்தவிர, தேவாலயங்களால் மற்றொரு பெரிய பிரயோசன மேற்படுகிறது. அங்கே பலபக்தர்கள்கூடி பக்தியுடன் பகவானைத் துதிக்கின்றனர். பக்தி சிரத்தையுடன் விக்கிரகம் பூஜிக்கப்படுகிறது. பக்தியின் சொரூபம் இவ்வாறுள்ளதென நடத்திக் காட்டப்படுகிறது. இவற்றால் அவ்விக்கிரகத்தின் மகிமை விசேஷமாகப் பெருகுகின்றது. அங்குநடக்கும் பூஜையை உத்தேசித்து வருபவரெல்லோரும், சாதாரணமாக பக்திநிரம்பியவர்கள். அதனால் தேவாலயங்கள் பிறரது பக்தியை விருத்திசெய்யும் சுபாவத்தை யுடையனவாகும். மற்றும் அங்கேசெல்வதால் ஒருவரைப்பார்த்து ஒருவர் பக்தராவதற்கு இடமுண்டாகிறது. பாமரஜனங்களுக்கு அங்கேநடக்கும் திருவிழாமுதலியவை கண்காட்சியைக் கொடுத்து அவரது மனத்திலும் பக்தியை அதிசப்படுத்திக் கொண்டிருக்கும்.

இனி, தேவாலயங்கள் அமைப்பதிலும் சில இரகசியங்களுண்டு. தேவாலயங்களில் ஏழு அல்லது மூன்று பிராகாரங்களிருக்கும். அவை ஜீவனது கோசங்களையும், பிரம்மாண்டத்திலுள்ள லோகங்களையுங் குறிக்கும். ஏழுபிராகாரங்களுக் கப்பால் கடவுளிருப்பதுபோல் ஏழுகோசங்களையுந் தாண்டிச்சென்றால், ஆத்மசானித்திய முண்டாகுமென்றுவது, ஏழு லோகத்தையும் தாண்டிச்சென்றாலல்லது பகவானைப் பார்ப்பது சாத்தியமாகாதென்றுவது நாம் அறியவேண்டும். சில ஆலயங்களில் மூன்று பிராகாரங்களிருக்கும். மற்றுஞ் சிலவற்றில் ஒரேபிராகாரமும் முன்மண்டபமும் அதைத்தாண்டிச் சென்றால், கர்ப்பகிரகமும் ஆக மூன்றுமிருக்கும். அம்மூன்றையுந் தாண்டிச்சென்றால், கடவுளைத் தரிசிக்கலாம். இதுவும் ஆத்மதத்துவத்தை மற்றோர்

விதமாக போதிக்கின்றது. எவ்வாறெனில், இங்குக்குறித்த மூன்றும் ஜீவனது ஸ்தூல, சூக்ஷ்ம, காரணசரீரங்களையாவது எங்கும்நிறைந்த ஈஸ்வரனது ரூபங்களான விராட்ரூபம் இரண்ய கர்ப்பசொரூபம், சூத்ராத்ம சொரூபமென்ற மூன்றையாவது குறிக்கும். அவைகளைக் கடந்தபிறகே பரமாத்மாவை அறிய வேண்டுமென்று இவை தெரிவிக்கின்றன. இவ்வாறு தேவாலயங்கள் ஸ்தூலதிருஷ்டிக்கு பாமரர்களிடம் பக்தியைப் பிறப்பிக்கக் கூடியதாகவும், சூக்ஷ்மபுத்திக்கு ஞானத்தை ஊட்டக்கூடியதாகவும் நிருமிக்கப்பட்டிருக்கின்றன.

பக்தர்கள் விக்கிரகங்களை பகவானது அர்ச்சாவதாரங்களென்பர். பூஜைக்குரிய பிம்பங்கள்யாவும் அர்ச்சைகளே. மனத்தில் நிருமிக்கப்படும் மானசீகபிம்பங்களும், அர்ச்சைகளாகவே அறிந்துகொள்க. மூர்த்திஎண்வகையாக இருக்கலாமென்று பெரியோர்கள் கூறுவர்.

ஶைலீ தாரு மயீ லௌஹீ லேப்யா லேக்யா ச ஸைகதீ ।
மனோமயீ மணிமயீ ப்ரதிமாஷ்டவிதா ஸ்ம்ருதா ॥

(இ. பொ.) சிலைகளாலும், மரங்களாலும், லோகங்களாலும், மண் முதலியவை பூசுவதாலும், சித்திரங்களாலும் மணலினாலும், மனநிர்பாணத்தாலும், மணிகளாலும் இவ்வாறு அர்ச்சா மூர்த்திகள் எண்வகைகளாக இருக்கலாம்.

பாமரர் மாத்திரமே அர்ச்சையை உபயோகிக்கத் தக்கவரேயொழிய, மனோமயமூர்த்திகளை உபயோகிக்க சக்தியுள்ளவர்கள் மற்றமூர்த்திகளை உபயோகிப்பது யுக்தமல்லவென்று நினைக்கக்கூடாது. மேலோர் நடக்கும் வழியைப் பற்றிக்கொண்டே பாமரர் நடக்க முயல்வர். ஆதலால் பெரியோர்கள் அர்ச்சைகளை உபேக்ஷித்தால், பாமரரும் அவற்றை அவ்வாறே உபேக்ஷிப்பர். அதனால் யாதொரு பற்றுக்கோடுமின்றி உபாஸிப்பதற்கு சக்தியில்லாமல் அவர்கள் கெட்டுப் போவார்கள். இதே கருத்து பின்வரும் பகவத்கீதை வெண்பாவிலும் வந்துள்ளது.

மேலொருவன் செய்த மிகுகருமந் தானதுவென்
றேலு மதின்மற்றிங் கியல்சனமுஞ்—சாலவவன்

யாதைத்தன் னங்க மெனவியலு மிவ்வுலக
மாதைப்பின் செல்லு மமர்ந்து. கீ. வெ. III. 18.

இதனல். தமக்கு அவை அவ்வளவு அவசிய மில்லையாயினும் பாமரர்களுக்கு வழிகாட்டுவதற்காகவும் அவர்களிடம் பக்தியால் உருசியைப் பிறப்பிப்பதற்காகவும், அவைகளைப் பெரியோர்கள் உபேக்ஷிக்காமல் ஆதரிக்கவேண்டும்.

நசையுடையார் செய்கைபோன் ஞானி நசையின்றி
இசையுலகுக் காக வியல்வார்—பசைகருமத்
தானவறி வில்லார்க் கதினெஞ்சைப் பேதியேற்
ருனிசைவு செய்கவதிற் சார்ந்து. கீ. வெ. III. 21.

ஆத்துமஞான மில்லாதவர்கள் கருமத்திலே பலாபேக்ஷையுள்ளவர்களாய் அதை எப்படிச் செய்கிருர்களோ அப்படியே ஆத்மஞானமுள்ளவன் பலாபேக்ஷயில்லாதவனுய் கருமங்களை ஜனங்களின் நன்மையின் பொருட்டுச் செய்யவேண்டும். கருமத்தில் விருப்பமுள்ள அக்ஞானிகளுக்குப் புத்திபேதத்தை யுண்டாக்கக்கூடாது. நித்தியநைமித்திய கருமங்களைச் செய்துகொண்டு வரவேண்டும்.

இகலோகவாசைகளைத் தீர்க்கவேண்டுமென்ருவது மாணத்திற்குப்பிறகு வரும் நரகபாதையினின்றும் தம்மை மீட்டுக் காக்கவேண்டுமென்ருவது பகவானைபிரார்த்திப்பது தியானமாகாது. இவ்வாறு செய்வது பாமரர்களின் வழியாகும். பகவான் சகல கலியாண குணநிதியாகவுள்ளவர். எங்கும் நிறைந்தவர். அவ்வித திவ்யமூர்த்தியை தியானிக்கும்போது மனத்தை விஷயங்களில் புகவிடாமல் அடக்கி, அம்மூர்த்தியிடம் அதை நிறுத்திக்கொண்டு, மனவேறுபாடு சிறிதுமின்றி பக்திவெள்ளத்தை பகவானிடம் தைலதாரை போல பிரவகிக்கச்செய்ய வேண்டும். அவ்வாறு செய்யின் மனத்தில் ஆத்மசொரூபம் பிரதிபலித்து, பக்தனது அனுபவத்திற்கு வரும். இதுவே தியானம். மிக்க அழகியதோர் பொருளை ஒருவர் பார்த்தால், அவரது மனது அப்பொருளிடம் பற்றுவைத்து அதிலேயே ஊன்றிவிடும். மனத்தை அதிலிருந்து வலியத்திருப்ப முயன்ருலும், அது திரும்பாது. ஒருகால் திரும்பினும், மறுபடியும் அதின் மீதே செல்லும். அவ்வாறே பூரண அழகுள்ள பரமேச்

வானிடம் மனத்தை ஒரே நிலையாக நிறுத்தி, ஆநந்தபாவசனாக விருப்பதுவே தியானம். இவ்வித தியானத்திற்கு வெளிவஸ்துவாகிய பற்றுக்கோடொன்று அவசியமென்பது அநுபவமுள்ளவர்களின் அபிப்பிராயம்.

இனி விக்கிரகங்களை மலர் முதலியவைகளால் அர்ச்சித்து பூஜிப்பதுபோலவே, ஆரியர்கள் செய்யும் சந்தியாவந்தனமும் முக்கியமான பூஜையாகும். இவ்வித உபாஸனையை இருபிறப்பாளர்களாகிய, அந்தணர், க்ஷத்திரியர், வைசியர் ஏற்ற மந்திரங்களுடனும், மந்திரங்களை ஓதுவதற்குத் தகுதிபெறாத பிறர் எல்லா மந்திரங்களுக்கும் மேலான பகவானது நாம மந்திரங்களுடனும் அநுஸரிப்பது நலம். சந்தியா என்பது 'நன்றாக தியானஞ்செய்தல்' என்று பொருள்படும் இது அந்திக்காலங்களில் ஒரு நிலைப்பட்ட மனத்துடன் செய்யப்படும். அத்தருணங்களில் சூரியமண்டலம்வரை வியாபித்துள்ள பிரம சொரூபத்தை சங்கு, சக்கரம், கதை, வாள், வில் முதலியவைகளுடன் பிரகாசிக்கும் ஸ்ரீமந்நாராயண ரூபமாகவாவது, ஐந்து முகங்களையும், மூன்று கண்களையும், கபாலமுதலிய சின்னங்களையுமுடைய சதாசிவனது ரூபமாகவாவது, ஆதிசக்தி சொரூபமாகவாவது, வேறு யாதேனுமொரு இஷ்ட தெய்வத்தையாவது தியானிக்கலாம்.

இனி சந்தியென்றால் கலப்பது என்றும் பொருள்படும். இருட்டும் வெளிச்சமும் கலக்குங்காலம் சந்தியாகாலமாகும். இது சூர்யோதய சூர்யாஸ்தமன ஸமயங்களில் நிகழும். காலையில் உடுக்கள் ஒளியிழந்து மங்கத்தொடங்கினது முதல் சூர்யோதயம் வரை காலை சந்தியாகாலமாகும். சூரியன் அஸ்தமித்தது முதல் உடுக்கள் காணப்படும்வரை மாலை சந்தியாகாலமாகும். இவையிரண்டும் சந்தியாவந்தனத்திற்கேற்ற காலம். மத்தியானமும் சந்தியாவந்தனத்திற்கேற்றதெனச்சொல்லப்பட்டுள்ளது. இந்த மூன்று காலங்களும் மனத்திற்கு சாதாரணமாக சாந்தத்தைக் கொடுக்கக்கூடிய வேளைகளெனப் பெரியோர்கள் கூறுவர்.

காலையில் எல்லாம் அசைவற்று ஒலிபடங்கியிருக்கும். இது மனத்தை ஒரு வழிப்படுத்துவதற்கு ஏற்ற காலமாகும். மாலைப் போதில் உலகில் நடந்த அல்லோலலங்கள் குறைந்துகொண்டிருக்குமாதலால், அதுவும் சந்தியாவந்தனத்திற்கு ஏற்ற காலந்தான். நித்திரையில் இந்திரியங்களும் மனமும் இகலோகவிஷயங்களிற் செல்லாமல், கேவலம் சுகானுபவத்திலேயே உள்ளமையின், அதிகாலையில் அவைகள் சாந்திபடைந்திருக்கும். அப்போது அவற்றை ஒரு நிலைப்படுத்துவது சுலபம். அந்தக் காலம் தவறினால் அவைகள் மறுபடியும் லௌகிக வியாபாரங்களிற்புகுந்து, விஷயங்களிற் சென்று, காமக்ரோதாதிகளால் பீடிக்கப்பட்டிருக்கும். அக்காலங்களில் அவற்றை தியானத்தில் நிறுத்துவது கடினம். ஆதலால் உறங்கி யெழுந்தவுடனே இந்திரியமனங்களை சுவாதீனஞ்செய்துகொண்டு, கடவுளை தியானிப்பது எளிதாகும். லௌகிகவியவகாரங்களில் புகுந்தபிறகு அவைகளை தியானத்தில் திருப்புவது கஷ்டம். மனத்தையும் இந்திரியங்களையும் தியானத்தால் சிக்ஷித்து அவைகளிடம் பகவானது கலையைச் செலுத்தியபிறகு லௌகிகவியாபாரங்களைச் செய்தால், அந்தவியாபாரங்கள் தாமே விரைவில் முடிவுபெறுமென்று சுருதிகள் சொல்லுகின்றன.

இனி, மேற்கூறிய மூன்றுகாலங்களிலும் உதயகாலமே மேலானது. அதனால் உதயகால தியானமே மிகவும் முக்கியமானது. லௌகிகவியாபாரங்களால் கலங்கியிருக்கும் மனஇந்திரியங்களை அந்த வியவகாரங்களெல்லாம் தீர்ந்தபிறகு மாலைவேளையில் பகவத்தியானத்தில் நிறுத்தினால், அவை சுவாதீனப்பட்டுக் கலக்கம்குறைந்து, சுகமான நித்திரைக்கு அனுகுணமாகும். இதனால் சாயங்கால தியானமும் முக்கியமாகின்றது. மற்றும் வியவகாரங்களின் மத்தியில் மத்தியான போஜனத்திற்கு முன்பு பகவத்தியானம்செய்வதும் நல்லதென்று தோன்றுகிறது. சந்தியாவந்தனத்தை ஒவ்வொருதினமும் தகுந்த காலத்தில் சரியாகச்செய்துவந்தால், அக்காலங்களில் இந்திரியமும் மனமும் ஒருநிலைப்பட்டு, சுலபமாக வயப்பட்டுவிடும். அதனால், அவ்வக்காலங்களில் தவறாமல் ஒவ்வொருவரும் பகவத்தியானஞ் செய்வது மிகவும் உத்தமமானது.

இந்த சந்தியாவந்தனத்தில் பல பகுதிகள் உள்ளன. அவை வருமாறு:—

(1) பிராணாயாமம்.—பிரபஞ்சவிஷயங்களை நோக்கிய மனத்தை உள்ளே திருப்புவதற்கு இது மிக்கத்துணையாகவுள்ளது. இதன் இரகசியங்களைத் தெரிந்துகொண்ட பெரியோரிடம் இதை அனுசரிக்கும் வழியைக் கற்றுக்கொண்டாலல்லது இதை அனுசரிப்பது தவறு. அவ்வாறு கற்றுக்கொள்ளாமல் அனுசரிப்பவர்கள் பலகெடுதிகளுக்குள்ளாவார்கள்.

(2) ஆசமனம், மார்ச்சனம்.—பகவானது நாமத்தை உச்சரித்துக்கொண்டாவது, அல்லது மந்திரங்களை ஜெபித்துக்கொண்டாவது, அபிமந்திரித்த ஜலத்தை உட்கொள்ளுவது ஆசமனம்; அந்த ஜலத்தால் புரோக்ஷித்துக் கொள்ளுவது மார்ச்சனம். பக்தியுடன் உச்சரிக்கும் மந்திரங்களால் பரிசுத்தமடைந்த ஜலத்தை உட்கொள்வதால், அகசுத்தியும், அதை மேலே புரோக்ஷித்துக்கொள்வதால் புறசுத்தியும் மனிதர்க்குண்டாகும்.

ஆசமனம் முதலியவைகளில் இரவிற்செய்த பாவங்களைப் பகலிலும், பகலிற்செய்த பாவங்களை இரவிலும் மனிதர் ஸ்மரித்து பரமாத்மாவாகிய அக்கினியில் அவற்றைத்தபித்து நாசஞ்செய்வதுடன், பாவங்களிலிருந்து தம்மைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொள்ளுகிறார்கள். ஜலவிசர்ஜனத்தில் பாவமூலமான அஞ்ஞானம் தொலையும்படி பிரார்த்தனைசெய்கிறார்கள். இதனால், சூக்ஷ்மகாரண சரீரங்களின் மாசுகள் தொலைந்துபோகும். காமகுரோதாதிகளும், அகங்காரமும், சூக்ஷ்மசரீர மாசுகளாகும். காரணசரீர மாசுகள் எல்லாவற்றிற்கும் மூலமான அவித்தை. இத்தருணத்தில் முக்கியமாக கவனிக்கவேண்டிய இரகசியங்கள் சிலவுண்டு. முதலில் இரவிற்செய்த பாவங்களைப் பகலிலும், பகலிற்செய்த பாவங்களை இரவிலும் ஆராய்ந்துசோதிப்பது மிகவும் அவசியமானது. தான் மனமொழிமெய்களால் செய்யுங் கருமங்களையெல்லாம் எண்ணித் தனக்குத்தானே சாட்சியாகவும், நியாயாதிபதியாகவுமிருந்து, மெதுவாய் அவைகளை ஆராய்ந்து, அவைகளிலுள்ள தோஷங்களை நன்றாகக் கண்டு

கொண்டு, மறுபடியும் அவற்றைச் செய்யாமல் ஒவ்வொருவனும் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இவ்விதஞ் செய்துவந்தால், தான்செய்யும் தோஷங்களை ஒருவன் படிப்படியாக நன்ருயறியலாம். அவைகளைத் தொலைப்பதும் அவனுக்கு எளிதாகிவிடும். தோஷங்க ளிவையென்று நன்ருயறியாமல், மனிதன் பன்முறை பாவங்களைச் செய்கிருன். தோஷங்களென்று தெரிந்தவுடன், அவன் அவைகளைச் செய்வது வழக்கமில்லை. இதுபோலவே ஆத்மதோஷங்களை மனிதர் ஆராய்ந்துவந்தால், மறுபடியும் அவற்றைச் செய்யாதிருப்பதற்குப் படிப்படியாக அவர் பிரயத்தனஞ்செய்து, பரிபக்குவதசையில் அவற்றை அடியோடு ஒழித்துவிடக்கூடும். இவ்வண்ணம் குணதோஷங்களை ஆராயாமல் ஞானவிருத்தியடைய முடியாது. ஆதலின், இவ்வாராய்ச்சியை ஒவ்வொருதினமும் ஒருமுறையாயினும் செய்வது நல்லது. மற்றும், தோஷங்களை நீக்குந்தோறும், தமதிஷ்டதேவதையை மனத்தில்நிறுத்தி, பிராசனமந்திரங்களிற் கூறியபடி, ஆத்மாக்கினியில் அவற்றையிட்டு தபிப்பதாக பாவித்தால் அத்தோஷங்களின் பலன் சிறிதுகுறைவுபடும். அதனல் பாவத்தாலேற்படும் நரகானுபவங்கள் குறையும். முக்கியமாக தோஷங்களை அவ்வப்போது நிதானமாக ஆராய்ந்து, மறுபடியும் அவைகளைச் செய்யக்கூடாதென்று நிச்சயித்துக்கொண்டால் சொற்பகாலத்திற்குள் அசுபவாசனைகள் ஒருவனிடம் எவ்வளவு உறுதியாகவிருந்தாலும், அவை நசித்துப்போம். சுபவாசனைகள் வளர்ந்துகொண்டே வரும். இதனல் சந்தியாவந்தனத்திலுள்ள இந்த தோஷவிசாரம் மிகவும் முக்கியமானது.

இவ்வாறு ஆசமனம் முதலியவைகளால் ஒருவன் தன் தேகத்தின் மாசுகளைப் போக்கி, மாசற்றமனத்துடன் தனது இஷ்டதெய்வத்தை தியானஞ்செய்வதற்கு உரியவனுகிருன். தியானஞ்செய்வதற்கு முன்பு ஒருவன்தன் இஷ்டதெய்வத்தை நினைத்து அர்க்கியபிரதானஞ் செய்யவேண்டும். அதன்பிறகு துதிப்பதே நலம்.

காயத்திரி மந்திரத்தை உபதேசம்பெற்றவர், அந்தமந்திரத்தைத் தாம் உபதேசம்பெற்றபடி ஜெபஞ்செய்து, இஷ்ட

தேவதையிடம் மனத்தை ஒருநிலைப்படுத்தி தியானஞ் செய்ய வேண்டும். தியானத்தைப்பற்றிப் பின்னால் ஆராய்ச்சி செய்யப்படும்.

காயத்திரி மந்திரத்தில் ஒருவிசேஷமிருக்கிறது. மந்திரார்த்தத்தை விசாரித்துப் பார்த்தால், 'உலகிலுள்ள ஜனங்களெல்லோரையும் நற்புத்தியுடையவராக பகவான் செய்வாராக' என்று உபாசகன் அப்பரஞ்சோதியை தியானிக்கவேண்டுமென்பது வெளியாகும். அதனால் தாமும் உலகிலுள்ளோரும் பரிசுத்தமடைந்து, சத்புருஷர்களாகி உலக இதத்தை அனுசரிக்கும்படி ஒவ்வொருவரும் பிரார்த்திக்கவேண்டும்.

மந்திரோபதேசத்தைப் பெற்றோரும் பெறாதோரும் மேற்காட்டப்பட்ட தருமத்தை கிரகித்து காலாகாலங்களில் இஷ்டதெய்வங்களை உபாசித்து, உலக இதத்தின் பொருட்டு பகவத்தியானஞ் செய்யவேண்டும்.

இராஜயோகம்.

இன்னும் மற்றொருவித உபாசனையுள்ளது. அதிலும் சந்தியாவந்தனத்திலுள்ள மந்திரங்களைச் சொன்னாலுஞ் சொல்லலாம். அல்லது தந்திரங்களைச் செய்தாலுஞ் செய்யலாம்; அல்லது மந்திரதந்திரங்களின்றி, ஜீவசொரூபங்களைத் தெரிந்துகொண்டு ஜீவன் பரமாத்மாவை யடையும்படி மானசீகதியானம் செய்யலாம். இதுவே ஜீவனையும் ஈசுவரனையும் சேர்க்கும் இராஜயோகம். இந்த யோகத்திற்குச் சிலசாதனங்களுள்ளன. அவை யோக அங்கங்களெனப்படும். இவைகளைப்பற்றி பதஞ்சலி முனிவர் தமது யோகசூத்திரங்களில் விரிவாகக் கூறியிருக்கின்றனர்.

யோக அங்கங்களின் துணையால் ஜீவன் ஈசுவரனையடையப் பழகுவதே யோகாப்பியாசம். யோகாப்பியாசம் ஏதோ ஒருநூதன வழியென்று மயங்கவேண்டியதில்லை. தெரிந்தும் தெரியாமலும் எல்லோரும் யோகாப்பியாசஞ் செய்கிறார்கள்

எல்லோரும் ஆநந்தத்தைக் கோரி, அதன் சொரூபமான ஆத்ம சானித்தியத்தை அடைய விரும்புகிறார்கள். அவ்வாநந்தத்தில் சிறிதளவைத்தரும் இகலோகவிஷயங்களில் பூரண ஆநந்தமுள்ள தெனத் தமது அஞ்ஞானத்தால் நினைத்து விஷயவாசைகளை மனிதர் வேண்டுகின்றனர். நாளடைவில் இவ்விஷயாநந்தங்கள் துக்கக்கலப்புள்ளவை யெனவும், நிமிஷத்தில் தோன்றி மறையக்கூடியவை யெனவும் தெரிந்துகொண்டால், பிறகு அவர் சொர்க்கசுகங்களைப் பெறுவதற்கு முயல்வர். அவையும் அழிவுள்ளவையென்பதைப் படிப்படியாக அவர் தெரிந்துகொண்டால், வைராக்கியம் நிரம்பி ஆத்மசானித்தியத்தைத் தேடிக்கொள்வர். இவ்வாறு ஆத்மஸம்யோகத்தை அடைய விரும்புகிறவர்கள் மனிதர்கள்மட்டுமல்ல. ஈசுவானது கலையாகவுள்ள எல்லாஜீவர்களும் மண், கல் முதலியவைகளில் சிலகாலம் சுழுத்தியிலிருப்பதுபோல் இருப்பார்கள். பிறகு மாஞ்செடிகளில் சிறிது சேதனத்தைபடைந்து மழை, வெப்பம், பூசாரமுதலியவைகளை கிரகித்துப் பலவித அநுபவங்களை யடைந்து பீஜரூபமாகவுள்ள ஆத்மசக்திகளிற் சிலவற்றை விருத்திசெய்து கொள்ளுகிறார்கள். பிறகு அலைந்து திரிதரும் ஜந்துக்களாகிய பசுபட்சி முதலியவைகளிற் பிறந்து, இந்திரியங்கள் மூலமாகப் பலவித சுகதுக்கங்களை அனுபவிப்பர். அவர்கள் முடிவில் மனிதஜன்மமெடுத்து மனிதரூபத்தில் ஜீவர்களாய்ப் பிரகாசிப்பர். இந்த யாத்திரை முழுவதிலும், ஈசுவானிடமிருந்து கலைரூபமாக வேறுபட்ட ஜீவன் மறுபடியும் அம்மகாஜோதியிடம் சேருவதையே கோரிக்கொண்டிருக்கும். எல்லா லோகங்களிலும் ஜீவனடையும் நானுவித அனுபவங்கள், அவ்வுயர்பதவியை மறுபடியும் ஜீவன் அடைவதற்குத் துணையாகவிருக்கும். இவ்விதமாக அநேகயுகங்களும் கற்பங்களும் திரிந்து, முடிவில் எல்லாரும் பாமபுருஷார்த்தங்களையடைய எண்ணுவர்.

இனி, விவேகமுள்ள மனிதன் தன் புத்திவிசாலத்தால் பிரயத்தனங்கள்செய்து, அக்காலநீட்சியைக் குறைக்கக் கருதுவான். இதற்குச் சில உதாரணங்களைக் கூறலாம். காட்டில் வளரும், முள்ளிக்காயின் விதையை யெடுத்து நல்லநிலத்தில் விதைத்து, அதற்குத்தகுந்த எருப்போட்டு அது செழிப்பாக

விருத்தியானவுடன், அதன்விதைகளை யெடுத்து மறுபடியும் அவ்வாறே விதைத்துக் காய்க்கும்படிசெய்து, அவ்விதைகளைக் கொண்டு மறுபடியும் தகுந்தபடி வியவசாயஞ் செய்துவந்தால் அதிற்காய்க்கும் காய்கள் படிப்படியாக முள்ளையிழந்து கடைசியில் முன்னிருந்ததைப் பார்க்கிலும் மேலானவையாகும். அவ்விதமே நல்லஜாதி மாமரத்தின் கொம்போடு மற்றொருஜாதிக் கொம்பை ஒட்டுச்சேர்ப்பதால், நல்ல உருசியுள்ள ஒட்டுப்பழம் பழுக்கும். இன்னும், நெல்லூர் ஜில்லாப் பசுக்களிலும் கன்றுகளிலும் சாந்தகுணமுள்ளது. மைசூர் அமிருதமகால் மாடுகளுக்குள் சுறுசுறுப்பும் வலிமையுமுள்ளன. நெல்லூர்ப்பசுக்களுக்கும் அமிருதமகால் மாடுகளுக்கும் ஸம்பந்தம் ஏற்படுத்திக் கன்றுகளைப் பிறப்பிக்கிறார்கள். அப்போது அவைகளிடம் நெல்லூர்க்கன்றுகளின் சாந்தகுணமும், மைசூர் எருதுகளின் வீரியமும் சுறுசுறுப்பும், கஷ்டவேலைகளைப் பொறுக்குந் திறமையும் காணப்படுகின்றன.

இவ்விதமாக ஸாமானிய லௌகிக வியாபாரங்களில் மனிதன் தன்புத்திகூர்மையால் அனேக வஸ்துக்களை விரைவில் மேலான நிலைக்குக் கொண்டுவருகிறான். அவை தாமே விருத்தியடைய வேண்டுமென்றால் பலகாலுஞ்செல்லும். தன் புத்திகூர்மையால் வஸ்துக்களின் தத்துவங்களையும், யுக்தாயுக்தங்களையும் அறிந்து பலமான பிரயத்தனஞ்செய்து தனது ஞானத்தையும் மனிதன் விரைவில் விருத்திசெய்யக்கூடும். இவ்வித விவேகத்தோடுகூடிய பிரயத்தினமே யோகாப்பியாசம்.

ஜீவனிடம் ஆத்துமசக்திகள் பீஜரூபமாகவிருந்து படிப்படியாக உலகத்தில் வெளியாகி பிரகாசித்து வரும் வழிகளை ஒவ்வொருவரும் பரிசோதிக்கவேண்டும். தம் அனுபவங்களோடு பிறரது அனுபவங்களையும் துணை கொள்ளவேண்டும். ஞானவிருத்திக்கு அனுகூலமான மார்க்கங்களைக் கையாளவேண்டும். அதற்கு விரோதமான வழிகளை நீக்கிவிடவேண்டும். தேசகால நிமித்தங்களை யறிந்து, காலத்திற்குத் தகுந்தபடி காரியங்களை எண்ணித்துணிந்து, பிறகு அவற்றைச் செய்யமுயலவேண்டும். இவ்விதமாகத் தனது சரீரத்தையும் இந்திரியங்க

ளையும் மனத்தையும் அடக்கிக்கொண்டு, அவைகளை சுத்தமாக வும், பலன் தரக்கூடியவையாகவும் செய்யும் வழியே யோகாப் பியாசம் என்ற பெயரைப்பெறும். அது ஒரு நூதன மார்க்க மல்ல. இவைகளை நன்றாயறிந்தோர்க்கு யோகாப்பியாசம் எளி தில் சித்திக்கும். அதை அப்பியசிக்கத் தொடங்கிய ஜன்மத்தி லேயே பரிபூரணசித்தியை ஜீவன் பெறாவிட்டாலும், அவன் செய்யும் பிரயத்தனம் வீணாகாது. அதன்பலன் கட்டிவைத்த மூட்டைபோல ஜீவனைத் தொட்டுக்கொண்டேயிருக்கும். இவ் விதமாக பிரயத்தினங்கள் செய்துகொண்டேவந்தால், சித்தி ஏற்படாமற்போகாது. இந்த விஷயம் கீதையில் யோகபிரஷ்ட விசாரத்தில் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது.

ஆய வவனுக் கறிய வுரைசெய்தான்
மேயவுல கத்தினு மேலிடத்து—மாய்வவனுக்
கில்லாதா னன்றி யிவன்றான் விசயனே
பொல்ல நெறியிற் புகான். கீ. வெ. VI 36.

புண்ணியர்க ளெய்தும்பெரும் போகத்தினிதமர்ந்தே
நண்ணியதிற் பல்லூழி நாளிருந்து—திண்ணியசீர்
செல்வ நலந்தாயார் சிறந்தமனை யிற்பிறக்கு
நல்வினையோ கஞ்சிதைந்தா னன்கு. கீ. வெ. VI. 37.

மற்றதுவே யன்றி வளர்மதிசேர் யோகியர்க
ளுற்ற குலத்திலுதயமா—முற்றுலகில்
இவ்வாறு சேரு மிதிற்பிறவி தான்மன்னு
வெவ்வாறு தானரிதே யிங்கு. கீ. வெ. VI. 38.

ஆங்கேதன் முன்பிறவி யானயோ கத்துணர்வைப்
பாங்கேலும் புத்தியுற் பற்றியே—யீங்கமர்ந்த
பின்னு மதின்முயற்றி பெற்றியன்று பேறதனின்
மன்னுமவ னுகுமே மற்று கீ. வெ. VI. 39.

(இ. பொ.) ஸ்ரீபகவான் கூறுகின்றார் :—ஏ ! பார்த்த ! அந்த யோக பிரஷ்டனுக்கு இந்த லோகத்திலும் நாசங்கிடை யாது. நல்லகருமத்தைச் செய்கின்ற எவனும் கேடடைதல் இல்லை. யோக பிரஷ்டன் புண்ணியஞ்செய்தவர்களின் லோகங் களையடைந்து வெகுகாலம் சுகமாகவிருந்து சதாசாரமுள்ள செல்வர்களின் மனையிற் பிறக்கின்றான், அல்லது ஞானிகளான யோகாப்பியாசஞ் செய்கின்றவர்களின் குலத்திலே பிறக்கின்

ருன். இவ்வுலகில் இத்தகையபிறவிகிடைப்பது அருமையானது. இந்த ஜன்மத்தில் பூர்வதேக வாசனையால் தனக்குண்டாய புத்திஸம்பந்தத்தை அடைகிறான். பின்பு மீண்டும் யோகசித்தி யடைவதிலேயே முயல்கின்றான்."

ஜீவன் ஈசுவரனை யடைவதே உண்மையான யோகம். இந்தயோகத்திற்கு சாதனங்களாக எட்டு அங்கங்கள் உள்ளன. இந்த அங்கங்களோடு கூடின அப்பியாசம் அஷ்டாங்கயோகம் எனப்படும். அவைபாவன :— இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பவை. இவற்றுள் இயமம், நியமம் இரண்டும் அப்பியசிப்பவனது அசுபவாசனைகளைத் தொலைத்து சுபவாசனைகளை அவனிடம் பிறப்பித்து, அவனுக்குப் பரிசுத்தியைக் கொடுக்கும். யோகாப்பியாசஞ் செய்பவன் பரிசுத்தமாக விராவிடில் ஸாமானிய உலக விபவகார்ரங்களில் அவன் யோக்கியனாகமுடியாது. அவ்வாறாகும்போது அவன் உத்தமமான ஆத்துமஸாந்நித்தியத்தை எவ்வாறடையக்கூடும்? தீயவொழுக்கத்தினின்றும், தன்னைத் திருப்பிக்கொண்டு இந்திரியங்களை யடக்கித் தன்னை சாந்தப்படுத்திக் கொள்ளவேண்டும். தன் மனத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ளவேண்டும். இவையில்லாதவன் யோகத்திற்கு அருகனாகான்.

𑌨𑌾𑌵𑌿𑌰𑌤𑍋 𑌦𑍁𑌶𑍍𑌚𑌰𑌿𑌤𑌾𑌨𑍍𑌨𑌾𑌶𑌾𑌨𑍍𑌤𑍋 𑌨𑌾𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃 ।
𑌨𑌾𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑍋 𑌵𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑍈𑌨𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ॥

யோகாப்பியாசத்தை ஒருவன் தொடங்குவதற்குமுன்பு தனது துர்க்குணங்களைப் போக்கடித்துக்கொண்டு சில முக்கியமான நற்குணங்களைத் தன்னிடம் திடப்படுத்திக் கொள்ளவேண்டும். அவ்வாறு செய்யாமல் ஆசனம் முதலிய அங்கங்களைத் தொடங்கிஅப்பியசிப்பதற்கு அவன்தகுதியைப்பெறான். அதனால், இயமம் நியமம் என்ற இரண்டையும் தெளிவாக உணர்ந்துகொண்டு அப்பியசிப்பது மிகவும் அவசியமாகின்றது.

(1) இயமம் என்பது கொல்லாமை, சத்தியம், கள்ளாமை, பிறர்பொருளிச்சியாமை, இந்திரியமடக்கல் இவற்றை அனுஷ்டித்து புலன்களை யடக்கியிருத்தல். யோகி சர்வபூதங்களையும்

தன்னைப்போல் பாவித்து எல்லா மொன்றெனக் கருதுபவனாத லின், அவன் ஒருவனுக்கும் சிறிதேனும் துன்பம் விளைக்கக்கூடாது. துன்பம் கொல்லுவதால்தான் வருமென்று நினைக்க வேண்டாம். காமக்குரோதாதி சங்கற்பங்களால் உலகத்திற்கு ஒருவன் தீமைவிளைக்கலாம். அவைகளையும் யோகி நீக்கவேண்டும். ஒருவன் மனம் புண்ணாகும்படி உரையாடுதலும் தவறு; எவருக்கேனும் கெடுதிநேரிடும் வேலையைச் செய்தலும் தவறு. உலகிலுள்ளவருக்கு எள்ளளவேனும் வருத்தம் விளைப்பது கூடாது. தன்னை யடையும் ஒவ்வொருவனையும் யோகி சாந்தப் படுத்தவேண்டும். யாவரும் தன்னை இரக்ஷகனாகவும், நல்லமன முடையவனாகவும் எண்ணும்படி நடந்துகொள்ள வேண்டும். தான் ஒருவருக்கும் விரோதியாகக் கூடாது. பொய்யென்பதை நீக்கவேண்டும். பிறரது பொருளைக் கைக்கொள்ளும் புத்தி மனத்திலு முதிக்கலாகாது. எப்போதும் பிரமசரியத்தையே அநுஷ்டிக்கவேண்டும்; அதாவது தன் இந்திரியங்களை யடக்கி, விஷயவாஸனைகளின்றி யிருக்கவேண்டும். விஷயசிந்தை யிருந்தால், மனம் இந்திரியங்களோடுகூடி விஷயங்களிற் பிரவேசித்துக்கொண்டிருக்கும். அப்போது ஈசுவரனிடம் மனத்தை ஒரு நிலைப்படுத்துவது முடியாது. அதனால் இகலோக சாதனங்களான பொருள்களை யடையும் எண்ணம் மனத்திலும் எழக்கூடாது.

(2) இனி நியமம் என்பது தூய்மை, மனமுவந்திருத்தல், தத்துவநூல்ஓர்தல், கடவுள்வழிபாடு இவற்றை அநுஷ்டித்தல். இவற்றுள் தூய்மையென்பது பரிசுத்தம். சரீரம், இந்திரியங்கள், மனம், புத்தி முதலியயாவும் பரிசுத்தமாக விருக்கவேண்டும. சரீரம் அவ்வக்காலங்களில் செய்யும் ஸ்நானத்தாலும், பரிசுத்தமற்ற பதார்த்தங்களையும் மனிதர்களையும் தீண்டாதிருப்பதாலும், பரிசுத்தமாகின்றது. சரீரத்திலிருந்து எக்காலத்திலும், எச்செய்கையிலும் அதிசூக்ஷ்மமான அணுக்கள் வெளியேறுகின்றன. அவை அருகிலுள்ளவரது சரீரத்தைத் தாக்கி, அதற்குள் நுழையும். அவை பரிசுத்தமாயும் ஆரோக்கியமாயு மிருந்தால் பிறர்க்கும் அவை சுகத்திற் கேதுவாகும்.

அவை பரிசுத்தமற்றிருப்பின், அவை பிறர்க்குத் தீமையை விளைவிக்கும். அவை மாசுள்ள தேஜஸைக் கொண்டவையாயின் பிறரது தேஜஸையும் அவை மாசுப்படுத்தும். எல்லா வஸ்துக்களின் சுகத்தையே கோரும் யோகி தன்சரீரத்திலிருந்து பிறர்க்குத் தீமை செய்யும் அணுக்கள் வெளியேறும்படி தன் சரீரத்தைப் பரிசுத்தமற்றதாக வைத்துக்கொள்ளக் கூடாது. அவன் பரிசுத்தமான காரியங்களையே நினைக்கவேண்டும்; தீயகாரியங்களையும், தீயகுணங்களையும் மனதிற்புகவொட்டாமல் தடுத்துக் கொள்ளவேண்டும்; இந்திரியங்களை யடக்கி மனத்தையும் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு யோகிதனது ஸ்தூல சூக்ஷ்ம சரீரங்களை பரிசுத்தமாக வைத்துக்கொள்ள முயலவேண்டும்.

யோகாப்பியாசம் செய்யும் ஒவ்வொருவனும் இவ்விதபரிசுத்தத்தை யடைந்திருக்கவேண்டும். தனக்கு எக்கேடு வரினும் மனம் கலக்கங்கொள்ளாமல், திருப்தியும் களிப்பும் கொள்ளவேண்டும். சரீரத்தையும், இந்திரியங்களையும் நல்வழிப்படுத்தி அடக்கி வயப்படுத்திக்கொள்வதே தவம். நல்ல கிரந்தங்களைப் படிப்பதும், பிரணவம் முதலியவைகளை ஜபிப்பதுமே வேதாத்தியயனம். ஈச்வரனை யடையவேண்டுமென்ற பேரவாவே ஈச்வரதியானம்.

இக்காலத்தில் அநேகர் இயமநியமங்களை அப்பியாசஞ் செய்யாமலே, பிராணாயாமத்தைத் தொடங்கி, பிராணாயாம முதலிய ஆறங்கங்களை மாத்திரம் அப்பியசிக்க முயல்கின்றனர். சிலர் வாயுதாரணமே பிராணாயாமயோகமென்று அதை அப்பியசித்துப் பிறர்க்கு மதை போதிக்கின்றனர். இயமநியமங்கள் மிகவும் கடினமானவை யென்று அவற்றை விட்டுவிடுகிறார்கள். இயமநியமங்களை அப்பியசிப்பதென்றால் விஷயவாசைகளை வெறுத்து, நிவிர்த்தி மார்க்கத்தில் நடப்பதுதான். ஸாமானிய அற்பவாசைகளையேனும் ஜெயிக்காமல் ஸுலபமான வழிகளில் யோகிகளாக விரும்பி, இயமநியமங்களை ஆரம்பிக்காமலே வாயுதாரணத்தைத் தொடங்குவது பயித்தியச் செயலாகும். உண்மையாகவே முற்றத்துறக்க எண்ணியவர்கள் முதன்முதல்

இயமநியம அப்பியாசங்களால் சித்தசுத்தி யடைந்து, அதன் பிறகு மற்ற ஆறங்கங்களையும் அப்பியசிக்கவேண்டும்.

(3) ஆசனம்:— யோகாப்பியாசஞ் செய்யும்போது சுகமான ஸ்திர ஆசனத்தில் உட்காரவேண்டும். சுவத்திகம், பதுமம் முதலிய ஆசனங்களில் எது சரீரத்திற்கு சுகத்தைக்கொடுக்குமோ, அந்த ஆசனத்தில் உட்காரவேண்டும். பூமியின்மீது தர்ப்பாசனமும், அதன்மேல் வஸ்திரத்தையும் விரித்து அதன் மீதுட்கார்ந்தால், சுகமாகவிருக்கும். உட்கார்ந்தபோது உடல், தலை, கழுத்து வளையாமல் நிமிர்ந்திருக்கவேண்டும் அப்படிச் செய்வது தியானத்திற்கு அனுகூலமாகவிருக்கும். எதின்மேலாவது சாய்ந்துகொண்டால் தியானஞ்செய்யும்போது, உறக்கம் வரும். அதனால் பூமியின்மீது மிருதுவான ஆசனத்தை ஏற்படுத்திக்கொண்டு, அதன் மேலுட்கார்வதே சிறந்தது. உட்காருமிடம் பரிசுத்தமாக விருக்கவேண்டும். இன்னும் அது இயற்கையிலேயே பரிசுத்தமாயும், ஸமமாயும், நீரினாலும், பூச்சிபுழுக்களினாலும் ஏற்படும் தீங்கில்லாமலுமிருந்தால், அதிக மேன்மையானது, வீடுகளில் தேவபூஜையைத் தவிர வேறுவேலைகளுக்கு ஒருபோதும் உபயோகிக்காத அறையே மேலானது. தனிஇடமாக விருந்தால் அது யாவற்றிலு மேலானது. அவ்வறைகளில் மனத்தைக் கவரும் பண்டங்களை வைக்கலாகாது. தியானத்திற்குத் துணையாகும் வஸ்துக்களை வைத்துக்கொள்வதே நலம். பகவானது படங்களும் அன்பையூட்டும் பெரியோரது படங்களும் பூஜைக்குரிய தூபதீபப்பொருள்களுமே தியானத்திற்குத் துணையாகவிருக்கும். இவ்வாறுசிறிதுகாலம் அவ்வறை பூஜைக்குமாத்திரம் உபயோகப்பட்டால், அவ்வறையின் ஸ்தூல ஸூக்ஷ்ம ஆகாசமெல்லாம் திவ்விய தேஜஸால் நிரம்பியிருக்கும். அந்தஅறைக்குள் நுழைந்தவுடனே, அதன்தேஜஸ் பக்தனிடம் வியாபித்து, அவனது பக்தியைப் பெருக்கும். அவ்விதஇடமே மிக்கபரிசுத்த முள்ளது. ஸாமானிய லௌகிக காரியங்களுக்கு உபயோகமாகும் அறை தியானஸமயத்தில் மட்டும் நீரால் கழுவப்பட்டால், அது சுத்தமாகி தியானத்திற்குத் தகுதியாகாது. தியானகாலத்தில் தனிமையாக விருக்கவேண்டும். இருவர் மூவர் கலந்திருந்தால் மனது சிதறிப்போகும். மேற்கூறியவை

களால் நாம் தியானஸமயத்தில் முக்கியமாக கவனிக்கவேண்டிய விதிகள் விளங்கலாகும். அவையாவன:—

(1) தியானத்திற்குமாத்திரம் உபயோகிக்கப்படும் பரிசுத்தமான இடம்.

(2) தியானத்திற்கு உதவிபாகவுள்ள பொருள்கள்.

(3) தியானகாலத்தில் ஏகாந்தமாயிருப்பது.

(4) இவ்வித இடத்தில் ஸமமானதரையில் வஸ்திரம், மான்தோல், தர்ப்பாசனம் இவற்றை ஒன்றன்கீழொன்றாக அமைத்து, ஸுலபமானதும், ஸ்திரமானதுமான ஒரு ஆசனத்திலிருந்து உடல், தலை, கழுத்து, இவைகளை ஸமமாக வைத்துக்கொண்டு, திக்குகளை நோக்காமலிருக்க வேண்டும். இவ்விஷயத்தைப்பற்றி பகவத்கீதை 6-ம் அத்தியாயத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன.

தானே யிருந்து தனியிடத்துத் தன்சிந்தைக்
காண மனமடக்கி யாசையற்றுத்—தானேயந்த
வெத்துவக்கு மற்ற வெழில்யோகி தன்னையென்றுந்
தத்துவத்திற் சார்விப்பான்றான். கீ. வெ. VI. 10.

தூயநிலத் தோக்கந்தாழ் வற்றதுகில் தோலதுமே
லாயதுகீ ழாக்குசமா மாசனத்து—மேயதன
புத்தி யொருமித்துப் புலனடக்கி யோகத்தைச்
சுத்திபெறச் செய்வான் றொடர்ந்து. கீ. வெ. VI. 11.

தன்காயஞ் சென்னிகளந் தாங்கிச் சலியாமன்
முன்காண மூக்கைக்கண் மொய்த்ததிசைப்—பின்காணா
தாறியஞ் சாதே யறத்தானாய் நெஞ்சடக்கித்
தேறியென் பால்விருப்பான் சேர்ந்து. கீ. வெ. VI. 12.

இங்ஙனம் சுகத்தை விரும்பாமல் 4-வது அங்கமான பிராணாயாமத்தைச் செய்யவேண்டும்.

(4) பிராணாயாமமென்றால் பிராண அபானவாயுக்களான உள்வெளிமூச்சுக்களை ஸமமாகச் செய்துகொள்வது. இதை அனுபோகமுள்ள குருமூலமாகத் தெரிந்துகொண்டு, அப்பியாசஞ்செய்யவேண்டும். அவ்வித சகாயமின்றி பிராணாயாமம் அதிகமாசச் செய்தால். அது அபாயத்திற்கிடமாகும். ஆத

லால் ஜாக்கிரதையாக விருப்பதே நலம். இதனாலடையும் முக்கிய பிரயோசனம் மனத்தை ஒருநிலைப்படுத்துவது தான்.

(5) பிரத்தியாகாரம்.:—இது இந்திரியங்களை விஷயங்களிலிருந்து திருப்பி, மனத்தின் வசமாக்குவது; உபாதியை நீக்கி உள்நோக்குவது. தியானத்திற்கு உட்காரும்போது, இன்பமான தொனிகள் காதிற்புகுந்தால் அவைகளிடம் மனம் செல்லும் அவ்வாறு மனத்தைச் செல்லவிடாமலும் மனத்தில் வெளி விஷயங்கள் தாக்காமலும் பாதுகாக்கவேண்டும். இந்திரியங்களை இவ்வாறு அடக்கியபிறகு தாரணஞ் செய்வது மிக ஸுலபம்.

(6) தாரணம்:—வெளி விஷயங்களிலிருந்து திரும்பிய மனத்தைத் தியானமூர்த்திபிடம் ஒருநிலைப்படுத்தி அம்மூர்த்தியினின்றும் மனது விலகாமல் கவனித்துக்கொள்ளுதல். மனது சஞ்சலமடைந்தால், முன் அனுபவித்த விஷயசுகங்களில் அது இயல்பாகச்செல்லும். அவ்வாறு செல்லவிடாமல் மறுபடியும் மறுபடியும் அதைத் திருப்பி ஆத்துமாவிடம் நிறுத்திவரவேண்டும். இதுவே அப்பியாசமெனப்படும்.

(7) தியானம்.—இவ்வாறு நிறுத்திய மனது ஆத்மகுணத்தைப்பற்றிச் சிந்திக்கும். இந்த சிந்தையே தியானமெனப்படும். தியானத்தில் ஆத்மபாவத்தைத் தவிர பிறவிஷயங்கள் மனத்தில் புகாமல் பாதுகாக்கவேண்டும். படிப்படியாக மனத்தை ஒருநிலைப்படுத்தி ஆத்மவிஷயமொன்றுமே மனத்தில் வேறுபாடில்லாமல் நிலைத்திருக்கச் செய்யவேண்டும்.

தன்னிலாங் கர்மங்கள் தாமெல்லாம் நெஞ்சால்விட்
டன்ன புலனனைத்து மான்றடக்கி—மன்னுநிலைப்
புந்தியினின் மெள்ளமனம் பூண்டாங் குயிர்மன்னச்
சிந்தியான் வேறொன்றுஞ் சேர்ந்து. கீ. வெ. VI. 22.

என்று கீதையிலும் சொல்லப்பட்டுள்ளது. நாளடைவில் ஒவ்வொருவனும் தைரியமாய் மனத்தைப் பிறவிஷயங்களினின்றும் திருப்பி, அதை ஆத்மாவிடம் ஊன்றவைத்து, வேறொன்றையும் மனத்தில் நினைக்காமலிருக்கவேண்டும். இவ்விதம் தைலதாரைபோல இடைவிடாமல் பகவானை ஸ்மரிப்பதே தியானம்.

அப்போது வெளிவிஷயங்களேயும் அவற்றின் வாசனைகளையும் மறந்து மனது ஆத்மாவிடம் ரமித்துக்கொண்டிருக்கும். ஆத்மாவிடம் மூழ்கிய மனது படிப்படியாகத் தன் வேற்றுமை பாவத்தை மறந்து ஆத்மதாதாத்மயத்தை யடையும். ஆத்மா வென்பது சரீரமற்ற நிர்க்குணபிரம மாகலாம். அல்லது சரீரி யான சகுணப்பிரமமாகலாம். இவற்றுள் நிர்க்குணபிரமத்தை உபாசிப்பது கடினமானது. கீதையில் பகவான் இவ்விஷயத்தைப்பற்றித் தெளிவாய் விரித்துக் கூறியிருக்கிறார்.

ஆங்கவர்க்கு நட்பஞ்சே ரவ்வுயிரிற் சித்தத்தா
லோங்க வருள்வருத்த முற்றுமிகும்—பாங்கதனிற்
றேன்று வுயிர்க்கதிதான் றுக்க மிகுத்துடலி
லேன்றுருக் கெய்தவரி திங்கு. கீ. வெ. XII—5.

இவ்வாறு உபாசனைகளில் உருசியடைந்து, இந்திரியங்களையடக்கி, எல்லா மொன்றென்ற புத்தியைப் பெற்று, ஊக்கத்துடன் செய்பவர்க்கே அது சாத்தியமாகும். பிறர்க்கு அது மிகவும் கடினமானது. அவ்விதசக்தியைப் பெருத பிறர்க்கு சகுணதியானமே ஏற்றது. அரி, அரன் முதலியதெய்வங்களில் பக்தனுக்கு பிரியமுள்ள தெய்வமாகிய திவ்வியமங்கள மூர்த்தியை மனத்தில் நிறுத்திக்கொண்டு, அவனேயே தனக்குப் புகலிடமாகக் கைக்கொண்டு, பரமாத்மாவும் அனந்தகல்யாண குணநிதியுமான சைதன்னியத்தை தியானஞ்செய்ய வேண்டும். தியானஞ் செய்யும்போது, முதன்முதல் அந்த மூர்த்தியை மனத்தில் திடமாகக் கற்பித்துக்கொள்ளவேண்டும். படிப்படியாக அந்தரூபத்தை அடிமுதல் தலைவரை மனத்தில் கற்பித்துக்கொண்டு, அதன்முழுவடிவும் மனத்தில் நிற்கும்படி செய்துகொள்ளவேண்டும். இப்படிச் செய்வதால்தான் மனத்திற்கு பூரணவியாபார மேற்படும். அப்போது பிறவிஷயங்களில் அதைப்புகவிடாமல் அடக்குவது எளிதாகிவிடும். அவ்வித பிம்பத்தை மனத்தில் கற்பித்துக்கொள்வது முதலில் கடினமாக விருப்பினும் அப்பியாசபலத்தால் நாளடைவில் அப்படிச்செய்வது சாத்தியமாகும். பகவானது திவ்வியகுணலீலைகளை தியானிப்பதாலும், அவரைத் துதிப்பதாலும், அவர் பிம்பங்களைப்

பூசிப்பதாலும் பக்திவெள்ளம் பக்தனிடம் பெருகும். தியான மூர்த்தியை உறுதியாக மனத்தில் அவன் நிறுத்திக்கொண்டு வரலாம். பிறகு நினைத்தமாத்திரத்தில் அம்மூர்த்தி அவனது மனத்தில் தோன்றுவார்.

பூஜாவிதியில் பாதமுதல் கேசம்வரை நானாவித அங்க பூஜையும், முடிவில் சர்வாங்கபூஜையும் விதிக்கப்பட்டுள்ளன. விக்கிரகத்தை மனத்தில் திடமாக நிறுத்திக்கொண்டுவந்தால், மனது அந்த தெய்வத்திடம் படிப்படியாக லயமாகி, சரீரமும் பரவசமாகிவிடும். அப்போது, தேகமும் இந்திரியங்களும் வியாபாரமற்றிருக்கும். மனது ஒருநிலையாக பகவானிடம் மூழ்கி, வெளிவஸ்துக்களின் ஞாபகமேயில்லாமற்போகும். அப்போது உபாசகனது மனது ஆத்மாவிடம் ஆநந்தித்து, ஆத்ம சொரூபமாயிருக்கும்.

அப்போதுஜீவன் இந்த ஸ்தூலசரீரத்தைவிட்டு சூக்ஷ்ம சரீரத்திலோ, அல்லது அதனினும் சூக்ஷ்மமான காரணசரீரத்திலோ வர்த்தித்து, அந்த லோகங்களின் ஞானத்தையடையும். இவ்வாறு படிப்படியாக ஒவ்வொரு தேகத்தையும்விட்டு அதற்கும் சூக்ஷ்மமான தேகத்தில் வர்த்தித்துக்கொண்டு, விட்ட தேகத்தை ஆத்மாவற்றதாக அறிந்து, காலக்கிரமத்தில் தேகங்களனைத்தையும் ஆத்மாவற்றதாகத் தெரிந்துகொண்டு, யாவற்றினும் சூக்ஷ்மமானதும், அந்தர்யாமியாகவுமுள்ள ஆத்மாவை அவன் அறிவான் இவ்வாறு ஆத்மதரிசனத்தால் ஜீவனுக்கு பரமாத்மாவோடு ஐக்கியானுபவம் உண்டாகும்வழியே யோக மார்க்கம். இந்த ஐக்கியமே உண்மையான யோகம்.

சந்தியாவந்தனத்துக்குச் சொல்லப்பட்ட காலநியமங்கள் இந்தியானத்திலும் முக்கியமாக கவனிக்கத்தகுந்தவை. இந்த யோகமார்க்கத்தைத் தினந்தோறும் காலந்தவறாது அப்பியசிக்கவேண்டும். அவ்விதம் செய்துவந்தால் தினந்தோறும் அவ்வேளை வந்தவுடன், சரீரம் அப்பியாசபலத்தால் தானே தியானத்திற்குத் தயார்செய்துகொள்ளும். எவ்வளவு அயர்ந்து நித்திரைபோனாலும், அவ்வேளைவந்ததும் விழிப்புண்டாகும்.

தியானத்திற்கு உட்கார்ந்தால், சரீரமும் மனதும் சுலபமாக தியானத்தில் நின்றுவிடும்.

இவ்விதம் எல்லாவேலைகளையும் காலாகாலங்களில் செய்து வந்தால், அவ்வக்காலங்களில் அவ்வவ்வேலைகளைச் செய்வதற்கு மனதும் சரீரமும் வழக்கப்பட்டு, பிரயத்தனமின்றியே, சுவாதீனப் பட்டுவிடும். காலநியமங்களிராவிடில், இவ்வித அனுகூலங்கள் ஏற்படா.

யோகாப்பியாசத்திற்கு இன்னும் மூன்று இலக்ஷணங்கள் அவசியமாக வுள்ளன.

(1) யோகாப்பியாச மார்க்கங்களில் நம்பிக்கையுண்டாக வேண்டும். நம்பிக்கையின்றிச் செய்துவந்தால் பலன் அற்பமேயாகும். ஆகலின், திடமான நம்பிக்கையுடன் அதை ஊக்கிச் செய்யவேண்டும்.

(2) அப்பியாசத்தைத் தவறாமல் செய்யவேண்டும். ஒருநாள் தவறினாலும் அநேகதினம் அப்பியசித்த சாதனம் கெட்டுப்போகும். எவ்வளவு சொற்பகாலம் அப்பியசித்தாலும், தினந்தோறும் தவறாமல் அதைச் செய்யவேண்டும். சிலதினங்களில் பலநாழிகை தியானம்செய்து, சிலதினங்களில் அதை அப்பியசிக்காமலிருந்தால், அது வீணாகக் காலத்தைக் கழித்ததாக முடியும்.

(3) மற்றும் இந்த அப்பியாசம் நெடுகலுஞ் செய்துவர வேண்டும். சிலகாலம் அப்பியசித்து யோகசித்தி அடையவில்லையென்று அதிருப்தியடைவது கூடாது. அநேக ஜன்மங்களாக நம்மை திடமாகப் பற்றிவரும் விஷயவாசனைகளை அழித்துவிடாமல், மனத்தை ஒருநிலைப்படுத்துவது முடியாதகாரியம். வெகுகாலமாக விஷயசுகங்களில் அழுந்தியுள்ள மனத்தை அவற்றினின்றும் திருப்பி, ஆத்மாவிடம் நிறுத்துவது மிகவும் கடினமானது.

இதனால் அப்பியாசத்தை எக்காலமும் ஊக்கத்துடன் செய்யவேண்டும். நீண்டகாலமாக நம்பிக்கையுடன் தவறாமல் அப்பியசிப்பதே யோகசித்திக்கு ஏற்றது.

17-ம் அத்தியாயம்.

இதுவே நல்லஸமயம்.

"சதுர்யுக சகஸ்ராணி ப்ரம்மணோ திவமுச்யதே."

(4000 யுகங்கள் சென்றால் பிரம்மாவுக்கு ஒருபகலாகும்.)

பிரமன் படைத்த இவ்வுலகிற்கு ஒரு அவாந்தரபிரளயம் நடக்குங்காலம் பிரம்மாவுக்கு ஒரு பகலென்று காலத்தின் சொரூபத்தையறிந்த மகாத்மாக்கள் கூறுகின்றனர். இக்காலம் 1000 மகாயுகங்கள் கொண்டதாகும். ஒவ்வொரு மகாயுகமும் கிருதயுகம், திரேதாயுகம் துவாபரயுகம், கலியுகமென 4 யுகங்களாகப் பகுக்கப்படும். ஒவ்வொரு யுகத்திலும் நான்கு யுகதருமங்களும் நடந்தேறிவரும். ஒவ்வொருயுகத்திலும் அற்பகால அளவுள்ள அவாந்தரயுகங்களிருப்பதாகவும் தெரியவருகிறது. அவ்வித அவாந்தரயுகம் 5000 வருஷத்திற்கு ஒருமுறை ஏற்படுமென்பதும், அந்த 5000 வருஷங்கள்கொண்ட ஒவ்வொருயுகத்திலும் 4 யுகதருமங்களும் சிறிது நடைபெறுமென்பதும் பெரியோரது அபிப்பிராயம். இவ்வாறு யுகதருமங்கள் அந்தந்த யுகத்தில் பிரதானமாக நடைபெற்றாலும், அதற்குட்பட்ட அவாந்தரயுகங்களிலும் இவை வரிசையாக நடந்தேறிவரும். முதலிலுள்ள கிருதயுகத்திற்கு சத்தியயுகமென்றும் பெயருண்டு. அதில் தருமம் பூர்த்தியாக நடக்கும். இரண்டாவதான திரேதாயுகத்தில் தருமத்தில் முக்கால்பங்கு நடக்கும். மீதி ஒரு பங்கு அதர்மத்தோடு கலந்துபோகும். மூன்றாவதான துவாபரயுகத்தில் இரண்டுபாகம் தருமமும், இரண்டுபாகம் அதருமமும் நடக்கும். நான்காவதாகிய கலியுகத்தில் தருமம் ஒரு பாகமும் அதருமம் மூன்றுபாகமும் நடக்கும். இவற்றை தத்துவக்ஞானிகள் முன்னாளிலேயே தெரிவித்துள்ளார்கள்.

இப்போது கலியுகத்தில் 5000 வருஷங்கள்கொண்ட ஒரு பாகம் முடிந்துவிட்டது. ஒவ்வொரு 5000 வருஷகாலத்தின் முதல்பாகத்தில் கலியுகதருமத்துள் கிருதயுகதருமமும், அதா

வது, கலிதருமத்தில் உத்தமமானதும், இவ்வாறே 2, 3, 4-வது பாகங்களில் திரேதாயுக, துவாபரயுக, கலியுகதருமங்கள் வரிசையாகக் கலந்துவரும். ஆதலால் இச்சமயத்தில் கலியுகத்தில் முதல் 5000 வருஷங்கள் முடிந்து, 2-வது 5000 வருஷகாலந் தொடங்கியிருப்பதால், இச்சமயம் காலசக்கரத்தில் கிருதயுகதருமம் நடக்கவேண்டிய காலமாக விருக்கிறதென்பது வெளியாகின்றது.

"கலெளபஞ்ச சகஸ்ராந்தே ஜாயதே வர்ணசங்கர:"

"கலியுகத்தில் 5000 வருஷம் சென்றபிறகு, வர்ணசங்கிரகம் ஏற்படும்" என்ற வாக்கியம் இப்பொருளைச் சிறிது குறிக்கின்றது. முதல் 5000 வருஷகாலத்தின் கடைசிபாகத்தில் கலியுகதருமத்தின் சுயமான கலிதருமம் நடக்கவேண்டிய காலமாதலால், 5000 வருஷம் முடியுஞ்சமயத்தில் தருமம் மிகக்குறைவாக விருக்குமென்று பெரியோர் கூறியிருக்கின்றனர். இப்போது நாம் அக்காலத்தைத் தாண்டிவிட்டோம். மறுபடியும் கிருதயுகதருமம் சிறிது வளருந்தருணம் இப்போது வந்துவிட்டது. உலகநிலையை நாம் இப்போது சற்று உற்றுநோக்கினல் இதற்கேற்ற நல்ல அறிகுறிகள் வெளிப்படையாகக் காணப்படுகின்றன. 20, 30 வருஷங்களுக்குமுன்பு நமது தேசத்திலும் பிறநாடுகளிலும் எங்குப்பார்த்தாலும் நாஸ்திகவாதமே பரவியிருந்தது. கட்புலனாகும் விஷயங்களைத்தவிர உலகில் வேறொன்றுமேயில்லையெனவும், விஷய சுகானுபவங்களைவிட இச்சிக்கத்தக்கவை வேறில்லையெனவும் வாதித்து, அவ்விதமேநடந்து வந்தவரும் பலராவர். பூர்வ வைதிக ஆசாரங்களும் தருமங்களும் தள்ளத்தகுந்தவை என அவர்க்குத்தோன்றின. ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களிலுள்ள ஜனங்களுக்குள் மதப்பற்று குறைந்துபோயிற்று. அன்னோர் உலகப்பற்றுள் மூழ்கி உலகவின்பங்களையே அடையக்கருதினர். எங்குப்பார்த்தாலும் பரதத்துவ விஷயங்களான தருமங்கள் ஈனநிலையை யடைந்திருந்தன. எல்லாதேசங்களிலும் மதப்பற்றுள்ளவர் சிலரேயிருந்தனர். அவரும் மதங்களின் உண்மையான தத்துவங்களையும் முக்கியாம்ஸங்களையும் நன்றாயறிந்துகொள்ளாமல் முக்கியமற்ற வெளிஆசாரங்களையே மிகவும் முக்கியமானவையெனப் போதித்துவந்தனர். முக்கியாம்ஸங்களில் அவர்கள் கவனம்வைத்திலர்.

வெறும் ஆசாரங்களைமட்டும் கையாண்டுவந்தனர். அக்காரணம்பற்றி அற்பமான ஆசாரபேதங்கள் மனிதரிடம் போட்டிகளையும், வெறுப்புக்களையும் கிளப்பிவிட்டன. இவைகள் மதச்சண்டைகளுக்குக் காரணமாயின. தற்காலத்திலோ எல்லா தேசங்களிலும் ஜனங்களுக்குள் மதவிஷயங்களில் ஊக்கமதிகமாகிவருகின்றது. கட்புலனுக்கெட்டாத மறைபொருள்களிலும் நம்பிக்கை வளர்ந்துவருகிறது. ஒவ்வொருமதத்தினரும் தத்தம் மதகிரந்தங்களின் சாரத்தை யறிந்துகொள்ள முயலுகின்றனர். மதங்களின் முக்கியாம்ஸங்கள் இவையெனவும், முக்கியாம்ஸங்களாகாதவை இவையெனவும் பிரித்து, எல்லாமதங்களிலுமுள்ள முக்கியாம்ஸங்கள் ஒன்றென வறிந்துகொண்டனர். இதன்பயனாக ஜனங்களுக்குள் மதச்சண்டை குறைந்துபோயிற்று. ஒற்றுமையும், சகோதரபாவமும் விருத்தியாகின்றன. இவ்வுண்மையை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இவ்வாறு மறுபடியும் கிருதயுக தருமங்கள் தழைத்துவருவது யாவர்க்கும் தெரிந்ததே. உலகில் பக்திஞானங்களைப் பெருகச்செய்ய நினைப்பவர்க்கு இதுவே நல்லஸமயம்.

சில வருஷங்களுக்குமுன்பு அத்தியாத்ம வித்தை உலகில் மிகவும் க்ஷீணதசையடைந்திருந்தகாலத்தில் பிரமவித்தைகளின் சொரூபமானவர்களும், அத்தியாத்ம வித்தையின்ரக்ஷகர்களும் பரதத்துவ சாக்ஷாத்காரமுள்ளவர்களும், ஜீவன்முக்தர்களுமான மகரிஷிகளுள் சிலர், அஞ்ஞானிகளாய் ஸம்சாரசாகரத்தில் மூழ்கிக் கடைத்தேறும்வழி தெரியாது அலையும் அறிவீனர்களான பாமரர்களை ஈடேற்றவும், உலகத்தில் பரதத்துவஞானத்தை பிரகாசிக்கச்செய்யவும் தருமத்தை நிலைநிறுத்தவுமெண்ணி திவ்விய ஞானஸமாஜம் என்ற ஒருசங்கத்தை ஸ்தாபித்தனர். அந்தஸமாஜம் ஏற்பட்டதுமுதல் உலகத்தில் எல்லாதேசங்களிலும் அதன்கிளைகள் வியாபித்து ஜனங்களின்மனத்தைக் கேவல விஷயப்பற்றுக்களினின்றும் திருப்பி, பரலோகவிஷயங்களில் பற்றுண்டாகும்படி செய்துவருகின்றன. இந்த ஸமாஜத்தின் கிளைகள் எங்கெங்கதேசங்களில் பரவுகின்றனவோ அத்தேசங்களிலெல்லாம் ஈனதசையுற்றிருந்த மதங்கள் மறுபடியும் தலையெடுத்துவருகின்றன. அதைச்சேர்ந்தோரும் தமது மதாசாரங்களைக் கைவிடாது கடைப்பிடித்து வருகின்றனர். இவ்வாறு

எல்லாதேசங்களிலும் தருமத்தை நாட்டும்பொருட்டு பகவான் இந்தஸமாஜரூபமாக அவதரித்தாரோ வெனும்படி நினைக்க இடமுண்டு. கண்மறைவாகவிருந்து உலகத்தைக் கூட்டுவிக்கும் பொருட்டுத் தம்கருமங்களை நடத்திவரும் பிரமசொரூபிகளான மகரிஷிகளின் தூண்டுதலினால் அவரது அனுக்கிரகத்திற் குரியவர்களான சீடர்களைக்கொண்டு இந்தஸமாஜம் உண்மையில் நாட்டப்பட்டதென்று அறிவுடையோர் கூறுவர். இந்தஸமாஜம் ஸ்தாபிக்கப்பட்டு இப்போது 45 வருஷங்களேயாயின. இச் சிறியகாலத்திற்குள் இது உலகிலுள்ள எல்லாதேசத்தாரிடமும் எல்லாமதத்தினரிடமும் மனவேறுபாடுகளைப் போக்கி, நட்பைப் பெருக்கிவிட்டது. இன்னும் பழையகிரந்தங்களில் மறைவாகக்கிடந்த அநேக இரகசியங்களை வெளிப்படுத்தி, இக்காலத்திற்குத் தகுந்தபடி அவைகளை நற்போதங்களாக ஜனங்களுக்குப் புகட்டிப் பலவிதமாக உலகத்திற்கு மேன்மைசெய்திருக்கிறது. இதைப் பார்ப்போர்க்கு இந்தஸமாஜம் மனிதர்களால் மட்டும் உண்டாக்கப்பட்டதல்ல வென்பது வெளியாகாமற் போகாது. உண்மையான யோகியின் சொரூபம் இத்தன்மையதென்பதைத் தற்காலத்தில் உலகத்தார்க்கு நடத்திக்காட்டி "பரோபகாரார்த்த இதம்சரீர" என்ற மனுவின் வாக்கியத்தை உண்மைப்படுத்தி, நாளுக்கோர் ஊராகத் திரிந்து, பரதத்துவ இரகசியங்களை சிரத்தையுடன் கேட்பவருக்கு போதித்து, கரும, பக்தி ஞானமார்க்கங்களின் சாரங்களைத் தம் அனுபவத்திலேயே காட்டிக்கொண்டிருக்கும் மாதுஸ்ரீ அனிபெஸண்டம்மையார் ஜீவன்முக்தர்களான மகாத்மாக்களின் உதவியால் எல்லாக் காரியங்களையும் நடத்துகிறாரென்று இந்த ஸமாஜத்தில் முக்கியமானவர்களும் அனுபவமுள்ளவருமான பெரியோர்கள் கூறுகிறார்கள். இன்னும், பாமரர்கள் கடைத்தேறும் பொருட்டு ஜீவன்முக்தர்கள் எப்போதும் தமது தபோமகிமையை உலகத்தில் பரவச்செய்கிறார்களென்றும் முக்கியமாக இந்தஸமயத்தில் அவர்கள் தமது தேஜஸை உலகத்திற்கு அதிகமாக அனுப்புகிறாரென்றும்,யோக்கியர்களானசீடர்கள்அகப்படுவார்களாவென்று அவர்கள் எதிர்பார்த்திருக் கிறார்களென்றும், இக்காலத்தில் ...ரத்தையும் பக்தியுங்கொண்டு உலகஇதத்தின்பொருட்டு பா

லோகவிஷயங்களை சாதிப்பதில் முயல்பவர் முன்னிலுமதிக மாகவே அவரது அனுக்கிரகத்திற்கு பாத்திராவாரென்றும், இவ்வுண்மைகளை நன்குயறிந்துகொண்டு உலகத்திற்குப் பாடு படுபவர் தம்மை மேன்மைப்படுத்திக்கொள்வது எளிதென்றும் அம்மையார் வற்புறுத்திக கூறியுள்ளார்.

இன்னும். உலகத்தில் தருமம் குறைவுபட்டு அத்தியாத்ம வித்தை ஆதரிக்கப்படாதபோதெல்லாம், பிரமஞானிகளும், ஜீவன்முக்தர்களும், மரணத்தைத் தாண்டியவர்களுமான மக ரிஷிகளில் ஒருவர், அல்லது அவரது முக்கிய சிடர்களிலொரு வர் உலகில் அவதரித்து, அஞ்ஞானிகளுக்கு ஞானோபதேசஞ் செய்து அவரிடம் பக்திசிரத்தைகளைப் பெருக்கி, பிரமவித்தை உலகில் நசித்துப்போகாமல் காப்பாற்றுவாரென்று முன்னமே கூறப்பட்டதல்லவா? சென்ற 45 வருஷங்களாக திவ்வியஞான ஸமாஜங்களின் மூலமாகவும் இந்தஸமாஜத்தில் முக்கியஸ்தர் களாகவிருக்கும் அம்மகரிஷிகளின் சிஷ்யக்கூட்டத்தின் மூல மாகவும், ஜனங்களின் மனது பாவித்தையில் பற்றுக்கொண்டி ருப்பது வெளிப்படை. இவ்வாறு ஜனங்களின் மனது ஒரு வாறு பரிபக்குவமடைந்ததும், அந்த மகாத்துமாக்களிலொருவர் கூடியவிரைவில் உலகில் அவதரிக்க வெண்ணியுள்ளாரென்றும் 20, 30 வருஷங்களுக்குள் அவ்வித அவதாரம் ஏற்படப்போ கின்றதென்றும், அம்மகாத்மா மனிதசரீரத்தில் காணப்படும் போது அவரது பெருமையையுணர்ந்து அவருக்கு ஆளாவதற் குத்தக்க யோக்கியதையையடைய நாம் அதிகமாக முயல வேண்டுமென்றும் இந்தஸமாஜத்தின் தலைவராய் விளங்கும் மாதுஸ்ரீ அனிபெஸண்டம்மையார் தமது குருவின் அனுமதி பெற்று உலகமறியக் கூறியிருக்கின்றனர்.

அவ்வித மகானுபாவர் உலகில் ஜனித்தபோது எவ்வித மாக அவர் வர்த்திப்பார்; எவ்விஷயங்களை எவ்வாறுபோதிப் பார் என்பவைகளை அறிந்துகொள்வது நமக்கு சாத்தியமில்லை; எத்தேசத்தாராயினும், எச்சாதியாராயினும் அவருள் எவர் மிகுந்தபக்தியும் சிரத்தையுமடைந்து, "ஆத்மவத் ஸர்வபூதாநி" என்ற நியாயத்தை நிறைவேறும்படிசெய்து வர்த்தித்துக்கொ ண்டிருப்பார்களோ, சாதுக்களாயுள்ளவர்கள் எத்தேசத்தாராயி னும் எம்மதத்தினராயினும் அவர்களை எவர் மேன்மையாகக் கொண்டாடுகிறார்களோ, எவர் எல்லாருடைய சுகதுக்கங்களை யும் தம்முடையவைபோலக் கருதுகிறார்களோ, பரோபகார சிந்தையையுடையவராய் தன்னயங்கருதாமல் பிறரது மேன் மையைப் பாராட்டுவதே மேலானதென்றும், இகபிரயோசனங் களைவிட பரலோககாரியங்கள் சிறப்பாகக் கொள்ளத்தக்கவை

யென்றும், பலனைக்கருதிச் செய்யுங் கருமங்களைவிட பகவானுக்கு அர்ப்பணஞ்செய்து உலகநன்மையின்பொருட்டுச் செய்யும் காரியங்களே செய்யத்தகுந்தவையென்றும் நினைத்து, எவர் நடக்கிறார்களோ அவர்களே அம்மகாத்மாவைக் காணும்பாக்கியத்தைப் பெறுவாரெனவும், அவ்வித புண்ணியபுருஷர்களே அம்மகாத்மாவின் சிஷ்யகோடிகளில் சேருவதற்குத் தகுதியுடையவரெனவும் மாதுஸ்ரீ அனிபெஸண்டம்மையார் பன்முறை வற்புறுத்திக் கூறியிருக்கின்றனர்.

இத்தகைய மேன்மைகள் நிகழக்கூடிய தற்காலத்தைவிட நற்காலம் கிடைப்பதரிது. இந்தஸமயத்தில் நாமனைவரும் பிரயத்தனஞ்செய்து நமது ஜன்மத்தை சாபல்யஞ் செய்துகொள்ளாவிடில், இவ்வித ஸந்தர்ப்பங்கள் மறுபடியும் நமக்குக்கிடைக்காமல் நாம் வருந்துவோம்.

இதனால் பாரமார்த்த சிந்தனையுடையவரெல்லாம், அம்மகாத்மா அவதரிக்குங்காலத்தில் அவரது சிஷ்யகோடிகளில் ஒருவராக இருப்பதற்காவது, அல்லது அவரது பரிவாரங்களில் சேர்ந்து, அவரை உபசரிப்பதற்காவது தகுந்த யோக்கியதையைப்பெற அரிதில்முயன்று, அதை ஸம்பாதித்துக்கொள்ள வேண்டும். திடமான விவேகம், தீவிரவைராக்கியம், சலியாத பக்தி, எதற்கும்பிறழாத மனோதிடம், இந்திரியநிக்கிரகம், நாவடக்கம், மனஸமாதானம் முதலிய குணங்களை நாம் விருத்தி செய்துகொள்ள வேண்டும். எல்லாபிராணிகளிடம் நட்பும், நம்மினும் பெரியோரிடம் உண்மையானபக்தியும், எளியோரிடம் அன்புங்காட்டி, அக்குணங்களை மிகுந்த மனவுறுதியுடன் அப்பியாஸஞ்செய்ய வேண்டும்; பிறரிடம் குற்றம்கற்பிக்கும் புத்தியை விட்டுவிட்டு அவரிடமுள்ள குணங்களையே நாடப் பழக வேண்டும். அவ்வாறு செய்யாமல் அகங்காரமமகாரங்களையும் சகிக்கவொண்ணாத தோஷங்களைமட்டும் நாடுகின்ற தீக்குணங்களுக்கு நாம் உள்ளானல், இம்மைமறுமை இரண்டிற்கும் நாம் தகுதியற்றவராவோம். ஆதலால், கீதை 10-வது அத்தியாயத்தில் பகவான் சுருக்கமாக உபதேசித்தபடி அசுரஸம்பத்து குணங்களைக் கூடியவரை அடியோடு விட்டுவிட்டு தேவஸம்பத்து குணங்களை பலமாகப் பழகிக்கொண்டு உத்தமபுருஷார்த்தங்களையடைய யாவரும் முயல்வாராகவென்று கருணைக்கடலாகிய எம்பெருமானை மனமொழிமெய்களால் வணங்குவோமாக!

“ ஸர்வேஜனஸுகினோ பவந்து.”

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

முற்றிற்று.

59561

சாந்திவசனம்.

இத்தொடரில், இக்காலத்தில் உலகமெங்குமுள்ள ஆயிரக்கணக்கான அறிஞர்களால் நன்கு மதிக்கப்பெற்றவரும், அரிய தவப்பேற்றால் உலக ஸம்ரக்ஷணார்த்தம் உழைப்பதற்கென்றே ஜனன மெடுத்தவருமான மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மாள் அவர்களாலும் இன்னும் மற்றுமுள்ள உண்மையனுபவமுடைய பெரியோர்களாலும் இயற்றப்பட்டிருக்கும் அரிய ஆங்கில நூல்களை, நம் தமிழுலக மறிந்துகொண்டானந்திக்குமாறு, செந்தமிழில் தகுந்தவர்களால் மொழிபெயர்த்து மாதமொரு புஸ்தகமாகப் பிரசுரஞ்செய்து வருகிறோம்.

வருஷசந்தா தபால்சார்ஜ் உள்பட இந்தியாவுக்கு ரூ.	2—0—0
டிடி டை வெளிநாடுகளுக்கு ரூ.	2—8—0
தனிநம்பர் (தபால்சார்ஜ் பிரத்தியேகம்)	0—3—0

Vol. I.

Vol. 1. நெ. 1 முதல் 10 முடிய உள்ள புஸ்தகங்கள் செலவாகிவிட்டன. சீக்கிரம் திரும்ப அச்சிடப்படும்.

இப்பொழுது விற்பனைக்குத் தயாராயிருக்கும் புஸ்தகங்கள்.

Vol. II.

1st Vol. No. 11 & 12 & 2nd Vol. No 1 to 4 "எனது பிரதிக்ஞை" (ஒரே புஸ்தகமாக)	0—12—0
No. 5, 6 & 7 பிரமஞானத்தின் விசாரத்தால் நமக்குறும் பயனியாது?	0—9—0
No. 8. பிர்ம்மக்ஞானமும் இஸ்லாமும்.	0—3—0
No. 9. நமது பெரிய துரவஸ்தை, இது நீங்கும்வழி.	0—3—0
No. 10. கர்மநாசம்.	0—3—0
No. 11. சின்னங்கள், இவைகளில் உட்கருத்துகளும் பிரயோஜனங்களும்.	0—3—0
No. 12. ரிஷிகள் அல்லது மஹாத்மாக்கள்.	0—3—0

Vol. III.

No. 1. ஸன்மார்க்கமுறையும், ஸம்ஸாரியும்.	0—3—0
No. 2. மோக்ஷம் அல்லது வீடுபெறல், பிரஹ்மஞான சபையும், சகோதரபாவமும்.	0—3—0
No. 3. ஸ்தூலப்பிரபஞ்ச தர்மங்கள், ஆத்மதர்மங்கள்.	0—3—0
No. 4. என்குருநாதன்என்னை என் ஏற்றுக்கொள்ளக்கூடாது?	0—3—0
No. 5 to 12. & 4th. Vol. No. 1 to 4. பிரஹ்ம வித்தியா தீபிகை. (ஒரே புஸ்தகமாக)	1—8—0

தேவையுள்ளவர்கள் மானேஜர் சாந்திவசனம் ஆபீஸ். திருவீயகீதூர். போளம் போஸ்ட் என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.